D
211,31 N86
N86.22.445
136476

971/86
2928

வெளியீடு 9-10-1986] [Issued 9-10-1986

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
### OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 18, 1986 - தொகுதி 22 எண் 4
Friday, 18th April 1986 - Volume 22 No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**Legislative Assembly, Secretariat, Fort St. George, Madras - 600009**

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

V211, 2: N86
N86·22·4 ⁷⁵
தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008.
136476

## உள்ளடக்கம்.

18—4—1986

பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள். 717—765

2. கண்டனத் தீர்மானம் :

அமெரிக்க வல்லரசு லிபியா நாட்டை தாக்கியதற்குக் கண்டனம் தெரிவித்தல் .. .. 765—770

3. தகவல் கோரல் :

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள். 770—772

4. அறிக்கைகள் அளித்தல் :

(அ) கோவை, சேலம் மாவட்டத்தில் மூடிக் கிடக்கின்ற ஆலைகளைத் திறப்பது குறித்து பேரவை முன்னவரின் அறிக்கை .. .. 772—775

(ஆ) பொதுக் கணக்குக் குழு. 783

5. கவன ஈர்ப்புகள் :

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதியில் சாலைகள் மேம்பாட்டுக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நட்டயீடு வழங்குதல். 776—778

(ஆ) இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கி வருவது .. .. 778—782

பக்கங்கள்.

6. வரவு - செலவுத் திட்டம், 1986—87 வாக்கெடுப்பு —தொடர்ச்சி. 783—849

கோரிக்கை எண். 17 கல்வி -(தொடர்ச்சி).

திரு. ஆர். தியாகராசன் 783— 793
திரு. இரா. சண்முகம் 793— 801
திரு. வை. பாலச்சந்திரன் 801—811
திரு. ஆ.கா.அ. அப்துல் சமத் 811—821
திரு. ஜி.கே. பிரான்சிஸ் 821— 825
திரு. ப. தீர்த்தராமன் 825— 830
திரு. ச. சங்கரலிங்கம் 830— 834
திரு. கு. ரமணி 834— 849

7. அரசினர் தீர்மானம் :

விதி 32-ஐத் தளர்த்தல் .. .. .. 842

8. அறிவிப்பு :

பேரவை அலுவல் .. .. .. .. 849— 850

9. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. 851


தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

1986, ஏப்ரல் 18, வெள்ளிக்கிழமை.

சித்திரை 5, அக்ஷய திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும்; அதுபோல், மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மழை அளவு கணக்கெடுப்பு

(300—*வினா எண். 3960)— திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் நாட்டில் ஊராட்சி ஒன்றியங்கள், வேளாண்மை கிடங்குகள் சார்பதிவாளர் அலுவலகங்கள், அரசு மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையங்களில் மழை அளக்கும் கருவிகளை அமைத்து, தமிழகத்தில் மழை அளவுகளால் பிராந்திய வாராக துல்லியமாய் கணக்கெடுக்க அரசினிடம் குறிப்புள்ளதா ?

(ஆ)- ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[1986 ஏப்ரல் 18

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியைக் கணக்கிடுவதற்கு பேரவைத் எந்த அளவுகோலை வைத்திருக்கிறது ? எங்கள் பகுதியிலே அரசாங்கம் யெல்லாம் ஆற்றில் தண்ணீர் வந்து 14 ஆண்டுகளுக்கு மேலா கின்றன ; 1972 ஆம் ஆண்டில் தண்ணீர் வந்ததுதான். தற்பொழுது ஆற்று மணலை அரசாங்கம் ஏலம் விடுவதன் காரணமாக நிலத்தடி நீர் வறண்டு விட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வறட்சியைக் கணக்கிடுவதற்கு மழைமானிகளை வட்டாரத்திற்கு ஒன்று வீதம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகம் முழுவதும் தற்போது 500 மழைமானி நிலையங்கள் பல்வேறு துறைகளின் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன. இம்மழைமானிகள் பல்வேறு துறைகளின்கீழ் இயங்கி வரும் எண்ணிக்கையின் விவரம் : வருவாய்த் துறையின் சார்பாக 222 இடங்களிலும், இந்திய வானியல் துறையின் சார்பாக 32 இடங்களிலும், பொதுப் பணித்துறை 173 இடங்களிலும், வனத்துறையின் சார்பாக 53 இடங்களிலும், தென் இரயில்வே சார்பாக 15 இடங்களிலும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் சார்பாக 5 இடங் களிலும் ஆக 500 இடங்களில்—நிலையங்களில் மழைமானி கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளே போதுமான அளவிற்கு அமைந்திருக்கின்றன. தேவைப்பட் டால் சில இடங்களில் வைக்கலாம். நாட்டினுடைய நிலைமை யைப் பரவலாக அறிந்து கொள்வதற்கு இவைகளே போது மானவைகளாக இருந்திருக்கின்றன. ஆகவே, எங்கெங்கு எப்பொழுது வறட்சி ஏற்படுகிறது என்பதை அந்தந்த ஆண்டு களினுடைய, சாதாரணமாக ஒரு ஆண்டுக்கு இவ்வளவு மழை இந்த இடத்தில் பெய்யக் கூடும் என்ற அளவை வைத்து, இந்த ஆண்டு கூடுதலாகப் பெய்தது, அல்லது இந்த ஆண்டு குறை வாகப் பெய்தது என்று கணக்கிட்டு அதன் அடிப்படையிலே வருவாய்த் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியைக் கணக்கிடுவதற்கு, ஏற்கெனவே அரசாங்கம் அறிவித்துள்ளபடி, வருவாய்த் துறை அதிகாரிகள் ''அணாவாரி சர்ட்டிபிகேட்'' என்ற சான்றிதழ் வழங்குவதன் மூலம் வறட்சியைக் கணக்கு எடுத்து அறிவிக்கிறார்கள். ஆனால் மழையின் அளவைக் கணக்கில் எடுக்க முடியாத சூழ்நிலை இருக் கிறது. அதிகாரிகள் வந்து பார்வையிடுகின்றநேரத்தில் ரோடு சைடிலே பார்த்து விட்டுச் செல்கின்ற பொழுது இரு மருங்கிலும் பசுமையாக இருப்பதைப் பார்த்துக் கணக்கெடுக்கிறார்கள். ஆகவே, துல்லியமாகக் கணக்கெடுத்து, அந்தந்தப் பகுதிகளில் பெய்கின்ற மழையின் அளவை வைத்து வறட்சிப் பகுதி என்று



1986 எப்ரல் 18]

அறிவிக்கும் வகையில் ஒன்றிய அளவில் மழை அளவுக் கருவியைப் பொருத்த அரசாங்கம் முன்வருமா ? அதுபற்றிப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வறட்சி மற்றவற்றையெல்லாம் கணக்கிட்டு நிவாரணப் பணிகளை மேற் கொள்வதற்கு மழை மானிக் கருவிகள் மட்டும் பயன்படுவதில்லை. மழையின் அளவைக் கணக்கிட இந்த மழைமானிக் கருவிகள் பயன்படு கின்றன. ஆகவே, நான் முதலிலேயே சொல்லியபடி தமிழ் நாடு முழுவதும் 500 நிலையங்களில் இவை பொருத்தப்பட் டிருக்கின்றன. ஆங்காங்கு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை எந்தெந்த சூழ்நிலைகள் என்பது பற்றி மாவட்ட ஆட்சித் தலை வரின் மூலமாக அரசுக்கு அனுப்பப்படுகிறது. ஆகவே, புள்ளி விவரக் கணக்கு அவ்வப்பொழுது வந்து கொண்டிருக்கின்றன. எந்த அளவிற்கு மழை பெய்தது, எந்தப் பகுதியில் பெய்தது, கூடுதலாகப் பெய்ததா அல்லது குறைவாகப் பெய்ததா என்று கணக்கிடுவதற்கு அது பயன்படுகிறது. ஆனால் அதை மட்டும் வறட்சி நிவாரணப் பணிக்காகக் கணக்கிடுவதில்லை. அதன் பிறகு, விளைவு எந்த அளவிற்கு வந்தது, எந்த அளவுக்குப் பயிர்ச் செலவு செய்யப்பட்டிருக்கிறது, எப்பொழுது எவ்வளவு பரப்பளவில் செய்வார்கள், குறிப்பிட்ட காலத்தில் எந்த அள விற்குச் செய்திருக்கிறார்கள், அதன் மூலமாக பயிர் விளைச்சல் எந்த அளவிற்கு ஆகியிருக்கிறது என்ற கணக்குகளையெல்லாம் வைத்துத்தான்—அதற்காக வாய்ப்பாடு—பார்முலா இருக்கிறது. அந்தக் கணக்கீட்டை வைத்துத்தான், எவ்வளவு தள்ளுபடி செய்யலாம், எந்த அளவிற்குக் குறைக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கணக்கிடப்பட்டு அந்தக் கருத்துக் கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. தி. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை அளக்கும் கருவிகள் பெரும்பாலும், தாலுகா, மாவட்டத் தலை நகரங்களில் மட்டுமே தற்போது அமைக்கப் பட்டு இருக்கின்றன. ஒரே தாலுகாவில் கூட மழை அளவு இடத்திற்கு இடம் மாறுபடுகின்ற காரணத்தால், உண்மையான மழை அளவைத் துல்லியமாகக் கணக்கிடுவதிலே சற்று சிரமம் ஏற்படுகிறது. இதனால், அரசு மூலம் வரும் சலுகையைப் பெறுவதில் கூட சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, ஒரு தாலுகா வில் 3 அல்லது 4 இடங்களில் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி, 500 இடங்களில் மழைமானிக் கருவிகள் இருந்து வருகின்றன. அவை போதாது. இன்னும் கூடுதலாக வேண்டுமென்று அங் கங்கே இருக்கின்ற அதிகாரிகளும் மாவட்ட ஆட்சித் தலைவர் களும் குறிப்புகள் தருவார்களானால் அதைப் பற்றி பரிசீலித்து,

தக்க நடவடிக்கைகள் எடுக்கும். இந்த மழைமானி கருவி வைப்பதற்கு ஒன்றும் அதிகமான, பெரும் செலவு ஏற்பட்டு விடப்போவதில்லை. ஆங்காங்கு யாரிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறோமோ, அவர்கள் கணக்கெடுத்து அன்றாடம் அனுப்பி வைக்க வேண்டும். ஆனால், இப்பொழுது, இருக்கின்ற ஒவ்வொரு பகுதியிலும் போதுமான அளவு மழைமானி கருவிகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். மேலும், தேவைப்படும் என்கின்ற அளவுக்கு அதிகாரிகள் கருதி, அரசுக்குச் செயற்குறிப்பு அனுப்புவார்களானால், அரசு அவைபற்றி பரிசிலனை செய்யும்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வறட்சி நிலையை ஆய்வு செய்வதற்காக, மாவட்ட ரெவின்யூ அதிகாரிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கினார்கள். ஆனால், இந்த ஆண்டு ஆய்வு செய்யப்பட்டதா ? ஆய்வு செய்து அதிகாரிகள் அரசுக்கு அறிக்கையை வழங்கியிருக்கிறார்களா ? அவ்வாறு வழங்கியிருந்தால், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எப்பொழுது வேலைகள் துவங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சி நிலைமைகளைப் பற்றி எல்லாம் அறிக்கைகள் தயாரித்து, அனுப்பும்படியாக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பல்வேறு மாவட்டங்களிலிருந்து அறிக்கைகளும் வரப்பட்டு, அந்தந்தத் துறைகளிலே துரிதப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில பல மாவட்டங்களில், வறட்சிகளைப் பொறுத்து எந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமோ அந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற முழு விவரத்தையும் அறிய வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால், எல்லா மாவட்டங்களைப் பொறுத்தும் அறிவிக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, இந்த மழை அளவும், வறட்சி அளவும் சரிபார்க்கக் கூடிய அந்தக் கருவிகள் குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் கொரடாச்சேரியில் இருக்கிறது. ஆனால் அப்படி உள்ள இடங்களில் சரியான பாதுகாப்பு இல்லாமல் வைத்திருக்கிறார்கள். அதனால் கூட சரியானப் புள்ளி விவரம் காட்டுவதில்லையென்று சம்பந்தப்பட்டவர்களிடம் நாங்கள் கேட்டபொழுது சொன்னார்கள். அந்த நிலையைப் போக்க அன்றாடம் அந்தக் கருவிகள் இயங்கக்கூடிய அளவுக்குப் பாதுகாப்பான இடங்களில் வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?





அதே நேரத்தில் வறட்சியால் பாதிக்கப்படுகின்ற பகுதிகளுக்கு இயற்கையால் பாதிக்கப்படுகின்ற இடங்களுக்கு 6 அணா என்ற வருமானத்தை வெள்ளைக்காரன் காலத்திலே நிர்ணயிக்கப்பட்டதை வைத்துத்தான் இப்பொழுதும் கணக்கெடுக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலைக்குத் தக்கபடி வருமானத்தை மாற்றி, உண்மையிலேயே இயற்கையால் பாதிக்கக் கூடிய இடங்களுக்கு இந்தச் சலுகை அளிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மழை மானி நிலையங்கள் உண்மையிலேயே பாதுகாப்பற்ற முறையிலேயோ அல்லது சரியாக வேலை செய்யாத நிலையிலேயோ இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல, உரிய அதிகாரிகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், அதைச் சரிப்படுத்தி, செம்மைப்படுத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஆனால, அதற்கு ஒரு முறை வைத்திருக்கின்றார்கள். அந்த முறையின் அடிப்படையிலேதான் நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம். அது குறைபாடு உடையது, அதைச் சரிப்படுத்தித்தான் ஆகவேண்டுமென்ற நிலை இருக்குமானால், அதைத் தனியாகத்தான் பரிசீலிக்க வேண்டும்.

## முன்னாள் படைவீரர் கழகம்

*501—(*வினா எண். 5585)* திரு. மு. இராமநாதன் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னாள் இராணுவ வீரர்களுக்கு சிறு தொழில் தொடங்க கழகம் ஒன்று அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) கழகம் ஒன்று தற்போது அமைக்கப்பட்டு விட்டது.

(ஆ) தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படை வீரர்களுக்கு தொழில் செய்யத் திட்டமிடுதல் மற்றும் தொழில் திட்டம் உருவாக்குதல், ஆகியவற்றுக்குத் தேவையான உதவி புரிதல், நிதியுதவி பெற்றுத்தருதல், வர்த்தக நிறுவனங்களைத் துவங்கி நடத்திட உதவுதல் மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வு புனரமைப்பு வசதிகள் ஆகியவற்றில் உதவிடும் வகையில், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக " தமிழ் நாடு முன்னாள்

படை வீரர் கழகம் '', 28–1–1986 அன்று பதிவு செய்யப்
பட்டு மத்திய, அரசு கம்பெனி பதிவாளர், சென்னை அவர்களிட
மிருந்து சான்றிதழை 18–2–1986 அன்று பெற்றது.

(முற்பகல் 9-10).

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே,
முன்னாள் இராணுவ வீரர்களுக்கு என்று கோவையிலே
ஜவான்பவன் ஷாப்பிங் காம்பிளக்ஸ் ஒன்று அவர்களுடைய நல
நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல முன்னாள் இராணுவ
வீரர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் கழகம் எந்தவித
மான உதவிகளை அவர்களுக்கு செய்ய முன் வந்திருக்கிறது?
அவர்களுக்கு உதவியாக அளிக்கின்ற தொகை எந்த வரையறைக்
குள் உட்படுத்தப்பட்டுள்ளது? தமிழ்நாட்டில் முன்னாள்
இராணுவ வீரர்கள் மொத்தம் எவ்வளவுபேர் இருக்கிறார்கள்?
அவர்களில் ஊனமுற்றவர்கள் எவ்வளவு பேர்கள்? அவர்களுக்கு
தனியாக ஏதேனும் ஏற்பாடு இந்த கழகத்தின் மூலம் செய்யப்படு
கிறதா என்பவற்றை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்
களே, 7—5—1985 அன்று முன்னாள் படை வீரர்களுக்கு என்று
வரையறைக்கு உட்படுத்தப்பட்ட பொது நிறுவனமாக 'தமிழ்நா
நாடு முன்னாள் படைவீரர் கழகம்' என்ற பெயரால் ஒரு
அமைப்பை ஏற்படுத்த அரசு அனுமதி அளித்தது. மேலும் அரசு
பங்கு மூலதனமாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்க ஆணையிடப்
பட்டது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனமாக 50 இலட்சம் ரூபாய்
இருக்கும். தமிழ்நாடு முன்னாள் படைவீரர்களுக்கு வட்டி
யில்லாத கடன் வழங்குவதற்காக இந்த கழகத்திற்கு 25 இலட்சம்
ரூபாய் வழங்கப்படவுள்ளது. முதல் கட்டமாக தற்போது
12,600 ரூபாய் பதிவு செய்வதற்கு வழங்கப்பட்டிருக்கின்றது.
இப்போதுதான் பதிவு செய்திருப்பதால், முதலிலே நான்
சொன்னமாதிரி முன்னாள் படைவீரர்களுக்கு தொழில் செய்யத்
திட்டமிடுதல் மற்றும் தொழில் திட்டம் உருவாக்குதல் ஆகிய
வற்றிற்குத் தேவையான உதவி புரிதல், நிதியுதவி பெற்றுத்
தருதல், வர்த்தக நிறுவனங்களைத் துவங்கி, நடத்திட உதவுதல்
மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வு, புனரமைப்பு வசதிகள்
ஆகியவற்றில் உதவிடும் வகையில் இந்தக் கழகம் செயல்படும்.
வேறு பல வகைகளிலும், குறிப்பாக ஜவான்பவன் மூலமாக
முன்னாள் படைவீரர்கள் நல நிதியிலிருந்து செய்யப்படுகின்ற
சில ஏற்பாடுகள் எல்லாம் தனியாக நடைபெற்று வருகின்றன.
இந்த வாரியம் அமைத்ததன் மூலம் நிதி நிறுவனங்கள் மற்றும்
வங்கிகள் மூலமாக கடன் வாங்கவும், வாங்கிய கடனை குறைந்த
வட்டியில் கொடுத்து உதவவும் இந்தக் கழகம் பயன்படும். நேரடி
யாக அரசு கடன் வழங்குவது போன்ற உதவிகளைச் செய்ய
வழிவகை இல்லாத காரணத்தால் இப்படிப்பட்ட வாரியத்தை

அமைத்து அதன் மூலமாக நிதி உதவிகள் பெற்று, சிலபல ஏற்பாடுகளைச் செய்யலாம் : அந்த வகையிலே கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கே என்ன என்ன வசதிகள் வேண்டுமென்ற குறிப்புகளை பலரும் அனுப்பியிருக்கிறார்கள். அதை இந்த கழகத்தினால் ஆராய்ந்து அறிந்து, ஏற்ற உதவிகளை அந்த அந்த மாவட்ட அளவில் செய்வார்கள்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, முன்னாள் இராணுவ வீரர்களுக்கு சிறு தொழில் கழகம் ஒன்றை நிறுவியிருப்பதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் கழகத்தின் மூலம் இராணுவத்தில் பணிபுரிந்து உயிரிழந்த வீரர்களுடைய குடும்பங்களுக்கும் அதைப் போல ஓய்வு பெற்றுவந்து, உயிரிழந்தவர்களுடைய வாரிசுகளுக்கும் உதவி செய்கின்ற வகையில் ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "முன்னாள் படை வீரர் நல நிதி" ஒன்று ஏற்கனவே திரட்டப்பட்டு வருகின்றது. அந்த நிதிக்கு பணம் சேர்க்கின்ற முறையிலே ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 7 ஆம் நாள் கொடிநாள் என்று குறிப்பிட்டு, அந்த நாளில் பொதுமக்களிடமிருந்து நிதி வசூல் செய்து, அந்த நிதியோடு சேர்த்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று போர்வீரர்கள், அவர்களுடைய விதவைகள், குழந்தைகள் மற்றவர்களுக்கு பல்வேறு வகைகளில் உதவி செய்கின்ற ஏற்பாடு தனியாக இருக்கிறது. இந்தக் கழகத்தின் முக்கிய நோக்கம், போர் வீரர்கள் இராணுவத்திலிருந்து கிட்டத்தட்ட 36, 40, 42, 45 வயதுகளில் ஓய்வுபெற்று வந்துவிடுகிறார்கள். அவர்கள் ஓய்வு பெற்று வந்துவிட்டாலும் நல்ல உடல் வலிவோடும் வேலை செய்கின்ற ஆற்றலோடும் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களைப் பயன்படுத்தி, அவர்களுடைய வாழ்க்கையில் எந்த எந்த வகையிலே உதவ முடியும் என்பதை அறிந்து பல்வேறு வகைகளிலே உதவிகள் செய்யப்படுகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் 4,50,000 ரூபாய் செலவில் வண்டிச் சக்கரம் புதுப்பிக்கும் தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று குறிப்பு வந்திருக்கிறது. அதைப் போன்று 20,93,000 ரூபாய் மூலதனத்தில் சோடியம் சிலிக்கேட் தொழிற்சாலை ஒன்றை தொடங்க வேண்டுமென்று குறிப்பு வந்திருக்கிறது. இப்படிப்பட்ட பல குறிப்புகள் வந்திருக்கிறபோது, இந்தக் கழகத்தின் மூலம் பங்கு மூலதனம் தந்து, அதை அடிப்படையாக வைத்து வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் கடன் பெற்று தொழிற்சாலைகளை உருவாக்கி நடத்தவும் அந்தத் தொழிற்சாலைகளிலே முன்னாள் இராணுவ வீரர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்கு உதவி செய்து, அவர்களுக்கு

வேண்டிய வாய்ப்பு வசதிகளை செய்யவேண்டுமென்பது நோக்கம். அந்த நோக்கத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக இப்போது தான் பதிவு செய்யப்பட்டு அந்தக் கழகம் இயங்க ஆரம்பித்து இருப்பதன் காரணத்தால் நாளடைவில் இந்தப் பணிகள் எல்லாம் முறைப்படி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தலைஞாயிறை துணை வட்டமாக்கல்

502—(*வினா எண். 6309)—திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறை துணை வட்டமாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) இடமில்லை.

### வேடசந்தூர் ஊராட்சி நிதி

503—(*வினா எண். 1561)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982-83 ஆம் ஆண்டில் வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற பணிகளுக்கு, ஊராட்சி நிதியில் இருந்து எடுத்து செலவு செய்த தொகை சுமார் 16 இலட்சம் ரூபாயை ஊராட்சி நிதிக்கு திரும்பத் தர மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மற்றும் (ஆ) தன்னிறைவுத் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின்கீழ் வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1982-83இல் தன்னிறைவுத் திட்ட வேலைகள் தொடங்கின. அவ்வொன்றியத்தில அவ்வேலைகள் 1982-83 மற்றும் 1983-84-இல் செய்து முடிக்கப்பட்டன. இதற்காக செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 61,44,065. அரசு மானியமாக வழங்கிய தொகை ரூ. 51,40,000, ஊராட்சி ஒன்றியத்தின் 5 சதவிகித பங்குத் தொகையான ரூ. 3,07,203 போக மீதி ரூ. 6,96,862—இல் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து



ரூ. 4,88,236-ம் ஊராட்சித் தொகுப்பு நிதியிலிருந்து ரூ. 2,08,625 செலவழிக்கப்பட்டன. ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்தும் ஊராட்சிகள் தொகுப்பு நிதியிலிருந்தும் செலவழிக்கபட்ட ரூ. 6,96,862-ஐ அரசு மானியமாக வழங்குமாறு ஊராட்சி ஒன்றியம் வேண்டியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்தும், சில இடங்களிலும் ஊராட்சி மன்றத்தில் இருக்கிற நிதியிலிருந்தும் எடுத்து தன்னிறைவுத் திட்டத்திற்கான பணிகள் செய்யப்படுவதால் ஊராட்சியினுடைய பணிகளைப் பொறுத்த வரையில் முழுமையாக நிதிநிலைமை இல்லாத சூழ்நிலை இருக்கிறது. எனவே 1982-83ல் செலவழித்த பணத்தைக் கருத்தில் கொண்டு விரைவாக அதை அந்த ஊராட்சிக்குக் கொடுக்க ஏற்பாடு செய்வது பற்றி பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஊராட்சி ஒன்றியங்கள் அரசினுடைய முன் அனுமதியின்றி அதிகமான பணத்தைச் செலவழித்து திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களுக்கு அதிகமாகச் செலவழித்து இருக்கிறார்கள். முழுத் தொகையையும் அரசு கொடுப்பது என்றால், அதனால் பெருத்த நிதி இழப்பு ஏற்படும். இந்த ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் கேள்வி வந்ததற்குப் பிறகுதான் இதைப்பற்றி அரசுக்கு வேண்டுகோள் வந்திருக்கிறது. அரசுக்கு வேண்டுகோள் வந்ததற்குப் பிறகு மாவட்ட ஆட்சியரிடமிருந்து மேற்கொண்டு தகவல் கோரப்பட்டிருக்கிறது. அது வந்ததற்குப் பிறகுதான் அரசு முடிவு எடுக்கும்.

### வாலாஜாபேட்டையில் புதிய பேருந்து நிலையம்

504—(*வினா எண். 3919)—திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபேட்டையில் புதிய பேருந்து நிலையம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றாண்டு விழாக் கொண்டாடிய நகராட்சியாகவும், தமிழகத்தில் முதன் முதலாக உருவாகிய நகராட்சியாகவும் உள்ள பழமையான நகராட்சியான வாலாஜாபேட்டையான அந்தப் பகுதியில் அதாவது பம்பாய்க்கும் சென்னைக்கும் மத்தியிலே இருக்கின்ற, சோளிங்கர்—திருத்தணி செல்கின்ற பேருந்துகள் சந்திக்கின்ற, பேருந்துகளைப் பொறுத்த வரையில் தினம் ஒரு விபத்து ஏற்படுவது என்பது அன்றாட நிகழ்ச்சியாக ஆகி இருக்கின்ற அந்தப் பகுதியின் மத்தியிலே அமைந்திருக்கின்ற வாலாஜாப் பேட்டையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் கருணை மனம் கொண்டு பேருந்து நிலையம் வைக்க முன்வருவார்களா, அதற்கு உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நகராட்சி எவ்வளவு பழமையானது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதெல்லாம் உண்மைதான். அரசு சொல்வதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்த நகராட்சியினுடைய நிதி நிலைமை மிகவும் மோசமாக இருப்பதன் காரணத்தால் தான் இதைக் கொடுக்க முடியவில்லை. நிதிநிலைமை சீரான பிறகு இதைக் கவனிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. கதிர்வேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இதை எடுத்து அந்த நகரத்தை மேம்படுத்துவதற்காகவாவது பேருந்து நிலையம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஏற்கனவே ஒரு கோரிக்கை வந்தது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 20 இலட்சத்தில் ஒரு பேருந்து நிலையம் அமைக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் 15 சதவீத வட்டியை 8 வருட காலத்திற்குள் கட்டுவது என்று அப்போது தீர்மானிக்கப்பட்டது. ஹட்கோ நிறுவனம் நிர்ணயிக்கின்ற அந்த வட்டிவீதம் நகராட்சிக்குப் பளுவானதாக இருக்கும் என்பதாலும், மேலும் வருவாய் தரத்தக்கதாக இருக்குமா என்று எண்ணவேண்டியிருப்பதாலும் ''ஹட்கோ'' நிறுவனத்தின் ''டெர்ம்ஸ் அன்ட் கண்டிஷன்ஸ்''-க்குத் தக்கபடி அதாவது அதனுடைய கட்டு திட்டங்களுக்குத் தக்கபடி மறுபரிசீலனை செய்யவேண்டும் என்ற வகையில், ஆணையர் அவர்களின் கருத்துருவை நகராட்சி இயக்குநர் திருப்பி அனுப்பியுள்ளார். அது வந்ததற்கு பிறகு வேண்டுமானால் பார்க்கலாம்.





திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை தான் பிரதான காரணமாக இருப்பதால் வரலாற்றுச் சிறப்பு மிக்க வாலாஜாபேட்டை நகராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பதில் சிக்கல் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதுபோன்ற நகராட்சி மன்றங்களுக்கு அரசே பரிவு காட்டி வருமானத்தை பெருக்குகின்ற அளவுக்கு, அந்த நகராட்சி மன்றத்திலேயே பேருந்து நிலையம் உருவாக்கப்படுமானால் அது கூட பின்னால் வருமானம் வர வாய்ப்பாக இருக்கும். எனவே இனியாவது அதை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன் ?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் கதிர்வேலுக்காக அக்கறை எடுத்துக்கொண்டு கேட்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே பேருந்து நிலையம் ஒன்று அங்கு இருக்கிறது. இருக்கிற பேருந்து நிலையம் பற்றாது இன்னும் கொஞ்சம் விரிவு படுத்த வேண்டும். பெரிதாக்கவேண்டும், அது ஊர் நடுவிலே இருக்கிற காரணத்தால் விபத்துகள் ஏற்படுகின்றன. என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அப்படி விரிவு படுத்த வேண்டும் என்று சொன்னால் ஐ.யு.டி.பி.யில் கடன் வாங்கித்தான் பேருந்து நிலையம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி கடன் வாங்குகிற போது, வட்டியோடு திருப்பிக் கொடுக்கிற வசதி அங்கே இருக்கிறதா என்று ஆராய வேண்டும். அது பற்றிய விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன.

## தென்னம்பாளையம் நகராட்சிக் குடியிருப்பு

505— (*வினா எண். 6562)— திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகராட்சிக்குச் சொந்தமான தென்னம்பாளையம் முனிசிபல் காலனியில் உள்ள 124 வீடுகளையும் குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்க வேண்டுமென்று கோரி சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து அரசிற்கு முறையீடு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை,

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே,
முறையீடு வரவில்லை என்றாலும் கூட, இந்த வினாவையே
முறையீடாக அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்
என்று கேட்டுக்கொண்டு, நலிந்தவர்களுக்கும் தாழ்த்தப்
பட்டவர்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்கின்ற
நல்லதொரு திட்டத்தை இந்த அரசு அறிவித்திருக்கிறது. அந்த
இடத்தில் 124 குடும்பங்கள் இருக்கின்றன. கைத்தறி நெச
வாளர்களும், மிகக் குறைந்த வருவாய் உள்ள தொழிலாளர்
களும் தான் அங்கே குடியிருக்கிறார்கள். அவர்கள் நகராட்சிக்
கும் இது குறித்து முறையீடு செய்திருக்கிறார்கள். அரசுக்கும்
அனுப்பியிருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் மனிதாபி
மான அடிப்படையில், குறைந்த சம்பளத்தில் வாழக்கூடிய
வர்கள் என்ற முறையில், அந்த 124 வீடுகளை அவர்களுக்கே
உரியதாக்க தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய
விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர்
அவர்களே, அந்த வீடுகள் 1962 ஆம் ஆண்டு திருப்பூர் நகராட்சி
யில் இருக்கக் கூடிய சுகாதாரப் பணியாளர்களுக்கு என்று
கட்டப்பட்ட வீடுகளாகும். 126 வீடுகள் இருக்கின்றன.
ஆனால் அந்த சுகாதாரப் பணியாளர்கள் அந்த வீடுகளுக்கு
குடிபோக மறுத்துவிட்ட காரணத்தால் தனியார்களுக்கு
ரூபாய் 10 வீதம் மாத வாடகை அறிவித்து முதலில் அந்த
வீடுகளை ஏற்பாடு செய்தார்கள். அந்த பத்து ரூபாய் மாத
வாடகையைக் கூட அவர்கள் சரியாகக் கட்டவில்லை. பிறகு
அந்த வாடகைத் தொகை மிக குறைவாக இருக்கிறது என்று
25 ரூபாயாக உயர்த்தினார்கள். மாதம் 10 ரூபாய் வீதம்
கட்ட வேண்டிய வாடகை பாக்கி 16,280 ரூபாய் மாதம் 25
ரூபாய் வீதம் கட்ட வேண்டிய வாடகை பாக்கி 68,638 ரூபாய்.
ஆக மொத்தம் 84,918 ரூபாய் வாடகை பாக்கியான இருக்கிறது.
கொடுக்கவில்லை. கொடுக்காமல் இருக்கிறார்கள். இந்த
நிலையில் அவர்களுடைய வேண்டுகோள் எதையும் பரி
சீலிக்க இயலாது என்று நகராட்சி முடிவு செய்திருக்கிறது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் பதில் உரையிலேயே குறிப்பிட்டு விட்டார்
கள். வாடகை கொடுக்க முடியாத அளவுக்கு நலிந்த தொழில்
பணியாற்றக்கூடிய குடும்பங்கள் தான் அங்கே இருக்கிறார்கள்
என்று. அதிலே இன்னொரு மிக முக்கியமான விஷயம், சுகாதார
துப்புரவுப் பணியாளர்களுக்காக கட்டப்பட்ட அந்த வீடுகளில்
குடியேற அவர்களே மறுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு
அந்த வீடுகள் நகரத்திலிருந்து ஒதுக்கப்பட்டு எந்தவித வசதி
களும் அற்ற பகுதியில் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகளில்
தைரியமாகக் குடியேறியவர்கள் என்ற முறையிலேயே அவர்களுக்கு



முன் உரிமை வழங்க வேண்டும் என்பதற்காகவும், வாடகை
கூட கொடுக்க முடியாத நிலையில் குறைந்த சம்பளத்தில்
வாழ்க்கை நடத்துகின்றவர்கள் என்ற முறையிலும், அவர்க
ளுடைய பாக்கி வாடகையை வசூல் செய்து கொண்டாவது
அந்த வீடுகளை அவர்களுக்கே உரிமை ஆக்கித்தர அமைச்சர்
அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அவர்கள் நலிந்த பிரிவினர் என்றும்,
வாடகை கூட கொடுக்க வசதி அற்றவர்கள் என்றும் நான்
ஒப்புக்கொள்ளவே இல்லை. முதலில் 10 ரூபாய் தான் வாடகை
இருந்தது. அதை 25 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அந்த
ரூ. 25 வாடகையை கொடுக்க வசதி உள்ளவர்கள் தாம் அவர்கள்.
நகராட்சி வீடுகள் ஆயிற்றே, ஏன் வாடகை கொடுக்க வேண்டும்
என்று நினைத்து கொடுக்காமல் இருப்பது சரியல்ல, முறையல்ல.
வாடகையைக் கொடுத்து பாக்கியை எல்லாம் அடைத்துவிட்டு
அதற்குப் பிறகு அது பற்றி வேண்டுகோள் வந்தால் அரசு
பரிசீலிக்கலாம்.

திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள பல நகரப்பகுதிகளில் சுகாதார
துப்புரவு தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள்
வசிக்கக்கூடிய குடியிருப்புகளை அவர்களுக்கே கொடுக்கும் செயற்
குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ? குறிப்பாக என்னுடைய
சேலம் தொகுதியில் குகை, கோர்ட் ரோடு போன்ற இடங்களில
வசிக்கக்கூடிய அவர்களுடைய வீடுகளை அவர்களுக்கே சொந்த
மாக்கித் தர வேண்டும் என்ற முறையில் அவர்கள் மனு செய்
துள்ளார்கள் என்று அறிகிறேன். மூலக்கேள்வி திருப்பூர் சம்பந்தப்
பட்டதாக இருந்தாலும் மாநிலம் தழுவிய அளவில் தொழிலா
ளர்கள் என்றால் எல்லோரும் ஒன்றுதான, அவர்கள் எங்கே
யிருந்தாலும் அவர்களுடைய குறைகளை இந்த அரசு போக்கும்
என்ற முகத்தான், இந்த கோரிக்கையை அமைச்சர் அவர்கள்
பரிவுடன் பரிசீலிப்பாரா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே,
சேலத்தைப் பற்றி தனிக் கேள்வி கேட்டால் விவரங்கள் சேகரித்து
தர முடியும். ஆனால் வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்கும்
திட்டம் இப்போது அரசிடம் இல்லை.

## கண்ணாடிப்புத்தூர்—போத்தநாயக்கனூர் குடிநீர்த் திட்டம்

506–(*வினா எண். 3916)–திரு. கு. திருமலைச்சாமிக் கவுண்டர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மடத்துக்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட கண்ணாடிப்புத்தூர், போத்தநாயக்கனூர் குடிநீர் திட்ட வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மடத்துக்குளம் குடிநீர்த் திட்டம் 1984 ஜனவரியில் முடிக்கப்பட்டு 10-1-1984 முதல் மக்களுக்கு பயனளித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கண்ணாடிப்புத்தூர் கிராமமும் சேர்க்கப்பட்டு குடிநீர் வழங்கும் தொட்டி அமைக்கப்பட்டு மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மடத்துக்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட போத்தநாயக்கனூர் கிராமத்தில் உள்ள கிணற்று நீர் அதிக புளோரைடு அளவினால் பாதிக்கப்பட்டதால், இக்கிராமம் ஐரோப்பிய பொருளாதாரக் குழுமம் உதவியுடன் செயல்படுத்தும் திட்டத்தில்'' மேற்கு நீலாம்பூர், ரெட்டிபாளையம் மற்றும் போத்தநாயக்கனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்'' கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, குழாய் பதிக்கும் வேலை நடந்து வருகிறது.

திரு. கு. திருமலைச்சாமிக் கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் வறட்சி அதிகமாக இருக்கும் காரணத்தினால் கூடிய சீக்கிரத்தில் தண்ணீர் கொடுப்பதற்கு நமது அமைச்சரவர்கள் நடவடிக்கைகள் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, எடுப்பார்கள்.

## வெள்ளக் கோயிலுக்குக் குடிநீர் வழங்கல்

507–(*வினா எண். 5742)—திரு. கு. ரமணி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம் வெள்ளகோவில் நகரத்தில் குடிநீர் பஞ்சம் உள்ளது பற்றி அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளதா ?



(ஆ) அமராவதி ஆற்றிலிருந்து இந்த நகரத்துக்கு குடிநீர் விநியோகிக்கும் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) பெரியார் மாவட்டம், வெள்ளக்கோவில் நகரத்தில் குடிநீர் பஞ்சம் பற்றி தகவல் ஏதும் கிடைக்கவில்லை. வெள்ளக்கோவிலில் குடிநீர் பஞ்சம் ஏதுமில்லை என்றும், போதிய அளவு குடிநீர் உள்ளது என்றும் தெரியவருகிறது.

(ஆ) ஆம். அமராவதி ஆற்றிலிருந்து வெள்ளக்கோவில் பேரூராட்சிக்கு குடிநீர் விநியோகிக்கத் திட்டம் முடிக்கப்பட்டு, மக்கள் உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(இ) அரசு ஆணை எண். 40/பொ.ப.து./11-3-1977-ல் ரூ. 29.50 இலட்சத்திற்கு வெள்ளக்கோவில் பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ரூ. 39·50 இலட்சம் செலவில் 11/80-ல் மக்கள் உபயோகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தற்சமயம் பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளக்கோவில்நகரம் முழுவதும் கிடைக்கிற தண்ணீர் உப்புத்தண்ணீர். ஆகவேதான் அமராவதி ஆற்றிலிருந்து குடிநீர் விநியோகிக்கும் குடிநீர்த் திட்டத்தை அங்கே அமலாக்கவேண்டும் என்ற கோரிக்கையே வந்தது. இப்போது அந்த நகரம் முழுவதற்கும் அமராவதி ஆற்றிலிருந்து வரக்கூடிய குடிநீர் விநியோகமாகிறதா ? அல்லது பகுதி பகுதியாக, சில பகுதிகளுக்கு மட்டும்தான் விநியோகமாகிறதா ? வீடுகளுக்கு குழாய் இணைப்புகள் கொடுக்கப்படுகிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் பற்றாக்குறை இல்லை என்ற வகையில்தான் எனக்கு தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நாள் ஒன்றுக்கு 8.8 இலட்சம் லிட்டராகவும் இந்தத் திட்டத்தில் முடிவு காலத்தில் தேவையான குடிநீர் அளவு 10.55 இலட்சம் லிட்டராகவும் கொடுப்பது என்ற வகையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் அமராவதி அணை மூடக்கூடிய சில நாட்களுக்கு முன்னால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது என்ற தகவல் சொல்லப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக வேளாண்குடி மக்கள் ஆற்றிலிருந்து நீர் எடுப்பதைத் தடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் தக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

[1986 ஏப்ரல் 18

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி அணைக்கட்டு மூடப்படக்கூடிய நேரத்தில் தண்ணீர் வருவதில் கஷ்டம் வராது என்று சொல்கிறார்கள். அமராவதி அணைக் கட்டிலிருந்து தண்ணீர் வேறு ஏரிகளுக்கு திறந்துவிடப்பட்டுத் தான் அந்தத் தண்ணீர் போகிறது. இதை இங்கே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி பயன் இல்லை, அது பொதுப்பணித் துறை அமைச்சரிடம் சொல்லவேண்டியது. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தக் குடிநீர் திட்டம் எந்தக் காரணத்தைக் கொண்டும் நின்று விடாமல் தொடர்ச்சி யாக தண்ணீர் கொடுப்பதற்கும் வீடுகளுக்கு இணைப்புகள் கொடுப்பதற்கும் அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் மட்டுமல்ல, என்னிடம் கூடச் சொல்லலாம். ஏனென்றால் பாசனத்திற்காக தண்ணீர் எடுக்கப்படுகிற நேரத்தில் குடி நீர் பற்றாக்குறை ஏற்படுகிறது என்பதுதான் பிரச்னை. அதை உரிய வகையில் தடுத்து குடிநீர் சீராக விநியோகிக்கிற வகை யில்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கா. செ. பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர் களே, தற்போது காங்கேயம் பேரூராட்சிக்கு அமராவதி ஆற்றி லிருந்து குடிதண்ணீர் கொண்டுவரப்படுகிறது. காங்கேயம் பேரூராட்சியையொட்டியுள்ள கிராமப்பகுதிகளில் கடுமையான குடிநீர் பஞ்சம் நிலவுகிறது. ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தும் அந்தப்பகுதி மக்களுக்கு குடிநீர் தர முடியாத சூழ்நிலை இருக்கி றது. எனவே அமராவதி ஆற்றிலிருந்து காங்கேயம் பேரூராட் சிக்கு வருகிற குடிநீர் திட்டத்தினை அருகாமையிலுள்ள கிராமப்பகுதிகளுக்கும் விஸ்தரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலை வர் அவர்களே, அதைப்பற்றி இப்போது எந்தத் தகவலும் இல்லை.

டாக்டர் ந. மாசிலாமணி : பேரவைத் தலைவர் அவர் களே, தற்போது தமிழகம் முழுவதும் ஒட்டுமொத்தமாக குடி நீர் பஞ்சம் நிலவுகிறது. குறிப்பாக, திருச்சி மாவட்டம் முழுவ தும் குடிநீர் நிலைமை திருப்திகரமாக இல்லை. கடந்த காலத் தில் தமிழக முதல் அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் கூட்டி இந்த குடிநீர் பஞ்சத்தை நீக்கு வதுபற்றி அவர்கள் ஆராய்ச்சி எல்லாம் கூடச் செய்திருக்கி றார்கள்.



1986 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆராய்ச்சிகளைப் பற்றி யெல்லாம் பிறகு பார்ப்போம்.

வினா எண்கள் 510, 511 ஆகியவை மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க முதலில் எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.

குடிசைப் பகுதிகளில் தொழிற்பயிற்சி வசதிகள்

510—*(வினா எண் 6958)—திரு. ரா. தாமரைக்கனி : மாண் புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைப் பகுதிகளில் வாழும் இளைஞர், பெண் களுக்கு உதவித்தொகையுடன் தொழிற்பயிற்சி அளிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) ஆம்.

(ஆ) வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகளில் வாழும் இளைஞர்களுக்கும் பெண்டிருக்கும் வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டி பழுது பார்த்தல், வீடுகளுக்கு மின்சார கம்பிகள் அமைத்தல், பற்ற வைத்தல், குழாய்கள் இணைத்தல், சுருக்கெழுத்து பயிற்சி, அச்சு வேலைகள், தையல் வேலைகள், செவிலியர் உதவியாளர் போன்ற வேலை களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சியாள ருக்கும் ரூ. 50 வரை மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படு கிறது.

(முற்பகல் 9–30)

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இந்தப் பயிற்சிக்கு எத்தனை பேர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள் ? அதுவும் குறிப்பாக, குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாக எடுக்கப்பட்டார்களா ? ஆம் எனில், சென்னையில் எடுக்கப்பட்டவர்களுடைய எண் ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செப்டம்பர் 1978 முதல் 1981 வரை சென்னை புறநகர் அமைப்பு இந்தக் காரியத்தைச் செய்து வந்தது. அதற்குப் பிறகு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

இதை ஏற்று, 1985–86 ஆம் ஆண்டில் அதற்காக ரூ. 4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த நிதி ஆண்டில் 394 நபர்கள் பயிற்சி பெற்றார்கள். தற்போது 275 நபர்கள் பயிற்சியில் உள்ளனர்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்வமுள்ள மக்களுக்கு சுய வேலைவாய்ப்பு பெற வங்கிகளின் மூலம் கடன் பெற்றுத் தருவதற்கு அரசு முயற்சி எடுத்திருக்கிறதா ? ஆம் எனில், எத்தனை மனுதாரர்களுக்கு எவ்வளவு பணம் கடன் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வங்கி நிதி உதவி பெற 15,000 மனுக்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் பெறப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மனுதாரருக்கும் குறைந்தது ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை நிதி உதவி செய்வதற்கு குடிசை மாற்று வாரியம் முடிவு செய்திருக்கிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதிகளிலே வாழும் இளைஞர்கள், பெண்களுக்கு உதவித்தொகையுடன் அரசு தொழிற் பயிற்சி அளிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பயிற்சி முடிந்தவுடன், அவர்கள் பெற்றிருக்கின்ற பயிற்சி மூலம் தொழில் செய்வதற்கு அரசு ஏதாவது நிதி உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் முயற்சியாக நிதி உதவி அளித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. அடுத்து, அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் நிதி உதவி பெறுவதற்கு தமிழக அரசின் பல்வேறு துறைகள் மூலம் கடன் தருகின்ற நல்ல சூழ்நிலை இப்பொழுதே இருக்கிறது.

## ஆற்காட்டில் வீட்டுவசதி வாரியப் பணிகள்

511—*(வினா எண் 8872) திரு. த. பழனி : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகர் பகுதியில் எடுத்துள்ள வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பகுதிகள் எப்போது கட்டப்படும் ?





(ஆ) அதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) மற்றும் (ஆ) : தற்போது நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் வாரியத்தின் வசம் கிடைத்ததும் வீடுகள் கட்டும் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக 1986–87 ஆம் ஆண்டிற்கான வாரிய வரவு-செலவு திட்டத்தில் ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) நில ஆர்ஜிதம் முழுமையடைந்த பின் பல்வேறு வீட்டு வசதி திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்ஜிதப் படுத்தப்பட்டிருக்கின்ற நிலத்தின் வாயிலாக எத்தனை வீடுகள் கட்டப்படும்? எத்தனை வீடுகள், எந்தெந்த பிரிவுகள் வாயிலாக அளிக்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவணை முறையில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு 100 வீடுகள் 15 இலட்சம் செலவிலும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 100 வீடுகள் 30 இலட்சம் செலவிலும், நடுத்தர வர்க்கத்தினருக்கு 100 வீடுகள் 50 இலட்சம் செலவிலும், உயர்தர பிரிவினருக்கு (எச்.ஐ.ஜி.) 50 வீடுகள் 50 இலட்சம் ரூபாய் செலவிலும், ஆக 350 வீடுகள் 145 இலட்சம் செலவில் கட்டப்பட உள்ளது.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வீடுகள் கட்டுவதற்கு எடுக்கப்பட இருக்கின்ற மொத்த நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ? ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற நிலத்தின் அளவு எவ்வளவு ? மேலும் எடுக்க இருக்கின்ற நிலத்தின் அளவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு நகரைப் பொறுத்த வரையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 71.26 ஏக்கர் நிலமும், அட்கோ நிதி உதவி மூலம் மேம்படுத்தப்பட்ட மனைகள் (சைட் அண்டு சர்வீஸ்) மூலம் 81.91 ஏக்கர் நிலமும் கையகப்படுத்தப்பட உள்ளது. இந்த நிலத்தை கையகப்படுத்தும் பணி பல்வேறு நிலையில் உள்ளது. அந்தப் பணி இறுதியாக எந்த நிலையில் உள்ளது என்று கூறும் சூழ்நிலை தற்போது இல்லை.

திரு. வி. எஸ். தங்கவேல் ராஜ் : தலைவர் அவர்களே, இதேபோல குளித்தலை, மணப்பாறை ஆகிய பகுதிகளில் வீட்டு வசதி வாரியத்தின் கீழ் வீடுகள் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, குளித்தலை, மணப்பாறை பகுதிகளில் வீடு கட்டுகிற எண்ணம் தற்போது அரசுக்கு இருக்கிறது.

சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் இயந்திரங்கள்.

508—(*வினா எண். 2068) திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள அனைத்து சைக்கிள் ரிக்ஷாக்களிலும் மோட்டார் பொருத்த ஆணை பிறப்பிக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) ரிக்ஷா ஓட்டுனர்களின் உடல் வலிமை களையும் வகையிலும் இயந்திரம் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு அதிக எண்ணிக்கையில் உரிமைகள் வழங்க வேண்டியும் சென்னை நகரில் உள்ள மொத்த சைக்கிள் ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை, ஆண்டுதோறும் 10 விழுக்காடு என்ற அளவில் படிப்படியாக குறைத்து இறுதியில் விசையால் இயங்கும் சைக்கிள் ரிக்ஷாக்கள் மட்டுமே சாலைகளில் இயங்குகின்ற நிலையை உருவாக்குவதே அரசின் கொள்கை ஆகும். இக் கொள்கை தற்போது நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நகர மக்களின் நலனுக்காக நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, வெயிலில் அவர்கள் உழைப்பதை பார்க்கிற போது மிகவும் வேதனையாக இருக்கிறது. சைக்கிள் ரிக்ஷா ஓட்டுகிற அந்த ஏழை மக்களின் நிலைமையைக் கருதி அரசு அவர்களுக்கு உதவியாக ரிக்ஷாக்களில் பொருத்துவதற்கு மோட்டாரை வாங்கிக் கொடுக்க, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் கொடுக்க ஒரு டை-அப்-அரேன்ஜ்மெண்ட் செய்ய முன் வருமா ? இன்றைய தினம் சென்னை நகரில் அனுமதி வழங்கப்பட்ட ரிக்ஷாக்கள் எத்தனை இருக்கின்றன ? அவைகளில் எத்தனை ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது ? அதற்கு அரசு என்ன உதவி செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, தற்போது மொத்தம் சென்னை மாநகரில் 5,211 சைக்கிள் ரிக்ஷாக்கள் இருக்கின்றன. அவைகளில் 468 சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. மீதம் இருக்கிற ரிக்ஷாக்களில் பொருத்தப்படவில்லை. அதற்கு காரணம் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பதிவு செய்து அவர்கள் மானியத்தைப் பெற வேண்டுமென்று சொல்லியிருந்தும் அதைச் செய்ய பலபேர் முன் வரவில்லை. இதுவரையில் இரண்டே இரண்டு சங்கங்களில் அப்படிப்பட்ட முறையில் முயற்சி எடுத்து 468 சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டாரைப் பொருத்தியிருக்கிறார்கள். அந்த முயற்சியில் எல்லோரும் ஈடுபடுவார்களானால் அவர்களுக்கு உதவி செய்ய அரசு தயாராக இருக்கிறது. மானியமாக கொடுக்க முடியுமே தவிர முழுத் தொகையும் ஈடுகட்ட கொடுப்பது என்பது இயலாது. மீதம் இருக்கிற ரிக்ஷாக்களைப் பொறுத்தவரையில் கடன் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதற்கு முன்வர யாரும் தயாராக இல்லாத நிலையில் தான் இப்படி குறைந்த எண்ணிக்கையில் அந்தக் காரியத்தை செய்து கொண்டிருக்கிறார்கள். அரசு முதல் கட்டமாக 11 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் கொடுத்திருந்தும் அதிலே மிகக் குறைந்த தொகையான 1,04,617 ரூபாயைத் தான் அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். எனவே எல்லோரும் முன்வந்தால் அரசு நிச்சயமாக உதவி செய்யத் தயாராக இருக்கிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 468 சைக்கிள் ரிக்ஷாக்களில் தான் மோட்டார் பொருத்தி இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு 11 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கியிருந்தும் அவர்கள் இதிலே ஒரு இலட்சம் ரூபாயை தான் பயன்படுத்தியிருப்பதாகவும் சொன்னார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்தத் தொகையை ஒதுக்கியிருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல சென்னை நகரத்தில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்களுக்கு இருக்கும் பொறுமை ஆட்டோ ரிக்ஷா ஓட்டுபவர்களுக்கு இல்லாமல் இருக்கிறது. அவர்கள் நகரத்தில் மிக வேசமாக ஓட்டி விபத்துகளையும், பாதிப்புகளையும் ஏற்படுத்துகிறார்கள். குறிப்பாக அவர்கள் தகுந்த உரிமம் இல்லாமல் ஓட்டுகிறார்கள். அதிகக் கட்டணத்தையும் வாங்குகிறார்கள். ஆகவே அதைக் கட்டுப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும், சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு கிலோ மீட்டருக்கு இவ்வளவு தான் வாங்க வேண்டுமென்ற அளவில் கட்டணத்தை வசூலிக்க அரசு ஏதாவது விதி முறையை வைத்திருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சைக்கிள் ரிக்ஷாக்களைப் பொறுத்தவரையில அப்படிப்பட்ட விதிமுறைகள் இல்ல. ஆனால் ஆட்டோ ரிக்ஷாக்களைப் பொறுத்தவரையில் இந்த நடவடிக்கைகளை கடுமையாக எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கனவே அறிவுறுத்தியிருப்பதால் அதன் அடிப்படையில் எல்லா அதிகாரிகளும் எல்லா நகரங்களிலும் மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் இந்தப் பிரச்சினைகளைப் பற்றி சட்டமன்றத்திலே பேசுகிறபொழுது அனைத்துக் கட்சியினரின் ஒத்துழைப்பையும் தொடர்ந்து கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் வருகிற 21-ஆம் தேதி காலை 10—30 மணிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் இங்கே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வைத்து நடக்கயிருக்கிறது. விபத்துக்கள அதிகமாக நடக்காமல் தடுப்பதற்கும், அதுபோல ஆட்டோ ரிக்ஷா ஓட்டுபவர்கள் இதுபோன்ற தவறுகள் செய்யாமல் இருக்கவும் சரியான நடவடிக்கைகளை கொஞ்சம் கடுமையாக எடுக்கத்தக்கவாறு, சாலை விதிகளை எல்லாம் கடுமையாக கடைபிடிக்க வேண்டுமென்று அதற்காக ஒரு கூட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்தயிருக்கிறார்கள். அதிலே இன்னும் பல முன்னேற்றமான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வகையிருக்குமென்று கருதுகிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் வர்க்கத்திலே மிகக் கடுமையாக உழைக்கின்ற வர்க்கம் எது என்று சொன்னால், அது இந்த ரிக்ஷா ஓட்டுகின்ற தொழிலாளர் வர்க்கம் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்கள் உடம்பில் இருக்கிற நாடி நரம்புகள் அத்தனையையும் இயக்கித்தான் அந்தப் பணியைச் செய்கிறார்கள். இப்படிப்பட்ட தொழிலாளர்கள் திருச்சி மாநகரத்திலேயும், திருவரம்பூர் நகரத்திலேயும் அதிகமாக இருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியில் உள்ள தொழிலாளர்கள் வைத்திருக்கின்ற ரிக்ஷாக்களுக்கும் இயந்திரத்தைப் பொருத்தி, அவைகளை ஓட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலும், சென்னையிலே இருந்தாலும் ஒன்றுதான். வேறு எந்த நகரத்திலேயிருந்தாலும்



ஒரேமாதிரியான பிரச்சனைதான் இருக்கும் என்பதிலே அரசுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. முதல் கட்டமாக எந்தத் திட்டத்தையும் ஒரு இடத்திலே பரிசோதனை அடிப்படையிலே நாம் அறிமுகம் செய்கிறோம். அப்படி அறிமுகம் செய்கிறபோது, அது வெற்றிகரமாக வரவில்லை என்றால், அல்லது தொழிலாளர்களிடத்திலிருந்து அதற்கு ஆதரவு இல்லாமல் இருந்தால், மற்ற இடங்களுக்கு இதை விரிவாக்குவதிலே கொஞ்சம் சிரமம் இருக்கிறது. எனவே அங்கே இருக்கின்ற அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் அதிகமான அக்கறையைக் காட்டி, அதிகமான எண்ணிக்கையிலே இதைப் பயன்படுத்திக் கொள்ள முன்வருவார்களானால், அரசு நிச்சயமாக இதைப் பற்றி கவனிக்கும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை மாநகரத்தில் ரிக்ஷாக்கள் பல இடங்களில் நிறுத்தப்பட்டு இருக்கின்றன. ஆனால் அடிக்கொருதரம் காவல்துறை அதிகாரிகள் வந்து துன்புறுத்துவதாக அவர்கள் வருத்தப்படுகிறார்கள். ஆகவே இந்த ரிக்ஷா ஓட்டுநர்கள், ரிக்ஷாக்களை நிறுத்திக்கொள்வதற்கு அரசாங்கமே இடங்களை ஒதுக்கித் தந்து, அந்த இடத்திலேதான் நிறுத்த வேண்டும் என்று விதிமுறைகளை வரையறுக்க முன்வருமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கே நிறுத்தக்கூடாதோ அங்கேயெல்லாம் நிறுத்தினால் நிச்சயமாக காவல்துறை வந்து கேட்பார்கள் இது பிரச்சனையாக இருக்கும். எங்கே நிறுத்த வேண்டுமோ, அங்கே நிறுத்தினால் எந்தப் பிரச்சனையும் இருக்காது. அரசாங்கம் இப்போது அவர்களுக்காக சில இடங்களை ஒதுக்கித் தந்திருக்கிறது. அந்த இடத்திலே அவர்கள் போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் நிறுத்திக் கொள்வார்களானால், பிரச்சனை இருக்காது. எங்கேயாவது குறிப்பிட்ட இடத்திலே இப்படிப்பட்ட பிரச்சனை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால், அந்த இடத்திலே அரசு தனியாக ஒதுக்கி, அவர்களுக்கு நல்ல ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கும்.

திரு. ஐ. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த நேரத்திலே டாக்டர் கலைஞர் அவர்கள் கை ரிக்ஷாக்களை ஒழித்து

விட்டு, சைக்கிள் ரிக்ஷாக்களை அந்தத் தொழிலாளர்களுக்கு
கொடுத்தார்கள். ஆனால் அந்த சைக்கிள் ரிக்ஷாக்கள் எல்
லாம் இப்போது வசதி படைத்தவர்கள், அவர்களிடத்தி
லிருந்து பெற்றுக் கொண்டு, லைசென்சையும் பெற்றுக்
கொண்டு, அவர்களுடைய உரிமையைப் பறித்துக்கொண்டு
இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,
அத்தனை ரிக்ஷாக்களையும் அரசு கைப்பற்றி, அந்த ஏழை
ரிக்ஷாத் தொழிலாளர்களுக்கு அதை உரிமையாக்கி,
லைசென்ஸ் வழங்குவதிலே அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து
நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ஜ. மூத்துசாமி : தலைவர் அவர்களே,
கை ரிக்ஷாக்களை ஒழித்து, சைக்கிள் ரிக்ஷாக்களைக் கொடுத்த
போதும் இப்படித்தான் செய்திருப்பார்கள் என்று நாம் நம்பு
கிறோம். ஏன் மீண்டும் பணக்காரர்களிடத்தில் போனது
என்று தெரியவில்லை. சைக்கிள் ரிக்ஷாக்கள் எல்லாம்
பணக்காரர்களிடத்திலே போகிறபோது மோட்டார் வைத்த பின்பு
இன்னும் பெரிய பண்க்காரர்களிடத்திலே போய் விடுமோ
என்ற அச்சம் எங்களுக்கு இருக்கிறது. இருந்தாலும் படிப்
படியாக சைக்கிள் ரிக்ஷாக்கள் முழுவதும் இயந்திரங்கள்
பொருத்தப்பட்ட ரிக்ஷாக்களாக மாற்றப்பட வேண்டும் என்
பது அரசின் நோக்கம், கொள்கை. அதை மனதிலே வைத்து
செய்து கொண்டிருக்கிறது. ஆனால் தொழிலாளர்களிடமிருந்து
இதற்கு கொஞ்சம் ஒத்துழைப்பு இல்லாமல் இருக்கின்றது
என்பதிலேதான் பிரச்சனை இருக்கிறது. முதல் முறையாக
இந்தத் தொழிலாளர்களை அழைத்து, ஒரு சங்கத்திலே 2,
3 பேர்கள் உள்ள பிரதிநிதிகளை அழைத்து, மொத்தம் 80,
100 பேர்களை வைத்து, அரசாங்கத்திலே ஆய்வு செய்து,
அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அரசு இந்தத் திட்
டத்தை அறிமுகம் செய்தது. ஆனால் ஒத்துழைப்பு அவர்களிட
மிருந்து கொஞ்சம் குறைவாக இருக்கின்ற காரணத்தால்,
மாண்பு மிகு உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் அவர்களுக்
குக் கொஞ்சம் சொல்லி, ஒத்துழைப்பு கொடுக்கச் சொன்னால்
அரசு இன்னும் தீவிரமாக அதைச் செயல்படுத்துவதற்கு வாய்ப்
பிருக்கும்

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓட்டுநர்கள்
லைசென்ஸ் பெறுகின்ற அந்த உரிமம் தடை செய்யப்பட்டு
இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இன்றைக்கு வங்கிகளிலே



கடன் உதவி கேட்டு, விண்ணப்பிக்கும்போது, அந்த லைசென்ஸ்
வைத்துள்ள உரிமைதாரர்களுக்குத்தான் வழங்கப்படுகிறது.
எனவே தடை செய்யப்பட்டு இருந்தால், அந்தத் தடை நீக்கம்
செய்யப்பட்டு, விண்ணப்பிக்கின்ற அனைத்து ரிக்ஷா தொழி
லாளர்களுக்கும் லைசென்ஸ் உரிமம் வழங்கி, அவர்கள் வங்கி
களிலேயிருந்து கடன் உதவி பெற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. மூத்துசாமி : தலைவர் அவர்களே,
சைக்கிள் ரிக்ஷாக்கள் குறைக்கப்படவேண்டும். மோட்டார்
பொருத்திய ரிக்ஷாக்களை அதிகப்படுத்தவேண்டும் என்பது
தான் அரசினுடைய எண்ணம் என்று நான் ஏற்கனவே சொன்
னேன். இப்போது அந்த உரிமம் வேண்டும் என்று கேட்கக்
கூடியவர்கள், மோட்டார் பொருத்தாத சாதாரண ரிக்ஷாக்
களை ஓட்டுவதற்காகக் கேட்கிறார்கள். யாராவது மோட்
டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்களை வைத்துக் கேட்டால்,
அதற்கு நாம் உரிமை கொடுப்பதிலே தடை இருக்காது. எனவே
நாம் கொள்கையை இப்படி வைத்துக்கொண்டு, நடை
முறையிலே நாம் மேற்கொள்கிற காரியத்தின் காரணமாக
ஏற்கனவே இருக்கின்ற சைக்கிள் ரிக்ஷாக்களுடைய எண்
ணிக்கை இன்னும் கூடுதலாகப் போய், இந்த மோட்டார்
பொருத்துகின்ற கொள்கை அடிபட்டுவிடக் கூடாது என்பது
தான் நோக்கம். எனவே அப்படிப்பட்ட எண்ணத்தோடு தொழி
லாளர்கள் முன் வந்தால், நிச்சயமாக அவர்களை ஊக்கு
விக்கலாம்.

திரு. எ.எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,
மனிதனை வைத்து மனிதன் கையால் இழுப்பதைக் கைவிட
வேண்டும் என்று தான் முன்பு இருந்த அரசு இதை தடை
செய்தது. இப்போது இருக்கின்ற அரசு அனைத்து ரிக்ஷாக்
களுக்கும் மோட்டார் பொருத்துவதிலே அவர்களுக்கு முன்னுரி
மை கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் நான்
விரும்புவது, மின்சார மோட்டாரைப் பொருத்தி ஓட்ட
வேண்டும் என்று ஒரு டைம் லிமிட் கொடுத்தால் என்ன? இப்
போது ஹெல்மெட் போட்டுக்கொண்டு தான் ஓட்ட
வேண்டும் என்று எப்படி சட்டம் கொண்டு வந்தீர்களோ, அதைப்
போல, மின்சார மோட்டார் பொருத்தித்தான் சைக்கிள்
ரிக்ஷாக்களை ஓட்டவேண்டும் என்று ஒரு சட்டம் போட்டு, 3
மாதம் காலம் அவர்களுக்கு டைம் கொடுத்து, இதைச் செய்ய
அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாணபுமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
அப்படி ஒரு முறையை நாம் கொண்டுவருவோமானால், அத்
தனை சைக்கிள் ரிக்சாக்காரனும், அதையெல்லாம் எங்காவது
விற்றுவிட்டுவெளியிலே போகவேண்டிய நிர்ப்பந்தம்வந்துவிடும்.

படிப்படியாக அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிற
வுக்கு அவர்கள் வசதி படைத்தவர்கள் அல்லர். அள
மானியம் கொடுப்பதற்காகக்கூட நாங்கள் ஏற்பாடு செய்திருக் எனவேதான்
கிறோம். கடன் கொடுப்பதற்குக் கூட வங்கிகளிலே பேசி
அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கான ஏற்பாடுகூடசெய்யப்
பட்டிருக்கிறது. இவ்வளவு வாய்ப்பு வசதகளை செய்து
கொடுத்தும்கூட அவர்கள் முன்வரவில்லை என்று சொன்னால்
அது அவர்கள் மீதுள்ள குறைபாடு என்று சொல்லிவிடமுடி
யாது. ஏழ்மை காரணமாக அந்த நிலை இருக்கிறது. இதற்கு
ஏதாவது மாற்று வழி கண்டுபிடிப்பதற்கு நிச்சயமாக 21 ஆம்
தேதி கூட்டத்திலே முதல்வர்அவர்கள் விவாதிக்க இருக்கிறார்கள்.
ஏதாவது அதற்கு தீர்வு ஏற்படும் என்று கருதுகிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கேள்வி கேட்டபோது,
5211 சைக்கிள் ரிக்ஷாக்கள் இருக்கிறது என்றும், 468 ரிக்ஷாக்
களுக்கு மோட்டார் பொருத்தப்பட்டிருக்கிறது என்றும் தெரி
வித்தார்கள். அதற்கு 11 லட்சப் ரூபாயை அரசு ஒதுக்கியிருந்
தும் 1 லட்சம் ரூபாய்தான் வங்கிகள் மூலமாகச் செலவழிக்கப்
பட்டிருக்கிறதென்றும் தெரிவித்தார்கள். இதனாலே, மோட்
டார்கள் பொருத்தப்படாததற்கான காரணம், சில சங்
கங்களின் மூலமாக உறுப்பினர்கள் ஆகி அதன் மூலமாக வங்கி
களை அணுகவில்லை என்றும் சொன்னார்கள். நான் மாண்பு
மிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இதய தெய்
வம் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டிலே உள்ள விவ
சாய தொழிலாளர்களுக்கு ஒரு சங்கத்தை அமைப்பதற்கு
அரசாங்கம் அவர்களுக்கு 10 ரூபாய் செலுத்தி சங்கங்களிலே
உறுப்பினர்களாக ஆக்குகின்ற அந்த ஏற்பாட்டை அரசாங்கமே
செய்திருக்கிற காரணத்தினால் இந்த சைக்கிள் ரிக்ஷா ஓட்டு
பவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சலுகை கொடுப்பதன் காரணமாக
அவர்கள் சங்கத்திலே அங்கத்தினர்கள் ஆவதற்குள்ள தொகை
யில் ஒரு பகுதியை மானியமாக ஆக்குவதற்கு அரசாங்கம்
ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி:— மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, உறுப்பினர் ஆகிவிட்டால் மானியம்
தானாகவே கிடைக்கிறது. உறுப்பினர்களாக்கி அவர்கள்
மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா வாங்கவேண்டு
மென்று சொன்னால் அதற்கு ஏறத்தாழ அரசாங்கம் 1,125
ரூபாயோ அல்லது அந்த மோட்டார் பொருத்துகின்ற செலவில்
25 சதவீதத்தை மானியமாக கொடுத்து மீதியிருக்கின்ற தொகை
யைக் கடனாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி
ருக்கிறது. எனவே அவர்கள் உறுப்பினர்களாகச் சேருவது
தான் இன்று பிரச்சனை. சேருவதற்குக்கூட நடவடிக்கை





எடுக்கவேண்டுமென்று சொன்னால் அது அவ்வளவு சரியாக இருக்காது என்று கருதுகிறேன். அவர்கள் சேர்ந்தபின்பு அவர்கள் மோட்டார் பொருத்திக்கொள்வதற்குண்டான வாய்ப்பு வசதிகளை கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுப்பதுதான் முறையாக இருக்கும் என்று கருதுகிறேன். அதை இப்போது செய்து கொண்டிருக்கிறது. இதிலே என்ன குறைபாடு இருக்கிறது என்பதைப் பார்த்து அதைக் களை வதற்கு நடவடிக்கைகளை நிச்சயமாக நாம் எடுக்கலாம்.

திரு. ஜி. கே. ஜே. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலை நாயகர் அவர்களே, சைக்கிள் ரிக்சாவிலே மோட்டாரைப் பொருத்தினால்தான் அது சிறப்பாக ஓடும் என்ற சிறப்பு இருந்தாலும், வாலிபம் இருக்கின்ற வரையில் அந்தத் தொழிலாளி உழைக்கின்றான். வாலிபம் குறைந்தபிறகு உழைக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் தொழிலாளியின் குடும்பம் பாதிக்கப்படுகிறது. ஆகவே அந்தத் தொழிலாளிக்கு நம்முடைய அரசாங்கத்தின் மூலமாக இப்போது இருக்கின்ற அத்தனைத் தொழிலாளிகளையும் தெரிந்தெடுத்து அந்தத் தொழிலாளிக்கே அந்த மோட்டார் சைக்கிள் ரிக்சாவினை வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். தனிப்பட்டவர்கள் வைத்திருந்தால் அந்த ரிக்சாக்களை அப்படியே விட்டுவிட்டு இதுவரைக்கும் உழைத்த லாபம் போதும் என்ற முறையோடு விட்டுவிட்டால் அந்த விட்ட பணியைத் தொடர அரசு முன் வருமா? அந்தத் தொழிலாளிகளுக்கு மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்சாக்களை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையாக மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்சாவையே வாங்கிக் கொடுத்துவிடலாம் என்ற கருத்தைத்தான் அவர் சொல்கிறார் என்று கருதுகிறேன். அது கொஞ்சம் கடினமான விஷயம்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 11 லட்சம் ரூபாயில் 1 லட்சம் ரூபாய்தான் செலவழிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்கள். மதுரை போன்ற பெரு நகரங்களிலே உள்ள ரிக்சா தொழிலாளிகளுக்கு இது போன்ற மோட்டார் வைத்த சைக்கிள் ரிக்சாக்களைக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். இதிலே 11 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது மட்டுமல்ல, இந்தத் தொகை சரியாக செலவழிக்கப்படாத காரணத்தால் மீண்டும் அரசுக்குத் திருப்பிக்

[1986 ஏப்ரல் 18

கொடுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதிலே பாதித் தொகை ஏறத்தாழ 60 ஆயிரம் ரூபாய்தான் செலவழிக்கப்பட்டது. மீதித் தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்தத் தொழிலாளிகளிடத்திலே இதற்கு ஒரு வரவேற்பு இல்லையோ என்ற காரணத்தாலேதான் அந்தப் பணத்தை அதிகமாக ஒதுக்கமுடியாத நிலை இருக்கிறது. மற்ற இடங்களிலே இருப்பவர்கள் முன்வருவார்களேயானால் அவர்களுக்கு உதவி செய்வதைப் பற்றி அரசு நிச்சயமாக ஆய்வு செய்யும்.

இரவு நேரங்களில் மோட்டார் வாகனங்கள் சரிபார்க்கும் வசதி

509—(*வினா எண் 8717)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரிலுள்ள பெட்ரோல் மற்றும் டீசல் பங்குகளில் இரவு நேரங்களில் வாகனங்களில் சக்கரங்களுக்கு காற்றுத்தர மறுப்பது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : இது பற்றி புகார் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(முற்பகல் 9-50)

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோல் பங்குகளில் காற்று பிடிக்கின்ற இயந்திரத்தை வைக்கிறார்கள். மாலை ஆனதும் நிறுத்தி விடுகிறார்கள். இதனால் சென்னை நகரத்தில் இருக்கின்ற அனைத்து வாகனங்கள் வைத்து இருப்பவர்கள் தொல்லைக்கு ஆளாகிறார்கள். குறிப்பாக சினிமாவுக்கு சென்று விட்டு அல்லது மற்ற அலுவல் காரணமாக சென்று விட்டு இரவு நேரங்களில் வரும்போது காரில் காற்று இல்லாததால் வண்டிகள் நின்று விடுகின்றன. அப்போது பெட்ரோல் பங்குகளில் போய் பார்த்தால் அவர்கள் அந்த காற்று அடிக்கும் இயந்திரத்தை மூடிவிடுகிறார்கள். எனவே இந்த நிலையை கருதி— இதுபற்றி புகார் எதுவும் அரசுக்கு வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—இதையே புகாராக எடுத்துக்கொண்டு பெட்ரோல் பங்குகளில் இரவு நேரங்களில் அந்த காற்று அடிக்கும் இயந்திரத்தை வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்?



1986 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற வாகனங்களுக்கு அங்கே இலவசமாக தண்ணீரும், காற்றும் கொடுக்கவேண்டும் என்று உத்திரவு இருக்கிறது. இதிலே எந்த எந்த பங்குகளில் அப்படிப்பட்ட நடவடிக்கை இல்லை அல்லது அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள் என்று ஏதாவது புகார் தனிப்பட்ட முறையில் இருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கமுடியும். இப்படி சொல்லுவதால் அவர்களுக்கு மீண்டும் ஒரு சுற்றறிக்கைதான் அனுப்ப முடியும். தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் போகிறபோது அப்படி ஏதாவது நிலைமை ஏற்பட்டால் உடனடியாக எங்கள் கவனத்திற்கு கொண்டு வந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அது மற்றவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கும் வகையில் நாம் அதை செய்யலாம்.

சென்னை தாடண்டர் நகர் குடிசைப் பகுதிகளில் பட்டா வழங்கல்

512—*(வினா எண். 1222)—திரு சைதை சா. துரைசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 139-வது வட்டம் தாடண்டர் நகர் அரசு குடியிருப்புக்கு பின்புறமுள்ள குடிசைப் பகுதி வாழ் மக்களுக்கு ஆதி திராவிடர் நலத்துறை வாயிலாக பட்டா வழங்குகின்ற பணி கால தாமதம் ஆவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் பட்டா வழங்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) விரைவில் பட்டா வழங்க சென்னை மாவட்டாட்சியரால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் பாதி பேருக்கு இலவச பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. மீதி பாதி பேருக்கு வழங்காமல் இருக்கிறது. எனவே அனைவருக்கும் இலவச பட்டா என்ற அடிப்படையில் வழங்கப்படுமா அல்லது தொகை நிர்ணயிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாட் ஹண்டர் நகர் அரசு குடியிருப்புக்கு பின்புறம் உள்ள நிலத்தின் விஸ்தீரணம் 96 ஏக்கர் 77 சதுர மீட்டர் ஆகும். அந்த அரசு புறம்போக்கு நிலம் ஆதி திராவிட நலத்துறையைச் சேர்ந்தது. அதில் ஆக்கிரமிப்பு செய்துள்ளோர் பெரும்பாலும் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள். 1973ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டு மொத்தமாக 54 குடும்பங்களுக்கு இலவசமாக வீட்டு மனைப் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற குடும்பங்கள் மற்ற வகுப்பினர் என்ற காரணத்தால் அந்த வீட்டு மனைப்பட்டா வழங்கப்படவில்லை. பட்டா பெற்றுக் கொண்ட சில ஆதி திராவிட குடும்பங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நில எல்லைக்குள் வசிக்காமல் மற்ற பகுதிகளையும் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். அப்படி எத்தனை பேர்கள் நிபந்தனையை மீறி இருக்கிறார்கள் என்று பரிசீலனைச் செய்து அவர்களுக்கு அளிக்கப்பட்ட பட்டாவை ரத்து செய்து தற்போது குடியிருக்கின்ற குடும்பங்களுக்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு சைதை. சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அங்கே ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே வசிக்கின்ற அந்த மக்களுக்கு பட்டா வழங்குகின்ற அந்த நடவடிக்கையை நடப்பு நிதி ஆண்டில் எடுக்கப்படுமா? இதேபோல் சென்னை மாநகரத்தில் பலயிடங்களில் ஆதி திராவிட குடியிருப்புகள் குடிசைப் பகுதிகளில் இருக்கின்றன. அப்படி இருக்கும் இடங்கள் தனியாருக்குச் சொந்தமாக இருக்கின்றன. எனவே, அப்படிப்பட்ட குடிசைப் பகுதிகளை கையகப்படுத்தி ஆதி திராவிட மக்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வசிக்கின்ற மக்களில் யார் யார் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றி கணக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த கணக்கு வந்துசேர்ந்தபிறகு அங்கே வசிக்கின்ற அந்த மக்களுக்கு பட்டா வழங்கப்படும். அதே போல் இங்கே நகரத்தில் இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு தனியார் நிலத்தை எடுத்து பட்டா வழங்குகின்ற நடவடிக்கை இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். அதை பொறுத்த வரையில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் தீவிரமாக செயலாற்றிக்கொண்டு இருக்கிறது. அதன் மூலமாகத்தான் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதை இந்தத் நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.





## திருப்புவனம் ஆதி திராவிடர்களுக்கு மனைப் பட்டாக்கள்

*513—(*வினா எண். 3263)*—திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதி—திருப்புவனம் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள வாலியாரேந்தல் கிராமத்தில் ஆர்ஜிதம் செய்து ஆதி திராவிடர்களுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்ட இடத்தில் ஆதி திராவிடர்கள் அனுபவிக்க முடியாதபடி நிலச் சொந்தக்காரர்கள் தடுக்கிறார்கள் என புகார் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** (அ) வழங்கப்பட்ட மனைப்பட்டாக்களை ஆதி திராவிடர்கள் வீடு கட்ட உபயோகப் படுத்துவதை உழவடை-செய்யும் குடிவார உரிமைதாரர்கள் தடுக்கிறார்கள் என புகார் வந்தது.

(ஆ) நில உழவடைதாரர்கள் மற்றும் ஆதி திராவிடர்கள் ஆகிய இரு தரப்பினரையும் வரவழைத்து இது பற்றி சுமுகமான முறையில் பேசி முடிக்கப்பட்டு, வீட்டுமனை அமைப்பின்படி நபர் ஒன்றுக்கு 3 சென்ட் வீதம் அடையாளங்கள் வைத்து காண்பித்து அவர்களிடம் ஒப்புதலும் பெறப்பட்டுவிட்டது.

## கோமுகி அணை உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்

*514—(*வினா எண். 3904)*—திரு. சோ. கலிதீர்த்தான் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோமுகி டேமிலுள்ள மலைவாசி மாணவர்கள் அரசினர் உறைவிட உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் இல்லை என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?:

(இ) கட்டிடம் கட்டும் பணி எப்பொழுது துவங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** (அ) கோமுகி அணையிலுள்ள பழங்குடி மாணவர் உறைவிடப் பள்ளி பொதுப்பணித் துறைக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) மற்றும் (இ) தற்போது கோமுகி அணையில் இயங்கி வரும் பழங்குடியினர் ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் மற்றும் மாணவ மாணவியருக்கு விடுதிகள் ஆகியவை கட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாசி மக்களுக்காக தமிழகத்தில் மொத்தம் எத்தனை உறைவிடப் பள்ளிகள் இருக்கின்றன? அந்தப் பள்ளிகளின் மூலம் ஆண்டுக்கு எத்தனை மாணவர்கள் பயனடைகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டுவரையில், மொத்தத்தில், தமிழகத்தைப் பொறுத்த வரையில், 120 உறைவிடப் பள்ளிகள் இருக்கின்றன. அதிலே கிட்டத்தட்ட 9,792 மாணவர்கள் பயனடைகிறார்கள்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவாசி உறைவிடப் பள்ளி, அல்லது ஹரிஜன மக்களுடைய உறைவிடப் பள்ளிகளில் அங்கே படிக்கும் மாணவர்களுக்கு தங்கும் வசதி இல்லாத கட்டிடங்கள் எத்தனை உள்ளன? அப்படி தங்கும் வசதி இல்லாதவர்களுக்கு உடனடியாக தங்கும் வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, உறைவிடப் பள்ளி என்றாலே பள்ளி நடக்கும், அதிலே இருக்கும் மாணவர்கள் படிப்பதற்கும், தங்குவதற்கும் வசதிகளோடு கூடிய ஒரு விடுதி போன்றது. அதுதான் உறைவிடப் பள்ளி. உறைவிடப் பள்ளி என்பது தங்கிப் படிக்கும் பள்ளி தான். ஆகவே அதிலே நமது அரசு மூலம் கட்டிடங்கள் இல்லாவிட்டாலும், தனியார் கட்டிடங்களில் தற்போது இயங்கிக் கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோமுகி டாமிலுள்ள மலைவாசிப் பள்ளியை நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன் சென்று பார்வையிட்டபோது, அங்கே கதவுகள் இல்லாமலும், ஜன்னல்கள் இல்லாமலும் உள்ள சூழ்நிலையில் அந்தப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளி மலைப் பகுதியில் இருக்கின்ற காரணத்தால், அங்கே பூச்சிகள், பாம்புகள் கூட வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் பெட்டிகளைக் கூட வைத்துக்கொள்ள முடியாமல், வராண்டாவில் கூட சரியாக படுத்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் தரையில் படுத்து உறங்கக் கூடிய நிலையில், லைட் வசதிகள் கூட இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தயவு



செய்து உடனடியாக அதற்கான எஸ்டிமேட் தயார் செய்திருந்தால், விரைவிலே காலவரையறை வைத்து, அந்தக் கட்டடத்தை கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? தற்போது வாடகைக் கட்டிடம் ஏதாவது ஒன்றைப் பார்த்து, அதிலே மாற்றியமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, எஸ்டிமேட் ரெடியாகி, ஒரு டெண்டர் விடப்பட்டு, கட்டாயம் கட்டுகின்ற நிலைமை இருக்கிறது. அதற்குள்ளே ஒரு வாடகைக் கட்டடம் பார்ப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதனால், வேறு கட்டடம் ஏதாவது அவர் பார்த்துத் தந்தால், மாற்று ஏற்பாடாக அந்த இடத்தில் வைக்க அரசு ஆவனசெய்யும்.

### திருவொற்றியூர் கடற்கரை பகுதியில் மீனவர்களுக்கு வீடுகள்

515—(*வினா எண். 4203)—திரு. ஜி. கே. ஜெ. பாரதி மற்றும் திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் எண்ணூர் கடற்கரை பகுதிகளில் வசிக்கும் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தற்போது இல்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான திருவொற்றியூரில் 19 குப்பங்கள் இருக்கின்றன. பலகைத் தொட்டிக் குப்பம், காசி கோயில் குப்பம், கொடுகாட்டூர், சின்ன மத்திவாக்கம் நல்ல தண்ணீர் ஓடை, ஒண்டிக் குப்பம், திருச்சானூர் குப்பம், நெட்டிங் குப்பம், தாழக் குப்பம் அப்பர் நகர் போன்ற பகுதிகளை நம்முடைய வங்கக் கடல் தாய் கபளீகரம் செய்துவிட்டதால், அங்கே போதிய இடம் இல்லை. அழகான வீடுகளை இந்த நிதியாண்டிலாவது அவர்களுக்குக் கட்டித் தர, நம்முடைய மீனவ நண்பனாகிய மாண்புமிகு பொன் மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் திட்டமிட்டு கட்டித் தருவதற்கு, மீண்டும் அதைப் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் வடக்குக் கடற்கரையோரப் பகுதியைச் சார்ந்த லட்சுமிபுரம், நல்ல தண்ணீர், ஒட்டிக் குப்பம், தள்ளிக் குப்பம், எண்ணூர் ஆகிய இடங்களில் வசிக்கும் மீன

வர்கள் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை வேறு பாதுகாப்பான இடங்களில், தொழில் வசதிக்கேற்ப குடியமர்த்த, தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மீன்வளத் துறை இயக்குநர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்குத் தற்போது கட்டித்தரப்படும் வீடுகளுக்கு எவ்வளவு மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன? மீன் வளத் துறைக்குச் சொந்தமான இடங்களில் மீனவர்கள் வசிக்கிறபோது அதை அவர்களுக்கே பட்டாப் போட்டுக் கொடுத்து அங்கே அவர்களுக்கு வீடு கட்டித்தரப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் 6 ஆயிரம் முதல் 9 ஆயிரம் வரை மதிப்பில் வீடுகள் கட்டித்தரப்பட்டு வந்தது. போதிய வசதி இல்லை என்பதாலும் உறுதியாக இல்லையென்பதாலும் கடல் அரிப்பு, புயல் போன்றவைகளால் மீனவர்கள் பாதிக்கப்படுகிற சூழ்நிலை வருகிற காரணத்தினாலும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு வீடு 16 ஆயிரம் ரூபாயிலே கட்டுகிற திட்டத்தை இந்த ஆண்டு அறிவித்து அதற்காக 50 லட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு 50 லட்சம் ரூபாயிலே 1 வீடு 16 ஆயிரம் ரூபாய் விகிதத்தில் 300 வீடுகள் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு தலைநாயகர் அவர்களே, நம்முடைய திருவொற்றியூர், எண்ணூர் போன்ற பகுதிகளிலே நிலத்தைக் கையகப்படுத்தி காசிகோயில் குப்பம் பகுதியிலே 2 ஏக்கர் நிலம் இப்போதும் தயாராக இருக்கிறது. நடப்பு ஆண்டிலேயே அங்கே அமைச்சர் கட்டித்தருகிற வாய்ப்பைத்தருவார்களா ? எந்த வகை மாடலில் அந்த வீடு கட்டித்தரப்பட இருக்கிறது ? புரட்சிகரமான திட்டத்தை முன்னாலே அறிவித்தார்கள். அந்தத் திட்டம் எப்படிப்பட்ட திட்டம் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, இடம் இருக்குமானால் இந்த ஆண்டு அந்தப் பகுதியிலே வேண்டுமானால் 300 வீடுகள் கட்டித்தருகிற நடவடிக்கை மேற்கொள்ளலாம்.





திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான தாம்பரத்திலே கொட்டிவாக்கம், நீலங்கரை, ஈஞ்சம் பாக்கம், உத்தண்டி ஆகிய பகுதிகளிலே மீனவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு சென்ற ஆண்டு பிப்ரவரி மாதத்திலே டெண்டர்கள் விடப்பட்டது. இதுவரையில் எந்த வேலையும் அங்கே நடக்காமல் இருப்பதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, திருவொற்றியூர். எண்ணூர் பகுதிகளில் வீடுகட்டும் திட்டம் பற்றி கேள்வியில் இருக்கிறது. இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர் அங்கே வீடு கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டது என்று சொன்னார்கள். ஒப்பந்தக்காரர் வேலை தொடங்கவில்லை என்று கருதுகிறேன். இருந்தாலும் அதைப் பற்றி விவரமாக என்னிடத்திலே சொன்னால் விரைவிலே கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக 50 லட்ச ரூபாயை ஒதுக்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 50 லட்ச ரூபாய் ஒதுக்கித்தந்திருக்கிற புரட்சித் தலைவர் அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வீடுகள் கட்டுகிற திட்டம் இருக்கிறதே, அதைப்போன்று திருவொற்றியூர், எண்ணூர் ஆகிய பகுதிகளிலே கூட்டுறவுச் சங்கம் மூலமாக அவர்களுக்கு வீடுகளைக் கட்டித்தருவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவும் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும் பல இடங்களில் வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வீடுகள் கட்டுகிற திட்டத்தை நாம் பரிசீலிக்கவில்லை. வேண்டுமானால் மீனவர்களுக்கு அவர்கள் கேட்டிருக்கிற இடங்களிலே மனைப்பட்டா இருக்குமானால் என்ன என்ன மனைப் பட்டாக்கள் இருக்கின்றன, அங்கே வீடுகளைக் கட்டித் தாருங்கள் என்று கோரிக்கை வைத்தால் அவர்கள் தொகுதியிலோ அல்லது அவர்கள் விரும்புகிற பகுதிகளிலோ வீடுகளைக் கட்டித்தருகிற நடவடிக்கையை அரசுமேற்கொள்ளும்.

திரு. அ. வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு வீடுகட்டிக்கொடுக்கிற திட்டம் சென்னை மாநகரில் மட்டுந்தானா ? தஞ்சாவூர் மாவட்டத்திலே உள்ள கடலோரப் பகுதிகளிலேயும் புதுக்கோட்டை மாவட்டத்திலே உள்ள கடலோரப் பகுதிகளிலேயும் இருக்கக்கூடிய மீனவர்களுக்கு இதுவரையில்

வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. இனிமேலாவது தமிழக அரசு அங்கே வீடு கட்டும் திட்டத்தை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையிலே 402 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. எல்லாப் பகுதிகளிலேயும் கொஞ்சம்கொஞ்சமாக வீடுகளை நாம் ஆதி திராவிட நலத் துறை வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகக் கட்டிக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது இந்த ஆண்டு 300 வீடுகளை மட்டும் கட்டுவதற்கு புதிய வடிவமைப்பிலே அந்த ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். எங்கெங்கே வீடுகளைக் கட்ட வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்தப் பகுதியிலே அந்தச் சட்ட மன்ற உறுப்பினர்களின் மூலமாகக் கோரிக்கை கொடுப்பார்களேயானால் அதைப் பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

### அதிராம்பட்டினம் இறால் மீன் பண்ணை மேம்பாடு

516—(* வினா எண். 7059)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிராமப்பட்டினத்தில் உப்பங்கழி இறால் மீன் பண்ணையை மேம்பாட்டு முன்னோடித் திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவத் தலைவர் அவர்களே, அதிராம்பட்டினம், வேதாரண்யம், நாகப்பட்டினம் ஆகிய இந்தப் பகுதிகளில் அதிகமான இறால் மீன் கிடைப்பதால் இறால் மீன்களை வெளி மாநிலத்திலே இருப்பவர்கள் அதிகப்படியாக விரும்பி வாங்குவதாலும் இந்த இறால் மீன்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்காக மேம்பாடு முன்னோடித் திட்டத்தின் கீழே ஒரு பண்ணையை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கழிமுக உவர் நீர்ப் பண்ணைகள், இறால் வளர்ப்பு பண்ணை போன்றவைகளை இந்த அரசு திட்டமிட்டு கடலோரத்திலே அமைக்க திட்டமிட்டிருக்கிறது. அதிலே, தென்னாற்காடு—கிள்ளை, மரக்காணம் என்ற இரண்டு ஊர்களில்; தஞ்சாவூர்—தொண்டியக்காடு, தென்னாற்காடு—மரக்காணம், செங்கற்பட்டிலே பழவேற்காடு, இராமநாதபுரத்திலே அரியான்குண்டு, தாரம்காடு, சென்னையிலே சாந்தோம் என்று 9 இடங்களில் 67,13,000 ரூபாய் செலவில் கூட்டு இறால் வளர்ப்புப் பண்ணை, இறால் வளர்ப்புப் பண்ணை, கழிமுக உவர் நீர் மீன் வளர்ப்புப் பண்ணை போன்றவைகள் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளத் துறை மூலம் பல்வேறு கிராமங்களில் மீன்களை வளர்ப்பதைப்போல, இறால் மீன்களையும் எல்லாப் பஞ்சாயத்துக்களிலேயும், கிராமப்புற பகுதிகளிலேயும் வளர்ப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்கு முன்னால் இப்படித்தான் கடலோரங்களிலேயெல்லாம் சிறு சிறு குட்டைகள் வெட்டி அதிலே இறால் வளர்க்கலாம் என்ற திட்டத்தைச் செயல்படுத்தி அது சரியாக செயல்படாத காரணத்தால் கைவிடப்பட்டிருக்கிறது. இதற்குச் சில வசதி வாய்ப்புள்ள பகுதிகள், உவர்நீர் தண்ணீர் கடலுக்கும் அதற்கும் இடையிலே வருகிற அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தித்தான் இப்படி நாம் திட்டங்களைச் செயல்படுத்துகிறோம். அப்படிப்பட்ட திட்டத்திலே இப்பொழுது அவர்கள் கேள்வியிலே கேட்டிருக்கின்ற அதிராம்பட்டினத்தில் கூட்டுறவு முயற்சியால் 50 ஹெக்டேர் பரப்பில் கழிமுக உவர்நீரில் இறால் வளர்ப்பு பண்ணை அமைக்க ஒப்பளிப்பு வழங்கியது. அதேமாதிரி, கூட்டுறவுச் சங்கமானது 4-4-1981 முதல் செயல்பட்டுக்கொண்டு அங்கே இருக்கிறது. இந்தச் சங்கமானது ஒரு ஹெக்டேர் பரப்பில் 10 குளங்களை அந்தப் பகுதியிலே கட்டி வைத்துக்கொண்டு இருக்கிறது. ஆனால் மீன் வளர்ப்பிலே சரியான முன்னேற்றம் இல்லை என்ற தகவல் நமக்கு வந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலில் செங்கற்பட்டு மாவட்டத்தில் பழவேற்காட்டில் இறால் மீன் வளர்ப்புப் பண்ணை செயல்படுத்தப்பட்டு வருவதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பழவேற்காடு ஆந்திராவை ஒட்டியுள்ள பகுதி. கடல் கொள் அளவிலே உள்ள பகுதி. ஆகவே, மகாபலிபுரம்,

செய்யூர், சதுரங்கப்பட்டணம் போன்ற கடல் பேக்வாட்டர்ஸ் வசதியுள்ள இடத்தில் இறால் மீன்களை வளர்ப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட கடல் நீர் கொஞ்சம் உட்பகுதியில் நீண்ட தூரம் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற இந்த கார்காட்டு முகத்துவாரத்திலே இருக்குமானால் அங்கே வளர்ப்பதை பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உற்பத்தியாகிற, பிறக்கின்ற, வளர்கின்ற உயர் ரகமான கட்லாக் போன்றவைகளை சாத்தனூர், செங்கற்பட்டு போன்ற பகுதிகளிலே வளர்க்கப்படுகின்றன. அது போன்ற மீன்களை அயல்நாடுகளுக்கு அனுப்பி, அரசுக்கு அதிக வருவாயைப் பெருக்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவரவர்களே இந்தக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று கருதுகிறேன். இது உள்நாட்டு மீன்கள் வளர்ப்பதைப்பற்றிய விவகாரம். இது சம்பந்தமாக அவர்கள் தனிக் கேள்வி போட்டால் தெளிவான பதிலை அறிவிக்க வசதியாக இருக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இறால் குஞ்சுகளை வளர்க்க, கிள்ளையில் அந்தக் கழிமுக நீர்ப்பகுதியில் ஏற்பாடு செய்திருந்தார்கள். அது எந்த அளவிற்கு வெற்றியுடன்நடைபெறுகிறது என்பதைத் தெரிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மேலும், தனியார்கள் நிதி உதவி செய்து, அவர்களே, உப்பு தண்ணீரில் இறால் வளர்ப்புப் பண்ணைகளை ஏற்படுத்தி இருகிறார்கள். அந்த இடங்களுக்குக் கடல் நீரை ஏற்றுவதற்குத் தடை விதித்து, பொதுப் பணித் துறையினர் தகராறு செய்து அவர்களுக்கு அபராதம் எல்லாம் விதித்திருக்கிறார்கள். அந்தத் தடை நீக்கப்பட்டு விட்டதா? அவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை அப்படி தடை விதித்திருப்பதாக அரசுக்கு ஒன்றும் தகவல் வரவில்லை. இறால் வளர்ப்பு நல்ல இலாபம் தரக்கூடியதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இன்னும் தீவிரமாக வளர்ப்பதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.



திரு. செ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் வசதியான இடம் இல்லையென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பழவேற்காட்டிலிருந்து மரக்காணம் வரையில், செங்கல்பட்டு பகுதியில் நீண்ட கடலோரப் பகுதி இருக்கிறது. அதிலே முட்டுக்காடு என்ற ஒரு பகுதி இருக்கிறது. கடல் அரிப்பு இல்லாமல், அலை இல்லாமல் இருக்கிற பகுதி அது. அங்கே இறால் மீன் வளர்க்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இறால் வளர்ப்பதற்கு வசதியாக இருந்தால், அங்கே இறாலை வளர்ப்பதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் மீன் வளர்ப்பதில் நல்ல இலாபம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தமிழகத்தில் இறால் வளர்ப்பதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு என்ன வருவாய் வருகிறது என்ற தகவல் இருந்தால் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அதிக இலாபம் என்று சொல்கிறார்கள். அரசு ஏற்றுமதி செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விவரங்கள் என் கைவசம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் எல்லா விவரங்களையும் சேகரித்துத் தர முடியும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இறால் மீன் பண்ணையைப் பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது, கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்ரால் என்கிற ஒரு வகை மீன் கடற்கரைப் பகுதியில் அதிகமாகக் கிடைக்கிறது. இந்த இறால் மீனுக்கும் அதற்கும் வெகுவான மாறுபாடு இருக்கிறது. இது அளவிலும் பெரிதாக இருக்கிறது; கனத்திலும் மிக வித்தியாசமாக இருக்கிற காரணத்தாலே இந்த கல்ரால்களையும் அப்படிப்பட்ட பண்ணைகளில் வளர்க்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : அதைவேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

[1986 ஏப்ரல் 18

## மண்ணியாற்றை ஆழப்படுத்தல்

517—(*வினா எண். 4221)—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் தொகுதியில் பாசனத்திற்கு பயன்பட்டு வந்த மண்ணியாற்றை ஆழப்படுத்தி பாசனத்திற்குப் பயன்படுத்த அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபொழுது திட்டம் இல்லையென்று சொல்லி விட்டார்கள். நான் கேட்டுக்கொள்வ தெல்லாம், தஞ்சை மாவட்டத்தில் இருக்கக் கூடிய ஆறுகள், வாய்க்கால்களில், சமீப காலங்களில், சீமைக் காட்டாமணி செடி வளர்ந்து, பெருமபகுதி ஓடக் கூடிய தண்ணீரைத் தாக்கி உள்ளது. அதே போல, ஆற்றுப் படுகைகளில் செங்கல் கால்வாய்களைப் போட்டு, அதன் மூலமாக ஆறுகள் தூர்ந்து வருகின்றன. மூன்றா வது, ஆற்று உள் படுகைகளில் பெரும் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டு, பல்வேறு பயிர்களை உற்பத்தி செய்வதனால் இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தில் பெரும் மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, விவசாயத்தைப் பாதிக்கிறது. அதே போல, தண்ணீர் பாய்கிறபொழுது, வேகமாகப் போக முடியாத சூழ் நிலை ஏற்படுவதால், ஒட்டு மொத்தமாக, தஞ்சை மாவட்டத் தின் விவசாயம் பாதிக்கிறது. அதை மனதிலே கொண்டாவது, அந்தச் சீமை காட்டாமணியை அகற்றுவதற்கும், செங்கல் கால் வாய்களைப் போடாமல் தடுப்பதற்கும், ஆற்றுப் படுகையில் ஆக்கிரமிப்பை அகற்றி, வாய்க்கால்களைச் சீரமைக்க அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெய்வேலி காட்டாமணி செடியைப் பொறுத்த வரையில், அந்தச் செடியின் வளர்ச்சி எப்படித் தஞ்சை மாவட்ட விவசாயிகளைப் பாதிக்கிறது என்பதை இந்த அரசு தெளிவாக உணர்ந்து இருக்கிறது. அதனை அறவே ஒழிப்பதற்கு வேறு ஏதா வது ஆய்வுகள்தான் மேற்கொள்ள வேண்டுமே தவிர, தற்போது, நாம் ''புல்டோசர்'' போட்டு அழித்துக் கொண்டிருக்கிறோம் என்றாலும், அச்செடியின் ஒரு சிறிய வேர் அல்லது வேறு ஏதாவது பகுதி தேங்கி விட்டாலும் மறுபடியும் நெய்வேலி



1986 ஏப்ரல் 18]

காட்டாமணி செடி வளர்ந்து, மறுபடியும் விவசாயிகளுக்குத் தொல்லையைக் கொடுக்கிறது. ஆகவே, அதை ஒருமாநில அளவு பிரச்னையாக எடுத்துக் கொண்டு, யாராவது, ஆய்வு மேற் கொண்டு, அந்த ஆய்வின் முடிவிலே நெய்வேலி காட்டாமணிச் செடியை அறவே ஒழிக்கக் கூடிய விஷ மருந்து ஏதாவது கண்டு பிடித்தால்கூட, அந்த மருந்தை வைத்துக் கொண்டு, அந்த செடிகளை அழிப்பதற்கு அரசு தயராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லாவிட்டாலும் கூட அந்த மாவட்டத்திலுள்ள முக்கியமான பிரச்சனை என்ற முறையிலே இந்தப் பதிலைத் தந்தேன். மேலும் ஆக்கிரமிப்பு களைப் பொறுத்த வரையில் யாரும் அனுமதிப்பதில்லை. தமிழ் நாட்டில் பல்வேறு அரசுகள் இருந்திருக்கின்றன. இப்போது இருக்கிற அரசாக இருந்தாலும் சரி, இதற்கு முன்னால் இருந்த அரசுகளானாலும் சரி, எந்தக் காலத்திலும் நீர் நிலை பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்வதை அனுமதித்ததில்லை. ஆக்கிரமிப்பு கூடாது, ஆக்கிரமிப்பு இருந்தால் அப்புறப்படுத்துவதற்கு, கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு விதிகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் தஞ்சை மாவட்டத்தில் இருக்கக் கூடிய ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இருந்தாலும் ஆக்கிரமிப்பாளர்களை அகற்று வதில் பல்வேறு விதி முறைகள் இருப்பதை அனைவரும் அறி வார்கள். அரசியல் உணர்வு காரணமாகக் கூட, ஆளும் கட்சி யாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சிகளாக இருந்தாலும் சரி, ஆக்கிரமிப்பாளர்களை அகற்றும் போது, அவர்கள் பாதிக்கப் படுகின்ற போது அந்த அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர் களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறார்கள். அதன் காரணமாக நடவடிக்கைகள் மேற்கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது.

இந்த மண்ணியாற்றைப் பொறுத்த மட்டில், அது 36 மைல் தூரம் ஓடுகிறது. 38,022 ஏக்கர் பாசன வசதி அளிக்கிறது. இந்த ஆறு சில இடங்களில் பள்ளமாக இருக்கிறது. ஆகவே, நீரேற்றிகள் மூலமாக தண்ணீரை எடுத்துப் பயன்படுத்த வேண்டி இருக்கிறது. மேலும் ஆழப்படுத்தினால் இன்னும் பள்ளமாகி, தண்ணீர் ஓடும் தரை கீழே போய்விடும். ''கமாண்ட் லெவல்'' என்று சொல்வார்கள். அந்த கமாண்ட் லெவலுக்குக் கீழே நீர் மட்டம் போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காக ஒன்றும் செய்யாமல் அப்படியே விட்டு வைத்திருக்கிறோம்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள வாய்க்கால்கள் எல்லாம் அதிகமாக தூர்ந்து போய் இருப்பதால் நீர்ப்பாசனம் தடைபட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். சென்ற புயல்

[1986 ஏப்ரல் 18

வெள்ளம் அபாயம் ஏற்பட்ட பிறகு மத்தியிலிருந்து ஆய்வுக் குழு வந்தது. அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்று பார்வையிட்டார்கள். அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்களான நானும், திரு. விஜயபாலன், திரு. பாப்பா சுப்பிரமணியன், மற்றவர்களும் அந்தக் குழுவினரைச் சந்தித்து கருத்துக்களைக் கூறினோம். கால்வாய்கள் தூர்ந்து விடாமல் இருக்க என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்டார்கள். நெய்வேலி காட்டாமணிச் செடி பரவாமல் தடுக்கவும், வாய்க்கால்களை சீர் செய்யவும் மத்திய அரசு உதவ வேண்டும்; பொதுப்பணித் துறையில் மூலமாக ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தி, தூர்ந்து போன இடங்களை சீர் செய்து செப்பனிட வேண்டுமென்று சொன்னோம். அவர்கள் அதற்கு சரி என்று சொன்னார்கள். அவர்கள் தெரிவித்தபடி ஏதாவது நிவாரணத்திற்கு வகை செய்யப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் அந்தக் குழு ஒப்புக்கொண்டபடி செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் வற்புறுத்தி உதவி பெறுவதற்கு முயற்சி எடுப்பார்களா? அந்தப் பகுதி மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. யா. கை. மு. யூசுப்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி நெய்வேலி காட்டாமணிச் செடியை அகற்றுவதற்கோ, வாய்க்கால்களை சீர் செய்வதற்கோ மத்திய அரசு எந்தவிதமான மானியமும், நிதி உதவியும் செய்யவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இருந்த போதிலும் இத்தகைய கோரிக்கையை வலியுறுத்த வேண்டுமென்ற ஒரு யோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்திருக்கிறார்கள். நல்ல யோசனை. அதை ஏற்று இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவேரியை ஆழப்படுத்துகிறோம், தூர் வாருகிறோம் என்ற பெயரால் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற கண்காணிப்புப் பொறியாளர் காவேரியில் இருக்கிற நடுத்திட்டுகளை புல்டோசர் வைத்து ஆற்றிலே நிரவி விடுகிறார். ஆழப்படுத்துகிறோம் என்ற பெயரால் இப்படிச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால் ஆறு மேடாகிறது. ஆற்றிலே இருக்கிற நடுத்திட்டுகள் அப்புறப்படுத்தப்படாமல், ஆற்றிலேயே நிரவப்படுவதால் ஆறு மேடிட்டு, வெள்ள அபாயம் ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் புல்டோசர் வைத்து நடுத்திட்டுகளை ஆற்றிலே நிரவுவதை நிறுத்தி, மனித சக்தியைப் பயன்படுத்தி ஆற்றிலிருந்து அப்புறப்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. யா. கை. மு. யூசுப்: தலைவரவர்களே, மண் திட்டுகளை அகற்றும் போது, அந்த மண் திட்டுகளை கால்வாயில் போடக் கூடாது என்பது விதியாகும். அந்த விதியை கடைப்பிடிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டுவது கண்காணிப்புப் பொறியாளர் கடமை என்பதை அவர் நன்றாகத் தெரிந்தவர்.

(முற்பகல் 10—20)

அண்மையில் திருச்சி மாவட்டத்திலுள்ள பகுதிகளிலும் அப்படி தோண்டப்பட்ட மண்ணைக் கால்வாயிலேயே விட்டுவிட்டார்கள் என்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறார். அதே தவறை அந்தக் கண்காணிப்புப் பொறியாளர் செய்திருக்கிறார் என்று சொன்னால் நிச்சயமாக அந்தக் கண்காணிப்புப் பொறியாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றங்கரை ஓரங்களில் காளவாய் போடுகின்ற பெயரால் மண்ணை எடுப்பதன் மூலம் அந்த ஆற்றங்கரை ஓரங்கள் மேலும் சேதம் ஆகின்றன. எனவே அதுபோல் காளவாய்க்கு மண் எடுப்பவர்களை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு ஏரிகளில் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. கை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளில் ஆக்கிரமிப்பு செய்வதைப் பொறுத்த வரையில் நான் முன்பே சொன்னது போல் அது ஒரு பொதுப் பிரச்சினையாக இருக்கிறது. எனவே அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட வருவாய்த்துறை அதிகாரிகள் எல்லாம் தலையிட்டுத்தான் அவற்றை அகற்ற முடியும். அந்த முறையில் பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை அதிகாரிகளோடு சேர்ந்து அவ்வப்போது முடிந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொண்டு வருகிறது. இருந்த போதிலும் நீர்நிலைகள் எல்லாம் நகரத்திற்கும், ஊருக்கும் அப்பாற்பட்ட தூரத்தில் இருப்பதால் எந்தெந்த இடத்தில் ஆக்கிரமிப்புக்கள் இருக்கின்றன என்ற உண்மையை நேரடியாகத் தெரிந்துகொள்ள முடியாத அளவுக்குத் துறை இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புக்களை முழுக்க, முழுக்க அகற்றமுடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறது. எனவே, அந்தக் கால்வாய்களில், ஏரிகளில் அல்லது வேறு நீர்நிலைகளில் இருக்கின்ற நிலைமைகளைப் பொறுத்த வரையில் அதன்மூலம்

பயன்பெறுகின்ற விவசாயப் பெருமக்கள்தான் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு இந்தத் துறையோடு ஒத்துழைப்பு தரவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

### நீலகிரி மாவட்டத்தில் தடுப்பு அணைகள்

518—(*வினா எண். 5725)—திரு. கே. உச்சி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் மழை நீரை தேங்க வைக்கும் வகையில் சிறு சிறு (check dams) கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : ஆம்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மலைப் பகுதியில் எவ்வளவு அதிகமான மழை பெய்தாலும் தேங்கி நிற்க வழியின்றி வழிந்து விடுவதால் அந்த மலைவளம் சேதப்படுகிறது. மண்வளம் சேதப்படுகிறது. எனவே, இதை எல்லாம் கருத்தில் கொண்டு அங்கே கட்டப்பட இருக்கின்ற செக் டாம் எத்தனை என்பதையும் அவை எந்தெந்தப் பகுதிகளில் கட்டப்படுகின்றன என்பதையும் அதற்கான திட்ட மதிப்பீடு என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இந்த 6-வது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் நிலையில் அதிகப்படியாக 544 ஹெக்டேர் நிலப்பரப்பைப் பயன்படுத்தவேண்டுமென்று கருதி இந்தத் துறை செயல்பட்டுக் கொண்டு வருகிறது. 1985-86-ஆம் ஆண்டிலேயும் அந்த வகையில் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் மழை நீரைத்தேக்கி வைக்கும் வகையில் செக் டாம்களைக் கட்ட இந்த அரசு தீர்மானித்து 11 இடங்களில் கட்ட முடிவு செய்திருக்கிறது. உதகை மாவட்டத்தில் உதகை வட்டத்தைப் பொறுத்த வரையில் குக்கல் கிராமத்தில் நில அளவை எண். 17-ல் 1,50,000 ரூபாய் செலவிலும், அதே கிராமத்தில் நில அளவை எண். 18-ல் 1,55,000 ரூபாய் செலவிலும், தும்மநாட்டு கிராமத்தில் 318, 326 ஆகிய நில அளவை எண்களில் 88,000 ரூபாய் செலவிலும் இதன் மூலம் 29 ஏக்கர் பயனடையும்—அதே கிராமத்தில் நில அளவை எண். 464-ல் 1,17,000 ரூபாய் செலவிலும், தும்மநாட்டு கிராமத்தில் ரங்கநாதபுரம் அருகே 93,000 ரூபாய் செலவிலும், கடனாடு கிராமத்தில் நில அளவை எண். 61-ல் 1,08,000





ரூபாய் செலவிலும், அதே பகுதியில் மல்லிக்கறை ராமத்தில் 98,000 ரூபாய் செலவிலும், கடனாடு அருகே சிறுகனூரில் 1,10,000 ரூபாய் செலவிலும், இத்தலா கிராமத்தில் நுந்தலாவிலும், தூனேரியிலும் நிலஅளவை எண்கள் 296, 297-ல் முறையே 85,000 ரூபாய் மற்றும் 1,10,000 ரூபாய் செலவிலும், கூடலூர் வட்டத்தைப் பொறுத்தவரையில் ஜெகத்தலா கிராமத்தில் நில அளவை எண். 320-ல் 1,78,000 ரூபாய் செலவில் 26 ஏக்கர் பயனடையும் வகையிலும் இப்படி 11 செக் டாம்கள் 12,78,000 ரூபாய் செலவில் 276 ஏக்கர், 33 சென்ட் பயனடையும் வகையில் கட்ட தீர்மானித்து இருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் மழை நீரை தேக்கி வைத்து செக் டாம்கள் கட்டுவதைப் போல, தமிழகத்தின் சில இடங்களில் ஆண்டுதோறும் பெரும் மழையின் காரணமாக வெள்ளம் வந்து அந்த தண்ணீர் கடலிலே வீணாக கலப்பதைத் தடுக்க, ஒரு தொலை தூர நோக்கோடு அந்த நீரை தேக்கி வைத்து பின்னால் பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா? ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நீலகிரி மாவட்டம் மேற்குமலை தொடர்ச்சியிலே இருக்கிற ஒரு பகுதி என்பதை அறிவார்கள். அந்த மேற்கு மலைத் தொடர்சிப் பகுதியின் வளர்ச்சிக்காக, மத்திய அரசு உள்ளிட்டு மாநில அரசு திட்டங்களைத் தீட்டி, மேற்கு மலைப்பகுதி வளர்ச்சிப் பணித் திட்டம் என்று செயல்படுத்திக் கொண்டு வருகிறது. அந்த திட்டத்திலே பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அதில் ஒரு பகுதிதான் தடுப்பு அணை கட்டுவதும் மற்ற கால்வாய்கள் வெட்டுவதும் போன்ற பணிகள் ஆகும். அந்தப் பணிகளை பொதுப் பணித்துறையின் சிறுபாசனப் பிரிவு மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது. அந்த முறையில் தான் நீலகிரி மாவட்டத்தில் நான் சொன்ன பகுதிகளில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட நிலைமை அதேபோன்று, மேற்கு மலைத் தொடர்ச்சி பகுதியிலேயே வேறு பகுதிகளில் இருக்குமானால் அதை அரசினுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்தால் நடவடிக்கை உரிய முறையில் எடுக்கப்படும்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதே மேற்கு மலைத் தொடரை ஒட்டித்தான் கூடலூரும் கோத்தகிரியும் இருக்கிறது. ஆனால் ஏதோ காரணமாக அந்த இரண்டு இடங்களும் விலக்கப்பட்டுள்ளன. அவைகளையும் சேர்த்து இந்த செக் டேம்களை கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தின் கீழ் 11 பணிகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. கூடுதலாக ஏதாவது பணிகள் எடுக்க வேண்டுமென்றால், அது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால்—இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள்—இனிமேல்தான் அதற்கு வாய்ப்புகள் இருக்கின்றதா என்பதை ஆணையிட்டு, அது எத்தகைய நிலையில் இருக்கிறது என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

**சேங்காளிபுரம் வாய்க்கால் தூர் எடுப்பு**

519—(*வினா எண். 7554)—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியத்தில் உள்ள சேங்காளீபுரம் வாய்க்காலை தூர் எடுத்து அங்குள்ள ஆக்ரமிப்பை அகற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகான் அனந்தராம தீட்சதர் பிறந்த அந்த மண்ணான சேங்காலிபுரம் கிராமத்தில், அந்த சேங்காலிபுரம் வாய்க்காலை கட்டு, முடிக்காததன காரணமாக சென்ற ஆண்டு சுமார் 1,500 ஏக்கர் நிலம் பாலைவனம் ஆக்கப்பட்டு, அதன் காரணத்தாலே சென்ற ஆண்டு அரசாங்கமே வரி வஜா செய்திருக்கிறது. ஆனால் குடவாசல் செக்ஷன் அதிகாரி அவர்களும், நன்னிலம் எஸ்.டி.ஒ. அவர்களும், கண்காணிப்பு பொறியாளர் அவர்களும் அந்தப் பகுதிகளைச் சென்று பாராமலேயே அரசுக்கு ஒரு தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். இப்படி தவறான தகவல்களைத் தந்த அதிகாரிகள் மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதை மனதில் வைத்துக்கொண்டு அதிகாரிகள் தவறாவ தகவல்களை தந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள் எனத் தெரியவில்லை. இருந்தபோதிலும் எனக்குத் தரப்பட்டிருக்கிற விவரத்தின் அடிப்படையில் கடந்த ஆண்டு 1,495 ஏக்கர்களுக்கு இந்த சேங்காலி புரம் வாய்க்கால் வழியாக பாசன வசதி தரப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

அந்த முறையில் தரப்பட்டிருக்கிற தகவல்கள் தவறாக இருக்குமேயானால் அது மிகப் பெரிய தவறு. இந்த அவை, இந்த மாமன்றம் என்பது நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம் இந்தமாமன்றம் உறுப்பினர்கள்கேள்வியைக்கேட்கிற



நேரத்திலே அவர்களுடைய வினாவிற்கு உரியவிடையினை அளிக்கின்றது அரசு. அரசுக்கு அந்த விவரங்களை சேகரித்துத் தரக்கூடிய அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்று சொன்னால், அதன் விளைவு, இந்த மாமன்றத்தில் தவறான தகவல்களை தர அரசை செயல்படுத்துவது என்பதுதான் ஆகும். அது மிகக் கடுமையான குற்றம் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அந்த முறையில் இப்படிப்பட்ட தவறான தகவல்களை யாராவது தந்திருப்பார்களேயானால், அத்தகவல்கள் தவறான தகவல்கள் என்பது உண்மையாக இருக்குமேயானால் அதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன.

(முற்பகல் 10-30)

திரு. பாப்பா சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நல்லதையே மனதில் வைத்துக் கொண்டு தான் இந்த நியாயமான கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தேன். உண்மையில் அந்த வாய்க்கால் மேடிட்டு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த உண்மை நிலையை அரசு ஆராய்ந்தறிந்து அந்த வாய்க்காலில் தூர் எடுக்கவும், இரண்டு கரைகளிலும் ரிவட்மெண்ட் கட்டிக் கொடுக்கவும் இந்த ஆண்டே அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இதற்குரிய விடையை இங்கே சொல்ல முடியாத அளவிற்கு எனக்கு தரப்பட்டிருக்கிற விவரங்கள் இருக்கின்றன. ஆகவே தனியாக உறுப்பினர் அவர்கள் கேள்வியை கேட்க வேண்டுமென்று கூடச் சொல்லவில்லை. தனியாக அவர்கள் ஒரு விண்ணப்பத்தைத் தருவார்களானால் கூட அதன்மீது விவரம் சேகரித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நீர்ப்பாசனத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதற்காக இங்கே நிறைய கேள்விகளை கேட்டிருக்கிறோம், கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறோம், மானியக் கோரிக்கைகளிலும் இதுபற்றி வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் தஞ்சை மாவட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் இதுபற்றி கேட்போமானால் அரசு பணமே ஒதுக்கவில்லையென்று சொல்லிவிடுகிறார்கள். வாய்க்கால்களை சீர்செய்ய ஆண்டுக்கு அரசு எவ்வளவு தொகை ஒதுக்குகிறது ? அந்தப் பணம் போதவில்லையென்றால் ஏதாவது நிதி நிறுவனங்களிலிருந்து 100 கோடி, 200 கோடி பெற்று அந்த வாய்க்கால்களை சீர்செய்ய அரசு முன்வருமா ? அந்தத் தொகையை கூட அரசு எங்களிடமே தண்ணீர் தீர்வை, கிஸ்தி போன்றவைகள் மூலம் வசூலித்து விடலாம். அங்கே இருக்கிற வாய்க்கால்களில்

பி. டபிள்யூ.டி.யைச் சார்ந்தவர்கள் மூங்கில் புதரை வளர்ப்பதாகச் சொல்லி போடுகிறார்கள். அவைகள் நடுவாய்க்கால் வரையில் பரவி விடுகின்றன. ஆகவே மூங்கில் புதர் போடும் அந்தத் திட்டத்தை அரசு ரத்து செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, மூங்கில் வளர்ப்பதைப் பொறுத்தவரையில் என்னிடத்தில் அதற்கான விவரங்கள் இல்லை. அதேபோல் வாய்க்கால்களை சீர்படுத்துவதற்கும், மண்மேடுகளை அகற்றுவதற்கும் பொதுப்பணித் துறையில் ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகிறது என்ற விவரமும் தற்போது என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் அதற்கு தேவையான பணம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பதை கடந்த மூன்று ஆண்டுகளாக நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருப்பதால் அந்த அனுபவத்தின் வாயிலாக அறிந்துள்ளேன். இருந்தபோதிலும் ஒருசில இடங்களில் பணிகள் மேற்கொள்ளப்படவில்லையென்று குற்றச்சாட்டு எனக்கு வந்திருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டு உண்மையா என்பதை ஆராய்ந்து, தேவையானால் தவறு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கையெடுக்க அரசு முன் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிய கேள்வியில் தூர் எடுக்கவும், ஆக்கிரமிப்பை அகற்றவும் என்று இருக்கிறது. தூர் எடுக்கவில்லையென்றாலும் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். வாய்க்கால்கள், கால்வாய்களில் நெய்வேலி காட்டாமணக்குச் செடி வளர்கிற போது இந்த கோடைகாலத்தில் பொதுப்பணித்துறையில் இருக்கிற லஸ்கர் போன்ற யாராவது ஒருவர் அந்த ஒரு செடியை சிறியதாக இருக்கும்போதே அகற்றி விட்டால் அது மேலும் வளராமல் இருக்கும். ஆகவே அதை லஸ்கர் போன்றவர்களை வைத்து அகற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ? எப்படி சந்தன மரத்தை தனியார் வளர்க்கக் கூடாது என்று ஒரு தடையிருக்கிறதோ அதேபோல இந்தச் செடியையும் யாரும் வளர்க்கக் கூடாது என்ற முறையில் தடையை விதிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதைப் பொறுத்தவரையிலும் இன்றைய கேள்வியில் நான் ஏற்கனவே இந்த அரசினுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் ஒத்துழைப்புத் தந்தால்



விரைவாக இவற்றை அகற்ற முடியும். நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல லஸ்கர் போன்றவர்களை வைத்து எடுத்து விட முடியாது. அவை வேகமாக வளரக்கூடிய வகையைச் சேர்ந்த செடிகளாகும். அதற்காகத்தான் நான் முன்பே கூறினேன், அந்தச் செடிகளை அகற்றுவதற்காக யாராவது ஆய்வுகளை மேற்கொண்டு, அந்தச் செடிகளை அகற்றுவதற்கு உரிய மருந்துகளைக் கண்டுபிடித்தால், அந்த மருந்துகளைப் பயன்படுத்தக் கூட இந்தத் துறை தயாராக இருக்கிறது என்று நான் முன்பே சொன்னேன். அது நீங்கலாக நெய்வேலி காட்டாமணி செடியை வளர்ப்பதற்காக எப்படி சந்தன மரங்களுக்கு தடை விதித்து இருக்கிறார்களோ, அப்படி தடை விதிக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். எந்தச் செடிகளை வளர்ப்பது, எவற்றுக்குத் தடை விதிப்பது போன்ற உத்தரவு இடக்கூடிய துறை வனத்துறையாகும். இந்தக் கேள்வியை வனத்துறைக்கு அனுப்பினால் பயன உள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால்; அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கண்டனத் தீர்மானம்

### அமெரிக்க வல்லரசு லிபியா நாட்டை தாக்கியதற்கு கண்டனம் தெரிவித்தல்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பாரதம் தலைமையேற்றுள்ள அணி சேரா நாடுகளின் அங்கமாக விளங்குகின்ற லிபியா நாட்டின் மீது ஐக்கிய அமெரிக்க நாடு போர்த் தொடுத்து இருப்பதன் காரணமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றி காலையிலே நான் சொன்னேன். நம்முடைய அவையிலே இதைப்பற்றி பேச வேண்டாம் என்று சொன்னேன். பார்லிமெண்டிலே ரெசல்யூசன் பாஸ் பண்ணினால் நாம் பண்ணியதாகத்தான் அர்த்தம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இதன் விளைவாக உலக நாடுகளிடையில் ஒரு பதட்ட நிலை உருவாகி, இந்த லிபியா நாட்டின் மீது போர் தொடுத்ததன் காரணமாக உலக மகாயுத்தம் வரக்கூடிய அபாயம் இருக்கிற இந்தத் தருணத்திலே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்த போர்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 ஏப்ரல் 18

வெறித் தனத்தைக் கண்டித்து, அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தவிர, உலகத்திலே இருக்கின்ற நாடுகள் அனைத்தும் அதிலும் குறிப்பாக அணி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எந்த உணர்வை வைத்து சொல்கிறீர்களோ, அதையேதான், நான் வைத்துக் கொண்டு இருக்கிறேன். கண்டிக்க வேண்டும் என்று சொன்னால், செய்வோம், இது ஃபோரம் அல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, அணி சேரா நாடுகள் கண்டித்து இருப்பதைப் போல, நம்முடைய பாராளுமன்றமும் ஏன் மேற்கு வங்க அரசும் கண்டித்து இருப்பதைப் போல, உலக சமாதான சக வாழ்விலே அக்கறை கொண்டு இருக்கிற தமிழக மக்களின் சார்பாக நாமும் இதைத் கண்டிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, டெல்லியில் அனைத்து அணி சேராத நாடுகளும், கூடி, அந்த மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்கள் தலைமை வகித்து, அவைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து கண்டனம் தெரிவிக்கும்படியான நிலலயில், நமது சட்ட மன்றமும் இந்தியாவில் உள்ள சட்மன்றங்களைப் போல, இந்த ஆக்கிரமிப்பைக் கண்டிக்க வேண்டும். ஆக்கிரமிப்பு என்ற ஒரு சிறு பொறி ஏற்பட்டால் போதும். உலகம் முழுவதும் அணுயுத்தமாக மாறக்கூடிய அபாயம் இருக்கிறது. எனவே இதைத் தடுக்க இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு விஷயம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு விஷயம் தற்போது வேண்டாம். முதலிலே இதைப்பற்றி பேசுவோம்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் மிகக் கடுமையான ஒரு சோதனைக்கு ஆளாகக் கூடிய அளவிற்கு உரிமை வேட்கையில் உலத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கக் கூடிய லிபியா நாட்டின் மீது, ஏகாதிபத்திய சர்வாதிகார மனப்பான்மை படைத்த அமெரிக்க நாடு இப்படிப்பட்ட தாக்குதலை நடத்தி இருப்பது இந்தியாவிலே உள்ள மக்கள் அனைவரையும் வேதனை படுத்துவது மட்டுமல்ல. குறிப்பாகத், தமிழர்களை, இலங்கையிலே அமெரிக்கா தொடர்பு வைத்து இலங்கையின் மூலமாகத் தன்னுடைய வல்லாண்மையை வளர்த்துக் கொள்ள முயற்சிக்கிற இந்தக் கால கட்டத்தில்,



1986 ஏப்ரல் 18] [திரு. க. அன்பழகன்]

தமிழர்கள் மிகப் பெரிய அளவிலே இலங்கையிலே பாதிக்கப்படுகிற போது, அமெரிக்காவின் போக்கு, உலகத்தினுடைய கண்டனத்திற்குரியது. அந்தக் கண்டனத்தை தமிழக சட்டமன்றம் எதிரொலிக்கவேண்டும் என்று நான் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக மனிதகுலம் வாழ்வதற்காக இன்றைக்கு சமாதான சக்திகளின் கை ஓங்கி வருகிற நேரத்தில் அதிலும் குறிப்பாக நமது இந்திய அரசு சமாதானச் சக்திக்காக கைகோர்த்துக் கொண்டு நிற்கக் கூடிய இந்த நேரத்தில் அருகாமையிலே இலங்கை மூலமாக அச்சுறுத்தல். அருகாமையில் பாகிஸ்தான் மூலமாக இந்தியாவுக்கு அச்சுறுத்தல். இந்த நேரத்திலே இன்றைக்கு அமேரிக்கா ஒரு சிறிய நாடான லிபியா மீது படையெடுத்து இருப்பது உலகத்தில் ஒரு மூன்றாவது உலக யுத்தத்தை துவக்கி—மனித குலத்தை அழிக்கக் கூடிய, ஒரு பாதையில் செல்லக் கூடிய அமெரிக்காவை கண்டிக்கக் கூடிய அளவுக்கும் மீண்டும் லிபியா மக்களுக்கு ஒரு ஆதரவு அளிக்கக் கூடிய அளவுக்கும் நமது அரசு ஒரு தீர்மானமாக ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் அமர்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக சமாதானத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே அமெரிக்க வல்லரசு லிபியா மீது தாக்குதல் நடத்தி ஒரு பெரிய உலகப் பிரசினையை இப்போது ஏற்படுத்தி இருக்கிறது. இந்தப் பிரச்சினையானது உலக யுத்தமாக மாறி விடுமோ என்ற அச்சம் கூட ஏற்படுகின்ற நிலை இன்றைக்கு இருப்பதால் இந்தச் சட்டமன்றம் அதைக் கண்டித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவேண்டுமென்று எங்களது ஜனதா கட்சியின் சார்பாக நான் இங்கே இந்தக் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்க நாடு அண்மையில் லிபியா மீதுநடத்திய தாக்குதல் உலக சாமாதானத்துக்கே உலை வைக்கக் கூடியதாக இருக்கிறதென்பதை இந்த உலகம் உணர்ந்து இருக்கிறது. இந்த பேராபத்தைக் கண்டிக்கக் கூடிய முறையில் பாரத பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றி இருப்பது இந்த நாட்டு மக்களுடைய ஒருமித்த எண்ணத்தை எதிரொலிப்பதாக இருந்தாலும், தமிழக மக்களும் அதிலே எவ்வளவு உணர்வு பூர்வமாக கண்டித்து உணர்த்தியிருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக இந்த அவையிலும் இந்தத் தீர்மானம் முன் மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்படவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே! தனி மனித பயங்கரவாதத்தையே உலகம் எதிர்த்துக் கொண்டிருக்கின்ற போது ஒரு வல்லரசு, ஒரு பயங்கரவாதத்தை பின்பற்றுவது போல அமெரிக்க ஏகாதிபத்தியம் நடந்து கொள்கிறது. உரிமை வேட்கை உள்ள எந்த மனித இனமும் சுதந்தரத்தோடு வாழுகின்ற ஒரு நிலை இல்லாமல் அச்சுறுத்தப்படுவதை நாம் பார்க்கின்றோம். சொல்லாலும், செயலாலும் கூட, ஒரு வெறிபிடித்த நிலையிலே அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது கொடுங்கரங்களை நீட்டி கொண்டிருக்கிறது. சொல்லாலே சொல்கிறபோது கூட லிபியாவினுடைய தலைவரை (Mad dog of the Middle East Countries) என்று சொல்கிற அளவிற்கு ஒரு பெரிய பதவியிலே இருக்கின்றவர், இப்படிப்பட்ட தேவையில்லாத நாகரீகமற்ற சொற்களையெல்லாம் சொல்லி அதன் அடிப்படையிலே இன்று குண்டு வீசித்தாக்குகின்ற அளவிற்கு முனைந்து இருக்கிறார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு நாம் இப்போது கொடுக்கின்ற இந்த அடி, தீர்மானத்தின் மூலம் நம்முடைய எண்ணத்தின் மூலம் அவர்கள்வேறு எங்கும்கூட இனிமேல் வாலாட்டாமல் இருக்க வேண்டும் என்கின்ற உணர்வை ஏற்படுத்துகின்ற வகையில் அந்தத் தீர்மான வாசகங்களும் அமைய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக சமாதானத்தை விரும்பிக் கொண்டிருக்கின்ற இந்தியாவும், இந்தியாவில் இருக்கின்ற மக்களெல்லாமும் நினைக்கின்ற நேரத்தில் இப்போது சிறிய நாடாகிய லிபியா நாட்டின் மீது அமெரிக்க போர் தொடுத்திருக்கிறது. ஒரு சிறிய நாட்டின் மீது போர்தொடுத்திருக்கின்ற அமெரிக்காவை கண்டித்து இந்த அவையிலே நாம் எல்லோரும் ஏகோபித்த கருத்தோடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமாய் அகில இந்திய பார்வேட் பிளாக்கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லிபியா நாட்டின் மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னுடைய ஆதிக்க உணர்வினுடைய அடிப்படையிலே தாக்குதல் நடத்தியிருப்பது அகில உலகத்தில் இருக்கின்ற, சாமாதானத்தை விரும்புகின்ற, நியாயத்தை நிலை நாட்ட வேண்டுமென்று எண்ணுகின்ற நாடுகள் அத்தனைக்கும் அதிர்ச்சியாக இருக்கிறதென்பதையும் நாம் இரண்டு மூன்று நாட்களாக கண்டு கொண்டு வருகிறோம். இந்திய மக்களுடைய ஒருமித்த





உணர்வை வெளிப்படுத்துகின்ற வகையில் இந்தியாவினுடைய பிரதமர் மாண்புமிகு இராஜீவ் காந்தி அவர்களும், இந்தியாவினுடைய பாராளுமன்றமும் மிகக் கடுமையாகக் கண்டித்து நம்முடைய உணர்வினை வெளிப்படுத்தி இருக்கிறது. பாராளுமன்றமே தீர்மானத்தை நிறைவேற்றிவிட்ட நிலையில், இந்தியாவில் இருக்கும் அத்தனை மக்களும் அதற்கு ஒத்துழைக்கிறோம் என்கின்ற ஒரு உணர்வு இருந்தாலும் மாநில மக்களும் தங்களுடைய உணர்வை வெளிப்படுத்துகிறோம் என்ற நிலையை ஏற்படுத்தி, இங்கேயும் ஒரு கண்டனக் குரலை எழுப்ப வேண்டுமென்றும், மாண்புமிகு எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் அத்தனை பேரும் இங்கே ஒருமித்த குரலையும் எழுப்பியிருக்கின்றார்கள். ஆகவே நாட்டுக்கு நாடு இருக்கின்ற பிரச்சனைகளை பேசித்தான் தீர்க்கவேண்டுமென்பது மட்டுமல்லாமல், நியாயத்தினுடைய அடிப்படையிலே உலகமே ஐக்கிய நாடுகளின் மூலமாக கட்டுப்பாட்டுக்கு உள்ளாகியிருக்கின்ற சட்டத் திட்டங்களின் வழியிலே தீர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர, ஒரு நாடு சரியாக நடக்கிறதா இல்லையா என்பதற்கு தன்னுடைய ஆதிக்கத்தை வைத்துக் கொண்டு படை எடுத்து அதன் மூலம்இன்றைக்கு முயல்வது என்பது இன்னொரு போருக்குதான் கொண்டு போய் விடும் என்பதை எல்லோரும் நன்கு அறிவோம்.

ஆகவே, 3-வது உலக பெரும் போரை தாங்குவது முடியாது என்பதும், 3-வது பெரும் போர் வரக்கூடாது என்ற வகையிலும் ஒரு அமைதி மாநாட்டை உலகம் எங்கும் இருக்கிற பலநாடுகள் நடத்திக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் லிபியா தாக்கப்படுவது உள்ளபடியே பெரும் அதிர்ச்சிக்கு உரிய ஒன்றாகும். மறுபடியும் அமெரிக்கா லிபியாவை தாக்குமானால் தாங்கள் தலையிட்டு அமெரிக்காவை தாக்க வேண்டி வரும் என்று இன்றைக்கு ரஷியா எச்சரிக்கை விடுத்திருக்கிறது. அப்படி அமெரிக்காவும் இறங்கி, ரஷியாவும் எதிர் நடவடிக்கையாக இறங்குகிற சூழ்நிலை ஏற்படுமானால் அது கட்டாயம் 3-வது உலகப்போராக திருப்பி கொண்டு போய்விடும். அந்த நிலை ஏற்படக் கூடாது என்ற உணர்வில் தான் உலகத்தில் இருக்கின்ற எல்லா நாடுகளும் இருக்கின்றன. இந்தியா முழுக்க முழுக்க அந்த உணர்வை கொண்டிருக்கிறது. அதை அணி சேரா நாடுகள் அத்தனையும் கொண்டிருக்கின்றன. அணி சேரா நாடுகளுடைய தலைமை வகிக்கின்ற இந்தியாவும் கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிற முறையில் கருத்துக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. அந்த முறையில் இந்த அவையும் வெளிப்படுத்துகிறது. ஆக லிபியாவை அமெரிக்கா தாக்கியதை இந்தப் பேரவை கண்டிக்கிறது என்பதையும் ஆக இந்த தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதையும் அமைதி நிலைநாட்டப் படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்பதையும் தீர்மான வடிவிலே நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உலக சமாதானத்திற்காகவும் லிபியா நாட்டை அமெரிக்கா நாடு தாக்கியதை கண்டித்து பேசிய மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் கருத்துக்களோடும் மாண்புமிகு சர்வ கட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களோடும் இந்த அவையின் கருத்தாக என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக்கொள்கிறேன். இந்திய நாட்டிலேயே தமிழ்நாடு சட்டமன்றம் தான் இரண்டாவதாக அமெரிக்காவின் செயலுக்கு கண்டனம் தெரிவித்துக்கொள்கிறது. இந்தத் தாக்குதலை தமிழக சட்டமன்றம் வன்மையாக கண்டிக்கிறது, இது இப்பேரவையின் ஏகோபித்த கருத்து என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஏற்கனவே....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் காலையில் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி என்று நினைக்கிறேன். இப்போது அது வேண்டாம். நேற்று ஒன்றை கொடுத்து இருந்தார்கள். அதை நான் ரிஜெக்ட் செய்து விட்டேன். இன்று ஒன்று கொடுத்து இருக்கிறார்கள். நேற்று '' ஆண்டிசிபேட் '' செய்து கொடுத்தார்கள், இன்று இரண்டாவது ஒன்றை கொடுத்து இருக்கிறார்கள். அது சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை வரும்போது அதை வைத்துக்கொள்ளலாம்.

திரு. கு. சுப்பராயன் : விவாதம் முடிந்த பிறகு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர முடியாது. வாய்ப்பு இல்லாமல் போய் விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லாம் அன்றாடப் பிரச்சினை. இதை ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுக்க வேண்டியது இல்லை. இது ஒத்திவைப்புத் தீர்மானத்தில் வராது. நான் நேற்று ரிஜெக்ட் செய்து விட்டேன். இதை ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் இதை எப்படி விவாதிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு ஊழியர்கள் சம்பந்தமாக மாவட்ட நிர்வாகம் என்ற மானியக் கோரிக்கை வரும் போது. இது பற்றி பேசிக்கொள்ளலாம்.



(முற்பகல் 10–50)

திரு. அ. ரகுமான்கான் : இன்று சொல்லுவது ஆண்டிசிபேட் பண்ணி இல்லை. இது அரசு ஊழியர்கள் பிரச்சினை பல பேர் சஸ்பெண்டு செய்யப்பட்டு இருக்கிறார்கள்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒத்திவைப்புத் தீர்மானத்தில் வராது. என்னுடைய அறைக்கு வாருங்கள் பேசலாம். (குறுக்கீடு) இது ஒத்திவைப்பில் வராது. ஏற்கனவே இந்த மாமன்றத்தில் பல்வேறு நிலைமைகளில் இதைப்பற்றி பேசியிருக்கிறோம். ஆக இந்தப் பிரச்சினை ஏற்கனவே பேசப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பேரவை முன்னவர் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இது ஒத்திவைப்புத் தீர்மானத்தில் வராது. தயவுசெய்து ஒத்துழையுங்கள். மாவட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை வருகிறது. அப்போது விரிவாகப் பேசலாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே திடீரென்று ஒரு நிகழ்ச்சி நடைபெற்று, வேறு எந்தவகையிலும் எடுத்துச்சொல்லாத நிலையில் இருக்கும்போது, அது அரசுக்கும் சம்பந்தப்பட்டிருக்கிறது, அதற்கு அரசு பதில் தெரிவிக்கவேண்டிய அவசியம் ஏற்படும்போது, அது ஒத்திவைப்புத் தீர்மானத்தில்வரும். அவையின் அனுமதியுடன் உறுப்பினர்கள் அதை விவாதிக்க வேண்டிய நிலை வரும். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பிரச்சினை. பலமுறை எழுப்பப்பட்டு ஏற்கனவே இதுபற்றி விவாதித்து, நானும் பதில் சொல்லி, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதையும் சொல்லியிருக்கிறேன். இது தலைமைச் செயலகத்தில் இருக்கின்ற நிர்வாகத்தைப் பற்றியது. சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என்று தீர்மானிப்பதற்கு வெளியிலே ஏற்படுகின்ற உண்ணாவிரதம் ஒவ்வொன்றுக்கும் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்து, அதற்கு பதில் சொல்வது என்பது இயலாது. இந்தப் பிரச்சினைபற்றி அந்தந்த மானியக் கோரிக்கை வருகின்றபோது பேசுங்கள். அதற்கான கருத்துக்களை நாம் சொல்லலாம். ஆனால் இது ஒத்திவைப்புத் தீர்மானத்தில் வராது. நாட்டிலே ஏற்படுகின்ற ஒவ்வொரு பிரச்சினையையும் உண்ணாவிரதத்தின் மூலமாக வற்புறுத்தி, எல்லாவற்றையும் சாதித்துவிடலாம் என்று சொன்னால் எந்தக் கட்டுப்பாட்டினாலும் நிறைவேற்ற முடியாது, எந்த சீர்திருத்தத்தையும் நிறைவேற்றமுடியாது. ஆகவே சட்டம் ஒழுங்கையும் பராமரிக்க முடியாது. இந்த விஷயத்தில் எல்லா உறுப்பினர்களும்

ஒத்துழைக்க வேண்டும். இப்போது கேட்டுக்கொள்வேன், உண்ணா
விரதத்தையும், தர்ணாவையும் நிறுத்தயாகவேண்டுமென்று. அது
நல்லதல்ல. அதை மீறிப்போனால், சட்டம் ஒழுங்குப்பிரச்சினை
யாக மாறும். ஆகவே சொல்கிறேன். இது ஒத்திவைப்புத் தீர்
மானமாக வராது. இதை எழுப்புவதற்கு வேறு வழிவகைகள்
இருக்கின்றன. டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன் போன்ற
மானியங்களில் பேசலாம். அப்போது சொல்லுங்கள். தலைமைச்
செயலகத்தைப்பற்றி பேசவேண்டிய அவசியம் ஏற்படும். அதிலே
விரிவாக இருக்கின்ற நிலைமைகளைச் சொல்லுங்கள். அப்போது
நானும் பதில் சொல்கிறேன். இருக்கின்ற நிலைமைகளை எடுத்
துச்சொல்லி, நீங்கள் ஆலோசனை சொல்லுங்கள். அரசு
எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று சொல்லுங்கள். முடிந்த
வற்றை ஏற்றுக்கொள்கிறோம். இயலவில்லையென்றால், இயல
வில்லை என்று சொல்கிறோம்.

### 4. அறிக்கைகள் அளித்தல்,

(அ) கோவை, சேலம் மாவட்டத்தில் மூடிக்கிடக்கின்ற
ஆலைகளைத் திறப்பது குறித்து பேரவை முன்னவரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 111-வது
விதியின் கீழ், பேரவை முன்னவர் அவர்கள் ஒரு அறிக்கையை
அவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
விதி 111-ன்கீழ் பேரவைக்கு விவர அறிக்கை ஒன்றை வைக்க
நான் விரும்புகிறேன்.

கோவையிலும், பிற இடங்களிலும் மூடிக்கிடக்கும் ஆலைகளை
எவ்வாறேனும் திறப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள
வேண்டும் என்பதை, வற்புறுத்துவதற்காக அமைக்கப்
பட்ட, கூட்டு நடவடிக்கைகக் குழுவைச் சேர்ந்த தொழிற்சங்கங்
களின் தலைவர்களை, நான் 8—4—1986 ஆம் நாளன்று,
அழைத்து கலந்துரையாடல்கள் நடத்தினேன். மூடிக்கிடக்கும்
ஒவ்வொரு ஆலையின் நிலைமையையும் தன்மையையும் தனித்
தனியாக ஆய்ந்து, அவற்றை மீண்டும் இயங்கச் செய்வதற்கு
அரசுத் தரப்பில், என்ன என்ன முயற்சிகளையும் நடவடிக்கை
களையும் எடுக்க இயலுமோ, அவற்றை மேற்கொள்ள அரசு
முனைப்புள்ளம் கொள்ளும் என்றும், அரசு கோரும் எல்லாவித
மான நியாயமான ஒத்துழைப்புகளையும் உள்ளஞ்போடும், விட்டுக்
கொடுக்கும் மனப்போக்கோடும் கொடுத்துதவ தொழிலாளர்
கள் முன் வரவேண்டும் என்றும், அதற்குத் தொழிற்சங்கங்களின்
தலைவர்கள் உறுதுணையாக நிற்க வேண்டும் என்றும், அரசின்
முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு தொழிலதிபர்கள் உரிய





முறையில் கேட்டுக்கொள்ளப்படுவார்கள் என்றும், அப்படி
ஒத்துழைப்பு அளிக்க முன் வராவிட்டால், சட்டமுறைப்படியான
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் மீண்டும்
11—4—1986 ஆம் நாள் அன்று கூடிக்கலந்துரையாடலை விரி
வாக நடத்திச் செயற்குறிப்பை, முறைப்படி உருவாக்கலாம்
என்றும் எடுத்துக்கூறினேன். இவற்றையெல்லாம் மனதில்
கொண்டு, பரந்த அளவில் தொழிலாளர்கள் நடத்திய வேலை
நிறுத்தப்போராட்டத்தைக் கைவிட்டு, அமைதி சூழ்நிலையை ஏற்
படுத்தித்தர, தொழிற்சங்கங்களின் தலைவர்கள் முயற்சி எடுக்க
வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன்.

தொழிற்சங்கங்களின் தலைவர்கள், என்னுடைய விருப்பத்
தையும் வேண்டுகோளையும் ஏற்று, வேலை நிறுத்தப்போராட்
டத்தைத் தொழிலாளர்கள் நிறுத்திவிட்டு வேலைக்குத் திரும்ப
வழி வகுத்தனர்.

நான் உறுதி கூறியபடி 11—4—1986 ஆம் நாளன்று, கலந்
துரையாடல் கூட்டத்தைக் கூட்டினேன், அதில் மாண்புமிகு
கைத்தறித்துறை அமைச்சரவர்களும், தொழிலாளர் நலத்துறை
அதிகாரிகளும், கைத்தறித்துறை அதிகாரிகளும், நிதித்துறை
அதிகாரிகளும், கூட்டு நடவடிக்கைக்குழுவைச் சார்ந்த தொழிற்
சங்கங்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர். நிலைமைகள்
விரிவாக ஆராயப்பட்டன. பலன் தரத்தக்க முறையில் கருத்துக்
கள் பரிமாறப்பட்டன. பின்னர் நடைமுறைக்கு ஒத்துவரக்கூடிய
சில முடிவுகள் எடுக்கப்பட்டன. அவையாவன :—

ஜனார்த்தனா மில்ஸ், கோவை, பணி நிறுத்தப்பட்ட நாள்
7—8—1983 ஆகும். இந்த மில்லின் நிர்வாகத்தை, அரசே
ஏற்று நடத்தக்கோரிநிர் வாகமே விண்ணப்பம் கொடுத்துள்ளது.
அந்த நிர்வாகத்துடன் கைத்தறிதுணை இயக்குநர் ஒரு ஒப்பந்தம்
ஏற்படுத்தி அந்த நிர்வாகத்தினை அரசு ஏற்று நடத்தலாம்
என்றும், அதற்கு திறமை மிக்க ஒரு அரசு அலுவலரை தரலா
மென்றும் நலிவுற்ற நிவாரண நிர்வாகமாக அரசு பிரகடனப்
படுத்தலாம் என்றும், தேவையாயின் நிதி உதவியும் அளிக்கலா
மென்றும், இந்த ஆலைக்கு நிதி வழங்கிய வங்கியுடனும்'நிர்வாகத்
துடனும் பேசி அரசே ஆலையின் நிர்வாகத்தை ஏற்று நடத்து
வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் முடிவு
செய்யப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கையை உடன் எடுக்க
வேண்டும் என்று கைத்தறி நூல் மற்றும்கதர்துறை கேட்டுக்
கொள்ளப்பட்டுள்ளது. இதற்குப் பிறகு தொழிலாளர் துறை
ஆணையர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் தொழிலாளர்கள்
காட்ட வேண்டிய ஒத்துழைப்பு சலுகைகளைப் பற்றிப் பேச்சு
வார்த்தைகள் நடத்த வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்
டுள்ளது.

ஸ்ரீ ஹரி மில்ஸ், கோவை, பணி நிறுத்தப்பட்ட நாள் 8–4–984ப நலிவுற்ற நிறுவனமான (Relief Undertaking) முன்பே பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த நிறுவனத்திற்கும், மேலும் ஓராண்டிற்கு இந்தச்சலுகை அண்மையில் 31–3–1986 முதல் நீடிக்கப்பட்டுள்ளது. ஆனால் தொழிற்சங்கத்தலைவர்கள் இந்த பஞ்சாலையை பலமுறை நலிவுற்ற ஆலையாக பிரகடனப்படுத்தியும் நல்ல முறையில் செயல்படவில்லை என்றும் எனவே அரசே நிர்வாகத்தை ஏற்று நடத்த வேண்டுமென்றும் கூறினார்கள். அதன்பேரில் தற்போதைய நிர்வாகத்திடம் அரசே இவ்வாலையை ஏற்று நடத்தப் போகின்ற நிலைகளை எடுத்துணர்த்த வேண்டுமென்றும், அவர்களுடைய சம்மதத்தையும் பெறவேண்டும், அப்படி பெற முடியாத பட்சத்தில் தொழில் வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை சட்டம், பிரிவு 18-ஏ யின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த ஆலை நன்றாக இயங்கும் தன்மையுள்ளது. இதற்கான நடவடிக்கையை உடன் எடுக்க வேண்டும் என்று கைத்தறி துறை மற்றும் கதர்த் துறை கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மற்றும் அலெக்ஸாண்டர் இரெட் டிவிஷன் மேட்டூர் அணை மூலம் பணி நிறுத்தப்பட்ட நாள் 16–7–1985 இந்த ஆலையை தற்போதைய நிர்வாகியிடமிருந்து திரு. வி. துளசிங்க லட்சுமண நாயுடு அவர்கள் மில்லை ஏற்று நடத்தும் முழுப்பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக கருத்து தெரிவித்துள்ளார். அவர் கீழ்க்கண்ட சலுகைகளை கேட்டுள்ளார்:—

(1) தனக்கு எந்தவித பண உதவியும், அரசு உத்திரவாதமும் தேவையில்லை.

(2) இந்த ஆலைக்கு நிதி உதவி செய்யும் நிறுவனங்கள், முடக்கி வைத்துள்ள நடைமுறை மூலதனமாகிய ரூ. 90 இலட்சம் மதிப்பிற்கு கடன் உதவியை உடனடியாக வழங்க ஏற்பாடு செய்தல்.

(3) மின்சார வெட்டிலிருந்து விலக்கு, வியாபார வரி ஒத்திவைப்பு போன்ற சலுகைகள்.

இந்த ஆலையை ஏற்று நடத்த ஒத்துக்கொள்ளும் நபர் கேட்கும் நிதி உதவியை தக்க நிபந்தனைகளுடன் நிதி நிறுவனங்கள் வழங்கவும், கேட்டு இருக்கும் சலுகைகளை வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்கலாம் என்றும் மேலும் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய பணிக் கொடைகளை தவணை முறையில் வழங்கலாம் என்றும் முடிவு





எடுக்கப்பட்டது. இதன்பேரில், மேல் நடவடிக்கை எடுக்க கைத்தறித்துறை இயக்குநர் / கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை மேல் நடவடிக்கை எடுக்கும்.

வசந்தா மில்ஸ், கோவை, பணி நிறுத்தப்பட்ட நாள் 13–11–1984 இந்த ஆலையை பொறுத்தமட்டில் இயங்கும் தன்மை உள்ளதா என மறு பரிசீலனை செய்யும்படியும் தவறினால் இந்த ஆலையை அரசுடமை ஆக்கலாமா என்பதைப் பற்றியும் பரிசீலிக்கவும் கைத்தறித்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவர் அறிக்கை பெற்றவுடன் அந்தத்துறை தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

ராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ், கோவை, பணி நிறுத்தப்பட்ட நாள் 3–9–1984 இது இயங்கும் தன்மையுள்ள ஒரு ஆலை ஆகும். இந்த நிறுவனத்தை நலிவுற்ற நிறுவனமாகப் பிரகடனப் படுத்தி ஒரு ஆண்டுக்கு வியாபார வரி ஒத்திவைப்பு, மூன்றாண்டுகளுக்கு மின்சாரக் கட்டணம் வசூலிப்பதிலிருந்து ஒத்திவைப்பு மின்சார வெட்டு நீக்குதல் போன்ற சலுகைகளை கொடுக்கலாம் என்றும் தொழில் துறை இந்த நிறுவனத்தில் நிர்வாக ஏற்று நடத்த வேண்டுமென்றும், அதை நிர்வகிக்க, அத்துறை, ஒரு அலுவலரை அனுப்பலாம் என்றும், நிறுவனத்தின் நிர்வாகத்தை, ஏற்று நடத்த, ஜோதி மில்லில் ஏற்படுத்தப்பட்ட கமிட்டி போன்ற, இதற்கும் ஒரு கமிட்டி நியமிக்கலாமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட மூன்று சலுகைகளையும் அரசு அளித்து ராமகிருஷ்ணா இன்ஜீனியரிங் ஆலையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அதன்பேரில் தொழில்துறை நடவடிக்கை எடுக்கிறது.

(முற்பகல் 11–00).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

5. கவன ஈர்ப்புகள்.

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதியில் சாலைகள் போட கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நஷ்டயீடு வழங்குதல்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தென்னாற்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடி தொகுதியில், கிராமப்புற சாலைத் திட்டத்தின் கீழ் சாலைகள் போடுவதற்காக கையகப்படுத்தப்பட்ட விளை நிலங்களுக்கு இதுவரை நஷ்ட ஈடு வழங்கப்படாமையினால் பாதிக்கப்பட்டவர்கள் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கவன ஈர்ப்புப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடலூர் வட்டம் மற்றும் குறிஞ்சிபாடி தொகுதியைச் சார்ந்த கீழ்க்கண்ட 18 கிராமங்களில், 20 நேர்வுகளில், 23.08.5 ஹெக்டேர் நிலங்களை கிராமச்சாலை திட்டத்தின் கீழ் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 12 நேர்வுகளில் நெடுஞ்சாலைத் துறையினர் நிலச்சொந்தக்காரர்களிடம் வாய்மொழி அனுமதி பெற்று நிலங்களில் பிரவேசித்துள்ளனர். மற்ற எட்டு நேர்வுகளில் ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டிய நிலங்களில் நெடுஞ்சாலைத் துறையினர் பிரவேசிக்கவில்லை.

1. குறிஞ்சிப்பாடி (வடக்கு).
2. குறிஞ்சிப்பாடி (தெற்கு).
3. கருங்குழி.
4. நைனார்குப்பம்.
5. கல்குணம்.
6. ஆடூர் அகரம்.
7. கண்ணாடி.
8. ரங்கநாதபுரம்.
9. தீர்த்தனகிரி.
10. அனுக்கம்பட்டு.
11. தொண்டமாநத்தம்.
12. பூவானிகுப்பம்.
13. கோதண்டராமபுரம்.
14. திருச்சோபுரம்.
15. அரங்கமங்கலம்.
16. மருவாய்.
17. ராஜாகுப்பம்.
18. கொளக்குடி.





இவைகள் யாவற்றிலும் 1894-ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவைகள் பல்வேறு கட்டங்களில் உள்ளன. இந்த நடவடிக்கைகள் யாவும் விரைவில் முடிக்கப்பட்டு தீர்ப்பாணை பிறப்பித்து நிலச் சொந்தக்காரர்களுக்கு ஈட்டுத் தொகை மிக விரைவில் வழங்க விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், மொத்தம் 20 நேர்வழிச் சாலைகளை எடுத்திருப்பதாகவும், அதில் 12 நேர்வழிச் சாலைகள் நிலச் சொந்தக்காரர்களின் சம்மதத்தின் பேரில் சாலைகள் அமைக்கப்பட்டு இருப்பதாகவும், மீதமுள்ள 8 சாலைகளுக்கு ஆர்ஜிதம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் தெரிவித்த கருத்துப்படி, கிராமச் சாலைகளைப் போடுகின்ற பொழுது நிலச் சொந்தக்காரர்களின் மனச் சம்மதத்தின்பேரில், அவர்கள் நிலங்களை விட்டிருந்தாலும், கடலூரில் இதற்கென்று தனித் தாசில்தார் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த அலுவலகத்தில் ஆர்.டி.ஓ. போன்றவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, நிலத்தை சம்மதத்தின் பேரில் விட்டவர்களைப் பற்றி சம்பந்தப்பட்ட ஆர்.டி.ஓ. அவர்களைக் கேட்டால் அங்கே இது மாதிரியான ஒரு கோப்பு இருப்பதாகவே தெரியவில்லை என்று சொல்லுகிறார்கள். இதனால் சிறிய விவசாயிகள் பாதிக்கப்பட்டு, அவர்களின் நிலம் பாதிக்கப்பட்டு அந்த நஷ்டஈடு உரிய காலத்தில் கிடைக்காமல் பாதிக்கப்படுவதைக் கணக்கில் கொண்டு; விரைவாக அந்த நஷ்டஈட்டைக் கொடுப்பதற்கு ஒரு குறுகிய கால அடிப்படையில்— ஒரு வருட காலம் என்று நிர்ணயித்துச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்னைகளையெல்லாம் மனத்தில் வைத்து விரைவாக, சம்பந்தப்பட்ட அந்த உரிமையாளர்களுக்குச் சேர வேண்டிய தொகையைச் சேர்ப்பிப்பதற்கான நடவடிக்கையைச் சம்பந்தப்பட்ட துறைகள் எடுக்கும். இதிலே பிரச்னைகள் ஏற்படுவதற்குக் காரணம், சாதாரணமாக ஒரு நிலத்தை ஆர்ஜிதம் செய்வதில், பூர்வாங்க வேலைகளில் நிறைய பார்மாலிட்டீஸ் இருக்கின்றன. அதன் காரணமாக இப்படிப்பட்ட காலதாமதம் ஏற்படுகிறது. ஆனால், எவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுத்து உரிய தொகையை அவர்களுக்குச் சேர்க்க முடியுமோ அந்த அளவிற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

[1986 ஏப்ரல் 18

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு நஷ்டஈடு கொடுப்பதற்கு நடைமுறையில் பல சங்கடங்கள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அதிகாரிகள் வேண்டுமென்றே காலதாமதம் செய்கிறார்கள். இதைத் தவிர்க்க வேண்டுமென்றால், காலதாமதம் செய்யும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படி நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, சில நேரங்களில், ஒரு நோட்டீஸ் கொடுத்தால் அதற்கு 6 மாதங்கள், 3 மாதங்கள் என்று காலம் கொடுக்க வேண்டுமென்ற நிலையெல்லாம் இருக்கிறது. அதன் காரணமாகக் காலதாமதம் ஏற்பட்டால் யார் மீதும் குறை சொல்ல முடியாது. குற்றம் சொல்ல முடியாது. ஆனால் வேண்டுமென்றே அரசு அதிகாரிகள் அதிலே ஏதாவது காலதாமதப் செய்திருந்தால் நிச்சயமாக அரசு அதைக் கவனிக்கும்.

(ஆ) இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கி வருவது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''22—3—1986 அன்று பட்டுக்கோட்டை மல்லிப்பட்டிணம் அருகே கடலில் மீன் பிடிக்க விசைப்படகில் சென்ற மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கி அவர்கள் பிடித்து வைத்திருந்த சுமார் பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள மீன்களை எடுத்துக் சென்றுவிட்டதால் அப்பகுதி மீனவர்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

1986-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22-ஆம் நாள் அன்று பி.வி.டி. 5 மற்றும் எம். ஏ. 5 என்ற இரண்டு மீன்பிடி விசைப் படகுகள் 6 மீனவர்களுடன் மல்லிப்பட்டினத்திலிருந்து 8 (பாத்தம்) மைலுக்கு அப்பால் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இரவு சுமார் 11—00 மணியளவில் ஸ்ரீலங்கா கடற்படையினர் மீனவர்களை தாக்கியதோடு அவர்கள் பிடித்து



1986 ஏப்ரல் 18] [திரு. எம். ஆர். கோவேந்தன்]

வைத்திருந்த ரூ. 3,000 மதிப்புள்ள மீன்களையும் அபகரித்துச் சென்றனர். இத்தகைய சம்பவங்கள் பெரும்பாலும் இராமேஸ்வரத்தில் இருந்து செல்லும் மீனவர்களையும் சில சமயங்களில் மல்லிப்பட்டிணத்திலிருந்து மற்றும் இதர பகுதிகளில் இருந்து செல்லும் மீனவர்களையும் கச்சத்தீவு அருகே மீன் பிடிக்கும் போது இலங்கை கடற்படையினர் சமீப காலமாக தாக்கி வருகின்றனர்.

2. இந்தச் சம்பவங்களுக்குக் காரணம் பின்வருமாறு :—

1970—74-ஆம் ஆண்டில் கச்சத்தீவு தங்களைச் சார்ந்தது என இலங்கை அரசு உரிமைக் கொண்டாட ஆரம்பித்தது. மைய அரசும் இலங்கை அரசும் இருநாடுகளுக்கான கடல் எல்லைகளை நிர்ணயிப்பதற்காக உயர்மட்டக் கூட்டம் ஒன்று நடத்தியது. இதன் விளைவாக 1974-ம் ஆண்டு ஜூன்-ஜூலைத் திங்களில் இவ்விரு நாடுகளுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால் கச்சத் தீவு இலங்கை வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்திய இலங்கை அரசுகளின் கடல் எல்லைகள் மாற்றியமைக்கப் பட்டன. இம்மாற்றத்தினால் இராமேசுவரத்தில் பல்லாண்டுகளாக மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் கடல் பகுதியும் குறுகிவிட்டது.

கச்சத் தீவைச் சுற்றிலும் இறால் மீன் பெருமளவிற்கு இருப்பதால் இராமேசுவரம் பகுதி மீனவர்கள் தங்கள் விசைப் படகுகளுடன் அங்கு சென்று மீன் பிடிப்பதில் ஈடுபடுகின்றனர் என்ற குற்றச்சாட்டுகள் அடிக்கடி சொல்லப்பட்டு வந்தன. இரு நாடுகளிடையே ஏற்பட்ட உடன்பாட்டின் முக்கியத்துவத்தை விளக்கியும் மீன் பிடிக்கச் செல்பவர்கள் நமது கடல் எல்லையை கடக்கக்கூடாது என்றும் தண்டோரா மூலம் மீனவர்களுக்கு அவ்வப்போது தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு 1981-ஆம் ஆண்டிலிருந்து நமது மீனவர்களை இலங்கை கடற்படையினர் கொடூரமாகதாக்கியது இல்லை. ஆனால் 1983-ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் நடந்த கலவரச் செயலுக்குப் பிறகு இலங்கை அரசு நமது மீனவர்களை கண்டிப்பதில் தீவிரம் காட்டியது. கொடூரமாகத் தாக்குகிற செயலிலும் ஈடுபட்டு வருகிறது.

1983-ஆம் ஆண்டிற்கு பிறகு நமது மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். மேலும் அவர்களது உடமைகளையும் விலையுயர்ந்த இறால்களையும், மீன்களையும் பறிமுதல் செய்து எடுத்துச் சென்று விட்டனர். இதுபோன்ற சம்பவங்கள் பற்றிய தகவல் கிடைக்கப்பெற்றவுடன் தமிழக அரசு கடற்படை காப்பாளருடன் தொடர்புகொண்டு இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படாவண்ணம் நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுத்து வந்துள்ளது, இது மட்டுமல்லாமல் கடற்படையின

ரால் கைது செய்யப்படும் மீனவர்களையும் கைப்பற்றப்படும் படகுகளையும் இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் இரண்டாம் செயலருடன் தொடர்பு கொண்டு, விசைப்படகுகளையும், மீனவர்களையும் மீட்டிட உடனுக்குடன் நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. மீனவர்கள் இந்திய மீன்பிடி எல்லை லையை கடந்து மீன் பிடிக்கச் செல்லாமல் இருக்கும் பொருட்டு பல கூட்டங்கள் மூலமும் பத்திரிக்கை அறிவிப்புகள் மற்றும் " டாம் டாம் " போட்டும் அவர்களுக்கு விவரமாகத் தெரியப்படுத்தப்பட்டது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியுறவு அமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் மேல் அவர்கள் தமது பதில் கடிதத்தில் பிரதமரின் சிறப்பு பிரதிநிதி அவர்களும், இலங்கை குடியரசுத் தலைவர் திரு ஜெயவர்த்தனே அவர்களை சந்தித்து இந்திய மீனவர்கள் பிரச்சினைகளை எடுத்துக் கூறியுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்திய மீனவர்கள் மனிதாபிமானத்துடன் நடத்தப்படுவார்கள் என்று இலங்கை அரசு உறுதி அளித்திருப்பதாகவும் தெரிவிததுள்ளார். இருந்தபோதிலும் கடந்த அக்டோபர் 1984-லிருந்து இலங்கை கடற்படையினர் நமது கடல் எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி நம் மீனவர்களை பிடித்து பல ஆயிரம் மதிப்புள்ள இரால் மீன் களையும் மீன்பிடிச் சாதனங்களையும் அபகரித்துச் சென்றுள் ளனர் என்று அரசுக்குப் புகார் வந்தது. இத்தகவல்கள், கிடைத்ததும் மத்திய அரசுக்கு தந்தி மூலம் தெரிவித்து இராமேஸ் வரம் பகுதியில் கடலோர ரோந்துப் பணியை அதிகரித்தும் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு தக்க பாதுகாப்பளிக்குமாறு அரசு கோரி வந்துள்ளது.

மேலும் 1984 அக்டோபர் 10,11 தேதி இரவில் 17 மீன்பிடி படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 94 மீனவர்களையும் அப்படகுகளையும் இலங்கை கப்பற்படை கைது செய்தது. இவர்களை விடுவிக்கவும் இவர்களது படகுகளை மீட்கவும் பல முயற்சிகள் எடுத்தும் இலங்கை அரசு எவற்றுக்கும் செவி சாய்க்கவில்லை. ஆனால் அவர்கள் கொடு ரம் நவம்பர் மாதத்தில் அதிகரித்தது. இக்கொடூரச் செயல் டிசம்பர் மாதம் 10-ஆம் தேதி மீன்பிடிக்க சென்ற மீனவர்களை சுடும் அளவுக்கு அதிகரித்தது. இதுபோன்ற தகவல்கள கிடைக்கப் பெற்றவுடன் அவ்வப்போது உடனுக்குடன் தந்தி மூலம் இந்திய அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனால் மைய அரசு கடலோர கப்பற் படையினுடைய ரோந்துப் பணியை இராமேஸ்வரம் பகுதியில் தீவிரப்படுத்தியது. இந்திய கப்பற் படையைச் சார்ந்த கப்பல் ஒன்றையும் அனுப்பியது. நமது அரசுக்கு, இலங்கை கப்பற்படையினர் நமது எல்லைக்குள் புகுந்து நமது மீனவர்களை தாக்கியதாகவும் செய்தி வந்தது. இலங்கை கப்பற்படையினரின் கோரச் செயலால் இராமேஸ் வரம் பகுதியில் கொந்தளிப்பு எற்பட்டது. இந்நிலையில்





1985-ஆம் ஆண்டு சனவரி 11-ம் நாள் இலங்கை இராணுவ படையினர் நமது எல்லைக்குள் புகுந்து நமது மீனவர்களை தாக்கும்போது நமது கடலோர ரோந்துப் பணியில் ஈடு பட்டுள்ள கப்பற் படை இலங்கை கடற்படையைச் சார்ந்த ஒரு படகினையும் 6 இலங்கை கப்பற் படை வீரர்களையும் கைது செய்தனர். இந்தச் சூழ்நிலையில் நமது அரசு 1985 ஆம் ஆண்டு சனவரி 24 தேதியிட்ட ஓர் நேர் முகக் கடிதத்தை விவரமான அறிக்கையுடன் முதலமைச்சர் அவர்கள் சார்பாக, நிதியமைச்சரால் பாரதப் பிரதமருக்கு அனுப்பியதில் ஏற்கனவே பிடிக்கப்பட்ட நமது மீனவர்களையும் படகுகளையும் விடுவித்தாலன்றி இலங்கை கப்பற் படையைச் சார்ந்த படகை விடுவிக்கக் கூடாது என்ற அடிப்படையில் எழுதி னார்கள். இதனால் மத்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் ராஜரீதியில் பேச்சு வார்த்தை நடத்தியதன் தொடர்பாக 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பிடித்து வைத்திருந்த 17 படகுகளையும் 17 படகின் கப்பல் தலைவர்களையும் இலங்கை அரசு விடுவித்தது. இந்திய அரசும் இலங்கை கடற்படையைச் சேர்ந்த படகுகளையும் கப்பற் படையைச் சேர்ந்த 6 அதிகாரி களையும் பரிமாற்ற அடிப்படையில் விடுவித்தது. இவ்வாறு சுமுக நிலை ஏற்பட்டும் அவர்களுடைய கொடூரச் செயல் நின்றபாடில்லை. அவ்வப்போது ஸ்ரீலங்கா கடற்படைத் தாக்குதல் சம்பங்கள் பற்றி நமது அரசுக்கு தகவல்கள் வரு கின்றன. தாக்குதல் சம்பவங்கள் பற்றி தகவல்கள் கிடைக்கப் பெற்றதும், மத்திய அரசின் வெளி விவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சகங்களுக்கும் கப்பற் படை மற்றும் கடலோர காவற் படை அதிகாரிகளுக்கும் உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டு சர்வ தேச கடல் எல்லைக் கோட்டிற்கருகாமையில் தீவிர ரோந்துப் பணி செய்ய வேண்டுகோள் இவ்வரசால் விடுவிக்கப்பட்டது. இதற்கிணங்க இந்திய கப்பற்படையைச் சேர்ந்த கப்பலும் கடலோர காவற் படை கப்பலும் தினந்தோறும் சர்வதேச கடல் எல்லைப் பகுதியில் ரோந்துப் பணி செய்து வருகின்றன. இத்துடன் இந்திய கடலோர கப்பற்படையைச் சார்ந்த ஒரு விமானமும் இந்திய இலங்கைக் கடல் எல்லைப் பகுதியில் ரோந்துப் பணி பாதுகாப்புக்கென இந்திய கப்பற் படையைச் சார்ந்த மற்றொரு விமானமும் ரோந்துப் பணி செய்து வரு கின்றது.

இவ்வாறு ஸ்ரீலங்கா கடற் படையினரின் துப்பாக்கிச் சூட்டி னால் உயிரிழந்த மீனவர்கள் குடும்பங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 2,000-மும் நமது இந்தியப் பிரதமர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 2,500 ம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீலங்கா கடற்

படையினரின் குண்டு தாக்குதலினால் காயமுற்ற மீனவர்களுக்கு நமது முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 500 உதவித் தொகையாகவும், மற்றும் நமது பாரதப் பிரதமர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 1,000 மும் உதவித் தொகையாகவும் பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இராமேஸ்வரம் பகுதியில் தற்போது நிலவி வரும் நிலைமையை முன்னிட்டு, இராமேஸ்வரம் பகுதியில் மீன்பிடிக்க இயலாதவர்கள் தஞ்சை மாவட்ட கடற் கரைப் பகுதிகளில் குறிப்பாக மல்லிப்பட்டினத்தில், அப் பகுதியில் உள்ள மீனவர் களின் உடன்பாட்டோடு மீன்பிடித்தொழிலை நடத்த உதவி தர வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரும் மீனளத்துறை அதிகாரிகளும் பணிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் இராம நாதபுரம் மாவட்டத்திலுள்ள ஏர்வாடிப் பகுதி மீனவர்கள் சம்மதத்தோடு அங்கு மீன்பிடிக் கலங்களை இராமேஸ்வரம் மீனவர்கள் நிறுத்திக் கொள்ள ஓரளவு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. மேலும் இராமேஸ்வரம் மீன்பிடி விசைப் பட காளர்களுக்கு அடையாள அட்டைகள் மீன் துறையால் வழங் பட்டுள்ளன.

ஏற்கனவே வாலிநோக்கத்தில் ஒரு மீன்பிடித் துறைமுகம் உள்ளது. 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மூக்கையூரில் மற்றுமொரு மீன்பிடித் துறைமுகம் கட்டுவது நடைமுறையி லுள்ள விதிமுறைக்கு புறம்பானது என்றாலும், இராமேஸ்வரம் மீனவர்களின் நலனைக் கருதி விதிவிலக்காக மூக்கையூர் அரு காமையில் ஒரு மீன் பிடித் துறைமுகம் கட்ட மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால் மூக்கையூரில் தொழில் நுட்ப முறையில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்க சாத்தியக் கூறு இல்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளதின் பேரில் அங்கு 'டி' வடிவம் கொண்ட தோணித்துறை அமைக்க அரசு ஆராய்ந்து வருகிறது.

இவ்வாறாக அரசின் துரிதமான பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்பட்டு நிவாரணங்களும் வழங்கப்பட்டு வருவதால் பட்டுக்கோட்டை, மல்லிப்பட்டினம் மற்றும் இரா மேஸ்வரம் பகுதிளிகலும் பதட்ட நிலை இல்லை. மேலும் தமது மீனவர்கள் நமது கடல் எல்லைப் பகுதிக்குள் பாதுகாப்புடன் மீன்பிடித் தொழில் நடத்த போதிய பாதுகாப்பு உள்ளது.



### 4. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேர வையின் பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட மூன்று அறிக்கை களை அளிக்கிறேன்:

1. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கை களில் (வருவாய் வரவினங்கள்) வருவாய்த் துறை தொடர்பான பத்திகள் மீது மேற்படி குழுவின இருபத்தாறாவது அறிக்கை.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான (வருவாய் வரவினங்கள்) அறிக்கைகளில் உள்துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் இருபத்தேழாவது அறிக்கை.

3. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் வரவினங்கள் அறிக்கைகளில் சில துறைகள் (தொழில், கல்வி, பொதுப் பணி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம்) தொடர் பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை.

### 6. வரவு-செலவுத் திட்டம் 1986–87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 17—கல்வி—தொடர்ச்சி.

திரு. ஆர். தியாகராசன் : மாமன்றத்தின் துணை சபா நாயகர் அவர்களே, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டுள்ள கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன். 1986–87 ஆம் ஆண்டுக்கு, கோரிக்கை எண் 17 கல்வி என்ற தலைப்பின் கீழ் அரசால் வழங்கப்படும் தொகை ரூ. 551 சோடி. திட்டத்தட்ட 18.20 விதமான கல்வி நிலைகளிலே இன்றைக்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிற பணம் மிக மிகக் குறைவாக உள்ளது என்பதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

இந்த நாடு விடுதலை அடைந்த பின்னால், கல்வியிலே தாழ் வுற்றிருந்த தமிழகத்தை, காங்கிரஸ் பேரியக்கத்தின் காலத் திலே, உயர்த்தும் எண்ணத்தோடு, அன்றைய நிலை யில், பயிற்சி பெறாத ஆசிரியர்களை வைத்து, 6-வது, 8-வது

[திரு. ஆர். தியாகராசன்] [1986 ஏப்ரல் 18

படித்த ஆசிரியர்களை எல்லாம் வைத்து, அன்றைய அரசு,
கல்வியை வளம்பெறச் செய்வதிலே மிகவும் ஆர்வம் காட்டி,
முதலிடம் கொடுத்தது. அதற்குப் பின்னால், காமராஜர் கல்விக்
கொடுக்கும் எண்ணத்தோடு, சத்துணவு என்றும், பலமுனை
களிலே கல்விக் கூடங்கள் என்றும், பல கிராமங்களிலே துவக்கக்
கல்வி என்றும், 500 ஜனத்தொகை உள்ள கிராமங்களிலே
ஒரு தொடக்கப் பள்ளி ஏற்படுத்த வேண்டுமென்றும் பல முற்
போக்கான திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

இந்த நாடு எப்படியிருந்த போதிலும், கல்வியிலே தன்னிறைவு
பெற வேண்டும், கல்வியிலே உயர்வு பெற வேண்டும், விஞ்
ஞானத்திலே தலை சிறந்து நிற்க வேண்டுமென்று நவீனமான
முறையில், கல்வியைப் புகுத்துவதற்கு வேண்டிய நடைமுறை
களை எல்லாம் அப்பொழுது பாரதப் பிரதமராக இருந்த நேரு
அவர்கள் தலைமையிலே, இந்தியாவிலே கல்வி விரிவுபடுத்தப்
பட்டது.

(முற்பகல் 11-10)

அதற்குப் பின்னாலே, அண்ணா காலத்திலே கூட, கல்விக்
குச் சிறப்பான இடம் கொடுத்தார்கள். கலைஞர் காலத்திலே
ஓரளவுக்கு நல்ல முறையிலே கல்வியை வைத்திருந்தாலும் கூட,
மாணவர்களை, வேறு திசையிலே திருப்பி, மதுவினைக்
கொடுத்து, கல்வியிலிருந்து அவர்களைத் திருப்பி விட்டார்கள்.
அதற்குப் பின்னாலே, அதே வழியிலே நடந்து கொண்டிருக்கிற
இந்த அரசு, அதே வகையிலே, பல திட்டங்களைத் தீட்டி, பல
கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து, மதிய உணவு
என்றும், உடை என்றும், புத்தகங்கள் என்றும் வழங்கி, திட்
டங்கள் தீட்டியுங்கூட அவர்கள் தரமுள்ள மாணவர்களாக
வர முடியாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

அந்தக் காரணங்களினாலே சில உயர் ஜாதிக்காரர்கள் உயர
முடியும் என்ற அடிப்படையிலே இன்றைக்குக் கல்வி உயர்ந்து
கொண்டிருக்கிறது. காரணம் கீழ்மட்டத்தில் இருக்கிற, கிராமப்
புறங்களில் இருக்கிற, பிற்பட்ட பகுதிகளில் இருக்கிற, மலைப்
பகுதிகளில் இருக்கிற மக்களுடைய கல்வித் தரம் உயரவில்லை.
அதே நேரத்தில் நகர்ப்புறங்களில் இருக்கிற மக்கள் நல்ல முறை
யில் கல்வியை வளர்த்துக்கொள்ள முடிகிறது. நகரங்களில் இருக்
கிற அரசு அதிகாரிகள், அரசு அலுவலர்கள், அமைச்சர்கள்,
எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் எல்லாம் தங்களுடைய குழந்தை
களை நகர பகுதிகளிலே நல்ல பள்ளிக்கூடங்களிலே படிக்
வைக்கிறார்கள். அவர்களுடைய கல்வித்தரம் உயர்ந்திருக்கிறது



1986 ஏப்ரல் 18] [திரு. ஆர். தியாகராசன்]

நல்ல பள்ளிகள் என்றால் இன்றைக்குத் தனியார் பள்ளி
களைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அரசுப் பள்ளிகளிலே
என்ன குறை இருக்கிறது? கட்டிடம் கட்டிக் கொடுக்கிறோம்
மதிய உணவு போடுகிறோம், இலவச உடை கொடுக்கிறோம்,
ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். இவை எல்லாம் கொடுத்தாலும்
கூட பெரியவர்கள், வசதி படைத்தவர்கள், மற்றவர்கள் எல்
லாம் தங்களுடைய குழந்தைகளை, நல்ல கல்வி பெற வேண்டும்
என்பதற்காக தனியார் பள்ளிகளிலேதான் படிக்க வைக்கிறார்
கள் அவர்கள் உணவு போடாவிட்டாலும் சரி, உதவித் தொகை
கொடுக்காவிட்டாலும் சரி, உடை கொடுக்காவிட்டாலும் சரி,
கட்டிட வசதி இல்லாவிட்டாலும் சரி, கொட்டகையிலே படிப்
புச் சொல்லிக்கொடுத்தாலும் சரி, அங்கே பிள்ளைகள் நன்
றாகப் படிக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்பதை
அரசு கவனிக்கவேண்டும்.

நாடு சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்
டது. கிராமப்புறங்களுக்கு இன்னும் தரமான கல்வி வரவில்லை.
இத்தனை ஆண்டுகள் ஆகியும் வரவில்லை என்றால் இனி எப்
போது வரும்? எப்போது கிராமப்புறங்களில் கல்வியின் தரத்
தை உயர்த்திக் கொண்டு வர முடியும் என்பதை எண்ணிப்பார்க்க
வேண்டும். எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக கல்வியின்
தரத்தை உயர்த்த அரசு திட்டமிட வேண்டும். கிராமப்புறங்
களில் எல்லா வசதியும் இருக்கிறது. கட்டிட வசதி ஒன்றுதான்
குறைவாக இருக்கிறது. கட்டிடம் இருக்கிறது, மதிய
உணவு இருக்கிறது, இலவச புத்தகம் இருக்கிறது, சீருடை இருக்
கிறது. இப்படிப்பட்ட வசதிகள் எல்லாம் இருந்தாலும் கூட,
மாணவர்களின் படிப்புத் தரம் உயரவில்லை. அதற்கு முக்கிய
மான காரணம் ஆசிரியர்கள் சரியான முறையில் பாடம் நடத்துவ
தில்லை. அவர்களுக்கு வேண்டிய உரிமைகளை எல்லாம் கேட்
கிறார்கள். அரசும் கொடுக்கிறது. அதை நாங்கள் ஆதரிக்கி
றோம், வரவேற்கிறோம். ஆனால், கிராமப்புறங்களிலே இருக்
கிற ஆசிரியர்கள் ஒழுங்காக பாடம் நடத்துவதில்லை. சொல்லி
வைத்துக்கொண்டு, ஒருவருக்கொருவர் மாற்றி மாற்றி லீவ் போடு
கிறார்கள், 11 மணிக்கு மேல் தான் பள்ளிக்கூடத்திற்குப் போகி
றார்கள். கையெழுத்துப் போட்டுவிட்டு, தங்களுடைய வீட்டுக்
கணக்கு, வயல் கணக்கு, மற்ற பிரச்சனைகளைப் பேசிக்கொண்
டிருக்கிறார்களே தவிர, ஒழுங்காகப் பாடம் நடத்துவதில்லை.
எல்லா ஆசிரியர்களும் தினந்தோறும் போவதில்லை. அவர்களுக்
குள்ளாகவே சொல்லி வைத்துக் கொண்டு, யார் யார் எத்தனை
நாள் போவது என்று பகிர்ந்து கொள்கிறார்கள். ஆகவே,
கிராமப்புற மாணவர்களின் கல்வித்தரம் உயரவில்லை என்
பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

[திரு. ஆர். தியாகராசன்] [1986 ஏப்ரல் 18

ஆசிரியர்கள் ஒழுங்காக பள்ளிக்குச் செல்கிறார்களா, பாடம் நடத்துகிறார்களா என்பதை கண்காணிக்க எங்களைப் போன்ற எம்.எல்.ஏ.க்கள் அடங்கிய கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட கமிட்டி அமைத்தால்தான் ஓரளவுக்கு கல்வித் தரம் உயரமுடியும். அரசு நிறைய பணம் செலவிடுகிறது, இல்லை என்று சொல்லவில்லை. கட்டிடம் ஒன்றுதான் பாக்கி. அதைக்கூட கிராமத்தில் கட்டிக் கொடுத்துவிடலாம். இப்படி எல்லாம் செய்து கொடுத்தாலும் மாணவர்களின் கல்வித் தரம் உயர வேண்டுமென்றால் உள்ளூர் ஆசிரியர்கள் அங்கே இருக்கக்கூடாது. உள்ளூரிலிருந்து அவர்களை மாற்றினால் ஒழிய கல்வியின் தரம் உயர வழியில்லை. காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த நாங்கள் தேர்தலிலே வெற்றிபெற வேண்டும் என்பதற்காக மட்டும் பேசவில்லை; இந்த நாட்டிலே நல்ல காரியங்கள் நடக்க வேண்டும் என்பதற்கான கருத்துக்களையும் சொல்கிறோம். ஆசிரியர்களுக்கு அனைத்துச் சலுகைகளையும் கொடுத்தாலும், இன்னும் அள்ளி அள்ளி கொடுக்கலாம், கொடுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. அதே நேரத்தில் அவர்களுடைய கடமையை அவர்கள் சரியாகச் செய்ய வேண்டும். எவ்வளவு உரிமைகள் கொடுத்தாலும் அவர்கள் கடமையைச் செய்வதில்லை. காரணம் அவர்கள் உள்ளூரிலே இருப்பதுதான். உள்ளூரிலே இருந்துகொண்டு மாட்டைப் பார்ப்பதும், வயலைப் பார்ப்பதும், வீட்டு வேலைகளைப் பார்ப்பதும் இப்படிப்பட்ட காரியங்களிலே கவனம் செலுத்துகிறார்களே தவிர, மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதில் அக்கறை காட்டுவதில்லை.

ஆசிரியர்களை, ஒரே இடத்தில் வைக்காமல் அவ்வப்போது மாற்ற வேண்டும் என்ற அடிப்படையிலேதான் பஞ்சாயத்துக்களில் இருந்த ஆசிரியர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கினோம். ஆனால், ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் ஆக்கப்பட்டதன் நோக்கம் நடைபெறவில்லை. அவர்களை தாலுகா வாரியாக, மாவட்ட வாரியாக மாற்ற வேண்டும். அந்த நோக்கத்தோடுதான் ஆசிரியர்களை எல்லாம் அரசுடைமை என்ற முறையிலே அரசு ஊழியர்களாக்கினோம். அப்படி மாற்றாத வரையில் கல்வியின் தரம் உயராது.

முன்னைப் போல அதிகாரிகளும் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று சோதனையிடுவதில்லை. மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது சென்று பார்வையிட வேண்டும். சில நேரங்களில் கல்வி அதிகாரிகள் போகிறார்கள். அவர்கள் போகிறபோது, ஆசிரியர்கள் அவர்களுக்கு என்ன என்ன முறையில் வரவேற்பு கொடுக்க வேண்டுமோ அப்படி வரவேற்பு கொடுத்து, முறைப்படி எப்படி எப்படி கவனிக்க வேண்டுமோ அப்படி எல்லாம்



1986 ஏப்ரல் 18] [திரு. ஆர். தியாகராசன்]

கவனித்துவிட்டால் அவர்கள் உள்ளே போய் பார்க்கக்கூடிய நிலைமை இல்லை. மதிய உணவை முடித்துக் கொண்டு திரும்பி விடுகிறார்கள்.

நான் கிராமத்திலே இருப்பவன். அங்கே நான்காவது வகுப்பு படிக்கக்கூடிய மாணவனைக் கூப்பிட்டு, ஆனா, ஆவன்னா என்று எழுதி, சொல் என்று சொன்னால் அந்த எழுத்தைக்கூட அவனால் சொல்ல முடியவில்லை. எங்கள் காலத்தில் நாங்கள் எல்லாம் படிக்கிறபோது மணலைப் போட்டு விரலால் எழுதுவோம். ஆனா, ஆவன்னா என்று. மனதில் பதியும் வரை எழுதுவோம்; விரல் தேயும் வரை எழுதுவோம். அப்படி எல்லாம் எங்களுக்கு ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுத்தார்கள். ஆனால், இப்போது, 4-ஆவது வகுப்பு படிக்கிற மாணவனால் கூட எழுத்தைச் சொல்ல முடியாத நிலைமை கிராமப் பகுதியிலே இருக்கிறது. நான் குற்றம் சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு சொல்லவில்லை. இதற்கெல்லாம் ஏதாவது ஒரு வழி செய்யுங்கள். அரசுப் பொறுப்பில் இருக்கக்கூடிய நீங்கள் தானே செய்ய வேண்டும். அரசு அதிகாரிகளை நீங்கள் தானே கண்டிக்க வேண்டும்.

ஏதாவது ஒரு காரணத்தால் ஆசிரியர்களையும் கண்டிக்க முடியாது, அதிகாரிகளையும் கண்டிக்க முடியாது, வேறு யாரையும் கண்டிக்க முடியாது என்ற நிலைமை இருக்கிறது. இப்படி இருந்தால் எப்படி நிர்வாகத்தைச் சீர்திருத்த முடியும். எனவே, ஏதாவது ஒரு வகையில் கண்டியுங்கள். தப்பு நடந்தால் அதைத் தப்பு என்று சொல்லி தீர்ப்புச் சொல்ல வேண்டிய இடத்தில் இருக்கக்கூடிய அரசு தன்னுடைய பணியை சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று நான் சொல்கிறேன். இன்றைக்கு ஆட்சிக்கு, திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் யாரும் தூக்கிக் கொடுத்து ஆட்சிக்கு வரவில்லை. அவருடைய திறமையால் அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். அவ்வாறு ஆட்சிக்கு வந்தவர்கள், செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் மிகத் திறமையாகச் செய்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அமைச்சர்கள் கிராமங்கள் மற்றும் பல இடங்களில் இருக்கக்கூடிய ஹாஸ்பிடல் போன்றவற்றுக்குச் சென்று பார்த்தார்கள்; பலவற்றைக் கண்டுபிடித்தார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள் ஆனால், யாராவது ஒருவர் ஒரு பள்ளிக்கூடத்திற்குச் சென்று அங்கே எப்படி பணியாற்றுகிறார்கள் என்பதை செக் அப் பண்ணுகிறார்களா? மாணவர்களின் நிலைமை என்ன, ஆசிரியர்கள் எப்படி சொல்லிக்கொடுக்கிறார்கள் என்று யாராவது பார்த்திருக்கிறார்களா?

[திரு. ஆர். தியாகராசன்] [1986 ஏப்ரல் 18

நாங்கள் போய்க்கேட்டால் என்ன பதில் சொல்கிறார்கள்
தெரியுமா ? மதிய உணவைப் பற்றிக்கூட சொல்லும்போது.
அதாவது 72 குழந்தைகள் என்று போட்டிருக்கிறீர்கள், ஆனால்,
10 குழந்தைகள் தானே இருக்கிறது என்று சொல்லி புத்தகத்தில்
எழுதி வைத்துவிட்டு வந்தால் எனக்குப் பின்னால் வருகிற கல்வி
அதிகாரி சென்று நான் பார்க்கும்போது 72 மாணவர்கள் இருந்
தார்கள் என்று சொல்லி எழுதி வைத்து விட்டு வருகிறார். இப்
படி இருந்தால் எப்படி நாம் காரியங்களைச் செய்ய முடியும்?
அதாவது நான் எழுதிவிட்டு வந்தது 11 மணிக்கு. அவர் எழுதி
விட்டு வந்தது 1 மணிக்கு. இப்படி எல்லாம் இருந்தால் கிராமப்
பகுதிகளில் எப்படி நிலைமை வளர முடியும்? குழந்தைகளின்
நிலைமை இப்படி போய்க்கொண்டிருக்கிறது.

நகரப் பகுதியிலே இருக்கின்ற குழந்தைகளைப் பொறுத்த
வரையில் நர்சரி பள்ளி இருக்கிறது. உயர்வான தனியார்
பள்ளிகள் இருக்கின்றன. பிரைவேட் சொல்லிக் கொடுக்கக்
கூடிய வசதியும் இருக்கிறது. ஆனால் கிராமப் பகுதியில்
இருப்பவர்களுக்கு ஒரே ஒரு பள்ளிதான். அந்தப் பள்ளியை விட்
டால் வேறு வழியில்லை. 6-வது வகுப்பு வரை அங்கே தான்
படிக்க வேண்டும். அதன்பின்னர் அவர்கள் ஹைஸ்
கூலுக்குப் போனால் என்ன நிலைமை? அதாவது கிராமப்
பகுதிகளிலே இருக்கின்ற ஹைஸ்கூலிலே என்ன நிலைமை
இருக்கிறது என்பதைப் பார்க்கின்றபோது எஸ்.எஸ்.எல்.சி.
தேர்வில் 18 சதவீதம், 20 சதவீதம் தான் மாணவர்கள்
தேறுகிறார்கள். நகரத்தில் இருக்கக்கூடிய ஹைஸ்கூலிலே
கூட இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. 20 சதவீதம்
தான் பாஸ் பண்ணுகிறார்கள். ஏன் இந்த நிலைமை என்ப
தைப் பார்க்கவேண்டும். விஞ்ஞானத்தில் போய்விட்டதா
கணக்கில் போய்விட்டதா அல்லது தமிழில் போய்விட்டதா
என்று பார்க்க வேண்டும். தவறு எங்கே என்று பார்க்க வேண்
டும். அதைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்
டும் என்று நான் கூட கோரிக்கை எழுப்பினேன். டீ.டீ.சி
மீட்டிங்கிலே கூடக் கேட்டேன். இப்படிப்பட்ட நிலைமை
இருப்பதால் அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றிவிட்டு
நல்லவர்களாகப் போடவேண்டும், அப்போதுதான் அடுத்த
ஆண்டாவது நல்ல முறையில் சொல்லிக் கொடுப்பார்கள்
என்று பல தடவை நான் சொல்லியிருக்கிறேன். ஆனால்
இந்த அரசு அன்றிலிருந்து இன்று வரையில் யாரையும் மாற்ற
வில்லை. இப்படியே போனால் நிலைமை என்னவாகும்? அவர்
களிடத்திலே கேட்டால் கிராமத்திலே கீழ்வகுப்பிலே சரியாக
சொல்லிக் கொடுக்கப்படவில்லை, எனவே என்னதான் தூக்கிச
தூக்கிப் பார்த்தாலும் அவர்களை நிமிர்த்த முடியவில்லை
எனவே நாங்கள் என்ன செய்வது என்று சொல்கிறார்கள்.



1986 ஏப்ரல் 18] [திரு. ஆர். தியாகராசன்]

ஆசிரியர்களுக்கெல்லாம் நாம் பல சலுகைகளைத் தருகி
கிறோம். இன்னும் வீடு கட்டுகின்ற திட்டம் என்றெல்லாம்
ஏற்படுத்தி அவர்களுக்கு உதவி பண்ணுங்கள். நான் வேண்டா
மென்று சொல்லவில்லை. ஆனால் கல்வித் தரம் எப்படி
இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டாமா? காலையில்
எழுந்த பின் பஞ்சாயத்து, நாட்டாமை இப்படி எல்லா பணி
களையும் பார்த்துவிட்டதற்குப் பிறகு பள்ளிக்கூடம் போக
வேண்டிய நிலைமை இருப்பதன் காரணத்தால்தான்
கல்வித் தரம் அங்கே சரியாக வர முடியவில்லை. இப்போது
நகராட்சிகளிலே இருக்கக்கூடிய பள்ளிகளின் ஆசிரியர்களை
மற்றும் ஊழியர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்க
வேண்டும் என்றும் பல சலுகைகளைத் தரவேண்டுமென்றும்
கேட்கிறார்கள். அதைக் கொடுங்கள். ஆனால் நடக்க வேண்
டிய வேலை நடக்க வேண்டாமா? 4 மணி நேரம் வேலை நடக்
கிறது என்றால் அதைச் சிறப்பாகச் செய்தால்தானே சம்பளம்
கொடுக்க முடியும்? எதையும் செய்யாமல்—ஓட்டு வேறு
மாட்டிக் கொண்டது. அதனால்—அரசை மிரட்டி, மிரட்டி
எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டிருக்கிற நிலைமையைப்
பார்க்கிறோம். இப்படி அரசாங்க ஊழியர்களும், ஆசிரியர்
களும் மட்டுமே பெற்றுக்கொண்டால் கிராமத்திலே இருக்கக்
கூடிய விவசாயிகளின் நிலைமை என்ன? ஏழைகளின் நிலைமை
என்ன? மண் தூக்கிக் கொண்டு போடுகிறவன் நிலைமை
என்ன? மண் தூக்கிப் போடுகிறவனின் பிள்ளை பள்ளிக்
கூடத்தில் படித்து பட்டம் பெறக்கூடாதா? அரசு ஊழியர்
களின் பிள்ளைகள் மட்டும்தான் நல்ல முறையில் படிக்க வாய்ப்பு
இருக்கிறது; சைக்கிளிலே ஏற்றிக் கொண்டுபோய் நர்சரியிலே
விட்டுவிட்டு வருகிறார்கள். நகரத்தில் இருப்பவர்களுக்கு
எல்லா சலுகைகளும் இங்கே இருக்கின்றன.

(முற்பகல் 11-20)

வேலை வாய்ப்பும் அவர்களுடைய பிள்ளைகளுக்குத்தான்
கொடுக்கிறார்கள். கிராமத்திலே இருக்கிற விவசாயினுடைய
பிள்ளைகளுக்கு அரசாங்க வேலை வாய்ப்பு கிடைக்குமா,
கிடைக்காது. அவன் ஒரு சப்இன்ஸ்பெக்டராக இருந்தால்
அவன் மகன் ஏட்டாக போய்விடுவான் அல்லது பின்னாடி சப்
இன்ஸ்பெக்டராகவே கூட வந்துவிடுவான். வேலை வாய்ப்பு
இவர்களுக்குத்தான் திருப்பி திருப்பி கொடுக்கப்படுகிறதே
தவிர, கிராமப்புற ஏழை எளிய விவசாயிகளின் பிள்ளைகளுக்கு
கொடுக்கப்படுவதில்லை. ஆகவே அரசு இதில் நல்ல முடிவை
எடுத்து கண்காணிக்க வேண்டும், பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஏனென்றால் அரசு ஊழியர்கள் சரியாக வேலை செய்ய வில்லை என்று சொன்னால் பல வகைகளில் இடையூறுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். அது கல்வித்துறை மானியத்திற்கு சம்பந்தப் பட்டது இல்லை என்றாலும் கூட, சொல்லியாக வேண்டிய நிலையில் சொல்லுகிறேன்.

நான் சில நாட்களாக ஊரில் இல்லை. முன்பு எல்லாம் நெல்லை மூட்டையிலே அளந்து போடுவார்கள் படி வைத்து. அது அளவு நன்றாகத் தெரியும். இப்போது நிறுத்துப் போடு கிறார்கள். எடை போட்டுக் கொடுக்கிறார்கள். 64 படி 75 கிலோவுக்கு சமம். என்னுடைய தொகுதியிலே சமீபத் திலே நான் ஊருக்குப் போயிருந்தபோது ஆயிரம் மூட்டை யைப் பிடித்தார்கள்.

மூட்டைக்கு 75 கிலோ என்றுதான் சொன்னார்கள். ஆனால் அடுத்த மூட்டையைப் பார்த்தால் 87 கிலோ இருக்கிறது. அதைப்பற்றி லா அண்டு ஆர்டர் என்ற முறையில் போலீசிடம் சொன்னால், எங்களுடைய ஜுரிஸ்டிக்ஷனுக்கு இது வராது என்கிறார்கள். ஆர்.டி.ஓ.-விடம் சொன்னால் எங்களுக்கு இல்லை, இது எங்களுக்கு வராது. பில் போட்டுக் கொடுத் திருந்தால், அந்த பில்லை வைத்துக் கொண்டு கேஸ் போடு வோம், இப்போது எப்படி கேஸ் போடமுடியும் என்று கேட் கிறார்கள். அது குறித்து வியாபாரிகளிடம் கேட்டால் நெல்லை அளந்து வாங்கும் போது நான் எப்படி பில் கொடுக்கிறது என்கிறார்கள். நான் போய் நேரடியாக பார்த்துச் சொல்லு கிறேன். ஆனாலும், இது எல்லாம் சகஜம் எம்.எல்.ஏ. சார், இதையெல்லாம் பார்க்க முடியாது என்று என்னிடமே சொல்லு கிறார்கள்.

இப்படி ஒவ்வொன்றிலும் இருக்கிற சூழ்நிலைகளை நாம் பார்க்கிற போது ஊழியர்கள் சரியாக வேலை செய்யவில்லை என்று சொன்னால் அது எல்லோருக்குமே குறைகளாக மாசு வந்துவிடும். இதையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த தியாகராசன் இப்படி பேசினாரா வெளியே வரட்டும் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லலாம். தொகுதியிலே வரட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்று அரசு ஊழியர்களும் சொல்லலாம். அது பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் ஏழைகளுக்காக வக்காலத்து வாங்குவதற்கு ஒரு அரசு இருக் கும் என்று சொன்னால் அந்த அரசை நான் பாராட்டுகிறேன். பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், என்னு டைய தொகுதியிலே மங்களம்பட்டியிலே ஒரு கல்வி நிலையம் இருக்கிறது. அதிலே எஸ்.எஸ்.எல்.சி. வரையில் வகுப்புகள் இருக்





கின்றன. அதிலே ஆரம்ப வகுப்புகளில் 1, 2, 3 கிளாஸ்கள் வெளியிலே மரத்தடியில்தான் நடக்கின்றன. ஏனென்றால் கட்டிடம் கிடையாது. 4, 5 வகுப்புகள் உள்ளே நடக்கின்றன. காற்று, மழை வந்தால் அவர்களும் உள்ளே போக வேண்டியது தான். அப்போது 3 பிளஸ் 2, ஐந்து வகுப்புகளும் ஒரே இடத் தில் எப்படி நடத்த முடியும்? இவன் படிப்பானா? அவன் படிப்பானா? யார் படிப்பார்கள்? யார் படிப்பது யாருக்கு புரியும்.

அதைப்போலவே என்னுடைய தொகுதியிலே பரூர் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அது மலைப்பகுதி போன்று உள்ள ஒரு ஊர். அந்த ஊரிலே இருக்கிற பள்ளிக்கூடம் கீத்து கொட்ட கையிலே தான் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வந்தது. அந்தக் கொட்டகையும் நடு மத்தியில் விழுந்து விட்டது. இப்போது மண்தரையிலே பலகைகளைப் போட்டு உட்கார்ந்து கொண்டு தான் படிக்கிறார்கள். இப்படி எத்தனை நாளைக்கு? கிட்டத் தட்ட 10, 15 ஆண்டுகளாக அப்படியே இருந்தால் என்றுதான் விமோசனம்? அது போன்று என் தொகுதியில் 5 பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. இதற்கெல்லாம் கட்டிடங்கள் கட்டப் பெற வேண்டும். ஆனால் அரசு கட்டிடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கி இருக்கிற தொகையைப் பார்த்தால்ரொம்ப ரொம்பகுறை வாக இருக்கின்ற பள்ளிக் கட்டிடங்களுக்கு பராமரிப்பு வேலை செய்வதற்கு, பெயிண்ட் அடிப்பதற்கு, சுண்ணாம்பு அடிப்ப தற்குத் தான் உபயோகப்படும் போல் தோன்றுகிறதே தவிர, ஒரு புதியக் கட்டிடம் கட்டக் கூட பணம் இருக்காது.

அதைப்போல விருத்தாசலத்திலே பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அதற்கு சுற்றுச் சுவரே கிடையாது. கிட்டத்தட்ட 4,000-க்கு மேற்பட்ட பெண்கள் படிக்கின்ற ஒரு உயர்நிலைப் பள்ளி அது. அதற்கு கட்டிடமே கிடை யாது. அந்தப் பெண்கள் படிக்கும் எல்லா வகுப்புகளும் கீத்து கொட்டகைகளில் தான் இருக்கின்றன. அதனாலே அதைச் சுற்றி ஒரு சுற்றுச் சுவராவது அமைத்துக் கொடுத்தால் நலமாக இருக்கும். அதைப் போலவே என்னுடைய விருத்தாசலம் தொகுதியிலே ஒரு பள்ளிக் கூடம் ஒரு மாட்டுக் கொட்டகையில் இருக்கிறது. அமைச்சர் அவர்களிடம் அதைப்பற்றி முன்பேயே கூறியிருக்கிறேன். 15, 20 வருஷங்களாக அந்த மாட்டுக் கொட்டகையிலேயே நடக்கிறது. நான் ஒன்றும் தப்பாக சொல்லவில்லை, உண்மையிலேயே மாட்டுக் கொட்டகை யிலேதான் இருக்கின்றது. ஆரம்பிக்கும்போது, எப்படியாவது பள்ளிக்கூடம் என்று ஆரம்பித்துவிட்டால் போதும் என்று நினைத்து அங்கே ஆரம்பித்து விட்டார்கள். அந்த மாட்டுக் கொட்டகை சீமை ஓடு போட்டு முதலிலே இருந்தது. நடுவிலே

அந்த ஓடுகள் எல்லாம் விழுந்து, அப்படியே அது 10, 15
வருஷங்களாக இருக்கின்றது. அந்த ஊருக்கு, அந்தப்
பள்ளிக்கு நிச்சயமாக ஒரு கட்டிடம் கட்டித் தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பெண்கள்
மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க
வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணி
யடிக்கப் பெற்றது.)

இன்னும் நான் சொல்ல வேண்டியது நிறைய
இருந்தாலும் கூட மணியடித்து விட்டார்கள். இருந்
தாலும் மொழியைப் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற
விரும்புகிறேன். நேற்றுகூட இங்கே அது பற்றி நிறைய பேசினார்
கள். அமைச்சர் அவர்கள் கூட பதில் சொன்னார்கள். என்னைப்
பொறுத்தவரையில் தமிழ்நாட்டிலே நாம் இருக்கிறோம். எனக்கு
தமிழ்தான் அதிகமாக தெரியும். ஆங்கிலம் அதிகமாக தெரியாது.
ஆனால் நான் தமிழன் தான், தமிழ் எந்த அளவிற்கு இடிரென்று
அழிந்து போயிருக்கிறது என்பதை மாண்புமிகு துணைத் தலை
வர் அவர்களும், அமைச்சர் அவர்களும் கவனிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். காமராசர் அவர்கள்
காலத்தில் 1960 ஆம் ஆண்டிலே நான் பஞ்சாயத்து தலைவராக,
வைஸ் சேர்மனாக இருந்தேன். அப்பொழுதெல்லாம் தமிழில்
தான் அனைத்து ரெக்கார்டுகளும் வரும். மாவட்ட ஆட்சித்
தலைவரிடமிருந்து வருகிற திட்டங்கள் எல்லாம் தமிழில் தான்
வரும். இப்போது மாவட்ட நிர்வாக அமைப்புகளிலிருந்து
வருகிற தபால்கள் எல்லாம் ஆங்கிலத்தில் தான் வருகின்றன.

அந்தக் காலத்தில் ஆங்கிலேயன் நம்மையெல்லாம் ஆண்டு
கொண்டிருந்தான். அவன் வெளியே போன பிறகும் கூட
அவனுடைய மொழி, கலாச்சாரம் போன்றவைகள் நம்மைவிட்டு
போகவில்லை. தமிழ்நாட்டில் தமிழ் மொழி நிலைத்து
நிற்க வேண்டும். சட்டமன்றத்தில் நிகழ்ச்சி நிரலைக் கூட
தமிழிலும் ஆங்கிலத்திலும் தான் வைக்கிறோம். அதைப்
போல மாவட்ட நிர்வாக அதிகாரிகளுக்கு, பஞ்சாயத்துத்
தலைவர்களுக்கு வருகிற கடிதங்கள், உத்தரவுகள் எல்லாம்
தமிழில் தான் இருக்க வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை
நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்
கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காமராசர் அவர்கள் காலத்தில் பார்த்தால் அனைத்துக்
கடிதப் போக்குவரத்துகளும் முழுக்க முழுக்க தமிழில் தான்
இருக்கும். ஆங்கிலத்தையே பார்க்க முடியாது. இன்றைக்கு
மெட்ராசை எடுத்துக் கொள்ளுங்கள். யாராவது வெளிநாட்டி
லிருந்து தமிழ்நாட்டிற்கு வந்தால் மெட்ராசைப் பார்க்கிற



போது இது தமிழ் நாடா, ஆங்கில நாடா என்று கேட்டால்
ஆங்கில நாடு என்று தான் சொல்ல வேண்டியிருக்கும். அந்த
அளவிற்கு கடைகளிலும், ஓட்டல்களிலும், நிறுவனங்களிலும்
பெயர்கள் ஆங்கிலத்தில் போடப்பட்டுள்ளன. இன்னும்
சொல்லப் போனால் பச்சைத் தமிழன் என்று பேசிக் கொள்
பவர்கள் திருமணப் பத்திரிகைகளைக் கூட ஆங்கிலத்தில்
அடிக்கிறார்கள். ஆபீசர்களுக்கு கொடுக்கிற வில்லைகள்
எல்லாம் ஆங்கிலத்தில் இருக்கிறதே தவிர தமிழில் இல்லை.
தமிழ் என்று முழங்கக் கூடியவர்கள் தமிழுக்கு எந்த அளவிற்கு
முன்னுரிமை கொடுக்க வேண்டுமோ அந்த அளவிற்கு கொடுக்க
வில்லையென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப் பட்டிருக்கிறேன். தமிழ்நாடு இப்படியே போனால்
இன்னும் சில ஆண்டுகள் கழித்து இங்கே தமிழையே பார்க்க
முடியாது. தமிழைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலை
வரும். அன்றைக்கு ஆங்கிலத்தைப் படித்தால் தான் ஆங்கி
லேயர்களை எதிர்க்க முடியுமென்று கற்றவர்கள் ஆங்கிலத்தை
வளர்த்த காரணத்தால் இன்று ஆங்கிலம் வளர்ந்து
வளம் கண்டுவிட்டது.

இப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆரம்பிப்பதாக சொல்லியிருக்கிறார்
கள். அதனைப் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் ஒன்றைக்
குறிப்பிட விரும்புகிறேன். இப்போது ஆந்திரப் பிரதேசத்தைக்
எடுத்துக் கொண்டால் அவர்கள் மும்மொழித் திட்டத்தை ஏற்று
கொண்டிருக்கிறார்கள். அன்னிய மொழியான ஆங்கிலத்தையும்,
இந்திய நாட்டின் பெரும்பான்மை மக்கள் பேசுகிற மொழியான
இந்தியையும், தங்கள் மாநில மொழியையும் அவர்கள் ஏற்றுக்
கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் தமிழக அரசு
அதனைஅன்றுமுதல் எதிர்த்து வருகிறார்கள். முன்பு இங்கே இருந்
தவர்கள் சமஸ்கிருத மொழியில் இராமாயணப் பாடல்களை
எல்லாம் படித்தார்கள். அந்த மொழியில் புராண கதை
களை எல்லாம் கேட்டிருக்கிறார்கள். அந்த சமஸ்கிருத
மொழியிலிருந்து வந்த மொழி தான் இந்தி மொழி. ஆகவே
அந்த மொழியை கற்றுக் கொள்ள விரும்புபவர்களுக்கு உரிய
வாய்ப்பினை இந்த அரசு வழங்க வேண்டுமென்று கேட்டு என்
னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு இரா. சண்முகம்** : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கிற கல்வித் துறை மானியத்தின் மீது என்னுடைய
கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கல்விக்காக 1986–87 ஆம் ஆண்டில் ரூபாய் 551 கோடி
ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.
அது தமிழக அரசின் மொத்தச் செலவான ரூபாய் 2,451 கோடி
யில் 22 விழுக்காட்டுக்கும் அதிகமாகும் என்பதைப் பெருமை
யோடு சொல்லிக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–30)

551 கோடி ரூபாய் கல்விக்காக செலவழிப்பதிலே பெரும் பகுதி
யாக 451 கோடி ரூபாயை துவக்கப் பள்ளிக்கு ஒதுக்கியிருப்பது
உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஒன்றாகும். துவக்கப்பள்ளி
களை நாம் எந்த அளவிற்கு பராமரிக்கிறோமோ, அந்த அள
விற்குத்தான் மேலும் மேலும் படிக்கிற வாய்ப்புகளை பெற்ற
வர்களுக்கு அது மேலும் உதவுகிறது. 451 கோடி ரூபாயைச்
செலவு செய்து, துவக்கப் பள்ளியிலே படிக்கிற மாணவர்களுக்கு
அந்தக் கல்வியைச் சிறப்பாக அந்த மாணவர்கள் பெற்றுக்
கொள்கிற நிலையை நாம் ஏற்படுத்தித் தர வேண்டும். அந்த
வகையிலே புரட்சித் தலைவர் அவர்கள் ஆரம்பப் பாடசாலை
களிலே 1 முதல் 8 வகுப்பு வரையில் படிக்கின்றவர்
களுக்கும், 12வது வகுப்பு படிக்கிற மாணவர்களுக்கும் முறையாக
அவர்களுக்கு சத்துணவு கொடுத்து, அவர்களுக்கு இனாமாக
பாடப் புத்தகங்களைக் கொடுத்து, அவர்கள் உடுத்துவதற்கு
உடையை இனாமாகக் கொடுத்து, அவர்கள் முறையாக கல்
வியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு,
இப்படி பல கோடி ரூபாய்களை செலவு செய்து கொண்டிருக்
கிறார்கள். அந்த வகையிலே மாணவர்களுக்கு ஒழுங்காக
பள்ளிக் கூடங்களைக் கட்டித் தந்து, ஆரம்பப் பள்ளிக் கூடங்
களை முழுமையாகக் கட்டிக் கொடுத்ததற்குப் பின்னாலே,
இந்தக் கல்வித் துறை முறையாக அந்த மாணவர்களுக்கு
கல்வியைக் கற்றுக் கொடுக்கிறதா ? என்று எண்ணிப் பார்க்கிற
போது, முழுமையாக அந்த மாணவர்கள் கல்வித் திறமையைக்
கற்றுக் கொள்ள முடியவில்லை என்று தான் சொல்ல முடிகிறது.
காரணம் ஒரு மாணவன், அவன் எஸ்.எஸ்.எல்.சி.யாக இருந்
தாலும், அல்லது பிளஸ் 2 மாணவனாக இருந்தாலும், அல்லது
கல்லூரிப் படிப்பை முடித்த மாணவனாக இருந்தாலும், படித்து
விட்டு வெளியிலே வருகிறபோது, அவன் நாம் எந்தத் துறையை
மேற்கொள்வது, தான் பிழைப்பதற்கு எந்தப் பணியை மே[illegible]
கொண்டால் திறமையாகச் செய்ய முடியும் என்று அவனுக்கே
நம்பிக்கை இல்லாத ஒரு நிலையில் அவன் பட்டம் பெற்று,
அந்தப் பள்ளிக் கல்வியை முடித்துவிட்டு வெளியிலே வருகிற
நிலை இருக்கிறது என்பதை நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும்.
காரணம் ஆரம்பப் பள்ளியிலே அந்த மாணவர்கள் முழுமை
யான திறமையை, இளம் வயதிலேயே பெறக் கூடிய அறிவை,





ஒழுக்கத்தை, நற்பண்புகளை பெறத் தவறியிருந்த காரணத்
தால்தான், தாம் எந்தத் துறையை மேற்கொள்வது என்று
அவனால் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியாத நிலையிலேதான்
அந்தக் கல்வியை முடித்து விட்டு அவன் வெளியே வருகிறான்.
ஆரம்பப் பள்ளிகளிலே பணிபுரிகிற ஆசிரியப் பெருமக்களுக்கு
இந்த அரசு செய்திருக்கிற சாதனைகளைப் பற்றிச் சொல்லித்
தெரிய வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் கேட்கிற
அத்தனையையும் இந்த அரசு செய்து வந்தாலும், அவர்கள்
தங்களுடைய பணியை சிறப்பாக செய்து இந்த அரசு எதிர்
பார்க்கிற நல்லவர்களை, நல்ல குணம் உள்ளவர்களை, நல்ல
அறிவாளிகளை உருவாக்கித் தருகிறார்களா என்று பார்ப்போ
மானால், முழுமையாக இல்லை என்று தான் சொல்ல முடியும்,
காரணம் அறிவு உள்ளவர்களை, அறிஞர்களை, மருத்துவ
அதிகாரிகளை, எஞ்ஜினியர்களை வெளிநாடுகளில் உள்ள பல்
கலைக் கழகத்திலே உருவாக்குவதைப் போல, எஞ்ஜினியர்களை,
மருந்துவர்களை நாம் நாட்டிலேயேயும் உருவாக்கித் தரு
கிறார்கள், இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் எவ்
வளவு பேர்களை சிறந்த அறிஞர்களாக உருவாக்கித் தருகிறார்
கள் என்று எண்ணிப் பார்ப்போமானால், ஒரு வகுப்பிலே
50 மாணவர்கள் இருப்பார்களானால், அதிலே 2 பேர்கள்,
3 பேர்கள் தான் முதல் மதிப்பெண்ணை எடுக்கக் கூடிய வாய்ப்
பைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். அந்த 3 பேர்கள்,
4 பேர்கள் முழு முதல் மதிப்பெண்ணை எடுப்பவர்கள் கூட,
முழுமையாக ஆசிரியர்களுடைய தூண்டுதலினாலே, அவர்கள்
கற்றுக் கொடுத்த கல்வியினுடைய தரத்தினாலே, அவர்கள்
எடுத்ததாக சொல்ல முடியாது. ஆசிரியர்கள் மாணவர்களை
உருவாக்கி, நல்லவர்களை வெளியே அனுப்புகிறார்கள் என்று
சொன்னால், 50 மாணவர்களிலே, குறைந்தது 20 மாணவர்
களையாவது, அவர்கள் முதல் மதிப்பெண்களை எடுக்கக்கூடிய
வர்களாக உருவாக்கி அனுப்பினால்தான்அந்த ஆசிரியர்களுடைய
பணி அங்கே முழுமையாக்கப்பட்டு இருக்கிறது என்பதை
நாம் ஏற்றுக் கொள்ள முடியும். அந்த வகையிலே ஆசிரியர்
பெருமக்கள், ஆரம்பப் பாடசாலைகளிலே இருக்கிற,
பணிபுரிகிற ஆசிரியர்கள்—எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு
உறுப்பினர்கள் சொன்னதைப் போல ஒழுங்காக தங்களுடைய
கடமையை செய்யத் தவறி இருக்கிறார்கள். எனவே அவர்கள்
ஒழுங்காக பணியாற்றுவதற்கான வாய்ப்பை நாம் உருவாக்க
வேண்டும். அங்கே D.I. டி.இ.ஓ. ஏ.இ.ஓ. அதற்கு மேல் உள்ள
மாவட்டக் கல்வி அலுவலர், அதற்கும் மேலே உள்ள மாவட்ட
முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோர்கள் எல்லாம் ஆண்டுத்
தணிக்கையை 3 மாதத்திற்கு அல்லது 5 மாதத்திற்கு ஒரு முறை
அந்தப் பள்ளிக் கூடத்திற்குப்போய் தணிக்கைச் செய்
தால் நான்றாக இருக்கும். அப்படி தணிக்கைச் செய்கிற
போது அந்த ஆசிரியர்கள் தாங்கள் எடுக்கிற அந்தப் பாடங்
களைப் படித்து, குறிப்புகள் தயார் செய்து இருக்கிறார்களா

எய்டுகளைப் பயன்படுத்துகிறார்களா ? எய்டுகளைப் போட்டு
வைத்திருக்கிறார்களா ? அப்படி எய்டுகளைப் பயன்படுத்த
வில்லை என்றால் என்ன காரணம் என்பதையும், அல்லது அவர்
கள் குறிப்புகளை எழுதுகிற அந்த நோட்ஸ், அதை எழுதி
யிருக்கிறார்களா ? என்று பார்ப்பதை படிப்படியாக நிறுத்திக்
கொண்டு இருக்கிறார்கள். அப்படிப் பார்ப்பதை அறவே
விட்டு விட்டார்கள் என்று தான் சொல்லவேண்டும். அப்படி
இவைகளைப் பார்ப்பதாலே, தணிக்கை செய்ய ஏ.இ.ஓ.
சி.இ.ஓ. வருகிற நேரத்திலே, ஆசிரியர்கள் இதைக் காண்
பிக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டு,
அவர்களும் அவற்றைப் படித்து, ஒய்வாக இருக்கிற நேரத்திலே
அந்த நோட்ஸ் ஆப் லெசன்சை எழுதுவார்களானால், அதனால்
பெறுகிற அந்த அனுபவத்தோடு சொந்த அனுபவத்தையும்
வைத்து, மாணவர்களுக்கு நல்ல கல்வியைக் கற்றுத் தருகிற
நிலை ஏற்பட்டு இருக்கும்.

ஆனால் ஆசிரியர்களாக இருப்பவர்கள் சொல்கிறார்கள்
எந்த வேலையும் கிடைக்கவில்லை, அதற்குப் பின்வாலேதான்
ஆசிரியராக வருகிறோம்என்று இதை எப்படி நான்சொல்கிறேன்
என்று சொன்னால், ஆசிரியர் பணியிலே இருக்கின்ற ஆசிரியர்
களுக்கு என்று விழாவினை வைத்திருக்கின்றபோது அதிலே நாம்
பார்க்கிறபோது ஆசிரியர்கள் தங்களை மக்கள் மதிப்பதில்லை
என்ற கூற்றை ஒவ்வொருவரும் பேசுகிறபோது, ஆசிரியப் பெரு
மக்களே ஆசிரிய தின விழாவிலே பேசுகிற அவலநிலையை நாம்
பார்க்க முடிகிறது. காரணம் இப்போது மக்கள் மத்தியிலே
ஆசிரியர்களுக்கு செல்வாக்கு வரும் என்று சொன்னால் தாம்
ஏற்றிருக்கின்ற பணிகளுக்கு அவர்கள் ஒப்ப, பெற்றெடுத்த
தாய் தந்தையர்கள் ஒன்றும் அறியாத குழந்தைகளை அந்த
ஆசிரியரிடத்திலே ஒப்படைக்கிறபோது அந்த ஆசிரியர்கள் அந்த
குழந்தைகளுக்கு முழுமையான கல்வி அறிவைக் கொடுத்து
வருங்கால வாழ்க்கையை அவர்கள் முறையாகச் செய்வதற்கான
வாய்ப்பினை அந்த ஆசிரியர்கள் உருவாக்கித் தருவார்களேயா
னால் அப்போது மக்கள் அந்த ஆசிரியரை தெய்வமாக கருது
வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். ஆனால் ஆசிரியர்கள் 10
மணிக்கு அல்லது11 மணிக்குப் போவதும், தலைமையாசிரியரிடத்
திலே சொல்லிவிட்டு 2 மணிக்கெல்லாம் திரும்பிவந்து துணைத்
தொழிலை மேற்கொள்கிற ஒரு அவல நிலை அதிகமாக இருக்
கிறது என்று கூட இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கின்றேன். இருந்தாலும் இவைகளைப் போக்கு
வதற்கு அதைக் கண்காணிக்கின்ற அதிகாரிகள் முறையாகச்
செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் இதைக் கோடிட்டுக்
காண்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே ஆணித்
தரமாக நல்ல முறையிலே 5 முதல் 16, 18 வயதுவரையிலும்
உள்ள மாணவர்களை நாம் எப்படி நடைமுறைப்படுத்துகி



றோமோ அந்த வழியிலே அந்த மாணவர்கள் வருங்காலத்திலே
இந்தத் துறை பிடிக்கிறது என்று திறமையாக வருவதற்கு ஒரு
வாய்ப்பு பெற்றவர்களாக ஆகிறார்கள். அந்த வாய்ப்பை நாம்
வீணாக்காமல் முறையாக கல்வியை கற்றுக்கொடுத்து, தேகப்
பயிற்சியையும் அவர்களுக்கு கற்றுக் கொடுத்து, தொழில் கல்வி
யையும் கற்றுக் கொடுத்து, அவர்கள் வெளியிலே வருகிறபோது
வேலை கிடைக்கவில்லை என்பதை சொன்னாலும், தான்
கற்ற பள்ளியிலே தினமும் ஒரு வேலையைச் செய்து அதன்
மூலம் தினம் ரூபாய் 10 சம்பாதிக்கக்கூடிய திறமை என்னிடத்
திலே இருக்கிறது என்ற உணர்வோடு அந்த மாணவன் அந்தப்
பள்ளியிலே இருந்து வெளிவர வேண்டும். அதற்காகத்தான்
புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தொழில் கல்வியைக்
கொண்டுவந்து அந்தக் கல்வியை முறையாக மாணவர்களுக்குக்
கற்றுத் தந்து அந்தத் தொழிலை தெளிவாக தெரிந்திருப்பா
னேயானால் வெளியிலே வந்தாலும்கூட இந்த அரசு செய்கிற
உதவிப் பணத்தைப் பெற்று இந்தத் தொழிலைச் செய்து அதன்
மூலமாக வரக்கூடிய லாபத்தைப் பெற்று கடனுக்காக கட்ட
முடியும் என்ற நம்பிக்கையாகிலும் இருக்கும்.

என்னிடத்திலே ஒரு 10 நாட்களுக்கு முன்னாலே
சிவில் எஞ்ஜினியரிங் படித்து முதல் வகுப்பிலே தேறிய மாணவன்
நான்கு ஆண்டுகளாக எனக்கு வேலை கிடைக்கவில்லை என்று
என்னிடத்திலே வந்து கேட்டார். நான் சொன்னேன்,
அரசுத் தரப்பிலே 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள் அதைப்
பெற்று நீங்கள் ஏதாவது தொழில் துவங்குவதுதானே என்று
சொன்னால் அவர் பேசாமல் நிற்கிறார். காரணம், தான்
படித்த படிப்பில் தான் அந்தத் தொழிலை மேற்கொண்டு நடத்த
முடியுமா என்ற அய்யப்பாடு உள்ளத்திலே இருக்கிறது என்
பதைத்தான் தெளிவுபடுத்துகிறதேயொழிய, அப்படியில்லை
யென்றால், ஏதாவது வேலை எந்த அலுவலகத்திலாவது, எந்தத்
தொழிற்சாலையிலாவது நாம் போய் விடுவோமேயானால் அவர்
கள் கொடுக்கிற அந்தப் பணத்தைக் கொண்டு தான் தொழிலை
அங்கே போய் கற்றுக்கொண்டு அதற்குப் பின்னாலே வேண்டு
மானால் பார்க்கலாம் என்ற எண்ணம் படைத்த மாணவர்கள்,
வெளியிலே இருக்கிற காரணத்தால்தான் அந்த மாணவர்களுக்கு
முழுமையான திறமையை வளர்த்து வெளியிலே அனுப்பாமல்
இருக்கின்ற காரணத்தால் அந்த மாணவர்கள் வேலை இல்லை
என்ற திண்டாட்டத்தை நினைத்து அல்லலுறுகின்றார்கள் என்
பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்
றேன். அவைகளையெல்லாம் நிவர்த்தி செய்து தரவேண்டும்.
அதற்காக அந்த தணிக்கை செய்கிற அதிகாரிகள் முறையாக
தங்களுடைய கடமைகளை ஆற்றவேண்டுமென்று நான் இந்த
நேரத்திலே சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. இரா. சண்முகம்] [1986 ஏப்ரல் 18

(முற்பகல் 11-40).

இந்த டி.ஐ. அவர்கள் எல்லாம் போகிறபோது பள்ளிக்கூடத்
திலே கல்வித் தரப்பிலே என்னென்ன செய்திருக்கிறார்கள் என்று
பார்க்காமல் சத்துணவுக் கூடத்திற்கு போய் பார்த்துவிட்டு
அதிலே கையொப்பம் போட்டுவிட்டு வந்து விடுகிறார்கள். எப்
படியோ ஒரு ஆண்டுக்கு 2 முறையாகிலும் பள்ளிக்கூடங்களுக்குப்
போய் தணிக்கை செய்தாகவேண்டும். அப்படி செய்ய முடி
யாமல் போய்விடுகிற நிலை இருக்கிறது. நான் பள்ளித் துணை
ஆய்வாளரை அழைத்து கேட்டால், எனக்கு சத்துணவுக் கூடங்
களைப் போய் பார்ப்பதானால், பள்ளிக்கூடங்களைப் போய்
பார்ப்பதற்கான வாய்ப்பு இல்லை. எனக்கு அதிகமான பள்ளிக்
கூடங்கள் இருக்கின்றன. ஒரு ஆண்டுக்கு, ஒரு நாளைக்கு — ஒரு
பள்ளிக்கூடம் போனாலும்கூட அதற்குப் பின்னாலே பள்ளிக்
கூடங்கள் இன்னும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் எங்க
ளால் தணிக்கை செய்ய முடியவில்லை என்ற கூற்றை அவர்கள்
தெரிவித்தார்கள்.

ஆகவே, அந்த நிலை மாறி பள்ளித் தணிக்கை
ஆய்வாளர்களை இன்னும், 50 பள்ளிக்கூடத்திற்கு ஒருவரும்
அல்லது 100 பள்ளிகளுக்கு ஒரு தணிக்கை ஆய்வாளரையோ
போட்டு அவர்கள் 4 மாதங்களுக்கு ஒரு முறை அல்லது 3 மாதங்
களுக்கு ஒரு முறை, அவசியமாக அவைகளைத் தணிக்கை செய்
கிற நிலை இருக்கவேண்டும். அந்த மாணவர்களுக்கு முறையாக
கல்வி போதிக்கப்படுகிறதா என்ற முறையை நீங்கள் அனுசரிக்க
வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.
அதுமட்டுமல்லாமல் துணை ஆய்வாளர்களெல்லாம் 10 ஆண்டு,
20 ஆண்டுக் காலமாக பள்ளித் துணை ஆய்வாளர்களாக இருப்பவர்
கள், அதே தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால்,
உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிகிற பி.டி. படித்த ஆசிரியர்
கள் இருக்கிறார்கள். அவர்களும்கூட, 2 ஆண்டுக் காலம் 3 ஆண்டுக்
காலம் டி.ஐ. பணியை, ஏ.இ.ஓ. பணியை மேற்கொள்ளவேண்டு
மென்று கட்டாயமாக்கப்படவேண்டும். ஒரு துறைக்கு ஏ.இ.ஓ.,
டி.இ.ஓ. வந்துவிடுவார்களேயானால் அவர்கள் அவசியம் அந்தத்
துறையிலிருந்து போவதற்கு மறுக்கிறார்கள். ஏனென்று சொன்
னால், வேலைப் பளு குறைவாக இருக்கிறது. அந்த வேலையைச்
செய்தால் நலமாக இருக்கும் என்று எண்ணி அவர்களைத்
தொடர்ந்து நீடிக்கிற நிலையை நீங்கள் போக்கிவிட்டு அவசிய
மாக ஒவ்வொரு ஆசிரியரும் இந்தத் தொழிலில் வந்ததற்குப்
பின்னாலே அவர்கள் பதவி உயர்வு பெறவேண்டும் என்று இந்த
நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். மருத்துவத் துறையில்
தேர்ந்தெடுக்கின்ற மாணவர்களை முதல் வகுப்பு பெற்ற அதிக
மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்களை தேர்ந்தெடுக்கிறோம்.
இன்ஜினியரிங்க்கு போவது என்றாலும் அதே நிலைதான். மற்ற
பெரிய துறைகளில் தேர்ந்தெடுக்கும் போதும் அதிக மதிப்பெண்



1986 ஏப்ரல் 18] [திரு. இரா. சண்முகம்]

களை பெற்றவர்களை தேர்ந்தெடுக்கிறோம். அதே போன்ற
நிலையை விட இன்னும் உன்னதமான நிலையை ஆசிரியர்கள்
பணிக்கு தேர்ந்தெடுக்கும் போது நாம் முதல் மார்க் அதிக மார்க்
பெற்றவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். அவர்களுக்கு மற்ற துறையில் பெறுகிற சம்பளத்தை
விட அதிகமாக 100 ரூபாய், 150 ரூபாய் தரத்திற்கு ஏற்றாற்
போல் செகண்டரி கிரேடு ஆசிரியராக இருந்தால் அந்த தரத்தில்
மற்ற துறைகளில் பணியாற்றுகிறவர்களைவிட அதிகமாக 150
ரூபாய் சிறப்பு ஊதியமாக கொடுக்கவேண்டும். பி. எட்டாக
இருந்தால், 200 ரூபாயும், பி.ஜி. அசிஸ்டெண்டாக இருந்தால்
300 ரூபாய் 400 ரூபாய் இதே தரத்தில் மற்ற துறைகளில் பணி
ஆற்றுகிறவர்களை விட அதிகமான சம்பளத்தைக் கொடுப்போம்.
ஆனால், அப்படிப்பட்ட தரமான ஆசிரியர்களை நாம் பெற்றுத்
தந்து அந்த அடிப்படையில் முறையாக மாணவர்களுக்கு கல்வியை
கற்றுத்தந்து விடுவோம் ஆனால், அடுத்து மேற்படிப்புக்கு போகிற
மாணவர்களுக்கு படிபபதற்கு சிறந்ததாக இந்த நாட்டுக்கு
உகந்ததாக இந்த நாட்டில் நாம் என்ன நினைத்துக்கொண்டு
இந்தக் கல்விக்கு செலவு செய்து கொண்டு இருக்கிறோமோ
அந்த நிலையை அடைகின்ற நிலையை நாம் அடையமுடியும்.

அடுத்து வயது வந்தோர் கல்வி. இங்கே முறைசாராகல்விக்கு
என்று தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை இடங்களிலும் 100
மையங்களை ஏற்படுத்தித் தந்து படிப்பு அறிவை கற்றுத் தருகிற
நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த நிலை நல்ல நிலை
தான். யூகிக்கிற சக்தி, அறிவை திறமையாக பெறுகிற வயதுவந்த
வர்கள் இருந்தால், இடையில் பள்ளிக்கூடங்களிலிருந்து நின்று
விட்டவர்கள் இருந்தாலும் அவர்களுக்கு ஒரு நல்ல திறமையான
அறிவை யூகிக்கக்கூடிய சக்தியை பெறக்கூடிய இந்த நிலையை
உருவாக்கி இருக்கிற இந்த அரசுக்கு நான் பாராட்டைத் தெரி
வித்துக் கொள்கிறேன். அங்கே ஒரு வகுப்பில் 80 மாணவர்கள்,
85 மாணவர்கள் என்று இருக்கிறார்கள். அங்கே அந்தத் தலைமை
ஆசிரியரிடம் போய் இடம் கேட்கும்போது அவர் சேர்க்க
முடியாது என்று மாணவனிடம் சொன்னால் சேர்க்க முடியாது
என்று சொல்ல முடியாது. டி.இ.ஓ. சொல்லுகிறார் சேர்க்க
முடியுமா இல்லையா என்று சொல்லி போய் பாருங்கள் என்று
சொல்லுகிறார்கள். 80 பேரை ஒரு வகுப்பில் வைத்துக்கொண்டு
45 நிமிடங்கள் என்று ஒரு பீரியடுக்கு பாடம் எடுத்தால் ஒரு
மாணவனுக்கு ஒரு நிமிடம் கூட ஒதுக்க முடியாத நிலை இருப்ப
தால் எப்படி அந்த மாணவனுக்கு அந்த ஆசிரியர் முறையாக
கற்றுத் தந்து பரிசோதனை செய்ய முடியும். அந்த மாணவன்
என்ன தெரிந்து கொண்டான் என்று கூட ஒரு கேள்வி கேட்டு
பதில் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, ஒரு வகுப்பில்
40 மாணவர்களுக்கு மேல் இல்லாமல் நாம் ஏற்பாடு செய்துத்தர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசு 775 ஆசிரியர்களை புதிதாக இந்த ஆண்டு நியமனம் செய்யப் போவதாக அறிவித்து இருக்கிறது. அதற்காக நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களை அந்த அலுவலகத்தில் இருக்கிற அன்றாட தபால்களை பிரித்து எழுதி அதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடிய வேலையை முழு நேர பணிக்கு அமர்த்திக் கொள்கிறார்கள். எப்படியும் மேல்நிலைப் பள்ளியில் 4 ஆசிரியர்கள் பணியாற்றி ஆக வேண்டும். அந்த அளவுக்குப் பணி மேல்நிலைப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும் இருக்கின்றன. அதே போல் தலைமை ஆசிரியர் அவர் ஏற்று இருக்கிற ஒரு பீரியடு அதாவது ஆங்கிலம் அல்லது வேறு ஏதாவது ஒரு பாடத்தை அவர் போய் கற்றுத் தந்து ஆகவேண்டும். அதே நேரத்தில் மற்ற ஆசிரியர்கள் எப்படி பணியாற்றுகிறார்கள் என்பதையும் அவர் போய் மேற்பார்வை செய்ய வேண்டிய பணியில் தவறி விடுகிறார். ஆகவே, இன்னும் 4 ஆசிரியர்களை அந்த எழுத்தர் பணியில் வைத்துக் கொண்டால் 1 ஆயிரம் 2 ஆயிரம் மாணவர்கள் இருக்கக் கூடிய பள்ளிகளில் மாணவர்களுக்கு பாடம் கற்றுத் தரக்கூடிய சூழ்நிலை இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட பள்ளிகளில் மேலும் 2, 3 பேரை எழுத்தர்களாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி செய்தால் ஆசிரியர்கள் முறையாக அந்த பாடங்களை கற்றுத்தர முடியும். இப்படி இல்லை என்றால் ஒரு ஆண்டு காலம் மாணவனுக்கு ஒரு சப்ஜெக்டில் பாடமே நடத்த வில்லை என்றால் அடுத்த ஆண்டு அவன் மேல் வகுப்புக்கு மாற்றப்படும் போது அங்கே அதற்கு மேல் நடத்தும் பாடத்தை புரிந்து கொள்ளக்கூடிய நிலை அந்த மாணவனுக்கு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, அந்த நிலையை போக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக எ.ஈ.ஒ. அலுவலகத்திற்கு தொடர்ந்து ஒரு பள்ளியிலிருந்து 2 ஆசிரியர்கள், 3 ஆசிரியர்கள் என்ற அளவில் போய்விடுகிறார்கள். தலைமை ஆசிரியர், துணை தலைமை ஆசிரியர் தான் அந்த ஆசிரியர்களின் பணிகளையும் ஆண்டுதோறும் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த நிலையில் எப்படி தலைமை ஆசிரியரும், துணை தலைமை ஆசிரியரும், மற்ற ஆசிரியர்களும் அந்த பள்ளியிலிருந்து எப்படி பணியாற்றுவார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த நிலையை மாற்றி எ.இ.ஒ. அலுவலகத்தில் எழுத்தர்களை அதிக அளவில் நியமிக்க வேண்டும். எ.இ.ஒ. அலுவலகத்தில் உள்ள எழுத்தர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணிப்பில் தான் போடப்படுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அங்கே இருக்கிற எ.இ.ஒ. எதைச் சொன்னாலும் அவர் செய்ய மறுக்கிறார். அவருக்கும் சரியாக பணி செய்ய தெரியவில்லை. கேட்டால் உங்கள் கண்டிரோலில், கல்வி இலாக்கா கண்டிரோலில் நான் இல்லை, மாவட்ட





ஆட்சித் தலைவர் கண்டிரோலில் தான் இருக்கிறேன் என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, அதை மாற்றி அந்த கல்வி இலாக்காவிலிருந்து அந்த எழுத்தர்களை போட வேண்டும். அப்போது தான் மேல் அதிகாரிகள் கேட்டால் அடங்கி பதில் சொல்லுவார்கள். நன்றாக வேலை செய்கிற வாய்ப்பு இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் தேவஸ்தானத்தின் மூலமாக நடைபெறுகிற கலைக் கல்லூரியில் அங்கே அந்த மாணவர்களுக்கு பி.ஜி. படிக்கிற மாணவர்களுக்கு எம். எஸ். சி., பி.எஸ்.சி. மேக்ஸ் தான் இருக்கிறது. ஆகவே, பி.எஸ்.சி. பௌதீகம், ரசாயனம் போன்ற துறைகளை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராமப் பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கே வாழக்கூடிய குழந்தைகள் செலவு இல்லாமல் அங்கே படிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே அதை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல, கடைசியாக நமது நண்பர் சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கூடலூர் கல்வி மாவட்டத்தை இரண்டாக பிரிக்க வேண்டும் என்றும், சிதம்பரத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு கல்வி மாவட்டத்தை துவக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அங்கே அந்த இடத்தில் ஏறக்குறைய 70 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், நூற்றுக்கணக்கான துவக்கப் பள்ளிகளும் இருக்கின்ற காரணத்தினால், அந்தக் கல்வி மாவட்டத்தை தனியாகப் பிரித்துக் கொடுக்கவேண்டும். சிதம்பரம் அரசினர் கலைக் கல்லூரியில் பி.எஸ்.சி. விஞ்ஞானம், பௌதீகம் இல்லாத காரணத்தினால், அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, கல்வி மானியத்தை வரவேற்று, பேசுவதற்கு வாய்ப்புத் தந்த மாற்றுத் தலைவருக்கு நன்றிகூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற 17-வது எண் கல்வி மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு அரசியல் இயக்கங்கள், வருகின்ற ஒரு தலைமுறைக்கு வர இருக்கின்ற சில சோதனைகளை, இன்னல்களை வெளியே சொன்னால் அந்த அரசியல் இயக்கங்களுக்கு வேதனை வருமே என்று வெளியே சொல்லாமல் இருந்தாலும், அவைகளை நான் இங்கே சுட்டிக் காட்டுவது எனது கடமை என்று கருதுகிறேன்.

130476

ஆசிரியர் பணி என்பது தெய்வத்திற்கு ஈடான பணியாக தொன்றுதொட்டு தமிழகத்தில் கருதப்படுகிறது. ஆகவே, நான் ஆசிரியர்களை, தாய்தந்தைக்கு அடுத்தபடியாக வைத்து, நாம் போற்றி, பாராட்டிக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட ஆசிரியர் பெருமக்களால் உருவாக்கப்பட்ட மாணவன் நான் என்ற காரணத்தினால், அந்த ஆசிரியர்கள் மீது எனக்கு மரியாதை உண்டு, மதிப்பு உண்டு, அவர்கள் பால் நன்றி உணர்வு எனக்கு உண்டு. ஆனால், இன்றைக்கு தமிழகத்தில் ஆசிரியர்கள் போராடுகிறபோது, தமிழகத்தில் அதன் காரணமாக பல நாட்கள், பல வாரங்கள் கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருந்ததை எண்ணிப் பார்க்கிறபோது, தமிழகத்தின் கல்வி நிலையும் அதனுடைய மாண்பும், பண்பும் குறைபட்டு எங்கேயோ செல்கிறது என்ற சந்தேகம் நமக்கு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும்கூட, பல்வேறு அரசியல் இயக்கங்களைச் சார்ந்தவர்களும் கூட, மனந்திறந்து பேச முடியாத சூழ்நிலை கல்வித்துறை நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கிறது என்று இந்து முன்னணி பேரியக்கம் இன்று கருதுகிறது. தொடக்கப்பள்ளி என்பது பள்ளிப் படிப்பின் அடிப்படையாக இருக்கிற அஸ்திவாரக் கல்லாக இருந்து வருகிறது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் 100-க்கு 60 நாட்கள் பள்ளிகளுக்கு வருவது இல்லை. 100-க்கு 60 பள்ளிகள் திறக்கப்படாமல் இருக்கின்றன என்று பாவலாகப் பேசப்படுவது மட்டுமல்ல. இதை இன்றைக்கு கிராமப்புற மக்கள் அனுபவபூர்வமாக கண்டுகொண்டும் இருக்கிறார்கள். சுட்டிக்காட்ட திராணி இல்லாமல்,—சுட்டிக் காட்டினால் பிரச்சனை வருமோ என்ற அச்சத்தின் காரணமாக இன்றைய தினம் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படாமல் குறைபாடுகள் வளர்ந்துகொண்டே போகின்றன என்ற நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. ஆகவே, ஆசிரிய பெருமக்களுடைய செயல்பாட்டிலே இருக்கிற குறைகளைச் சுட்டிக் காட்டுவது ஒரு சமுதாயத்தினுடைய வருங்காலப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பயன்பட வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் பொறுப்புணர்வோடு ஒரு சிலவற்றை சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஏனென்று சொன்னால், நான் சார்ந்திருக்கின்ற இயக்கம் அரசியல் சார்பற்றது என்பதாலும், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு நின்று, எல்லோருடைய குறைபாடுகளையும் சொல்வதற்கு இந்த இயக்கம் தயாராக இருக்கின்ற காரணத்தாலும், இதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு பல்வேறு மனக் குறைகள் கோரிக்கைகள் இருக்கின்றன. அவர்களுக்கென்று சங்கம் எதுவும் இல்லை என்ற காரணத்தினால், அவர்களுக்கு போராட அனுமதி இல்லை. அவர்களுடைய மனக்குறைகளைத் தெரிவிக்க





வாய்ப்புகள் இல்லாமல் இருக்கிறது. ஏன் அனுமதி இல்லையெனில் முன்மாதிரியாக இருக்க வேண்டியவர்கள் போராடினால் அதன் காரணமாகப் பலமோசமான முன்னுதாரணங்கள் உருவாகிவிடும் என்பதுதான். ஆனால் தெய்வத்திற்கு இணையாக வைத்துப் போற்றப்படுகின்ற ஆசிரியர்கள், ஊர்வலங்கள், பேரணி, பொதுக் கூட்டங்கள் என்று அறிவித்து, இவைகளை நடத்திக் கொண்டிருக்கின்ற ஒரு மோசமான முன்னுதாரணத்தை தமிழகத்தில் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அது வருங்காலத்தில் நீங்காத களங்கமாக, கறையாக மாறிப்போகும் என்பதனை அரசாங்கமும், ஆசிரியர் சமுதாயமும் நினைவு கூறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் கல்விப்பணி என்பது புனிதமான பணி. அது களங்கப்பட்டுவிடக்கூடாது என்பதுதான். அவர்களுக்கு ஆயிரம் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கக் கூடும். அதே நேரத்தில் இந்தப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டாமல் அவைகளை வெளிச்சம் போட்டுக் காட்டாமல், அவர்களுக்கு நிவாரணம் கேட்பது இயலாதுதான் என்பதை மறுக்கமுடியாது. ஆனால் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி, கோரிக்கைகளை வற்புறுத்தி நியாயம் பெறுவதற்கு அவர்கள் வேறு சில துறைகளைச் சார்ந்தவர்களைப் போன்று அரசியல் இயக்கத்தைச் சார்ந்தவர்களைப் போன்று போராட்டம் என்று வருவது தமிழகத்தினுடைய பெருமைக்கு இழுக்காக அது அமையும் என்பதை நான் தங்கள் மூலம் இந்தப் பேரவைக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமான் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு போக்குவரத்து வாரியத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அவர்களும் ஊழியர்கள் தான். அவர்கள் போராட்டம் நடத்துவார்கள் அவர்கள் போராட்டம் மூலம் அவர்களது கோரிக்கையைச் சுட்டிக்காட்டுவது இயல்புதான். ஏனென்றால் அவர்கள் இந்த சமுதாயத்திற்கு முன்னுதாரணமாக இருக்கவேண்டிய கட்டாயம் அவர்களுக்கில்லை. (They are not engaged in the divine task of creating the future generation) ஆனால் அவர்களைப் போல் கல்வித் துறையில் இருக்கின்ற ஆசிரியர்களும், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துவதைப்போல நாங்களும் நடத்துவோம் என்று சொல்வதுபோல் செய்வார்களேயானால், அது தமிழகத்திற்கு முன்னுதாரணமாக இருக்கவேண்டிய அவர்கள் களங்கப்பட்ட கசப்பான முன்னுதாரணத்தை உருவாக்கி விட்டதாக அமையும். அப்படிச் செய்வது நியாயமாக இருக்காது. அப்படி செய்வதையும், அப்படி செய்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதும் கூட நியாயமாகக் கருத முடியாது.

[திரு. வை. பாலச்சந்திரன்] [1986 ஏப்ரல் 18

(முற்பகல் 11-50)

அது இன்றைய மாணவர்களையும் ஒரு காலத்திலே மாணவர்களாக இருந்து கற்றறிந்தவர்களாக படித்தவர்களாக இருக்கக்கூடியவர்களையும் தலைகுனிய வைக்கிற சூழ் நிலையை ஏற்படுத்திவிடும். தொடக்கப் பள்ளிகளி.. பணிகள் இன்றைக்கு சிறப்பாகவும் இல்லை, செம்மையாகவும் இல்லை என்பதுதான் கிராமப்புற மக்களின் கசப்பான அனுபவமாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே துவக்கப் பள்ளிகளின் பணிகளை சீரமைக்கவேண்டிய கட்டாயம் காலத்தின் கட்டாயமாக இன்றைக்கு மாறியிருக்கிறது. தொடக்கப் பள்ளிகளிலே நடக்கிற சீர்கேடுகளையும் ஒருசில ஆசிரியர் களின் செயல்பாட்டில் உள்ள சில குறைகளையும் கண்டறிந்து அவைகளைக் களைவதற்கு வருங்காலத் தலைமுறைகளின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு நம்முடைய அரசாங்கம் அதற்காக ஒரு கமிஷனை நியமிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தொடக்கப் பள்ளிகளின் பணிகளிலே உள்ள குறைகளைப் போக்குவதற்காக ஒரு கமிஷன் நியமித்து அதன்மூலமாக அந்தக் குறைபாடுகளைக் கண்டறிந்து அவைகளைக் களை யாமல் போனால் தொடக்கப்பள்ளி நிலையிலே உள்ள கல்வி பாழ்பட்டுப் போனால் அதற்கு மேலே எவ்வளவு தான் பளபளப் பாக நாம் மேல் படிப்பு கட்டடம் எழுப்பினாலும் அது தகுந்த பலனைத் தராமல் போய்விடும். ஆகவே அரசு அதற்காக ஒரு கமிஷனை நியமிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எல்லா அரசு ஊழியர்களுக்கும் இட மாற்றம் வேலைமாற்றம் உண்டு. ஆனால் ஆசிரியப் பெருமக்கள் பிறந்த இடத்திலேயே தொடர்ந்து பல ஆண்டுகள் பணி யாற்றுகிற பெருமை பெற்றவர்களாக வாய்ப்பைப் பெற்ற வர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வசதியாக இருக்கவேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அதே இடத்திலே தொடர்ந்து பல ஆண்டுகள் ஆசிரியர்கள் பணியாற்றுவதால் பல இடர்பாடுகள் பிரச் சினைகள் உருவாகின்றன. கர்நாடக மாநிலத்திலே திரு. ஹெக்டே அவர்கள் ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறார். ஒரு ஆசிரியர் பிறந்த சொந்த தாலுகாவிலோ, வட்டத்திலோ பணியாற்றக்கூடாது என்று ஆணை பிறப்பித்திருக்கிறார். குறைந்த பட்சம் அந்த மாதிரியான ஆணையை நாம் நம்முடைய மாநிலத்திலே பிறப்பிக்கவேண்டும். ஆசிரியர்கள் குறைகளைச்



1986 ஏப்ரல் 18] [திரு. வை. பாலச்சந்திரன்]

சொல்கிற நேரத்திலே சமுதாயத்திலே இருக்கிற குறைகளைச் சுட்டிக்காட்டாவிட்டால் வருகிற தலைமுறைகள் பாழ்பட்டுப் போகும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நாம் புதிய கல்விக் கொள்கையைப் அடிப்படை யாகக் கொண்டு பல கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக் கிறோம். இந்திய நாட்டினுடைய பொருளாதாரமே வேளாண் மையை அடிப்படையாகக் கொண்டதுதான் என்பதை எல் லோரும் அறிவோம். இந்தியத் திருநாட்டில் 80 சதவீதத் திற்கு மேற்பட்ட மக்கள் விவசாயத்தைத் தொழிலாக வைத்து அதன் மூலமாக தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கும் விவசாயிகள்தான். நம்முடைய மாநிலத்திலே இருக்கிற எந்தப் பள்ளியிலும் இப்போது வேளாண்மை பற்றிய கல்வி எஸ்.எஸ்.எல்.சி வரை உள்ள பாடத்தில் இல்லாமல் இருக்கிறது. தன்னுடைய வாழ்க்கையோடு சேர்ந்து வருகிற விவசாயத்தை தினம் தினம் கழனிக்குச் சென்று வருகிற விவசாயியின் மகனான மாணவன் விவசாயத்தை ஒழுங்காகப் படித்துக் கொள்கிற அளவுக்கு வேளாண்மையைப்பற்றி நம்மு டைய மாநிலத்திலே கற்றுக்கொடுக்கிற நிலைமை வர வேண்டும், என்பது என்னுடைய வேண்டுகோள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கல்வித்திட்டத்தைப் பார்க்கிறபோது எது எது மனிதனுக்குத் தேவையில்லையென்று சொல்லப்படுகிறதோ அதையெல்லாம் சொல்லிக்கொடுப்பதிலே ஆர்வம் காட்டுகிற நாம், எது எது தேவையோ அதைச் சொல்லிக்கொடுப் பதிலே ஆர்வம் காட்டுவதில்லை. குறிப்பாகச் சொல்லப் போனால் நான் சாலையிலே சென்று கொண்டிருக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். என் கண் எதிரில் ஒருவன் ஒருவரைக் கொலை செய்கிறான்; அவன் சட்டப்படி பிடிக்கப் படக் கூடிய குற்றத்தைச் செய்கிறான். ஆகவே அதைக் கண்டவுடன் நான் அருகில் இருக்கிற காவல் நிலையத்திற்குச் சென்று இன்ன பெயர் உள்ள ஒருவன், இந்த இடத்திலே இத்தனை மணிக்கு இன்னாரைக் கொலை செய்துவிட்டான் என்று தகவல் கொடுக்கவேண்டும். That is a mandatory obligation அப்படி அந்தக் காவல் நிலையத்திற்கு நான் தகவலைக் கொடுக்காவிட்டால் காவல் நிலையத்தில் தகவல் கொடுக்க வில்லை என்று என் மீது வழக்கு பதிவு செய்யப்படலாம். அந்தச் சட்டப்பிரிவை நாம் அறிந்திருக்கவேண்டுமென்று சட்டம் கருதுகிறது. ஆகவே நாம் அறிந்து இருக்கவேண்டு மென்று சட்டம் எதை எதைக் கருதுகிறதோ அதைக்கூட குறைந்தபட்ச அளவுக்காவது பள்ளிக்கூட அளவில் கற்றுக் கொடுப்பதற்கு நாம் இதுவரை முன்வரவில்லை. அதைப் போல காவல்நிலையத்தாலே பல பேர்கள் கைது செய்யப் படுகிறார்கள். ஒருவரைக் கைதுசெய்தால் 24 மணிநேரத்

[திரு. வை. பாலச்சந்திரன்] [1986 ஏப்ரல் 18

திற்குள்ளாக—காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்படும் நேரமும் சேர்த்து அந்த நேரத்திற்குள்ளாக — கொண்டுவரப்படவேண்டுமென்பது ஜீவாராத உரிமை. இது எந்த குடிமகனுக்கும் தெரியாது ; ஏனெனில் படித்துக் கொடுக்கப்படுவதில்லை. அதுபோல அந்தக் காவல் நிலையத்தில் ஒருவர் உதைக்கப்பட்டால் முதன் முதலாக நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்படுகிறபோதே நீதிமன்றத்திலே என்னை இந்த காவல்நிலையத்திலே வைத்து இந்த, இந்த காவலர்கள் இந்த இந்த தலைமைக் காவலர்கள், இந்த இந்த உதவி ஆய்வாளர், உதைத்தார்கள் என்று நீதிபதியிடம் சொல்லாமல் போனால் அதற்குப்பிறகு ஒன்றும் செய்யமுடியாது. முதன் முறையாக சொல்லவேண்டிய இடத்திலே சொல்லாவிட்டால் அதன் பி கு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவும் முடியாது ; எதுவும் செய்யவும் முடியாது. மனிதன் எதை அறிந்து இருக்கவேண்டுமென்று சட்டம் கருதுகிறதோ அதைக் கூட பள்ளிகளில் கற்பிப்பது இல்லை. வேளாண்மை என்பது மனிதனோடு சேர்ந்து வருகிற, இணைந்துவருகிற, மனிதனுக்குத் தேவையென்று கருதப்படுகிற ஒன்று; அதை நம்முடைய கல்வி சொல்லிக்கொடுப்பதில்லை. அப்படித் தேவையானவைகளைச் சொல்லிக்கொடுக்காமல் இருக்கிற கல்வித் திட்டம் நாட்டைப் பாழ்படுத்துகிற திட்டம். நம்முடைய கல்வித் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு சிலம்புச்செல்வர் அவர்கள் வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்ற நூலில் வெள்ளைக்காரன் மெக்காலே கொண்டுவந்த கல்வித் திட்டம் தேச விரோதக் கல்வித் திட்டம் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தேசவிரோதக் கல்வித் திட்டம்தான் இன்றைக்கு இந்த நாட்டைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய கல்வித் திட்டமும் நாட்டைச் சேதப்படுத்துகிறது அந்தக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய ஆசிரியர்கள் இன்றைக்கு நடக்கின்ற சூழ்நிலையில் அவர்களாலும் சேதப்படுத்தப்படுகிறது. இப்படி இரண்டும் சேதப் படுத்துகின்ற முறையில் உள்ள கல்விக் கொள்கையாக இது மாறிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமாகவும், அந்த அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு நிறைவேற்றப்படும் பல்வேறு சட்டங்கள் மூலமாகவும், அதற்குட்பட்டு அரசும், அதிகாரிகளும் பிறப்பிக்கின்ற ஆணைகளின் மூலமாகவும், சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் அதிகப்படியான சலுகைகளைப் பெற்றிருப்பதால், அதன் மூலமாக பல்வேறு பிரச்சனைகள் உருவாவது இந்தக் கல்வித் துறையிலேதான். சிறுபா மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்தக் கல்வித் துறையைப் பயன்படுத்திக்கொண்டு கல்வி நிலையங்களை உருவாக்குகின்ற உரிமை இருக்கிறது என்றாலும், சிறுபான்மை



1986 ஏப்ரல் 18] [திரு. வை. பாலச்சந்திரன்]

கல்வி நிலையங்களில் பெரும்பான்மை பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் எந்த அளவிற்குப் பாழ்படுத்தப்படுகிறார்கள், பழிவாங்கப்படுகின்றார்கள் என்பதற்குச் சான்றாக நான் ஒன்றைச் சொல்கிறேன், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற அளவில்.

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை கல்வி மாவட்டத்திற்கு உட்பட்ட சூரியகோடு என்ற இடத்தில் புனித இப்ரேம்ஸ் எம்.எஸ்.சி. உயர்நிலைப்பள்ளி என்று ஒரு உயர் நிலைப்பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் 'ஃபாதர்' ஜார்ஜ் பொம்மன் என்ற பாதிரியாராகும்.

* * * *

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அவருடைய பெயரை பாதர் ஜார்ஜ் என்று சொல்வதில் தவறு இல்லை.
* * *
அது அவைக்குறிப்பிலே இடம் பெறாமல் இருப்பது நல்லது.

திரு. வை. பாலச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் விளக்கமாகவே சொல்கிறேன். அவர் ஆர். சி. மதத்தைச் சேர்ந்தவர். பாதிரி. பாதிரிகளுக்கு திருமணம் ஆகக்கூடாது என்று அந்த மதத்திலே நடைமுறை விதியிருக்கிறது.

* * * *

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, கிறித்துவ மார்க்கத்தில் எல்லோரையும் பாதர் என்று அழைப்பதை ஒரு மரபாக வைத்திருக்கிறார்கள்

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பகுதியை மட்டும் நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, ஆனால் இதே மன்றத்தில் இராமனைத் தவிர வேறு எல்லா இந்து கடவுளுக்கும் இரண்டு மனைவிக்குமேல் உண்டு என்றும் "சின்னவீடு" கலாச்சாரம் என்றும் கிண்டல் செய்த பொழுது எங்களுடைய மனம் புண்பட்டதாக யாரும் இங்கே கருதவுமில்லை. அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று கேட்கவும் இல்லை. ஆனால் அவர்களைப் பற்றிச் மாண்புமிகு அமைச்சர் பேசுகிறார்: அதைத்தான் நான் எண்ணிப் பார்த்துக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அந்தப் பள்ளிக்கூடத்தில் 1983-84ஆம் ஆண்டில் 9-வது
வகுப்பில் ஒரு மாணவன் படித்துக்கொண்டு இருந்தான்.
இரவீந்திரன் என்பது அவருடைய பெயர். அவன் இந்து மதத்
தைச் சேர்ந்தவன் என்று அவனிடத்தில் இருக்கின்ற ஆதாரங்கள்
காட்டுகின்றன. அவன் 1983-84-ல் ஒன்பதாம் வகுப்பில்
படித்தபொழுது, அவன் நெற்றியிலே பொட்டு வைத்துக் கொண்
டும், கையிலே ராக்கி நூல் கட்டிக்கொண்டும் பள்ளிக்கு வந்த
காரணத்தினால் பொட்டை அழிக்க வேண்டும்; நூலை
அவிழ்க்க வேண்டுமென்று பள்ளி நிர்வாகம் நிர்பந்தித்தபொழுது
அவன் மறுத்தான். பிறகு அது சமுதாயப் பிரச்சனையாக மாறி
யது. சமுதாயப் பிரச்சனையாக மாறி பிறகு அது சட்டம்-
ஒழுங்குப் பிரச்னையாக வடிவெடுத்தது. அப்பொழுது அதில்
'இந்து முன்னணி' பேரியக்கம் தலையிட்டு அதை கண்டித்த
பொழுது, அந்த நிர்வாகத்தின் நிர்பந்தம் வாபஸ் பெறப்பட்டது
என்று 1983-84—ல் தலைமை ஆசிரியர் சொன்னார். அவன்
1984-85-ல் பத்தாம் வகுப்புக்கு வந்தான். பத்தாம்
வகுப்பிற்குப் பிறகு தன்னுடைய மாற்றுச் சான்றிதழ் வேண்டு
மென்று கேட்டபொழுது அவனுக்கு, அந்த வணக்கத்திற்குரிய
பெரியவர், தலைமை ஆசிரியர் மாற்றுச் சான்றிதழ் கொடுத்தார்.
மாற்றுச் சான்றிதழில் அவர் சொன்னார். அதிலே இருக்
கின்ற 15-வது காலத்தில் அவர் சொன்னார். 'He is lazy and
disobid ent' என்று அவர் சொன்னார். அப்படிச் சொன்ன
பின் அவனுடைய சகோதரர் ஒருவர் பள்ளிக்கூடத்திற்குச்
சென்று, அவனுடைய வாழ்வைப் பாழ்படுத்தி விட்டீர்களே
என்ன செய்வது என்று கேட்ட நேரத்தில், அவர் சொன்னார்,
'இந்து முன்னணி' பேரியக்கத்தை இவன் தூண்டிவிட்டு,
எங்களுக்கு எதிராகக் கடந்த ஆண்டு பொதுக்கூட்டம் நடத்தி
னான், அந்தப் பொதுக்கூட்டத்திலே பேசிய பாலச்சந்திரனும்,
அவர் சார்ந்த இந்து முன்னணி இயக்கத்தின் தலைவர் திரு.
தாணுலிங்க நாடார் அவர்களும் என்னிடத்தில் மன்னிப்பு கேட்
டால் மாற்றுகிறேன் என்று சொன்னார். பிறகு மீண்டும் அது
சமுதாயப் பிரச்சனையாக மாறி, போராட்டமாக மாறி, நாங்க
ளெல்லாம் போராடிய பிறகு மாற்றுச் சான்றிதழ் வேறுவிதமாகத்
திருத்திக் கொடுக்கப்பட்டது. அதிலே அவர் சொன்னார்,
''H:s C nduct and Charecter are s tisfactory'' என்று
அதே தேதியில் அதே வரிசை எண் போட்டு இரண்டு சான்றிதழ்
ஒரு இந்து மாணவனுக்கு ஒரு சிறுபான்மை சமுதாயம் நடத்தும்
ஒரு பள்ளிக் கூடத்தில் அளிக்கப்பட்டது. பொட்டை அழிக்க
மாட்டேன் என்று சொன்ன நேரத்தில் அழிக்க வேண்டுமென்று
கட்டாயப்படுத்திய நேரத்தில் போராடிய காரணத்திற்காக அவன்
''He w s lazy and disobidient'' என்று சொன்ன அந்த
நிர்வாகத்தின் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்
போகிறது என்பதைப் பெரும்பான்மை சமுதாயத்தைச் சார்ந்த
நாங்கள் கேட்கிறோம். நிச்சயமாக இதுபற்றி அரசு நட
வடிக்கை எடுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அப்படி எடுப்





பார்களா என்றும் கேட்கிறோம். அன்றைக்குஅவனுக்கு நியாயம்
கேட்க இந்து முன்னணி பேரியக்கம் இல்லாதிருந்தால், ''He was
lazy and disobedient என்று முதலிலே சொல்லப்பட்ட சான்றிதழ்
அதற்கு பிறகு ''Satisfactory'' என்று திருத்தி எழுதி சொல்லப்
பட்ட டி.சி.யை அவன் வாங்கியிருக்க முடியாது. அன்றைக்கு
அரசியல் இயக்கம் அல்லது வேறுபல இயக்கங்கள் அவனுக்குப்
போராட முன்வராத காரணத்தால் இந்து முன்னணி பேரியக்கம்
போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்பொழுது எங்
களை வகுப்பு வாதிகள் என்று சொன்னவர்களும் உண்டு.
ஆனால் அவர்களுக்கு நாங்கள் இன்றைக்கு சொல்வது நாங்கள்
வகுப்பு வாதிகள் 'அல்ல' ஆனால் 'நியாயவாதிகள்'.

இப்படிக் கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தப் பிரச்சனை
என்றால், இந்த சென்னை மாவட்டத்திலும் ஒரு பிரச்சனை இருக்
கிறது. இங்கே பி.சி.சி.ஐ. கான்வென்ட் என்று ஒன்று
தண்டையார்பேட்டையில் இருந்துகொண்டிருக்கிறது. அந்த
கான்வென்டினுடைய இலச்சினையில், இந்தியப் படத்திலே
சிலுவையைப் போட்டிருக்கிறார்கள். இந்தியப் படத்திலே
அப்படிப் போடக்கூடாது என்று விதியிருப்பதாகக் கேள்விப்
படுகிறேன்.

(நண்பகல் 12-00)

நான் அவற்றைத் தவறென மட்டும் சொல்லவில்லை. குற்ற
மாகவும் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகிறேன். என்னு
டைய தக்கலை கல்வி மாவட்டத்தில், அமலா கான்வென்ட்
என்ற பள்ளிக்கூடத்தில், மாதாவினுடைய படம் போட்ட பேட்ஜ்
அணிந்தால்தான் பள்ளிக்கூடத்திற்கு வர முடியும் என்ற சூழ்
நிலை உள்ளது. அப்படி அணியாத மாணவர்களுக்கு அபராதம்
விதிக்கின்ற சூழ்நிலை இருப்பதை நாங்கள் சுட்டிக்காட்டியிருக்
கிறோம். மாவட்ட கல்வி அதிகாரி விசாரித்து அறிக்கை கூட
தந்திருப்பதாகத் தெரிகிறது.

தண்டையார்பேட்டை பி.சி.சி.ஐ. பள்ளிக்கூடத்தில், 1985ல்
ஒரு மலர் வெளியிட்டார்கள்; பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி
அவர்கள் ஒரு வாழ்த்து அனுப்பியிருக்கிறார். அதற்குப் பிறகு
ஒரு வாழ்த்து — வாழ்த்துக்கள் என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறது.
நம்முடைய தமிழ் நாடு அரசு இலச்சினை பொறிக்கப்பட்டிருக்
கிறது. புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9 என்று அச்சிடப்
பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்
தலைவருடைய படம் அதிலே பொறிக்கப்பட்டிருக்கிறது. அதைப்
பார்த்தவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களே வாழ்த்து அனுப்பி
இருப்பது போன்ற ஒரு தோற்றம் தெரிகிறது. ஆனால், கீழே
பார்த்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எங்கள் இதயங்கனிந்த

வாழ்த்துக்கள் எனவும் பி.சி.சி.ஐ. பள்ளிக்கூடம் மலரினை வெளியிடும் நன்னாளில் அன்புடன் வாழ்த்துக்களை அவர்களுடைய நல்வாழ்விற்குச் செலுத்துகிறோம். நன்றி, மானேஜர், பி.சி.சி.ஐ. கான்வெண்ட், 40 முதல் தெரு, நேதாஜி நகர், தண்டையார் பேட்டை, சென்னை-81 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மக்களை ஏமாற்றுவது மட்டுமல்ல, அரசாங்கத்தைக் கூட ஏமாற்றுகிற சூழ்நிலை இருக்கிறது. அரசு இலச்சினையை முதல்வரின் கடிதத்தாளை சிறுபண்மை கல்வி நிறுவனத்தினர் பயன் படுத்துவது தவறு இல்லையா?என்ற கேள்வி எழுந்துள்ளது. இது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வராமல் இருந்திருக்காது. காவல் துறையின் மூலமாக, இந்த அரசு இலச்சினையைப் தனியார் பயன்படுத்தியது தவறு, இப்படி வாழ்த்துக்கள் என்று போட்டு, மக்களை ஏமாற்றுகிறார்கள் என்ற பிரச்சனை வராமல் இருந்திருக்காது.ஃவந்திருக்கக் கூடும். ஏனென்றால், அதற்கு அடுத்த பக்கத்தில், வாழ்த்துக்கள் என்ற பெயரில் எச்-6 இராதாகிருஷ்ணன் நகர் காவல் நிலையத்திலிருந்த உதவி ஆய்வாளராயிருந்த பி. சுருளிவேல் என்பவர் வாழ்த்துரை கொடுத்திருக்கிறார். உதவி ஆய்வாளர் கொடுத்த வாழ்த்தும் அரசின் கவனத்திற்கு வந்திருக்கக் கூடும். அவர் கூறியுள்ளதாவது: நமது இந்தியர்களின் அறியாமையைப் போக்க இந்தியாவிலேயே அதிகப் பொறுப்புணர்ச்சியுடன் கல்விச் சாலைகளை நிறுவி பெரும் மாற்றங்களை உருவாக்கித் தருவது கிறிஸ்தவ மதம்தான் என்று அவர் சொல்லியிருக்கிறார். கண்டிக்க வேண்டிய அதிகாரியே 'கைகுலுக்குவது' சரியா? இப்படி எல்லாம் சொல்கிற பொழுது எங்களுடைய மனமும் புண்படும் என்பதை அரசாங்கம் கவனத்திலே கொள்ள வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகச் சொல்கிறேன்.

அது மட்டுமல்ல, சிறுபான்மைச் சமுதாயத்தினர் சலுகைகள் காரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய மாவட்ட ஆட்சியாளர் பல்வேறு கல்லூரிகளின் முதல்வர்களிடம் கை கட்டும் சூழ்நிலை ஏற்பட்டது. கடந்த கல்வி ஆண்டில் கல்லூரிகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கு நன்கொடை வசூலிக்கப்படுகிறது என்ற நிலை வந்து, அது சட்டம் ஒழுங்குப் பிரச்சனையாக மாறியது. அப்பொழுது, இது சட்டம் ஒழுங்குப் பிரச்சனையாக மாறிய காரணத்தால், மாவட்ட ஆட்சியாளர் கல்லூரி முதல்வர்களை அழைத்து வைத்து பேசினார். எஸ்.டி. இந்து கல்லூரி — இந்துக்கள் நடத்துகிற கல்லூரி, ஐயப்பா கல்லூரி— இந்துக்கள் நடத்துகிற கல்லூரி, குமாரசாமி கல்லூரி— இந்துக்கள் நடத்துகிற கல்லூரி, உட்பட பல இந்துக்கள் நடத்தும் கல்லூரி முதல்வர்கள் ஆவணங்களைக் கொண்டு வந்து மாவட்ட ஆட்சியாளரிடம் காட்டி மாணவர்களைச் சேர்த்ததில் முறைகேடு இல்லையென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே விளக்கினார்கள். ஆனால், கிறிஸ்தவர்களுடைய திருவனம் நடத்தும் கல்லூரி முதல்வர்களில் சிலர் அங்கே வந்து



We are protected by the acts relating to the protection of minority rights.

என்று சொல்லி, நாங்கள் சிறுபான்மை மதத்தினுடைய சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறோம் என்று சொல்லி, எதையுமே காட்டாமலே சென்று விட்டார்கள். மாவட்ட ஆட்சியாளர் பலமுறை மீண்டும் மீண்டும் கேட்ட பிறகும், அந்த அதிகாரம் உங்களுக்கு இல்லை என்று சொல்லிவிட்டு வந்தார்கள். அரசாங்கமும் கைகட்டவேண்டும், பெரும்பான்மைச் சமுதாயமும் கை கட்ட வேண்டும்; இது நியாயமா? ஆகவே இவர்கள் செய்கின்ற சீர்கேடு இந்த நாட்டு மக்களைப் பாதிக்கும் என்ற காரணத்தால் சொல்கிறேன். இதைப் போக்க அரசாங்கம் முன் வரவேண்டும். கடந்த ஆண்டு பேசுகின்றபொழுது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிறுபான்மை கல்வி நிலையங்களில் மற்ற மத மாணவர்களுக்கு தீங்கு செய்யப்பட்டால், தண்டனை வழங்கப்பட்டால், குறிப்பிட்டுச் சொல்லுங்கள், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆகவே, கடந்த ஆண்டு சொன்னதற்காக, இந்த ஆண்டு குறிப்பிட்டுச் சொல்கிறேன். நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது; இந்தக் கல்வி மானியத்தை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய மொத்த வருமானத்தில் ஏறத்தாழ 20 சதவிகிதம் செலவழிக்கக்கூடிய மிக இன்றியமையாத இந்தக் கல்வி மானியத்தில் என்னுடைய சில கருத்துக்களையும் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு முதலாவதாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நேரத்தினுடைய நெருக்கடி கருதி, அரசு சார்பாக வழங்கியிருக்கக்கூடிய கொள்கைக் குறிப்பிலே நான் ஆழமாக ஈடுபாடு கொள்ளாமல் பொதுவான சில கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய சிந்தனையைக் கூட திசைத் திருப்பக் கூடிய விதத்தில் ஒட்டுமொத்தமாக சிறுபான்மை சமுதாயத்தின்மீது சில குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருந்தாலும் நான் அதற்கு பதில் அளிப்பதற்கு என்னுடைய நேரத்தைச் செலவழிக்காமல் அதற்குரிய பதில்களை எல்லாம் அரசு சார்பாக அமைச்சர்களும் சொல்வார்கள், இந்த நாட்டு மக்களும் சொல்வார்கள் என்ற நம்பிக்கையில் உரிய மரியாதையைச் சொல்லி விட்டு, என்னுடைய கருத்தைச் சொல்ல முற்படுகிறேன்.

ஆனால் பொதுவாக நாம் நன்றி உணர்வோடு ஏற்றுக்கொண்டாக வேண்டும். இந்த நாட்டிலே கல்வி வளர்ச்சி பெற்றிருக்கிறது என்று சொன்னால் அது காலத்தினுடைய சூழ்நிலை காரணமாகவும் நம்முடைய நாடு அந்நிய நாட்டுக்கு அடிமைப்பட்டிருந்த காரணத்தாலும் இந்த குறிப்பிட்ட நூறு ஆண்டுக் காலத்தில் நம்முடைய நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு

சிறுபான்மை சமுதாயத்தினர், குறிப்பாக கிறிஸ்தவ சிறுபான்மை சமுதாயத்தினர் பெருமளவு சேவை ஆற்றியிருக்கிறார்கள் எனபதை நாம் மறுப்பது மன்னிக்க முடியாத ஒரு குற்றமாக அமைந்துவிடும் என்று நான் அஞ்சுகிறேன்.

நம்முடைய சென்னை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த மரியாதைக்குரிய இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் 50 ஆண்டுகளுக்கு முன்னாலே மிக நன்றி பெருக்கோடு, புள்ளிவிவரத்தோடு நாங்கள் நடத்திய ஒரு விழாவிலே சொல்லிக் காட்டியிருக்கிறார்கள். நான் சொல்வதை. முஸ்லீம் சமுதாயம் என்று கூட அல்ல. இன்னொரு சிறுபான்மை சமுதாயம், கிறிஸ்துவ சிறுபான்மை சமுதாய மக்கள் ஆற்றிய அந்த சேவையை நாம் நன்றியுடன் நினைவு கூற வேண்டும். இப்போது கூட பொதுவாக தனியார் நடத்துகின்ற பள்ளி நிறுவனங்களை ஒட்டுமொத்தமாக குறைசொல்வது ஒரு ' பாஷன் ' ஆக இருக்கிறது. பள்ளிக்கூடம் நடத்துபவர்கள் கொள்ளையடிப்பவர்கள் என்று சொல்லக்கூடிய ஒரு நிலை இந்த சட்டமன்றத்திலே கூட ஏற்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

அரசு தந்திருக்கிற புள்ளிவிவரங்கள் அடிப்படையில் பார்க்கும்போது இன்று கூட அரசு சார்பாக 54 கல்லூரிகள் நடத்தப்படுகின்றன என்றால் தனியார் துறையிலே 133 கல்லூரிகள் தமிழ்நாட்டில் நடந்து வருகின்றன என்று பார்க்கும்போது இந்த நாட்டினுடைய உயர் கல்விக்கு தனியார் தரக்கூடிய ஒரு ஆதரவாக, அவர்கள் செய்யக் கூடிய ஒரு சேவையாக இந்தப் புள்ளிவிவரங்களை நாம் கொள்ள வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது.

இந்தக் கல்விக் கொள்கைபற்றி இன்று நாம் விவாதிக்கிற நேரத்தில் தமிழக அரசின் சார்பாகத் தரப்பட்டிருக்கிற இந்தக் கல்விக் கொள்கைபற்றிய புத்தகத்தைவிட மத்திய அரசு சார்பாக இன்று வழங்கப்பட்டிருக்கிற புதிய கல்விக் கொள்கை பற்றி இரண்டு பெரிய நூல்களை வழங்கியிருக்கிறார்கள். மத்திய அரசு அறிவித்திருக்கிற கல்விக் கொள்கைக்கு ' கல்வி-ஒரு சவால் ' என்றே தலைப்பிட்டு நமக்கு வழங்கியிருக்கிறார்கள். இந்த நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு தரப்பட்டிருக்கிற அறைகூவல் என்ற முறையிலே இந்த தலைப்பு அமைந்திருக்கிறது என்று கருதுகிறேன். இந்த அறைகூவலை தமிழக மக்கள் எப்படி ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள் ; அதில் சொல்லியிருக்கிற எல்லா கருத்துக்களையும் ஏற்று அமுல்படுத்தப் போகிறோமா ; அதில் சில கருத்துக்களை பின்பற்றுகின்ற முறையிலே கருத்து இருக்கிறதா என்று நாம் பார்க்க வேண்டும், ஆராய வேண்டும் என்ற அடிப்படையிலேதான் நான் ஆரம்பத்தி



லேயே இந்த சட்டமன்றத் தொடர் கூட்டத்திலே பேசும்போது கூட மாநில அரசு அளித்திருக்கிற இந்தக் கொள்கைபற்றி விவாதிக்க ஒரு நாள் இந்த சட்டமன்றத்தில் ஒதுக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தேன். ஆனால் இன்றுவரையில் அப்படி ஒரு நாள் தனியாக ஒதுக்கப்படவில்லை. இந்த நிலையில் இந்த கல்வி மானியத்திற்கு இரண்டு நாள் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதிகப்படியான உறுப்பினர்கள் கலந்துகொள்ள ஆவல் தெரிவித்திருப்பதால், இதிலும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

நம்முடைய கல்விக் கொள்கை பற்றி விவாதிக்க இந்த கால கட்டம் போதாது என்று கருதும்போது மத்திய அரசு அறிவித்திருக்கிற இந்த புதிய கல்விக் கொள்கைபற்றி கருத்துச் சொல்ல போதுமான வாய்ப்பு இருக்குமா என்ற குறைபாட்டை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இந்தச் சட்டமன்றத் தொடரிலே கூட இதற்காக தனியாக ஒரு நாள் ஒதுக்கப்பட்டால் நன்றாக இருக்கும்.

(பிற்பகல் 12-10.)

ஏனென்றால் இந்தக் கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து நம்முடைய அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட சில கருத்தரங்குகளிலும் சரி, அரசு சார்பாக அதிகாரிகள் கலந்துகொண்ட கருத்தரங்கங்களிலும் சரி ஒட்டுமொத்தமாக மத்திய அரசினுடைய கொள்கையைப் பாராட்டிப் பேசக்கூடிய ஒரு நிலைமையைத்தான் நாங்கள் தொலைக்காட்சியிலே காண முடிந்தது. ஆனால் இன்று நமது அரசின் சார்பாக தரப்பட்டிருக்கக்கூடிய இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இரண்டு, மூன்று கருத்துக்களிலே நம்முடைய அரசு முரண்படுவதை நாங்கள் கண்டுகொள்ள முடிகிறது.

முதலாவதாக மும்மொழிக் கொள்கையைப் பற்றி மத்திய அரசு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்க நம்முடைய அரசு அதைவிடத் திட்டவட்டமாக இருமொழிக் கொள்கையைப் பற்றிக் கோடிட்டுக் காட்டக்கூடிய ஒரு தன்மையைப் பார்க்கிறோம். இன்னொரு முரண்படக் கூடிய கருத்தாக எனக்குப் படுவது ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதிரிப் பள்ளிகளை நிறுவ மத்திய அரசு முன்வந்திருக்கக்கூடிய தன்மையாகும். அப்படிச் சொல்வதில் என்ன பொருள் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. மத்திய சர்க்கார் ஒரு பள்ளியை நடத்துகிறது என்று சொன்னால் இந்தியைத் தள்ளிவைத்துவிட்டு அது ஒரு பள்ளியை நடத்தும் என்று நம்மால் எதிர்பார்க்க முடியாது.

[1986 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. [redacted]. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கடைசியில் நான் பதில் சொல்ல முடியும் என்றாலும் இப்போது சொன்னால் பேசுவதற்கு உதவியாக இருக்கும் என்பதற்காகத்தான் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். மாதிரிப்பள்ளி என்பது மாவட்டத்திற்கு ஒரு பள்ளி துவக்குவது. அதிலே 50 சதவீதம் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பார்கள். மீதி 50 சதவீதம் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இருப்பார்கள். அந்தப் பள்ளியில் பயிற்சி மொழியாக இந்தியும், ஆங்கிலமும் மட்டும்தான் இருக்கும். இந்த அடிப்படையில் நிலைமை இருப்பதன் காரணத்தால் தாய்மொழியாகிய வட்டார மொழி புறக்கணிக்கப்படுகிற நிலைமையும் இந்தி பயிற்சி மொழி என்ற காரணத்தால் இந்தியைத் திணிக்கிற முயற்சி என்ற நிலைமையும் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் எதிர் காலத்தில் அவர்கள் எந்த நோக்கத்தோடு செயல்பட இருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக இது காட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும் இந்தி ஆதிக்கத்திற்கு அடிப்படையாக இது அமைகிறது என்றும் நமக்குப் புரிகிற காரணத்தால், இந்தி பயிற்சி மொழி, இந்தி மொழி ஆதிக்கம், வடபுல ஆதிக்கம் என்கிற முறையில் வாங்கிய சுதந்திரத்தைப் பறி கொடுக்கிற நிலைமை இதில் பொதிந்து இருக்கிறது என்ற காரணத்தால் தான் மாதிரிப் பள்ளிகளை நாம் எதிர்க்கிறோம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு விழித்துக் கொண்டு இருக்கிறது என்பதை அமைச்சரின் குறிப்பிலிருந்து தெரிந்துக்கொண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதைத் தான் நானும் கோட்டிட்டுக் காட்ட விரும்பினேன். மத்திய அரசு ஆரம்பிக்கக்கூடிய பள்ளிகள், ஏற்கனவே இந்த நாட்டில் இயங்கிக் கொண்டு வருகின்றன. சைனிக் ஸ்கூல்ஸ் என்று சொல்லக்கூடிய பள்ளிகள், இராணுவ வீரர்களின் குழந்தைகள், மற்றும் மத்திய அரசின் ஊழியர்களின் குழந்தைகள் ஆகியோர் படிப்பதற்காக அப்படிப்பட்ட பள்ளிகள் நடக்கின்றன. அது போக மாவட்டத்திற்கு ஒரு மாதிரிப்பள்ளி என்றால் தமிழக அரசு நடத்தக்கூடிய ஏறத்தாழ 38,000 பள்ளிகளில் மாதிரியாகச் சொல்வதற்கு ஒரு பள்ளி கூட நடத்தவில்லை என்று பொருள்படும் என்றல்லவா ஆகிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல; இதையே மாதிரியாக வைத்து நாம் பள்ளிக்கூடங்களை நடத்துவது என்பதும் முடியாது. காரணம் ஒரு கோடி, ஒன்றரைக் கோடி, 2 கோடி ரூபாய் அதற்குச் செலவாகும். மாதிரியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய பள்ளியாக அது இல்லை.



1986 ஏப்ரல் 18]

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : துணைத் [illegible]லைவர் அவர்களே, மேலைநாடுகளில் நடத்துவதுபோல் [illegible]லிக் ஸ்கூல்ஸ் என்ற அளவுக்குத்தான் ஏழை மக்களுக்கும், நடு[illegible]தர மக்களுக்கும் எட்டாக் கனியாக இருக்கக் கூடிய நிலைமைக்குத்தான் அந்தப் பள்ளிகள் இங்கு வரும் என்று சொன்னால் அது வரத்தான் வேண்டுமா என்பதை இந்த அவை நல்முறையில் தீர ஆராய்ந்து முடிவெடுப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

இன்னொன்றையும் நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். அண்ணா அவர்கள் அறிவித்த கொள்கை இருமொழிக் கொள்கை என்றும் அரசு நடத்தக்கூடிய பள்ளிகளில் இந்தி நுழைய முடியாது என்றும் சொல்லக்கூடிய அதே நேரத்தில் தமிழகத்தில் இந்தி நுழையாமல் இருக்கிறதா? அப்படி நுழையாமல் இருப்பதற்கு அரசு மேற்கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகள் போதுமானவைதானா என்பதைப் பற்றியும் அரசு கருதிப் பார்க்கவேண்டும்.

மத்திய சர்க்காருடைய கல்விக் கொள்கையினுடைய அடிப்படையில் நடத்தப்படக்கூடிய எல்லா பள்ளிகளிலும் இந்தி சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட பள்ளிகள் தொடங்கப்படுவதற்கு ஒரு வரையறையோ அல்லது ஒரு குறுக்கீடோ அல்லது இத்தனை பள்ளிகளைத்தான் ஆரம்பிக்க வேண்டும் என்று திட்டப்படுத்தி அனுமதி வழங்கக்கூடிய நிலையோ நம்முடைய அரசினுடைய அதிகாரத்தில் இல்லை என்று நான் அறிகிறேன். பள்ளிகளை ஆரம்பித்துவிட்டு மத்திய சர்க்காரிடத்திலே அனுமதி பெற்று யார் வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் அப்படிப்பட்ட பள்ளிகளை நடத்தலாம் என்று இருக்கும்போது நம்முடைய பள்ளிகளில் இந்தி இல்லை என்ற காரணத்தால் இந்தி நுழையவில்லை என்று நம்மை நாமே திருப்தி படுத்திவிட்டு அமைந்து விடுவது சரியான செயலா என்பதை யோசிக்கவேண்டும். இந்தி வரக் கூடாது என்பதற்காக ஒரு கதவை நீங்கள் அடைத்துவிட்டால் 9 கதவுகளை இந்தத் தமிழகத்தில் மற்றவர்கள் திறந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது நம்முடைய பள்ளிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மாத்திரம் எந்த வசதியும் வாய்ப்பும் இல்லாமல் ஆக்கப்பட்டு மற்ற பள்ளிகளில் இருக்கக்கூடியவர்களுக்கு வசதி வாய்ப்பு கிடைக்கிறது என்கிறபோது தமிழகத்தில் இந்தி படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை தமிழ் படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகிறது என்று தோராயமாகக் கணக்கிட்டுப் பார்க்கும்போது தெரிகிறது. ஆனால் கொள்கையிலே நாம் உறுதியாக இருக்கிறோம்: அதை உறுதியாக வலியுறுத்திச் சொல்வதிலும் நாம் எந்த விதத்திலும் பின்வாங்கவில்லை என்றாலும் கூட அந்தக் கொள்கை உரம்

உடைய கொள்கையாக வாய்ந்திருக்கிறதா? பயன் தரத் தக்க கொள்கையாக இந்த நாட்டிலே அது உதித்திருக்கிறதா என்பதைப் பற்றியெல்லாம் அரசு யோசித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு இருக்கக்கூடிய அச்சம் எல்லாம் அந்தப் புதிய கல்விக் கொள்கையைப் பற்றி ஒட்டுமொத்தமாக எதிர்க்க வேண்டும் என்பது அல்ல. அது, படித்துவிட்டு ஏதோ காரணத்தினாலே படிப்பபை தொடர முடியாமல் நின்றவர்கள் அல்லது வயது வந்தும் கூட படிக்க முடியாமல் இருக்கின்றவர்கள், ஒரு துறையிலே படித்து ஒரு தொழிலிலே ஈடுபட்டு மேலும் உயர்வதற்காக தங்களுடைய கல்வி வளர்ச்சியை மேலும் அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஆசைப்படக் கூடியவர்களுக்கெல்லாம் இந்தப் புதிய கல்விக் கொள்கையால் பல வசதி வாய்ப்புகள் தரப்படுகின்றன என்பதை எண்ணும்போது, அதையெல்லாம் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால் இப்படி மத்திய அரசு வகுத்திருக்கக்கூடிய அந்தக் கொள்கைக்கு வகுத்திருக்கக்கூடிய அந்தத் திட்டத்திற்கு ஒரே விதமாக நீங்கள் ஒட்டு மொத்தமாக ஆதரவு தருவது என்று முடிவு எடுத்தீர்களேயானால, எனக்கு ஒரு அச்சம் ஏற்படுகிறது. கல்வி, 'ஸ்டேட் சப்ஜெக்ட்' என்ற நிலையிலேயிருந்து, சென்டிரல் சப்ஜெக்ட் என்று போய், அது இப்போது கன்கரன்ட் லிஸ்டிலே இருக்கிறது என்று சொல்லுகிற நிலைமையிலேயிருந்து, இனி காலப்போக்கிலே அவர்கள் மேற்கொள்ளக் கூடிய அந்தக் கொள்கைதான் நல்லது என்று உணரப்படக் கூடிய நிலையும் வளருமேயானால், அது மத்திய சர்க்காருடைய அந்தத் துறைகளோடு சென்று, மாநில சர்க்காருக்கு கல்வித் துறையிலே எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்று எதிர்காலத்தில் ஏற்பட்டு விடுமோ என்ற அச்ச உணர்வு எனக்கு இருக்கிறது. ஆகவே அது பற்றி அரசு கொஞ்சம் ஆராய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றை நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ் மொழி மீது நமக்கு இருக்கக் கூடிய ஒரு பிரியத்தை, அது வரைவேண்டும், எங்கும் தமிழ், எல்லாம் தமிழ், எதிலும் தமிழ் என்று ஆக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய அந்த ஆர்வத்தை யாரும் குறை சொல்ல முடியாது. ஆனால் அந்த அளவுக்கு அந்தக்கொள்கை இந்த நாட்டிலே நிலை நாட்டப்பட்டு வருகிறதா, அதனுடைய பயனை இந்த நாட்டு மக்கள் பெற்று வருகிறார்களா என்று பார்த்தால், தமிழ் மொழியிலே பட்ட வகுப்பிலே சென்று படிக்கக்கூடிய, படித்து தேறியவர்களுக்கு இந்த நாட்டின் அரசு அலுவலகங்களிலே முன் உரிமைகள் அளிக்கப் பட்டிருக்கிறதா? தமிழ் படித்து தேறியவர்கள் எல்லாம் எதிலும் இல்லாமல், பல தனியார் நிறுவனங்களிலே கூட, தமிழிலே தேறியவர்கள் என்றால் அவர்களுடைய விண்ணப்பங்களைக்



கூட தகுதி, அடிப்படையில் புறக்கணிக்கக் கூடிய நிலைமையில் இருப்பது நல்லதா? தமிழ்நாட்டிலே தமிழ் படித்தவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று சொன்னால் எதிர்காலத்திலே தமிழ் படிக்கக்கூடிய மாணவர்கள் உற்சாகமாக பட்டப் படிப்பு படித்து தேரக்கூடிய நிலைமை இருக்கிறதா என்று கேட்டால், எனக்குத் தெரியும் நான் சம்பந்தப்பட்ட கல்லூரிகளிலே கூட தமிழிலே சொல்லி கொடுக்கக் கூடிய பாட வகுப்புகளுக்கு விருப்பத்தோடு நாங்கள் அனுமதி பெற்றிருந்தும் கூட, அதற்குரிய 12, 15 மாணவர்களைக் கூட சேர்ப்பதற்கு இயலவில்லை, விசேஷ ஸ்காலர்ஷிப் கொடுத்தும் கூட சேர்வதற்கு மாணவர்கள் முன் வருவதில்லை. வந்த மாணவர்களும் நீடிப்பதில்லை. அவர்கள் இறுதி ஆண்டு வரையிலும் அந்த வகுப்புகளில் படிப்பதில்லை என்ற நிலை இருக்கும்போது தமிழ்நாட்டிலே தமிழ் படிக்கக்கூடிய ஆர்வமான மாணவர்கள இல்லை என்ற புள்ளி விவரம் தமிழர்களுக்கு பெருமை தரத் தக்கதா?

இது கல்வித் துறையிலே நாம் எங்கோ செய்திருக்கக் கூடிய ஒரு பூரணமற்ற நடவடிக்கையினால் ஏற்பட்டிருக்கக் கூடிய அவல நிலையா என்பதைப் பற்றி அரசு ஆராய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று; நம்முடைய மொழிக்கு தர வேண்டிய முக்கியத்துவம் தரப்படக்கூடிய அதே நேரத்தில்—இந்த அவையிலே கூட சில பேர் ஆங்கிலத்தினுடைய அறிவை குறைத்து பேசியதை, தமிழ் குழந்தைகள் ஆங்கிலத்தை படிப்பதா என்று அழுத்தத்தோடு பேசியதை நான் கேட்டேன். அது ஒரு ஆபத்தான கருத்து என்பதை முதலிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலேயர்கள் நம்மை 100 ஆண்டுகளுக்கு மேலும் அடிமைப்படுத்தி ஆண்டவர்களாக இருக்கலாம். ஆனாலும் கூட நம்முடைய அறிவுக் கண்களை அகலமாக திறக்கப்படுவதற்கு, இன்று உலகத்தினுடைய பல அரங்குகளிலே நம்முடைய நாட்டு மக்கள், நம்முடைய தமிழ் பெருமக்கள் முன்னணியிலே தலைவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும், விஞ்ஞானத்திலே தமிழர்களுக்குரிய இடத்தையும் திறமையையும் பெற்றதற்கும், அனைத்து உலகத்தினுடைய அங்கீகாரத்தை அது பெறக்கூடிய அளவுக்கு நாம் வளர்ந்து வந்திருக்கிறோம் என்று சொன்னால் அதற்கு ஆங்கிலம் தான் காரணம். ஏன் இன்னும் சொல்லப்போனால் ,'விடுதலைத் தீ" நம்முடைய உள்ளத்திலே கொழுந்து விட்டு எரிந்ததற்கும் கூட, ஆங்கிலமே காரணமாக இருந்தது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

(பிற்பகல் 12-20)

ஆங்கிலம் நமக்கு கிடைத்திருக்கிற ஸ்திரமான சொத்தாக, —அது இந்த நாட்டினுடைய மொழியாக இல்லாமல் இருக்கலாம்— எப்படியோ அந்த ஆங்கில மொழியினுடைய தொடர்பு நமக்கு, இந்த நாட்டிற்கு கிடைத்த காரணத்தால் தான் அகில உலகத்தினுடைய மன்றங்களிலும் சரி, அந்த நாடுகள் கொண்டிருக்கின்ற தொடர்புடைய எத்தனையோ பேரவைகளிலும் சரி, நாமே அவர்களை விட மீறியவர்களாக, மேம்பட்டவர்களாக பல இடங்களில் இல்லையென்றாலும், அவர்களுக்கு அந்தரங்கமானவர்களாக இருப்பதற்கு நமக்கு கிடைத்திருக்கிற அந்த ஆங்கில மொழி அறிவு காரணமாக இருக்கிறதென்பதை மறந்துவிடக் கூடாது. பலபேர்கள் ஊக்குவிக்கலாம். நாங்கங் கூட நாடாளுமன்றத்தில் ஈடுபட்டு பேசுகிறபோது சில அன்பர்கள் நமக்கு அன்பு காட்டுவது போல, 'தமிழிலே போலோ', 'தமிழிலே போலோ' என்று சொல்வார்கள். அப்படி சொல்பவர்கள் தமிழ் மீது கொண்ட அக்கறையினால் அப்படிச் சொல்லவில்லை. நமக்கிருக்கக்கூடிய ஆங்கிலத்தின் அறிவைக் குறைத்து, அவர்கள் இந்தியிலே பேசினால் நாம் எந்த அளவிற்கு புரிந்து கொள்கிறோமோ அந்த அளவிற்கு நாம் தமிழிலே பேசுவதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று எண்ணத்திலே தான் அப்படி நமக்கு உற்சாகப்படுத்தினார்கள் என்ற நிலையை நாங்கள் அறிந்த காரணத்தினால் எங்களுடைய கருத்துக்களை சொல்லுகிறபோது, அவைகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தாக மாறவேண்டுமானாலும் எதிரே உள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமானாலும் எந்த வகையில் எடுத்துரைக்க வேண்டுமோ அந்தவகையில் எடுத்துரைக்க வேண்டுமென்றுபிடிவாதமாக இருந்திருக்கிறோம். தமிழ் மீது கொண்ட பற்று குறைந்த காரணத்தால் அல்ல. அப்படித்தான் இன்றைக்கு நர்சரி ஸ்கூல்சைப் பற்றி பொதுவாக குற்றம் சாட்டப்படுகிறது. குற்றம் செய்பவர்கள் கல்விக் கூடங்களை நடத்துபவர்களில் இல்லையென்று நான் சொல்ல வர மாட்டேன். குற்றம் செய்பவர்கள் எந்தத் துறையில் தான் இல்லை. எல்லாத் துறைகளிலும் இருக்கிறார்கள். அப்படி குற்றம் செய்பவர்களை தண்டிப்பதற்கு போதிய சட்டங்கள் நம்முடைய கைகளில் இருக்கின்றன. அதை அமல் நடத்தி அந்தக் குற்றங்களை இல்லாமல் ஆக்குவதற்கு நாம் முயற்சிக்க வேண்டுமே தவிர சிலபல துறைகளில் குற்றம் இருக்கிறது என்பதற்காக அந்தத் துறையை எடுத்து விடுவது என்றும், நடந்து வருகிற நன்மைகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதைப் போல நாம் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்து விளங்குவதைத் தடுத்து நிறுத்துவதற்கு சதித்திட்டம் நடந்திருப்பதைப் போல ஆங்கில மொழியைப் பற்றி இழித்துப் பேசுவதோ பழித்துப் பேசுவதோ, நம்முடைய தமிழகக் கல்விக் கூடங்களில் அதற்கு முக்கியத்துவம் தருவதைப் பற்றி கூறி அதை இல்லாமல் ஆக்க வேண்டுமென்று வற்புறுத்துவதோ இந்த நாடு முன்னேறுவதற்கு ஏற்ற கருத்தாக என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே, இன்னும் சொல்வேன் இந்த மொழியினுடைய திறமை அண்மைக்காலத்தில் குறைந்திருக்கிறது. இதை உணர்ந்து



தான் சில விசேஷ வகுப்புக்களைக் கூட மாணவர்களுக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு நம்முடைய பல்கலைக் கழகத்தில் ஏற்பாடு செய்திருப்பதாக அறிகிறேன். இந்தத் துறையில் மேலும் கவனம் செலுத்தி செயல்பட வேண்டும். 10 ஆண்டுகளுக்கு முன்னால் பி. ஏ. படித்து பட்டம் பெற்ற மாணவனுக்கு எவ்வளவு ஆங்கில அறிவு இருந்ததோ அந்த அளவிற்கு ஆங்கில மொழி அறிவு, அதைக் கையாளக்கூடிய திறன் இன்றைக்கு எம்.ஏ. பட்டம் பெற்ற மாணவர்களுக்கு இல்லையென்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அவர்கள் பெறுவது பட்டமாக இருக்கிறதே தவிர பெறவேண்டிய ஒரு மொழியினுடைய வளத்தையோ அதனுடைய ஆற்றலையோ பெறாமல் இருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் நிதானித்துப் பார்த்துப் அதனுடைய தரத்தை உயர்த்துவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று; பாடநூல்கலைப் பற்றி ஒரு கருத்து கூற விரும்புகிறேன். பெரும்பாலான பாட நூல்களில் பல தவறுகள் நிகழ்ந்து விடுகின்றன. குறிப்பாக இஸ்லாம் சமுதாயத்தைப்பற்றி அவர்கள் உயிரிலும் மேலாக கருதக்கூடிய திருநபியைப் பற்றிய கட்டுரையில்கூட எவ்வளவு தவறுகள் இழைக்க வேண்டுமோ அவ்வளவு தவறுகள் இழைத்து கட்டுரைகள் எழுதி விடுகிறார்கள். அதைப் பார்க்கிற பொழுது ஒன்று தெரிந்து கொள்ள முடிகிறது. ஆங்கிலத்தில் வரையக் கூடிய கட்டுரைகளை தமிழாக்கம், அதுவும் தரங்கெட்ட தமிழாக்கம் செய்யக்கூடிய அளவிற்கு சில நூலாசிரியர்கள் முற்படுகிற காரணத்தால் இந்தத் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. என்னென்ன தவறுகள் என்று சொல்வதற்கு அடுக்கடுக்காக ஆதாரங்கள் என்னிடத்தில் இருந்தாலும், சபையினுடைய நடவடிக்கைக்குறிப்பிலும் அதைப் பதிவு செய்வது அவ்வளவு நல்லதாக இருக்காது என்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் அந்தக் குறிப்புகளை நான் வழங்க விரும்புகிறேன். இதுபற்றி நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்டுக் காட்ட வேண்டுமென்ற இந்த நிலையில்லாமல் இருக்கவேண்டும் என்பதற்காக நான் அன்போடு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தப் பாட திட்டக் குழுக்களிலே இஸ்லாமிய மரபுகளை அறிந்த ஒருவரை நீங்கள் உறுப்பினராகப் போட்டால், இப்படி ஏற்படக்கூடிய குறைபாடுகள் அடிக்கடி ஏற்படாமல் தடுப்பதற்கு அது உதவியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் ஒரு படி மேலேயே சென்று நான் சொல்வேன். அப்படி நீங்கள் உறுப்பினராக போட்டால் அவருக்கு ஏதாவது ஊதியம் கொடுக்க வேண்டும் என்று யோசித்தாலும், கூட, ஊதியமின்றி இஸ்லாமிய மரபுகள், வழிமுறைகள், வரலாறுகள், அவர்களுடைய தலைவர்களுடைய வாழ்க்கையைப் பற்றிய

குறிப்புரைகளைப் பற்றிய குறிப்பேடுகளை அச்சிடுவதற்கு முன்னாலே நீங்கள் எங்களுக்கு தருவீர்களானால், நாங்கள் அதை சரி பார்த்து தருவதற்குக்காத்து இருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, இங்கே கல்வியைப்பற்றிச் சொல்லும்போதெல்லாம் சத்துணவு பற்றியும் இரண்டு வார்த்தை சொல்லாவிட்டால் இந்த விவாதமே சத்தில்லாததாகிவிடுமோ என்ற நிலை இந்தச் சட்டமன்றத்திலே வந்திருக்கிறது. அப்படிச் சொல்லும்போது, ஒரு உணர்ச்சிகரமான விவாதமாக வளர்ந்து வருவதை நாம் பார்க்கிறோம். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, இந்தப் பேரவை தொடங்கப்பட்ட நாளிலிருந்து சத்துணவு அமைச்சரை நாம் பார்ப்பதற்கு கொடுத்து வைக்க வில்லை. (குறுக்கீடு) அவர்கள் உடல் நலம் பெறவேண்டும் என்று மனமாற விரும்புகிறேன். எனக்கு இருக்கக்கூடிய ஒரு எண்ணம் எல்லாம் ஏறக்குறைய 83 லட்சம் மாணவர்களுக்கு இந்தக் கல்விக் கூடங்களில் சத்துணவு வழங்கி வரக்கூடிய நிலையில், இந்தக் கல்வித்துறையினுடைய ஒரு துறையாகவே சத்துணவும் இணைக்கப்பட்டால்தான் அது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இதைப் பற்றி அரசு யோசிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவு என்ற வார்த்தை உண்மையிலே யார் வைத்தார்களோ எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை நியூட்ரிசியல் ஃபுட் என்பதற்கு அப்படி மொழி பெயர்த்தார்களோ என்று தெரியவில்லை. இதற்கு முன்னாலும் பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் மதிய உணவு என்று வழங்கப்பட்டது. அரசு எத்தனையோ பரிசுகளை வழங்குகிறது. ஆனால் சத்துணவு என்று பெயரிட்டவர்களுக்கு ஒரு பரிசைக் கொடுத்தால்கூட பொருத்தமாக இருக்கும். இது சத்துணவுதானா என்ற ஆராய்ச்சியிலே நான் ஈடுபட விரும்பவில்லை. ஆனால் உண்மையிலேயே அதனுடைய தரமும், அதனுடைய உள்ளடக்கமும் இன்னும் கொஞ்சம் உயர்வதற்கு அரசு ஒரு சில லட்ச ரூபாய்களை அதிகரித்தாலும் பரவாயில்லை, அப்படிச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, சத்துணவுக் கூடங்களை இன்று தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களோ, நகராட்சித் தலைவர்களோ, சென்று பார்ப்பது கூடாது என்று அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அப்படி ஏன் தடை விதிக்க வேண்டும் என்று என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. இப்படி அரசு மிகப் பெரிய தொகையை செலவிட்டு, பொது தன்மையான காரியம் நாடெங்கும் நடக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தினுடைய அடிப்படையில் அமுல்படுத்தக்கூடிய திட்டம், இன்னும் செம்மையாகவும், குறையாடு இல்லாமல் நடப்பதற்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எதிர்பாராத நேரத்





திலே வந்து சோதனையிடுவார்கள் என்ற அச்ச உணர்வு இருக்கு மானால், அதை நிர்வகிப்பவர்கள் தங்களுடைய கடமையிலே மேலும் திறம்பட செயல்பட முடியும் என்ற சூழ்நிலை ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு, இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சோதிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி வாரியம் சென்ற ஆண்டு தொடங்கப்பட்டது. அதற்கு தலைவர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். ஆனால் ஓர் ஆண்டுக் காலத்திலே இதுபற்றி எந்தவிதமான உருவான முயற்சியும் தொடங்கப்படவில்லை என்பதையும், ஒரு ஆசிரியருக்குக்கூட வீட்டுக்கு மனை ஒதுக்கப்படவும் இல்லை, வீடு கட்டித் தரப்படவும் இல்லை என்பது அவ்வளவு சரியான ஒரு நிலையாகத் தெரியவில்லை. ஆகவே, வாரியம் தொடங்கி விட்ட பிறகு, அதனுடைய காரியம் தொடங்கப்பட வேண்டும். அந்த முனைப்பான காரியங்களிலே தமிழக அரசு ஈடுபட வேண்டும் என்று சொல்லி, என்னுடைய வார்த்தைகளை நிறைவு செய்கிறேன்.

(முற்பகல் 12-30)

THIRU G. K. FRANCIS: Mr. Deputy Speaker Sir, In regard to Demand No. 17, Education for the year 1986-87 it is remarkable to find the Government of Tamil Nadu has made outstanding and spectacular progress in this field. There has been a tremendous increase in all aspects of education, namely in regard to the number of students, schools, universities and technical institutions. It is also remarkable to find the number of teachers and the quantum of infrastructure and other facilities have increased by leaps and bounds. It is also noteworthy to find that the Government is implementing in a very big way. The aims and objectives of the State Planning Commission's documents are toward a learning society. This document has very boldly spelt out the need to expand schooling facilities, the need to improve the quality of education and the need to provide incentives for students and teachers.

The Government of Tamil Nadu has clearly pointed in its policy note that it will be implementing the suggestions put forth by the new Educational Policy by the Central Government. The new Educational Policy is one of the outstanding documents that very incisively points out the priorities that education should have in this country. The most noteworthy aspect of this policy document is that it intends to provide a kind of education that will prepare students for a new era. As it points out, the role of education is to transform a static society into a vibrant one with a commitment to development and change. Education is concerned essentially with the future and it has a holistic character and therefore, for the new generation to be ready for the 21st century that is bound to be technocratic society, it is necessary to prepare the new generation for this new role.

(திரு. ஜி. கே. பிரான்சிஸ்) [1986 ஏப்ரல் 18

It is remarkable to find that the Government of Tamil Nadu has more or less accepted in to the various changes of the new Education Policy to be introduced, except the concept of the model schools proposed in the new document which the Government of Tamil Nadu feels as to whether they would be replicable. For my part, I do not think there need be any difference of concept for the simple reason that model schools are to be the centres of excellence or in short, pace-setters for other schools. When the Government of Tamil Nadu has fostered the growth in development of autonomous colleges which were meant to constitute the centres of excellance, there need not be any variance about the establishment of model schools.

There can be no doubt that the Chief Minister's Nutritius Meals Programme has bolstered admission of students in Standards I—V; if nearly 64,00,000 of pupils are fed through 38,399 school feeding centres, it speaks of the overwhelming response to the Chief Minister's Nutritious Meals Programme. This is a scheme that has to be expanded.

One is also impressed by the tremendous growth of secondary education and higher secondary education. The Chief Minister's scheme of life-oriented school education at all stages meets the orientation given by the new educational policy and the introduction of this in nearly 660 nigh and higher secondary schools with a wide variety of 120 courses covering 75,000 students is a remarkable pilot project. (குறுக்கீடு.)

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. ரமணி அவர்களும் பேசவேண்டும். ஏறத்தாழ அவர்களும் பேசி முடிக்கிற போது 1½ மணி ஆகும். எனவே அதற்குப் பின்னர் தொடர்ந்து சட்டசபை நடக்கப் போகிறதா? அல்லது மாலை 4-00 மணிக்குத் தொடங்குவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே இதைப்பற்றிப் பேசியிருக்கவேண்டும். அலுவல் ஆய்வுக் குழு நடப்பது பற்றி எல்லா கட்சிகளுக்கும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடு) முதலிலே உறுப்பினர்களுடைய லிஸ்டிலே உங்களது பெயர் மூன்றாவது ஆக இருந்தது. பின்னாலே கட்சிக் கொறடா கேட்டுக்கொண்டதற்கிணங்க, அமைச்சருக்கு முன்பாகப் பேசலாம் என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அதனால் பேசினார்கள். இப்போது தான் உங்களுடைய கொறடா இதைப்பற்றி என்னிடம் பேசி விட்டுப் போனார்.



1986 ஏப்ரல் 18]

THIRU G. K. FRANCIS (contd): The introduction of computer sciences as a vocational component and which now exists in 120 higher secondary schools is a remarkable idea. In regard to Anglo-Indian schools, we are grateful to the Government of Tamil Nadu for having continued its liberal policy of free education to Anglo-Indian students. It needs to be pointed out that an increase of nearly 8 lakhs in the revised estimate by 9.98 lakhs must be increased as it does not meet the current fees levied by Anglo-Indian schools to non-Anglo-Indians and as a result of this Anglo-Indian students are in a serious danger of being charged fees by schools in order to meet the growing salaries bill brought into effect by the new scales of pay. This strikes at the very root of free education for Anglo-Indians. I urge the Government of Tamil Nadu to increase the amount allotted for Anglo-Indian schools specifically meant for Anglo-Indian students. If this is not done it will have a serious impact on the educational growth of Anglo-Indians. I would also like to thank the Government of Tamil Nadu for being liberal in continuing its support and aid for Anglo-Indian schools but I would like to urge the Government to effect the following to overcome the many problems faced by the Anglo-Indian schools.

I request the Government to draw up a new code of regulations, for Anglo-Indian schools, which will be more up to date.

The Government of Tamil Nadu must ensure the proper functioning of Boards of Anglo-Indian Schools. Norms must be laid down for the appointment of members on the boards of Anglo-Indian schools. Qualifications must be prescribed. Above all it must make it compulsory that about 2/3 of the Boards of Anglo-Indian Schools must be run by the Anglo-Indians who are academically qualified. I am raising this point because to-day many boards of Anglo-Indian Schools do not have an adequate representation of qualified Anglo-Indians. I would like to inform the Government that there is an Anglo-Indian school in the City of Madras in which the former school sergeant. has become the correspondent. What a sad commentary?

There are a large number of Anglo-Indians who are not given admission in Anglo-Indian Schools. This must be immediately stopped.

Further, in the appointment of staff, Anglo-Indians are not given due consideration and it is necessary to the Government to issue a directive to all Anglo-Indian Schools that whenever there is a vacancy the first preference must be to an Anglo-Indian. I also call upon the Government of Tamil Nadu to intrcduce the Chief Minister's Nutritous Meals Programme in all Anglo-Indian Schools and also I request that free uniforms, books and other amenities are provided in all Anglo-Indian Schools.

I further call upon the Government to constitute a Commission of Enquiry to look into the working and functioning of Anglo-Indian Schools as there is a general feeling that the Anglo-Indian Community is not getting its due benefit from the Anglo-Indian Schools because the Boards of these schools constitute Non-Anglo-Indians or academically unqualified Anglo-Indians.

I am sure that a lot of problem faced by Anglo-Indian Schools will be solved by the constitution of such a Commission. The Anglo-Indian Schools would serve the Community better. A High Power Committee under the aegis of the Director of School Education must be established to monitor the working and performance of Anglo-Indian Schools.

I would also call upon the Government to declare the Anglo-Indian Schools as Centres of excellence for the development of the English Language. This can be done by improving the quality of English through the teaching of English by highly qualified Anglo-Indian teachers.

In regard to Collegiate Education one has to commend the Government of the various universities of Madras University, Bharathidasan University and it is necessary to improve the opportunity for the pursuit of research in these Universities more especially for the College Teachers. Senior College Teachers must be permitted to pursue their Ph.D. programmes without any guides. For example in the Commerce Department of the Madras University, the present guides have their full quota of students, who wish to enroll for Research which means that any further Research by other College Teachers is totally blocked as there is no guide. Therefore it is necessary to permit Senior College Teachers who wish to continue without any guide whatsoever.

As we are moving into the 21st Century, the role of Science Technology has a greater emphasis. The greater impetus must be given to the development of Science and Technology for the socio-economic development of the State. The decision of the Government to set up 3 Science and Technology Centres along with the planetorium of Madras is remarkable!. This would go a long way in creating environment in the growth and development of Science.

(பிற்பகல் 12-40)

In regard to the State Libraries and the Libraries of Universities there is the urgent need to improve their performance and service. I call for developing a better Library Environment on par with that of Libraries of the the Bristish Council and the USIS. I would also stress that cheaper Library fees should be levied and more number of book





must be allowed. There is also urgent need to motivate the large number of students of Correspondence Courses to make best use of University and State Libraries. There is also urgent need to inculcate and improve the reading habit among the people in the State and especially to motivate the students, young students, to get into the reading habit, which is a vital pre-requisite to further one's knowledge and wisdom.

To conclude, I wholeheartedly support the demand for Education and commend the Hon. Education Minister for the progress achieved in the field of education. Thank you, Sir.

திரு. ப. நீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால்
கொண்டுவரப்பட்டிருக்கின்ற கல்வி மானியக் கோரிக்கையின்
மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக முதலிலே
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வித்துறைக்காக இன்று இந்த மானியத்திலே ரூ. 551
கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பெருந்தொகைதான்.
பாராட்ட வேண்டிய ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆனால்
இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருப்ப
தெல்லாம், ஏதோ நிர்வாக அறிக்கையிலே கொடுப்பதுபோல்
முந்தைய ஆண்டில் கொடுத்ததை சென்ற ஆண்டும், சென்ற
ஆண்டில் சொன்னதை இந்த ஆண்டும் சொல்வதாகத்தான்
இருக்கிறதே தவிர, புதியதாக திட்டம் ஒன்றும் இருப்பதாக
எனக்குத் தெரியவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் கடைசியாக
போடப்பட்ட பட்ஜெட்டில் கல்விக்காக ஒதுக்கப்பட்டது
ரூ. 36 கோடி. இந்த ரூ. 36 கோடியிலே தமிழகமெங்கும் தொடங்
கப்பட்ட பள்ளிகள் எத்தனை, கல்லூரிகள் எத்தனை, கல்வியின்
தரம் இந்திய அளவில் எப்படி இருந்தது என்பதெல்லாம் நாட
றிந்த உண்மையாகும். கல்வித்துறை இன்று எப்படியிருக்கிறது
என்று சொன்னால், இது ஒரு பொல்லூஷனாக மாறியிருக்கிறது.
இது ஒரு பிரச்சினையாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதைக்
களைய அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பது
ஒரு கேள்விக்குறியாக இருந்துவருகிறது. இதையெல்லாம்
சொல்வதற்குக் காரணம், தமிழ் நாட்டில் முன்னுதாரணமாக
பணியாற்ற வேண்டிய ஆசிரியர்கள் அரசியல் நடவடிக்கை
களில் ஈடுபட்டு, அரசியல்வாதிகளாக மாறிவருகின்றனர்.
இன்றைக்கு அவர்கள் தங்கள் கடமைகளை யெல்லாம் மறந்து
முழு நேரமும் அரசியல்வாதிகளாக மாறி, தங்களுடைய பணி
களை மறந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்
பதை யாரும் மறந்துவிட முடியாது. அந்தச் சூழ்நிலையில்
இன்றையதினம் கிராமப்புறக் கல்வி மிகவும் பின் தங்கிய நிலை
யிலே இருக்கிறது. இதற்கெல்லாம் நடவடிக்கை எடுக்க அமைச்
சரவர்கள் ஏனோ தயங்குகிறார்கள் என்பது அனைவரும்

அறிந்த ஒரு உண்மையாகும். கிராமக் கல்விச் சாலைகளில்
படிப்பதற்கும், அரசுப் பள்ளிகளில் படிப்பதற்கும் பொது
மக்கள் முன்வரத் தயங்குகிறார்கள். காரணம் கல்வியின்
தரம் தான். தனியார் கல்விச் சாலைகளின்மேல் மோகம்
அதிகமாகிக்கொண்டேயிருக்கிறது. கிராமப் புறங்களிலே கூட,
தனியார் கல்விச்சாலை பெருகிவருகின்ற நேரத்திலே, அரசு
கல்விச்சாலைகளின் தரம் தாழ்ந்துகொண்டே வருகிறது.
இது நீடிக்குமானால், வசதி படைத்தவர்கள்தான் இதுபோன்ற
பள்ளிகளிலே படிக்கின்ற நிலைமை இருக்கும். இப்படிப்பட்ட
வசதி படைத்தவர்கள் நகரங்களில்தான் இருக்கிறார்கள்.
அரசு ஊழியர்கள், தொழில் செய்பவர்கள், மற்ற உத்தி
யோகங்களில் உள்ளவர்கள்தான் இந்தத் தகுதியைப் பெற
முடியும். இந்த நிலையிலே சாதாரண பாமர மக்கள், தங்கள்
பிள்ளைகளை படிக்கவைப்பதற்கான வாய்ப்புகளை இழக்கின்
றனர். வெள்ளைக்காரன் ஆட்சியிலே பணம் கட்டித்தான் படிக்க
வேண்டுமென்று சொன்ன நிலையை மாற்றி பெருந்தலைவர்
காமராஜ் அவர்கள் ஏழை எளிய மக்களுக்காக இலவசக் கல்வித்
திட்டத்தைக் கொண்டுவந்து, அனைவருமே படிக்கும்
நிலையை ஏற்படுத்தினார்கள். இன்று மீண்டும் அதே நிலைக்கு
சென்று வசதிபடைத்தவர்கள்தான் படிக்க முடியும் என்ற
நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். உதாரணமாக இதில்
உயர்தரக் கல்வி, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி
இவைகளை யார் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்? டான்
பாஸ்கோ, சர்ச்பார்க் இதுபோன்ற பள்ளிகளில் படித்த
வசதிபடைத்தவர்கள்தான் இந்த இடங்களைப் பிடித்துக்
கொண்டிருக்கிறார்களே தவிர, எங்களைப் போன்ற கிராமப்
புறங்களிலிருந்து வருகின்றவர்கள் அங்கே இருக்கிறார்களா
என்று சென்று பார்த்தால், அது கேள்விக்குறியாகத்தான் இருந்து
கொண்டிருக்கிறது. இதுபோன்ற நிலைதான் இன்றைக்கு
இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு கல்வியும் பொரு
ளாதாரமும் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருக்கிறது. நிலை
யான வருமானத்தைத் தேடிக் கொள்ள வேண்டுமென்றால்
படித்தாக வேண்டும். இன்றுள்ள கல்வி அமைப்பிலே வசதி
யிருந்தால்தான் படிக்க வைக்க முடியும். இது இரண்டும்
ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருக்கிறது. ஆகவே
கிராமப்புறப் பொருளாதாரத்திற்கும் கல்விக்கும் நகர்புறப்
பொருளாதாரத்திற்கும் கல்விக்கும் இடைவெளி விரிசலடைந்து
கொண்டு வருகிறது. அது நாட்டுக்கு நல்லதா என்பதைச்
சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போதுள்ள கல்வி முறை ஏதோ எழுத்தர் வேலைக்கும்
கணக்கர் வேலைக்குமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது.
கல்லூரிப் படிப்பிற்கும் இப்படிப்பட்ட வேலைக்கும் சம்பந்தம்
இருப்பது தவிர்க்கப்பட வேண்டும். ஏதோ வேலைக்காகவும





வயிற்றுப் பிழைப்புக்காகவும் கல்வியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.
வேலை அளிப்பது அரசினுடைய கடமையாகும். கல்வியின்
தரத்தை ஒழுங்குபடுத்தவில்லை என்றால் இந்திய தேசம்
காக்கப்படுமா என்பது கேள்விக்குறியாகிவிடும்.

நாம் தமிழ், தமிழ் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம்.
தமிழனுடைய வரலாற்றைப் பார்த்தால் தமிழன் கடந்த காலத்
திலே கடல் கடந்து வாணிபம் செய்தான் என்று வரலாறு கூறு
கிறது. அப்படிப் பல வெளிநாடுகளிலே அவன் வாணிபம் செய்
தான் என்றால் அவன் பல மொழிகளைக் கற்றிருந்தான் என்ற
நிலைமை இருந்தது. பல நாடுகளிலே தன்னுடைய மொழியைப்
பரப்பினான், மற்ற மொழிகளையும் படித்து வந்தான். ஆனால்
அன்றைக்கு இருந்த நிலைமை இன்றைக்கு இல்லை. நாம்
மொழி கற்றுக்கொள்கிற எல்லையை கும்மிடிப்பூண்டியோடு
நிறுத்திக்கொள்ளக் கூடாது. அன்றைக்கு இருந்த தமிழனுக்கு
இருந்த நோக்கம் இன்றைக்கு நம்மிடத்திலே இல்லை. தமிழுக்கு
காங்கிரஸ்காரர்கள் எதிரிகள் போலவும் படம் பிடித்து மக்கள்
மத்தியில் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் தமிழை
ஆட்சிமொழியாக்கியது காங்கிரஸ் கட்சிதான் என்பதை அவர்கள்
சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர்
அவர்களே, காங்கிரஸ்காரர்கள் தமிழுக்கு விரோதிகள் என்று
நாங்கள் சொல்லவில்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர்
தான் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

திரு. ப. தீர்த்தராமன்: துணைத் தலைவர் அவர்களே,
அது போன்று இங்கே சொல்லவில்லை என்றாலும் ஏதோ காங்
கிரஸ்காரர்கள் தேசிய நோக்கத்துடனும் பரந்த நோக்கத்துடனும்
பேசுகின்ற நேரத்திலே தமிழின் பால் அவர்கள் ஏதோ அக்கறை
இல்லாதவர்கள் என்ற அளவுக்கு தங்களுடைய கூற்று இருந்து
கொண்டிருக்கிறது. தமிழ் மீது தமிழ்த்தாய் பெற்றெடுத்த
காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கிற அக்கறை இம்மியளவும்
குறைந்ததல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழின்
சிந்தனையும் எண்ணமும் உலகம் எங்கும் பரவ வேண்டும். தமிழ
கம் இந்திய தேசத்தினுடைய அங்கம். அந்த அங்கத்திலே
மொழியால் வேறுபட்டிருந்தாலும் தேசத்தால் நாம் ஒன்று
பட்டிருக்கிறோம். தேசிய மொழி ஒன்று வேண்டும். அதை
மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில் கருத்து
வேறுபாடு கிடையாது. மகாராட்டிரத்திலும், வங்காளத்திலும்,
கல்கத்தாவிலும், டெல்லியிலும் தமிழ்ச் சங்கம் அமைத்திருக்கிறார்
கள் என்பது அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் அறிந்த ஒன்று.

தமிழை, தமிழ் வளர்ச்சியை மற்ற மாநிலங்களிலே பரப்புகின்ற அளவுக்கு தமிழன் இருக்க வேண்டுமே தவிர நம்முடைய எல்லை அருகிலே உள்ள கும்மிடிப்பூண்டியோடு நிறுத்திவிடக் கூடாது.

இளம் வயதிலேயே கற்கிற கல்வி பசுமரத்தாணி போல் பதியக் கூடியது. கல்வியிலே தேசிய நோக்கமும் நிறைந்து இருக்க வேண்டும். அந்த நோக்கத்தோடு தான் இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வந்திருக்கிற கல்வித் திட்டம் நாட்டை முன்னேற்றுவதாக இருக்கப் போகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நதி நீர்ப் பிரச்சினையிலே ஒட்டு மொத்தமாக அத்தனை கட்சிகளும் சேர்ந்து அதை தேசிய மயமாக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அதே போன்று ஏன் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்ற வினாவை நான் எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

படித்தவர்களும், ஆசிரியர்களும் இன்றைக்கு அரசுக்கு எதிராக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நாடறிந்த உண்மையாக இருப்பதைக் கடந்த தேர்தல் காட்டிவிட்டிருக்கிறது. இது எதனால் ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து, உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சூழ்நிலை வேறுவிதமாக மாறி விடும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அது எந்தப் பகுதியிலே நடந்திருந்தாலும் அதற்கு என்ன காரணம் என்பதை ஆய்ந்து முடிவெடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை எளியவர்களுக்கு இலவசமாக வேட்டி, சேலை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அது பாராட்டப்பட வேண்டிய திட்டம். அதனுடைய பலனை கிராமப் பகுதி மக்கள் அனுபவிப்பதை நானும் பார்க்கிறேன். அது மகிழ்ச்சியான ஒன்றுதான். வேட்டி, சேலையை அனைவருக்குமே நாம் வழங்குவது என்றால்—வசதி படைத்தவர்களுக்கும் வழங்குவோம், கார், பங்களா வைத்திருப்பவர்களுக்கும் வழங்குவோம் என்று சொன்னால் அவர்கள் எப்படிப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பது நாம் அறிந்ததே. ஏதோ வேலைக்காரிக்குக் கொடுத்து விடுவார்கள் அல்லது கை, கால் துடைப்பதற்குத்தான் பயன்படுத்துவார்கள். எனவே, இருப்பவர்களுக்குக் கொடுப்பதால் எந்தப் பயனும் கிடையாது. அதைப் போல, சத்துணவுத் திட்டத்தில் எல்லோருக்கும் அளிக்கிறோம்





என்று பெருமைப்பட்டுக் கொண்டால் கூட, அதை இல்லாதவர்கள் தான் பயன்படுத்துகிறார்களே தவிர, இருப்பவர்கள் அதை விணடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை உணர்ந்து இல்லாதவர்களுக்கு ஒரு நேரம் அளிப்பதைவிட அவர்களுக்கு மூன்று நேரமும்கூட கொடுக்கின்றவகையில் விடுதி அமைத்தாவது செய்து இல்லாத மாணவர்கள் படிப்பதற்கான வாய்ப்புக்களை நல்க வேண்டும்; அதைப்பற்றி ஆய்ந்து பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப் பகுதிகளில் தன்னிறைவுத் திட்டம், இன்னும் மற்ற என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களின் மூலமாக நல்ல கட்டிடங்களை கிராமப் பகுதிகளிலே உள்ள பள்ளிகளுக்குக் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அப்படி அங்கே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் நல்ல கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்தாலும் கூட, ஆயிரம் ரூபாய் இரண்டாயிரம் ரூபாய் அளவிலே பர்னிச்சர்கள் போடப்படாத சூழ்நிலை இருப்பதால், நல்ல கட்டிடமாக இருந்துங்கூட அமர்வதற்கு வசதியற்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இதைக் கருத்திற் கொண்டு செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இவ்வளவு கல்லூரிகளும், பாடசாலைகளும் வந்து கல்வித் தரம் உயர்ந்தாலும் கூட, என்னுடைய தொகுதியில், மாவட்டத் தலைநகருக்கு அருகிலே இருக்கின்ற தொகுதியாக இருந்தாலும் கூட, சாதாரணமாக, துவக்கப்பள்ளிகளே இன்னும் 25 பள்ளிகள் தேவை என்று சொல்லக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கிறது. இது போன்ற நிலைமைகள் கிராமப் பகுதிகளில இருந்து கொண்டிருக்கிறது. அதைக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஒன்றைச் சொல்லி முடிக்க நான் ஆசைப்படுகிறேன். சிவகங்கை மன்னர் காலத்து கலைக் கல்லூரி அரசால் நிரந்தரமாக எடுக்கப்பட்டு ஐந்தாண்டுகளுக்கு மேலாகியும் அக் கல்லூரி ஆசிரியர்களையும், அலுவலகப் பணியாளர்களையும் அரசுப் பணியில் உட்படுத்தும் ஆணை வெளியிடப்படவில்லை. அதன் காரணமாக ஆண்டு ஊதிய உயர்வும் கடந்த மூன்றாண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பத்தாண்டுகள் பணிபுரிந்த உதவிப் பேராசிரியர்களை, பேராசிரியர்களாக 1980 ஆம் ஆண்டு ஜூலையில் இருந்து பதவி மேம்படுத்தப்படவில்லை. அதனால் ஆசிரியர்களும், அலுவலர்களும் துன்பத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதையும், அவர்களை அரசுப் பணியில் உட்படுத்தும் ஆணை வெளியிடப்பட வேண்டும்; ஆண்டு ஊதிய உயர்வும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது). ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 13 நிமிடங்கள் ஆகிவிட்டன ; இன்னொரு நாளைக்குப் பேசிக்கொள்ளலாம். ஒவ்வொருவருக்கும் இரண்டு நிமிடங்கள், இரண்டு நிமிடங்கள் என்று கூடுதலாகக் கொடுத்தால் எப்படி முடிப்பது ? பத்து நிமிடங்கள் என்றால் பதின்மூன்று நிமிடங்கள் பேசுகிறீர்கள். இதனால் அடுத்த உறுப்பினர்கள் சண்டைக்கு வருகிறார்கள்.

திரு. ப. தீர்த்தராமன் : ஒரு கவிஞன் சொன்ன சிறிய கவிதையை மட்டும் சொல்லி முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

> '' வாயில் அழுக்கு என்று நீரை எடுத்துக் கொப்பளித்தேன்;
> கொப்பளித்துக் கொப்பளித்து நீரும் தீர்ந்தது ; அழுக்கும்
> போகவில்லை ; உற்றுப் பார்த்தேன்; நீரே அழுக்கு ''

அப்படி இந்த ஆட்சியைத் தூய்மைப்படுத்த வேண்டுமென்று நினைத்தால்கூட அரசு தூய்மையாக ஆனால்தான் ஆட்சியை நிர்வாகத்தைத் தூய்மைப் படுத்த முடியும் என்ற தகவலைச் சொல்லி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீர்த்தராமன் அவர்கள் புதுக்கவிதை ஒன்றை இங்கே சொன்னார்கள். அந்த கருத்து, மாநில அரசுக்குப் பொருந்துமா, மைய அரசுக்குப் பொருந்துமா, எதற்குப் பொருந்தும் என்பதைச் சொன்னால் பரவாயில்லை.

திரு. ப. தீர்த்தராமன் : துணைத் தலைவர் அவர்களே, தூய்மையாக இல்லாத எல்லா அரசுகளுக்கும் இது பொருந்தும்.

திரு. ச. சங்கரலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை நானும் ஆதரித்து என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தமிழகத்தில் கல்வித் துறை மறுமலர்ச்சி பெற்றிருக்கிறது, தமிழகத்தில் கல்வித்துறை தான் இந்தியாவிலேயே சிறப்பாக சேவை செய்திருக்கிறது. அதற்காக வயது வந்தோர், கல்வியிலே முதலிடம் பெற்று, கடந்த இரண்டு ஆண்டுகளாக மத்திய அரசு விருதையும் பாராட்டுக்களையும் தமிழக அரசு பெற்றிருக்கிறது என்பதை நான் அன்போடு நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.





மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் பொறுப் பேற்றதற்குப் பின்னாலே, தமிழகத்தில் கல்வித் துறையில் மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும், புதிய, புதிய மாற்றங்கள் கண்டு, வளமான தமிழகத்தை உருவாக்கும் ஆக்கப் பணிகளில் இந்த அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வித் துறையிலே தொழில் கல்வி முறை கொண்டு வரப் பட்டு, அந்தக் கல்வி முறை இன்றைக்குச் சிறப்பாக, தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொழில் துறையிலே முன்னேறிய ஜப்பான் போன்ற நாடுகள்போல், தமிழகமும் தொழில் துறையிலே முன்னேற்றம் பெற்று உலக அரங்கில் அதனுடைய பெருமையை நிலை நிறுத்திக் கொள்ள இந்தத் தொழில் கல்வி ஒருவாய்ப்பாக அமையும் என்பதை நாமெல்லாம் பார்க்கக்கூடிய அவசியம், நிச்சயமாக, வருங்காலத்தில் அமையும் என்று நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரிகளில் முதுநிலைப் பட்டப் படிப்பு முறைகளில் புதிய பட்டப் படிப்புகளை அமுலுக்குக் கொண்டு வந்து, ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி, தமிழகம் பீடுநடை போடுகிறது.

தமிழகத்தில் தமிழ்தான் ஆட்சிமொழி ; எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதில் இந்த அரசு இன்னும் உறுதியாக இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்தியும் வருகிறது. இரு மொழிக் கொள்கையை இந்த அரசு தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது. மும்மொழித் திட்டத்திற்கு இந்த அரசு ஒருபோதும் ஆதரவு தெரிவிக்காது என்பதை நான் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி மொழி தமிழகத்தில் எந்த உருவத்தில் நுழைந்தாலும் அதை எதிர்க்க இந்த இயக்கமும், இந்த அரசும் ஒருநாளும் தயங்கியதில்லை; தயக்கம் காட்டப் போவதும் இல்லை. இந்தியை ஆட்சி மொழியாக, எந்தக் காலகட்டத்திலும் நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதாக இல்லை. சிலர் இந்தியை எதிர்க்கிறோம், இந்தியை நாங்கள் நுழைய விட மாட்டோம் என்று மேடையிலே முழங்குகிறார்கள். ஆனால், வீட்டிலே தங்களுடைய குழந்தைகளுக்கு இந்தி ஆசிரியரை வைத்துப் பாடம் கற்றுத் தருகிறார்கள். அதுபோல் இந்த அரசும் இந்த இயக்கமும் இல்லாமல், நாட்டிலே, அரசுத் துறைகளிலும் அனைத்துத் துறையிலும் இந்தியை எதிர்த்தே வந்திருக்கிறது என்பதை நான் அன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ச. சங்கரலிங்கம்] [1986 ஏப்ரல் 18

இரு மொழிக் கொள்கையிலே இந்த அரசு இன்னும் அழுத்தந் திருத்தமாக இருக்கிறது. அண்ணாவின் கொள்கையி விருந்து இந்த அரசு இன்னும் பின்னோக்கிச் செல்லவில்லை. முன்னோக்கிச் செல்கிறது என்பதை நான் அன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

THIRU T. VENKATA REDDY : Mr. Deputy Speaker Sir, May I know the names of persons whose boys are learning Hindi at home ?

திரு. ச. சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே சொன்னால், தமிழ்நாடு அவையிலே சரியான பதிலைத் தர முடியும்.

திரு. டி. வெங்கட ரெட்டி : துணைத் தலைவர் அவர்களே, சிலபேர்கள் இந்தியை எதிர்க்கிறார்கள், அவர்கள் பிள்ளைகள் எல்லாம் இந்தியைப் படிக்கிறார்கள் என்று உறுப்பினர் சொல் கிறார். எந்த, எந்தப் பெரியவர்கள் பிள்ளைகள் வீட்டிலே இந்தி படிக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ச. சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே குற்றம் உள்ள நெஞ்சுதான் குறுகுறுக்கும். இருந்தாலும் குறிப் பிட்டு நான் பேசவில்லை. என்னுடைய தொகுதியிலே இதே மாதிரி ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அதை எல்லாம் என்னால் தெளிவாக விளக்கிச் சுட்டிக் காட்ட முடியும்.

(பிற்பகல் 1–00)

அடுத்தபடியாக, ஆரம்பப் பாடசாலைகளில், சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டு அது சிறப்பாக நடந்தேறி வரு கிறது; சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்ட பின்னாலே, தமிழகத்தில் மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. இலவசப் பாடப் புத்தகம் வழங்கப்பட்டு, அது சீரும் சிறப்புமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தை சரியாக அமுல்படுத்த குறிப்பிட்ட காலத் தில புத்தகங்கள் வழங்க நம்முடைய அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

சீருடைத் திட்டம் இந்த ஆண்டு அமுல் படுத்தப்பட்டிருக் கிறது. அது சிறப்பான திட்டம். சீருடைத் திட்டத்தினால் மாணவ மாணவிகள், அனைவரும் ஒரே "யூனிஃபார்மில்" பள்ளிக்குச் செல்கிறபோது, வசதியற்றவர்களுடைய குழந்தை கள், வசதிபடைத்தவர்களுடைய குழந்தைகள் என்று வித்தியா சம் இல்லாமல் ஒரே அணியாக அமர்ந்திருக்கும்போது அந்த பிஞ்சு நெஞ்சங்களிலே உயர்வு-தாழ்வு மனப்பான்மை இல்லாமல் நல்ல எண்ணம் வளருவதற்கு ஏற்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கும். அப்படிப்பட்ட ஒரு நல்ல எண்ணத்திற்கு இந்த சீருடைத் திட்டம் பேருதவியாக இருப்பதால் இந்தத்



1986 ஏப்ரல் 18] [திரு. ச. சங்கரலிங்கம்]

திட்டத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும், இது ஒரு மணிமகுடம் போல் அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். குறிப்பாக ஜனதாக் கட்சித் தலைவர் பெரு மதிப்பிற்குரிய பெரியவர் ஆறுமுகம் அவர்கள் குறிப்பிடும்போது ஆசிரியர்கள் பணிக்குச் செல்லாமல் கையெழுத்துப் போட்டு விட்டு வீட்டுக்கு ஓடிவிடுகிறார்கள்; அவர்கள் மீது நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்தக் கருத்தைச் சொல்லிவிட்டு அடுத்து ஒரு குறைபாட்டைச் சொன்னார்கள். அதாவது ஒரு ஆசிரியரை மாற்றியது தவறு, மாற்றலாமா என்று கேட்டார்கள், இந்த இரண்டு கருத்தில் எதை நீங்கள் ஆதரிக்கிறீர்கள் என்று நான் கேட்க விரும்பு கிறேன். யாராக இருந்தாலும் தவறு செய்தால் உடனடியாக மாற்றுவது அரசின் கடமை என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சில ஆசிரியர்களைப் பார்க்கும் போது, அவர்கள் காலையிலே பள்ளிக்குச் சென்று கையெழுத்துப் போட்டுவிட்டு, சொந்தப் பணிக்குச் சென்றுவிடுகிறார்கள். சிலர் 'பியர்லஸ் ஏஜென்ட்'டாகப் பணியாற்றுகிறார்கள். சிலர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தலைவர்களாக இருக் கிறார்கள். சிலர் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்திற்கு தலை வர்களாக இருக்கிறார்கள். இன்னும் பல ஆசிரியர்கள் பலதொழில் களில் ஈடுபட்டிருப்பதால் கிராமப்புறங்களில் கல்வியின் தரம் உயரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் எல்லா ஆசிரியர்களும் இப்படி இருக்கிறார்கள் என்று ஒட்டு மொத்தமாக சொல்லவில்லை; ஒரு சில ஆசிரியர்கள்தான் இப்படி இருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை கண்டிப்பாக ஆசிரியர்களை மாற்றுகின்ற திட்டத்தை இந்த அரசு கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். இப்படிப் பட்ட ஒரு சட்டம் இருந்தாலும் அதை சரியாக அமுல் படுத்த வில்லை; அமுல்படுத்தாத அந்தச் சட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே ஊரிலே பணியில் அமர்ந்து அதே ஊரிலே ஓய்வு பெறு கின்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். கல்வியின் தரம் உயராமல் இருப்பதற்கு இது ஒரு முக்கியமான காரணம் என்று நான் கருது கிறேன்.

என்னுடைய சங்கரன்கோவில் தொகுதியில் அரசு மேல்நிலைப்
பள்ளியில் 1,844 மாணவர்கள் பயில்கிறார்கள். ஆயிரம் மாண
வர்கள் படிக்கின்ற அளவுக்குத்தான் கட்டிட வசதி இருக்கிறது.
ஆகவே, இந்த ஆண்டிலேயே துரித நடவடிக்கை எடுத்து சங்கரன்
கோவில் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிட வசதிகளை
ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் ஒரு புதிய பல்கலைக் கழகத்தை
உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே மதுரை
காமராஜ் பல்கலைக் கழகத்தில் 112 கல்லூரிகள் இணைக்கப்பட்
டிருக்கின்றன. நிர்வாக சீர்திருத்தத்தைக் கருதி, நெல்லை
மாவட்டத்தில் ஒரு பல்கலைக் கழகத்தை அமைத்து, இந்திய அர
சியல் சட்டத்தை உருவாக்கித் தந்த டாக்டர் அம்பேத்கார்
அவர்களுடைய பெயரை அந்தப் பல்கலைக் கழகத்திற்கு வைக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி கடந்த ஆண்டு உருவாக்கப்பட்டு,
அது சிறப்பாக நடைபெற்று வருகிறது. இருந்தாலும் ஆதிதிரா
விடர் இனத்திற்கு அந்த பயிற்சிப் பள்ளியில் ஒதுக்கப்பட்ட பல
இடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதற்கு
காரணம் என்னவென்றால், மார்க் வித்தியாசம் இருக்கிறது.
மொத்த பாடங்களில் மார்க் ஓரளவுக்கு குறைக்கப்பட்டிருந்தா
லும், மொழிப் பாடங்களில் 50, 50 மார்க் இருக்க வேண்டுமென்று
வைத்திருப்பதால் ஆதிதிராவிடர் மாணவிகளை சேர்த்துக்கொள்ள
முடியவில்லை. ஆகவே கேட்டதை எல்லாம் கொடுக்கிற கற்பக
விருட்சம் போலவும் காமதேனு போலவும் இருக்கிற அண்ணா
தி.மு.க. அரசு இந்த மார்க் அளவை குறைத்து, ஆசிரியர் பயிற்
சிப் பள்ளியில் தாழ்த்தப்பட்ட மாணவிகளை சேர்த்துக்கொள்ள
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தனியார் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும்
ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகின்ற 18
சதவீத இடம் நிரப்பப்படாமல் இருக்கிறது. அரசு அதைக்
கவனித்து, 18 சதவீதம் நிரப்பப்படாமல் இருக்கிற கல்லூரி
களிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் கடுமையான நடவடிக்கை
எடுத்து, 18 சதவீதம் வேலைவாய்ப்பை பூர்த்தி செய்ய உத்தர
விட வேண்டுமென்று கேட்டு, இந்த கல்வி மானியக் கோரிக்கையை
வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி.
வணக்கம்.

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்
களே, கல்வி மானியத்தின் மீது இரண்டு நாட்களுக்கு நாம்
விவாதத்தை வைத்தும் கூட போதிய அளவுக்கு எல்லா உறுப்
பினர்களுக்கும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல முடியாத
நெருக்கடி நிலையிலே நாம் இருந்துகொண்டிருக்கிறோம். இருந்
தாலும் இன்று மாலையிலும் வைத்து இதை நாம் நிறைவு செய்ய



வேண்டியிருக்கிறது. மத்திய அரசினுடைய புதிய கல்விக்
கொள்கை சம்பந்தமாக நமக்கு நல்ல பெரிய பிரசுரங்களைத்
தயார் செய்து கொடுத்து இருக்கிறார்கள். நாடு முழுவதற்கும்
இன்றைக்கு அது முக்கியமான விவாதப் பொருளாக இருக்கிறது.
நமது நாட்டிலுள்ள ஒரு முக்கியமான நடவடிக்கையாக இந்தக்
கல்விக் கொள்கையை மத்திய அரசு உருவாக்கி நமக்கு முன்னால்
வைக்கிறது. நம்முடைய கல்வியமைச்சர் அவர்களுடைய குறிப்
பிலே இதைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதிலே
அவர்கள் என்ன சொல்கிறார் என்றால் புதிய கல்விக் கொள்கை
யின் இறுதி வடிவத்தை உருவாக்கும் முன் மேற்கண்டவற்றையும்,
பிறவற்றையும் கவனமாகப் பரிசீலித்த பின்னரே மத்திய அரசு
முடிவெடுக்கும் என்று இவ்வரசு நம்புகிறது : முக்கிய அம்சங்கள்
குறித்து நாடு தழுவிய முழுமையான ஒற்றுமை உடையதாக புதிய
கல்விக்கொள்கை அமைந்து நம்நாடு 21 ஆம் நூற்றாண்டு நோக்கி
முன்னேற வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்று நமது
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கும்படியான அந்தக்
கொள்கைக் குறிப்பில் இருந்து கொண்டிருக்கிறது.

விஷயம் என்னவென்றால் இதைப்பற்றி ஒரு முக்கியமான
விவாதம் நாம் இங்கே நடத்தியாக வேண்டும். இப்போது இந்தக்
கல்விக்கொள்கை சம்பந்தமாக நமது மாநிலத்தில் கடந்த ஒரு
ஆண்டுக்காலமாக நாம் எப்படி கல்விக் கொள்கையை நிறை
வேற்றினோம் என்பதையும் நடை முறையில் ஏற்பட்ட வெற்றி
தோல்வியையும் ஆராய்ந்து நாம் சரியான முடிவு எடுக்கக்கூடிய
விஷயம் இது. நாடு தழுவிய இந்த மத்திய அரசின் கொள்கை
பற்றியும் முழுமையான விவாதம் நடத்துவது என்பது சாத்தியம்
இல்லை. ஏதோ இங்கொன்றும், அங்கொன்றுமாகத் தொட்டு
விட்டுப் போகிறோமே தவிர வேறு ஒன்றும் அடிப்படையாக
இதைப்பற்றிப் பேச முடியாது. மாநில அரசுக்கு மிகப் பெரிய
வித்தியாசம் மத்திய அரசினுடைய கொள்கையோடு இருக்கிறது
என்று நான் கருதவில்லை. அவர்களுக்கு இருக்கிற வித்தியாசம்
எல்லாம் இருமொழிக் கொள்கையா, மும்மொழிக் கொள்
கையா என்ற அடிப்படையில்தான் இருக்கின்றது. வேறு விதத்தில்
அவர்களுக்குப் பெரிய வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தெரிய
வில்லை. ஆகவே என்னுடைய கட்சி சார்பில் நான் சொல்லக்
கூடிய கோரிக்கை என்னவென்றால் இந்த விவாதத்தை ஒரு
இரண்டு நாட்களுக்கு இந்தச் சட்டமன்றத்தில் தனியாக நடத்த
வேண்டும் என்பதுதான். இதை மத்திய அரசு இன்னும் முடித்து
விடவில்லை. நாடு முழுவதும் இந்த விவாதம் நடக்கிறது.
பாராளுமன்றத்தில் இதைப்பற்றிய விரிவான விவாதம் நடக்க
வேண்டியுள்ளது. ஆக இரண்டு நாட்களுக்குத் தனியாக இந்தச்
சட்டமன்றத்தில் இந்த விஷயத்தை விவாதித்து சரியான முடிவுக்கு
நாம் வரவேண்டும். அப்போதுதான் கருத்துக்கள் எல்லாம் என்ன
என்பது பற்றி நமக்குத் தெளிவாகக் கிடைக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசும்போது வெறும் மொழிக் கொள்கை அடிப்படையில் மட்டும்தான் எதிர்க்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அதுமட்டுமல்ல ; மத்திய, மாநில அரசுகளுக்கு என்று அதிகாரங்கள் இருக்கின்றன. மேலும் உயர் வர்க்கக் கல்விக்கு அது வழி வகுக்கும். இதுபோன்ற பல காரணங்களைக் கருத்தில் கொண்டுதான் மாநில அரசு அதை எதிர்க்கிறது.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, இந்த விஷயங்களை உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே எழுத்துமூலமாக க்ரிஸ்டல் கிளியராக இங்கே வைக்கவேண்டும். அப்போதுதான் தெரியும். கூட்டுப் பட்டியலிலே இன்றைக்கு இந்த விஷயம் வந்திருப்பதால் இதைப் பற்றி மாநில அரசும், மத்திய அரசும் நன்றாக விவாதித்து காரியங்களைத் திட்டமிட்டுச் செய்யவேண்டும் என்று சொல்கிறோம். அப்போது உங்களுக்குள் வித்தியாசம் வராமல் இருக்க முடியாது. நீங்கள் உங்கள் கொள்கைக் குறிப்பிலே தெளிவாகக் குறிப்பிடவில்லை. என்றாலும் பேசும்போது அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். நான் இங்கே வைக்கப்பட்டு இருப்பது பற்றிப் பேசுகிறேன். இரண்டு நாள் விவாதம் வேண்டுமென்று நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய கட்சியினுடைய நிலைப்பாட்டை நாங்கள் தெளிவாக எடுத்துச் சொல்கிறோம். மத்திய அரசின் இந்தக் கொள்கையைப் பொறுத்தவரையில் எங்களுக்குக் கடுமையான ஆட்சேபணை இருக்கிறது. பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டு முதல் முதலாக அதைப்பற்றிய கருத்துக்களை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். இது மேல் மட்டத்தில் இருக்கின்ற எலைட் செக்ஷனுக்குக் கல்வி கொடுக்குமே தவிர நாட்டில் இருக்கும்படியான கோடானுகோடி மக்களுக்கு, கீழ் மட்டத்தில் இருக்கும்படியான மக்களுக்கு, பள்ளத்தில் வீழ்ந்து கிடக்கிற குருடர்கள் கல்வி பெற்று விழி பெறவேண்டும் என்ற வகையில் அந்த மக்களுக்கு எல்லாம் கல்வி தரவேண்டும் என்ற பாரதியாரின் கருத்துக்களுக்கெல்லாம் இதிலே சம்பந்தம் இல்லை. ஆனால் அந்தக் கொள்கை எங்களுக்கு இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

அடுத்த படியாக அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளிலே கல்வியை பரப்புவதில் மிக முக்கியமான பங்கு வகிக்கக் கூடியவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் இங்கே கடுமையான விமர்சனங்கள் வந்தன. நியாயமான விமர்சனங்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால் கிராமப் புறங்களில் இருக்கிற ஆசிரியர்கள்......





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் அடுத்த தலைப்புக்கு போவதற்கு முன்னாலே ஒருவிளக்கத்தை அவர்களிடமிருந்து பெற விரும்புகிறேன். மாநில அரசினுடைய இரு மொழிக் கொள்கையை அவருடைய கட்சி முழுக்க முழுக்க ஆதரிக்கிறது என்று கருதுகிறேன். அவர்கள் அதிலே உறுதியாக நிலையாக நிற்கின்றார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : உங்களுக்கு ஒன்று, நாங்கள் மத்திய சர்க்கார் சொல்வதை பூராவும் ஆதரிக்க வேண்டும், அல்லது மாநில சர்க்காரை பூராவும் ஆதரிக்க வேண்டும், இது இரண்டும் அல்ல எங்களுடைய நிலை. எங்களுக்கென்று ஒரு கொள்கை இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் கேட்கிறேன். உங்களுடைய கொள்கை என்ன என்பதைத்தான் நான் கேட்கிறேன்.

திரு. கு. ரமணி : இப்படி நீங்கள் வெட்டுவதும் பிறகு அதை ஒட்டி வைப்பது என்பதையும் கொஞ்சம் பொறுமையோடு செய்தால் நல்லது. எங்களுக்கென்று ஒரு சொந்தக் கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கை என்னவென்றால் நாங்கள் இந்த நாட்டில் இருக்கிற எந்த ஒரு மொழிக்கும் விரோதிகள் அல்ல. அது ஒன்று. இரண்டாவது, ஆங்கிலம்தான் இங்கே பிரதான மொழியாக இருக்க வேண்டும் என்பதையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த தமிழ்நாட்டில் இருக்கிற மக்களுக்கு தமிழ் தாய் மொழி. அந்த மொழி இங்கே பிரதான மொழியாக இருக்க வேண்டும். அனைத்திந்திய ரீதியிலே தொடர்பு சொள்ள வேண்டிய மொழி என்னவென்று இந்திய மக்கள் தீர்மானிக்க வேண்டும். அப்படி அது தீர்மானிக்கிற வரையில் இந்த ஆங்கிலமே தொடர்பு மொழியாக இருக்கும். இதுதான் எங்களுடைய நிலை. இதிலிருந்து நீங்கள் முடிவுக்கு வரலாம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் முன்னுக்கு வந்து விட்டோம். நாங்கள் கேட்க விரும்புவது, தமிழ் ஆங்கிலம் என்ற இரு மொழி போதும். அதுதான் எங்களுடைய அரசாங்கத்தின் கொள்கை.. எங்களுடைய கட்சியின் கொள்கை. அறிஞர் அண்ணா வகுத்துத் தந்த கொள்கை. அந்தக் கொள்கை பற்றி உங்களுடைய கட்சி என்ன கருதுகிறது. அதைப்பற்றி கொஞ்சம் தெளிவாகச் சொன்னால் பரவாயில்லை. மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் பதில் அளித்து குழப்பத்தை தான் அதிகப்படுத்துவது போல் இருக்கிறது. அதைத்தான் நான் கேட்கிறேன்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, குழப்பம் மாண்புமிகு டாக்டர் காளிமுத்து அவர்களுக்கு வரலாம், எங்களுக்கு அதில் குழப்பம் இல்லை. எங்களைப் பொறுத்த வரையில் அகில இந்திய தொடர்பு மொழி, இந்த நாட்டு மக்களுடைய ஒரு மொழி, தொடர்பு மொழியாக வருகின்ற வரைக்கும் மக்கள் அதனை ஏற்றுக் கொள்கிற வரைக்கும்............

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, நான் வேண்டுமென்றே குறிக்கிடவில்லை. இந்த தொடர்பு மொழி என்று சொல்லுவதால், அவர்கள் இந்தியை மறைமுகமாக ஆதரிக்கிறார்களா அதைத்தான் நான் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் குறுக்கிடுவதற்கும் ஒரு அளவு இருக்கிறது. அதில் நியதி இருக்க வேண்டும், நீதி இருக்க வேண்டும். என்னுடைய வாயிலே வார்த்தை இருக்கும்போதே குறுக்கிட்டு பேசுகிறீர்களே,

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அவர் வாக்கியத்தை முடித்த பிறகு வேண்டுமானாலும் நான் பேசுகிறேன். ஆனால் நான் கேட்பது அதுதான.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, வாக்கியத்தை முடித்த பிறகு, ஒரு ஐடியாவிற்கு வந்ததற்குப் பிறகு கேளுங்கள். எங்களுடைய கருத்து இந்த தொடர்பு மொழி, இந்திய நாட்டு மக்களுடைய வளர்ச்சிப் போக்கு காலத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிலை வரும். அது வரையிலும் இந்தியை நாடு முழுவதும் தொடர்பு மொழியாக வைத்துக் கொள்ளக் கூடிய ஒரு நிலையை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அது வரைக்கும் ஆங்கிலத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலை.

இதில் நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்றால் ஒன்று நாங்கள் உங்களை ஆதரிக்க வேண்டும் அல்லது உங்களை எதிர்த்து அந்தப் பக்கம் போய் நிற்கச் சொல்லுகிறீர்கள். அது கரக்ட் அல்ல; இதுதான் எங்களுடைய நிலை. எந்த மொழிக்கும் நாங்கள் விரோதி அல்ல. காரணம் மொழி என்பது ஒரு பகுதி மக்களால் உருவாக்கப்படுவது. விளையாட்டல்ல அது. சமுதாயத்தினுடைய வளர்ச்சியில் ஒரு பகுதி மக்களால் உருவாக்கப்படுவது. ஆகவே எந்த மொழிக்கும் நாங்கள் விரோதி அல்ல.

ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டிலே தமிழ் மொழி நம்முடைய மொழியாக இருந்து, அது போதனா மொழியாகவும் நிர்வாக மொழியாகவும், சொல் வழக்கத்தில் இருக்கக் கூடிய மொழியாக





வும் எல்லாப் பாடங்களையும் கற்பிக்கக் கூடிய மொழியாகவும் அது இருக்க வேண்டும். ஆங்கிலம் தான் இப்போதைக்கு தொடர்பு மொழியாக இருக்க வேண்டும். இதைத்தான் நாங்கள் பாலிசியாக வைத்துக் கொண்டு, சொல்லிக் கொண்டும் வருகிறோம். நாங்கள் இன்றைக்கு எடுத்திருக்கின்ற இப்படிப்பட்ட கொள்கையானது உங்களுக்குக் கிடையாது. எங்களுடைய மொழிக் கொள்கை அஸ்திவாரம் உடையது. இதைத் தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இந்தி திணிக்கப்படுவதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா?.

திரு. கு. ரமணி : இந்தக் கேள்வியை கொஞ்சம் கூட யோசிக்காமல் தான் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். நாங்கள் அந்த திணிப்பை எப்போதும் எதிர்த்துக் கொண்டே இருப்பவர்கள். நீங்கள் எங்களிடத்திலேயே வந்து எங்கள் கருத்தையே மறுபடியும் கேட்டால், கொல்லன் தெருவிலேயே ஊசியை விற்றால் என்ன செய்வது? (குறுக்கீடுகள், சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எவ்வளவு பேசினாலும் 1.30-க்குள் முடித்துவிட வேண்டிய நிலை ஏற்படலாம். ஒன்று மாலையில் அவையை வைத்துக் கொள்வது, இல்லை நாளைக் காலையில் வைத்துக் கொள்வது என்பது குறித்து சபா நாயகர் அவர்கள் அறிவிக்க இருக்கிறார்கள். ஆகவே அதற்குள் குறுக்கீடுகள் வராமல்பேசி முடித்துக் கொள்ள வேண்டியது உங்களுடைய சாமர்த்தியம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, இந்தி திணிப்பை அவருடைய கட்சி ஆதரிக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் வெளியிட்டது குறித்து எனக்கு மிகுந்தமகிழ்ச்சி. பாராட்டுக்கள்; நன்றி. அந்த கட்சியினுடைய கொள்கையாக அதை கேரளத்திலும், மேற்கு வங்கத்திலும் கடைப் பிடிக்கிறார்களா? அவர்கள் அப்படிக் கடைப் பிடித்தால் அது பெரிய அளவில் இந்திய துணைக் கண்டத்தில் ஒரு மறு மலர்ச்சிக்கு வழி வகுத்து, மிகச் சிறந்த மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த வழி வகுக்குமே, அந்த ஏற்பாட்டை நீங்கள்ஏற்றுக் கொள்கிறீர்களா என்பதை தான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அகில இந்திய பார்வையை தமிழ் நாட்டிலிருந்து விஸ்தரித்து அதை என் தலையில் வைத்து இது மேற்கு வங்கத்திலும், கேரளாவிலும் அமல் செய்யப்படுமா என்று கேட்டால் அதற்கு பதில் கிடைக்காது உங்களுக்கு.

எங்களுக்கென்று ஒரு கொள்கை இருக்கிறது. சொன்னால் அதையும் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறீர்கள். எங்களுடைய கட்சியின் லிட்ரேச்சரை உங்களுக்குத் தருகிறேன். படித்துப் பாருங்கள். எங்களுடைய சென்டிரல் கமிட்டியினுடைய தீர்மானத்தையும் உங்களுக்குத் தருகிறேன் படித்துப் பாருங்கள். எங்களுடைய கட்சிக்கென்று திட்டம் இருக்கிறது. உங்களுடைய கட்சி மாதிரி அல்ல, எங்களுக்கு திட்டம் இருக்கிறது........

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய இலக்கியங்களை; கருத்துக்களை முழுவதுமாக எடுத்துப் படிக்கின்றவன். நான் படித்த காரணத்தினால்தான் ரமணி அவர்களிடத்திலேயிருந்து விளக்கம் பெற வேண்டும் என்று கேட்கின்றேனே தவிர வேறு அல்ல. அந்தக் கொள்கையை கேரளாவிலே, மேற்கு வங்கத்திலே ஏற்றுக்கொண்டால், அதன் மூலமாக ஒரு புதிய மறுமலர்ச்சி உருவாகும். மாநில சுய ஆட்சி வாதத்திற்கு வலிமை கிடைக்கும். அதன் மூலமாக மாநில மொழிகள் வளர்ச்சி பெறவும், மறுமலர்ச்சியடையவும் வழி பிறக்கும். அதை அங்கே சொல்லி, அந்த ஏற்பாட்டை செய்வதற்கு ரமணி அவர்கள் முன் வந்தால் அது அதிகம் பாராட்டுக்கு உரியதாக இருக்கும் என்ற ஆசையில்தான் கேட்கிறேன்.

திரு. கு. ரமணி: துணைத்தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆசை என்பது சரிதான். அதற்கு இந்தச் சட்டமன்றத்தில் நான் பதில் சொல்லி சாத்து நிற்க முடியாது. எங்களுடைய மத்திய கமிட்டிக்கு உங்களுடைய வேண்டுகோளை அனுப்புங்கள் அண்ணா தி. மு. க. எங்களுடைய இந்தக் கொள்கையை ஏற்று பரப்பாவிட்டாலும் பரவாயில்லை. ஏனென்றால் நீங்கள் மேற்கு வங்கத்திலும், கேரளாவிலும் போய் உங்கள் கட்சியை வைத்து பரப்ப முடியாது. அதனால் நீங்கள் எங்கள் மத்திய கமிட்டிக்கு தெரிவித்து. கேளுங்கள். எங்களுடைய கொள்கை இதுதான் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து பள்ளிகளில் கல்வியைத் தரக்கூடிய முக்கியமான பணியை வகிக்கக்கூடிய ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் இங்கே பல கடுமையான விமர்சனங்கள் உண்டு. விமர்சனங்கள் வர வேண்டியது அவசியம் தான் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ''ஆசிரியர்கள் பூராவும் வேலை செய்வதில்லை அவர்கள் சொந்தமாக தங்கள் பணிகளைத் தான் பார்த்துக் கொள்கிறார்கள். நாம் கொடுக்கிற சம்பளம் பூராவும் பாழாகிக் கொண்டிருக்கிறது'' என்பதைப் போன்ற கருத்துக்களை உருவாக்குவது நியாயம் இல்லையென்று சொல்லிக் கொள்கிறேன். அப்படி நாம் ஆசிரியர்களை அந்த நிலைமைக்கு ஆளாக்கக் கூடாது. உண்மையில் கிராமப்புறங்களில் இருக்கிற பஞ்சாயத்துகளுக்கு பஞ்சாயத்து யூனியன்களுக்கு, நகராட்சிகளுக்கு ஜேசு



இருக்கும்படியான ஆசிரியர்களுக்கு மற்ற அரசு ஊழியர்களைப்
போல இருக்கும்படியான வரையறைகளும், விதிகளும், வேறு
விதமான சட்டச் சலுகைகளும் இல்லாமல் அவர்கள் கஷ்டப்
பட்டவர்கள். இன்றைக்கு ஸ்தாபனரீதியாக ஒன்று சேர்ந்து
அவர்கள் தங்களுடைய உரிமைகளை வற்புறுத்துகிறார்கள்
என்று அந்த நிலையில் நாம் அதைப் பார்க்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். எங்காவது தவறுகள் இருக்குமென்று
சொன்னால் அதைத் தீர்ப்பதற்கு பல வழிமுறைகள் இருக்கின்
றன. அந்த வகையில் அதை நாம் தீர்த்துக் கொள்ளலாம்.
அரசாங்கம் தவறு செய்கிற போது நாம் அதைப் பேசித் தீர்ப்பது
இல்லையா? அப்படித்தான் நாம் அதைப் பார்க்கவேண்டும்.
ஆசிரியர்களைப் பற்றி ஒரு (unreasonable criticism levelled
against them) என்பது அது சரியாக இருக்காது என்ற
கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர்கள் பற்றி சென்ற வருடத்தில் 1985–86 ஆம்
ஆண்டில் அமைச்சர் அவர்கள் ஒரு கணக்கு கொடுத்திருக்கிறார்
கள். பள்ளிக்கூடங்கள் ஒட்டுமொத்தமாக தமிழ் நாட்டில் இருப்
பது 38,488. அதிலே இருந்த மொத்த ஆசிரியர்கள் இரண்டு
லட்சத்து 84 ஆயிரம் பேர்கள். ஆனால் இந்த வருஷம் 1986–87–ம்
ஆண்டு வரும் போது பள்ளிகள் இருப்பது 38,932. ஆகவே
கிட்டத்தட்ட 500 பள்ளிகள் அதிகமாகி இருக்கிறது. ஆனால்
ஆசிரியர்கள் உயர்வு என்பதைப் பார்க்கிறபோது அவர்கள் எண்
ணிக்கை இரண்டு லட்சத்து 88 ஆயிரம் என்று ஒரு கணக்கு வரு
கிறது. ஆகவே 4,000 ஆசிரியர்கள் அதிகமாகி இருக்கிறார்கள்.
கல்வியின் விஸ்தரிப்புக்கும் சுமைக்கும் இது போதாது என்பதே
எங்களுடைய கருத்து. இன்றைக்கும் பல இடங்களில் ஆசிரியர்
கள் வேகன்சிகள் நிரப்பப்படவில்லை.

அதேபோன்று ஆசிரியர்கள்—மாணவர்கள் ரேஷியோ. இன்
றைக்கும் பள்ளிகளில் அது அமலாக்கப்படவில்லை. ஆகவே
கல்வியின் தரம் குறைவதற்கு அதெல்லாம் ஒரு காரணம் என்று
குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து பள்ளிகளில் இருக்கும்படியான வசதிகள். ஆறாவது
வகுப்பு முடிய பார்த்தால் பிள்ளைகள் நிலத்தில் உட்கார்ந்து
படிப்பதை நாம் பார்க்கலாம். அங்கே பெஞ்சே இருக்காது:
கீழே போட்டுக்கொள்ள மரப்பலகை கூட இருக்காது. எங்க
ளுடைய கோவை மாநகரத்தில் அதுமாதிரி பல பள்ளிகளில்
அந்த நிலைமை இருக்கிறது. ஆசிரியர்கள் உட்காருவதற்கு
நாற்காலி இல்லாமல், அவர்கள் மக்களிடம் வசூலிக்கக்கூடிய நன்
கொடைப் பணத்திலிருந்து நாற்காலி வாங்கி, பாடம் சொல்லிக்
கொடுக்கும்போது அதை எடுத்துக் கொண்டு வந்து உட்காருவதும்
முடிந்த பிறகு அதையெடுத்துக் கொண்டு போய் ஹெட் மாஸ்டர்
ரூமில் வைப்பதுமான அவல நிலை இருக்கிறது.

(பிற்பகல் 1-20)

இதையெல்லாம் கணக்கிலே எடுக்கவேண்டும். ஆகவே நமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணமே போதாது என்பது என்னுடைய கருத்து. போன தடவை ஒதுக்கியதை விட சதமானம் ஜாஸ்தியாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்ற கணக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் போன வருஷத்திலேயிருந்து இந்த வருஷம் வரைக்கும் இருக்குபடியான விலைவாசி உயர்வைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், நான் சம்பளத்தைப் பற்றிச் சொல்லவில்லை—இதற்கு நாம் இன்வெஸ்ட்மென்ட என்று சொல்லி செலவழிக்கக்கூடிய பணம், அந்த பணத்தினுடைய கணக்கை நீங்கள் பார்த்தால் பலன் குறைவாகவே இருக்கும்.

7. அரசினர் தீர்மானம்.

விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஒவ்வொரு நாள கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெறவேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32 ஐ நாளை (19—4—1986) தளர்த்தவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

6. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

கோரிக்கை எண் 17 கல்வி—தொடர்ச்சி.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும். மற்ற வசதிகளை அதிகமாக்கவேண்டும். எல்லையற்றதாக இருக்கும் இந்தக் கல்வியின் தேவைபற்றி மக்களுக்கு இருக்கும்படியான தாகம், அதைத்தான் நாங்கள் பார்க்கிறோம். அந்த மாதிரி இருக்கக்கூடிய ஒரு மறுமலர்ச்சி, அந்த தாகம் ஏற்படும்போது அதிகப்படியான கல்வி வசதிகளை செய்து கொடுக்கக்கூடிய கடமை நமக்கு இருக்கிறது. அரசுக்கு செலவு ஜாஸ்தியாகத்தான் இருக்கும். இருந்தாலும் இந்த வசதிகளைப் பெருக்கி நாம் செய்துதான் ஆகவேண்டும் என்பது என்னுடைய கருத்து.





இன்றைக்கு புதிதாக எத்தனை ஆசிரியர்கள் போஸ்டுகளை சாங்க்சன் செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால் 1985—86-லே 825 போஸ்டுகள். 1986—87லே 775 தான். அதுகூட குறைக்கப்பட்டு இருக்கிறது. இந்த எண்ணிக்கை என்பது ரொம்ப கம்மியாக இருக்கிறது எனலாம். ஆனால் பிரச்சனை என்ன என்று கேட்டால், 10 பைசா பெருங்காயத்தை பெருங்கடலில் கலக்கும் அளவுக்குத்தான் இது இருக்கிறது. எனவே ஏராளமான போஸ்டுகளை கிரியேட் பண்ணி, அவர்களுக்கு கொடுக்கவேண்டியதிருக்கிறது. ஃபில்அப் பண்ண வேண்டியதிருக்கிறது. இது இந்த அளவிற்குக் காணாது என்பது என்னுடைய கருத்து, ஆகவே அது அதிகப்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் அவர்களுடைய வேலைக் கஷ்டங்கள் தீரும்.

கல்லூரிகளை எடுத்துக் கொண்டால், அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய குறிப்பிலே பல விவரங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். மொத்தம் 195 கல்லூரிகள். இதிலே அரசினுடைய கல்லூரிகள் 54, மானியம் பெறும் தனியார் கல்லூரிகள் 133, மானியம் பெறாத தனியார் கல்லூரிகள் 8. அப்படியானால் 141 கல்லூரிகள் தனியார் துறையில் இருக்கின்றன. 54 கல்லூரிகள் அரசினிடம் இருக்கின்றன. இதில் தன்னாட்சி பெற்று இருக்கும்படியான கல்லூரிகள் 13. இதிலே இருக்கக்கூடிய ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்தக் குறிப்பிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், இந்தியாவிலே தமிழகத்தில்தான் அதிகமான அளவிலே தன்னாட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் உள்ளன என்று சொல்லியிருக்கிறார்கள். இதை ஒரு பெருமைக்குரிய விஷயமாகக் கருதுகிறார் நமது அமைச்சர் என்று எனக்குத் தெரிகிறது. உண்மையிலேயே நாங்கள் அப்படிப் பார்க்கவில்லை. இந்த தன்னாட்சிக் கல்லூரிகளில் மிகப்பெரிய தவறுகள் நடக்கின்றன. ஆசிரியர்களை எதிர்த்து பலவிதமான அடக்குமுறை நடவடிக்கைகள் நடைபெறுகின்ற இடங்கள்தான் அவைகள், அதுமாத்திரமல்ல. கிட்டத்தட்ட கல்வியை வியாபார சரக்கு மாதிரியாக ஆக்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்கிறோமே அதற்கெல்லாம் இந்த தன்னாட்சி என்று சொல்கிற அந்த ஜனநாயகம்தான் அதற்குப் பயன்படும். அப்படி இருக்கிறது. ஏன் என்று கேட்டால், இது ஒரு முதலாளித்துவ நாடாக இருக்கிறது. போன தடவை நம்முடைய அமைச்சர் அவர்கள் இதே அவையிலே பேசும்போது சொன்ன அந்தக் குறிப்புகளை எல்லாம் நான் வைத்திருக்கிறேன். இது ஒரு சோசியலிஸ்டு நாடு அல்ல. சோவியத் யூனியன் மாதிரி உள்ள ஒரு நாடல்ல. இந்தியா என்பது இன்றைக்கு ஒரு முதலாளித்துவ அமைப்பு கொண்ட நாடுதான் இது. இந்த நாட்டிலே இதற்கு மேலும் செய்ய முடியாது என்று கூறினார். அது வாஸ்தவம்தான். அது உண்மையான விஷயம். ஆனால் அப்படிப்பட்ட ஒரு நாட்டிலே இப்படி தன்னாட்சி கல்லூரிகளை எல்லாம் அமைக்க அனுமதித்துவிட்டால் என்ன கதியாகும் என்பதை யோசிக்கவேண்டும்.

[திரு. கு. ரமணி] [1986 ஏப்ரல் 18

அதேமாதிரி இந்தக் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய மாணவர்
களைப்பற்றிய கணக்கையும் கொடுத்திருக்கிறார்கள். பட்டப்
படிப்புக்கு 1½ லட்சத்திற்கும் மேலே மாணவர்கள்; பட்ட
மேற்படிப்பு 16,858 பேர்களா; மாலை நேர வகுப்பு மாணவர்கள்
34 ஆயிரத்திற்கும் மேலே. ஆக மொத்தம் 2 லட்சத்து 26
ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் உயர்ந்த கல்வி, பட்டப்
படிப்பிலே, மேல் மட்டத்திலே பயிற்சி பெறக்கூடியவர்கள் இருக்
கிறார்கள். இதிலே தனியார் துறை இன்றைக்கு ஆதிக்கம் செலுத்
துகிறது என்பது என்னுடைய வாதம். சர்க்கார் பணம் செல
வழிக்கிறது. சர்க்கார் மொத்தத்தில் சட்டத்தைப் போட்டு,
பல நடவடிக்கைகளை எடுக்கிறது. ஆனால் இதை தனியார்
துறைகள் மீற முடியாதபடி செய்யவேண்டும். எனவே தனியார்
துறைகளை சுருக்கிக்கொண்டு வந்து, அரசாங்கத் துறையை விஸ்
தரித்து வளர்த்து வரவேண்டும். நீங்கள் சொல்லக்கூடிய ஒரு
சாதாரண புரட்சியைக் கூட அப்படித்தானே நடத்த முடியும்?
வேறு எப்படி நடத்துவீர்கள்? இந்த சமுதாய மாற்றத்தை
எப்படிக் கொண்டு வருவீர்கள்?

இங்கே அப்படி இல்லை. இது அதற்கு காம்ப்ளிமெண்டரி
யாகத்தான் இன்று அரசாங்கத்தின் நடவடிக்கை இருக்கிறதே
தவிர, வேறல்ல. தனியார் துறை நல்லபடியாக நடக்கவேண்டு
மென்று அவர்களை ஊக்குவித்து வளர்க்கும்படியான நிலைமை
மையை உருவாக்கும்போது தனியாருடைய ஆதிக்கம் கல்வித்
துறையிலே உச்சக் கட்டத்திற்கு வரும். இப்போதும் வந்திருக்
கிறது. அதனுடைய விளைவுதான் எண்ணற்ற தனியார் கல்லூரி
கள், சுயநிதிக் கல்லூரிகள் என்ற பெயரால் ஏற்பட்டுள்ளன.
நமக்கு பணம் இல்லை என்பது உண்மை. அதற்காக அவர்களுக்கு
விட்டுக்கொடுத்து, அக்கல்லூரிகள் மூலமாக பணம் சம்பாதிக்
கின்ற கருவியாக அந்தக் கல்வியை மாற்றுகிறார்கள் என்பதை
நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதேமாதிரி சட்டக் கல்லூரியிலே இருக்கும்படியான கடுமை
யான நிலமை. சகல பத்திரிக்கைகளிலும் இப்போது செய்திகள்
வந்தாயிற்று. அரசு பக்கத்திலிருந்து இதற்கு என்ன பிரதிபலிப்பு
என்பது புரியவில்லை. நிர்வாக அமைப்பு சரிவர இல்லை என்று
சொல்கிறார்கள். போதிய ஆசிரியர்கள் நியமிக்காமல், நிரந்தரப்
பதவி இல்லாமல் சென்னையிலிருக்கும்படியான சட்டக் கல்லூரி
யிலே 10 (ஏ) (1)-ன் கீழ் நியமிக்கும்படியான டெம்பரரி ஆசிரி
யர்கள் பலர். இதற்காகவே ஒரு போராட்டம் நடந்திருக்கிறது.
தமிழ்நாட்டிலே. அவர்கள் அதிகமாக இன்றைக்கும் நியமிக்கப்
படுகிறார்கள். இதைப்போன்று பல குறைகள். பி.ஜி.எல். மாலை
வகுப்பு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இங்கே நான் சொல்வது
ஒருசில குறிப்புகள்தான். இதற்கு மேலேயும் நடக்கிறது.



1986 ஏப்ரல் 18] [திரு. கு. ரமணி]

பார் கௌன்சிலினுடைய சிபாரிசுபடி டீச்சர்-ஸ்டுடென்ட்ஸ்
ரேஷியோ என்பது கல்லூரியிலே 1:2 என்றுதான் இருந்தது. அது
இப்போது 1:8 என்று உயர்த்தி இருக்கிறார்கள். பி. எல்.
மாலை வகுப்புகளிலே 1:100 என்று இருக்கிறது இப்படியிருந்தால்
எப்படி? இந்த சட்டக் கல்வி, பயிற்றுவிக்கப்படும்தரம் என்ன ஆகும்
என்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இதை அரசு உடனடியாக ஒரு
அவசர நிலையாக கணக்கில் எடுத்துக்கொண்டு இங்கே ஆசிரியர்
களை நியமிப்பதற்கும், அந்த பார் கௌன்சிலினுடைய நிர்ண
யிப்புகள் இருக்கிறதே அதன் பிரகாரம் பாடங்களைச் சொல்லிக்
கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் ஏற்பட்டே ஆகவேண்டும்.

செயல்பாற [illegible]
வில்லை. மற்ற [illegible] சட்டக் கல்லூரி வந்து 6 வருஷம் ஆகிறது.
பெரிய [illegible] கோர்சும், 200 பேர் 3 வருட கோர்
[illegible], 150 பேர் மாலை [illegible] வகுப்புகளிலும், மொத்தம் 550
பேர்கள். வகுப்பு அறை, ஆசிரியர்கள், குறைவால், வகுப்புகள்
தினமும் 1 மணி நேரத்திலிருந்து 2 மணி நேரந்தான் நடக்கிறது.
அதனுடைய கட்டிடம் எங்கிருக்கிறது என்று கேட்டால், அது
ஒரு பெரிய கம்பெனியினுடைய விருந்தினர் விடுதியில் இந்த
சட்டக் கல்லூரி நடக்கிறது. இப்போது அதற்கு இடம் வாங்கி
யிருக்கிறார்கள் என்று இந்த அவையில் நமக்கு தகவல் கொடுக்
கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த இடத்திலே இனனும் கட்டிடம்
கட்டப்படவில்லை. மாணவர்கள் என்ன சொல்கிறார்கள்,
மியூசிகல் சேர் மாதிரி இருக்கிறது எங்களுடைய பாடம் நடத்து
கிற ஏற்பாடு என்று. அந்த ஒரு மணி நேரம் ஒரு குரூப் பாடம்
படித்து வெளியிலே போய் உடனே அடுத்த இன்னொரு குரூப்
வந்து அதே நாற்காலியிலே உட்கார்ந்து கொள்கிறார்கள். அப்
படிப்பட்ட நிலைமை அங்கே இருக்கிறது. லைப்ரரியில் புதிய
புத்தகங்கள் இல்லை. படிக்க முடியாமல், 80 பேர்களில் 2 வருடம்
கழித்து பரிட்சைக்கு போனபிறகு 37 பேர்களைத் தவிர
மற்றவர்கள் எல்லாம் தோற்றுப் போனார்கள். அப்படி தோற்
றுப்போனவர்கள் அந்த 2வது வருடப் படிப்பை முடிக்காமல்
மேற்கொண்டு படிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அத
னால் அவர்களுடைய வாழ்க்கை பாழாகிவிட்டது. அப்படிப்பட்ட
நிலை.

அதேமாதிரி பார்ட் டைம் டீச்சர்ஸ்—இவர்களை அப்பாயிண்ட்
பண்ணி 300 ரூபாய் சம்பளம் கொடுத்து வேலை வாங்குகிறார்கள்.
இது எனக்கு கிடைத்திருக்கிற தகவல்கள். இதிலே தவறு இருக்கு
மானால் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினால் அதை ஏற்றுக்
கொள்ளத் தயார்,

திருச்சி சட்டக் கல்லூரி—இந்த கல்லூரி ஒரு சத்திரத்திலே
நடக்கிறது. பொன்னம்மாள் சத்திரம் என்று அதற்குப் பெயர்,
அதிலே சட்டக் கல்லூரி 5 வருட கோர்சில் 240 பேர், 3 வருட

கோர்சில் 240 பேர் மாலை நேர வகுப்பில் 180 பேர் மொத்தம் 660 பேர்கள் 4 வகுப்பறைகள் மட்டும் உள்ளன. இதைச்சொல்லும்போது இன்னும் ஒரு பரிதாபகரமான நிலையை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆண்களும் பெண்களும் கூட்டாகப் படிக்கிறார்கள். அறைகள் மற்ற வசதிகளில்லை.

அதேமாதிரி கழிப்பிட வசதிகள் கிடையாது. புரபசர்கள் 2 பேர்களுக்கு இடம் காலி, அதற்கும் 10 (ஏ) (1) மூலம் தற்காலிக ஆளெடுப்பு. பிரின்சிபால், ஒரு புரபசர் மட்டும் தான் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். படிக்கின்ற மாணவர்கள் இரண்டாவது ஆண்டு [illegible] க்கு போக முடியாத நிலை [illegible] ...ணையார் தேறாதவர்களின் மூன்றாவது [illegible] முறை [illegible] இவைகளையெல்லாம் சரி செய் ...சால்ல... நடவடி[illegible] நமது மாண்புமிகு அமைச்சர் [illegible]அவர்கள் எடுக்கவேண்டும். இப்படி தரம் குறைந்து போவதற்கு பார் கௌன்சில் ஆப் இண்டியா என்ன சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மேலவை உறுப்பினர்கள் ரிட்டையர் ஆகப் போகிறார்கள் அதற்காக பார்ட்டி கொடுக்கப் போகிறார்கள். அதற்கு அமைச்சர்களும், உறுப்பினர்களும் போகவேண்டும், ஆகவே சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, மதுரை சட்டக்கல்லூரிக்கு பேராசியர்களை தற்காலிகமாக நியமனம் செய்ய மாநில தேர்வாணைக் குழுவால் 25-9-1979-ல் போட்டிக்கு அழைப்பு கோரப்பட்டு 3 ஆண்டுகள் கழித்து தேர்வு நடத்தி, அதற்கு பிறகு 8 மாதம் கழித்து தேர்வு பெற்றவர்கள் பட்டியலை வெளியிட்டு, அதற்குப் பிறகு 4 மாதம் கழித்து அரசு நியமன உத்திரவு போட்டிருக்கிறது என்கிறார்கள் இது உண்மையா? இப்படி நடந்து இருக்குமானால் இதன் மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பரிட்சையை குறிப்பிட்டக் காலத்தில் நடத்துவது இல்லை. 1986 ஏப்ரலில் பரிட்சையை முதலில் நடத்தி 1986 பிப்ரவரியில் முடிவு வந்தது. இதனால் வக்கீல்கள் ஆக பதிவு செய்யக்கூடியவர்கள் சர்வீஸ் பாதிக்கப் பட்டு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.





இன்னொரு முக்கியமான விஷயம், பள்ளிகளில் படிக்கக் கூடிய மாணவர்களுக்கு இங்கே பேருந்துகளில சலுகை கட்டணம் வழங்கப்படுகிறது. அதில் நமது கல்வி அமைச்சருக்கு நேரடியாக எந்த அளவுக்கு சம்பந்தம் இருக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது போக்குவரத்து அமைச்சரின் பொறுப்பில் வரலாம். ஆனால் நான் ஒரு உண்மையை சொல்ல விரும்புகிறேன். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் மாணவர்களுக்கு மாதம் சலுகை கட்டணம் ரூ. 10.50 லிருந்து ரூ 17.50 வரையில் வசூலிக்கிறார்கள். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் சலுகைக் கட்டணம் மாதம் ரூ. 11.80 லிருந்து ரூ. 35.20 வரையில் வசூல் செய்கிறார்கள். பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் இதே மாதிரி வசூல் செய்கிறார்கள். ஏன் இந்தமாதிரி வித்தியாசம் என்று தெரியவில்லை. மற்றபடி கோவை, மதுரை, திருச்சி போன்ற பெரிய நகரங்களில் நீண்ட தூரம் அவர்கள் பஸ்சில் போய் படிக்கக்கூடிய இடங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலும் அவர்களுக்கு சலுகைக் கட்டணம் கொடுக்கப்படவில்லை. இதைக் கொடுக்கவேண்டும் என்று நீண்ட நாட்களாக நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம், ஆனால் அரசுக்கு அதிக செலவு ஆகும் என்ற கருத்து இருக்கிறது. அங்கே நடப்பது இப்படி இருக்கிறது; அங்கே இப்படி இல்லாமல் இருக்கிறது அதனால் அவர்களுக்கு மன எரிச்சல் ஏற்பட இடம் இருக்கிறது. ஆகவே ஒரே மாதிரியான கட்டணத்தை பல்வேறு இடங்களில் நிலைமைக்கு ஏற்ப ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்களின் சில கோரிக்கைகள் இருக்கின்றன. அதைச் சொல்லி நான் முடித்துவிடுகிறேன், ஒரு நபர் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. இது பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதி தேதிக்குள் முடிவுதெரிந்து அமல் ஆகும் என்று சொல்லி முதலில் உத்தேசம். பிறகு ஹைகோர்ட்டில் மார்ச் மாதம் முடிவுதற்குள் இந்த அறிக்கை வெளியே வரவேண்டும் அவர்களுடைய பிரச்சனையை தீர்க்கவேண்டும் என்று சொன்னார்கள். அதுவும் நடக்கவில்லை. அதன் பிறகு புத்தாண்டு பிறக்கும் போது இது கட்டாயம் வரும் என்று சொன்னார்கள். அதுவும் நடக்கவில்லை. இது எத்தனை காலம் வரை இப்படியே நீடித்துக் கொண்டு போகும். இதனால் ஆசிரியர்கள் மத்தியில் 2 மாத காலம் நடந்த போராட்டங்கள் அரசு தரப்பில் இறுதியாக பேசி சுமூகமாக முடிவுக்கு கொண்டு வந்தும் கூட இன்னும் இந்த தீர்வு ஏற்படாமல் இருக்கிறது என்பதை உடனடியாக கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் குறையை உடனே தீர்க்கவேண்டும். அவர்கள் போராட்டத்தை ஆதரித்துத் தான் இந்த அரசு செகரட்டேரியட் அசோசியேஷன் என்று சொல்லக்கூடிய அரசு ஊழியர்

[திரு. கு. ரமணி] [1986 ஏப்ரல் 18

களுடைய போராட்ட விவகாரம் அதிலே வந்தது. அவர்கள் அந்த போரட்டத்தை ஒரு Solidarity' என்ற முறையில் ஆதரவு கொடுத்தார்கள். அந்த விஷயத்தைக்கூட இன்று இங்கே சொல்ல முயற்சி செய்தது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர்களை உடன் வேலையில் அமர்த்த வேண்டும்.

அடுத்து ஆரம்பக் கல்விக்கு தனியாக இயக்குநரகம் வேண்டும் என்பது ஒரு கருத்து. ஆரம்பக் கல்வியில் எவ்வளவு கல்விக்கூடங்கள், எவ்வளவு பெரும் தொகை மாணவர்கள் என்பது தான் மிக முக்கியமானது. அந்த கல்வியில் தரம் கெட்டு போய்விட்டது என்று சொன்னால் அதை சீர்படுத்தி அதனுடைய நிர்வாகத்தை மாற்றி அமைக்க வேண்டும். ஆரம்பக் கல்விக்கு தனியாக இயக்குநர் தேவை; ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு தனியாக விதிகள் அமைக்கப்படவேண்டும். ஆரம்பப் பள்ளிகளுக்கு மேஜை, நாற்காலி, கரும்பலகை, மற்ற தளவாடங்கள் 1981-க்கு பின் வாங்கி சப்ளை செய்யவில்லை என்பது எனக்குக் கிடைத்து இருக்கிற தகவல். இது உடனடியாக கவனிக்கப்படவேண்டும்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் பி எப். கணக்கு வைப்பு நிதி கணக்கு ஏ. ஜி. அலுவலகத்திற்கு மாற்ற வேண்டும். முனிசிபாலிட்டியில் அவர்கள் இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு அவர்களின் அன்றாட நிர்வாக செலவுக்கு எடுத்து உபயோகம் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. அதிலிருந்து ஆசிரியர்கள் அட்வான்ஸ் கேட்டால்கூட கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அந்த விஷயம் கவனிக்கப்படவேண்டும். தனியார் பள்ளிகளில் நேரடி ஊதியம் பெறுகிற இடங்களில் மேனேஜர் பொறுப்பில் பள்ளி துணை ஆய்வாளர்கள் செயலபட அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்ன என்று சொன்னால் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய மற்ற சலுகைகளை கொடுக்காமல் ஏமாற்றி விடுகிறார்கள். அந்த மேனேஜர் கையெழுத்து போடுவது இல்லை, பி. எப். விஷயமாகவோ, அல்லது வருடாந்திர இன்கிரிமெண்டு விஷயமாகவோ அல்லது வேறு விதமான முன்பணம் கடன் விஷயமாகவோ. கையெழுத்திட ஆளில்லாத குறை. செங்கற்பட்டு மாவட்டத்தில் நடந்த நிலைமைகளைப் பற்றிய விவரங்களை நான் வைத்திருக்கிறேன். இந்த நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, உதவி அரசாங்க உத்தியோகஸ்தர் அவர்களுக்கு அந்த மேனேஜர்கள் இல்லையென்று சொன்னால் கூட, அவர் அந்தக் காரியங்களைச் செய்து முடிப்பதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கவேண்டும். இப்படிப்பட்ட முறையில் ஆசிரியர்களுடைய பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும்.



1986 ஏப்ரல் 18] [திரு. கு. ரமணி]

கட்டடங்கள் கட்டுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட பணம் நிச்சயமாகப் போதாது. ஏராளமான கட்டடங்கள் தேவை. நகரங்களிலும், கிராமங்களிலும் தேவை அதிகமாக இருக்கிறது. இன்னும் அதிகப்படியான பணத்தைச் செலவழிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அவை துரிதப்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் முறையாக செயல்படக் கூடிய நிலைமை ஏற்படும். இல்லாவிட்டால், நிலைமைகளை மீண்டும் பொது ஜனங்களே பார்த்துக்கொள்ள வேண்டிய நிலைமை வரும் என்று கூறி முடிக்கிறேன்.

## 8. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இன்று (18—4—1986) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்:

| | |
|---|---|
| 19—4—1986 (சனிக்கிழமை) முதல் 25—4—1986 (வெள்ளிக்கிழமை) முடிய | ஏற்கனவே அறிவித்தவாறு—மாற்றம் எதுவும் இல்லை. |
| 26—4—1986 (சனிக்கிழமை) | (1) 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1986) ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |
| | (2) 30—சமூக நலன் பற்றிய மானியக் கோரிக்கை—விவாதமும், வாக்கெடுப்பும். |
| 27—4—1986 (ஞாயிற்றுக்கிழமை) முதல். 1—5—1986 (வியாழக்கிழமை) முடிய. | ஏற்கனவே அறிவித்தவாறு—மாற்றம் எதுவுமில்லை. |

| | |
|---|---|
| 2-5-1986 (வெள்ளிக்கிழமை) | 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம். |
| | 39—சாலைகளும் பாலங்களும். |
| | 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். |
| | 54—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. |
| | 55—சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்கு குறித்த மூலதனச் செலவு. |
| 3-5-1986 (சனிக்கிழமை) .. | 48—ஊரகத் தொழில்கள். |
| | 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 4-5-1986 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 5-5-1986 (திங்கட்கிழமை) .. } 6-5-1986 (செவ்வாய்க்கிழமை) } | ஏற்கனவே அறிவித்துள்ள வாறு—மாற்றம் எதுவும் இல்லை. |
| 7-5-1986 (புதன்கிழமை) | ஏற்கனவே அறிவித்துள்ள மானியக் கோரிக்கைகளுடன் மானியக் கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத் துறையும் எடுத்துக்கொள்ளப் பெறும். |
| 8-5-1986 (வியாழக்கிழமை) முதல். | ஏற்கனவே அறிவித்துள்ளவாறு—மாற்றம் எதுவுமில்லை. |
| 13-5-1986 (செவ்வாய்க்கிழமை) முடிய. | |

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. நாளை (19-4-1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-37 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்—எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

112. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80, 1980-81 மற்றும் 1981-82-ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வருவாய் வரவினங்கள்) வருவாய்த் துறை தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தாறாவது அறிக்கை (தமிழ்).

113. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80, 1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டுகளுக்கான (வருவாய் வரவினங்கள்) அறிக்கைகளில் உள்துறை சம்பந்தப்பட்ட பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை (தமிழ்).

114. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80, 1980-81 மற்றும் 1981-82-ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் வரவினங்கள் அறிக்கைகளில் சில துறைகள் (தொழில், கல்வி பொதுப்பணி மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம்) தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை (தமிழ்).

## உள்ளடக்கம்.

19-4-1986.

பக்கங்கள்.


1 அறிக்கை அளித்தல் :

(அ) பேரவை விதி 112-ன் கீழ் மாண்புமிகு உணவு அமைச்சரின் திருத்த அறிக்கை .. 853

(ஆ) பொதுக் கணக்குக் குழு .. .. 856

2 கவன ஈர்ப்புகள் :

(அ) மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளி கட்டிடம் குறித்து .. 854—855

(ஆ) பட்டாபிராமை அடுத்துள்ள திருமணம் கிராமத்தில் சிலர் கும்பலாக வந்து தம் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தவரை தாக்கியுள்ளது .. .. .. .. 855—858

3 வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு: (தொடர்ச்சி). 858—993

(அ) கோரிக்கை எண் 17—கல்வி (தொடர்ச்சி) 858—937

திரு. டி. வெங்கட ரெட்டி .. .. 858—869

திரு. க. அன்பழகன் .. .. .. 870—906

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் .. 906—936

(ஆ) கோரிக்கை எண் 21—மீனளம் .. .. 937—993

(இ) கோரிக்கை எண் 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் 937, 938, 939
984—992

திரு. எஸ். வேணுகோபால் .. .. 939—948

திரு. எப். எம். இராசரத்தினம் — .. 948—955

| | | |
|---|---|---|
| | | பக்கங்கள். |
| திரு. ப. பொன்னுரங்கம் | .. .. .. | 955—964 |
| திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் | .. | 964—968 |
| திரு. அ. வெங்கடாசலம் | .. .. .. | 968—971 |
| திரு. பொ. உத்திராபதி | .. .. .. | 972—976 |
| திரு. கோ. வீரய்யன் | .. .. .. | 978—982 |
| திரு. மா. சுந்தரதாஸ் | .. .. .. | 982—984 |
| 4 பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் | .. .. | 994 |

2928

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, ஏப்ரல் 19, சனிக்கிழமை.

சித்திரை 6, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை".

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும்; கல்வி தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப் புடைய) செல்வம் அல்ல.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. அறிக்கை அளித்தல்

(அ) பேரவை விதி 112-ன் கீழ் மாண்புமிகு உணவு அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 112-ன் கீழ் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜா பாபு அவர்கள் தமது உடுக்குறியிட்ட வினா எண் 4467-ல் "போளூரில் நவீன அரிசி ஆலை அமைப்பது பற்றிய கேள்விக்கு போளூரில் நவீன அரிசி ஆலை அமைக்கும் செயற் குறிப்பு இல்லை" என அப்போது பதில் கூறினேன். மீண்டும் பெறப்பட்ட தகவல்களின்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணி பக் கழகம் நாள் ஒன்றுக்கு 100 டன் நெல் அரைக்கும் திறன் கொண்ட நவீன அரிசி ஆலை ஒன்றை போளூரில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் ஒன்றே கால் கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்த நவீன அரிசி ஆலை அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2. கவன ஈர்ப்புகள்

### (அ) மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அரசு மேல் நிலைப் பள்ளிக் கட்டிடம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. ஆர். வேங்கடரமணன், ஆ. சந்திரசேகரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர் களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், அலங்காநல்லூரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி தீ விபத்தில் எரிந்து விட்டதால் கட்டடம் இல்லாமல் மாணவர்கள் படும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் அரசினர் மேல் நிலைப் பள்ளியின் கூரைக் கட்டடங்கள் அண்மை யில் நடந்த தீ விபத்தினால் பாதிக்கப்பட்டன. ஆகவே, பள்ளிக் கல்வி இயக்குநர், அவரிடமுள்ள நிதி ஒதுக்கத்திலிருந்து ரூ. 1.40 இலட்சம் செலவில் மேற்படி கட்டடங்களை பழுது பார்க்க 24-2-1986 அன்று நிர்வாக அனுமதி வழங்கினார். அவரது அண்மை அறிக்கைப்படி, இப்பள்ளியில் கல்நார் கூரைக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு, மாணவர்களுக்கு இட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையின ரால் மேலும் பழுது பார்க்கும் பணிகள் செய்யப்பட்டு வருவ தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, தீ விபத்தினால் மாணவர்கள் கட்டடமின்றி இன்னலுறுவதாகத் தெரிவித்திருப்பது சரியல்ல.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளி எரிந்து பல மாதங்கள் ஆகியும் கூட கட்டடங்கள் கட்டப்படாத காரணத்தினால் "தினமலர்" பத்திரிகையில் மாணவர்கள் மரத்தடியில் இருந்து கொண்டு படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று படத் துடன் செய்தியாக வெளியிட்டு இருந்தார்கள். அந்த அடிப் படையில்தான் மாண்புமிகு உறுப்பினர் சந்திரசேகரன் அவர் களோடு கலந்து பேசி இந்தக் கவன ஈர்ப்பை எழுப்பியிருக் கிறோம். இன்றைக்குக் கட்டடம் இல்லாமல் மாணவர்கள் படிப் பதற்கு வாய்ப்பு இல்லாமல் தேர்வு நெருங்கி விட்ட நேரத்திலே



தேர்வு கூட எழுத முடியாது அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கிறார்கள். அவர்கள் எவ்வாறு தேர்வு எழுத அனுமதிக் கப்பட்டிருக்கிறார்கள்? அவர்கள் தேர்வு எழுதுவதற்கு மாற்று ஏற்பாடு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் நான் சொன்னது 1.4 லட்சம் ரூபாய் செலவில் ஒரு கட்டடம் கட்டப்பட்டு இருக்கிறது. கல் நார் கூரைக் கட்டடம் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே அவர்கள் அதிலே படிப்பார்கள், உட்கார்ந்து பரீட்சை எழுது வார்கள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே, அவர்களுக்குக் கட்டடம் எப்போது கட்டித் தரப்படும்? அது பற்றிய செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதையும் அந்தக் கட்டடம் எப்போது கட்டி முடிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அது அரசின் நிதியாதாரத்தைப் பற்றியும் மற்ற ஊர்களிலே இருக்கிற பள்ளிகளின் தேவையைப் பொறுத்தும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) பட்டாபிராமை அடுத்துள்ள திருமணம் கிராமத்தில் சிலர் கும்பலாக வந்து தம் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தவரை தாக்கியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் இப்போது முதலில் எடுத்துக் கொள்ள வேண்டிய கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளப்படுகிறது. திருவாளர்கள் வி. பி. சித்தன், ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "சென்னை பட்டாபிராமை அடுத்துள்ள திருமணம் கிராமத்தில் 31-3-1986 ஆம் தேதி இரவு வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தவரை சுமார் 30 பேர்கள் கும்பலாக வந்து தாக்கி கொன்றுள்ளதனால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

கடந்த 31—3—1986 அன்று மாலை 4.00 மணி அளவில்
ஸ்ரீபெரும்புதூர் வட்டம், திருமணம் என்ற கிராமத்தில் ஆதி
திராவிட வகுப்பைச் சேர்ந்த திருவாளர்கள் அன்பு மற்றும் குட்டி
என்ற இருவரும் அதே வகுப்பைச் சார்ந்த உதயராணி என்ற
பெண்ணுடன் திரு. பத்மனாபன் என்பவருக்குச் சொந்தமான
நிலத்தில் உள்ள மாமரத்தின் அடியில் உட்கார்ந்து பேசிக் கொண்
டிருந்தனர் என்றும், நில உரிமையாளர் திரு. பத்மனாப முதலி
யார் தனது நிலத்தில் ஏன் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்
என்று அவர்களைக் கேட்டதற்கு சரியான பதிலைச் சொல்லாத
காரணத்தினால் அன்பு என்பவரை பத்மனாப முதலியார் அடித்
ததாகவும் இதனைக் கூட இருந்த குட்டி என்பவர் தடுத்ததாக
வும் தெரிகிறது. திரு. பத்மனாப முதலியார் தனது கிராமத்
திற்குச் சென்று, தனது சகோதரர்களான கல்யாணசுந்தரம்
மற்றும் சண்முகசுந்தரம் ஆகியோர்களை அழைத்துக்கொண்டு
வந்து, குட்டி மற்றும் அன்பு இருவரையும் கம்பி மற்றும் இதர
ஆயுதங்களால் தாக்கியதாகவும் இதனால் குட்டி என்பவருக்கு
தலையில் காயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. அப்பொழுது
ஊர்ப் பெரியவர்கள் தலையிட்டு சமரசம் செய்ததன் பின்னர்
அவர்கள் கலைந்து சென்றனர் என்றும் தெரிகிறது.

2. பிறகு, அதே நாள் இரவு சுமார் 11.00 மணியளவில் திரு
வாளர்கள் அன்பு மற்றும் குட்டி என்பவர்கள், சுமார் இருபது
முதல் முப்பது ஆதி திராவிடர்களுடன் கல்யாணசுந்தரத்தின்
வீட்டிற்கு வந்து கல்லாலும், கம்பாலும். கடப்பாரை போன்ற
ஆயுதங்களாலும் திருவாளர்கள் கல்யாணசுந்தரம்,
சுந்தரம், பத்மனாப முதலியார் ஆகியோரைத் தாக்கியதில் சண்முக
அவர்கள் காயமுற்றனர். அப்பொழுது அவர்களிடமிருந்து தப்பி
யோட முயன்ற கல்யாணசுந்தரத்தை மீண்டும் தாக்கியதாகவும்
அதனால் அவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது என்றும் தெரி
கிறது. சிகிச்சைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனை
யில் சேர்க்கப்பட்டதில், திரு. சண்முகசுந்தரம் உள்நோயாளியாக
அனுமதிக்கப்பட்டார். திரு. கல்யாணசுந்தரம் மருத்துவமனைக்கு
எடுத்துச் செல்லும் வழியில் இறந்துவிட்டார்.

3. அன்று இரவு (31—3—1986) சுமார் 12 மணியளவில்
அன்பு என்பவர் பூந்தமல்லி காவல் நிலையத்தில், மாலையில்
நடந்த சம்பவங்களைப் பற்றி ஒரு புகார் கொடுத்து, வழக்கு
எண் 312/86-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. பத்மனாப முதலி
யாரால், இரவு 12-15 மணிக்கு அதே காவல் நிலையத்தில்
கொடுக்கப்பட்ட புகாரில் வழக்கு எண் 313/86-ல் பதிவு செய்யப்
பட்டது.

4. திரு. அன்பு மற்றும் குட்டி ஆகியோர் ஆதி திராவிட
வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்த கிராமத்தில் சுமார் 50 முதலி
யார் வகுப்பைச் சார்ந்த குடும்பங்களும் சுமார் 500 ஆதி
திராவிட வகுப்பைச் சார்ந்த குடும்பங்களும் உள்ளனர்.



5. வருவாய்த் துறை அலுவலர்களும் காவல் துறை அலுவலர்
களும் கிராமத்திற்குச் சென்று அமைதியை நிலைநாட்டி உள்ளனர்.
ஊரில் அமைதியைப் பராமரிக்கும் பொருட்டு, இரண்டு பிரிவு
ஆயுதக் காவல் படை தங்கியிருக்கிறது. 2—4—1986 முதல்
5—4—1986 வரை ஊரில் பெரும்பாலோர் பயத்தால் வெளி
யேறியிருந்ததால் அமைதியை நிலைநாட்ட பேச்சு வார்த்தைகள்
நடத்த இயலவில்லை. 6—4—1986 அன்று மாலை 6-00 மணிக்கு
வட்டாட்சியர் ஊரில் அமைதிக் குழுவினைக் கூட்டி, அமைதிப்
பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். ஊரில் தற்சமயம் அமைதி
நிலவுகிறது. இச்சம்பவம் தொடர்பாக, 3—4—1986 அன்று
திருவாளர்கள் பலராமன், செல்வராஜ், டெர்ரி என்ற சியாளன்,
அன்பு, குட்டி மற்றும் எட்டியப்பன் என்ற ஆறு பேர் கைது
செய்யப்பட்டுள்ளனர்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட
கடுமையான முறையில் நடக்கும் கொலைகள்— அதுவும் சென்னை
நகரத்திலேயும், சென்னை நகரத்தைச் சுற்றிலும் பல கொலைகள்
இம்மாதிரி ஏற்கனவே நடந்துள்ளன. அதன்மீது சில நடவடிக்கை
களை அரசு எடுத்தும்கூட இன்னும் அந்தக் கொலைகள் குறைந்த
பாடில்லை. மறுபடியும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.
எனவே, அதன்மீது உறுதியான கட்டுப்பாட்டை உருவாக்கி,
தகுந்த காவல்துறை கண்காணிப்பை ஏற்படுத்தி, இப்படிப்பட்ட
கொலைகளைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கையை எடுக்க
உத்தேசித்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, அறிக்கையில் விவரமாகத் தெரிவித்துள்ளவாறு
இந்தக் கொலை என்பது எதிர்பாராத சூழ்நிலையில், அங்கே
இலரிடத்திலே ஏற்பட்ட வாக்குவாதங்களைத் தொடர்ந்து அது
கலவரமாக மாறி, இரண்டு கூட்டத்தினரிடையே மோதுதல் ஏற்
பட்டு இது நிகழ்ந்திருக்கிறது. வேறு அடிப்படைக் காரணங்
களோ அல்லது இதற்கு முன் காரணங்கள்-தொடர் காரணங்
களோ இல்லை. திடீரென்று ஏற்பட்டு விடுகின்ற நிகழ்ச்சிகளை
ஒட்டி, இப்படிப்பட்ட, நாமெல்லாம் விரும்பத்தகாத சம்பவங்
கள் ஆங்காங்கு நடந்துகொண்டு இருக்கின்றன. அது சமுதாயத்
தில் மக்களிடத்தில் ஏற்பட வேண்டிய மனப் பக்குவத்தினுடைய
குறைவை எடுத்துக் காட்டுகிறதே தவிர, மற்றபடி எவ்வளவுதான்
முன்னுக்கிரதையோடு ஏற்பாடுகளைச் செய்திருந்தாலும், இது
போன்று ஆங்காங்கு எதிர்பாராமல் உணர்ச்சிக் கொந்தளிப்பால்
அல்லது அடிப்படை உணர்வுகளால் ஏற்படுகின்ற நிகழ்வுகளைத்
தடுக்க இயலாமற்போய் விடுகிறது. ஆனாலும், இப்பொழுது
அந்தப் பகுதியில் நம்முடைய அதிகாரிகள், இரண்டு தரப்பாரை
யும் அழைத்துப் பேசி அவர்களிடத்தில் ஒரு சமரச உணர்வை,

அமைதியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். தொடர்ந்து இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாமல் நிச்சயமாகத் தடுக்கின்ற முயற்சிகளை அரசு அல்லது அதிகாரிகள் மட்டுமல்லாமல், நம்மைப் போன்ற பொதுவாழ்விலே இருப்பவர்களும் அதிலே பங்குகொள்ள வேண்டுமென்ற கருத்தை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. அறிக்கைகள் அளித்தல்

(ஆ) பொதுக் கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, நான் பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன் :

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் வரவினங்கள் அறிக்கைகளில் சில துறைகள் (மதுவிலக்கு— ஆயத் தீர்வை, வேளாண்மை மற்றும் செய்தி சுற்றுலா) சம்பந்தப்பட்ட பத்திகள் மீதான மேற்படி குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை.

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80, 1980-81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் வரவினங்கள் தொடர்பான அறிக்கைகளில் வணிக வரிகள்— அறநிலையத் துறை குறித்த பத்திகள் மீதான மேற்படி குழுவின் முப்பதாவது அறிக்கை.

(இ) 1979–80 மற்றும் 1980–81 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் அறிக்கைகளில் வேளாண்மைத் துறை குறித்த பத்திகள் மீதான மேற்படி குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை.

3. வரவு-செலவுத் திட்டம் 1986–87 மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 17—கல்வி—தொடர்ச்சி

(முற்பகல் 9-10)

*THIRU T. VENKATA REDDY : Hon. Speaker, Sir, on behalf of the Indian National Congress Party, I wish to make a few observations on Demand No. 17—Education for 1986-87.

Hon. Speaker, Sir, Education demand is the most important demand in the Government sector. Education is the fundamental thing for every activity. If there is no education there is no life. So, when such



a Demand is taken up, it is important on the part of every member of the House to bestow his attention on Educational policy. As far as the Educational Policy is concerned, the Government of India has formulated a new educational policy and distributed a booklet entitled 'Challenge of Education We are now entering the 21st century. We have been engaging in policy wherein our boys and girls will be fit enough to adjust themselves to future progress of education and also to develop national integration and to a policy which will ensure and improve the economic life of the Nation. In this aspect, I want to stress that the present educational policy has been rendering great injustice to our educational system. I am only quoting an observation made in the policy note 'Challenge of Education', wherein it has been described as follows :—

"No description of the contemporary educational scenario can be complete without a reference to the examination system since it decides not only the fate of students, but also the content, orientation as well as the quality of education at all levels. Apart from evaluating examinees on the basis of note learning and memorising, their annual periodicity creates an environment in which students tend to while away their time for most part of the year and gear themselves to work for the last three or four months. For obvious reasons, lack of continuity in application results in the building up of enbarable pressures at the end of the year which find expression in boycott of examinations, leakage of question papers, mass-copying, payment of bribes to evaluators and ther unethical practices. Consequently. degrees and grades do not generally command credibility as a whole with the public as well as employers in the public and private sectors and the whole process of higher education has become warped, disoriented and disfunctional, producing a large number of unemployable young men and women."

This is the observation which every Government and every dedicated leaders have to ponder. We would have also seen in Tamil Nadu, in most of the educational institutions and in several schools and Higher Secondary Schools, these malpractices like strikes, leakage of question papers and other things which cause sad agony to all and to the educational system. It has a great impact on the fundamental educational system itself. My hon. Friend Thiru N. S. V. Chittan pointed out that in Madurai Law College Examination such large scale malpractices in the Examination and also in the evaluation of M. L. Examination papers have occurred. I am not blaming anybody for this or asking who is responsible for this malpractice ; but I am only saying that system is such and who is responsible for such state of affairs should take appropriate action to avoid such things. Therefore, I request the Hon. Minister for Education to see that such things are not there because such a system would only produce citizens unworthy of their degress

and qualifications. We are sending our children to educational institutions to become good citizens of the State. We are not sending our children to while-away their time in schools; we are not sending our children to practice malpractices and adopt dubious methods and we are not sending our children to indulge in political activity. Such malpractices and activities have to be stopped so that the Educational system which is a good system making out future generations good citizens, formulated or evaluated by our leaders would not go waste. Our elders equated our teachers with the God.

Such an educational system must be tried so that our future generation will usher in a new era.

The other aspect which I want to stress is that in elementary schools, as many of our friends have said, the teachers have not been bestowing their best attention for educating the young children. They are whiling away their time in the activities which they are not called upon to do. They do private business; they indulge in politics and they do not spend their time properly to see that the boys get good education. In elementary schools, the boys will come for noon meals and after taking noon meals most of them will absent themselves. This procedure must be stopped. Therefore, I have requested to Hon'ble Minister for Education long time back that evening attendance must be taken so that they will attend the evening classes regularly and they will get proper education.

The other aspect which I want to stress is about the Union Students' Unions are there in educational institutions. A Union is not necessary in an educational institution because a Union creates a political atmosphere. The political leaders in fact encourage political participation in schools and colleges. Such a system should be discouraged by all the Parties, whether it is a Ruling Party or Congress Party or any other Party. Politics should not enter the portals of the schools and colleges as they are treated as temples.

THIRU V. P. CHINTHAN : Mr. Speaker Sir, I would like to know from the Hon'ble Member whether his Party is prepared to accept that position in West Bengal, Punjab, Haryana and other places ?

THIRU T. VENKATA REDDY : Mr. Speaker Sir, I am only saying that all the parties, including my Party, should co-operate in this aspect. There is no room for such a question in this context. I am stressing this point because when we send our children to schools, we expect them to become good future citizens. When they indulge in politics, they forget their study and thereby they will not be able to get good education and will not be able to become good citizens. When I passed



B. L. I entered life with a serene view that I will contribute something good to the society. But now when the students come out of the Colleges after passing B. A., or B. E. or M.B.B.S., they come with a view to a mass wealth, with a view to cheat the society. Such a type of education is only imparted. Now Such a type of atmosphere is developed among the students. This is a fact which every one of us must put an end to. Because after passing out they will have to become public servants, legislators. They owe something to the Nation, to the future of the Nation. Therefore, I request the Hon'ble Minister to see that such a thing does not happen in Schools and Colleges.

The other aspect which I want to stress is about the Three language formula. Even the previous Governmant viz. the D. M. K. Government were discouraging the Three language formula.

(முற்பகல் 9-20)

They do not want the Three Language formula to be implemented. We are a Nation. Our Nation comprises of so many States. Except our State all the other States have accepted the Three Language Formula. Except our State all other States in our Country are following the National mainstream. If we do not follow the National mainstream we will be left alone and we will be frogs in the well. We should allow our students to sail in the ocean, i. e. the world. Our students— the boys and girls of Tamil Nadu have got better potential than the students of other States. Our students are brilliant. Many educationists in our State have also told me that our students are brilliant and they possess good potential. If such brilliant students want to join the National mainstream, you must allow them to have the facility of studying Three Languages. You must accept the Three language formula.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் இந்திய ஒருமைப்பாட்டிலிருந்தே தனிமைப்படுத்தப்படுவது போன்ற ஒரு நிலைமை ஏற்படும் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆங்கில மொழிதானே இந்தியா [illegible] ஒரு அமைப்பையே உருவாக்கியது. ஆங்கிலத்தில்தான் [illegible] உங்கள் கருத்தை வெளிப்படுத்த பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி என்றால் இந்திய ஒருமைப்பாட்டிலிருந்து எப்படி தனிமைப்படுத்தப்படுவதாகும்.

THIRU T. VENKATA REDDY : Hon'ble Mr. Speaker Sir, we do not say that English should not be taught or encouraged. Majority of the States in India want Hindi as a National Language. It is but

natural for all of us to follow the main stream. That is why I say that as is being followed by other States, we should also follow the teaching of Hindi in our State.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே,
மெஜாரிட்டி என்ற ஒரு வாதத்தை வைக்கிறார். அதாவது
மெஜாரிட்டியான மக்கள் என்ற வாதத்தை வைக்கிறார். இந்தி
ஆட்சி மொழியாக வேண்டும். மும்மொழித் திட்டம் அமல்
படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்கள்.
இந்தியாவிலே இந்து மதம்தான் பெரும்பான்மையான மக்களால்
பின்பற்றப்படுகிறது. கிறிஸ்தவமதமோ அல்லது பௌத்தமதமோ
அல்ல. அவற்றை சிறுபான்மை மக்கள்தான் பின்பற்றுகிறார்கள்.
எனவே மெஜாரிட்டி அடிப்படையில் இந்து மக்கள் அதிகமாக
இருக்கிறார்கள் என்பதற்காக பாகிஸ்தானைப் போலவோ
அல்லது இலங்கையைப் போலவோ ஒரு மதச்சார்புள்ள நாடு
என்று இல்லாமல் செக்யூலர் ஸ்டேட் என்ற வகையில் மதச்
சார்பற்ற நாடு என்றுதானே சொல்லப்படுகிறது. அப்படி
மதத்திற்கு மெஜாரிட்டி, மைனாரிட்டி என்று பார்க்காதபோது
மொழிக்கு மட்டும் பார்ப்பது எப்படி நியாயம் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே,
திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ரகுமான்கான்
அவர்கள் இந்தி மொழியைப் பேசுபவர்கள் மெஜாரிட்டி
என்று ஒத்துக் கொண்டது போல் பேசினார்கள். அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மெஜாரிட்டி
யாக இந்தி மொழி பேசப்படுவது கிடையாது என்றுதான்
சொல்கிறதே தவிர, அதை ஒத்துக் கொள்ளாது.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, திராவிட
முன்னேற்றக் கழகம் மிகத் தெளிவாகச் சொல்கிறது. மெஜா
ரிட்டி, மைனாரிட்டி என்ற பிரச்சினைக்கே இதில் இடம் இல்லை.
இன்னும்சொல்லப்போனால் அண்ணாவினுடைய உதாரணத்தை
கற்றவர்கள் நாங்கள் என்றெல்லாம் சொல்கிறீர்கள். தேசியப்
பறவை மயில் என்பது பற்றி அண்ணா அவர்கள் சொல்லி
யிருக்கிறார்கள். பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக் கொண்
டிருக்கிறார்கள் என்பதற்காக நாம் வேறு ஒரு கருத்தை ஒத்துக்
கொள்ள முடியுமா என்ற வாதத்தை நீண்ட காலமாகச் சொல்
லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மெஜாரிட்டி என்ற பிரச்
சினைக்கே இடமில்லை. மைனாரிட்டி என்ற பிரச்சினைக்கும்
இடம் இல்லை. 16 தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாக
ஆக்கப்பட வேண்டும். அதுவரையில் ஆங்கிலம் தொடர்ந்து
நீடிக்க வேண்டும். இந்தி ஆதிக்கம் கூடாது; இரு மொழிக்
கொள்கைதான் எங்களுடைய கொள்கை. எனவே இங்கே





மெஜாரிட்டி, மைனாரிட்டி என்ற பிரச்சினைக்கே இடம் கிடை
யாது. உதாரணமாக சிங்கப்பூரில் 4 மொழிகள் ஆட்சி மொழி
யாக இருக்கின்றன. அங்கே மெஜாரிட்டி, மைனாரிட்டி என்
பது கிடையாது. சுவிட்சர்லாந்திலும் 4 மொழிகள் ஆட்சி
மொழிகளாக இருக்கின்றன. அங்கே மெஜாரிட்டி, மைனாரிட்டி
என்பது கிடையாது. அதுபோல் இங்கேயும் மெஜாரிட்டி,
மைனாரிட்டி என்ற பிரச்சினைக்கு இடம் கொடுக்காமல் எல்லா
தேசிய மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும்.
நேருவினுடைய வாக்குறுதியைக்...........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் சொன்னதைத் தவறாகப் புரிந்து
கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். பேரறிஞர்
அண்ணா அவர்களைப்பற்றி என்னைவிட அதிகமான அளவில்
அவர்கள் தெரிந்தவர்களாக இருக்கலாம். அவருடைய கொட்
டேஷன்ஸ் அதிகமாகப் படித்தவராக இருக்கலாம். அதை
நான் மறுக்கவில்லை. ஆனால் பெருவாரியான மக்கள் இந்து
மதத்தில் இருக்கிறார்கள் என்பதற்காக ஏன் இந்து மதம் பின்
பற்றப்படவில்லை என்று சொல்லிவிட்டு பெருவாரியான மக்கள்
இந்தி மொழி பேசுவதால் இந்தி மொழியை ஏற்றுக் கொள்ள
வேண்டுமா என்று சொல்வது போல் சொல்கிறார்கள். பெரு
வாரியான மக்கள் இப்போது புகுத்தப்படுகிற இந்தி மொழி
யைப் பேசுகிறார்கள் என்ற கருத்தையே அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மறுக்கிறது; ஏற்றுக்
கொள்ளவில்லை என்றுதான் நான் சொன்னேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, என்னைக்
காட்டிலும் அண்ணா அவர்களை நன்கு தெரிந்தவர்கள் அவர்
கள். திருவண்ணாமலையில் தேவராஜ முதலியார் தேர்தலில்
நின்ற காலத்திலிருந்தே நம்முடைய மரியாதைக்குரிய உள்
ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு அண்ணாவைப் பற்றி
நன்றாகத் தெரியும். எனவே அந்த விவகாரத்திற்குள் நான்
போகவில்லை. ஆனால் நான் சொல்லாத ஒன்றை நான் சொல்
லியதாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்
கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்த கருத்து, பெரு
வாரியான மக்கள் இந்து மதத்தைத் தழுவுகிறார்கள், ஆகவே
ஏன் இந்து மதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்ற கருத்தைச்
சொல்லிவிட்டு பெருவாரியான மக்கள் இந்தி மொழியைப் பேசு
கிறார்கள் என்ற கருத்தை ஒத்துக் கொண்டிருப்பது போல்
இருந்த காரணத்தால் அதை மறுத்தேனே தவிர வேறு ஒன்றும்
அல்ல. நான் சொல்வதற்கு பதில் சொல்வதாக இருந்தால்
சொல்லுங்கள். நானும் சொல்கிறேன்.

*திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் கூறியது அதற்கு முன்னால் பேசிய திரு. வெங்கடரெட்டி அவர்கள் பேசுகையில் 'பெரும்பான்மையான மாநிலங்கள் ஒத்துக் கொண்டிருக்கின்றன, ஆகவே நீங்கள் ஒரு மாநிலம் மட்டும் மறுப்பானேன்' என்று கேட்ட காரணத்தால் பெரும்பான்மை என்ற அடிப்படையில் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதற்காக அந்த விளக்கத்தைச் சொன்னார்களே தவிர அவர்கள் சொன்ன கருத்து திரு. வெங்கடரெட்டி அவர்கள் சொன்னதற்கு மறுப்புக்கூறும் விளக்கமே தவிர அதை அடிப்படையாக வைத்து அமைச்சர் ப.உ.ச. அவர்கள் வேறு விதத்தில்.....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள் ஒரு வார்த்தையை இடையில் சேர்த்துக் கொண்டார்கள். மாநிலம் என்ற வார்த்தையே வரவில்லை. பெருவாரியான (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் சொன்னது குறிப்பேட்டில் இருக்கிறது. அதைப் படித்துப் பாருங்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இந்த மொழிப் பிரச்சினை என்பது ஒரு ஜீவாதாரப் பிரச்சினையாக (குறுக்கீடுகள்) தேசியப் பிரச்சினையாக பல்லாண்டுக் காலமாக கருதப்பட்டு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்தில் இதே சட்டமன்றத்தில் இருமொழிக் கொள்கை தீர்மானம் என்பது ஏகமனதாக இங்கே நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானமாகும். காங்கிரஸ் கட்சி உட்பட, ஆனால் இந்தச் சட்டமன்றத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் பேசுகிற நண்பர்கள் மும்மொழித் திட்டத்தை ஆதரித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கிடையில் இந்தியை எதிர்க்கிறவர்கள், இந்தி திணிப்பை எதிர்க்கிறவர்கள் நாங்கள் எல்லாம் எவ்வளவு பேர்கள் இருக்கிறோம் என்பதை வெளியே இருக்கிற மக்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும், இடது கம்யூனிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)-ம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் மற்றக் கட்சிகளும் இந்த இந்தி திணிப்பை எதிர்க்கின்றன என்பதை திட்டவட்டமாக தெரிவிக்கிற விதத்தில் நாம் விவாதங்களை அமைத்துக் கொள்வோமேயானால் அது நன்றாகயிருக்கும்.

திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்கனவே உள்ளத்திலே கொண்டுதான் நான் விளக்கிச் சொன்னேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்தக் கொள்கையை இந்த அவை மூலம் நிறைவேற்றினார்களோ, எந்தக் கொள்கையை பண்டித நேரு அவர்கள் ஏற்றுக் கொண்டு, இந்தியாவிலே ஒரு மாநிலம்



ஏற்றுக் கொள்ள மறுக்கிற வரை இந்தி மொழி மட்டும் ஆட்சி மொழியாக ஆகாமல், அவர்கள் விரும்புகிற காலம் வரையில் ஆங்கில மொழி இந்த நாட்டினுடைய ஆட்சி மொழியாக நீடிக்கும் என்று கூறிய உறுதிமொழி அகில இந்திய அளவில் கூட, பெரும்பான்மை என்ற அடிப்படையில் விளக்கப்படாமல் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு ஆதாரம்.

திரு. ஏ. எம். ஏ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கைக்காக இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டன, இன்னும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. வேறு ஏதோ பேசிப் பேசி இந்த மீன்வள மானியக் கோரிக்கையும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மொழி விவாதம் நாட்டுக்கு வேண்டும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தியை தேசிய மொழியாக ஏற்றுக் கொண்டால் என்ன என்று தான் நம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆங்கிலத்தில் சொல்கிறபோது நாஷனல் லாங்குவேஜ் என்று அவர்கள் சொன்னார்கள். இந்தியாவிலே 15 மொழிகள் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த 15 தேசிய மொழிகளுமே ஆட்சிமொழிகளாக ஆகவேண்டும் என்பதுதான் நம் இலட்சியம். அதுவரை இங்கே இருமொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருந்தால் அந்த இருமொழிக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலம் நீடிக்கும் என்பதை அரசியலமைப்புச் சட்டம் ஏற்பது வரை அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நாம் வலியுறுத்திக் கொண்டேதான் இருக்க வேண்டும். ஆனால் எல்லோராலும் ஒப்புக் கொள்ளக்கூடிய சிலவற்றை சில மாநிலங்கள் புறக்கணிப்பதை நாம் பார்க்கிறோம். உதாரணமாக 1, 2 என்ற எழுத்தெல்லாம் இந்தியாவில் மட்டுமல்ல உலகம் பூராவும் இந்த 1, 2 என்ற எழுத்துக்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு தீர்மானமே போட்டு விடலாம் ஒரு நாள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அவர், தேசிய காங்கிரஸ் கட்சியில் இருக்கிற காரணத்தினால் சொல்கிறேன். இன்று கர்நாடகாவிற்குப் போங்கள், அங்கே நாம் புரிந்து கொள்கிற எழுத்து இல்லை. நாம் இங்கே தமிழில் 1 என்பதற்கு 'க' என்று போடுகிறோம் என்று வையுங்கள். அதேபோல் கர்நாடகாவில் என்ன எழுத்து உண்டோ அதைத் தான் போடுகிறார்கள். நாம் புரிந்துக் கொள்கிற அளவிற்குப் போடவில்லை. ஆகவே எல்லா மாநிலங்களும், மத்திய பிரதேசம், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் இது இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு விரோதமானது என்பதை அந்தந்த

[திரு. குமரி அனந்தன்] [1986 ஏப்ரல் 19

மாநிலங்களை ஆளுகிறவர்கள் புரிந்து கொள்கிற வரையில் தேசியவாதிகளாகிய நாம் எல்லோரும் சேர்ந்து சொல்ல வேண்டும் என்பது என் அபிப்பிராயம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : எல்லோரும் தேசியவாதிகள் அல்ல.

திரு. குமரி அனந்தன் : நான் என்னைப் போன்று என்று சொன்னேன்.

[முற்பகல் 9-30]

THIRU T. VENKATA REDDY : Honb'le Speaker, Sir, It seems that this thing has created a very heated atmosphere. I am only requesting the Government that there is no need for feeling shy in allowing Hindi to be taught in Schools. When our children need education in Hindi, there is no need for preventing them from learning Hindi. When we do that, that means that we are preventing them from their fundamental rights. When they need to be taught in Hindi, and if we prevent them, are we not imposing a restraint on a person who needs good education and who opts for Hindi to be taught to him in Schools ? Are we not imposing certain things which people do not want ? When you impose certain restrictions how do you think that the imposition of Hindi will hamper the growth of Tamil. Tamil language has grown itself. There is a lot of encouragement for Tamil. So, by encouraging Hindi, you will not lose anything. There need not be any fear that an imposition of reading Hindi will be an imposition of northeners on Tamil Nadu.

There are many States in India like Karnataka, Andhra Pradesh, and Kerala where the Hindi language is also being encouraged. Are they feeling that Northeners have invaded them. Are they compelling to do that ? It is a voluntary education, voluntary system which they have adopted.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ் தானே வளரும் என்றும், திணிப்பதை நாம் ஏன் தடுக்க வேண்டுமென்றும் சொல்கிறார். சங்கம் வளர்த்த மதுரையிலே ஒரு காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த பாண்டியன் பாலி மொழியை ஆட்சிமொழியாக ஏற்ற காரணத்தினால், தமிழ் பாதிக்கப்பட்டு இருண்ட காலமாகி விட்டது. அந்த ஆட்சி மொழியைத் திணித்தாலும், தமிழ் தானே மீறிக்கொண்டு வளரும் என்ற கடந்த காலத்திலே பாதிக்கப் பட்டதை உணர்விலே கொண்டு, தமிழகத்தில் இருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நாம் சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (கைதட்டல்).



1986 ஏப்ரல் 19]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கட ரெட்டி அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொல்லுகிறார்கள். இந்தியைத் திணிப்பதால் தமிழ் பாதிக்கப்படாது, அதை ஏன் தடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்தி ஒரு மொழியாக வரவில்லை. இந்தி ஒரு ஆதிக்கம் என்ற முறையிலே வருகின்றது. ஆட்சியின் துணையோடு வருகின்றது. அதிகாரத் துணையோடு வருகின்றது. படித்தால்தான் வேலை வாய்ப்பு கிடைக்கும், பதவி உயர்வு கிடைக்கும் என்ற முறையிலே வருகின்றது. அப்படி வருகிற போது, நிச்சயமாக அது தமிழைப் பாதிக்கும். தமிழின் எதிர் காலத்தைப் பாதிக்கும். இந்தியைத் திணிக்க முற்படுகின்றபோது தமிழ் வளர்ச்சி பாதிக்கும் என்பது என்னுடைய கருத்து. (கைத் தட்டல்).

THIRU T. VENKATA REDDY : Hon'ble Speaker Sir, Hon. Thiru Kumari Anandan has been saying that there is imposition of Hindi. That is not so. I am only requesting the Government to allow them to read Hindi. (Interruption) Why I am pressing this point is that we have got many Central Government Offices, and Central Government institutions, wherein our children must get jobs........ Are you to be away from the mainstream of the nation. Are you an independent State ? Do you want that the State should have an independent education policy ? If they want an independent education policy........

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொண்டதற்கு நன்றி. மத்திய அரசின் வேலைவாய்ப்பு வேண்டுமென்றால், இந்தி படித்தால்தான் முடியும் என்று அவர்கள் கூறுகிறார்கள். அதைத் தான் இந்தி திணிப்பு என்று சொல்கிறோம். இந்தி ஆதிக்கம் என்று சொல்கிறோம். இந்தி ஏகாதிபத்தியம் என்று சொல் கிறோம்.

THIRU T. VENKATA REDDY : It is a reality that you have toe accept. If you do not want to follow the mainstream, then you ignorh it. We have to go along with the mainstream of the nation and wite the Central policies of education. Otherwise, I am afraid, the peopy who are opposing Hindi do not want to leave the position which they now occupy. They are only......

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தியைத்திணிப்பதால் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்குஆபத்து வருமே தவிர, இந்தியைத் எதிர்ப்பதனால் ஆபத்து வராது. இதை பண்டித நேரு அவர்கள் ஒப்புக்கொண்டு உறுதிமொழியைத் தந்தார்கள். நேரு கொடுத்த உறுதிமொழியை மத்திய அரசு மீறுகிறதா அல்லது அவர்கள் கொடுத்த உறுதிமொழியிலிருந்து விலகிப் போகின்றதா என்பதுதான் இப்போது கேள்வி.

THIRU T. VENKATA REDDY : Mr. Speaker Sir, I am not at all deviating from the assurances given by Pandit Nehru. But I am only saying that there is no need to fight shy in this matter. Our boys are capable of learning Hindi, they are capable of competing with the rest of the nation, so that they can occupy the highest positions in the Government of India. For the past ten years if you take the results in I.A.S. examinations, and other examinations for posts of Central Government officers, our boys are on the decline. This is the sorry state of affairs which we are now facing. Therefore, I request the Hon. Minister for Education that let us not fight shy in allowing the schools wherever Hindi could be taught.

மாண்புமிகு திரு, செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தி மொழி திணிப்பை நாம் எதிர்ப்பது என்பது இந்தி மொழி பேசுபவர்கள் முதல் தர மக்களாகவும், மற்றவர்கள் இரண்டாம் தர மக்களாகவும் ஆக்கப்படுவார்கள் என்பதற்காக. அத்தகைய நிலையை தமிழகம் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. அப்படி ஏற்றுக் கொள்ளலாமல் இருப்பது நம் எல்லோருடைய அந்தஸ்து, மானம், மரியாதைக்கு உட்பட்டதாக நாங்கள் கருதுகிறோம். அதற்காக நாங்கள் வெட்கப்பட வேண்டியது இல்லை. அதற்காக நாங்கள் யாருக்கும் பயப்பட வேண்டியதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெங்கட ரெட்டி அவர்கள் சீக்கிரமாக முடித்துக் கொள்ள வேண்டும்.

THIRU T. VENKATA REDDY : Hon. Mr. Speaker Sir, may statement has not been understood properly by our Hon. Minister. I am only stating that it is not a question involving honour. It is only a question of making our boys to get an opportunity to complete with the other boys in the rest of the nation. It is not a question of honour involved.

The other aspect I want to stress is, that in the budget a sum of Rs. 551 crores and odd only has been provided and that is not adequate for the Education because the strength of the boys in the schools and colleges has increased. Also various technical and other schools have been opened by the Government of Tamil Nadu, and the expenditure on the provision of furniture and equipments and for the construction of buildings for those schools has increased and considering these things, I find that this amount is not adequate. I therefore request the Hon. Minister to increase the budget allotment for education atleast next ear. If we want to cull out the best students from the educational stitutions we have to give them all the necessary facilities. There are any places where schools are conducted under trees. There are many schools where teachers do not have the tables and chairs to sit. There



are many colleges, even technical colleges, where even proper equipments for the teaching staff have not been provided. Such facilities have to be provided so that our boys will have the benefit of good education.

The other aspect which I want to stress is that in schools and colleges moral classes have been omitted. The moral classes are necessary to create good atmosphere in educational institutions. So moral classes have to be introduced in schools and colleges.

(முற்பகல் 9-40)

The other aspect which I want to stress is that there are many minority schools in Tamil Nadu like Urdu, Telugu, Kannada, Malayalam and other languages. In most of the institutions the second language is English or any other non-Indian language. That means I want to know what is the other non-Indian language. If English is not there, " any other non-Indian language' means what ? What is the idea behind this ? Are we not Indian citizens ? Are we not patriotic citizens ? Why should we allow other non-Indian languages to be taught in Part B— Part—II—minor languages. Instead of that, Tamil language can be taught. We do not object to that. Why I am stressing this point is this. In Part A, Tamil is the mothertongue. In Part B, English or any other non-Indian language. I am not able to see the reasons for this. The Government thought fit to introduce English or any other non-Indian languages. Why should they think of non-Indian languages ? That means they want to shut Hindi and other Indian languages from the place that it has occupied. Even in Minority Schools, the students are taught in Telugu, taught in Urdu and taught in Kannada.

MR. SPEAKER : The hon. Member has already taken 40 minutes.

THIRU T. VENKATA REDDY : When the Minority people pass the S.S.L.C. Examinations or Degree Examinations, they are denied the employment opportunities because they have not learnt Tamil. There are Telugu People, there are Kanarese people. There are people speaking Urdu and there are Malayalam speaking people also. They are denied the job opportunities under the pretext that the Minority people have not studied the Tamil languages. Therefore, in Part B, Tamil should be introduced as second language. This has been pending for a long time. Therefore, I request the Hon. Minister for Education to introduce Tamil as Part B language in Minority educational institutions. The other aspect I want to stress is...........

(Speaker sounded the gong and called Thiru K. Anbazhagan.)

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு
கல்வி மானியக் கோரிக்கை என்பது கல்விக்காக செலவிடப்படுகிற
தொகை ஒதுக்குவதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கிற
அதேநேரத்தில் மத்திய அரசினுடைய கல்விக் கொள்கையைப்
பற்றியும் விவாதிக்கப்படத்தக்கதாக ஆக்கியிருக்கிறது. அப்படிப்
பட்ட விவாதத்தில் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த நண்பர்கள்
தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும், இறுதி
யாக காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. வெங்கட ரெட்டி
அவர்கள் தன்னுடைய கருத்துக்களை ஆங்கிலத்தில் எடுத்துச்
சொல்லக் கூடிய அந்த நிலையைத் தொடர்ந்து, நான் பேசுகின்ற
வாய்ப்பைப் பெற்றதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள்
ஆங்கிலத்தில் பேசியதை நான் வரவேற்கிறேன். அதைக் குறையாக
கருதவில்லை. தமிழ் நாட்டிலேயுள்ள சிறுபான்மை மொழி
பேசுகிற மக்களுடைய பிரதிநிதியாக விளங்குகிற திரு. வெங்கட
ரெட்டி அவர்கள், மிக நெருக்கமான உறவோடு நம்மோடு
வாழ்ந்தாலும் கூட, அவர்களுடைய கருத்தை நமக்குத் தெரிவிப்
பதற்காக, அந்தக் கருத்திலே நமக்கு உடன்பாடு இருந்தாலும்
மாறுபாடு இருந்தாலும், ஆங்கிலத்தை பயன்படுத்த வேண்டிய
அவசியம் ஏற்பட்டுள்ளது. 100 மைல், 200 மைல்களுக்
குள்ளாக மிக நெருக்கமான உறவுடன் இருக்கிற இந்த
வட்டாரத்தில் அந்த நிலை இருக்கிறது என்று சொன்
னால், ஏறத்தாழ 2,000 மைல் நீளம், 2,000 மைல் அகலம்
உள்ள இந்தியாவில் பல்வேறு சிறுபான்மை மொழி பேசுகிற
மக்கள், அந்தந்த மாநிலத்திற்குரிய மொழியைப் பேசுகிற
மக்கள், ஆங்கிலத்தின் மூலம் தான் இந்தியாவில் உறவு கொள்ள
முடியுமே தவிர, வட்டார மொழியாகவும் ஒரு ஆதிக்க உணர்வு
படைத்த கூட்டத்தார் மொழியான இந்தி மூலமாக அந்த
உறவை பெற்றுக் கொள்ள முடியாது என்பது இன்றைக்கு தமிழ்
நாட்டில் இருந்து கொண்டு மட்டுமல்ல நாடாளுமன்றத்திலே
உறுப்பினராக இருக்கும் நண்பர்களும், அறியக்கூடிய அளவிற்கு
நாட்டில் வளர்ந்திருக்கிறது.

அகில இந்தியாவை கட்டிக் காப்பாற்ற நினைக்
கிறவர்கள், இந்தியாவினுடைய ஒற்றுமை குறைந்துபோய்
விடக்கூடாது என்று கவலையுள்ளவர்கள்தான் ஆங்கிலம் நீடிக்க
வேண்டும். ஆங்கிலத்தை அகற்றிவிடக் கூடாது. இந்தி ஒன்று
தான் இந்தியாவினுடைய ஆட்சிமொழி என்ற தவறான தத்துவம்
இந்த நாட்டிலே வலியுறுத்தப்பட்டு விடக்கூடாது என்பதற்காக,
அக்கறையாக பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்ன
உறுதிமொழியை இன்றைக்கும் கடைபிடிக்கிறார்கள். மாறாகப்
பெரும்பான்மையான மாநிலம் இந்தியை ஏற்றுக்கொண்டிருக்
கிறது என்னும் கருத்தினை அவர்கள் சொன்ன போது அப்படிப்
பட்ட பிரச்னையில் பெரும்பான்மை சிறுபான்மை என்பதற்கு
அப்பாற்பட்டு, மத உணர்வுகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம்
இருக்கிறதோ அதைவிட மொழி உணர்வுகளுக்கு 20 ஆம் நூற்
றாண்டில் ...க முக்கியத்துவம் தருவது. தரநேரிட்டு



இருப்பது. தர மறுத்தால் விளைவுகள் விபரீதமாகும்
என்பதை நாம் நம்புகிற காரணத்தால் இந்த மொழி
உணர்வு இயல்பாக அஸ்ஸாம் மாநில மக்களாக இருந்தாலும்,
பஞ்சாபிலே உள்ள சீக்கியர்களாக இருந்தாலும், காஷ்மீரிகளாக
இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் உள்ள மொழி உணர்வு
தமிழர்களுக்குக் குறைந்து போய் விட முடியாது என்று நான்
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைவிட முக்கியமாக,
மொழி அடிப்படையில் ஒரு மாநிலத்திற்கு இருக்கிற உரிமையில்
மத்திய அரசு குறுக்கிடவும் முடியாது, குறுக்கிடவும் கூடாது
என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசு மாநிலங்
களை இணைப்பதற்கான அரசே தவிர, மாநிலங்களுடைய உரிமை
யைப் பறிப்பதற்கு எண்ணும் அரசாக இருப்பதை ஏற்றுக்கொள்ள
முடியாது. அந்தக் கருத்திலே நம்முடைய அமைச்சர்கள் சிலரும்
அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே நம்முடைய கல்வி
அமைச்சர்களும், மற்ற அமைச்சர்களும் சொன்ன கருத்துக்
களை நான் வரவேற்பதோடு மட்டுமல்ல, அந்தக் கருத்துக்களில்
நீங்கள் உறுதியாக செயல்படவேண்டும் என்று நான் பணிவன்
போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்றால், ஆட்சியிலே
இருக்கிறபோது, சில நேரத்திலே அந்த நிலைகளில் உறுதி காட்ட
முடியாதநிலை ஏற்படக்கூடும். உதாரணத்திற்குச் சொல்ல
வேண்டும் என்றால், நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள்,
டெல்லியிலே சென்று அங்கே சில கருத்துக்களைத் தெரிவிக்கும்
போது, ஒரு கருத்தைத் தெரிவித்ததாக நான் கேள்விப்
பட்டேன். அண்மையில் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் மும்
மொழித் திட்டத்தை எதிர்ப்பது அரசியலுக்காக என்று டெல்லி
யில் பேசியதாக..............

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நாங்கள் இந்தியை எதிர்ப்பது அரசியலுக்
காக என்பது எல்லோருக்கும் தெரிந்தது. அதையே நாங்கள்
இங்கே பேசியிருக்கிறோம். நான் கல்வி அமைச்சர்கள் மகா
நாட்டில் பேசுகிறபோது, அரசியலுக்காக மட்டுமல்ல, கல்விக்
கொள்கை என்கிற அடிப்படையில் நாங்கள் இந்தியை எதிர்க்
கிறோம். காரணம் ஒரு மாணவனை 3 அல்லது 4 மொழிகளைப்
படிக்க வைக்கவேண்டும் என்று சொல்லும்போது, முக்கியமான
பாடங்களான கணிதம் விஞ்ஞானம் போன்றவற்றில் ஒரு பாரமாக
மாறுகிற காரணத்தால், அந்த அடிப்படையிலே நாங்கள் இந்தியை
எதிர்க்கிறோம். கூடுதல் காரணமாகத்தான் நான் இதை சொன்
னேனே தவிர, அரசியல் காரணத்தை விட்டுவிட்டுச் சொல்ல
வில்லை.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்தக் கருத்து,
அரசியலுக்காக என்று மட்டும் வந்த காரணத்தால் அந்த ஒரு
குறை ஏற்பட்டது. அமைச்சர் அவர்களுடைய கருத்து ஏடுகளிலே
வருகிறபோது, அதிலே உள்ள தவறுகளைத் திருத்தி அறிக்கை
தரவேண்டும். அதன் மூலமாக ஒரு கருத்து தெளிவாக மக்களுக்கு

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

கிடைக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அரசிய
லுக்காக என்று சொன்னாலும் கூட, அதிலே கூட ஒரு அழுத்த
மான கருத்து இருக்கிறது. அரசியலில்தான் இந்தியாவினுடைய
பல்வேறு மொழி பேசுகிற மக்கள் தங்களுடைய உரிமைகளை
நிலைநாட்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அரசியல் அடிப்படை
யிலே தமிழ் மக்களுடைய உரிமை பறிபோகாமல் இருப்பதற்காக
நாம் இப்படி வாதாட வேண்டியிருக்கிறது என்ற கருத்தை
அந்தக் கோணத்திலும் விளக்கி இருக்கவேண்டும் என்று நான்
விரும்புகிறேன்.

அதேபோல் இன்றையதினம் மும்மொழித் திட்டம் என்று
பேசுகிறவர்கள் மனப்பூர்வமாக அதை தாங்கள் ஏற்றுக்கொண்டு
பேசுகிறவர்கள் அல்ல என்பது நாடறிந்த உண்மை. என்றைக்கு
மும்மொழித் திட்டம் என்று சொன்னார்களோ, அன்றைக்கே,
வடக்கே உள்ளவர்கள் பெரும்பாலும் இந்தி பேசுகிற மாநிலத்
தைச் சேர்ந்தவர்கள், தங்கள் தாய்மொழியான, இந்தியில் உம்
மொழி அகில இந்தியாவை ஆட்சி செய்யக்கூடிய வாய்ப்பைப்
பெறக்கூடிய மொழி என்னும் ஆர்வத்தில் அந்த இந்தி மொழி
யிலே அவர்கள் தேர்ச்சி பெறுகிற அதே நேரத்தில், ஆங்கிலத்தை
விரும்பினால் அந்த மொழியிலே தேர்ச்சி பெறலாம் என்ற
அளவிற்கு மட்டும் அதை ஏற்றுக்கொண்டு, அந்த ஆங்கிலத்
தையும் அவர்கள் எல்லோரும் கற்காமல் மேலும், மூன்றாவது
மொழியாக தென்னாட்டு மொழிகளில் ஒன்றைப் படிக்கவும்
முன்வராமல், மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்ட அடிப்
படையிலே, தென்னாட்டு மொழி ஒன்றை அவர்கள் படிக்க
வேண்டும் என்பதற்கு மாறாக, அதைப் படிக்க முன்வராமல்,
இந்தி மொழியை மட்டுமே படித்து, இந்தியாவிலே அவர்களின்
ஆதிக்கம் வளர்வதற்கான வாய்ப்பை அவர்கள் பெற்றிருக்கிற
அந்த நிலையை அவர்கள் மாற்றிக்கொள்ளத்தயாராக இல்லை.
ஒரு வேளை அவர்களே ஏற்றுக்கொண்டு, 3 மொழிகளைப் படித்
தாலும் கூட, அதற்காக நாம் இந்தியைப் படிக்கத் தேவையில்லை.
என்ன காரணம் என்றால், நம்முடைய மாணவர்களும்
ஏதாவது ஒரு காரணத்தாலே, அரசு ஏற்றுக்கொண்டு அனுமதி
வழங்கினால் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும்
இந்தியைப் படிக்கிறார்கள். ஆகவே இந்திதான் ஆட்சி மொழி
என்று பேசுகிற அந்தத் தவறான கூற்று, முறைகேடான கருத்து,
வலுப்பெறக் கூடிய நிலைமை ஏற்படும். ஆகவேதான் தோழர்
வெங்கடா ரெட்டி அவர்கள் பேசியதை வாய்ப்பாகக் கொண்டு
அகில இந்தியாவில் ஒரு பெரும் தலைவராகத் திகழ்ந்த
சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்களின் கருத்தை
நினைவூட்ட விரும்புகிறேன். இந்தி மொழி "இந்தியாவிலே ஆட்சி
மொழியாக ஆகுமானால், அதன் காரணமாக இந்தியாவிலே முதல்
தரக் குடிமக்கள் என்றும், இரண்டாம் தரக் குடிமக்கள் என்றும்
குடிமக்கள் பிரிக்கப்படுகிற ஒரு அநீதி ஏற்பட்டு, பிற மொழி
பேசுகிற மக்கள், இரண்டாம் தரக் குடிமக்களாக ஆக்கப்படுகிற



1986 ஏப்ரல் 19] [திரு. க. அன்பழகன்]

அநீதி வளரும்" என்று ராஜாஜி அவர்கள் கண்டித்தார்கள்.
அப்படிக் கண்டித்ததோடு மட்டுமல்ல அதற்கு ஒரு எல்லைக்
கோடு வகுப்பதுபோல், முத்தாய்ப்பாக English ever—Hindi never
என்னும் கொள்கையை இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்காகச்
சொன்னார்கள். அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை, அகில
இந்தியத் தலைவர்கள் உணராவிட்டாலும் தமிழ்நாட்டிலே
உள்ள தேசிய இயக்கத் தலைவர்கள் உணர வேண்டும்.
தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சி தலைவர்களும் உணர
வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்த வகையிலே இன்றைய
தினம் மும்மொழித் திட்டம் என்ற பெயரால் நேரிடையாக
அதைத் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்க
முடியாத மத்திய அரசு புதிய கல்வித் திட்டத்தின்
பெயரால் புதிய கல்விக் கொள்கை வகுப்பது என்னும் பெயரால்
மும்மொழித் திட்டத்தை திணித்து, தமிழ்நாட்டு மக்களை மறை
முகமாக இந்தி ஆதிக்கத்திற்கு ஆட்படுத்த முயற்சிக்கிறார்கள்.
ஆதிக்கம் என்று சொல்லுகிறபோது ஹிந்தி ஆதிக்கத்தை ஏற்கச்
சொல்லவில்லை என்று திரு. வெங்கடரெட்டி அவர்கள் சொன்
னார்கள். ஆதிக்கத்தை நான் விரும்பவில்லை, படிக்க அனுமதி
யைத்தான் கேட்கிறேன் என்று சொன்னார்கள். இதற்கு
இரண்டுக்கும் இருக்கிற வித்தியாசம் காதலா, கட்டாய திரு
மணமா என்பதைப் போலத்தான். காதலுக்கு இசையுங்கள்,
கட்டாயமாகத் திருமணம் செய்யுங்கள் என்று நான் சொல்ல
மாட்டேன் என்று அவர் சொன்னாலும் விளைவு ஒன்றுதான்.

(முற்பகல் 9-50)

இந்தி படிக்க இடம் அளித்தால் இத்தனை மாணவர்கள்
படிக்கிறார்கள் என்ற ஒரு கணக்கைக் காட்டுகிறபோது
அதனுடைய விளைவாக இந்தி தெரிந்தவர்கள் இவ்வளவு
பேர் இருக்கிறார்கள் என்று வாதாடுவார்கள். இந்தியா
முழுவதும் ஆங்கிலம் தெரிந்தவர்களும் இருக்கிறார்கள்.
அஸ்ஸாமிலே இருக்கிறார்கள், திரிபுராவிலே இருக்கிறார்கள்,
வங்கத்திலே இருக்கிறார்கள், பஞ்சாபிலே இருக்கிறார்கள்,
காஷ்மீரத்திலே இருக்கிறார்கள் என்றாலும் அதற்குரிய மதிப்பு
இல்லை. ஆனால் இந்தி தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் என்று
சொல்லிவிட்டால் அந்த இந்தி மொழிக்கு ஆங்கிலத்திற்கு உள்ள
அந்தத் தகுதி இல்லாவிட்டாலும்கூட, இந்தி மொழி ஆங்கிலத்
தைப்போலப் பயன்படுகிற ஆற்றலற்றது என்று சொன்னாலும்
கூட, தெரிந்தவர்கள் இருக்கிறார்கள், எனவே அதுவே லிங்க்
லேங்வேஜ்-எனவே அதுமட்டும்தான் இந்தியாவிலே தொடர்பு
கொள்ளும் மொழி; அதைத் தெரிந்தவர்கள் எங்கும்
இருக்கிறார்கள், அதனாலே அது ஆட்சி மொழியாக தகுதி
பெற்றது என்று சொல்லக்கூடிய ஒரு ஆபத்தான நிலைமை
ஏற்படும் என்ற காரணத்தாலேயே, தமிழக அரசு—எந்தக் கட்சி
அரசாக இருந்தாலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் நிறைவேற்
றிய இரு மொழிக் கொள்கையைக் கட்டி காப்பாற்ற வேண்டிய
அவசியத்திலே இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

மொழிக் கொள்கையிலே நாம் உறுதியாக இருப்பது ஒரு மாநிலத்துடைய உரிமை. எந்த மாநிலத்துக்கும் அந்த உரிமை உண்டு. மற்ற மாநிலங்களில் இந்த மொழிக் கொள்கையிலே அந்த அளவு உறுதி காட்டாமல், ஓரளவுக்கு விட்டுத் தருகிறார்கள் என்றால் இன்றைக்கு இல்லாவிட்டாலும் இன்னொரு நாள்—இன்னொரு 5 ஆண்டு, 10 ஆண்டு காலத்தில் இந்தி பேசும் வட்டாரத்தின் பக்கத்திலே பக்கத்தில் இருக்கிற, பிற மொழி பேசுகிற மக்கள் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கிற ஒரு நிலமை ஏற்படும். இந்தியைப் படித்தாலும்கூட இந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இந்திதான் ஆட்சிமொழி என்றால்,ஏன் குஜராத்திக்கு அந்த உரிமை கூடாது? மராட்டிக்கு ஏன் அந்த உரிமை கூடாது என்று கேட்கக்கூடிய ஒரு காலம் அண்மையிலே வர இருக்கிறது. ராஜஸ்தான் மாநிலத்து மக்கள், தங்கள் ராஜஸ்தான் மாநிலத்து மொழிக்கு, இந்திக்கு தருகிற செல்வாக்கு தரப்படவில்லை என்பதை உணருகிறார்கள். அப்படி வேறு பல மொழியைச் சார்ந்தவர்களும் உணருகிற ஒரு நிலமை இருக்கிறது. அதிலும் பிற்பட்ட வகுப்பு மக்கள் நாளுக்கு நாள் முன்னேறி வருகிறபோது அந்த மொழி உரிமையை வலியுறுத்தக்கூடிய உணர்வு ஏற்படத்தான் செய்யும் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். எனவே அகில இந்தியாவில் நம்முடைய தமிழ் மொழியையும் ஒரு மத்திய ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அந்த விருப்பத்தோடு, அப்படி ஏற்றுக்கொள்ளப் படுகிறபோது இந்தியாவின் 14 தேசிய மொழிகளும் அந்தச் சமநிலை பெறுமானால் நாம் அதை வரவேற்போம் என்ற கருத்தோடு, அப்படி ஏற்றுக்கொள்ளப்படுகிற வரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பதால், அதை வலியுறுத்துகிற கடமையைத் தமிழக அரசு என்றைக்கும் கைவிட்டுவிடமுடியாது என்பதை எடுத்துக்காட்டி, அந்த அடிப்படையிலே ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்திலே, சென்னை நகரத்திலே, அண்மையில் இன்டக்ரல்கோச் பேக்டரி என்ற அந்த அமைப்பில் ஜெனரல் மேனேஜர் கலந்து கொள்கிற விழாவிற்கு 'Railw ylirks celebration' என்பதற்கு ஒரு அழைப்பு இதழ் வந்திருக்கிறது. அந்த அழைப்பிதழில் ஆங்கிலமும் இந்தியும் தான் இடம் பெற்றிருக்கிறது. ஆங்கிலமாவது இடம்பெற்றிருக்கிறதே என்பதற்காக நான் ஓரளவு நிம்மதி அடைகிறேன். ஆனால் தமிழ் இடம் பெறவேண்டும் என்ற உணர்ச்சி இல்லை. தமிழுக்கு, தமிழ்நாட்டிலே மத்திய அரசாங்கத்தினுடைய நிறுவனமாக இருக்கிற, தொழிற்சாலையாக இருக்கிற இந்த அமைப்பில், ஒரு விழா நடக்கிறபோது கூடத் தமிழை மதிக்க வேண்டுமென்ற கருத்து இல்லை. தமிழ்நாட்டிலே நிகழ்கிறபோதுகூட அழைப்பிதழில் தமிழை இடம்பெறச் செய்யும் மனப்பான்மை இல்லை. அவர்கட்குத் தெளிவு இல்லை; அதை வலியுறுத்துகிற நிலமை அரசுக்கு இல்லை என்ற அந்த நிலையில் அகில இந்தியாவில் இந்தி மொழி ஆட்சி மொழியாவது இந்தியாவிற்கே ஆபத்து என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 19] [திரு. க. அன்பழகன்]

அடுத்து, இன்றையதினம் இந்த கல்வி மானியக் கோரிக்கையில் 551 கோடி ரூபாய்க்கு, இந்தத் துறை மூலமாக மானியம் கேட்கப்பட்டிருக்கிறது. இந்த 551 கோடி தவிர, வேறு பல துறைகள் மூலமாக மேலும் ஒரு 130, 140 கோடி ரூபாய் கல்வித் தொடர்பான பணிகளுக்குப் பயன்பட்டாலும்கூட வழக்கமாக ஆண்டுதோறும் நாம் எவ்வளவு ஒதுக்குகிறோம் என்று பார்க்கிறபோது, மொத்தத்தில் 22 சதவீதம் இந்த ஆண்டு ஒதுக்கி இருக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 22 சதவீதம் என்பதற்கு மாறாக ஒரு காலகட்டத்திலே, 24, 25 சதவீதம்கூட கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். இந்த 22 சதவீதத்தில் மதிய உணவு திட்டத்துக்கு 94 கோடி ரூபாய் செலவிட நேரிடுகிறது. அது நேரடியாக கல்விச் செலவு அல்ல. கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு பயனுள்ள காரியம் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அது சமுதாயத்தினுடைய கடமை என்ற முறையிலே ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். சமுதாயத்தினுடைய கடமைக்காக ஒதுக்கப்படுகிற 94 கோடி ரூபாய் உணவுக்குச் செலவாவது என்ற காரணத்தால் மிச்சம் இருக்கிற 457 கோடி மொத்த வரவு செலவிலே 19 விழுக்காடு அல்லது 20 விழுக்காடுக்குக் குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன் இந்த குறைப்பாட்டைக் கூட நான் குறிப்பிடமாட்டேன், தேவை மிகுதியாக இருக்கிற காரணத்தால் அந்தத் தேவையை ஈடு செய்ய முடியாதபோது எந்த வகையில் குறைந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டவே நான் நினைவூட்டுகிறேன்.

அது மட்டும் அல்லாமல், மத்திய அரசு ''கல்வி ஒரு சவால்''; ஒரு கொள்கை தொலை நோக்கு என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை ஆங்கிலத்தில் தயாரித்து தமிழில் வழங்கி அதன் மூலமாக அகில இந்தியாவில், கல்வியை ஒருமைப்பாட்டு முறைக்கு ஆட்படுத்துவதற்கு ஒரே பேட்டர்ன் என்ற முறையில் கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. மத்திய அரசு இவ்வளவு பெரிய காரியத்தில் ஈடுபட்டிருக்கிறது என்று சொல்லுகிறபோது வெறும் கொள்கையைத்தான் அவர்கள் தெரிவிக்கிறார்கள், ஆலோசனையாக என்றால் எனக்கு அதிலே வருத்தம் இல்லை. அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு கருதி, அந்த நோக்கத்தில் செயல்படுமானால் அது வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது. ஏன் என்றால் கல்வித் துறையில் மாநில அரசுக்கு ஆலோசனை சொல்லுகிற அளவுக்கு மத்திய அரசு அந்த கல்வியில் நீண்டதொரு அனுபவத்தை பெற்றிருப்பதாகவோ தமிழக அரசு பெற்றிருக்கிற அளவுக்கு கல்வி நிர்வாகத்தில் அனுபவம் பெற்று இருக்கிற அளவுக்கு மத்திய அரசு அனுபவம் பெற்று இருப்பதாகவோ நான் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. காரணம் மத்தியில் உள்ள கல்வி அமைச்சருக்கு அவ்வளவு பெரிய பொறுப்பு என்றும் இருந்தது இல்லை, என்பது மட்டும் அல்ல, என்றும் நிறைவேற்றியதும் அல்ல. மாநில அரசுகள் தங்கள் வரவு-செலவில்

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

கல்விக்காக ஒதுக்குகிற விகிதாச்சார தொகையில் ஒரு சிறு பகுதி கூட மத்திய அரசு கல்விக்காக ஒதுக்கியது இல்லை. அப்படி ஒதுக்காத மத்திய அரசு இந்த அளவுக்கு இந்தத் திட்டத்தை வலியுறுத்தி நிறைவேற்ற விரும்புகிறது என்று சொல்லுகிறபோது, மத்திய அரசு மூலமாக கல்விக்காக நமக்கு கிடைக்கிற பங்கு எவ்வளவு என்று பார்த்தால் ஏறத்தாழ 402 லட்சம். நாம் செலவழிப்பது 551 கோடி, பிற துறைகளின் மூலம் இதற்காக செலவழிப்பது மேலும் 130 கோடி, இதுவே பற்றாக்குறை. இது ஏறத்தாழ தேவையின் அளவில் 60 சதவீதம்தான் ஒதுக்கப்படு கிறது என்பது என்னுடைய அழுத்தமான கருத்து. ஆனால் அதேநேரத்தில் மத்திய அரசு இதிலே தருகிற பங்குத் தொகை 402 லட்சம். 551 கோடிக்கு 402 லட்சம் என்பது ஒரு சதவீதத் திற்கும் குறைவு. 0. 75 சதவீதம் 0.8 என்ற அளவுக்கு விழுக்காடு இருக்கிறது. இந்த அடிப்படையில்தான் மத்திய அரசு நிதி உதவி தருகிறது. வேறு துறைகளில் தருகிற நிதி உதவி ஏதாவது கல்வி சம்பந்தமாக இருக்குமானால் அதையும் சேர்த்தாலும்கூட ஏறத் தாழ 1 சதவீதம் என்ற அளவுக்குத்தான் மத்திய அரசு நிதி உதவி செய்கிறது. 1 சதவீதம் நிதி உதவி செய்து விட்டு கல்வி திட்டத்தை மத்திய அரசு தன் கையில் வைத்துக்கொள்ள விரும்பு கிறது என்று சொன்னால் அதைவிட முறைகேடு, அதைவிட கண்டிக்கத்தக்கது, வருந்தத்தக்கது, பொறுப்பற்ற செயல் வேறு எதுவும் இருக்க முடியாது. நான்தமிழக அரசுக்காக மட்டும் வாதாடவில்லை, இந்தியாவில் உள்ள எந்த மாநில அரசாக இருந்தாலும் ஆரம்ப கல்விக்கு அவர்கள்தான் பொறுப்பு. 14 வயது வரையில் கட்டாயமாகக் கல்வி என்ற திட்டத்தில் பிள்ளைகளுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும், பிள்ளைகள் கட்டாய மாக படிக்கச் செய்யவேண்டும் என்று அரசியல் சட்டம் சொல்கிற கருத்தை நிறைவேற்றுகிற பொறுப்பு மாநில அரசுகளுக்குத்தான் இருக்கிறது. கல்வி மாநில அரசின் கையில் இருந்தது, கல்வியை மத்திய அரசு, மாநில அரசின் மூலமாகத்தான் நிறைவேற்ற முடியும். மத்திய அரசு நேரடியாக கல்விப் பணியை என்றைக்கும் நிறைவேற்றியது இல்லை.

ஆனால் இன்றைக்கு எப்படியோ கல்வியை தங்களுடைய கையில் வைத்துக்கொண்டால் தங்களுடைய மொழி ஆதிக்கத்தை நிறைவேற்ற வழி செய்யலாம் என்பது நோக்கம். இன்னும் சொல்லப்போனால், இந்த திட்டத்தைக் கொண்டுவருகிற முயற்சியில் ஈடுபட்ட அந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தவருக்கு மிகுந்த நாகரிகமான, பண்பாளராக நடக்கும் போக்கு உண்டு என்று சொன்னாலும் கூட, எல்லோருடைய கருத்தையும் மதிப்பவர் என்று சொன்னாலும்கூட, அவரையும் அறியாமல் இயல்பாக இந்தியில் அளவுகடந்த பற்று கொண்டவர் என்பதை நான் அறிந்தவன், எனவே அந்தப் பற்றின் விளைவாக இந்தத் திட்டத்தின் மூலமாக எங்கும் இந்தியை நுழைப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்ற காரணத்தால் இவ்வளவு பெரிய திட்டத்தை இன்றையதினம் அவர்கள் உருவாக்க நினைக்கிறார் கள். இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புவது, கல்விக்காக



1986 ஏப்ரல் 19] [திரு. க. அன்பழகன்]

செலவிடுகிற தொகையில் பெரும் பங்கு மத்திய அரசு தருவதாக இருந்தாலும் கூட கொள்கை வகுக்கிற உரிமை மாநில அரசுக்குத் தான் இருக்கவேண்டும் என்பதை நான் நினைவூட்ட விரும்பு கிறேன். ஆலோசனைகள் வழங்கலாம், இன்னும் சொல்லப் போனால் புதிய வழிமுறைகளை வகுத்துத் தரலாம், இயன்ற வரையில், பின்பற்றும்படி கேட்கலாம் பின்பற்றுவதற்கு சில சலுகைகளை அளிக்கலாம், ஆனால் நிறைவேற்றுகிற பொறுப்பு மட்டும் அல்ல, அதை ஏற்றுக்கொள்ளுவதா, வேண்டாமா என்னும் அந்த முடிவு மாநில அரசுக்குத்தான் இருக்கவேண்டும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 10—00)

அது மட்டும் அல்ல, நம்முடைய மாநில அரசு கல்விக்காக ஒதுக்குகிற தொகை 551 கோடியில் தொழில் நுட்ப கல்விக்கு 20 கோடிதான், 19 கோடிதான் என்ற அளவில் ஒதுக்கப்பட்டிருக் கிறது. காலம் மாறி வருவதையும், தொழில் கல்வியினுடைய தரம் உயர்த்தப்படவேண்டும் என்பதையும், அதை பயனுள்ள கல்வியாக மாற்றுவதை விட சமுதாய பொருளாதார மாற்றத் திற்கு வேறு வழி இல்லை என்பதையும், விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கிற நாடு நலிந்து போயிருக்கிறது என்பதையும் தொழில் துறையில் மின் இயல் அடிப்படையில்,மின் அணு இயல் அடிப்படை யில் வளர்கிற தொழிலுக்கு முக்கியத்துவம் வளரக்கூடிய அளவுக்கு வந்து விட்டபோது பொறியியல் துறையில், தொழிலில் ஏற்படக்கூடிய வளர்ச்சி ஒன்று தான் நமக்கு பின் பலமாக இருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது தொழில் நுட்ப கல்விக்கு 20 கோடி ரூபாய்தான் மாநில அரசு ஒதுக்கு கிறது. 551 கோடி ரூபாயில் என்றால் வேறு வழி இல்லாத காரணத்தால் குறைந்து விட்டது என்றோ அல்லது இவ்வளவு தான் முடிந்தது என்றோ அமைச்சர் அவர்கள் சொன்னாலும் இந்தத் தொகை பற்றாக்குறை என்பதை யாரும் மறுக்க இயலாது. ஒரு வேளை நீங்கள் மேல்நிலைக் கல்வியிலே, அல்லது தொழில் கல்வியிலே செலவிடுகிறோமே என்று சொன்னால், அது ரூ. 5 கோடி அளவுக்கு விகிதாச்சாரத்திற்கு தான் வரும். அல்லது அதிகமானால் ரூ. 10 கோடிதான் வரும். ஆகவே, இந்தத் தொகை போதாது என்பதை நான் மறுபடியும் இந்த நேரத்தில் நினைவூட்டுகிறேன். ஒரு வேளை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடும். நாங்கள் அதனாலேதான் சுய நிதிக் கல்வி நிலையங்கள் என்ற பெயரால் தனியார் நடத்தக் கூடிய தொழில் பயிலகங்களும், பாலிடெக்னிக்குகளும் ஏற்படுத்த இசைந்து தமிழ்நாட்டில் 71 பயிலகங்கள் 23 பொறியியல் கல்லூரிகளுக்கு உடனடியாக கடந்த இரண்டு ஆண்டுகளில் அனுமதி வழங்கி, நடத்த அனுமதி அளித்திருக்கிறோம் என்று சொல்லக் கூடும். ஆகவே, அதை மேற்பார்வை செய்வதற்கும், சரியான முறையில் அமைப்பதற்கும், இன்னின்ன குழுக்கள் இருக்கின்றன என்ற அறிவிப்பையும் நான் இங்கு அறிக்கையில் பார்க்கிறேன். பல் கலைக் கழகங்கள் அவற்றை அங்கீகரித்ததற்குப் பிறகு அதனு டைய குழுக்கள் அவற்றை பார்வையிடும் என்று அறிகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

ஆனால், வேடிக்கை என்னவென்றால். இந்த 71 தனியார்
தொழில் பயிலகங்களில், 10, 11 தவிர, 60 தொழில் பயிலகங்கள்
முறையாக அமைக்கப்படவில்லை என்பதை நான் அறுதி
யிட்டு அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பயிற்சிக்கு
தேவையான இயந்திரங்கள் கிடையாது, பயிற்சி கூடங்களுக்குரிய
கட்டிடம் கிடையாது; மாணவர்கள் விடுதி கிடையாது; பயிற்சிக்
கான இடங்கள் கிடையாது. பெரிய கொட்டகைகள், பெரிய
குதிரைக் கொட்டகைகள்தான் பயிலகமாக மாறியிருக்கின்றன.
மாணவர்களிடம் நிதி கூட வசூலித்திருக்கிறோம். இந்த
பொறியியல் கல்லூரிகள், 23-லே 4, 5 தான் முறையாக
அமைந்திருக்கலாம். 23-லே 10, 12 முறையாக அமைந்திருக்
கலாம். மிச்சமிருப்பதில் மாணவர்கட்குச் சரியான பயிற்சி தர
முடியவில்லை என்பதை நான் ஆதாரத்தோடு சொல்ல முடியும்.
நீங்கள் சரியான பயிற்சி தர வாய்ப்பு இல்லாமலே 1 ஆண்டு, 2
ஆண்டு, 3 ஆண்டு என்று அனுமதித்துவிட்டு, அவர்கள் சரியான
முறையில் நடத்தாவிட்டால் அரசு எடுத்துக்கொள்ளும் என்று
சொன்னாலும், அரசு எடுத்துக் கொள்வதற்கான உரிமையைப்
பெற்றிருந்தாலும் கூட, பயிற்சி கிடைக்க வேண்டிய முறையில்
மேற்படி பயிற்சி கிடைக்கவில்லை என்பதை அமைச்சரோ,
வேறு யாருமோ மறுத்துவிட முடியாது என்று கருதுகிறேன்.
நீங்கள் மேற்பார்வை செய்வதில் மிகுந்த அக்கறை காட்டி,
முறைப்படுத்தினால் தவிர, அந்தக் கல்லூரிகளும் பயிலகங்களும்
நடப்பது முறையல்ல என்ற கருத்தை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னும் ஒரு விதி இந்த அறிக்கையிலே
காணப்படுகிறது. இது சுய நிதி கல்வி நிறுவனங்கள். சொந்
தமாகக் கல்வி நிலையத்துக்கான நிதியைத் தேடிக்கொள்கின்ற
கல்வி நிலையங்கள் என்ற பெயர் தந்திருக்கிறோம். அரசு
ஆதரவு கேட்காத கல்வி நிறுவனங்கள் என்று சொன்னால்,
சற்று பொருத்தமாக இருக்கும். சுய நிதி நிறுவனங்கள் என்ற
காரணத்தினால், திட்டவட்டமாக " கேப்பிடேஷன் ஃபீ "
வசூலிக்கப்படுகிறது. 3, 4 கல்லூரிகளில் வேண்டுமானால்,
மாணவர்கள் வராத காரணத்தினால், வசூலிக்காமல், மாணவர்
களை சேர்த்திருப்பார்களே தவிர, நான் அறிந்த 100-க்கு
80 மாணவர்கள் " கேபிட்டேஷன் ஃபீ " செலுத்தித்தான்
சேர்ந்திருக்கிறார்கள். அப்படி " கேப்பிடேஷன் ஃபீ "
செலுத்துவது சமுதாயத்திலே இன்றைக்கு இருக்கிற இடர்ப்
பாடுகள் காரணமாக தேவைப்படுகிறது என்று சொல்லிவிட்டால்
கூட நான் வருத்தப்பட மாட்டேன். ஆனால், என்ன தெரி
விக்கப்பட்டிருக்கிறது? அரசாங்கம் வகுத்த விதிமுறைக்கு உட்
பட்டு மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும். சேரும் மாணவர்
களிடம் எத்தகைய தலைக் கட்டணமும், " கேப்பிடேஷன்
ஃபீ "-ம் வசூலிக்கக்கூடாது. நிபந்தனைகள் மீறப்பட்டால்
தொழில் கல்வி நிறுவனங்களை அரசே எடுத்துக்கொள்ளும்
என்று முதலிலேயே தனியார் நிர்வாகத்திடம் இசைவு பெற



1986 ஏப்ரல் 19] [திரு. க. அன்பழகன்]

வேண்டும். இந்த இசைவைப் பெற்றிருக்கிறோம் என்று கூறப்
பட்டுள்ளது. அதன்படி இப்போது அந்தக் கல்வி நிலையங்களை
எடுத்துக்கொள்வீர்களா? எடுத்துக்கொள்ள தமிழக அரசிற்கு
நிதி வசதியிருக்கிறதா? அடுத்த ஆண்டிலாவது " கேப்பிடே
ஷன் ஃபீ " இல்லையென்று நீங்கள் அறிவிக்க முடியுமா? மாண
வர்களில் சிலர் வசதி உள்ளவர்கள் " கேப்பிடேஷன்
ஃபீ " செலுத்தி படிப்பதில், எனக்கு ஒன்றும் வருத்தம்
இல்லை. ஆனால், முறை நியாயம் தானா? இன்னும் சொல்
லப்போனால், இந்தக் கல்வி நிறுவனங்கள் வந்த காரணத்தினால்,
கிராமப்புறங்களிலே உள்ள ஏழை மாணவர்கள் மிகமிகப் பின்
தங்கிய மாணவர்கள், வசதியற்றவர்கள் இடம் பெற்றிருக்கிறார்
கள் என்று இந்த அறிக்கையில் காணப்படுகிறது. அங்கே இடம்
பெற்றிருக்கிற 100 மாணவர்களில் எத்தனை ஏழை மாணவர்
கள் இடம் பெற்றிருப்பார்கள் என்று கருதுகிறீர்கள்? வேண்டு
மானால் கிராமப்புறங்களில் உள்ள வசதி உள்ளவர்கள் இடம்
பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லலாம். கேப்பிடேஷன் ஃபீ
என்ற இந்த முறை தமிழகத்திலே இவ்வளவு நாளும் பின்பற்றப்
பட்ட முறைக்கு மாறாக ஒரு புது முறையாக உருவாக்கப்பட்ட
காரணத்தினால் ஒரு வேளை எதிர்காலத்தில் இதன் விளைவுகள்
நன்றாக இருக்குமா என்று நான் ஐயுறுகிறேன். இதைவிட முக்கிய
மாக இங்கே திரு. ரமணி அவர்கள் பேசும்போது சொன்னதைப்
போல, கல்வியிலே இருக்கிற ஏற்றத்தாழ்வு சமுதாயத்தில் இருக்
கிற ஏற்றத்தாழ்வுகளுடைய விளைவாகத்தான் இருக்கிறது
என்பதை யாரும் மறுக்க முடியாது. பொருளாதாரத்தில்
ஏற்றத்தாழ்வுகள் மிகுந்து உள்ள சமுதாயத்தில் வறுமைக்
கோட்டிற்கும் கீழே 100-க்கு 58 பேர்கள் இருக்கிற
நாட்டில், அந்த சமூகத்திலிருந்து படித்தவர்கள் வந்
தால் தவிர அந்தச் சமுதாயத்திற்கு விடுதலை கிடையாது என்ற
சூழ்நிலை இருக்கிற நாட்டில், அவர்கள் இந்தக் கல்வி நிறுவனங்
களில் சேர்க்கப்படுவதற்கு அரசாங்கம் என்ன வாக்குறுதி தர
முடியும், என்ன உறுதி மொழி தரமுடியும் என்று நான் கேட்க
விரும்புகிறேன்.

ஆனால், இன்றையதினம் அகில இந்தியாவிலே ஏதோ புதிய
நோக்கம்—திட்டம் என்ற அடிப்படையிலே, கிராமங்களுக்கும்
நகரங்களுக்கும் கல்வியிலே உள்ள ஏற்றத்தாழ்வுகள். பணக்கார
வீட்டுப் பிள்ளைகளுக்கும் ஏழை வீட்டுப் பிள்ளைகளுக்கும் இடை
யிலே இருக்கிற ஏற்றத்தாழ்வு மேல் வகுப்பினருக்கும் கீழ்
வகுப்பினருக்கும் இடையே இருக்கிற ஏற்றத்தாழ்வு, அரசாங்கப்
பள்ளிக்கூடத்திற்கும் தனியார்கள் பள்ளிக்கூடத்திற்கும் இடையே
இருக்கிற ஏற்றத்தாழ்வு. இன்னும் சொல்லப்போனால் ஆங்கில
முறைப் பயிற்சியிலே கிடைக்கிற கல்விக்கும் தமிழிலே சாதாரண
பள்ளிகளிலே கிடைக்கிற கல்விக்கும் இடையிலே இருக்கிற
ஏற்றத்தாழ்வு நேற்றைய தினம். திரு. தியாகராசன் அவர்கள்
சொன்னதுபோல் கிராமங்களிலே இருக்கிற பிள்ளைகள் சரி
யான கல்வியை பெறுகின்ற வாய்ப்பை இழந்திருக்கிற நிலையில்
பொறுப்போடு கண்காணிக்கப்படாத இந்த நிலையங்களிலே

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

இருக்கிற குறைகள் ஆகியவற்றையெல்லாம் போக்குவதற்கு ஒரு வாய்ப்பாக மத்திய அரசு இந்தப் புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 1922-23 ஆம் ஆண்டிலே நீதிக் கட்சி ஆட்சி நடத்தியபோது தாழ்த்தப்பட்டவர்களாக இருந் தாலும், பின்தங்கியவர்களாக இருந்தாலும், கல்வி நிலையங் களிலே இடம் கிடைப்பதற்கு வழி செய்தார்கள். தாழ்த்தப் பட்டவர்களுக்கு சென்னை மாநகராட்சி மன்றப் பள்ளிகளில் பகல் உணவு அளிப்பதன் மூலமாக தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் கல்வி பெறுவதற்கு ஊக்கம் அளித்தார்கள். ஆகவே, முதன் முதலாக அந்த வாயிலைத் திறந்து விட்டவர்கள் நீதிக் கட்சித் தலைவர்கள் தான். அதற்குப் பின்னாலே அதைத் தொடர்ந்து காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே பெருந்தலைவர் காமராஜ் அவர் களும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்க ளுக்கும் கல்வியிலே பல சலுகைகளையும் அளித்து அவர்கள் வளர்வதற்கு வாய்ப்பு அளித்தார்கள். அது தொடர்ந்தது. இன்றைக்கும் அது தொடர்கிறது.

ஆகவே, சமூக நீதி என்ற அடிப்படையில் கல்வியை நோக் குகிற கண்ணோட்டம் தமிழகத்திலே ஏற்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இன்றைக்குத்தான் டெல்லி அரசுக்குச் சமூக நீதி என்ற கண்ணோட்ட அடிப்படையையே ஆரம்பித்திருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடம் ஒதுக்க வேண்டுமென்ற நியாயத்தை எதிர்த்து அரசியல் சட்டத்தை காரணம் காட்டி உயர் நீதிமன்றத்திற்குப் போய் பேக்வர்ட் கம்யூனிட்டீஸ் ஆன அந்த மக்களுக்கு கம்யூனல் ஜி.ஓ. மூலமாகக் கல்வி நிலையங் களிலும் அரசு அலுவலகங்களிலும் கிடைத்த இடங்களை அரசியல் சட்டத்தின்படி அது தவறு என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்து, அது தொடரமுடியாத நிலை ஏற்பட்டபோது தமிழகத்திலே கிளர்ச்சி ஏற்பட்டு தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும் இன்னும் பல தலைவர்களும் அந்தக் கிளர்ச்சியிலே ஈடுபட்டு, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள், அந்தக் கருத் தைப் பண்டித நேரு அவர்களிடத்திலே வலியுறுத்தி கூறிய பின்னர்தான் பேக்வர்ட் கிளாஸ் மக்களுக்கு கல்வி நிலையங் களில் என்று இடம் ஒதுக்குவதற்கு உரிமை வழங்கும் முறையில் அரசியல் சட்டம் முதல் முறையாகத் திருத்தப்பட்டது. எனவே அந்தக் கருத்துக்கே சொந்தக்காரர்கள் நாம். அந்தக் கருத்து நம்மிடத்திலே இருந்தே பரவியது. ஆனால், அந்தக் கருத்தை நிறைவேற்றுகிறபோது எத்தனையோ இடர்பாடுகள் வருகின்றன. அந்த இடர்பாடுகளை வென்று ஒரு புதிய சமுதாயம் காண ஒரு பெரிய முயற்சி தேவை. அந்த முயற்சிக்கு ஏராளமான பொருள் வசதி தேவை. கல்விக்காக வேண்டப்படும் பொருளை—தேடு வதற்காக நான் 2 ஆண்டுகளுக்கு முன்னர் பேசுகின்றபோது அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டேன்—ஒரு ஆண்டுக்கு 100 கோடி ரூபாய் கல்வி நிலையக் கட்டடங்கள்



1986 ஏப்ரல் 19] [திரு. க. அன்பழகன்]

கட்டுவதற்கு கல்லூரிகளிலோ, பள்ளிகளிலோ கட்டடங்கள் கட்டு வதற்கு—தனி நிதி தேவை என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் அதற்காக முயற்சிக்கப்படும் என்று தெரிவித்தார்கள்.

ஆனால், அந்த முயற்சி அதற்குப் பின்னர் நின்று போய் விட்டது. இன்றைக்குத் தரப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களில் "குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரியில் இடிந்துவிழும் நிலை யிலுள்ள கட்டடங்களை இடித்துவிட்டுப், புதிய கட்டடங்கள் கட்டித் தரக் கோரி விவாதிக்க" என்று தெரிவித்திருக்கிறார் கள். இடிந்து விழுகிற நிலையில் 100 ஆண்டுக்கு முன்னாலே கட்டப்பட்ட கட்டடங்கள் எத்தனையோ இருக்கின்றன. சரி யான முறையில் கட்டப்படாத நிலையில் எத்தனையோ கட்ட டங்கள் இருக்கின்றன. ஆரம்பப் பள்ளிகளிலே பலவற்றில் கட்ட டங்கள் இல்லை. மத்திய அரசு அறிக்கையிலேயும் இந்தக் கருத்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. அகில இந்திய அளவிலே இந்த தேவை சற்று அதிகமாகக்கூட இருக்கிறது. அந்த அறிக்கையில் சொல்லு கிறபோது, பெரும்பான்மையான குழந்தைகள் வீட்டிலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள்ளேயே பள்ளியிருப்பதுசரி என்றாலும் தகவல்களைப் பிரித்து ஆயும்போது 300-க்கு மேல் மக்கள் தொகையுள்ள மொத்தம் 9.5 இலட்சம் குடியிருப்புகளிலே ஐந் தில் ஒரு பங்கு அதாவது 2 இலட்சம் குடியிருப்புகளில் அவர்க ளுக்குப் பள்ளிகள் இல்லை. பள்ளிகள் உள்ள இடங்களில், 40 விழுக்காடு கட்டடங்கள் இல்லை. ஏறத்தாழ 40 விழுக்காடு கரும்பலகைகள் கூட இல்லை. நான் புள்ளிவிவரத்தை எடுத்து காட்டித்தான் பேசுகிறேன். 60 விழுக்காடு குடிநீர் வசதியில்லை. 3, 4 வகுப்புகளுக்கு ஒரே ஆசிரியர் மட்டும் உள்ள பள்ளிகள் 35 விழுக்காடு உள்ளன.

ஆக நம்முடைய மாநிலத்தில் இது ஓரளவுக்கு சற்று குறைவாகக் கூட இருக்கலாம், நான் முன்னாலே குறிப்பிட்ட அந்த அடிப்படையிலே. பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான வசதிகள் இல்லை. பெஞ்ச்கள் இல்லை, நாற் காலிகள் இல்லை, கரும்பலகைகள் பல இடங்களிலே இருக்கின் றன, சில இடங்களிலே உடைந்து இருக்கின்றன. சில இடங் களிலே கட்டடங்களே இல்லை. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கேட்டு அவரும் 25 இலட்சம் ரூபாய் ஆண்டுக்கு என்று ஒதுக்கி 7 பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டாலும் மிச்சம் இருக்கிற 7 ஆயிரம் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் இல்லாது இருக்கிற நிலையில் அமைச்சர் அவர்கள் நாடு தழுவிய புதியதொரு திட்ட மாக, ஒரு ஆரம்பப்பள்ளி நடத்த வேண்டுமென்றால் பத்து பெரிய மரங்களை வளர்க்க வேண்டுமென்று அறிவிக்கவேண்டும். இதை ஏற்றுக்கொண்டு மரங்களை வளர்த்தால், மரங்களை வளர்ப்ப தனால் இரண்டு வகையிலே நன்மை ஏற்படும். காடுகள் அழிந்து போவதால், அழிக்கப்படுவதால் ஏற்படும் அந்த இழப்பும் குறையும். ஏற்படக்கூடிய சூழ்நிலை பாதிப்புகளையும் அது தடுக்கும். பத்து நல்ல மரங்களை வளர்த்தால், கட்டிடம் இல்லாவிட்டாலும் பிள்ளைகள் அங்கே அமர்ந்து படிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும் நிழலால் ஏற்படும். அவர்கள் உட்கார்ந்து

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

படிப்பதற்குப்போதுமான நிழல் கிடைக்கும். இப்படி மரங்களை வளர்ப்பதால் இரண்டு வகையான பயன்கள் சமூகத்திற்குக் கிடைக்கும். பள்ளிக்கூடம் இடிந்து போனாலும் கட்டிடம் கட்டுகின்ற வரையில் அந்த மர நிழல்கள் உதவும். புயலினால் பாதிக்கப்பட்டு கூரை இல்லாமல் போனாலும் பள்ளிக் கூடங்களைத் தொடர்ந்து நடத்துவதற்கும் அந்த மர நிழல்கள் வாய்ப்பாக இருக்கும். அப்படி மரம் வளர்ப்பதை கேலியாக குற்றமாகச் சொல்லவில்லை. உள்ள நிலைமையை உணர வேண்டும் என்பதற்காகவே கூறுகிறேன்.

(முற்பகல் 10.10)

அடுத்து, மத்திய அரசாங்கம் கல்வி முறையைப் புதுப்பிக்கின்ற அந்தத் திட்டத்தில் கூறியுள்ளது போன்று கல்வியைத் தொழில் சார்ந்ததாக ஆக்குதல், நுணுக்கமான பாடங்களைக் கல்லூரி நிலையில் அளித்தல், கிராமப்புற, நகர்ப்புறங்கள் இடையேயும், மற்றும் சமுதாயத்தில் பல பகுதியினரிடையேயும் கல்வி வாய்ப்புக்களில் உள்ள வேறுபாடுகளைக் களைதல் என்ற கருத்துக்களுக்கு மத்திய அரசாங்கம் எந்த அளவிற்குப் பொறுப்பு ஏற்கும்? மத்திய அரசுக்கு இவற்றை நிறைவேற்றுவதில் எந்த அளவிற்குப் பொறுப்புகள் இருக்கின்றன? இதை மாநில அரசாங்கம்தான் நிறைவேற்ற வேண்டி வரும். அப்படி மாநில அரசே இதை நிறைவேற்ற வேண்டுமென்றால் ஏறக்குறைய நமது மாநிலத்திற்கு ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் அதிகமாகத் தேவைப்படும். இப்படிப்பட்ட திட்டத்தை முழு அளவிற்கு, செம்மையாக நிறைவேற்ற வேண்டுமென்றால் இப்பொழுது ஒதுக்கப்படுவதைத் தவிர, இன்னும் 500 கோடி ரூபாய் தேவைப்படும். அகில இந்திய அளவில் பத்தாயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். இதை ஆண்டுதோறும் ஒதுக்குவதற்கு மத்திய அரசாங்கம் முன்வருமா முடியுமா என்பது தெரியவில்லை.

இந்தத் திட்டத்தின்படி இந்தியா முழுவதும் ஒரே வகையான கல்வி இருக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்படுகிறது. கல்வி முறையில் அதன் வளர்ச்சிக்கு எதிராகக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்து, இப்படித் தான் இருக்க வேண்டுமென்று வலியுறுத்துவது கூடாது. ஏற்கனவே அரசாங்கத்தின் மூலம் சில கல்லூரிகளுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட்டு, பாடத் திட்டங்களில் சில மாற்றங்களைச் செய்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது; உயர் நிலைப் பள்ளிகளோகூட சுயாட்சி வேண்டுமென்று விரும்புகின்றன; பல்கலைக் கழகங்கள் சுயாட்சி உரிமை பெற்றன வாகத் திகழ்கின்றன; ஒரு மாநிலத்திலே நான்கு பல்கலைக் கழகங்கள் இருந்தால் அவைகளிடையே பாடத் திட்டங்களிலே வேற்றுமைகள் இருப்பதற்கான உரிமைகள் இருக்கத்தான் வேண்டும், அவர்கள் தனித்தனிப் பாடங்களை வளர்ப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைகளில்,



1986 ஏப்ரல் 19] [திரு. க. அன்பழகன்]

அகில இந்தியாவிலேயும் ஒரே மாதிரியான கல்விதான் அமைய வேண்டுமென்று கருதுவது கல்வி வளர்ச்சியையேகூடப் பாதிக்கும். அது, கல்வி மூலமாக பல்வேறு சிந்தனைகள் வளர வேண்டுமென்று கருதுகின்ற அந்தப் பொது நோக்கத்திற்கேகூட கேடாக அமையும் கல்வியிலே பல்கலைக் கழகத்திற்குச் சுயாட்சி உரிமை இருக்கின்றபொழுது, உயர்நிலைப் பள்ளிகளுக்கு சுயாட்சி தரலாம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற பொழுது, சில கல்லூரிகளுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது என்ற நிலையில் மாநில அரசுக்கும் கல்வியிலே சுயாட்சி உரிமை இருக்க வேண்டுமே தவிர, அந்த சுயாட்சியை மாநிலம் இழந்து விடக் கூடாது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், அடிப்படையில் மாநில அரசாங்கத்திற்கு இருக்கின்ற உரிமைகளைக் கெடுக்கின்ற அளவிற்கு மாதிரிப் பள்ளி என்ற மத்திய அரசாங்கத்தின் திட்டம் தமிழகம் ஏற்க முடியாத ஒன்று. இன்றைக்கு சென்ட்ரல் போர்டு ஆப் எஜுகேஷன் என்று சொல்லப்படும் மத்தியக் கல்வி ஆணைக் குழுவின் மூலம் ஆங்காங்கு நடக்கின்ற பள்ளிக் கூடங்களிலேயே, தமிழக அரசின் கொள்கைக்கு மாறாக, இந்திக்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது அந்த நோக்கத்திற்காகவே அந்த பள்ளிகள் அமைந்திருக்கின்றன. அதைத்தொடர்ந்து, மாதிரிப் பள்ளி என்று அவர்களால் கொண்டு வரப்பட்டால், நேற்று அமைச்சரவர்கள் சொன்னதைப் போல, ஒரு பள்ளி அமைத்திட ஒரு கோடி, ஒன்றரை கோடி அல்லது இரண்டு கோடி ரூபாய் செலவாகும் என்பது கூட அல்ல, மாவட்டத்திற்கு ஒரு மாதிரிப் பள்ளியை ஏற்படுத்தி விட்டால் மற்றவர்கள் அதைப் பார்த்து ஏங்கக்கூடிய நிலைமைதான் ஏற்படும். இப்பொழுது கூட சீருடைகள் வழங்கப்படுகின்றன. ஏன்? ஒரு வகுப்பிலே படிக்கின்ற பிள்ளைகள் ஒரே மாதிரியான உடைகளை அணிவதால் அவர்களிடையே வேற்றுமைகள் குறையும், கசப்புணர்ச்சிகள் குறையும், ஒற்றுமை ஏற்படும், சமத்துவ உணர்ச்சி வளரும், என்னும் நோக்கத்தால்தான். ஆனால் அதற்கு மாறாக, மத்திய அரசின் மாதிரிப் பள்ளி என்ற ஒன்று வசதிகளால் கொடி கட்டிப் பறக்கும் என்று சொன்னால், அது சமூக சமத்துவ நோக்கத்துக்கு எதிரானது. மேலும் மாநில அரசின் பள்ளிகளில் உள்ள வசதிகளைப் பெருக்கிடும் முறையில்தான் மத்திய அரசு கல்விக்காகத் தரும் உதவித் தொகை பயன்பட வேண்டும். மாநில அரசுக்குத்தான் அதை பரவலாகச் செலவிடக் கூடிய தகுதியுண்டு. ஒரு மாவட்டத்திற்கு ஒன்று என்றமுறையில் அமைய வேண்டுமென்றால் அது நிச்சயமாக நகரத்தில் தான் அமையுமே தவிர கிராமப்புறங்களிலே, பின்தங்கிய பகுதிகளிலே அமைவதற்கான வாய்ப்பு இருக்காது. ஆகவே, அது எந்த வகையிலேயும் நோக்கத்திற்குப் பொருத்தமாக இல்லை என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

அதுமட்டுமல்ல, எந்தத் தொழில் கல்வி வளர வேண்டு
மென்று மத்திய அரசு சொல்கிறதோ, அந்த நோக்கத்தில்தான்
பிளஸ் 2 முறை கொண்டு வரப்பட்டு கல்வி முறையிலே
ஏழாண்டுகளுக்கு முன்பு மாற்றம் செய்ய, முற்பட்டு ஐந்து ஆண்டு
களாக நடைபெற்று வருகிறது. பிளஸ் 2 கொண்டு வரப்பட்ட
பொழுது இப்படித்தான் பேசப்பட்டது. இதுவரையிலே, உயர்
நிலைப் பள்ளிக்கூடத்திலே படித்த மாணவர்கள் வெற்றி பெறு
வார்களானால் தொடர்ந்து கல்லூரிச்குச் செல்ல வேண்டு
மென்று விரும்புகிற நிலை இருக்கிறது. அவரவர்கள் ஒவ்வொரு
தொழிலிலே ஈடுபடக்கூடிய அளவுக்கு வாய்ப்பளிப்பதற்காகத்
தான் அந்தத் தொழில் கல்வி மூலமாக, 'வொக்கேஷனல் எஜுக்
கேஷன்' என்று சொல்லப்பட்ட முறை தொடங்கப்பட்டது.
அந்தக் கல்வி இப்பொழுது எப்படி நடக்கிறது என்று கேட்டால்,
அந்தக் கல்வி உரிய வகையிலேயும், உரிய அளவிலேயும் நடை
பெறவில்லையென்று நான் தெரிவிக்கவிரும்புகிறேன். அதற்காக,
மத்திய அரசு எந்த உதவியையும் செய்யவில்லை, தனி நிதி வழங்க
வில்லை. பிளஸ் 2 வகுப்பிலே உள்ள தொழிற்கல்விக்காக மத்திய
அரசு அக்கறை எடுத்துக் கொண்டு, அதற்கு ஆகிற மூலதனச்
செலவுக்காவது நிதி ஒதுக்கியிருப்பார்களானால் ஓரளவுக்கு அவர்
களுக்கு இந்த முறையில் அக்கறை இருக்கிறது என்பதைப் புரிந்து
கொண்டிருக்க முடியும்,

ஆனால் அவர்கள் நிதி ஒதுக்கவில்லை. இந்த பிளஸ் 2 படிப்
புள்ள மேல்நிலைப் பள்ளியில் தொழில் கல்வி பயிற்றுவிக்கப்படும்
நிலை இதுதான் ஏறத்தாழ 1,487 பள்ளிகளில், 1,380 அரசுப்
பள்ளிகள் இருக்கின்றன. அதில் 490 பேர்கள்தான் முழுநேரம்
தொழில்படிப்புச் சொல்லித்தருகிற ஆசிரியர்கள். 5,000 பேர்கள்
பகுதிநேர ஆசிரியர்கள். இந்த 5,000 பேர்களுக்கு மாதச்சம்பளம்
ரூ. 300. இந்த ரூ. 300 ஊதியத்தில் எவ்வளவு பேர்கள்
பொறுப்போடு கடமையாற்றுவார்கள், எவ்வளவு பேர்கள்
தகுதி உடையவர்கள் கிடைப்பார்கள், எந்த அளவுக்குப் பள்ளி
களின் பேரில் அக்கறை ஏற்படும்? அதை எண்ணிப் பார்க்க
வேண்டும். அந்த வொக்கேஷனல் எஜுக்கேஷன் என்பதிலே
டைப்ரைட்டிங், காமர்ஸ் ஆகிய துறைகளிலேதான் மாணவர்கள்
அதிகமான அக்கறை காட்டுகிறார்கள். மற்ற தொழில் வகுப்பு
களில் பயிற்சி பெற அதிகமான வாய்ப்புகள் இல்லை. அந்த வாய்ப்
புகள் இல்லாத காரணத்தால், பிள்ளைகள் பல்வேறு விதமான
தொழில்களிலே ஈடுபடுகிற அளவுக்கு ஊக்கம் தரக்கூடிய நிலை
இல்லை. இந்தக் கல்வி வெற்றி பெற வேண்டுமானால், இந்தக்
கல்வியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எவ்வளவு பேர்களுக்கு
வேலை வாய்ப்பு கிடைக்கிறதோ, அதைப் பொறுத்துதான்,
வெற்றி பெறும். அந்த முறையிலே பிளஸ் 2 படித்தவர்கள்
எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது?
அரசாங்கத்திலே கூட, ஒரு திட்டம், தொழிற்சாலையிலே
பயிற்சி வழங்குவதற்கு ஒரு வாய்ப்பு அளிப்பதாகச் சொல்லி,



1986 ஏப்ரல் 19] [திரு. க. அன்பழகன்]

500, 600 பேர்களுக்கு வாய்ப்பு அளிப்பதாக இருக்கிறதே தவிர,
30,000 பேர்கள் அந்தத் துறைகளிலே பயில்வார்களானால்,
அவர்களுக்கெல்லாம் அந்த வாய்ப்பு கிடைக்க வழி இல்லை.
எனவே, வேலை வாய்ப்பு இல்லாமல், தொழில் கல்வி, அதுவும்
அரைகுறையான தொழில் கல்வி, அதுவும் நேரடியாக ஒரு
தொழில் செய்து பிழைப்பதற்கு பயன்படக் கூடிய அளவுக்கு
இல்லாத நிலைமையில், இந்தத் தொழில் கல்வி இருக்குமானால்,
தொழில் கல்வி வளருமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்த மேல்நிலைப் பள்ளிகளிலே ஆய்வுக்கூட உதவியாளர்
பதவி 900 பேர்கள் அளவுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒரு
மேல்நிலைப் பள்ளியிலே ஏறத்தாழ 4 வகையான பாடங்
களுக்கு ஆய்வுக் கூடங்கள் இருந்தாக வேண்டும். அதாவது
இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல் இப்படி.
1,380 பள்ளிக் கூடங்களில் 4 பிரிவுகள் இருக்குமானால் ஏறத்
தாழ 5,000, 6,000 ஆய்வுக்கூட உதவியாளர்கள் தேவை.
ஆனால், வழங்கப்பட்டதோ 900. ஒரு பள்ளிக்கூடத்திற்கு
ஒரு உதவியாளர்கூட இன்னும் முழு அளவு நியமிக்கப்பட
வில்லை. எனவே, அப்படிப்பட்ட இடங்களிலே மாணவர்கள்
எப்படிப் பயிற்சி பெற முடியும்? அந்தப் பயிற்சியிலே குறை
பாடு ஏற்படாதா? கேட்டால், அந்த மாணவர்களை அழைத்துக்
கொண்டு, பக்கத்திலே இருக்கிற கல்லூரியில் அல்லது
அரசாங்கக் கல்லூரிகளிலே உள்ள பயிற்சிக் கூடங்
களில், பயிலகங்களில் இவர்களே, அந்தப் பயிற்சியைப் பெற்றுக்
கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறதே தவிர, மிக நெருக்க
மான தொடர்போடு கூடிய பயிற்சியைப் பெறக் கூடிய வாய்ப்பு
குறைவாகத்தான் இருக்கிறது. அந்த ஆய்வுக்கூட உதவியாளர்
கள் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படாவிட்டால், ஒரு பள்ளிக்
கூடத்திற்கு இரண்டு பேர்களாவது அமையாவிட்டால், அந்த
ஆய்வுக்கூடங்கள் முழு அளவுக்குப் பயன்படாது என்பதையும்
நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோல, 1,380 பள்ளிக்கூடங்களில் கட்டிடம் கட்டு
வதற்காக ஒரு பெரு முயற்சி எடுத்துக் கொண்டு, இவ்வளவு
நாளும் கட்டப்பட்ட கட்டிடங்கள் 668. 668தான் அதற்காக
உள்ள முறைப்படி கட்டிடங்கள் அமைந்திருக்கின்றன. எனவே,
அவர்களுடைய கல்விப் பயிற்சிக்கான இட வசதி கூட பல
இடங்களிலே குறைவாகத்தான் இருக்கிறது என்பதை நான்
நினைவூட்ட விரும்புகிறேன்.

இன்னும் மேல்நிலைப் பள்ளிகளிலே, சில பள்ளிக்கூடங்
களிலே, 1,500, 2,000, 2,200 மாணவர்கள் வரையிலே பயில்கி
றார்கள். உயர்நிலைப் பள்ளியும் மேல்நிலைப் பள்ளியும் ஒன்றாக
இணைக்கப்பட்ட காரணத்தால், உயர்நிலைப் பள்ளியிலே
ஏறத்தாழ 1,500 பேர்கள், இதிலே சேர்கிற 300 பேர்கள்
சேர்ந்து, 1,800 பேர்கள் ஆகிறபொழுது, மேல்நிலைப்

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

பள்ளியிலே அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியத்திலே
உள்ள ஒரு தலைமை ஆசிரியர் உயர்நிலைப் பள்ளிக்கூட வகுப்பு
களில் உள்ள ஏறத்தாழ 75, 80 ஆசிரியர்களுக்கும், 1,800
பிள்ளைகளுக்கும் பொறுப்பேற்க முடியாத நிலைமை இருக்கிறது.

எனவே, அந்தக் கல்வி தரமான கல்வியாக அமைய வேண்டு
மானால், அந்த உயர்நிலைப் பள்ளிக்கூடத்திற்குத் தனி
தலைமை ஆசிரியரை—மேல்நிலைப் பள்ளியாக இருந்தாலும்,
மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியரின் கீழ் பணியாற்றும்
முறையிலாவது ஒரு உயர்நிலைப் பள்ளியை ஒரு தலைமை
ஆசிரியர் கவனிக்க வேண்டிய அளவுக்கு நிலைமையை மாற்றி
சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உடல் பயிற்சியைப் பற்றி இங்கே பல உறுப்பினர்கள் சொன்
னார்கள். விளையாட்டு பற்றிக்கூட மிக ஆர்வத்தோடு சொன்
னார்கள். உடல் பயிற்சிக்கு இயக்குநர்கள் 250 பேர்கள்தான்
மேல்நிலைப் பள்ளிகளிலே நியமிக்கப்படுகிறார்கள். கல்வித் துறை
யில் மிக முக்கியமான கட்டமாக இருக்கிற மேல்நிலைப் பள்ளி
யில்—1,380 பள்ளிகளுக்கு 250 இயக்குநர்கள்தான் என்று
சொன்னால், மிச்சம் இருக்கிற ஆயிரத்துக்கு மேற்பட்ட பள்ளி
களுக்கு உடல் பயிற்சி தருகிற இயக்குநர்களே இல்லை. எனவே,
உடற்பயிற்சியில் ஆர்வமே ஏற்படாது. அந்த ஆர்வம் ஏற்பட்டால்
அல்லவா அப்புறம் வளர முடியும்? அதற்கு ஒரு அவசியம் ஏற்
பட்டால்அல்லவா வளர முடியும்?அந்த ஆர்வம் ஏற்படவே இன்று
வழியில்லை என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 10–20)

இங்கே கூட சில மாண்புமிகு உறுப்பினர்கள் விளையாட்
டுக்கு என்று ஒரு அமைச்சர் வேண்டுமென்று கேட்டார்கள்.
இயக்குநரே இல்லாத போது அமைச்சர் எதற்காக என்று கேட்
கத் தோன்றுகிறது. விளையாட்டுக்கு இவ்வளவு அமைச்சர்கள்
இருக்கும்போது இன்னொரு அமைச்சர் எதற்கு என்றும் கேட்கத்
தோன்றுகிறது. அந்த அளவுக்கு நம்முடைய அரசு இதிலே தீவிர
கவனம் செலுத்தவில்லை. இன்னும் தீவிர கவனம், அக்கறை
எடுத்துக் கொண்டால் தவிர மாணவர்களுக்கு விளையாட்டு ஆர்
வம் ஏற்படாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன்.

இந்த நிலையில், 1978–79 ஆம் ஆண்டு இந்த கல்வி மானியக்
கோரிக்கை பற்றி இந்த அவையில் பேசும்போது கல்வி அமைச்சர்
தெரிவித்தது இது. "மாநிலங்களுக்கு உரிமைப்பட்டிருக்கிற கல்வித்
துறையை மத்தியஅரசு பொதுப்பட்டியலில் எடுத்துக் கொள்வதை
இந்த அரசு எதிர்க்கிறது;மாநில அரசுக்குத்தான் கல்வித்துறையை
பற்றிய உரிமை இருக்கவேண்டும்"என்று சொன்னார்கள். பல்வேறு
கட்சித் தலைவர்களும் அந்தக் கருத்தை வலியுறுத்தி ஆதரித்திருக்
கிறோம். அப்படி இருந்தபோதிலும் பொதுப்பட்டியலிலே
சென்ற கல்வியை திரும்ப மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர



1986 ஏப்ரல் 19] [திரு. க. அன்பழகன்]

இதுவரையில் இந்த அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்தது
எந்த எந்த வாய்ப்புக்களை அதற்காகப் பயன்படுத்தியது?
இந்தச் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர
முயற்சி எடுத்ததா? மாநில சுயாட்சி கேட்கிற ஒரு கொள்கையை
ஏற்றுக்கொண்டுள்ள இந்த அரசு, மாநில அரசுக்கு உரிமை?
பட்டிருந்த கல்வியை மத்திய அரசின் உரிமைக்கு கொண்டு
சென்றதை எப்படி விட்டு வைக்கலாம்? மாநில அரசுப்
பட்டியலிலே இருந்த கல்வியை எப்படி பொதுப்பட்டியலுக்குக்
கொண்டு செல்லலாம் என்று கேட்கிறபோது நான் வலியுறுத்திக்
கூற விரும்புகிறேன், 1978-79 ஆம் ஆண்டில் எடுத்துச் சொன்ன
கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்த தவறி இருந்தாலும் இந்த
அவையில் இதற்கு ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறை
வேற்றி, கல்வி மாநிலப் பட்டியலுக்கு ஒதுக்கப்படுவதுதான்
ஜனநாயக நெறிக்கு ஏற்றது என்பதை வலியுறுத்த வேண்டும்.

மாநிலத்திற்கு கல்வி உரிமைப்பட்டிருக்க வேண்டும் என்று
சொல்லுகிற போது, பல்கலைக் கழகத் துணை வேந்தராக
நியமிக்கக் கூடியவரைப்பற்றி மாநில அரசுக்கு ஒரு கருத்து
இருந்து, ஆலோசனை வழங்கி, ஆளுநர் அதைப் புறக்கணித்து,
மற்றொருவரை நியமித்து அவருடைய விருப்பத்தை நிறைவேற்று
வதாக இருந்தால், அது மாநில அரசின் உரிமையில் தலையிடு
வதாகும். ஆளுநரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் நல்லவரா,
கெட்டவரா என்ற விவகாரத்திற்குள் நான் போகவில்லை.
அல்லது மாநில அரசால் பரிந்துரை செய்யப்பட்டவர் நல்லவரா,
கெட்டவரா என்கிற விவகாரத்திற்கும் போகவில்லை. அதை
மாற்றி நியமிக்கும் உரிமை ஆளுநருக்கு இல்லை. மேற்கு
வங்கத்தில் இந்த நிலை ஏற்பட்டபோது அந்த அரசு தீவிரமாக
இந்தப் பிரச்சினையைச் சந்தித்தது. ஆனால், நம்முடைய அரசு
விட்டுக்கொடுத்து ஏதோ சுட்டிக் காட்டி ஒரு கருத்தைத் தெரி
வித்து, பின்னர் அந்த நியமனத்தை ஏற்பதாகக் கூறி அதோடு
நிறுத்திக் கொண்டது. மிகத் தீவிரமாகச் சில கருத்துக்களைப்
பேசுகின்ற அமைச்சர் காளிமுத்து அவர்கள் கூட இதுபற்றி
எதுவும் சொல்லவில்லை; இந்த நியமனம் நடைபெற்ற முறை
பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

நேற்றையதினம்கூட அமைச்சர் இங்கே ஒரு கேள்வி எழுப்
பினார். எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பேசும்போது 'கம்யூனல்
ஜி.ஓ.'வை ஏற்றுக்கொள்கிறீர்களா என்று கேட்டார்கள். எனக்கு
இதிலே மிகுந்த மகிழ்ச்சி. அமைச்சர் காளிமுத்து அவர்கள்
எவ்வளவு கண்காணிப்போடு இருந்து கம்யூனல் ஜி.ஓ.வை ஏற்றுக்
கொள்கிறீர்களா என்று கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரை கேட்கத்
துடிக்கிறாரே என்பதில் மகிழ்ச்சி. 4, 5 ஆண்டுகளுக்கு முன்னர்
பிற்பட்ட வகுப்பினர் என்னும் உரிமை 9,000 ரூபாய் வருமான
வரம்பிற்கு உட்படுத்தப்பட்டதாக இந்த அரசு கொள்கை அறி
வித்தபோது நம்முடைய அமைச்சர் அவர்கள் அப்போது இதை
கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துச் சொல்லாத காரணத்தால் பேசாமல்
ஏற்றுக்கொண்டார்கள் என்று கருதிக்கொண்டார்கள் போலும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, 9,000 ரூபாய் வருமான வரம்பு கொண்டுவந்தபோது கம்யூனல் ஜி.ஓ.வை நாங்கள் புறக்கணிக்கவில்லை, ஜாதி அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு 9,000 ரூபாய் வருமான வரம்பு விதிப்பதை எதிர்க்கிறோம் என்று சொன்னீர்கள். அதை எதிர்த்ததன் மூலம் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் இருக்கிற பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஏழை எளிய மக்களுக்கு மிகப் பெரிய தீங்கு செய்திருக்கிறது என்று இன்றைக்கும் நாங்கள் குற்றஞ்சாட்டுகிறோம்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திற்கு பல விளக்கங்கள் தர முடியும். 9,000 ரூபாய் வருமான வரம்பு என்பது ஏழை பணக்காரர்களை பிரிக்கிற வரம்பா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, ஏழைகளுக்குக் கிடைக்கும். அதிலே தப்பித்தவறி சில பணக்காரர்களுக்குக் கிடைக்கலாம் என்றுதான் சொல்ல முடியுமே தவிர, அத்தனையும் பணக்காரர்களுக்குப் போக முடியாது.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அப்படியானால் இப்போது எல்லாம் பணக்காரர்களுக்குப் போகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, இப்போது இருப்பது, அவர்கள் முழுமனதாக ஆதரிக்கிற ஒரு கொள்கை.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அந்த அடிப்படையில்தான் சுய நிதி கல்வி நிறுவனங்கள் ஏராளமாக உருவாக்கப்பட்டிருக்கின்றனவா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, அதற்கும் இதற்கும் முடிச்சு போட வேண்டிய அவசியம் இல்லை. நான் சொல்வது, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு, பிற்பட்டகளை வடிகட்டி, ஏழைகளுக்குத் தருவது தவறு என்று சொன்னதால் திராவிட முன்னேற்றக்கழகம் ஏழை எளிய மக்களுக்கு மிகப் பெரிய தீமை செய்திருக்கிறது, துரோகம் செய்திருக்கிறது என்பதை இன்றைக்கும் நாங்கள் சொல்கிறோம்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் சமூக நீதி கிடைக்கிற வரையில், அதாவது எப்படி இப்போது அனைத்து இந்தியாவிலும் ஆங்கில மொழி ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும், நம்முடைய தமிழ் மொழியும் ஆட்சிமொழியாக ஆகிற வரையில் என்று போராடுகிற அந்த நிலைமை உள்ளதோ அதேபோன்று இப்படிப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் உயர்வு பெறுவது பொருளாதார



வேறுபாடுகளைத் தந்தை பெரியார் என்றைக்குமே ஏற்றுக்
கொள்ளவில்லை. பொருளாதார அடிப்படையில் 9,000 ரூபாய்
வருமான வரம்பு வைத்து ஆணை பிறப்பித்தபோது, மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் பேசுகிற இடத்தில் எல்லாம் இந்த
ஜாதிப் பிரிவினை அடிப்படையில் அமைந்த பிற்பட்ட வகுப்பு
என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று பல இடங்களில்
பேசியதாக ஏடுகளிலே வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும்
இருந்திருந்தால் நிச்சயமாக இதை ஏற்றுக்கொள்வார்கள். பெரி
யார் அவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிற ஏழை, எளிய மக்க
ளுக்காகத்தான் திராவிட இயக்கத்தைக் கண்டாரே தவிர, மற்ற
வர்களுக்காக அல்ல. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது.
அவர் ஒரு ஏட்டிலே சொல்கிறபோதுகூட பிற்படுத்தப்பட்ட
மக்களுக்காகத் தரப்பட்டிருக்கக் கூடிய சலுகைகளை அயோக்கி
யர்கள் அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்ற வார்த்
தையைக்கூட அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வேண்டுமா
னால் சீட்டுக் குலுக்கிப் போடலாம் என்கிற கருத்தைக்கூட,
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, நடைமுறையில்
தவறு இருக்கிறது என்ற காரணத்தினால்தான்— அவர் யாரைக்
குறித்துச் சொன்னாரோ எனக்குத் தெரியவில்லை—கொள்கையின்
அடிப்படையைத் தகர்த்து விட முடியாது என்பதை அமைச்சர்
அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். ஒருவேளை ஏதேனும் கருத்து மாறுபாடு இருந்
தால்கூட, அமைச்சர் அவர்கள் சொல்வதுதான் உண்மை
என்றாலும்கூட அந்தக் கொள்கை நிறைவேற்றப்படாமல்
கைவிடப்பட்டது என்றால், என்ன அடிப்படையில் கைவிடப்
பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். அந்தக் கொள்கை
தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு உள்ள
கொள்கை அல்ல என்பதையும், தமிழ் மக்களுடைய அடிப்படை
யான வகுப்புக்வாரிக் கொள்கை வெற்றி பெற வேண்டும்
என்றால், இடையிலே இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படுத்தக்
கூடாது என்பதையும் நான் மறுபடியும் நினைவூட்ட விரும்பு
கிறேன்.

அடுத்து தமிழ் மொழியிலே பயிலுகிறவர்கள் அதிக அளவில்
பயிலவில்லை என்று ஒரு குறை பேசப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே,
பேராசிரியர் அவர்கள் வேகமாகப் பேசி வருகிற நேரத்தில் இடை
யிலே குறுக்கிட்டு அந்தப் பேச்சைத் தடுக்கக்கூடாது என்பதற்
காகத்தான் நான் குறுக்கிடவில்லை. அவர்கள் பேசுகிறபோது
விளையாட்டுக்கு என்று ஒரு அமைச்சர் தேவையா என்று சொன்
னார்கள். விளையாடுவதற்கு இத்தனை பேர் இருக்கிறபோது
ஏன் ஒரு மந்திரி என்று சொன்னார்கள். அது விளையாட்டாகச்
சொல்லப்பட்டதா ? அல்லது வினயமாகச் சொல்லப்பட்டதா ?

[1986 ஏப்ரல் 19

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் விளையாட்டை
விளையாட்டாகத்தான் சொன்னேன். எனவே, வினயமாக
எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்
களே, ஸ்போர்ட்டிவ் என்ற முறையில் விளையாட்டாக எடுத்து
கொள்ள நான் தயார். ஆனால், ஒரு தவறான கருத்து வெளியே
வரும் என்பதற்காகத்தான் நான் கேட்கிறேன்.

இறைவன் செய்வதைக் கூட திருவிளையாடல் என்று சொல்
கிறார்கள். அப்படி நாங்கள் செய்கிற முழுமையான நல்ல பணி
களைப் பேராசிரியர் அவர்கள் தமிழ் மிகத் தெளிவாகக் கற்
றிருக்கின்ற காரணத்தால் அந்தப் பொருளிலே சொல்லியிருந்தால்
எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் திருவிளையாடலைச் சொன்னார்கள்.
அவர்கள் சொல் விளையாட்டில் ஈடுபட்டவர் என்பது நாட்
டுக்கு நன்றாகத் தெரியும். எனவே, இங்கே விளையாட்டு என்று
அதாவது ஸ்போர்ட்ஸ் என்று சொல்கிறபோது அது குறை
யுடையதல்ல. நான் சொல்வது குறைபாடு உடையதல்ல. அதற்கு
ஏன் ஒரு தனி அமைச்சர் வேண்டும் என்று சொல்கிறபோது நீங்கள்
ஏன் அந்தச் சொல்லைப்பற்றி அவ்வளவு கவலைப்படுகிறீர்கள்
என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் ஒரு பொது
நோக்கத்திற்காகச் சில கருத்துக்களைச் சொல்கிறபோது ஒவ்
வொரு சொல்லிலும் வெவ்வேறு விதமான கருத்தோட்டங்கள்
ஏற்படுகிறபோது அந்தக் கருத்தோட்டங்கள் நம்மைச்
சிந்திக்க வைக்கும் என்று நான் நம்புகிறேன்.

தமிழ் மொழியிலே பயில்பவர்களுக்கு ஒரு ஆண்டுக்கு 150
ரூபாய் உதவித் தொகை தருவதால் ஏதோ அவர்கள் பயிலகிறார்
கள் என்ற ஒரு தவறான கருத்து இருக்கிறது. தமிழ் ஆர்வத்
தோடு கூட பலபேர் பயில்கிறார்கள். அப்படிப் பயில்பவர்களுக்கு
150 ரூபாய் உதவித் தொகையோடு கூட படித்து முடித்தவுடனே
அவர்களுக்கு வேலைக்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதைப்
பற்றி நேற்றைய தினம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்
திரு. அப்துல் சமத் அவர்கள் கூட எடுத்துக் காட்டினார்கள்.
அப்படிப்பட்ட நிலையில் ஒரு மாற்றம் செய்திட தமிழ்நாடு தேர்
வாணைக் குழு அந்தத் தமிழிலே படிக்கிற பிள்ளைகளுக்குத்
தனிப்பட்ட சில பாடங்களைத் தேர்வுக்குரியதாகச் சேர்த்து
வேண்டுமானாலும் வைத்து, அதன் மூலம் அவர்களுக்கு வேலை
வாய்ப்பை அதிகமாக்கினால்தான் தமிழிலே பயில்வதில் அக்கறை
ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 19] [திரு. க. அன்பழகன்]

ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் ஏறத்தாழ 3,000, 4,000
பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அப்படி 4,000 பேர்
வேலையில்லாமல் இருக்கிறபோது இன்றையதினம் ஆசிரியர்
பயிற்சிப் பள்ளிகள் அன்ரிகக்னைஸ்ட்—ஆக, அரசாங்கத்தின்
அனுமதியைக் கூடப் பெறாமல் தோன்றக்கூடிய நிலைமை
இருக்கிறது. 1971-ஆம் ஆண்டிலே இருந்து 1982-83-ஆம்
ஆண்டு வரையில் ஒரு ஆண்டு விட்டு ஒரு ஆண்டு ஆசிரியர் பயிற்
சிக்காக மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அப்படி 1983-வரை
யில் பயிற்சி பெற்றவர்களுக்கு இன்னும் வேலை கிடைத்ததாக
உறுதியாகச் சொல்லமுடியாது. 1982-ல் ஏற்பளிக்கப்படாத பள்ளி
களில் மாணவர்களைத் தேர்வுக்கு அனுப்ப அரசு அனுமதித்து
இருக்கிறது. எவ்வளவு பள்ளிகள் அப்படி அனுப்பி இருக்கின்றன
என்றால் 86 பள்ளிக்கூடங்கள் அதாவது அன்ரிகக்னைஸ்ட் ட்ரெயி
னிங் ஸ்கூல்ஸ் தேர்வுக்கு அனுப்பியிருக்கின்றன. இது எப்படி ஒரு
அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது? இதனால் எப்படி
ஒரு முறையான வளர்ச்சி ஏற்படும்? முறையான வளர்ச்சி
ஏற்பட இந்த அரசாங்கம் எப்படிப்பட்ட கண்காணிப்பைச்
செயல்படுத்துகிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–30)

அடுத்து மற்றொன்று, ஆசிரியர்கள் நியமனத்தில் 30 மாண
வர்களுக்கு ஒரு ஆசிரியர் தான் உயர்நிலைப் பள்ளியிலே இருக்க
வேண்டும் என்ற கருத்து கோத்தாரி கமிஷனால் தெரிவிக்கப்
பட்டு, 40 மாணவர்க்கு ஒரு ஆசிரியர் இருக்கலாம் என்று இந்த
அரசு ஏற்றுக் கொண்டு, விகிதாச்சார கணக்கிடும் முறையிலே
அரசாங்க அறிக்கையிலே 44 பேர்களுக்கு 45 பேர்களுக்கு ஒரு
ஆசிரியர், அந்தந்த வகுப்பு நிலைக்கு ஏற்ப இருப்பதாக
பேசப்பட்டு நடைமுறையில் பல இடங்களில் 80 மாணவர்
களுக்கு, 100 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்னும் நிலையே
இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் 3 வகுப்புகளுக்கு ஒரு
ஆசிரியர் இருக்கக்கூடிய வகையில் பல ஓர் ஆசிரியர் உள்ள பள்ளி
கூடங்கள் இருக்கின்றன. அந்த முறைகளை மாற்றுவதற்கு
அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். எல்லாம் பொருள் செலவுதான். செலவு
செய்யாமல் நிதி இல்லாமல் முழு அளவு சீர்திருத்தம் செய்ய
முடியாது.

இங்குகூட யு.கே.ஜி. போன்ற பள்ளிக் கூடங்களில் ஆங்கிலத்
திலே பயிற்றுவிக்கப்படுவதைப் பற்றி குறை சொன்னார்கள்.
ஆனால் அதை எப்படி தடை செய்வது? அந்த கல்விக்கூடங்
களில் யு.கே.ஜி. யிலே பயிற்றுவிக்கின்ற அந்த ஆசிரியர்கள்
எந்த அளவுக்கு மாணவர்களிடம் உறவு கொண்டு அக்கறை
காட்டி பயிற்றுவிக்கின்றார்களோ அந்த அளவுக்கு ஒரு நெருக்
கமான உறவுடன் அக்கறைகாட்டி அரசு பள்ளிகளிலும் மாநக
ராட்சி மன்ற பள்ளிக் கூடங்களிலும் பயிலும் மாணவர்களுக்கு
ப் பயிற்றுவிக்கப்படவில்லை. எல். கே. ஜி. பள்ளிக்கூடங்களில்
மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படக் கூடிய அளவுக்கு

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

உள்ள சூழ்நிலை, அங்கே இருக்கிற வசதி வாய்ப்புகள் இங்கே
அரசுப் பள்ளிகளில் இல்லை. யு.கே.ஜி. பள்ளிக்கூடங்களை
நடத்துவதிலே சில பேர்கள் தவறு செய்து ஏராளமாக சம்பா
தித்தாலும் கூட பிள்ளைகளுக்கு தகுந்த பயிற்சியைக் கொடுக்
கிறார்கள். அந்தப் பயிற்சி அது ஆங்கிலத்திலே கொடுக்கப்படா
மல், தமிழிலேயே பயிற்சி கொடுக்கப்படக் கூடிய அளவுக்கு.
தமிழக அரசு தமிழிலே அதைவிடச் சிறந்த பயிற்சியை அளிக்க
முடியும் என்று நிரூபிக்க ஒரு மாவட்டத்திற்கு இரண்டு இடங்
களிலாவது தமிழிலே யு.கே.ஜி. போன்ற வகுப்புகளை நடத்து
வதற்கு திட்டமிட வேண்டும். இருக்கின்ற ஆரம்ப பள்ளிக்கூடங்
களின் தகுதியை உயர்த்தி, தரமான கல்வி பயிற்சி வழங்க
முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அப்போதுதான் ஆங்கிலத்தின் மூலமாக பயிலுகின்ற அந்த
பயிற்சியைத் தடுக்க முடியுமே தவிர, வலுக்கட்டாயமாக தடுப்
பது என்பது அவசியம் அல்ல என்பதை தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன். அதேபோல சிறுபான்மை சமுதாயத்தினர்
இருக்கிற அந்த வட்டாரத்தில், தெலுங்கோ, உருதுவோ,
கன்னடமோ, குஜராத்தியோ, பஞ்சாபியோ கூட, அவர்
களுடைய தாய்மொழி என்ற காரணத்தால் அவர்கள் படிக்கலாம்.
இருமொழி திட்டத்தின் அடிப்படையில் ஆங்கிலமோ அல்லது வேறு
அன்னிய மொழியோதான் இரண்டாவது மொழி என்று சொன்
னால், விஞ்ஞான கல்வி வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையான
மொழி என்ற வகையில் ஆங்கிலமோ அல்லது வேறு ஐரோப்பிய
மொழியோ தேவைப்படுகிறபோது அது இந்தி மொழியாக
இருக்க முடியாது என்ற காரணத்தாலும் அது இன்னொரு
இந்திய மொழியாகவும் இருக்க முடியாது என்ற காரணத்தாலும்,
Parallelly situated language என்னும் இலக்கணப்படி நம்முடைய
தமிழைப் போன்றதொரு இந்திய மொழியான தெலுங்கோ,
மலையாளமோ அந்தக் குறையை நிவர்த்தி செய்ய முடியாது
என்ற காரணத்தால் பேரறிஞர் அண்ணா அவர்கள் or any other
non-Indian language என்று குறிப்பிட்டார்களே தவிர, அதிலே
தேசப்பற்றுக்கு விரோதமான கருத்து எதுவும் இல்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் இந்த தேச
மொழி அல்லவா? இந்திய மொழி அல்லவா? ஆக தமிழிலே.
தெலுங்கிலே படிக்கின்ற பிள்ளைகளுக்கு தேசப்பற்று வராதா?
திரு. வெங்கட ரெட்டி அவர்கட்கு தெலுங்கு மொழியினால்
தேசப்பற்று வருமா, இந்தி மூலமாக தேசப்பற்று வருமா
என்பதையும் எண்ண வேண்டும்.

Thiru T. VENKATA REDDY: Hon. Mr. Speaker Sir, I am as
much interested as the Hon. Member. The only thing is that the
minority pupils who are having first language as Telugu are denied
the opportunity to read Tamil under Part IIB. In part IIB 'any
other non-Indian language' is inserted and so, the minority students
have been denied the opportunity to study Tamil. That is what I
have submitted. [illegible]



1986 ஏப்ரல் 19]

திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்
களே, இது ஒரு முக்கியமானப் பிரச்சினை. இன்றைக்கு இந்தி
யாவிலே தமிழகத்திலே மட்டும் தான் சிறுபான்மை மக்கள்
பேசும் தாய் மொழிக்கு, அந்த வட்டார மொழிக்கு ஈடான
மதிப்பைத் தந்திருக்கிறோம். வேறு எந்த மாநிலத்திலும் சிறு
பான்மை மக்களுடைய மொழிக்கு அந்த வட்டார மொழிக்கு
ஈடாக நடத்தப்படும் வாய்ப்பு இல்லை. குறிப்பாக கர்
நாடகம் போன்ற மாநிலங்களைச் சொல்லலாம். ஆகவே
மாண்புமிகு உறுப்பினர் வெங்கட ரெட்டி அவர்கள் தெரிவிக்
கின்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்படுமானால், கர்நாடகத்திலே
சிறுபான்மையினர் மொழிக்கு என்ன மரியாதை இருக்கிறதோ,
அதே மரியாதைதான் அவருடைய மொழிக்கு தமிழ் நாட்டிலே
இருக்கும். ஆனால் இப்போது நாம் தமிழுக்கு சமமாக வைத்
திருக்கிறோம்.

Thiru T. VENKATA REDDY :- Mr. Speaker Sir, I am grateful
to the Hon. Minister. But I am representing to the Hon. Minister
that the students in minority schools who have passed S.S.L.C. or the
Degree Course, are denied jobs in our State. For instance, in Govern-
ment Departments these students are not given jobs on the ground
that their second-language is Telugu and that they have not studied
Tamil. So, they are not getting jobs in our State. In order to
obviate that difficulty I request the Hon. Minister to insert Tamil in [illegible]
Part IIB.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,
திரு. வெங்கட ரெட்டி அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தின்
[illegible] சிறுபான்மை மொழி பேசுகிற மக்கள் தங்கள்
அடிப்படையில் சிறுபான்மை மொழி பேசுகிற உரிமைபெற்றிருப்பினும்
தாய் மொழியிலே கல்வியைப் பெறுகிற உரிமைபெற்றிருப்பினும்
தமிழும் படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதற்கான
[illegible] இல்லை என்ற நிலையில் ஆங்காங்குள்ள வாய்ப்பு
[illegible] தமிழ் மொழி படிக்கலாம் என்று அமைச்சர்
[illegible] சொல்லியிருந்தாலும் கூட அந்த வாய்ப்பு வசதிகள்
[illegible] பள்ளிகளில் ஏற்படுத்தப்படாமல் இருக்கிற காரணத்தால்
[illegible] உயர்நிலைப் பள்ளிக்கு அல்லது அப்படிப்பட்ட பள்ளி
[illegible] ஒவ்வொரு தமிழ் ஆசிரியரை நியமித்து ஓய்வு நேரத்
[illegible] மாலை நேரத்தில் அவர்கள் விரும்பினால், தமிழ்
[illegible] அந்த மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும்.

[illegible] பள்ளிகளாக இருந்தால் இரண்டு பள்ளிகளுக்கு
[illegible] என்று நியமித்து அதன் மூலமாக செலவு அதிக
[illegible] வகையிலும் தமிழ் படிக்க விரும்புகிறவர்களுக்கு
[illegible] கிடைக்கிற வகையிலும் வாய்ப்பளிக்கலாம் என்று
[illegible] யோசனையாக தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

அதே போல English or any other non-Indian Language என்று குறித்தது ஆங்கிலத்தைப் படித்தால் தான் அதன் மூல மாக இந்தியாவின் பல மாநிலங்களோடு மட்டுமல்ல தமிழ் நாட்டி லேயே கூட சிறுபான்மை மொழி பேசுகிறவர்களுக்கும் மற்றவர் களுக்கும் இடையேஉறவு வளரும் என்ற அந்த நோக்கத்திலேதான் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்கக் கூடாது என்பதே அதன் நோக்கம்.

திரு. டி. வெங்கட ரெட்டி: தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிற போது விரும்பினால் தமிழ் படிக்கலாம் என்று சொன்னார்கள். அதே மாதிரி இந்தியை விரும்பினால் படிக்கலாம் என்று வைக்கலாம் இல்லையா?

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தமிழை ஒரு ஆதிக்க மொழியாக ஆக்குவதற்காக விரும்பினால் படிக்கலாம் என்று சொல்லவில்லை. தேவைப்பட்டால் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்காக சொல்லப்பட்டது. ஒருவேளை ஆதிக்க மொழியாக இந்தி இடம் பெறாத காலம் என்றைக் காவது ஏற்பட்டு இந்தியாவில் ஆங்கிலம் தான் ஆட்சி மொழி யென்று ஏற்பட்டு விட்டால் விரும்புகிறவர்களை இந்தி படிக்க அனுமதிப்பதாலே, தமிழ் அதனாலே தாழ்ந்து விடாது. தமிழ் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் என்ற நம்பிக்கை அன்றைக்கு ஏற்படும். ஆகவே திரு. வெங்கடரெட்டி அவர்கள் போன்றவர் கள் காங்கிரஸ் கட்சியில் அகில இந்தியாவில் இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடித்திட வழி செய்து இந்தி திக்கப்பட்டால் தான் மற்றவர்கள் தாங்கள் பாதிக்கப்பட மாட் டோம் என்ற உறுதியுடன் இந்தி படிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதென்று காங்கிரஸ் கட்சியிலே சொல்லி அதை நிறை வேற்றும் முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கல்வி மானியம் இப்போது நடந்து கொண்டிருப்ப தால் நேற்று கூட ஆசிரியர்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்ட போது மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்கள் ஏன் இவர்கள் பட்டினி இருந்து கஷ்டப்படுகிறார்கள் என்று சொன் னார்கள். எல்லோரும் பட்டினி கிடந்தால் அரசாங்கத்திற்கு பிரச்சினையே இருக்காது. என்றைக்காவது ஒரு நாள் பட்டினி இருக்கிறார்கள் என்றால் அது ஒரு அனுதாபத்தை இரக்கத்தை தோற்றுவிப்பதற்காகவே இருக்கும். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் கூட உண்ணாவிரதம் இருந்தார்கள். ஒரு கருத்தை நியாயப்படுத்துவதற்கு வலியுறுத்துவதற்கு உண்ணாவிர தம் இருந்தார்கள். ஆனால் அது கட்டாயப்படுத்துவது அல்ல. எனவே உண்ணாவிரதத்தின் மூலமாக குறைகளைப் போக்க வேண்டுமென்று கேட்கிற போது இந்த முறையிலே கேட்கிறார் களே என்றால் வேறு முறையில் கேட்பது நல்லதல்ல என்ற காரணத்தால் தான் அந்த முறையில் கேட்கிறார்கள். வேறு முறைகள் வன்முறையில் கொண்டு போய் விட்டு விடக்கூடும்.



1986 ஏப்ரல் 19] [திரு. க. அன்பழகன்]

உண்ணாவிரதம் இருக்கிற போது அந்த வன்முறை மனப் பான்மை வராது. எனவே அந்த வகையில் அது வரவேற்கத் தக்கது. அந்தக் கருத்தை அமைச்சர் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்கள் ஒரு பெரிய அறப்போராட்டம் நடத்தி 50 ஆயிரம் ஆசிரியர்கள் சிறைச்சாலைக்கு போகக்கூடிய நிலை ஏற்பட்டு, அதற்குப் பின்னாலே விடுவிக்கப்பட்டு, மாண்பு அவர்களின் தலைவர்களுடன் பேச்சு நடத்தப்பட்டு, கல்வி மிகு முதல்வர் அவர்களும், நாவலர் அவர்களும் இருந்து, அமைச்சர் அவர்களும் இருந்தார்கள் என்று கருதுகிறேன். அப்போது சில உறுதிமொழிகள் வழங்கப்பட்டு அவை களில் பல இன்றைக்கும் நிறைவேற்றப்படாத நிலையிலிருப்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

ஊதியக் குழுவினால் அறிவிக்கப்பட்ட சம்பள விகிதங்களில் ஏற்பட்ட குறைபாடுகளை களைவதற்காக ஒரு நபர் குழு அமைக்கப்பட்டது. அதனுடைய அறிக்கை நான்கு மாதங்கள் ஆகியும் இன்னும் வைக்கப்படவில்லை. அது விரைவாக வைக் கப்பட வேண்டும். அடுத்து பஞ்சாயத்து யூனியன்களில் பணி யாற்றும் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது குறித்து பரிசீலனை செய்வதாக அரசு ஒப்புக் கொண்டது. இதுவரை யில் அந்தப் பரிசீலனை நடைபெற்றதாகத் தெரியவில்லை. ஆசிரியர்கள் பணி சம்பந்தமாக நேரடி பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்கும் அரசு ஒப்புக் கொண்டது. பேச்சு வார்த்தை எதுவும் அதற்குப் பின்னாலே தொடர்ந்து நடை பெறவில்லை. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணைக் குழு மூலமாக தேர்வு பெற்று நியமிக்கப்பட்டும் ஆசிரியர்கள் ஏற்கனவே நியமனமாகி 7, 8 ஆண்டுகளாக பணியாற்றும் ஆசிரியர்களை பணி வரன்முறைப்படுத்துவது குறித்து தேவை யான நடவடிக்கை எடுப்பதாக அரசு கூறியது. அந்தப் பணி வரன்முறைப்படுத்துவது இதுவரையில் நடைபெறவில்லை.

உயர்நிலைப் பள்ளிகளில் தேர்வாணைக் குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படாமல் முதல் நிலை தமிழாசிரியர்களாகவும் பட்டதாரி ஆசிரியர்களாகவும் 8 ஆண்டுகளுக்கு மேலாக பணி யாற்றுபவர்கள், 3 ஆயிரம் ஆசிரியர்களை பணியில் சேர்த்த நாள் முதற் கொண்டு வரன்முறைப்படுத்த, நிரந்தரம் செய்வ தென்று நான்கு மாதத்திற்கு முன்னாலே ஒப்புக் கொண்ட கருத்து. இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டு விடுமுறைக்குப் பின்னாலே பள்ளிகள் திறப்பதற்கு முன்னாலாவது அவர் களை பணிவரன்முறைபடுத்த வேண்டும். நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சி, மாநகராட்சி பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் களை ஊராட்சிப்பள்ளி ஆசிரியர்களை அரசுப் பணியாளர்களாக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இன்னும் அது நிறைவேற்றப்பட வில்லை. தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கான பிராவிடண்ட் பண்ட் கணக்கு நிர்வாகம் அரசின் மேற் பார்வையில் வர வேண்டும். தனியார் மேற்பார்வையில் இருக்கக் கூடாது என்று கேட்கப்பட்டது. அதுவும் இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களாக போஸ்ட் கிராஜு வேட் டீச்சர்ஸ் ஆகப் பணியாற்றுபவர்களுக்கு எம். எட். உயர் கல்விக்காக ஊக்க ஊதியம் அளிப்பதென்று ஏற்றுக்கொள்ளப் பட்டது. அந்த மேற்படிப்பு படித்தவர்களுக்கு ஊக்க ஊதியம் இன்னும் வழங்கப்படவில்லை.

(முற்பகல் 10–40)

பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப கிளரிக்கல் ஸ்டாப் அதாவது அமைச்சுப் பணியாளர்கள் நியமிக்கப்படாத காரணத்தால் அங்கே கிளர்க்குகளாகப் பணியாற்றுபவர்கள் அதிக பணிச்சுமையைத் தாங்காமல் இன்றைய தினம் வாடிக் கொண் டிருக்கிறார்கள். மேலும், தற்காலிக முதுகலை பட்டதாரி ஆசிரியர்களாக நேரடி நியமனம் செய்யப்பட்டவர்களை தேர் வாணைக் குழுவிலேயிருந்து விலக்கு அளித்து அவர்களையும் உறுதிப்படுத்தி, பணி வரன்முறைப்படுத்தி, பணி நிரந்தரம் செய்யவேண்டும். அந்தக் கடமையும் நிறைவேற்றப்படவில்லை.

1978-லேயிருந்து அவர்கள் வேலை பார்க்கிறார்கள். அரசாங் கத்தினுடைய பள்ளிகளிலே உள்ள அதிகாரிகளால், சி.இ.ஓ. போன்றவர்களால், அவர்கள் 10(எ)1-லே நியமிக்கப்பட்டார்கள். 1978-லேயிருந்து 1986 வரையில் நிரந்தரம் இல்லாமல் வேலை யிலே இருப்பார்களானால், அவர்களுடைய ஆர்வம் எப்படி பாதிக்கப்படும் என்பதை அரசு உணரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மற்றொரு முக்கியமான கருத்து. தமிழ் ஆசிரியர்களில் ஏற்கனவே 1978-லே நியமிக்கப்பட்டவர் களில் ஏறக்குறைய 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் பலர் இருக் கிறார்கள். தேர்வாணைக்குழுவிற்குச் செல்வதாக இருந்தால் அந்த வயது கடந்தவர்கள் அங்கே ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள். எனவே 35 வயதை கடக்கக்கூடிய அளவிற்கு பணியிலே இருக்கிற ஏறக்குறைய 2 ஆயிரம், 3 ஆயிரம் தமிழ் ஆசிரியர்கள், 7, 8 ஆண்டுக்காலமாக பணியாற்றுபவர்களை வரன்முறைப்படுத்தி, நியமனத்தை உறுதிப் படுத்தவேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து 'கண்டின்ஜென்சி ஸ்டாப்' என்று பஞ்சாயத்து யூனி யனிலே பணியாற்றியவர்கள் பல பேர்கள் அரசு ஆணை காரண மாக 1981 ஆம் ஆண்டிலே என்று கருதுகிறேன்—அவர்களது ஒப்புதல் பெறாமலே அரசாங்கததாலே, அரசுத் துறையிலே எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். அப்படி அரசாலே ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள், தங்களுடைய புரமோசன், பதவி உயர்வு பாதிக்கப்படுகிறது என்று சொல்லி மறுபடியும் திரும்ப தங்களை பஞ்சாயத்து யூனியன்களிலே பணியாற்ற நியமிக்கப் படவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அவர் களுடைய இசைவைப்பெற்று, ஒப்புதலைப் பெற்று, சேர்க்கப் பட்ட காரணத்தால், அவர்கள் திரும்பச் செல்வதற்கு உரிமை கேட்க இடம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றிய பள்ளி சீனியர் அலுவலக உதவியாளர்கள் அரசுதுறையிலிருந்து திரும்பவேண்டுமானால், அந்த அனுமதியையாவது பஞ்சாயத்து யூனியனிலே பணியாற்றுவதற்கு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்களிலே நடத்தாசிரியர்களாக, அதாவது கண்டக்டர்களாக பணியாற்றுகிற தாய்மார்கள் ஏறக்குறைய 5 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அப்போது அமைக்கப்பட்ட சம்பளம் 18 ரூபாய். ஆனால் அலவன்ஸ் ஏறக் குறைய 441 ரூபாய். அவர்கள் தாங்கள் அரசு ஆணைப்படியும் முதல்வர் அவர்கள் அறிவிப்புப்படியும், ஊராட்சி ஒன்றிய பள்ளி நடத்தாசிரியர்களை நிலையாகவுள்ள ஊழியத் தலைப்புக்குக் கொண்டு வர கல்வித்துறை இன்று வரை எந்தவிதமான உத்தர வும் பிறப்பிக்கவில்லை. ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் அவர் களை ரெகுலரைஸ் செய்வதாக. ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், அவர்களுடைய பணிகள் நிரந்தரம் செய்யப்படும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு, 8 ஆண்டுக்காலமாக அவர்கள் வலியுறுத்திக் கேட்டும் கூட அவர்களை நிரந்தரம் செய்வதற்கான உத்தரவு கல்வித்துறையினால் பிறப்பிக்கப்படாத காரணத்தால், 5 ஆயிரம் பேரும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

அதேபோல் சில கல்லூரிகளிலே, உயர்நிலைப் பள்ளிகளிலே துப்புறவுப் பணியாளர்கள், தொழிலாளர்கள், 5 பேர், 8 பேர் என்ற அளவில் பணியாற்றுகிறவர்கள் 8 ஆண்டுக்காலமாக கன்டின்ஜென்சி ஸ்டாப் என்று சொல்லப்பட்டு அரசின் மூலமாக அவர்களுடைய பணி உறுதிப் படுத்தப்படாமல் இன்றைக்கும் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

சேலத்திலே உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடத்திலே, நகராட்சியிலே உள்ள ஆசிரியர்கள் எல். ஐ. சி.-க்கு செலுத்த வேண்டிய தொகைக்கு நகராட்சி மன்றம் மூலமாக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு செலுத்தவேண்டிய தொகை, கடந்த மே மாதத்திலிருந்து செலுத்தப்படாமல் இன்றைக்கு அவர்களைப் பார்த்து நீங்களே கட்டிக்கொள்ளுங்கள் என்று சொல்லப்படும் நிலையில் இடையிலே 6 மாத காலம், 9 மாத

காலம் கட்டப்படாத காரணத்தால், எல்.ஐ.சி. அவர்கள் கட்டக்
கூடிய தொகையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. எனவே அரசாங்
கம் தலையிட்டு, எல். ஐ. சி.யில் ஏற்கனவே கட்டப்பட்ட
தொகைக்கு பாதுகாப்பு கிடைக்க, இடையில் கட்டாமல் இருக்கிற
தொகையை கட்ட செய்திட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்று ஆசிரியர்கள் தங்களுடைய கோரிக்கையைத் தெரிவிக்
கிறார்கள். எனவே இதையும் அரசு கவனிக்கவேண்டும் என்று
நான் விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று. நடுநிலைப்பள்ளிகளிலே பட்டதாரி ஆசிரியர்
களாக பணியாற்றுகிறவர்கள், அதற்குரிய ஊதியம் பெற்றாலும்
கூட, 12 ஆண்டுக்காலமாக இதைவிட மேல்நிலையிலே உள்ள
பதவிகளில் இடம்பெற அவர்கள் விரும்புகிறார்கள். ஊதியத்
திலே வித்தியாசம் இல்லை. அதே ஊதியம்தான். ஆனால் ஆசிரி
யர்களாகப் பணியாற்றுகின்ற எம்.ஏ.,பி.எட்., படித்த அப்படிப்
பட்ட பட்டதாரிகளுக்கு உயர்நிலைப் பள்ளிக்கூடத்திலே பணி
யாற்றுவதற்கான வாய்ப்பை உருவாக்கி அவர்களுக்கு புரமோசன்
கிடைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவைகளை நான் தெரிவிக்கிறபோது அரசாங்கம் கல்வித்
துறையைப் பொறுத்தவரையில் அது கொள்கை வகுக்கும் துறை
அல்ல என்பதையும் மேற்பார்வைத்துறை, நிர்வாகத் துறை
என்பதையும் கருதி இவைகளை செம்மையாக இயக்குவதன் மூல
மாகத்தான் ஒழுங்கு படுத்த முடியும். எனவே நிர்வாகத்தை
அன்றாடம் கவனிக்கக்கூடிய அளவிற்கு, அதிகமான அளவில்
பொறுப்பேற்று செயலாற்ற முயற்சிக்கவேண்டும் என்று நான்
விரும்புகிறேன்.

பொதுவாகவே அரசாங்கத்தினுடைய கல்வி நிலையங்களிலே,
பல்கலைக் கழகங்களிலே பல நேரத்தில் தேர்வுகள் நடைபெற்று,
5 மாதம் ஆகியும் அதனுடைய முடிவுகள் கிடைப்பதில்லை.
தேர்வு எழுதினால், அக்டோபரில் தேர்வு எழுதினால் நவம்பர்
முடிந்து டிசம்பர் முடிவதற்குள் தேர்வினுடைய முடிவுகள் கிடைக்க
வேண்டுமே தவிர, இரண்டு மாதங்களுக்குள் தேர்வு முடிவுகளைத்
தெரிவிக்க முடியாவிட்டால், தேர்வு நடத்துவானேன். பொது
தேர்வாணைக்குழு—தமிழ்நாடு தேர்வாணைக் குழு நடத்துகிற
தேர்வுகளிலும் கூட முடிவு தெரிவிக்க 6 மாதம், 9 மாதம், 10
மாதம் ஆகிறது. 5 ஆயிரம் பேர்களா, 50 ஆயிரம் பேர்களா
தேர்வு எழுதுகிறார்கள் என்பதைப் பொறுத்து அந்த விடைத்
தாள்களைத் திருத்துகிறவர்களின் எண்ணிக்கையை அதிகப்
படுத்தவேண்டுமே தவிர 6 மாதம் 9 மாதம் என்று நீட்டித்து
தேர்வு எழுதுபவர்கள் மறுபடியும் இன்னொரு தேர்வு எழுத
வேண்டுமானால், அதற்காக முயற்சிக்கக்கூட ஒரு ஆண்டுக்குப்
பின்னாலே தான், முடியும் என்ற அளவிற்கு நீட்டிக்
கக்கூடிய அளவுக்கு, பல்கலைக் கழகத்திலே செப்டம்பர்,



மாதத்திலே தேர்வு எழுதியும் டிசம்பரிலே கூட முடிவு தெரியாமல்
மார்ச் தேர்வு எழுதுகிறபோதுதான் முடிவு தெரிகிறது என்ற
நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அந்த நிலைமை இருப்பது
முறையல்ல என்பதையும் அந்த நிலைமையை மாற்றுவதற்கு
தேர்வுகளை உடனுக்குடன் முடித்து அந்தத் தேர்வுகளின்
முடிவுகள் அறிவிக்கப் படவேண்டுமென்று, பல்கலைக்கழகங்
களுக்கும் அரசாங்க துறைகட்கும் இந்தப் பொறுப்பை வலியுறுத்த
வேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில்
அவையெல்லாம் சுயாட்சி அமைப்புகளாக இருந்தாலும்கூட சில
குறைபாடுகளுக்கு ஆளாகி விடுகின்றன. அந்தக் குறைபாடு
களுக்கு ஆளாகிறபோது அதனுடைய விளைவு மாணவர்களை
யும் சமூகத்தையும் பாதிக்கிறது. எனவே நான் தெரிவிக்க
விரும்புவது, சென்னை பல்கலைக்கழகத்திலே, சட்டதிட்டங்
களிலே மாற்றம் ஏற்படுத்த வேண்டும். பல்கலைக்கழக சட்டம்
மாறவேண்டுமென்ற ஒரு கருத்து இருக்கிறது. அப்படி மாற்றி
யமைக்கிறபோது, பல்கலைக்கழக ஆசிரியர்களைத்தான் சிண்டி
கேட் அவையில் அதிக அளவில் இடம்பெறச்செய்யவேண்டுமே
தவிர, அரசு அலுவலர்கள் அதிக அளவுக்கு இடம்பெறுவது
என்பது, அதிலே ஒரு தனிக்கவனம் செலுத்துகிற ஆர்வத்தை
ஏற்படுத்தாது என்பதையும் அதைக் கண்ட்ரோல் செய்வதற்காக
அதிகாரிகள் இடம்பெற வேண்டும்என்ற கருத்து இருப்பதைவிட்டு,
அதை வளர்ப்பதற்காக ஆசிரியர்கள் இருப்பதேமுறை என்ற
கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, வேண்டுமானால் இயக்குநர்கள்
ஆனரரியாக சிண்டிகேட்டில் இடம் பெறலாம் என்றாலும்
ஆசிரியர்களே பெரும்பாலும் இடம் பெறத்தக்க அளவுக்கு அந்த
முறைகளில் சட்டம் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டு
வரப்படுகிற சட்டத்தை பல்கலைக்கழக துணை வேந்தர்களைப்
போன்று, ஏற்கனவே இருந்த துணை வேந்தர்கள், கல்வி
யாளர்கள், முதலானோரின் ஆலோசனைகளைப் பெறவேண்டு
மென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.
ஏனென்றால் பல்வேறு குறைபாடுகள் ஏற்படுகின்றன. அதுமட்டு
மல்லாமல், அண்மையிலே அண்ணா பல்கலைக்கழகத்தில்—
என்ஜினியரிங் யுனிவர்சிடியில் நியமன உறுப்பினர்கள்தான்
அதிகமாக சிண்டிகேட்டுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று
நான் அறிகிறேன். நியமன உறுப்பினர்கள் என்ற அந்த முறை
தொடக்கத்திலே வேண்டுமானால் இருக்கலாமே தவிர அந்த
முறை பஞ்சாயத்திலே நியமன உறுப்பினர்களைக் கொண்டு வந்து
புகுத்துவதிலே அரசு அக்கறையாக இருக்கக் காரணம் இருப்ப
தைப்போல பல்கலைக்கழக சிண்டிகேட்டிலும் அப்படி நியமனம்
செய்யும் உறுப்பினர்கள் மூலமாகவே சிண்டிகேட் நடைபெற
வேண்டுமென்பது ஏற்புடையதல்ல என்பதை அரசு உணர
வேண்டும் எதிர்காலத்திலே மாணவர்களுடைய பிரதிநிதிகள்
வரவேண்டுமென்றும் கேட்கிறார்கள். இந்நிலையில் சிண்டிகேட்டு
களில் பல்கலைக்கழக ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் அதிக
அளவுக்கு இடம்பெற வழி செய்யவேண்டும் என விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

சென்னை பல்கலைக் கழகத்திலே பணியாற்றுகிற
எழுத்தாளர்கள், அமைச்சு உதவியாளர்கள், அப்படிப்பட்ட பணி
யில் உள்ளவர்கள், செக்ரடேரியல் ஸ்டாப்—பல குறைபாடுக
ளுக்கு ஆளாகி தங்களுடைய ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டு
மென்று போராடி இருக்கிறார்கள். அதற்கான முடிவு இன்
னும் சரியான முறையில் அறிவிக்கப்படவில்லை என்பதை
ஏடுகளில் நான் பார்க்கிறேன். எடுக்கப்பட்ட முடிவுகள்
கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்த நிலையில் 66 இலட்சம்
ரூபாய்தான் பல்கலைக்கழகத்துக்கு அரசாங்கத்தினுடைய
கிராண்டாக கிடைக்கிறது ஆண்டுதோறும். இந்த 66 இலட்சம்
என்பதை உயர்த்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அதைப்
போல அரசு பல்கலைக்கழகத்துக்கு தரவேண்டிய நிலுவை பாக்கி,
ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு தராமல் இருக்கும் தொகை 2 கோடி
ரூபாய் இருப்பதாக ஒரு கருத்து இருக்கிறது. 2 கோடி ரூபாய்
அளவிற்கு ஒரு பல்கலைக் கழகத்துக்கு அரசு பாக்கி வைத்திருக்
கும் என்று என்னால் நம்ப முடியவில்லை. ஒருவேளை, அரசாங்
கத்திலே நிதியில்லையென்றால் அதற்கு யார்தான் பொறுப்பு
இருந்தாலும் 2 கோடி ரூபாய் பாக்கி இருக்கிறபோது நிர்வாகம்
எப்படி செம்மையாக நடக்கும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போலவே யூ.ஜி.சி.—யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன்
—அகில இந்தியாவிற்குமாக டெல்லியில் இருக்கிற இந்த
அமைப்பு, தென்னகத்திலே ஒரு கிளை அமைப்பை ஏற்படுத்த
எண்ணியிருக்கிறது. சென்னையிலே அமைக்க வேண்டு
மென்று வலியுறுத்துவதற்கு நமக்கு உரிமை இருக்கிறது; கடமை
இருக்கிறது. நாம் வலியுறுத்தாத காரணத்தால் அது தெற்கே
யுள்ள வேறு மாநிலத்துக்கு சென்றுவிடக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டு
இருக்கிறது. அது நல்லதல்ல என்று நான் தெரிவித்துக்கொண்டு
சென்னையிலே அதை அமைக்கப்படுவதற்கான முயற்சியிலே
அமைச்சர் ஈடுபடவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அண்மையில் பல புதிய பல்கலைக் கழகங்கள் வந்திருக்கின்
றன என்று சொல்லி, பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன்
பல்கலைக் கழகம் என்று சொல்லி அவைகளெல்லாம் சிறப்
பாக இயங்குகின்றன என்ற கருத்து அறிக்கையிலே வைக்கப்பட்
டிருக்கிறது. கோவையிலே இருக்கிற பாரதியார் பல்கலைக்கழ
கத்தில் தேர்வுக் கட்டுப்பாடு அதிகாரி நியமிக்கப்படவில்லை.
துணை அதிகாரி நியமிக்கப்படவில்லை. 3 துணைப் பதிவாளர்
கள் நியமிக்கப்படவில்லை. ஒரு நிதி காப்பாளர் நியமிக்கப்பட
வில்லை. பேராசிரியராக நியமிக்க வேண்டிய 30, 40 இடங்
கள், 20க்கும் மேற்பட்ட இடங்கள் காலியாக இருக்கின்றன.
தேர்வு முடிவுகள் இப்போதும் காலதாமதமாகின்றன. பல்கலைக்
கழகம் அமைவதற்காக இடம் நிலம் கொடுத்தவர்களுக்குச் சில
உரிமைகள் வழங்குவதாக முன்னாலே அறிவிக்கப்பட்டதாக நான்
கேள்விப்படுகிறேன்,



1986 ஏப்ரல் 19] [திரு. க. அன்பழகன்]

(முற்பகல் 10—50)

அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஏதாவது சில வேலைகள் அது
பணியாளர் வேலையாக இருக்கலாம், அந்த வேலைகள் தரப்பட
வில்லை என்ற குறை பேசப்படுகிறது. இன்னும் சொல்லப்போ
னால் பல இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட 100 அறை
கொண்ட மாணவர் விடுதி 6, 7 மாதமாக திறந்து வைக்கப்பட
வில்லை என்று தெரிவிக்கிறார்கள். இப்படி போடப்பட்ட மூல
தனத்திற்குப் பலன் இல்லாமல் காலத்தில் செய்ய வேண்டிய
காரியங்களை செய்யாமல் சில முறைகளை வகுத்துக்கொள்
ளாமல் பல்கலைக்கழகம் குறைபாடுகளுடன் நடத்தப்படுவதற்கு
இடம் இல்லாத அளவுக்கு முறையாகச் செயல்படுமாறு அவர்
களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அந்த பல்கலைக் கழகத்தில் 7 இலட்சம் ரூபாய் செலவில்
கம்ப்யூட்டர் வாங்கப்பட்டுள்ளது என்றும் இதற்கு ஆட்சிக் குழு
ஒப்புதல் இல்லை என்றும் சொல்லுகிறார்கள். பல்கலைக்
கழகம் ஒரு வளர்ச்சிக்கான கட்டத்தை அடைந்ததற்குப்
பின்னாலே தான் கம்ப்யூட்டர் போன்ற கருவி வாங்குகிற ஒரு
நிலைமை வரவேண்டுமே தவிர, ஏதோ இந்த நூற்றாண்டு
கம்ப்யூட்டர் நூற்றாண்டு வருகிறது, எனவே,
கடந்த உடன் கம்ப்யூட்டர், அதனை இயக்கும் வேலை
பல்கலைக் கழகத்தில் தெரியாவிட்டாலும் ஒரு கம்ப்யூட்டர் வாங்கி
செய்ய தெரிந்தாலும் அவ்வளவு பொருத்தமானது அல்ல என்று நான்
வைப்பது என்பது தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக கம்ப்யூட்டர் முறையிலே
சீர்திருத்தமும், செம்மையும் இருக்கிறதா என்று கேட்டால் நம்
பாலிடெக்னிக் தேர்வு நடைபெற்று அக்டோபர் நவம்பர் மாதம்
நடைபெற்ற அந்தத் தேர்வுக்கு உரிய முடிவுகள் 9–4–1986ல்
தான் வெளியிடப்பட்டது. இவ்வளவு காலம் கடந்து அந்த
முடிவுகள் வெளியாவதற்கு 6, 7 மாதம் கால தாமதம் ஆகியதே
என்ன காரணம் என்று கேட்டால் இடையிலே அந்த முடிவுகளை
ஒரு கம்ப்யூட்டரிலே கொடுத்துஅதுவும் ஒரு தனியார் கம்பெனியான
"Tiam House" என்ற அந்த கம்பெனி கம்ப்யூட்டரில் கொடுத்து
கட்டணம் செலுத்தி கம்ப்யூட்டரிலே மார்க் சீட்டுகள் தயாரிக்கப்
பட்டன என்றும் அது தவறு என்று பின்னால் காணப்பட்டு
மறுபடியும் அலுவலகத்தில் அந்தப் பட்டியலைத் திருத்தி
அமைத்து முடிவுகள் வெளியிட்டதில் தாமதம் ஆகியிருக்கிறது
என்றும் தெரிகிறது. அந்த கம்ப்யூட்டரின் மூலம் ஒரு மாணவனுக்கு
தரப்பட்டுள்ள மார்க் விவரம் இது. அவருடைய பெயரை நான்
எடுத்து விட்டேன். அந்த மாணவன் பெயர் வந்தால் அது
வேறு விதமான கருத்து வரும். தெள்ளார் பாலிடெக்னிகில்
படித்த மாணவர்கள் பட்டியல் இது. அதிலே 25 மார்க் மாக்சிமம்
என்று இருக்கிற பகுதியில் ஒரு மாணவனுக்கு 27 மார்க்
கம்ப்யூட்டர் மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது. மாக்சிமம் 25—
கம்ப்யூட்டரில் 27 வழங்கப்பட்டிருக்கிறது.

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

ஒரு மாணவன் பெயில் ஆக வேண்டிய மார்க்பெற்றான் என்று
சொன்னால் பெறவேண்டிய மொத்த மார்க் பெறாமல் 46
பெற்றும், 50 கூட பெறாமலே அவன் பெயில் ஆகி, வேண்டும்
என்றே அவருக்கு பாஸ் போடப்பட்டிருக்கிறது. பெயில் என்ற
இடத்தில் பாஸ் என்று. ரிசல்ட் பாஸ் என்று மொத்தமாகப்
போடப்பட்டிருக்கிறது. அதே போல் இன்னொரு மாணவன்
எல்லா சப்ஜெக்ட்டிலும் பாஸ் செய்து இருக்கிறார். பாஸ் பாஸ்
என்று ஒவ்வொன்றிலும் இருக்கிறது; முடிவு பெயில். எல்லாம்
பாஸ் செய்தால் இந்த அரசில் பெயில் தான் ஆகும் போலிருக்
கிறது. எனவே, அப்படி இந்த கம்ப்யூட்டரிலே பாலிடெக்னிக்
மாணவர்களுக்கு மார்க் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னொரு
மாணவன் ஒவ்வொரு பாடத்திலும் பாஸ். ஆனால் அவர் வாங்கி
யிருக்கிற மார்க் எல்லாவற்றிலும் பெயில், 50 பெற வேண்டிய
இடத்தில் எல்லாம் 44, 42, 47 வாங்கி அங்கே பாஸ். மொத்
தத்தில் பெயில். இப்படி கம்ப்யூட்டர் மூலமாக முடிவுகள் காணப்
படடுள்ளன. கம்ப்யூட்டர் மிகப்பெரிய நுணுக்கமான கருவியாக
இருக்கலாம். அதை பயன் படுத்த வேண்டிய அளவுக்கு ஒரு
நிலைமை இந்நாட்டில் இருப்பதாக பேரறிஞர் அண்ணா அவர்
களே கருதவில்லை. எனவே, ஒன்று இரண்டு கட்டத்தில் சில
தேவைகளுக்கு அதை பயன்படுத்தலாமே தவிர, எல்லாவற்றிலும்
கம்ப்யூட்டர் முறை என்பதை பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள்
கம்ப்யூட்டரில் மிகப் பெரிய அளவுக்கு ஆர்வம் உள்ளவராக
இருந்தாலும் கூட இந்த நாடு தாங்காது. அது இந்த நாட்டி
லுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தின் அளவை எண்ணிப்
பார்க்கிற போதும் மனிதன் செய்கிற தவறை விட கம்ப்யூட்டர்
மூலமாக பெரிய தவறுகள் செய்யக் கூடிய நிலைமையைக்
கருதும்போதும் இந்த சமுதாயத்திற்குத் தேவையில்லை என்றே
தோன்றுகிறது. இருந்தாலும் அதை முறையாகப் பயன்படுத்துகிற
நிலைமையில் இருக்கலாமே தவிர, பாலிடெக்னிக் தேர்வை
கம்ப்யூட்டரில் கொடுத்து முடிவுகளைத் தவறாக தெரிவிக்கும்
நிலைமை இருக்குமானால் நம்முடைய நாட்டில் பாலிடெக்னிக்
நடத்துகிறவர்கள் எந்த அளவுக்கு பொறுப்போடு செயலாற்ற
முடியும் என்பதை எண்ணிப்பார்க்க கேட்டுக் கொள்கிறேன்.
(மணியடிக்கப்பெற்றது).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னும் ஒன்று. நம்முடைய மாநில அரசு தமிழ் மொழி
அடிப்படையில் உள்ள உணர்வுகளை நிலை நிறுத்துவதற்காக
திராவிட மொழிகள் என்ற முறையில் ஆராய்ச்சிகளை வளர்க்க
ஆர்வம் கொண்டிருக்கிறது என்பது கல்வி அறிக்கையில்
74-வது பக்கத்தில் பன்னாட்டு திராவிட மொழி இயற் பள்ளிக்கு
மாநில அரசு ஆதரவு அளித்து வருகிறது என்ற கருத்தில் காணப்
படுகிறது. அது இன்னும் சற்று விரிவாக இடம் பெற்றிருந்தால்
நன்றாக இருக்கும். இருந்தாலும் கூட அந்தப் பன்னாட்டு
திராவிட மொழி இயற் பள்ளியை கல்வி அமைச்சர் அவர்கள்
சில முறை பார்வையிட்டார்கள். அங்கே ஏறத்தாழ ஒரு
கோடி ரூபாய்க்கு அதனுடைய சொத்துக்கள் உருவாகியிருக்கிறது.



1986 ஏப்ரல் 19] [திரு. க. அன்பழகன்]

கேரள அரசு குறைந்த விலையிலே தேவைப்பட்ட நிலத்தை
அவர்களுக்கு வழங்கி அதில் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்
கின்றன. மாண்புமிகு அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள்
அங்கே போய் வந்திருக்கிறார்கள். மறுபடியும் அழைக்கப்பட்டு
இருக்கிறார்கள். ஆனால், 2 ஆண்டுக் காலமாக அவர்களுக்கு
தருவதாக தமிழக அரசு அறிவித்த கிராண்டு, கட்டிடங்கள்
கட்டுவதற்கு தருவதாக ஒத்துக்கொண்ட 2.53 இலட்சம் ரூபாய்
அவர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

"They have requested to release the balance of Rs. 2.5 lakhs
which was already agreed to be given for the construction of
the block and to pay back the debts"

கட்டிடம் இது 6 மாத காலமாக விடப்படும் வேண்டுகோள். கட்டிடம்
கட்டி முடிக்கப்பட்டு, திறப்பு விழாவிற்காக அமைச்சர் அவர்
களை அழைத்து, அவர்கள் வருவதற்கு தேதி கேட்டுக்கொண்டு,
அதே நேரத்தில், ரூ. 2,53,000 தர வேண்டுமே அதை அனுப்
புங்கள் என்று கேட்கப்படும் நிலை, இந்த அரசுக்கு ஏதோ தமிழ்
மீது பற்று இருந்தும்கூட, அந்தப் பணம் இன்னும் அனுப்பப்
படவில்லை. இன்னும் சொல்லப் போனால், இன்னொரு
கிராண்டு. 1985-86லிருந்து ரூ. 3 இலட்சம் விதம் வழங்கப்
பட வேண்டிய கிராண்ட்டையும் அவர்கள் கேட்டிருக்கிறார்
கள். இது மற்ற மாநிலங்கள் தருகிற தொகையைவிட
அதிகமல்ல என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அவர்கள்
இதுவரையில் பிற மாநிலங்களிலிருந்து பெற்றிருக்கிற தொகையை
நான் குறிப்பிட விரும்புகிறேன். கர்நாடகத்திலிருந்து 1978
லிருந்து 1983 வரை ரெக்கரிங் ரூ. 6,80,000, நான்-ரெக்கரிங்
ரூ. 4,53,000 ஆக கர்நாடகத்திலிருந்து ரூ. 11,30,000 பெற்றி
ருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து ரெக்கரிங் ரூ. 6,80,000, நான்-
ரெக்கரிங் ரூ. 2,00,000 மொத்தம் பெற்றிருப்பது ரூ. 8,80,000,
பாண்டிச்சேரி அரசிடமிருந்து ரெக்கரிங் ரூ. 5,70,000 நான்-
ரெக்கரிங் ரூ. 4,20,000 ஆக ரூ. 9,90,000 பாண்டிச்சேரி
அளித்திருக்கிறது. கேரளா ரெக்கரிங் ரூ. 4,08,000, நான்-
ரெக்கரிங் ரூ. 4,53,000, ஆக ரூ. 8,61,000 தந்திருக்கிறது.
ஏறத்தாழ ரூ. 30,40,000 அளவிற்கு கட்டிடங்கள் வந்திருக்
கின்றன. வங்கிகளிலே கடன் பெற்றிருக்கிறார்கள். அதை
விளக்கப்படுத்துவதில், தமிழினுடைய பெருமையை அகில உல
கிலே நிலைநாட்டுவதற்கு கேரளாவிலோ, ஆந்திராவிலோ,
கர்நாடகத்திலோ, இப்படிப்பட்ட அமைப்புகள் இயங்குகின்ற
போது, திராவிட மொழி, கலைப் பண்பாட்டிற்கு ஒரு தனித்
தன்மை உண்டு என்பதை உலகம் ஏற்றுக் கொள்ளச் செய்யக்
கூடிய ஒரு பெரிய வாய்ப்புடன், அங்கு சிறந்த ஆராய்ச்சிகள்
நடக்கின்றன. எனவே, கல்வி அமைச்சரும், நிதி அமைச்சரும்
இந்த அமைப்புப் பற்றி அறிந்திருந்தும் ஏனோ இந்த நிலை
கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னாலே இதனை உருவாக்கி,
அகில இந்தியாவிலே மதிக்கத்தக்க அளவிற்கு நடத்துகிற இயக்கு
னர் வி.ஐ. சுப்பிரமணியம் அவர்கள், இன்று தமிழ்ப் பல்கலைக்

கழகத்தினுடைய துணை வேந்தராக இருப்பதால், அவரைப் பற்றி அறிந்திருக்கிற அமைச்சரவர்கள், இந்த பன்னாட்டு திராவிட மொழியியல் பள்ளிக்கு அதை [illegible]மத்திடும் வாய்ப்பு கேரளாவிலே கிடைத்து, டில்லி அரசும், மத்திய அமைச்சரும் கூட ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கு ஒரு நிலைமை ஏற்பட்டு, தென்னக மாநிலங்களின் ஆதரவோடு உருவாக்கியிருக்கிற அந்த அமைப்பைக் காப்பாற்றுவதற்கு தமிழகஅரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். இல்லையானால், இந்த அமைப்பை இழந்துவிட்டால், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட இன்னொரு அமைப்பை ஏற்படுத்துவது, நாமே முயன்றால் கூட அந்த சூழ் நிலை உருவாகாது என்பதால் நமது பொறுப்பு அதிகமாகிறது. என்பதை உணரவேண்டும். நான் ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன், மன்னித்துக் கொள்ளவேண்டும்.

இன்றைக்கு தமிழகத்தைப் பற்றி அறிக்கை தருகிறபோது, தொல்பொருள் பாதுகாப்பிற்கான கடமைகள், அருங்காட்சி யகங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள், இவைகளையெல்லாம் பட்டியல் போட்டுத் தருகிறீர்கள். சென்னையிலே ஒரு அருங் காட்சியகம் இருக்கிறதே மியூசியம், இதை அமைச்சர் பார்வை யிடத் தயாரா? எப்போதாவது பார்வையிட்டாரா? ஒருமுறை அமைச்சர் வீரப்பன் அவர்கள் பார்வையிட்டதாகவும், ஒரு ஏட்டிலே நான் பார்த்தேன். அங்கே இருக்கிற கலையரங்கு மிக அதிகமாகப் பாழ்பட்டிருக்கிற காரணத்தினால், ஏறத்தாழ ரூ. 2 இலட்சம் ஒதுக்கி, அந்தக் கலையரங்கை செப்பனிட்டால் தான் அது ஒரு 'ஓரியண்டல்' அரங்கு என்ற முறையில் நிலைக் கும் என்று தீர்மானித்து பழைய காலத்து அமைப்பை பின்பற்றி அமைக்கப்பட்ட ஒரு தனித்தன்மை உடையது என்ற காரணத் தால், அதிலே அக்கறை காட்டி யிருப்பதாக நான் அறிகிறேன். இனிதான் அந்தப் பணி தொடங்கப்பட வேண்டும். அந்த மியூசி யம் ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு மேலாக செம்மையான முறை யில் இயங்கி வந்தது. கடந்த 7 ஆண்டு காலமாக வெளவால் அடைகின்ற இடமாக மாறியிருப்பதை, ஆனந்தவிகடனில் வந்திருக்கிற கட்டுரையில் வந்த செய்திகளை எல்லாம் கூட நான் படித்துக் காட்ட முடியும். ஆனால் நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. அங்கே காட்சியகம் முறையாக நடத்தப்படவில்லை. அதனுடைய பல பிரிவுகள் மூடிக்கிடக் கின்றன. மூன்று ஆண்டுக் காலமாக மூடிவிட்டு, ஒரு டைரக்டர் சம்பளம் வாங்குகிறார். இந்த அரசாங்கமோ, ஒரு அமைச் சரோ எப்போதோ தலையிட்டு, இவைகளை கண்காணித்து முறைப்படுத்தியிருக்கவேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், அங்கேயிருந்த மைத்ரேயர் சிலைகள் காணாமல் போயிருக்கின்றன. கண்காட்சிக்கான பெட்டிகள் செய்வதற்காக ரூ. 3 இலட்சம் செலவிட்டு,



அரசாங்கத் துறையைச் சார்ந்த ஒரு அமைப்பின் மூலமாக வழங்கப்பட்ட அந்தப் பெட்டிகள் அப்படியே வைக்கப்பட்டிருக் கின்றன. பல இடங்களில் அறைகள் துர்நாற்றம் வீசுகின்ற நிலைமையில் இருக்கின்றன. இந்த அறைகளில் வெளவால், புறாக்கள் தங்கியிருக்கின்றன. கண்காட்சிப் பொருள்கள் மக்கிப் போயிருக்கின்றன. அந்தப் பொருள்களும், படங்களும் பழுது படாமல் காப்பாற்றப்படவில்லை.

தஞ்சைக் கண்காட்சி என்று பெயரெழுதி ஒரு பலகையிலே, போர்டுகளிலே இறுக்கி, இது தஞ்சைக் கண்காட்சி என்று அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு பொருட் காட்சியகம், நாணயங்கள், பழங்காலத்து நகைகள், அணிகள் எல்லாம், எனக்குத் தெரிந்த வரையில், ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள அளவிற்கு, ஒரு க்யூரேட்டர், பாதுகாப்பாளர் பொறுப்பிலே இருக்கிறது. அதற்கு இரண்டு சாவிகள் உள்ளன. அதை அந்த இயக்குநரும், க்யூரேட்டரும், பாதுகாவலரும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் யார் தெரியுமா? அதை ஒவ்வொரு ஆண்டும் பரிசோதனை செய்து, இன்னின்ன நாணயங்கள், இன்னின்ன நகைகள் இருக்கின்றன என்று பட்டியல் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும். அந்தப் பட்டியல் இதுவரை, நான்கு ஆண்டுகளாக அனுப்பப்படவில்லை. அந்த சாவிகளை வைத்திருக்கிற இரண்டு நபரும் யார் என்று கேட்டால், அண்ணனும் தம்பியுமாவர். இப்படி மியூசியத்தில் அந்த பொறுப்பிற்கு நியமிக்கப்படுகிறவர்கள், அந்தப் பொறுப்பிலே உள்ளவர்கள், அண்ணனும் தம்பியுமாக, இருக்கக்கூடாது என்பது விதி.

(முற்பகல் 11-00)

அந்த விதிகளுக்கு மாறாக அண்ணனும் தம்பியும் அதன் பொறுப்பில் உள்ளனர். அவர்களுடைய பெயர் எல்லாம் இங்கே இருக்கிறது. விவரம் வேண்டுமானால் குற்றச்சாட்டாக நான் தருவதற்குத் தயாராக உள்ளேன். மைத்ரேயர் சிலை போனது குறித்து இதுவரையில் கண்டுபிடிப்பதற்கு வழி இல்லை. வெளி நாடுகளிலிருந்து வரக்கூடியவர்கள் அந்த அருங் காட்சி நிலையம் பற்றித் தெரிந்து கொள்வதற்காக வாங்கிச் செல்லக்கூடியதாக முன்னர் கிடைத்த 9 புத்தகங்கள் 3 ஆண்டுக் காலமாக இல்லை. அங்கே உள்ள ஒரு கட்டடம் குழந்தைகளுக்காக ஒருகாட்சியகம் ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டு 3, 4 லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டு 2 ஆண்டுக் காலமாகியும் அப்படியே நிற்கிறது. 3, 4 லட்ச ரூபாயில் கட்டப்பட்டும் அது பயனுக்கு வருகிற முயற்சி இல்லை. பல பொருட்கள் பாழடிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி அந்தக் கண்காட்சி நிலையமே காண்போர் கண்ணிலே ரத்தம் சிந்தக்கூடிய நிலையமாக மாறிப் போய் இருக்கிறது. எனவே கல்வித் துறையோடு இணைப்பாக இருக்கிற இந்தத் துறையிலே உள்ள குற்றங்குறைகளை நீக்கவும் அக்கறை காட்ட வேண்டும்.

[திரு. க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

பெரியார் மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும்
மற்ற மாவட்டங்களிலும் கண்காட்சி நிலையங்கள் ஏற்படுத்தப்
பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிற இடங்களிலே ஒரு சிறந்த
கட்டடம் கூட இல்லை. ஒரு உறுதியான கட்டுக்கோப்பான
இடமும் இல்லை, கண்காட்சிப் பொருட்களும் இல்லை. அதற்காக
நியமிக்கப்பட்ட அதிகாரிகள் 3 ஆண்டுக் காலமாக சம்பளம்
வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கவனம் இல்லாமலோ,
பொறுப்பு இல்லாமலோ, அதிகாரிகளின் அலட்சியத்தாலோ
அதிகாரிகளுடைய சுயநலத்தாலோ அருங்காட்சியகங்கள்
பயனற்றதாக உள்ளன. தமிழ்நாட்டிலே உள்ள தலைசிறந்த
அருங்காட்சியகம் பாழ்பட்டுப் போகிறபோது மாவட்டத்திற்கு
ஒரு கண்காட்சி நிலையம் என்று சொல்வதிலே அர்த்தம்
இல்லை, பொருள் இல்லை. இதைப்பற்றி குறைகள் முழுவதையும்
நான் விளக்கிப் பேசமுடியாது, அப்படிப் பேசுவது இந்த
அவையின் நேரத்தை முறை தவறி எடுத்துக்கொண்டதாகும்
என்ற காரணத்தினாலே அந்த விவரத்தை கல்வியமைச்சர் அவர்
களிடம் தந்து அதன்மூலமாக அந்தக் குறைகள் நீக்கப்படலாம்
என்று எதிர்பார்க்கிறேன் அமைச்சர் அங்கே போய்ப்
பார்க்கலாம், இல்லையென்றால் நானே அவரை அழைத்துப்
போகிறேன், என்று தெரிவித்துக்கொண்டு இத்துறையில்
காணப்படும் குறைகளை நீக்குங்கள் குறைகள் வளர இடம்
தராதீர்கள், கல்வியில் மத்திய அரசு தலையிட அனுமதி
வழங்காதீர்கள், ஏற்றுக்கொள்ளாதீர்கள், உறுதியான எதிர்ப்பு
தெரிவியுங்கள் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.
நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாகவும் இன்
றைக்கும் கல்வி மானியக் கோரிக்கையின்மீது தங்களுடைய கருத்
துக்களை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த மாண்பு
மிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அவர்கள் சொன்ன கருத்துக்களை அரசு கவனத்
திலே எடுத்துக்கொண்டு குறைகளையும் குறைபாடுகளையும்
போக்கிக் கொள்ளவும் நல்ல ஒரு முன்னேற்றத்தை கல்வித் துறை
யில் அடைய முயற்சிகள் மேற்கொள்ளவும் பயன்படுத்திக் கொள்
ளும் என்ற உறுதியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்
கிறேன்.

இங்கே பல்வேறு பிரிவுகளில் கருத்துக்கள் சொல்லப்பட்டன.
பல துறைகளைப் பற்றியும் கருத்துக்கள் சொல்லப்பட்டன.
என்றாலும் நான் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லக்கூடிய அள
வுக்கு நேரம் இல்லையென்ற காரணத்தினால் ஒன்றிரண்டு கருத்
துக்களை மட்டும் உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

புதிய கல்விக் கொள்கையை மத்திய அரசு உருவாக்கிக் கொண்
டிருக்கிறது. அதற்காக 27, 28 தேதிகளில் மத்திய கல்வி ஆலோ
சனைக் குழுவைக் கூட்டியிருக்கிறார்கள், கல்வியமைச்சர்



1986 ஏப்ரல் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

களும் மற்ற அதிகாரிகளும் கலந்துகொள்ளும் மாநாடாக அது
இருக்கிறது. 29, 30 ஆகிய தேதிகளில் தேசிய அபிவிருத்திக்
கவுன்சில் கூட்டம் நடைபெற இருக்கிறது. அதிலே மாநில முத
லமைச்சர்களும் கல்வியமைச்சர்களும் கலந்து கொள்ள இருக்
கிறார்கள். இந்த இரண்டு மன்றங்களிலும் புதிய கல்விக் கொள்
கைபற்றி கலந்தாலோசிக்கப்பட இருக்கிறது. அதற்குப்பிறகு
பாராளுமன்றத்திலேயும் அது விவாதிக்கப்பட்டு புதிய கல்விக்
கொள்கை இறுதி நிலையை அடையும் என்ற செய்தியை நான்
இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் பெயரால் கொண்டு வரப்பட்ட
வாழ்க்கைக் கல்வியையும் பள்ளிக் கல்வியையும் அனைத்து நிலை
களிலும் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு இணைந்ததாக்க
வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட திட்ட
மாகும் வாழ்க்கைக் கல்வித் திட்டம். முதலமைச்சர் அவர்களால்
கடந்த சில ஆண்டுகளாக சில முன்னோடி நட
வடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1984-85 ஆம் ஆண்டிலே 660
மேல்நிலைப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் 8 ஆம்
வகுப்பில் 75 ஆயிரம் மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகை
யில் மொத்தம் 130 வகைப்பட்ட தொழில் கல்விப் பாடத்
திட்டங்கள் இத்திட்டத்தின்கீழ் கற்றுத் தரப்பட்டன.

1985-86 இல் இத்தொழில் படிப்புகள் 9-ஆம் வகுப்பிலே
புகுத்தப்பட்டன. பயன்பெற்ற மாணவ மாணவியர் எண்ணிக்கை
இரண்டு மடங்கு ஆயிற்று. வாழ்க்கைக் கல்வித் திட்டப் பயிற்று
நர்கள் பகுதி நேரப் பணி இடங்கள் 750 ஏற்படுத்தப்பட்டன.

கீழ் மட்டத்திலேயிருந்தே தொழில் கல்வியைப் புகுத்த
வேண்டுமென்று நமது முதல்வர் அவர்கள் ஒருசில ஆண்டுகளுக்கு
முன் தெரிவித்த கருத்து, தற்போது மைய அரசு உருவாக்கி
வரும் புதிய கல்விக் கொள்கை வரையிலும் ஏற்கப்பட்டிருப்பது
நமக்கு மகிழ்ச்சி தருவதாகும். புதிய கல்விச் கொள்கை அனைத்
திந்திய மட்டத்தில் உருவான பின்னர் அக்கொள்கையையும்
வாழ்க்கைக் கல்வித் திட்டத்தின் கோட்பாடுகளையும் ஒருங்
கிணைந்து அமல்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

நமது பள்ளிக் கல்வித் தர உயர்வுக்கான சில நடவடிக்கை
களை நாம் மேற்கொண்டிருக்கிறோம். நமது மாநில அரசு
நிதிநிலை இடம் தரும் அளவிற்குப் பள்ளிக் கல்வியின் தரத்தை
உயர்த்தும் நோக்குடன், கூடுதல் ஆசிரியப் பணி இடங்கள் ஏற்
படுத்துதல், பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் ஆய்வுக்கூட வசதிகள்
போன்ற பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்.

மாணவ, மாணவியர் பள்ளிகளில் கூடுதலாகச் சேரவும்,
தொடர்ந்து படிக்கவும் வகை செய்யும் ஊக்குவிப்புத் திட்டங்க
ளான சத்துணவுத் திட்டம், இலவசப் பாடநூல் திட்டம், இலவச
சீருடைத் திட்டம் ஆகியவையும் வேறு எந்த மாநிலத்திலேயும்
இல்லாத அளவிற்குப் பெருமளவில் செயல்படுத்தப்படுகின்றன.

[திரு. செ. அரங்கநாயகம்] [1986 ஏப்ரல் 19

பள்ளி ஆசிரியர்களுடைய குறைகள் தீர்க்கப்பட்டு,
நிலைமைகள் மேம்படுத்தப்பட்டு, அவர்கள் பணி
முழுமூச்சாக ஈடுபட வேண்டுமென்ற நோக்கத்துடன் பயிற்றுவிப்பதில்
லிருந்து ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் 1–6–1981
அரசு ஊழியர்களாக ஏற்கப்பட்டனர். இப்பொழுது நமது அரசு அனைவரும்
1–6–1986 முதல் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளி ஆசி
ரியர்களையும், அப்பள்ளியிலுள்ள ஆசிரியர் அல்லாத ஊழிய
களையும் அரசு ஊழியர்களாக ஆக்க முடிவு செய்துள்ளது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுகுறித்து தேவை
யான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

14-வது வயது முடிய அனைவருக்கும் தொடக்கக் கல்வி
அளிக்கப்பட வேண்டுமென்பது இந்திய அரசியல் சட்டத்தின்
கோட்பாடு ஆகும். தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையில்
தமிழ்நாட்டின் சாதனை குறிப்பிடத்தக்கதாகவே இருந்து வந்
துள்ளது. 6 முதல் 11 வயது குழந்தைகளில் 100 விழுக்காட்
டினரையும், 11 முதல் 14 வயது குழந்தைகளில் 76.24 விழுக்
காட்டினரையும் நாம் ஏற்கனவே பள்ளிகளில் சேர்த்துள்ளோம்.
நமது பள்ளியாசிரியர்கள் 2.88 இலட்சம் பேரில் 1.84 இலட்சம்
பேர்கள் தொடக்கப் பள்ளிகளிலே பணி செய்பவர்கள்தான்.
தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் பணி நிலைமைகளை மேம்
படுத்தவும், தொடக்கக் கல்வி விரிவாக்கத்தில் மேலும் கவனம்
செலுத்தவும் இவ்வரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

சில பள்ளிகளில் ஆசிரியர்கள் சிறு விடுப்பு எடுப்பதில்
முறைகேடுகள் நடைபெறுவதாகத் துறையின் கவனத்திற்கு
கொண்டு வரப்பட்டது. இங்கேயும் பல உறுப்பினர்கள் எடுத்துச்
சொன்னார்கள். அதையடுத்து, 13–2–1986 அன்று பள்ளிக்
கல்வி இயக்குநர் இதுகுறித்து தக்க அறிவுரைகளை வழங்கியுள்
ளார்கள். அதன்படி, ஆசிரியர்கள் சிறு விடுப்பு பற்றி அன்றைய
தினமே எந்தெந்த ஆசிரியர்கள் சிறுவிடுப்பில் உள்ளனர் என்ற
விவரத்தைப் பள்ளித் துணை ஆய்வாளர் போன்ற நிர்வாக
அதிகாரிகளுக்குத் தலைமை ஆசிரியர்கள் தெரிவித்துவிட வேண்டு
மென்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆய்வு அதிகாரிகள் பள்ளிகளுக்கு
திடீரென பார்வையிடச் செல்லும்பொழுது வருகைப் பதிவேட்
டினை மற்றப் பதிவேடுகளுடன் சேர்ந்து சரி பார்க்க வேண்டு
மென்று தெளிவாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளிக் கல்வியிலே, மேல்நிலைப் பள்ளி வகு
பிலே, முதல் பிரிவிலே எடுத்துப் படிப்பவர்கள், பொறியிய
மற்றும் மருத்துவக் கல்லூரியிலே—இரண்டுக்கும் மனு போடுவ
வதால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க மேலவையில் சொல்ல
பட்ட யோசனையைப் பரிசீலிப்பதாக முதல்வர் அவர்கள் தெரி
வித்ததை அடுத்து அரசு இதுகுறித்து ஆணையொன்றை
அண்மையில் வெளியிட்டுள்ளது. கணக்கு, இயற்பியல், வேதியல்,



1986 ஏப்ரல் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

உயிரியல் என்ற முதல் பிரிவுப் பாடத் தொகுதியில் உயிரியல்
பாடத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக வீட்டு மின் சாதனங்கள்,
மின்சார மோட்டார் ரீவைண்டிங், பொது இயந்திரவியல்,
வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி பராமரித்தல்,
மின் கணிப்புப் பொறி அறிவியல் எனும் தொழிற்பாடங்களில்
ஒன்றையெடுத்துப் பயில வேண்டுமென்றும், இத்திட்டம் 1986–
87 லிருந்து 11-ம் வகுப்பிலும், 1987-88 இலிருந்து 11, 12
ஆகிய இரண்டு வகுப்புகளிலும் நடைமுறைப்படுத்தப்படும்
என்று ஆணையிடப்பட்டுள்ளது. இந்தப் பாட மாற்றத்தால்
ஆசிரியர்கள் எவருக்கும் வேலையிழப்பு இராது. உயிரியல்
ஆசிரியர்கள் அதே பள்ளியிலேயே இரண்டாவது பிரிவுப் பாடங்
கள் நடத்த அலலது தேவைப்படும் அருகாமையில் உள்ள மேல்
நிலைப் பள்ளிகளிலே பணியில் ஈர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
இந்த மாற்றத்தினால் முதல் பிரிவு மாணவர்கள் இரண்டாண்டு
கள் படித்து என்ஜினியரிங் கல்லூரியில் சேர்வதற்கு மட்டுமே
தகுதியைப் பெறுவர். அல்லது மருத்துவக் கல்லூரியிலே
போகவிரும்பும் மாணவர்கள் இரண்டாவது பிரிவில் சேர வேண்டு
மென்ற நிலை ஏற்படும்.

மின்கணிப்புப் பொறி பாடம்—கம்ப்யூட்டர் - 1985–86இல்
20 மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகளில் 9, 10 வகுப்புகளில்
புகுத்தப்பட்டது. 1986–87 இல் தமிழ்நாட்டில் மேலும் 130
மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் கம்ப்யூட்டர் பாடத்தைப்
புகுத்துவதற்கான பட்டியல் மைய அரசுக்கு அனுப்பப்பட்
டுள்ளது. இப்படிச் சில முயற்சிகளை நாம் பள்ளிக் கல்வித்
துறையிலே செய்துகொண்டு வருகிறோம்.

(முற்பகல் 11–10)

ஆட்சிமொழி பற்றிய ஒரு கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். 1986–87 ஆம் ஆண்டில், அரசுச் செயலகத்தில்
நடைமுறையிலுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு தமிழ் ஆட்சி
மொழித் திட்டத்தை முனைப்புடன் செயலாக்க அனைத்து
நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பெறலாம். துறைத் தலைமை
அலுவலகங்கள் சார்நிலை அலுவலகங்கள் ஆகியவற்றில் தமிழ்
ஆட்சிமொழித் திட்டம் தொடர்பாக அடைந்து வரும் முன்
னேற்றம் குறித்து, காலமுறைதோறும் ஆய்வு செய்து, அதன்
பேரில், தொடர் நடவடிக்கை மேற்கொள்வது போன்று அரசுச்
செயலகத் துறைகளையும் ஆய்வு செய்து, அத்தகைய ஆய்வின்
அடிப்படையில் தக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்
படும்.

அடுத்து, கலைக் களஞ்சியம் பற்றி ஒரு செய்தியை நான்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது அந்தப்
பணியைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மேற்கொண்டிருக்கிறது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1986 ஏப்ரல் 19

அறிவியல், வாழ்க்கையியல் என்னும் இரு பகுதிகளாகத் தொகுக்கப்பட்டு வருகிறது. வாழ்க்கையியல் 14 தொகுதிகளாகவும், அறிவியல் 20 தொகுதிகளாகவும் வெளியிடப்பட உள்ளன என்று அறியப்படுகிறது. வாழ்க்கையியல் பகுதியின் முதல் தொகுதி, அச்சிடப்பெற்று, அண்மையிலே வெளியிடப்பட இருக்கிறது என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் நுட்பக் கல்வித் துறை சம்பந்தமாக, அதிலே பயிற்று மொழி தமிழாக இருக்க வேண்டுமென்ற ஒரு கொள்கையை நாம் நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்து வருகிறோம். தொழில் நுட்பப் பயிலகங்களில் பயிலும் கிராமப்புற மாண வர்கள் எளிதில் பாடங்களைப் புரிந்துகொள்ள வகை செய்யும் வகையில், தொழில் நுட்பப் பயிலக ஆசிரியர்கள் பாடங்களை ஆங்கிலத்திலோ தமிழிலோ, அல்லது தமிழ் ஆங்கிலம் இரண்டும் கலந்தோ பயிற்றுவிக்கலாம் என தொழில் நுட்பப் பயிலக முதல்வர்கள் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டிலிருந்து அம்முறை நடந்து வருகிறது.

அத்துடன் பட்டயப் படிப்பு, மாணவர்கள் போர்டு தேர்வி லும், மற்றும் வகுப்புத் தேர்விலும், விடைகளை, தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ அல்லது தமிழ், ஆங்கிலம் ஆகிய வற்றைக் கலந்து அளிக்கலாம் என்று அறிவித்து, அதனாலே பெரும்பான்மையான மாணவர்கள் தமிழிலே எழுதுகின்ற வாய்ப்புபெற்று, அதனாலே பயன் அடைந்து வருகிறார்கள்.

பொறியியல் பாடப் புத்தகங்களைத் தமிழில் வெளியிடு பணியினை, பொறியியல், தொழில் நுட்பப் பயிலகங்கள் முதல்வர்களின் ஒத்துழைப்புடன் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மேற்கொள்ள திட்டமிட்டிருக்கிறது. அவர்கள் அதிலே ஒரு பகுதி பாடப் புத்தகங்களைத் தமிழிலே வெளியிடு கிறார்கள். பொறியியல் கல்வி சம்பந்தமாகவும் தயாரித்தி ருக்கிறார்கள். மருத்துவக் கல்வி சம்பந்தமாகவும் தயாரித்தி ருக்கிறார்கள்.

தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பொறியிய கல்லூரியைத் தஞ்சைப் பல்கலைக் கழகமே தொடங்க ஒ கருத்துருவை அனுப்பியிருக்கிறார்கள். அது அரசினுடை பரிசீலனையில் இருந்து வருகிறது.

கம்ப்யூட்டர் வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு, தொழி நுட்பப் பயிலகங்களில் பொறியியல் சம்பந்தப்பட்ட எல்ல பட்டயப் படிப்பிலும் கம்ப்யூட்டர் ப்ரொகிராமிங் ஒ கட்டாயப் பாடமாக சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கு ஏ வாக, எல்லா தொழில் நுட்பப் பயிலகங்களிலும் கம்ப்யூட்ட சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதிலே, குறிப்பா



1986 ஏப்ரல் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

தொழில் நுட்பக் கல்வி சம்பந்தமாக, இந்தச் சுய நிதி ஆதார தொழில் நுட்பப் பயிலகங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பி னர்கள் பலரும் பேசியிருக்கிறார்கள். அந்த அடிப்படை யிலே, நாம் கல்லூரிகளையும் பயிலகங்களையும் தொடங்கு வதற்கான காரணங்களை ஏற்கனவே, இந்தச் சட்டமன்றத் திலே சொல்லி இருந்தாலும், இதற்கு முன்னாலே, பல்வேறு சந்தர்ப்பங்களிலே சொல்லியிருந்தாலும், நான் இங்கே சுருக்க மாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு மாநிலத்தினுடைய முன்னேற்றமாக இருந்தாலும் அல்லது ஒரு நாட்டினுடைய முன்னேற்றமாக இருந்தாலும் அது தொழில் முன்னேற்றம் என்ற அடிப்படையிலேதான் நடை பெற வேண்டும். தொழில் முன்னேற்றம் என்பது அந்த நாட் டிலே இருக்கிற தொழில் ஆற்றல்களைப் பொறுத்துதான் இருக்கும். ஆகவே, நாம் சமுதாயத்தில் தொழில் ஆற்றல்களை வளர்க்காமல் தொழில் முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது. ஒருவேளை இந்திய நாட்டினுடைய முன்னேற்றம் தடைப்பட்டிருப்பதற்குக் காரணம், அந்தத் தொழில் ஆற்றலிலே நமக்கு இருக்கிற வறுமை நிலையாக இருக்கலாம். ஜப்பானிலே, ஜெர்மனியிலே ஏற்பட்டிருக்கிற முன்னேற்றத்திற்குக் காரணம், அவர்கள் தொழில் ஆற்றலை மிகுந்த அளவுக்குப் பெற்றிருப்பதுதான். அந்தக் காரணத்தாலேதான் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னாலே, விரைவான ஒரு முன்னேற்றத்தை அவர்கள் பெற முடிந்தது. ஆகவே, இயற்கையான வசதிகளோ, பண நிலைமை களோ முக்கியமான காரணமாக நாம் கருதிக் கொண்டிருந்தாலும், தொழில் முன்னேற்றத்திற்கு அதை அடிப்படையாகக் கொண்டு, பொருளாதார முன்னேற்றத்திற்கு மக்களிடத்திலே நாம் வளர்க்க விரும்புகிற தொழில் ஆற்றல் முன்னேற்றம்தான் முக்கிய அடிப் படையானது என்பதை நான் இங்கே குறிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற தொகை என்று பார்க்கிறபொழுது, ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தைப் போல, இரண்டு மடங்கு தொகை அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நாம் ஒதுக்குகிறோம். உதாரணமாக, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 90,000 ஒதுக்கிய நாம், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 1,80,000 ஒதுக்கியிருக்கிறோம்.

முதலாவது திட்டத்தில் இருந்தே இதே நடைமுறை களைத்தான் பின்பற்றி வருகிறோம். ஆகவே, ஒரு திட்டத்தை விட அடுத்தத் திட்டத்திற்கு இரண்டு மடங்கு பணத்தை அதிகமாக ஒதுக்க வேண்டியிருக்கிறது. அந்த அளவுக்கு மதிப்பீடு இருக்கிறது. ஆக, திட்டத்தை நிறைவேற்ற பணத்தை ஒதுக்குகிறபோது அந்தத் திட்டத்தை பல்வேறு

[திரு. செ. அரங்கநாயகம்] [1986 ஏப்ரல் 19

முறைகளிலே செயல்படுத்தும் போது அதற்கு ஏற்ற மனித ஆற்றல் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. எவ் வளவு பணத்திற்குத் திட்டத்தைப்போட்டு நிறைவேற்ற முயற்சி செய்கிறோமோ, அந்த அளவுக்கு பல்வேறு நிலை களில் தகுதிபெற்ற ஆட்கள் தேவை என்பதை ஏற்றுக் கொண்டால், ஒரு திட்டத்திற்கும் இன்னொரு திட்டத்திற்கும் இடையில் இரண்டு மடங்கு பணம் தேவை என்பதை நாம் ஏற்றுக்கொண்டால், அந்த முறையில் பார்க்கும்போது ஒரு நாட்டினுடைய மனித ஆற்றலை வளர்க்கும்போது, திட்டங் களுக்கு ஏற்ப, ஒதுக்கப்படுகின்ற பணத்திற்கு ஏற்ப, இரண்டு மடங்கு மனித ஆற்றலையும் நாம் வளர்த்தாக வேண்டும். இரண்டு மடங்கு என்ற அளவுக்கு இல்லாவிட்டாலும் கொஞ்மாவது வளர்த்தாக வேண்டும்.

ஆனால் தமிழ்நாட்டில் நிலைமை என்ன? கடந்த 15 ஆண்டுகளில் ஒரு எஞ்ஜினியரிங் கல்லூரி, ஒரு பாலிடெக்னிக் கூட ஆரம்பிக்க முடியாத சூழ்நிலை இருந்து வந்திருக்கிறது என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். ஆக, 15 ஆண்டு காலம் தமிழ்நாட்டில் தொழில் கல்வியைக் கட்டுப்படுத்தியதின் மூலம் அதனுடைய குரல் வளையை நசுக்கிவிட்டதன் மூலம் நாம் தமிழ்நாட்டினுடைய தொழில் முன்னேற்றத்திற்கு மிகப்பெரும் தடையாக நம்மை அறியாமலேயே இருந்து வந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் உணர்ந்தாக வேண்டும்.

இரண்டாவதாக, மாஸ் எஜுகேஷன் இருக்கிறது. எல் லோரும் படிக்க வேண்டுமென்று பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் ஊர்தோறும் ஆரம்பப் பள்ளிகளை ஆரம்பித்தார்கள். அதன் பிறகு, அதோடு நின்றுவிட முடியாது. தொடர்ந்து, உயர்நிலைப் பள்ளிகளை அதைத் கிறோம். அந்த அடிப்படையிலே மேல்நிலைப் ஏற்படுத்தியிருக் பின்னாலே ஏற்படுத்தியிருக்கிறோம். பள்ளிகளையும் 1,500-க்கு மேற்பட்ட மேல்நிலைப்பள்ளிகள் தற்போது ஏறத்தாழ இந்தப் பள்ளிகளிலிருந்து ஆண்டுதோறும் இருக்கின்றன. வந்துகொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் வெளி கொண்டு படிக்காவிட்டாலும் வெளிவருகிற எல்லோரும் மேற் முக்கால் பேர்கள் படிப்பார்கள் அதிலே பாதிப்பேர் அல்லது இருந்தாக வேண்டும். என்ற எண்ணம் நமக்கு உருவாக்க வேண்டும். அதற்கேற்ற வசதி வாய்ப்புகளை என்ன? 80 மார்க் வாங்கிய ஆனால் இதிலே நம்முடைய அனுபவம் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. ஒரு மாணவனுக்கு எஞ்சினியரிங் மாணவனுக்கு இடம் கிடைக்கும் என்ற 85 மார்க் வாங்கிய 80 மார்க் வாங்கிய மாணவன் ஏமாறுகிறான் திருப்தி இருந்தாலும் நாம் உணர்ந்தாக வேண்டும். என்ற உண்மையை வேண்டுமென்றால் ஒன்றாவது அவன் 80 மார்க் வாங்க வகுப்பிலிருந்தே அவன் என்ன



1986 ஏப்ரல் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

இலட்சியத்தோடு படித்து, இந்த நிலைக்கு உயர்ந்திருப்பான் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். படித்துவிட்டு பலரும் வேலைக்குப்போக ஆசைப்படுகிறார்கள். படித்தவர் களுக்கு வேலை வாய்ப்பு தரவேண்டும். தரமுடியவில்லை என்றால் சமுதாயத்திற்கு விரோதமான காரியங்களில் ஈடு படுவார்கள். அதற்காகத்தான் மாநில அரசும் மத்திய அரசும் பல்வேறு வகைகளிலே பணம் தருகின்ற திட்டங் களை, வேறுபல திட்டங்களை செயல்படுத்துகிறோம். ஆனால் சிறந்த அறிவு படைத்தவர்கள், நல்ல ஆற்றல் உள்ளவர்கள், உயர்ந்த மார்க் வாங்க வேண்டுமென்ற நல்ல இலட்சியத் தோடு படித்தவர்கள், அதற்குமேல் படிக்க முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டால், மன விரக்தி ஏற்பட்டால் அவர்கள் இந்த சமுதாயத்திலே படித்து வேலை இல்லாமல் இருக்கின்ற வர்களை விட மிகவும் அபாயகரமானவர்களாக, ஆபத்தான வர்களாக மாறிவிடுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள் கிறேன்.

அது மட்டுமல்ல, இப்படிப்பட்டவர்களுக்கு நல்ல வாய்ப்பு வசதிகளை நாம் செய்துதர வேண்டுமென்று சொல்லுகின்ற போது, தமிழ்நாட்டில் தனியார் துறையில் அவர்கள் இந்த கல்வி நிறுவனங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லும் போது அவர்களுக்கு அனுமதி அளிப்பது தவறு என்ற ஒரு தவறான கொள்கையை நாம் கொண்டிருக்கிறோம். அந்த கொள்கை சரியான கொள்கை அல்ல. தனியார் நிறுவனம் ஒரு கல்லூரியை ஆரம்பித்தாலும் அல்லது ஒரு பாலிடெக் னிக்கை ஆரம்பித்தாலும் 50 சதவீதம் மார்க் அடிப்படையில், ஜாதி விகிதாச்சார அடிப்படையில் மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்று நிபந்தனை போட்டிருக்கிறோம். அதிலும் அந்த மாணவர்களை நாமே தான் தேர்ந்து அனுப்புகிறோம். 50 சதவீதம் மாணவர்களை அவர்களே தேர்வு செய்வதாக இருந்தாலும் சர்க்கார் கல்லூரியைப்போல செயல்படுகிறார்கள். ஆக, இரண்டு சுயநிதி கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டால் அரசின் சார்பில் ஒரு கல்லூரி ஆரம்பித்தால் என்ன பயன் விளையுமோ அந்தப் பயன் சமுதாயத்திற்கு கிடைக்கிறது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

தனியார் கல்வி நிறுவனங்களிலே கொள்ளையடிக்கிறார்கள் என்று இங்கே சொல்கிறார்கள். அது ஒரு தவறான வாதம். ஒரு எஞ்சினியரிங் கல்லூரியை சர்க்கார் நிறுவ வேண்டு மென்றால் 3 கோடி ரூபாய், 4 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டும். அதைப்போன்று 26 இலட்சம், 27 இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் செலவிட வேண்டும். ஒரு பாலிடெக்னிக் என் றால் 1.5 கோடி ரூபாய் அல்லது 2 கோடி ரூபாய் முதலீடு செய்ய

வேண்டும். அதற்குமேல் ஆண்டுதோறும் 7 இலட்சம், 8 இலட்சம் ரூபாய் ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சர் ஆகும். இவ்வளவு பெரிய தொகையை அவர்கள் செலவு செய்தால்தான் அவர்கள் இந்த நிறுவனத்தை நடத்த முடியும்.

(முற்பகல் 11-20)

சம்பாதிக்கிற நோக்கம் மட்டுமே அவர்களுக்கு இருக்குமானால் இதே பணத்தை வேறு வகையில் அவர்கள் முதலீடு செய்து இதிலே கிடைக்காத இலாபத்தை அவர்கள் பெற முடியும். அதை விட இன்னொன்றையும் நான் சொல்கிறேன். பாலிடெக்னிக் என்றால் 10 இலட்சம் ரூபாய் பேங்கிலே நாம் போட வேண்டும். டெப்பாசிட் வைத்திருக்க வேண்டும். கல்லூரி என்றால் 30 இலட்சம் ரூபாய் வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த 10 இலட்சம், 30 இலட்சம் ரூபாய்க்கு வட்டியாகக் கொடுத்தால்கூட ஒரு இலட்சம், 3 இலட்சம் என்று கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே கல்வித் துறையிலே ஒரு சேவை மனப்பான்மையோடு வரக்கூடியவர்களை நாம் இப்படிப் பேச வேண்டாம் என்றுதான் அருமை நண்பர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே இதுபற்றிக் குறிப்பிடுகிறார்கள். கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. கேப்பிட்டேஷன் ஃபீஸ் அல்லது எந்தவிதமான ஃபீஸ்-ம் வாங்கக் கூடாது என்று குறிப்பிட்டுவிட்டு இங்கே அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது அவர்களுக்கு எக்ஸ்பென்டிச்சர் அதிகமாக இருப்பதன் காரணத்தால், அவர்கள் கொள்ளை அடிக்கிறார்கள் என்று சொல்லக்கூடாது என்று சொல்கிறார்கள். அப்படி என்றால் அவர்கள் கேப்பிட்டேஷன் ஃபீஸ் வாங்குவதை அமைச்சர் அவர்கள் நியாயப்படுத்துகிறார்களா ? அல்லது அப்படி வாங்கிக்கொண்டிருக்கிற அந்தக் கல்வி நிறுவனங்களுக்கு உடனடியாகச் சென்று சர்ப்ரைஸ் செக் பண்ணி அத்தகைய நடவடிக்கைக்கு ஆட்பட்டிருக்கக்கூடிய நிறுவனங்களை அரசு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும். நான் சொல்ல வருவது என்னவென்றால் தனிப்பட்டவர்கள் செலவு செய்ய முன்வருகிறார்கள். எல்லோருமே தவறான நோக்கத்தை வைத்துக்கொண்டு இருக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு வேண்டுமென்றால் நான் ஒரு புள்ளி விவரத்தைத் தருகிறேன்.

1986 ஏப்ரல் 19]

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது இந்த கோச்சிங் இன்ஸ்டிட்யூஷன் நடத்துபவர்கள் கொள்ளை அடிக்கிற நோக்கத்தோடு நடத்தவில்லை என்று சொல்கிறார்கள். எல்லாரையும் அப்படிச் சொல்லக்கூடாது என்று அவர்கள் சொன்னார்கள். நான் உங்கள் மூலம் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விலைகொடுத்து வாங்கவா முடியும் கல்வியை என்று [illegible] அவர்கள் சொன்னார்கள். எனவே, கல்வி என்பது இந்த நாட்டிலே எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் வசதி படைத்தவர்களுக்கு மட்டும்தான் அதாவது பிரிவிலேஜ்டு க்ளாஸ்-க்கு மட்டும்தான் இந்தக் கல்வி வாய்ப்பு உண்டு என்று அரசாங்கத்தின் அணுகுமுறை இருந்தால் அது எப்படி நியாயமாக இருக்கும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 50 சதவிகிதம்தான் நாம் தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம். அதாவது அரசுக் கல்லூரிகளில் எப்படிச் செய்கிறோமோ அதுபோல் நாம் 50 சதவிகிதம் சேர்க்க வாய்ப்பு ஏற்படுத்தியிருக்கிறோம். மீதி 50 சதவிகிதம்தான் அவர்கள் இஷ்டப்படி அவர்களுக்கு வேண்டியவர்களை எல்லாம் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு ஏதேனும் விளக்கங்கள் கேட்பதாக இருந்தால் கேட்டுக்கொள்ளலாம். இப்போது இடையிலே குறுக்கிட்டால் நாட்டுக்கு அமைச்சரால் அறிவிக்கப்பட வேண்டிய முக்கியமான அறிவிப்புகள் விட்டுப்போய் விடக்கூடும். எனவே அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு விளக்கம் கேட்க வாய்ப்பு தருகிறேன். அப்படி ஒரு முறையை வைத்துக்கொள்வது எப்போதுமே சிறந்த ஒன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலே கல்வி நிறுவனங்களை நடத்துவது பற்றிய ஒரு செய்தி நியூஸ் டுடே பத்திரிகையில் வந்திருக்கிறது. அதாவது ப்ரைவேட் காலேஜ் [illegible] பற்றியது. அது கம்யூனிஸ்ட் கட்சியால் ஆளப்பட்டு வருகிற ஒரு நாடாகும். குறிப்பாக சோஷியத் யூனியனை விட [illegible] ஒரு நாடாகும். அது [illegible] (குறுக்கீடுகள்) [illegible] வாதம் பேசுகிற [illegible] இந்தச் செய்திகளைச் சொல்கிறபோது ஏன் பயப்பட வேண்டும்? (குறுக்கீடு)

திரு. சுப்பராயன்: பாயின்ட் ஆப் ஆர்டர், துணைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை இந்தியா டுடே அல்லது நியூஸ் டுடே என்று நினைக்கிறேன். அந்தப் பத்திரிகையில் இருந்து எடுத்துச் சொல்லுகிறார்கள்.

பத்திரிகை செய்திகள் ஆதாரங்கள் ஆகாது என்று முன்கூட்டியே ஒரு தீர்ப்பு இதே அவையில் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை ஆதாரமாக வைத்துச் சொல்லப்பட்டிருந்தால்......

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : துணைத் தலைவர் அவர்களே, ஆதாரமாக ஏற்றுக் கொள்ள வேண்டாம். எனக்குக் கிடைத்த ஒரு தகவலின்படி சொல்லுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். சீனாவில் கூட அவர்கள் தனிப்பட்ட நிறுவனங்கள், இன்டிவிஜுவல்ஸ் என்ற முறையில் தனிப்பட்டவர்கள் கூட கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கலாம் என்று ஒரு முடிவை எடுத்திருப்பதாக ஒரு செய்தியைக் கேட்டேன். அப்படி வேண்டுமானால் அதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அதற்காக நான் சீனாவை குறை கூறுவதாக அர்த்தம் அல்ல. கல்வி நிலையங்களைத் தனிப்பட்டவர்கள் நடத்துவது என்பது ஏதோ பணத்திற்காக மாத்திரம் அல்ல. இங்கே பேசிய மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் என்ன சொன்னார்கள். யு.கே.ஜி. பள்ளியிலே இருப்பது போன்ற தரம் கார்ப்பரேஷன் பள்ளிகளிலே இருக்க வேண்டும் என்ற கருத்தை ஆதங்கத்தோடு சொன்னார்கள். அப்படி இல்லை என்பதற்கும் என்ன காரணம்? தனியார் நடத்துகின்ற பள்ளிகளிலே இருக்கிற மேலாண்மை, நிர்வாகம் அவர்கள் நடத்துகின்ற பள்ளிகளில் இருக்கிற தரம், மற்ற பள்ளிகளில் இல்லை என்பதை சமுதாயம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்தச் சமுதாயத்தினுடைய உணர்வு போற்றப்படுவதற்கு, கல்வியின் தரத்தைக் காப்பதற்கு, தரமான கல்வி உருவாக்கப்படுகிறது என்ற நிலையில் தனியார் கல்வி நிலையங்களை அதிகரிக்கின்ற நிலைமை சீனாவிலேயே வந்திருக்கிறது என்ற கருத்தைத்தான் சொல்லுகிறேன். தவறாகச் சொல்லவில்லை. இங்கேயும் அதை ஒட்டித்தான் நாம் செய்திருக்கிறோம்.

தனியார் கல்வி நிறுவனங்கள் மக்களுடைய ஆதரவோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தரத்தின் தன்மை கருதித்தான் சீனாவில் கூட அப்படி ஒரு நிலைமை வந்துவிட்டது என்ற செய்தியைச் சொன்னேனே தவிர, சீனா ஏதோ தன்னுடைய கொள்கையை புறக்கணித்து விட்டதாக நான் சொல்லவில்லை. கல்விச் சேவையைப் பெருக்குவதற்கும், தனியார் துறை மூலமாக நடத்தப்படுகின்ற கல்வி நிறுவனங்கள் நன்றாக நடத்தப்படுகின்றன என்று கருதியும், சமுதாயத்தில் அதற்கு விருப்பம் அதிகரித்திருக்கிறது. அதை நாம் பயன்படுத்திக் கொள்கிறோம் என்ற கருத்தைத் தான் நான் சொல்கிறேனேயன்றி வேறு அல்ல. மற்றபடி கல்வி நிறுவனங்கள் எல்லாவற்றையும் அரசுதான் நடத்த வேண்டும் என்ற கொள்கை எனக்கு மாறுபாடான கொள்கை அல்ல. அது போல எல்லா தொழிற்சாலைகளும் பொது உடைமையாக்கப்பட வேண்டும் என்பதும் எனக்கு மாறுபாடான கருத்து அல்ல.



ஆனால், பொருளாதார உயர்வு என்று வைத்துக் கொண்டும் தனியார் துறைகளும் செயல்படலாம் என்று வைத்துக்கொண்டு, தனியார்களை தொழில் நடத்துவதற்கும் சம்பாதிப்பதற்கும், வாய்ப்பளித்துக் கொண்டு, அவர்கள் பொருளாதாரத்தில் மிச்சப்படுத்துவதற்கும் வாய்ப்பை தந்துக் கொண்டு, அவர்கள் கையிலே நல்ல பணமும் மற்ற பணமும் சேர்ந்திருக்கும் நிலையில், அவர்களுக்கு இப்படி ஒரு வாய்ப்பு தந்து அந்தப்பணத்தை நல்ல வழியாக செலவிடுவதற்கு வசதி வாய்ப்புகள் ஏற்பட்டால் அதன் மூலம் நாட்டுக்கு நன்மை கிடைக்கும் என்ற எண்ணத்தின் காரணமாகத்தான் இவ்வகள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

போன வாரம் கூட மத்திய அமைச்சர் மாண்புமிகு பகத் அவர்கள், இன்று மக்களிடையே தேங்கிக் கிடக்கும் 40 ஆயிரம் 50 ஆயிரம் கோடி கருப்புப் பணம் அரசாங்கத்தின் கையில் கொடுக்கப்படுமானால், நாட்டின் திட்டங்களுக்கு அவர்கள் அதை தந்தால், நாடு முன்னேறும் என்று பகிரங்கமாக பிரயத்தனம் செய்தார்கள் என்றால் என்ன அர்த்தம்? அந்தப் பணம் அதற்குப் போகவில்லை என்றால், வேறு எதற்காவது போகும். அது தேர்தலிலே கூட பயன்படுத்தப்படும் அல்லது வேறு தவறான வழிகளிலே பயன்படுத்தப்படுமே தவிர நாட்டின் நலனுக்கு, நல்ல வழியில் செலவிட ஒரு வாய்ப்பு வசதியாக ஆகாது. ஆகவே, இவைகளையெல்லாம் நல்ல வாய்ப்பாகக்கருதி தனியார்களிடம் அந்தப் பள்ளி நிறுவனங்களை அனுமதிப்பதன் மூலம் அந்தப் பணம் சமுதாயத்திற்கு பயன்படுகிற ஒரு வாய்ப்பு தருவதாக அமையும் என்றுதான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தனியார்களிடத்திலே இருக்கிற வசதிகள் அல்லது வேறு விதமான வாய்ப்புகள் பொதுக் காரியத்திற்கு பயன்படுத்தப்படுவதை நான் கூட வரவேற்கவே விரும்புகிறேன். ஆனால், இந்தத் திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்படுகின்ற பொறியியல் கல்லூரிகளில் பாலிடெக்னிக்குகளில் அந்த அளவுக்குத் தரம் உள்ளதாக இருக்கிறதா? முறையாக இருக்கிறதா? எவ்வளவு கட்டிடங்கள் இருக்கின்றன? பொறியியல் துறைக்குப் பயிற்சிக்குத் தேவையான கருவிகள் இருக்கின்றனவா? அவைகளை எல்லாம் ஒழுங்காக பயிற்றுவிக்கக்கூடிய நிலைமை இருக்கிறதா என்பதைப் பற்றியெல்லாம் அறிந்து கொள்வதில் முழு அளவுக்கு இந்த அரசு கவனம் செலுத்தாவிட்டால், இன்னும் 2, 3 ஆண்டுகளில் அங்கே இன்னும் அதிக குறைகள் ஏற்பட்டு, அந்தப் பயிற்சிகள் பலன் இல்லாமல் போகும் என்ற ஆபத்து ஏற்பட இருப்பதை மறந்து விடாமல் இருப்பது நல்லது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் [illegible] கருத்தை [illegible] ஏற்றுக் கொள்கிறேன். அப்படித் தேர்தல் [illegible] செலவிடப்படாமல் அந்தப் பணம் ஒழுங்காக, முறையாக [illegible] விடப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி [illegible] கிறது. அவை ஒழுங்காக இல்லை [illegible] அது [illegible] நிறுவனமாக இருந்தாலும், ஒன்று அவை [illegible] தந்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் அந்தக் [illegible] தையே நிறுத்திவிட வேண்டும் என்கிற ஒரு [illegible] அப்படிப்பட்டவர்களுக்குத் தெரிவிக்க இருக்கிறது [illegible] இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் இங்கே முதலிலே திரு. பகத் என்று சொன்னேன். அது தவறு. திரு. வசந்த் சாத்தே அவர்கள், [illegible] வப்படுவதைப் பற்றி, தனியார் துறையிலே [illegible] நிலையங்கள் விசேஷமாக நிறுவப்பட்டு [illegible] இருந்தாலும், கருப்புப் பணமாக இருந்தாலும், அது [illegible] திற்குப் பயன்படும் என்று அவர்கள் [illegible] சொல்லியிருக்கிறார்கள். நானும் அதையே சொல்ல [illegible] றேன். சமுதாயத்திலே இருக்கிற பணம் [illegible] நலனுக்காகக் கல்வித் துறைக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–30)

அதற்கு அடுத்து தொழில் கல்வித் துறையில் ஒரு புதிய முயற்சியை மண்டல பொறியியல் கல்லூரி எடுத்திருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு 'ஸ்டெப்ஸ்' என்று சொல்வார்கள். அதா வது விஞ்ஞான தொழில் பூங்கா என்று சொல்வார்கள். என்டர் பிரினர்ஸ் பார்க் என்பதாகும் அது. அந்தத் திட்டத்தின் மூல மாக அங்கே தொழில் கூடங்கள் நிறுவப்பட்டு படித்த மாணவர் களுக்குத் தொழில் நடத்துகிற அனுபவத்தைத் தந்து, அந்த அனுபவத்தைப் பெற்று வெளியே போய் புதிய தொழிலை துவங்குவதற்கு பயிற்சி தருகிற திட்டத்தை நாம் இந்த ஆண்டு தொடங்கவிருக்கிறோம். அதற்கு மத்திய அரசு ஒரு லட்சம் ரூபாய் தந்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

அது தவிர தொழில் துவங்குகிற அளவிற்கு மாணவர்களுக்கு ஒரு அனுபவத்தையும் பயிற்சியையும் தருவதற்கு [illegible] கள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன என்பதை [illegible] பாக்க சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் [illegible] நிறுவனம் சம்பந்தமாக ஒரு பிரச்சினையைக் கிளப்பினார் [illegible] அது சம்பந்தமாக இந்த விவரத்தைப் படித்துக் காட்டுகிறேன்.



"சென்னை அடையாற்றில் உள்ள அச்சுத் தொழில் நுட்பப் பயிலகத்தில் [illegible] 1983–84-ம் ஆண்டு மாணவர் [illegible] தேர்ந்தெடுப்பதில் முறைகேடுகள் நடந்துள்ளன என்று கூறி 17–3–1986-ஆம் தேதியன்று மாண்புமிகு உறுப்பினர் [illegible] அவர்கள் [illegible] கல்வி அமைச்சர் [illegible] முதல்வர் மீது [illegible] ஆதாரமாக திரு. ஜி. பி. வேல் முருகன் உச்ச நீதி மன்றத்தில் நேர்முகத் தேர்வில் அளிக்கப்பட்ட மதிப்பெண்கள் பட்டியல் என்று தாக்கல் செய்த பட்டியலை காட்டியுள்ளார்.

[illegible] அவையில் மாண்புமிகு [illegible] "இது முதல் [illegible] நேர்முகப் போட்டிக்கு [illegible] அறிவதற்கு அவர் தன் சொந்த [illegible] (Rough working sheet) [illegible] இல்லை என்று உச்ச நீதி [illegible] கூறப்பட்டது.

[illegible] உச்ச நீதிமன்றத்தில் நேர்முகப் போட்டியின்போது [illegible] பட்டது தவறு என்று கருதப் [illegible] சமயத்தில் மேற்கூறிய அச்சுப் [illegible] குறிப்பிட்டு முதல்வரின் [illegible] அறிவித்தார்கள். வருத்தம் [illegible] வைக்கப்பட்டிருந்த தெரிவித்தது இம்மாதிரி ரப் ஒர்கிங் ஷீட் [illegible] உறுப்பினர் திரு. ரகுமான்கான் கூற்றுப்படி [illegible] நீதிமன்றத்தில் கொடுத்ததற்காக [illegible] கல்லூரியின் முதல்வர் வருத்தம் அல்ல. உச்ச நீதிமன்றத்தில் [illegible] உறுப்பினர் கூறியுள்ளது போல் எந்த [illegible] மட்டும் தெரிவித்தார். [illegible] இல்லை. உச்ச நீதிமன்றமும் [illegible] அடிப்படையில் தீர்ப்பு அளிக்க [illegible] உச்ச நீதிமன்றத் தீர்ப்பில்—

"The special leave petition is allowed to be withdrawn and the learned Additional Solicitor General appearing on behalf of the respondents states that the petitioner will be admitted to the Diploma in Lithography which commenced in August 1984 and within one week from today. The petitioner will give to the Director of Technical Education a bond agreeing to subject himself to the discipline of the Institution. The admission shall be granted to the petitioner forthwith."

[illegible] ட்டுள்ளது. மற்றபடி உறுப்பினர் கூறியபடி [illegible] கொண்டார்கள், அன்கண்டிஷனல் அப் [illegible] கொண்டுள்ளார்கள்" என்று இல்லை. அவ்விதம் [illegible] அல்லது கல்லூரி முதல்வரோ கேட்டுக்கொள்ளவும் இல்லை.

[திரு. செ. அரங்கநாயகம்] [1986 ஏப்ரல் 19

கல்லூரியில் சேர்ந்தபின் இந்த மாணவர் மீண்டும் ஒரு வழக்கு உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்தார். அந்த வழக்கில் திரு. மோகன்ராவ் தாக்கல் செய்த எதிர் மனுவில்—

" ......against the order in W.A. No. 201 of 1984, the Petitioner filed a special leave petition in the Supreme Court wherein he filed the Xerox copy of the three sheets which are now included in the typeset at pages 5 to 9 claiming that they are the original mark sheets for the first interview of which I was a member of the Selection Committee. I submit that these sheets were not part of the original records. But they were used by me as rough working sheet for my own reference with regard to the number of questions put by me and the number of questions answered so as to assess the award marks after discussion with the other member of the selection committee. The total marks to be awarded in the interview was 30 and the printed sheets used by me for my personal reference indicate that the total marks is 15 which will also go to show that the printed sheets were not meant for the interview concerned and were only rough sheets used by me. The petitioner managed to have obtained these sheets which were discarded by me as they are of no significance. However, the Supreme Court considered it as an irregularity. I expressed regret and the Supreme Court was pleased to accept the same.... ".

என்றுதான் கூறியுள்ளார். வருத்தம் தெரிவித்தது Rough working sheet வைத்திருந்தமைக்குத்தான்.

உறுப்பினர் குறிப்பிடும் (Rough working sheet) வாதத்திற்காக உண்மையான மார்க் லிஸ்ட் என்று எடுத்துக்கொண்டாலும், அதில் அவர் கூறியுள்ளவாறு உள்ள மார்க்குகளை இருமடங்காக்கிக் கூட்ட முடியாது. ஏனென்றால் இது ஒரு நடுவர்கொடுத்த மார்க் ஆகும். மற்ற நடுவர் கொடுத்த மார்க் இதில் இல்லை. இரண்டு நடுவர்களும் அளித்த மார்க்கையும் சேர்த்துத்தான் பார்க்க வேண்டும்.

எனவே இது உண்மையான மார்க் லிஸ்ட் இல்லை என்பது தெளிவு. உண்மையான மார்க் லிஸ்ட் உயர்நீதிமன்றத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு உயர்நீதி மன்றத்தில் நடைபெறும்போது திரு. சீனிவாசன் அவர்கள் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அல்ல. அச்சுத் தொழில் நுட்பப் பயிலக மாணவர்கள் சேர்க்கையைப் பொறுத்தமட்டில் முன்னாள் இயக்குநருக்கோ அல்லது தற்போதைய இயக்குநர் அவர்களுக்கோ சம்பந்தம் இல்லை. எந்த



1986 ஏப்ரல் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

மார்க் பட்டியலும் திருத்தப்படவில்லை. இன்னும் குறிப்பாகக் கூறப்படுமாயின் இயக்குநர் சீனுவாசன் அவர்கள் டில்லி உச்ச நீதி மன்றத்திற்குச் செல்லவும் இல்லை. அப்பாலஜி கேட்கவும்இல்லை. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிலும் தான் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல் மார்க் பட்டியல் திருத்தப்பட்டுள்ளது என்றோ, அல்லது வேறு தவறுகள் நடந்துவிட்டது போன்றோ, அல்லது தவறு செய்து மன்னிப்புக் கேட்டது போன்றோ, அல்லது இந்த மாணவர் தகுதி புறக்கணிக்கப்பட்டது போன்றோ இல்லை. ஆனால் அதே சமயத்தில் மேற்கூறிய மாணவர் தகாதவாறு நடந்து கொண்டுள்ளார் என உரைத்ததைக் கருத்தில் கொண்டு, இம் மாணவர் பயிலகத்தில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்குரிய உறுதிமொழியை தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு அளித்தல் வேண்டும் என்பது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இதில் எந்தவிதமான முறைகேடுகளும் நடக்கவில்லை என்றும் இதில் அமைச்சரின் தலையீடோ, அல்லது இயக்குநரின் தலையீடோ இல்லையென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாதிரியான தேர்வுகளில் அதிகாரிகள் ஏதாவது முறைகேடுகள் செய்திருந்தால், அவர் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். உச்ச நீதி மன்றம் இந்த வழக்கில் (Rough Working Sheet) வைப்பது Irreg' lar என்று சொன்னதிலிருந்து Rough Sheet வைக்கப்படுவதில்லை. மேலும் அவ்விதமான Rough Sheet தற்போது நேர்முகத் தேர்வு கைவிடப்பட்டு உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே இது சம்பந்தமாக ஏதாவது தவறு நடந்தால், நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது என்பதையும் இந்த நேரத்திலே நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே நான் மார்க் பட்டியல் திருத்தப்பட்டு தவறு நடைபெற்றிருக்கிறது என்று சொல்லியது சம்பந்தமாக விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். ஆதாரத்தை நம்முடைய சபாநாயகர் அவர்கள் கேட்டார்கள் அவர்களிடத்திலே கொடுத்தேன். சபையின் முடிவிற்கு விட்டுவிடுவதாகச் சொன்னார்கள். அது வேறு விவகாரம். ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்கம் தருகிறார்கள். அவர்களைப் பார்த்து நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இங்கே குறைந்த மார்க் வாங்கியிருக்கிறார் அந்த மாணவர், லித்தோ-கிராபி என்ற பிரிவிலே படிப்பதற்காக என்று சொல்லி, அவருக்கு அட்மிசன் மறுக்கப்படுகிறது. ஆனால் அதே மாணவர் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனதற்குப் பிறகு காம்ப்ரமைஸ் செய்யப்பட்டதன் காரணமாக, குறைந்த மார்க் வாங்கியவர் என்று எந்த வேல்முருகன் என்ற

[திரு. அ. [illegible]] [1986 [illegible] 19]

[illegible] நிராகரிக்கப்பட்டு [illegible]

[illegible] வருந்து. [illegible] கேள்வி [illegible]

[illegible] இருக்கும் [illegible]

[illegible] நிராகரித்த [illegible]

[illegible]? [illegible]

[illegible] இல்லையே [illegible]

[illegible] இல்லை. இருந்தும் [illegible]

[illegible]? இது [illegible] சந்தேகத்திற்குரியதாக [illegible]

இதற்கு [illegible] ஒன்று [illegible]

இரண்டாவது நாள் [illegible] மன்னிப்புக் கேட்கப்படவில்லை, வருத்தம் தெரிவிக்கவில்லை என்று ஒரு கருத்தைச் [illegible] ஆதாரங்களுடன் வருத்[illegible] மன்னிப்[illegible] தெரிவிக்[illegible] பட்டது. எது சம்பந்தமாக [illegible] இங்கே சொன்னார்கள் 'ரப் சீட்' என்பதைக் காரணம் காட்டி, அதற்கு அவர்கள் வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள் [illegible] [illegible] அடுத்த விளக்கத்திற்கு [illegible] பேசிய [illegible] அவர்கள் [illegible] வழக்கறிஞர், அவர்களுடைய [illegible] ஆனார்கள். அவர்கள் அப்பீல் [illegible] ஆனால் பராசரன் அப்பீல் [illegible] [illegible] கொடுத்திருக்கிறார் [illegible] தகவலைச் சொன்னார்கள். (குறுக்கீடு) [illegible]

[illegible] இல்லை என்று தான் [illegible]

திரு. அ. ரகுமான்கான்: அந்த வழக்கில் அவர்கள் [illegible] ஆகியிருக்கிறார்கள். அவர்களுடைய [illegible] (Represented by the State) [illegible]

இரண்டாவது இங்கே [illegible] தலைமை [illegible] 'டெக்னிக்கல்' [illegible] என்று [illegible] அதற்கான மன்னிப்பு தெரிவிக் [illegible] வருத்தம் தெரிவிக்கப்பட்டது [illegible] இங்கே தான் [illegible] குறிப்பிடவில்லை. மன்னிப்பு [illegible] தெரிவிக்கப்பட்ட [illegible] தான் [illegible] [illegible] சொல்லவில்லை, [illegible]

அமைச்சர் அவர்கள் இப்போது சபைக்கு முதலிலே ஒரு தவறான தகவலைக் கொடுத்துவிட்டு, இப்போது இன்னொரு கருத்திற்கு அவர்கள் வருகிறார்கள்.

(முற்பகல் 11–40)

அடுத்து இன்னொன்றையும் நான் இங்கே வாசித்துக் காட்ட விரும்புகிறேன்.

" Regarding Ground No. 11, I submit that since it is true that the hand-writing is mine and since the Supreme Court pointed out that such procedure is irregular I sincerely express regret. ".

இதை மோகன் ராவ் அவர்கள் (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதையேதான் திருப்பித் திருப்பி சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. அ. ரகுமான்கான் : Writ Petition in the High Court of Judicature at Madras, Special Original Jurisdiction-லே அவர்கள் தாக்கல் செய்திருக்கக்கூடிய கௌண்டர் அஃபிடவிட்-லே சொல்லப்படுகிற இதற்கான ஆதாரத்தை ஏற்கனவே சபாநாயகரிடத்திலே சொல்லியிருக்கிறேன். இதிலே முக்கியமான விஷயம் என்னவென்று கேட்டால், ஹை கோர்ட், சுப்ரீம் கோர்ட்டிலே வேல்முருகன் என்ற மாணவர் இதை நம்முடைய பிரின்ஸ்பால் மோகன்ராவ் மார்க்கை திருத்தி, அவர்கள் இங்கே எனக்கு சேரவேண்டிய மார்க்கை கொடுக்காமல் குறைந்த மார்க் வாங்கியவர்களுக்கு அதிக மார்க் போட்டிருக்கிறார்கள் என்பதுதான், சுப்ரீம் கோர்ட்டிலே வேல்முருகன் போட்ட வழக்கு. அந்த வழக்கிலே, துணை சபாநாயகர் அவர்களின் மூலமாக, அமைச்சர் அவர்களுக்கு கொண்டு வருகிறேன் ; அரசாங்கத்தின் சார்பாக இதற்காக எந்த விதமான கௌண்டர் அப்பிடவிட்டும் அரசாங்கம் பைல் செய்யவில்லை. அதுமட்டுமல்லாமல், இண்டர்வியூ மற்ற சம்பந்தமான மார்க் லிஸ்ட், இரண்டு கொடுக்கப்பட்டன. பிரின்ஸ்பால் இதுதான் ஒரிஜினல் லிஸ்ட் என்று சொல்லி மார்க் லிஸ்டை தாக்கல் செய்தார். வேல்முருகன் என்ற மாணவர் இல்லை, இல்லை இதுதான் ஒரிஜினல் மார்க், அது திருத்தப்பட்ட மார்க் என்று சொல்லி உண்மையான மார்க் லிஸ்ட்டை கொண்டு வந்து திருத்தப்பட்ட, மார்க் லிஸ்ட் என்று........ (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான முறையிலே ஒரு விளக்கத்தை தந்துகொண்டிருக்கிறார்கள். உண்மையான மார்க் லிஸ்ட் என்பது பைனல் லிஸ்ட், இரண்டு பேர் உட்கார்ந்து போடுகிறபோது ஆளுக்கு ஒரு காகிதத்திலே மார்க் போட்டு

பிறகு கூட்டி பைனல் ஆக லிஸ்ட் எழுதுவார்கள். இந்த முறையிலே தேர்வு நடக்கின்ற வரைக்கும் நேர்முக தேர்வு நடத்துகின்ற வரைக்கும், இரண்டு பேர் இருந்தால் இரண்டு லிஸ்ட்டும் மூன்று பேர் இருந்தால் மூன்று லிஸ்ட்டும், தனித் தனியாக வைத்துக்கொள்ள வேண்டும்; நான்கு பேர் இருந்தால் 4 பேர் லிஸ்ட் வைத்துக்கொள்ள வேண்டும். கடைசியில் எல்லா வற்றையும் கூட்டி, பைனல் லிஸ்ட் போடவேண்டும். அது தான் உண்மையான இறுதி மார்க் பட்டியல். ஆகவே இது வேறு, அது வேறு என்பதோ, அல்லது இதிலே பெரிய தவறு நடந்து விட்டதாகவோ சொல்வது சரியல்ல.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதிலே இருக்கிற பிரச்சினையே இந்த ரஃப் சீட் எப்படி கையாளப்படுகிறது என்பதுதான். அந்த விவரம் எனக்குத் தெரியும். வேண்டுமானால் அமைச்சருக்கு நான் விளக்குகிறேன். இரண்டு பேரும் உட்கார்ந்து இரண்டு பேரும் மார்க் போடுவதில்லை. ஒருவரே இரண்டு பேருக்குமாகச் சேர்த்து மார்க்கை போட்டுவிட்டு இரட்டிப்பாக்கிக்கொள்வது பழக்கம்......(குறுக்கீடு).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கான விவரம் எதுவும் இல்லை. நம் முன்னாலே இருப்பது ரஃப் ஷீட் ஒன்று; அப்புறம் பைனல் லிஸ்ட் ஒன்று. இந்த ரஃப் சீட் எப்படி வந்தது, வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று நான் சொல்கிறேன். அப்படி வைப்பது தவறு என்று சுப்ரீம் கோர்ட்டிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ரஃப் சீட்களையும், பைனல் லிஸ்ட்டுடன் சேர்த்து ரெக்கார்டாக வைக்கவேண்டுமென்று சொன்னால் தான் அது சாத்தியமாகும். இல்லையென்றால், ரஃப் சீட்டை வைக்காமல் 4 பேர் ஒரு மாணவருக்குரிய மார்க்கை போட்டுக்கூட்டி இறுதிப் பட்டியலை போடுவதென்பது சிரமமான காரியமாகும். ஆகவே, இந்த மார்க் லிஸ்ட்—ஆனால் இப்போது அந்த முறையையே நாம் எடுத்து விட்டோம்.

திரு. க அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ரஃப் சீட் ஓர்க் பண்ணப்பட்டதிலே டிஸ்கிரிபன்ஸீஸ் இருக்கிறது. அது எப்படி வரமுடியும். ஏழும் நாலும் 14 ஆகாதே; மூன்றும் ஐந்தும் 9-ஆவதில்லையே. ஆக இருக்கிற வேற்றுமைகளை வைத்துக்கொண்டு சுப்ரீம் கோர்ட் அந்தக் குறைபாட்டை உணர்ந்திருக்கிறது. இதை ஒரு பெரிய பிரச்சினையாக கூட நாம் கருதவில்லை. சுப்ரீம் கோர்ட்டிலே,





அந்த மாணவனுக்கு, நாங்கள் உடனே இடம் கொடுத்துவிடுகிறோம், ஆகவே இந்த வழக்கை இதோடு விட்டுவிடலாமே என்று கேட்கக்கூடிய முறையிலே 'ரிக்ரெட்' தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பிரச்சனை, சில குறைபாடு ஏற்பட்டிருக்கிறது என்பது அதை மறைப்பது வருந்தத்தக்கது, எனவே சில குறைபாடு ஏற்பட்டது என்று சொன்னால் அதை அமைச்சரிடத்திலே, வெளிப்படையாக விளக்கி, இனி அந்த முறைகள் திருத்தப்படும் என்று சொன்னாலும் கூட எங்களுக்கு மாறுபாடு இல்லை. இங்கு அந்த மாணவனுக்குகாக வாதிக்கப்படவில்லை. சில குறைபாடுகள் ஏற்படுகின்றன. அவைகள் இனி ஏற்படக் கூடாது என்பதற்காக, அமைச்சர், விளக்கவேண்டுமென்ற காரணத்தால் நானும் அப்படிப்பட்ட தேர்வுக் குழுவிலே இருந்தவன், எனவே உங்களுக்கு வேண்டுமானாலும் பின்னாலே விளக்குகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, வேல்முருகன் அவர்கள் கொடுத்த மார்க் லிஸ்ட், பிரின்ஸ்பால் கொடுத்த மார்க் லிஸ்ட் இரண்டையும் சுப்ரீம் கோர்ட்டிலே நீதிபதி கூட இதில் எது உண்மையான மார்க் லிஸ்ட் என்று கேட்ட போது, அஃப்பிடவிட் அந்த வேல்முருகன் பைல் செய்திருந்தார். ஆனால் நிர்வாகம் பைல் செய்யவில்லை. மாறாக வேல் முருகன் கொடுத்த மார்க் லிஸ்ட், இது திருத்தப்பட்டிருக்கிறது என்று கொடுத்தார் அல்லவா அதை நீதிபதி கேட்ட நேரத்திலே, இது என்னுடைய ஹேண்ட் ரைட்டிங் தான் என்று ஒத்துக்கொண்ட நேரத்திலே இந்த மார்க்குக்கும், அந்த மார்க்குக்கும் வேறுபாடு ஏற்படுகிறதே என்ற நிலை, இந்த ரஃப் லிஸ்ட்டிலே என்ன மார்க் போடப்பட்டிருக்கிறதோ, அதிலிருந்து ஒரிஜினல் லிஸ்ட்டிலே மார்க் வேறுபடுகிறது.

அதைத்தான் 'இர்ரெகுலாரிட்டி' என்று சுப்ரீம் கோர்ட் ஒப்புக்கொண்டு இருக்கிறது. அது 'இர்ரெகுலாரிட்டி' அல்லவா என்று கேட்டபோது ஆமாம் அதற்காக நாங்கள் மன்னிப்பு கேட்கிறோம்................

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்கு சொல்லுகிறேன். ஏன் என்றால் இந்த அவையில் அதை சொல்லி ஆகவேண்டும். சுப்ரீம் கோர்ட்டில் கொடுக்கப்பட்ட மார்க் லிஸ்ட் இங்கே இருக்கிறது. ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லி அவரிடமிருந்து விளக்கம் கேட்டு நான் அமர்கிறேன். சீனிவாசன்

[திரு. அ. ரகுமான்கான்] [1986 ஏப்ரல் 19

என்ற மாணவனுக்கு ரப் சீட்டின் படி 126 மார்க் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி போட்டிருக்கிறார்கள். ஆனால் பைனல் லிஸ்ட்டில் எந்த காரணமும் இல்லாமல் 140 என்று மார்க் போடப்பட்டிருக்கிறது. அடுத்து, ஆறுமுக செல்வன் என்ற மாணவனுக்கு 110 மார்க் அடிப்படை மார்க் ஆகவும் நேர்முக தேர்வில் 8½ மார்க்கும் மொத்தம் சேர்த்து 118½ மார்க் ரப் சீட்டில் வழங்கியிருக்கிறார்கள். ஆனால் பைனல் லிஸ்ட்டில் 137 மார்க் போட்டிருக்கிறார்கள். இப்படி ரப் லிஸ்ட்டுக்கும், ஒரிஜினல் லிஸ்ட்டுக்கும் வேறுபடுகிறது. இந்த வேறுபாடு ரப்பிலிருந்து ஒரிஜினலுக்கு எப்படி வரும். ரப் என்று சொன்னாலும் $4 \times 4 = 16$ தான். ஒரிஜினல் என்று சொன்னாலும் $4 \times 4 = 16$ என்று தான் வரும். ஆனால் ரப்பில் ஒரு மார்க்கும், ஒரிஜினலில் ஒரு மார்க்கும் வந்து இருப்பதற்கு என்ன காரணம்? ரப்பை தன்னுடைய கையெழுத்து என்று ஒத்துக்கொண்டு, இர்ரெகுலாரிட்டி என்று ஒத்துக்கொண்டதற்கு பிறகு குறைந்த மார்க் வாங்கி விட்டான், வேல் முருகன் இடம் இல்லை என்று சொன்னதற்கு பிறகு மீண்டும் எப்படி சேர்த்தீர்கள். அது தான் ஊழல்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிலே தவறு இருந்தால் அரசு அதைப்பற்றி விசாரித்து அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்கும் இங்கே நான் சொல்லுவது அந்த ரஃப்சீட்டை வைக்கக் கூடாது, வைத்தது இர்ரெகுலாரட்டி என்று சுப்ரீம் கோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் அவர் ரிக்கரேட் கேட்டிருக்கிறார். மார்க் மாற்றியதை பற்றி இங்கே எந்த விவரமும் தரவில்லை.

திரு. அ. ரகுமான்கான்: ரஃப்-பிலிருந்த மார்க்குக்கும் ஒரிஜினலில் உள்ள மார்க்குக்கும் எப்படி மாறுதல் ஏற்பட்டது. அது தான் முக்கியம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டில் அதைப்பற்றி இல்லை. நீங்கள் சொல்லிக்கொண்டு இருக்கலாம்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே நான் வளர்க்க விரும்பவில்லை இந்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியதால் தான் அந்த மாணவனுக்கு உடனே இடம் கொடுப்பதற்கு அந்த நிர்வாகம் ஒத்துக்கொண்டிருக்கிறது.



1986 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர்
அவர்களே, சுப்ரீம் கோர்ட் வரைக்கும் ஒரு மாணவன் வந்ததற்குப்
பிறகு சுப்ரீம் கோர்ட்டில் ஏதோ ஒரு மனிதாபிமான உணர்
வோடு கூட (குறுக்கீடு) எனக்குத் தெரியும் இந்த 7, 8 வருடத்தில்
கோர்ட்டுக்கு போய் சீட்டு வாங்காமல் வந்த மாணவன் யாரும்
இல்லை. எல்லா மாணவர்களும் வாங்கியிருக்கிறார்கள் (குறுக்கீடு)
இப்போது கூட ஒரு விதவை பெண்ணுக்கு மார்க் 70-க்கு
குறைவாக இருந்தாலும் மருத்துவக் கல்லூரியில் பரிட்சை
எழுதச் சொல்லி அனுமதி தந்து இருக்கிறார்கள். ஒரு மனிதாபி
மான உணர்வோடு, நடந்து இருக்கிறது என்று எடுத்துக்கொள்ள
வேண்டும். இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது நேர்முக
தேர்வு என்று இருக்கின்ற வரைக்கும் இத்தகைய குற்றங்கள்
நடைபெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது, சந்தேகம் வரக்கூடிய
வாய்ப்பு இருக்கிறது, மாணவர்கள் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு
இருக்கிறது என்ற காரணத்தால் தான் இந்த இண்டர்வியூ
கூடாது என்று இந்த அரசு முடிவு எடுத்தது, பொறியியல்
கல்லூரியில், மருத்துவ கல்லூரியில் இப்போது சட்டக்கல்லூரி
யிலும். இப்படி ஒவ்வொன்றிலும் நாம் எடுத்துக்கொண்டு வரு
கிறோம். அதிலே ஆரம்பத்தில் நான் நினைக்கிறேன், திராவிட
முன்னேற்றக் கழகம் கூட இந்த இண்டர்வியூ முறையை ரத்து
செய்ததை விரும்பவில்லை. காரணம் அவர்கள் வேறு ஒரு
அடிப்படையில் அதை வேண்டும் என்று நினைக்கிறார்கள்.
அதாவது பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் இதில் பாதிக்கப்படக்
கூடும் என்ற ஒரு அடிப்படையில் அந்த இண்டர்வியூ முறை
இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் நாம் அதை
கொண்டு வந்தோம். அவர்களுடைய மன நிறைவுக்காக நான்
இங்கே சொல்ல விரும்புகிறேன், நேர்முக பேட்டி மூலம் தேர்வு
செய்யப்பட்டபோது பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பொறி
யியல் கல்லூரியில் பெற்ற விழுக்காடு 1981–82-ல் 56 சதவீதம்,
1982–83-ல் 58 சதவீதம், 1983–84ல் 60 சதவீதம். ஆனால்
நுழைவு தேர்வு வந்ததற்கு பிறகு இந்த நேர்முக தேர்வு முறை,
இந்த பிரச்சினைக்குரிய இந்த நேர்முக தேர்வை ரத்து செய்
ததற்கு பிறகு 1984–85-ல் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் 63.3
சதவீதம் இடம் பெற்றிருக்கிறார்கள். 1985–86ல் 64.9 சத
வீதம் இடம் பெற்று இருக்கிறார்கள். ஆகவே இந்த நேர்முக
தேர்வை ரத்து செய்தது என்பது சரி என்பதும் அதன் மூலம்
பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படவில்லை
என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு
கொண்டுவருகிறேன்.

கடைசியாக புது கல்விக் கொள்கை பற்றி பல்வேறு கருத்துக்
களைச் சொன்னார்கள். இந்த அரசு அது பற்றி தீர்க்கமான
முடிவை எடுக்கவேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள்.
நடைபெற இருக்கின்ற மத்திய ஆலோசனை போர்டிலும், நடை
பெற இருக்கின்ற தேசிய அபிவிருத்தி கவுன்சிலிலும் மாநிலத்தின்
சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர்

[திரு. செ. அரங்கநாயகம்] [1986 ஏப்ரல் 19

என்ற முறையில் நானும் இந்த மாநிலத்தின் சார்பில் கருத்துக் களை முன் வைக்க இருக்கிறோம். இதில் நான் குறிப்பாக சொல்லிக்கொள்ள விரும்புவது இங்கே பேசிய மாண்புமிகு உறுப் பினர்கள் ஒன்றை முக்கியமாக கவனிக்கவேண்டும். இது சம்பந்த மாக முதன் முதலாக கூட்டப்பட்ட கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் நான் ஒரு கருத்தைச் சொன்னேன்.

(முற்பகல் 11-50)

இந்தப் புதிய கல்விக் கொள்கையில் மனித சக்தியினுடைய வளர்ச்சிதான் கல்வி என்ற ஒரு இலக்கணத்தை நீங்கள் மறை முகமாக ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். அதை மறைமுகமாக திர்ப்பதை நேரடியாகச் சொல்லவேண்டும். கல்வி என்றால், னித சக்தியை பண்படுத்துவது தான் கல்வி என்கின்ற லக்கணத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் சான்னேன். அதற்குப்பிறகு இரண்டு மாத காலத்தில் கல்வித்துறையில் மனித சக்தியை வளப்படுத்துகின்ற துறையாக மத்திய அரசு மாற்றியிருக்கிறது. இதை நாம் முதலில் கவனிக்கவேண்டும். ஆகக் கல்வி என்பது இந்த நாட்டிலே பிறந்து வளர்கிற குழந்தைகள், பிரஜைகள் அத்தனை பேருடைய அறிவையும், ஆற்றலையும் வளர்த்து, அதை இந்த நாட்டு முன்னேற்றத்திற்காக பயன்படுத்துகின்ற வகையில் அவர்களை தயார் செய்வது தான் கல்வி என்பதை நாம் ஏற்றுக்கொண்டால் தான் நமக்கு கல்வி எப்படி இருக்கவேண்டுமென்பதிலும், கல்வி எந்த முறையில் தரப்படவேண்டுமென்பதிலும் ஒரு நல்ல கருத்தை வகுக்கமுடியும். இந்த முறையைப் பார்க்கும்போது ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாதிரிக் கல்வியினுடைய நிலைமை என்ன? கொள்கை என்ன? நான் ஒன்றைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். யோஜனா என்ற ஒரு பத்திரிகையில் இந்தப் புதிய கல்வி கொள்கை பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அதனுடைய தலைப்பின் பெயர் 'ஸ்பாட்டிங் தி வில்லன்' அதிலே பாதகமான ஒரு நிலையிலே உள்ளவர்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஒரு பகுதி டாக்டர் பி. எம். பார்கவா என் பவர் அதைச் சொல்லியிருக்கிறார்கள். இதை மீண்டும் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

'YOJANA' 1986 January 26 Special

"In our country, since Independence, education has been a hereditary affair and a prerogation confined to some 3 per cent of the total population representing only some three million small families and a half-a-million large families. In this group every child shall go to school, and through high school into a university, and get a job after getting a degree. This would be true also of their children and their grand-children. All of those who are likely to read this piece and those who have written for this issue of



1986 ஏப்ரல் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

Yojana, would belong to this category as would every Government Servant of any category. In the case of the remaining 97 per cent, the chances are that their children will not go to school at all, or drop out in Class I, Class III, Class V or class VIII. A small percentage might manage to 'somehow' go through high school and even get a degree but they would have been so deprived all through their educational career that they would not be able to compete in open competition with the children of the privileged 3 per cent.".

Dr. P. M. BHARGAVA.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆகவே சமுதாயத்தில் குறிப்பிட்ட ஒரு சதவீதத்தினர் தான் படிக்கிறார்கள். அவர்கள் வீட்டுக் குழந்தைகள் தான் படிக்கிறார்கள். அவர்கள் வேலைக்குப் போகிறார்கள். அவர் களுடைய குழந்தைகள் வேலைக்கு வருகிறார்கள் என்ற முறையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினர் அந்தப் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இறுதியாக அவர்கள் என்ன சொல்லி யிருக்கிறார்கள் என்றால், "The most important incredient" அதாவது முக்கியமான ஒரு காரணம், இந்த சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு களை வளர்க்கின்ற ஒரு முக்கியமான காரணம் கல்வி தான் என்பதை டாக்டர் பார்கவா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இத்தனை ஆண்டுக்காலமும் கல்வி இந்த நாட்டில் ஏற்றத்தாழ்வு களையும், வித்தியாசத்தையும் அதிகப்படுத்தியிருக்கிறது என் பதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே புதிய கல்விக் கொள்கை இந்த ஏற்றத்தாழ்வுகளைப் போக்கக்கூடியதாக இருக்கவேண்டும். நல்ல உயர்ந்த அறிவாற்றல் மிக்கவர்கள் இந்த நாட்டிற்கு கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு யோசனை களை சொல்லியிருக்கிறார்கள். அதிலே இங்கே விரிவாகச்சொல்ல நேரம் இல்லாத காரணத்தினால் அதை நான் விட்டுவிடுகிறேன். குறிப்பாக ஒரு உறுதியை இங்கே தரவிரும்புகிறேன். மும்மொழிக் கொள்கையை இந்த அரசு தமிழக மக்களின் சார்பாக எதிர்க்கும். மாதிரிப் பள்ளிகள் என்ற பெயரால் இந்திப் பயிற்சி மொழியாகக் கொண்டு வருகின்ற திட்டத்தை இந்த அரசு எதிர்க்கும்.

அதைப்போலவே 'யூனிபார்மிட்டி'. அதாவது பாடத் திட்டத்தை ஒரேமாதிரியாக இருக்கவேண்டுமென்பதற்காக அங்கே எல்லா மாநிலங்களிலும், குறிப்பாக ஒரு வரையறைக்குட்பட்டு ஒரு சம்மதத்தை நாம் தெரிவித்திருக்கிறோம். அது என்ன வென்றால், மொழி சம்பந்தமாகவும், பண்பாடு சம்பந்தமாகவும் வேறு பல மாநிலங்களுக்குரிய நிலைகள் சம்பந்தமாக நமக்கு ஒரு சுதந்திரத்தை வைத்துக்கொண்டு மற்றபடி பொதுவாக கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களிலே, பொதுவான ஒரு பாடத் திட்டம் இருக்கவேண்டுமென்பதில் நமக்கு ஒரு

[திரு. செ. அரங்கநாயகம்] [1986 ஏப்ரல் 19

கருத்துவேறுபாடும் இல்லை. ஆனால் அரசியல் காரணத்தை மனதிலே வைத்துக்கொண்டு, ஏதோ ஒரே மாதிரியான கல்வித் திட்டத்தைக் கொண்டுவருவது என்பது அவர்களுடைய அரசியல் நோக்கங்களைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள் என்று இருக்குமானால், நிச்சயமாக அதை நாம் எல்லோரும் எதிர்த்துத்தான் ஆகவேண்டும்.

ஆனால் இதற்கு மேலாக, ஒரு நாட்டில் ஒரு மாநிலத்தி விருந்து இன்னொரு மாநிலத்திற்குப் போகும்போது, மாணவர்கள் இங்கே ஒரு வகுப்பில் படித்தால், இன்னொரு வகுப்பில் போய்ச் சேரக் கூடிய அந்த வாய்ப்புகளை நாம் இழக்கவேண்டுமென்று விரும்புவோமேயானால், அந்த அடிப்படையில் 'கோர்ஸ் கரிகுளம்', முக்கியமாகப் பாடங்கள் ஒரேமாதிரியாக இருக்க வேண்டுமென்பதில் தவறு ஏதுமில்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படி பல்வேறு குறைபாடுகள் இருந்தாலும் அந்த அடிப் படை இலக்கணத்தை மாற்றுவதன் மூலமாகவும் இவ்வாறு பல பிரச்சினைகளையும் ஆழ்ந்து பரிசீலிக்கிற முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தினாலும் நாம் அதை வரவேற்கிறோம். பாட சம்பந்தமாக பல்வேறு கருத்துக்களைச் சொல்கிற நேரத் திலே கல்லூரிகளில் அல்லது மேல்நிலைப் பள்ளிகளில் அல்லது எந்த நிலையாக இருந்தாலும் கல்விக்கூடங்களில் காணப்படுகிற தரமற்ற நிலைமைக்கும் தவறான நிலைமைகளுக்கும் முக்கிய மான காரணமாக இருப்பது நாம் பெரிதும் போற்றுகிற இந்த பரிட்சை முறைதான். பரிட்சை முறையை நாம் சீர்திருத்தம் செய்யாத வரைக்கும் அதை மாற்றியமைக்காத வரைக்கும் கல்வித் துறையிலே ஒரு நல்ல கல்வியை நாம் மக்களுக்குத் தர முடியாது. அதை புதிய கல்விக் கொள்கையாளர்கள் உணர்ந்து இருக்கிறார்கள். இதையும் அவர்கள் பரிசீலித்து தக்க முடிவு களை எடுப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக அறிவிப்புகள் என்ற முறையிலே நான் ஒன்றிரண்டு செய்திகளைச் சொல்லவிரும்புகிறேன். 1. தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரை தமிழ்நாட்டின் சாதனை குறிப்பிடத் தக்கதாக இருந்து வருகிறது. பள்ளி ஆசிரியர்கள் 2.88 லட்சம் பேர்களில் 1.84 லட்சம் பேர்கள் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரிந்து வரு கின்றனர். தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுடைய பணிநிலையை மேம்படுத்தவும் தொடக்கக் கல்வியின் தரத்தை உயர்த்தவும் தொடக்கக் கல்விக்கென ஒரு தனி இயக்கம் அமைக்க அரசு உடனடியாக ஆணையை வெளியிட இருக்கிறது. ஆக தனி டைரக்டரேட் எலிமெண்டரி எஜுகேஷனுக்கு வருகிறது என்ற நல்ல செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

2. இடைநிலை ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்ற தகுதி வாய்ந்த நபர்கள் இல்லாவிட்டால் பி.டி. தகுதிபெற்றவர்கள் மற்றும் தமிழ்ப் புலவர் தகுதி பெற்றவர்கள் 2 : 1 என்ற விகிதத் தில் வயது மற்றும் இனசுற்றுமுறைக்கான விதிமுறைகளுக்கு உட்பட்டு நியமிக்கலாம் என்று அரசு முடிவுசெய்துள்ளது. இடை நிலைப் பயிற்சிச் சான்று பெற்றவர்கள் இல்லாத நிலையில் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர்கள் பதவிகளுக்கு தகுதிபெற்ற நபர்களை இவ்வாறாக நியமிக்கலாம் என்பது குறித்து விரைவில் ஆணை வெளியிடப்படும். அதுபோன்று மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் முதுகலைப் பட்டம் சம்பந்தமாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார் கள். அதையும் நாம் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

3. பிளஸ் 2 தேர்வுகளில் அங்கமான செய்முறைத் தேர்வுகள் நல்லமுறையில் நடைபெற மாணவர்களுக்கு ஆய்வகத்தில் உப கரணங்களை வழங்கிப் பராமரிக்கும் பொறுப்பு ஆய்வக உதவி யாளர்களுடையதாகும். அதற்காகத் தனியாக இதுவரை ஊதியம் ஏதும் வழங்கப்படவில்லை. இனி இப்பணிக்கு நியமனம் செய்யப் படுகிற உதவியாளர்களுக்கு ஒரு நாளைக்கு 3 ரூபாய் ஊதியம் வழங்க அரசு ஆணையிட உள்ளது.

4. மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் முதல் குரூப் எடுத்துப் படிக்கிறவர்கள் பொறியியல் மற்றும் மருத்துவ இயல் கல்லூரி கள் இரண்டிற்கும் மனுப் போடுவதால் ஏற்படும் பிரச்சினையைத் தீர்க்க மேலவையிலே சொல்லப்பட்ட யோசனையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகத் தெரிவித்ததை அடுத்து அது தொடர்பாக ஆணையொன்றை அரசு அண்மையில் வெளி யிட்டுள்ளது. கணக்கு, இயற்பியல், வேதியியல், உயிரியல் என்று முதல் பிரிவு பாடப் தொகுதியில் உயிரியல் பாடத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக வீட்டு மின்சாரங்கள், பொது இயந்திரவியல் போன்ற ஒரு பாடம் எடுத்துப் பயிலவேண்டு மென்ற ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் சிறுபான்மை மொழி களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நிர்வாகப் பொறுப்புள்ள பதவிகளை அவர்கள் ஏற்க விரும்பாதபோது அவர்கள் தமிழ் மொழியில் தேர்ச்சிபெற வேண்டுமென்ற விதியிலிருந்து விலக்கு அளிக்கலாம் என்று அண்மையில் அரசு ஆணை வெளியிட்டிருக் கிறது. இதுபோன்று பல்வேறு முறைகளில் தமிழக அரசு கல்வி முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வருகிறது என்பதைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விடையளிக்கிறபோது குறிப்பாக முதலமைச்சர் வாழ்க்கை நோக்குக் கல்வியாக 130 வகையான பாடங்கள் நடை

[திரு.] க. அன்பழகன்] [1986 ஏப்ரல் 19

பெறுவதாகத் தெரிவித்தார்கள். எனக்குக் கிடைத்த தகவலின் படி பல பள்ளிக்கூடங்களில் 8-ஆவது வகுப்பில் 130 அல்ல, 5, 6 வகையான படிப்புக்கூட வழங்கப்படவில்லையென்றும் அந்த வகுப்புக்குப் பாட நேரம் ஒதுக்குகிறபோது பள்ளிக்கால அட்ட வணையில் L.O.E.—" Life Oriented Education " என்ற பாடப்பிரிவு போடப்பட்டு வேறு பாடங்கள் நடத்தப்படுதாகவும் ஆசிரியர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இந்த 130 வகை கள் என்ன என்ன பாடங்கள் என்பதை ஒரு அட்டவணையை இந்த அவைக்குத் தெரிவிக்க இயலுமா? 130 பாடங்கள் இருக் கும் என்று என்னால் எதிர்பார்க்க முடியவில்லை. எப்படி 130 வகையான—a wide variety of one thirty courses 8 ஆவது வகுப்பிலே எப்படி வைத்து இருப்பார்கள் என்பதை அமைச்சர் இந்த அவைக்குத் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்பு கிறேன். இன்னொன்று மத்திய அரசினுடைய கொள்கை நோக்க " Challenge of education—A Policy perspective," என்பது மொழிபெயர்க்கப்பட்டிருப்பது தெளிவுக்குறைவாக இருக்கிறது என்று நேரிலே சொன்னேன். அந்த மொழிபெயர்ப் பிலே தெளிவுக் குறைவு மட்டும் அல்ல, குறைகள் அல்ல, குறை பாடுகள் குற்றங்கள் இருக்கின்றன.

(நண்பகல் 12-00)

இதைத் திருத்தி வெளியிட வேண்டிய அவசியம் இருக்கிறது. அடுத்து, இந்த அவையிலே இதைப்பற்றி வாதிக்க வேண்டுமென்று பல உறுப்பினர்கள் கேட்ட காரணத்தால், இதைத் திருத்தி, செம்மையாக்கி, தெளிவுபடுத்தி. அந்தக் கருத்துக்களைக் குறித்து மாநில அரசாங்கத்தின் திட்டவட்டமான, தெளிவான கருத்துக் களை எடுத்து வைத்து, இங்கே அறிக்கை தர அரசு முன்வருமா? அப்படித் தரப்படுகின்ற பொழுது விவாதம் நடத்துவதற்கு அமைச் சரவர்கள் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை வர் அவர்களே, அதைக்குறித்து விவாதிப்பதில் எனக்கு ஆட் சேபணை ஒன்றுமில்லை. அதுபற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவெடுத்து, அதற்கென்று ஒரு நாளை ஒதுக்குவீர்களேயானால் அதுசம்பந்தமாக ஒரு விவாதம் நடத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தலாம். அது நல்லதுதான். ஏனென்றால் இரு தரப் பினரும் பல்வேறு கருத்துக்களை அதிலேயிருந்து பெற்றுக்கொள்ள லாம். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கூறியதைப் போல வாழ்க்கைக் கல்விக்கான அந்தத் திட்டத்தின்கீழ் வரும் 130 தொழில் பிரிவுகளைப் பற்றிய விவரங்களை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் நான் அவைக்குத் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 19]

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் அறிவித்ததில், நான்காவது அறி விப்பில், முதல் குரூப்பில் Mathematics, Physics, Chemistry and Biology இல்லை, அவர்களுக்கு மெடிகல் காலேஜிலே இடமில்லை என்ற அறிவிப்பைச் செய்ததாகச் சொல்கிறீர்கள். ஆனால் இதே குரூப்பை எடுத்துப் படித்த, சென்ட்ரல் ஸ்கூலில் படித்து வரும் மாணவர்களுக்கு அனுமதி உண்டா அல்லது அதற்குத் தடை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலை வர் அவர்களே, நான்கு பாடங்களைப் படித்து வருகின்ற நேரத் தில் மூன்று பாடங்களையும் படித்து வருவதால் அவர்களுக்கு இடம் கிடைக்கும். நாம் இப்பொழுது செய்திருக்கிற ஏற்பாடு, நான்கு பாடங்களைப் படிக்க வேண்டியதில்லை, மூன்று படித் தால் போதும் என்பது. ஒன்றுக்குப் பதிலாக அவர்களுக்கும், தொழில் கல்வி பெறுவதற்கான வாய்ப்பைத் தருகிறோம். இந் தப் பிரச்னை ஏன் வந்தது என்றால், என்ஜினியரிங் கல்லூரியில் முதலில் அனுமதி தந்த பிறகு, அண்ணா யூனிவர்சிடியில் சேர்ந்து விடுகிறார்கள் என்றால், பிறகு ஒன்றிரண்டு மாதங்கள் கழித்து, மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு அவர்களுக்கு அனுமதி கிடைத்தால், அங்கேயிருந்து பத்து பேர் மருத்துவக் கல்லூரியில் வந்து சேர்ந்ததற்குப் பிறகு, அந்த பத்து இடங்களும் ஒரு ஆண்டு முழுவதும் காலியாகவே இருக்கிறதே தவிர, வேறு எவரையும் சேர்க்க முடியவில்லை. அது மாநிலத்திற்கு நட்டம். ஆகவே தான், இந்தப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென் பதற்காக இதற்கு ஒரு சாராரும், அதற்கு ஒரு சாராரும் என்று வைத்து, அந்த 4-ஆவது பாடம் வேண்டாமென்று சொல்கி றோம்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நமது அமைச்சரவர் கள் பதில் சொல்லிக்கொண்டு வரும்பொழுது, தனியார் துறை யில் கல்விக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதில் சுயநிதி கல்வி ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதனால் அதிலே பெருமளவிற்குப் பணம் வாங்குவது என்ற விஷயத்தைப் பற்றி இங்கே நாம் விமர்சித்ததைக் கருத்திற் கொண்டு, " நியூஸ் டுடே " என்ற பத்திரிகையை மேற்கோளாகக் கொண்டு, சீனாவில் தனியார் கல்வி கற்றுக் கொடுக்கும்படியான ஏற்பாடு ஆரம்பமாகிவிட்டது என்று ஸ்விப்பிங்காகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? சீனாவிலே இலட்சக்கணக்கான ரூபாய் பணம் அல்ல, ஆயிரக்கணக்கில்கூட எந்தத் தனி முதலாளியும் பள்ளிக்கூடம் வைத்து நடத்தக்கூடிய சமூக அமைப்பு இல்லை. அது சோசலிச அமைப்பு. வாலண்டரி ஆர்கனைசேஷன்கள் சில கலைகள் கற்றுக்கொடுக்கலாம் என்ற அம்மாதிரி விஷயங்களை வைத்துக் கொண்டு, சீனாவிலேயும் தனியார் கல்வி நிலையங் களைக் கொண்டு வந்துவிட்டார்கள் என்று அந்த சோஷலிச

சமுதாய அமைப்பைக் கரைப்படுத்துவதற்காகச் செய்திகள் வந்
திருக்கலாம். அதை அமைச்சரவர்கள் நம்புவது எப்படிச் சரி
யாக இருக்க முடியும்? அதற்கு ஆதாரம் இல்லாமல் ஸ்விப்பிங்
ரிமார்க்காகச் சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேர
வைத் தலைவரவர்களே, ஒரு செய்தி வந்ததைத்தான் சொன்
னேனே தவிர, அதை நீங்கள் நம்புங்கள் என்றோ, நம்பாம[illegible]
இருங்கள் என்றோ சொல்லவில்லை. இப்படிப்பட்ட நிலைமை
கள் வருவதற்கான காரணம், பள்ளியை அல்லது கல்வி நிலையங்
களை நடத்துவதில் தனியார்களுக்கு இருக்கின்ற அக்கறையைப்
போல மற்றவர்களுக்கு இல்லை என்ற கருத்தை இங்கேகூடச்
சொன்னார்கள். ஆகவே, இதில் பணம் மட்டும் பிரச்னை அல்ல.
தனியார்களுக்கு அக்கறை இருப்பதைப் போன்று அரசு சார்பில்
நடத்தப்படும் கல்வி நிலையங்களில் அக்கறை இல்லை என்பதால்
தான் இப்படிப்பட்ட பிரச்னைகள் வருகின்றன. ஒரு வேளை
இப்படிப்பட்ட பிரச்னை அங்கேயும்கூட வந்திருக்கக்கூடும்.
அது தவறு என்று நான் சொல்லவில்லை.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அங்கே உள்ள சமு
தாய அமைப்பே, முதலாளித்துவ அமைப்பு அல்லாத சோஷலிச
சமுதாய அமைப்பிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஃபாரின் பாலிசியைப்
பற்றி இங்கே பேச முடியாது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அதற்கான ஆதா
ரத்தைக் காட்டும்படி அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கி
றேன். அதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அவர்கள் பத்திரிகைச் செய்தியைக் கோட்செய்து
சொன்னார்கள்.

திரு. ஆ. கா. அ. அப்துல்சமத்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஆரம்பக் கல்வி அடைந்துள்ள வளர்ச்சியை
முன்னிட்டு அதற்காகத் தனி டைரக்டரேட்டை உண்டாக்குவதை
நான் வரவேற்கிறேன். உள்ளாட்சி ஒன்றியம், நகராட்சி ஆகிய
வற்றிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களை அரசு அலுவலர்[illegible]
ளாக ஏற்றுக்கொண்ட பிறகு மாநகராட்சி ஆசிரியர்களை மாத்
திரம் ஏன் விட்டுவிடுகிறீர்கள்? அவர்களையும் சேர்த்துக் கொள்
ளக் கூடாதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலை
வர் அவர்களே, மாநகராட்சி ஆசிரியர்களையும்தான் அரசு ஆசிரி
யர்களாக அறிவித்திருக்கிறோம்.





திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
கல்வி கற்றுக் கொடுக்கப்படுகின்ற எல்லா இடங்களிலும் அது
எந்தத் துறையாக இருந்தாலும், பாடப்படுவது நாட்டு வாழ்த்து.
அந்த நாட்டு வாழ்த்தைப பற்றி, நேற்று ஒரு முக்கியமான
பிரச்னையை இங்கே நான் எழுப்பினேன். ஜன கண........
என்ற நாட்டு வாழ்த்தில் சந்தமும் சங்கீதமும் மாறாமல், தமி
ழிலே மொழி பெயர்த்துப் பாடுவதன் மூலம் உதட்டு அசைவு
அளவிலே, இருப்பது உணர்வு இசையிலே தந்து சேர்கின்ற
ஒருமைப்பாடாக முடியும் என்று நேற்று ஒரு வேண்டுகோள் வைத்
தேன். அதுபற்றி அமைச்சர் அவர்கள் கருத்துரை தருவார்கள்
என்று நான் விரும்பினேன். தமிழ் இசை வேண்டுமென்றும்,
தமிழில் வாழ்த்துப் பாட வேண்டுமென்றும் சொல்கிறோம். பா
மரர்கள் "சிந்து பைரவி "யைப் பாராட்டுகிறார்கள். தெரிந்த
மொழியிலே பாடுகிற காரணத்தாலே. அமைச்சர் பெருமகனார்
தருகின்ற கருத்தை நான் வெகுவாக எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தேசிய கீதம் என்பது அந்த நாட்டிலே
ஒரே மாதிரியாக பாடப்படுகிறபொழுதுதான் அதற்கு தேசிய
கீதம் என்கிற ஓர் அந்தஸ்து கிடைக்கும். அதைப் போல, நம்
முடைய நாட்டில், நாம் ஜனகனமன என்பதை ஏற்றுக் கொண்
டிருக்கிறோம். ஆகவே, அதைப் போய்த் தமிழ் படுத்துவதன்
மூலம், அது மாதிரியாக, மாற்றுவதன் மூலம், புதிதாக எந்த
இலாபமும் நமக்குக் கிடைத்துவிடப் போவதில்லை. மாறாக
தேசிய கீதத்தின் மூலம் தேசிய உணர்வாக ஏற்படுத்திக் கொண்
டிருக்கிற அதற்கு மாறாக நாம் ஒரு கருத்தைச் சொல்வதன் மூலம்
ஒரு எதிர்ப்பு உணர்வைத்தான் நாம் கொண்டு வருகின்றோம்.

அது மட்டுமல்ல, அது சம்பந்தமான தனி சட்டமே இருக்கிறது.
அதை அப்படித்தான் பாடவேண்டும். ராகத்தை மாற்றி பாடினால்
கூட உள்ளே தள்ளி விடுவார்கள், ஆகவே, மொழி பெயர்த்துப்
பாடினால், அப்புறம் சட்டத்திற்கு உட்பட்ட ஒரு தண்ட
னையை அனுபவிக்க வேண்டும்.

திரு. குமரி அனந்தன்: அமைச்சர் அவர்கள் சொல்வது
போல நான் சத்தத்தையும் சங்கீதத்தையும் மாற்றக் கூடாது
என்று சொன்னேன். மத்திய அரசாங்கத்திடம் அதைப் பரிசீலிக்கு
மாறு கேட்பதற்காவது ஒரு குழுவை இந்தத் தமிழக அரசு நிய
மிக்குமா? அல்லது ஆலோசனையாக எழுதுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர்
அவர்களே. அந்த எண்ணம் இல்லை.

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், தனியார் பள்ளிகள் இருக்கின்றன, அரசுப் பள்ளிகள் இல்லை. அங்கு ஒரு மருத்துவக் கல்லூரி, ஒரு பொறியியல் கல்லூரியை அரசு அமைக்குமா என்ற கேள்வியைக் கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிப்பாரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு யோசனை இப்பொழுது அரசுக்கு இல்லை.

கடைசியாக நான் பேச்சினை முடிக்கிற பொழுது ஒன்றை மறந்து விட்டேன். பலர் வெட்டுத் தீர்மானங்கள் தந்திருக்கிறார்கள். சுமார் ரூ. 550 கோடி அளவிற்கு ஒரு மானியத்தை உங்கள் முன்னாலே வைத்து, விவாதத்தை நான் துவக்கி வைத்ததற்குப் பிறகு, நீங்கள் சொல்லிய பல யோசனைகள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை அரசுக்கு வருமேயானால், தோராயமாக எவ்வளவு செலவாகும் என்று பார்க்கும் போது, அதுவே இன்னொரு ரூ. 500 கோடியாக வருகிறது. ரூ. 500 கோடி அதிகப்படியான செலவுக்கு யோசனையும சொல்லிவிட்டு, ரூ. 100ஐ வெட்டும்படியாக 93 பேர்கள் கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன் ஆகவே, அது நியாயம் அல்ல, அதை வாபஸ் பெற்றுக் ொண்டு, இந்த மானியத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்; தலைவர் அவர்களே, வெட்டுத் தீர்மானங்களை 93 பேர்கள் கொடுப்பது நியாயம் அல்ல என்று சொல்வது அவ்வளவு சரியல்ல.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தீர்மானம் கொடுத்தது நியாயம் அல்ல என்று சொல்லவில்லை. சுமார் ரூ. 500 கோடிக்குக் கூடுதலாகச் செலவை சொல்லிவிட்டு, ரூ. 100 வெட்டு என்று சொல்வது நியாயம் அல்லவென்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது : இப்போது வாக்கெடுப்பு.

திரு. என். எஸ். வி. சித்தன் : அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் , திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.



திருவாளர்கள் கு. சுப்பராயன், சு. பாலன், எ.எஸ்.ஏ. ஆறுமுகம், கோ. வீரய்யன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 17-கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,50,66,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(பிற்பகல் 12-10)

(ஆ) கோரிக்கை எண். 21— மீனளம்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 21— மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,12,13,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துப் பேட்டை ஊராட்சி ஒன்றியம் தொண்டியகாடு பகுதிகளில் மீன் பிடிக்கும் தொழிலாளர்களுக்கு வசதியாக மரைக்கரகோறை ஆற்றில் தொடர்ச்சியாக 3 கிலோ மீட்டர் வெட்டிக் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 21— மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,12,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு தாங்கள் பிடித்து வரும் மீன்களை விற்பனைக் கூடங்களுக்கு (மார்க்கெட்) விற்பனைக்கு எடுத்துச் செல்ல குறைந்தவாடகையில் மோட்டார் வண்டிகள் ஏற்படுத்தித் தர வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :"

"மானியக் கோரிக்கை எண். 21— மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,12,13,000-ல்ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1986 ஏப்ரல் 1

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை வட்டம் அக்கரைப் பேட்டை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள மீனவர்களுக்கு கடன் வசதி கிடைக்காமல் உள்ள நிலை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,12,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சா. ஜெகச்சந்திரன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோயிலில் வசிக்கின்ற மீனவர்களுக்கு வீடு கட்டுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,12,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,12,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(இ) கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். :

''மானியக் கோரிக்கை எண். 32 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,89,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. க. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட கிறிஸ்துவர்களுக்கு தற்போது பிற்படுத்தப்பட்டோர் சலுகைகளிலிருந்து ஆதி திராவிடர்கள் பெறும் சலுகைகள் பெறுவதற்கும், வேலை வாய்ப்பில் சலுகை அளிப்பது பற்றி விவாதிக்க வேண்டிய நிலை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 32— பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,89,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''



1986 ஏப்ரல் 19]

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 32— பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,89,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ்.பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மகளிர் இல்லம் கட்டுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 32— பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,89,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளம் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகள் * அச்சிடப்பெற்று அவையில் வைக்கப்பெற்றிருக்கின்றன. அவற்றை நான் படித்ததாகக் கருதி, குறிப்பேட்டில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பின் இறுதியில் நான் பதில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மீனள மானியக் கோரிக்கைமீது பேசுகின்ற வாய்ப்பு பெற்றமைக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனளம் என்று சொன்னாலே இந்த நாட்டு மக்களுடைய உணவுத் தேவையில் ஒரு கணிசமான பகுதியை ஏற்றிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நாட்டிலே உணவு உற்பத்திசெய்கின்ற விவசாயிகள் இருக்கிறார்கள், அதைப்போன்று

*995-1044ம் பக்கங்களில் இணைப்புகள் I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

[திரு. எஸ். வேணுகோபால்] [1986 ஏப்ரல் 19

கடல் விவசாயிகளாக இருப்பவர்கள் மீனவர்கள். மக்களுடைய
உணவுக்கு மீனளம் மிக முக்கியமானது என்பது நாடறிந்த
உண்மை. தமிழ்நாட்டில் மீனவர்கள் வாழ்கின்ற கடற்கரைப்
பகுதி 1,000 கிலோ மீட்டர் இருக்கிறது. மொத்தம் 4 இலட்சம்
மீனவர்கள் இருக்கிறார்கள். அவர்களிலே கடல் மீனவர்களாக
இருப்பவர்கள் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர்கள். 60,000 பேர்
உள்நாட்டு மீன்பிடித் தொழில் செய்கின்ற மீனவர்களாக இருக்
கிறார்கள். இவர்களுக்காக மொத்தம் 4.41 கோடி ரூபாய்,
ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதை எல்லாம்
பார்க்கும்போது, மீனளம் என்று சொன்னாலே இந்தத் துறை
யிலே ஏதாவது முக்கியத்துவம் இருக்கிறதா என்று பார்த்தால்
எதுவுமே இல்லை என்றுதான் சொல்ல முடியும். ஏனென்றால்
மீனவர் சமுதாய வளர்ச்சிக்கு இந்த அரசு ஏதாவது செய்திருக்
கிறதா என்று பார்க்கும்போது ஒன்றும் இல்லை. ஆனால், ஆரம்
பக் காலத்தில் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இந்த மீன
வர் சமுதாய மேம்பாட்டிற்காக நல்லபல திட்டங்களைத் தந்து,
அடித்தளத்தில் இருக்கிற மீனவர் சமுதாயத்தை கை தூக்கிவிட
வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்படுத்தினார்கள். அவர்
கள் மீனவர்களுடைய பொருளாதாரம், கல்வி வளர்ச்சிக்கு திட்
டங்களை செயல்படுத்தியதோடு மீன்பிடித் தொழிலை ஊக்கு
விப்பதிலும் அக்கறை காட்டினார்கள்.

அன்றைய தினம் கோவணாண்டிகளாக இருந்தவர்
களை எல்லாம் வாழ்க்கையில் உயர்த்த வேண்டும்
என்பதற்காக நைலான் வலைகளையும், விசைப் படகு
களையும் கொடுத்தார்கள். அப்படிக் கொடுக்கின்றபோது மானிய
மாகக் கொடுத்தார்கள். மீனவ சமுதாயத்திலே இருப்பவர்களின்
வாழ்க்கையை உயர்த்துவதற்காக பெருந்தலைவர் காமராஜர்
அவர்கள் மானியமாகக் கொடுத்தார்கள். அதற்குப் பின்னால்
வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும் கூட மானிய
மாகக் கொடுக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க
முடியவில்லை. மேலும் கட்டு மரங்களும் அன்றைக்கு மானிய
மாகக் கொடுக்கப்பட்டது.

ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக அரசு என்றைக்கு பதவி ஏற்றதோ அன்று முதல் மீனவர்
வளர்ச்சி குறைந்து விட்டது என்பதை என்னால் சுட்டிக்காட்ட
முடியும். ஏனென்றால் 53ஏ கூட்டுறவு விதி என்று சொல்லி
உண்மையான மீனவர்கள் யார், மற்ற மீனவர்கள் யார் என்று
குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய கால கட்டத்தை இந்த அரசு
ஏற்படுத்திவிட்டது. கட்டுமரங்களிலே போகிறவர்கள்தான்
மீனவர்கள் என்றும் கையிலே வலைகளைத் தூக்கிக்கொண்டு
போகிறவர்கள் தான் மீனவர்கள் என்றும் சொல்லுவது எந்த
வகையில் நியாயம் என்பது எனக்குப் புரியவில்லை. விவசாயி
களைப் பொறுத்தவரையில் ஏர் ஓட்டுகிறவர்கள் மட்டும்தான்
விவசாயிகளா? அதுபோல் தறி ஓட்டுகிறவர்கள் மட்டும்தான்



1986 ஏப்ரல் 19] [திரு. எஸ். வேணுகோபால்]

தறியாளர்களா? அப்படி இல்லை. மற்றவர்களும் அந்தக் கூட்
டுறவுச் சங்கங்களிலே கடன் பெறுகிறார்கள்; உதவி பெறுகிறார்
கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுபோலவே
மீனவ சமுதாயத்தில் பிறந்து வேறு தொழில்களிலே ஈடுபடாமல்
இருப்பவர்களை எல்லாம் மீனவர்களாகக் கருதி அவர்களுக்கு
நல்லதொரு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுத்தாக வேண்
டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு
முன்னாலே விசைப்படகு கொடுக்கப்பட்டது. ஆனால், இந்த
அரசு விசைப்படகு கொடுக்காமலே விசைப்படகு கட்டுகிற நிலை
யங்களை மூடிவிட்டது என்று சொன்னால் அது மிகையாகாது.
அங்கே இருக்கின்ற மீனவர்களுக்கு ஏன் விசைப்படகு கொடுக்கப்
படவில்லை. கலவரங்கள் வந்தன. அப்படிக் கலவரங்கள் உரு
வானதற்குப் பிறகு மீனவர்கள் பொருளாதார வளர்ச்சியில் மிகப்
பின்தங்கிவிட்டார்கள் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அடுத்து இதுவரையிலும் மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கான
தேர்தல் நடைபெறாமல் இருக்கிறது. அதை உடனடியாக
நடத்தியாக வேண்டும்.

டீசலுக்கு மத்திய சர்க்கார் எக்ஸைஸ் ட்யூட்டியில் நிவர்த்தி
செய்திருக்கிறார்கள். இங்கே இந்த அரசு சேல்ஸ் டாக்ஸைக்
குறைத்தாக வேண்டும்.

புயல், வெள்ளம் வருகின்ற காலங்களில் ஒரு அறிவிப்பு வரு
கிறது. அந்த அறிவிப்பிலே மீனவர்கள் யாரும் தொழிலுக்குப்
போகக்கூடாது என்று சொல்கிறார்கள். அப்படி போகின்ற
நிலைமையில் அதாவது கட்டுமரக்காரர்கள் என்று சொன்னால்
30, 40 கிலோ மீட்டர்தான் செல்ல முடியும். விசைப்படகுக்
காரர்கள் 60,70 கிலோ மீட்டர் போகக்கூடும். அப்படிப் போன
தற்குப் பிறகு அந்த விசைப்படகு மூழ்கடிக்கப்பட்டால் இந்த
அரசில் இருக்கின்ற உத்தரவுப்படி அவர்களுக்கு நட்டஈடு கொடுக்
கப்படுவதில்லை; கொடுக்கவில்லை. யுனைட்டட் இந்தியா,
என்ற இன்சூரன்ஸ் கம்பெனி மட்டும்தான் அதைக் கொடுக்க
முடிவு செய்தது. மற்றவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள்.
இதனால், பல விசைப்படகுக்காரர்கள், மிகச் சாதாரண ஏழை
எளிய மக்கள், வறுமைக் கோட்டிற்குச் சற்று மேலே இருப்பவர்
கள் எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அதற்கு உட
னடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். விசைப்படகிலேயும்,
கட்டுமரங்களிலேயும் போகின்றவர்கள் சில நேரங்களிலே தண்
ணீரின் ஓட்டத்தின் காரணமாக ஆழ்கடலுக்குப் போய்விடுகிறார்
கள். அப்படி ஆழ்கடலுக்குப் போனவர்களைக் காப்பாற்றுவ
தற்கு உடனடியாக எந்த படகும் கிடைப்பதில்லை. தமிழகத்
தில் இருக்கின்ற மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அவர்களைக்
கண்டுபிடிக்க விசைப்படகு எதையும் வைத்துக்கொண்டிருக்க
வில்லை என்பதை நாம் உணர வேண்டும். எனவே, அதற்கான
விசைப்படகை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

[திரு. எஸ். வேணுகோபால்] [1986 ஏப்ரல் 19

அடுத்து வீடு கட்டுவதற்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 300 வீடுகள் கட்டித்தரப்படும் என்று சொல்கிறார்கள். அரசின் கணக்குப்படி ஒரு இலட்சம் மக்கள் என்று சொல்கின்ற நிலைமையில் 300 வீடுகளை மட்டும் ஒரு வருஷத்திற்குக் கட்டுவது என்றால் எப்படி கட்டுவார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, அதிகமான அளவில் வீடுகட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குப்பங்களில் சாலைகள் இல்லை; பள்ளிகள் இல்லை; விளக்கு வசதி இல்லை. மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் தலையிலே மீனைச் சுமந்துகொண்டு சென்றால் பஸ்ஸிலே ஏற்ற மறுக்கிறார்கள். சரியான வழித்தடங்கள் இல்லை; போக்குவரத்து வசதி இல்லை. விளக்கு வசதி இல்லாத எத்தனையோ குப்பங்கள் இன்னும் இருக்கின்றன. மணல் மேடுகள் நிறைந்து இருக்கின்றன. மரக்காணம் பகுதியில் சுற்றிப் பார்த்தால் பல மணல் மேடுகளைக் கடந்துதான் அந்த குப்பங்களுக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. மீனவப் பெண்கள் பிரசவ காலங்களில் மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமென்றால் வழியிலேயே பிரசவம் நடந்துவிடும் என்ற சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றி மீனவ குப்பங்களுக்குச் சாலை வசதியும், போக்குவரத்து வசதியும் செய்தாக வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மீனவ மகளிருக்கு வேலைவாய்ப்புக்கள் தந்தாக வேண்டும். விதவைகளுக்கும், மீனவப் பெண்களுக்கும் மீன் அங்காடிகள் முதலியவை அமைத்துத் தருவதாகக் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

ஆனால் கொடுக்கப்பட்டதாக தெரியவில்லை. அறிக்கை கூறுகிறது கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. ஆனால் அப்படி கொடுக்கப்படவில்லை. தமிழக அரசால் மீனவ சமுதாயத்தினருக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்று கேட்டால் அது மிக மிககுறைவாக இருக்கிறது என்று தான் சொல்ல முடியும். மத்திய அரசின் உதவியால்தான் பல மீனவர்கள் வாழுகிறார்கள், மீனளத்துறையே நல்லவிதமாக நடக்கிறது என்று சொன்னால், அது மத்திய சர்க்காருடைய பணத்தினால்தான் என்பதை நான் இங்கே சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு துறைமுகங்களில் 1024 விசைப் படகுகளை உருவாக்குகின்ற அளவுக்கு 1,353.78 இலட்சங்களை மத்திய சர்க்கார் தாராளமாக கொடுத்திருக்கிறது. கடலூர், நாகைப்பட்டினம், மல்லிப்பட்டினம், கோடியக்கரை, இராமேஸ்வரம்,



1986 ஏப்ரல் 19] [திரு.எஸ். வேணுகோபால்]

தூத்துக்குடி, சென்னை, மண்டபம் கரைச்சுவர் போன்ற இடங்களில் இந்த விசைப்படகுகள் வாங்கப்பட்டிருக்கின்றன. அடுத்தாற்போல என்ன சொல்லுகிறார்கள் என்று சொன்னால், 605 படகுகளை 1,082 இலட்ச ரூபாய் செலவில் இன்னும் சில இடங்களைக் குறிப்பிட்டு அங்கே, மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் 50 சதவீத செலவை ஏற்றுக்கொண்டு படகுகள் வாங்க வசதிகள் செய்து கொடுத்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. ஏனெனில் மத்திய சர்க்கார் கொடுக்கின்ற பணத்தை மட்டும் வைத்து நடத்தப்படுகின்ற இந்தத் துறையில் 50 சதவீதம் மாநில அரசு போடுவது வரவேற்கக்கூடியதுதான். அப்படி மத்திய சர்க்காரின் நிதி உதவியினாலேயேதான் இந்தத் துறையில் நிர்வாகமே கூட நடந்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அந்தக் கருத்து மிகையானது அல்ல என்று நினைக்கிறேன். அத்தோடு ஒதுக்கப்படுகிற பணத்திலும் நிர்வாகத்திற்கே அதிகமாக செலவிடப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். திட்டப் பணிகளுக்கு அதிகமாக செலவழிப்பதில்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதை தயவுசெய்து மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப் பெற்றது.)

மாற்றுத் தலைவர் அவர்களே, இது மிக அநியாயம். நியாயமே இல்லை. நாங்கள் இரண்டுபேர்கள் மட்டும் தான் பேசுகிறோம். 1 1/2 மணி நேரத்திற்குமேல் அவர்களுக்கெல்லாம் கொடுத்தீர்கள். எங்களுக்கு மட்டும் இப்படிச் செய்வது சரியல்ல.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வைகை கா. துரைசாமி): சரி பேசுங்கள். ஆனால் சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். வேணுகோபால் : அடுத்து கடலோர அளவை நிலையங்கள் குறித்து ஒன்றிரண்டு கருத்து தெரிவிக்க விரும்புகிறேன். மீன்கள் அதிகமாக எங்கெங்கே இருக்கின்றன என்று கண்டு பிடிப்பதற்காக நீங்கள் இந்த நிலையங்களை உற்பத்தி செய்திருக்கிறீர்கள். ஆனால் எங்கள் பாட்டன் முப்பாட்டன் காலத்திலே கடலிலே அங்கே சகதி இருக்கிறது. இங்கே சேறு இருக்கிறது. அங்கே ஆழமாக இருக்கிறது என்று சொல்லி கேள்விப்பட்டதோடு சரி. இதுவரையில் அந்த நிலையம் ஆய்வு செய்து ஏதாவது சொல்லி இருக்கிறதா என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

அதோடு மட்டுமல்ல. ஏ.ஜி.யின் ஆடிட் ரிப்போர்ட்டிலே 1983-84ல் மத்திய சர்க்கார் இந்த துறைக்கு ஒதுக்கிய பணத்தில் 83 இலட்சத்தைச் செலவழிக்காமல் அப்படியே திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஏன்?

[திரு. எஸ். வேணுகோபால்] [1986 ஏப்ரல் 19

அத்தோடு விசைப்படகுகளை பெர்ரோ சிமெண்ட்ஸ் உபயோகித்து கட்டுமானம் செய்யக்கூடாது என்று எங்களுடைய மீனவர் கமிட்டியிலேயே தீர்மானம் செய்திருக்கிறார்கள். ஆனால் இங்கே நீங்கள் அப்படி கட்டப்போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஏன் கட்டக்கூடாது என்று சொல்லுகிறார்கள் என்றால் இதற்கு முன்னாலே கூட அப்படி விசைப்படகுகள் கட்டப்பட்டு, அவை உபயோகிக்க முடியாமல் பழுதாகியிருக்கின்றன. ஆகவே அந்த முறையில் தயாரிக்கப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மெரினா மீனவர் துப்பாக்கிச் சூடு குறித்து, அதைச் சொன்னாலே எல்லோருக்கும் கஷ்டமாக இருக்கிறது. அங்கே துப்பாக்கிச் சூடு நடந்ததற்குப் பிறகு நமது மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்கள் 23-ஆம் தேதி ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள். அதற்கு இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ.தான் காரணம் என்று சொல்லியிருக்கிறார்கள். நானும் எங்களுடைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் அவர்களும் இது பற்றி பேசுகிறபோதே சொன்னோம். 3 வழிமுறைகளைச் சொன்னோம். ஒன்று, கட்டுமரங்களை இருந்த இடத்திலேயே கொண்டு வந்து வைத்து விடுங்கள். இரண்டாவது தொழிலுக்குப் போகாத நேரத்தில் ஊதியம் அவர்களுக்கு ஏதாவது கொடுங்கள் ; மூன்றாவது அவர்களை அழைத்துப் பேசுங்கள் என்று சொன்னோம்.

இவைகளையே தான் உச்ச நீதிமன்றமும் முடிவு செய்திருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் **

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு தற்காலிக தலைவர் அவர்களே, மீனவர்களின் சமுதாயத்தைச் சார்ந்திருக்கிற மாறன் என்கிற வேணுகோபால் அவர்களைப் பற்றி எனக்கும் நன்றாகத் தெரியும். உங்களுக்கும் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். அவர் தொடர்ந்து மீனவர் மக்களுக்கு பயன் அளிக்கின்ற நல்ல யோசனைகளை, பிரச்சினைகள் உருவாகாமல் இருப்பதற்கு உரிய யோசனைகளை எங்களிடத்திலே அப்போதே சொல்லியிருக்கலாம். சொல்லியிருந்தால், அவர் தோழமை கட்சியைச் சார்ந்தவர் என்ற முறையிலேயும், அந்தக் கருத்துக்கள் முறையோடு பரிசீலிக்கப்பட்டு மீனவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்க முடியும். ஆனால் அவர் வேண்டுமென்றே ஊர்வலம் நடத்துவது, ஆர்ப்பாட்டங்களைச் செய்வது போன்றவற்றிற்கு மீனவர்களைத் தூண்டிவிடுவது போன்ற வகையில் பேசியது மட்டுமல்லாமல் **

தவிர அவரைப் பற்றி நான் ஒன்றும் சொன்னதாக எனக்கு நினைவு இல்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1986 ஏப்ரல் 19]

திரு எஸ். வேணுகோபால் : மாற்றுத் தலைவர் அவர்களே உண்மையிலேயே இன்றைக்கும் சொல்லுகிறேன் **

• (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே. **

** ** **

காங்கிரஸ் கட்சித் தலைவர் பழனியாண்டி அவர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். பிரச்னைகளை குறித்து அவரிடத்தில் சொன்னேன். அவர்களும் மிகச் சிறந்த முறையில் இந்தப் பிரச்சினைகளை அணுகி இருக்கிறீர்கள் என்று என்னிடத்தில் சொல்லிவிட்டுப் போனார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * பற்றி பேசிய கருத்துக்களை நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்த வேண்டாமென்றும், மானியத்தில் பேச வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். வேணுகோபால் : துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களைச் சந்தித்தேன். இந்தப் பிரச்சினையை இப்படி அணுகுங்கள் என்று சொல்லவில்லையென்பதை இன்று காலையில் அவரிடத்தில் கேட்டு தான் சொல்கிறேன். நாங்கள் சொல்வதைத் தான் உச்சநீதி மன்றமும் தங்களுடைய தீர்ப்பாக அளித்திருக்கிறது அகில இந்திய காங்கிரஸ்கட்சியின் தலைவரும் இந்தியாவினுடைய பிரதமராக இருக்கிற ராஜீவ் காந்தி அவர்கள் துப்பாக்கிச் சூட்டில் இறந்த மீனவர்களுக்கு 2,500 ரூபாயை அவர்களுடைய நிதியிலிருந்து கொடுத்தார்கள். அதற்காக இந்தச் சபையின் வாயிலாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அந்த நிகழ்ச்சியில் வீடு இழந்தவர்களுக்கும், ஒரு மாதக்காலம் கட்டுமரத் தொழிலுக்குச் செல்லாதவர்களுக்கும் மானியம் உதவித் தொகை வழங்கப்படுமென்று சொன்னார்களே தவிர, அது இன்னும் வழங்கப்படவில்லைஎன்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அதனை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எல்லா அரசு விழாக்களுக்கும் அந்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முன்னவர் அவர்கள் அன்றைய தினம் இது குறித்து ஆணித்தரமாக சொன்னார்கள். அதை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ். வேணுகோபால்] [1986 ஏப்ரல் 19

நாங்கள் எல்லாம் வரவேற்றோம். ஆனால் மீனவர் பிரச்சினை
யில் லட்சுமிபுரத்தில் ஒரு குடும்பத்தில் தீ விபத்தில் இறந்த
காளி என்பவரின் மனைவிக்குப் பணம் கொடுக்கப்பட்டது. அதற்
கானபடிவங்கள் தயாரிக்கப்பட்டு என்னுடைய பெயர், அழைப்பில்
போட்ட உடனேயே அந்த நிகழ்ச்சியே வேண்டாம் என்று
அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அப்படிச் சொல்லி
விட்டது மட்டுமல்லாமல் அமைச்சர் அவர்களின் அறையிலேயே
அந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதிகாரிகள், செயலாளர்
போன்றவர்கள் எல்லாம் இருந்து நிகழ்ச்சி நடந்து அது படம்
எடுத்து போடப்பட்டது. இது என்ன முறை? முன்னவர்
அவர்கள் சொன்னதற்கும் அமைச்சர் அவர்கள் செய்த
தற்கும் மாற்றங்கள் இருக்கிறதே, அது நல்ல தல்ல.

அடுத்து உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் தொகுதியில்
விசாலாட்சி என்ற அம்மையாருக்கு 15 ஆயிரம் ரூபாய் கொடுத்
தார்கள். அந்த அழைப்பில் சட்டமன்ற உறுப்பினர் பொன்னு
ரங்கம் அவர்கள் பெயரே போடப்படவில்லை.. ஜனநாயகத்தில்
ஆளும் கட்சி எதிர்க்கட்சி இருப்பது முறை தான். இன்றைக்கு
நீங்கள் அங்கே இருக்கலாம், நாளைக்கு இங்கே வரலாம்.
ஆகவே இது போன்ற முறைகளைத் தவிர்க்கவேண்டுமென
கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட காரியங்கள் நடப்பது சரி
யாகாது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மீன் துறையில் ஏராளமாக சங்குகள் தேங்கி இருக்
கின்றன. திருநெல்வேலியில் 1 லட்சம் சங்குகளும், இராமேசு
வரத்தில் 4 லட்சம் சங்குகளுமாக 16 லட்சம் சங்குகள் தேங்கி
யிருக்கின்றன. அப்படியென்றால் அரசாங்கத்திற்கு எவ்வளவு
நஷ்டம் ஏற்படுமென்பதை எண்ணிப் பாருங்கள். அவைகள் ஏன்
ஏலம் விடப்படவில்லை? ஓப்பன்டெண்டர் ஏன் விடப்பட வில்லை?
என்ன பின்னணி? யார் இந்த வியாபாரி? இதில் என்ன
நடக்கிறது என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.
அமைச்சராக இருப்பவர்.....

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: துணைத் தலைவர்
அவர்களே, அந்தச் சங்குகள் விற்பனைக்கு முதலில் டெண்டர்
விட்டோம். யாரும் கேட்கவில்லை. இரண்டாவது தடவை
டெண்டர் விட்டோம். அப்போதும் கேட்கவில்லை.
பின்னாலே கிழக்கு வங்கத்திலே பேச்சுவார்த்தை நடந்து
கொண்டிருக்கிறது. அதற்கும் அவர்கள் ஒத்துவரவில்லை. அரசு
எப்படி அந்தச் சங்குகளை விற்பது என்பது குறித்து பரிசீலித்து
வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே யாரையாவது
டெண்டர் கேட்கச் சொன்னால் அதிகமாக டெண்டர் கேட்பவர்
களுக்குக் கொடுக்க அரசு தயாராக இருக்கிறது.



1986 ஏப்ரல் 19]

(பிற்பகல் 12-30)

திரு. எஸ். வேணுகோபால்: அடுத்து மீனவர் இலாக்காவைப்
பற்றிச் சொல்கிறபோது, மீன் வளர்க்க, எங்கெங்கு ஆறுகள்
இருக்கின்றனவோ, அந்த ஆறுகள் எல்லாம் தனியார்களுக்குச்
சொந்தமாக இருக்கிறது. ஆறுகள் காட்டிலாகாவிற்கும் மற்ற
வர்களுக்கும் சொந்தமாக இருக்கிறது. அந்த ஆறுகள் அத்தனை
யையும் அரசுடைமையாக்க வேண்டும். மீன் பிடிக்கின்ற இடங்
கள் தனியார்களுக்குச் சொந்தமாக இருக்கிற நேரத்திலே,
அப்படிபட்ட நிலை உருவாகிறது.

அடுத்து சென்னைத் துறைமுகத்திலே துறைமுகம் ஒன்று
கட்டப்பட்டு இருக்கிறது. அப்படிக் கட்டப்பட்ட துறைமுகத்தில்
குப்பைக் கூளங்கள் அதிகமாக இருக்கின்றன. ஒரே துர்
நாற்றம் வீசுகிறது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர்
அவர்களே, ஆறுகளை அரசுடைமையாக்க வேண்டும் என்று
சொல்லுகிறார்கள். தனியார் பெயரிலே ஆறுகள் இருப்பதாக
எனக்குத் தெரியவில்லை.

திரு. எஸ். வேணுகோபால்: துணைத் தலைவர் அவர்களே;
தனியார் ஆறுகள் இல்லை, தனியார்களுக்கு உடைமையான
தண்ணீர் குளங்கள், நீர்த் தேக்கங்கள் இருக்கின்றன. குளங்கள்
இருக்கின்றன. அப்படி இருகின்ற தனியார் குளங்களைச் சொன்
னேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர்
அவர்களே, ஆறுகள் என்று சொன்னதால் தான் சொன்னேன்.

திரு. எஸ். வேணுகோபால்: துணைத் தலைவர் அவர்களே,
ஆறுகள் என்று சொல்லவில்லை, (குறுக்கீடு) அடுத்து கடந்த
கூட்டங்களில் பேசும்போது, மீனவர் ஆலோசனைக் குழு ஒன்றைப்
போட வேண்டும் என்று சொன்னேன். அமைச்சர்
அவர்கள் ஆலோசனைக் குழுவை போட்டிருக்கிறார்கள்.
மிக்க மகிழ்ச்சி. ஆனால் இந்த மீனவர் ஆலோசனைக்
குழுவிலே யார் யார் எல்லாம் இடம் பெற்றிருக்கிறார்
கள் என்று சொன்னால், நல்லவர்கள் எல்லாம் இடம் பெற்றிருக்
கிறார்கள். அப்படி இடம் பெற்றிருப்பவர்களிலே சட்டமன்ற
உறுப்பினர்கள் இடம் பெறவில்லை. எங்களை போடவில்லை
என்ற ஆதங்கத்தில் சொல்லவில்லை. ஆலோசனை சொல்
வதற்கு ஆளும் கட்சிக்காரர்களைக் போட்டிருக்கிறார்கள்.
ஆளும் கட்சியாக இருப்பவர்கள் கொள்கைத் திட்டங்களைப்
பற்றி அமைச்சர் ஒன்று சொன்னால், அதை எதிர்த்து சொல்கிற
அளவிற்கு அவர்களுக்கு திண்ணம்..............

[1986 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆர்தம்மாள் சைமன் என்ற காங்கிரஸ்காரரை தமிழ்நாடு கடல் மீனவர் ஆலோசனைக் குழுவிலே போட்டிருக்கிறோம்.

திரு. எஸ். வேணுகோபால் : துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே இருந்த ஆலோசனைக் குழுவைப் பார்க்கிற போது, எல்லா இடங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்களைப் போட்டிருக்கிறார்கள். இப்போது அமைச்சர் அவர்களைச் கேட்டால், முதலமைச்சர் சொன்னார் என்று சொல்கிறார்கள், அடுத்து, இது பற்றிய ஜி.ஓவைப் கொடுங்கள் என்று கேட்டேன். ஒருசட்டமன்ற உறுப்பினர், அரசிலே இருக்கிற ஒரு அதிகாரியைப் போய் ஜி. ஓ. வேண்டும் என்று கேட்டால், எழுதிக் கொடுங்கள் என்று சொல்கிறார். எழுதிக் கொடுத்தேன். எழுதிக் கொடுத்த பிறகு, ஜி.ஓ.வைக் கொடுங்கள் என்று கேட்டால், மந்திரியைப் கேட்டு நான் கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள் இது முறையா? சரியா? இதுநல்லதுதானா? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனவே தற்போது இந்த இலாக்காவிலே இருக்கின்ற நிலைமையை வைத்துக் பார்க்கிற போது, இந்த அமைச்சர் மீனவர் நலனைக் காப்பதாகத் தெரியவில்லை என்பதை சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

அடுத்து ராமேஸ்வரத்தைப் பொறுத்தவரையிலும்....(மணி யடிக்கப்பெற்றது).

*திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினர் நலன் என்ற தலைப்பில் ரூ. 12. கோடியே89 லட்சத்து 61 ஆயிரத்துக்கு மேற் படாத தொகை வழங்கப்பட வேண்டும். என்றும், மீன் வளத் திட்டங்களுக்காக ரூ. 441.67 லட்சம் செலவிட நிதி ஒதுக்கீடு செய்யவும், மாண்புமிகு அமைச்சர் கோவேந்தன் அவர்களால் கொண்டு வரப்பட்ட, மானியக் கோரிக்கைகளை வரவேற்று ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் வைக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன். (குறுக்கீடு).

1967–68ல் பிற்பட்டவர் நலனுக்காக என்று சொல்லி, 1 கோடியே 61 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வைத்து ஆரம்பிக்கப் பட்டு, இன்றைக்குபடிப்படியாக இந்த நடப்பு நிதியாண்டில், 1986–87-ல் 12 கோடியே 89 லட்சத்து, 61 ஆயிரம் ரூபாய் அளவிற்கு இன்றைக்கு பிற்படுத்தப்பட்டவர்கள் நலத்திற்கு ஒதுக் கீடு செய்யும் அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக, அந்த சமு தாயத்தில் உள்ளவர்களுடைய நலனைக் கருதி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எந்த அளவிற்கு அக்கறை உள்ளவர்களாக



1986 ஏப்ரல் 19] [திரு. எப். எம். இராசரத்தினம்]

இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள் வதும், சுட்டிக்காட்டுவதும் என்னுடைய கடமை என்று கருது கிறேன்.

ஆனால் மத்திய அரசாங்கத்தினுடைய ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1 லட்சத்து 80 ஆயிரம் கோடிக்கு திட்டம் திட்டப் பட்டு செலவழிக்கப்பட்டு கொண்டு இருக்கிற இந்த நிலைமையில் பிற்பட்ட வகுப்பினருக்கு என்று மத்திய அரசு ஏதேனும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறதா என்பதையும், மத்திய அரசாங்கத்திலேயிருந்து நம்முடைய அமைச்சர் அவர் கள், நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்தி பிற்பட்ட வகுப்புக்கென்று ஏதேனும் நிதி ஒதுக்கீடு செய்ய அவர்களுக்கு வேலைவாய்ப்பாக இருந்தாலும் அல்லது அவர்களது கல்வித் திறனை உயர்த்துகின்ற அந்தப் பணியாக இருந்தாலும் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துகின்ற பணியை மாநில அரசு செய்திருக்கிறதா அல்லது அதற்கென்று ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை இந்த நேரத்திலே நான் அறிந்துகொள்ள விருப்பப்படுகிறேன். ஒரு காலத்தில் 50 விடுதிகளை கொண்டு தொடங்கப்பட்டு இன்றைக்கு தமிழகம் முழுவதுமாக பிற்பட்ட சமுதாயத்தினுடைய மக்களுடைய நலனைக் கருதி அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்ற, கல்வி யினுடைய தரத்தை உயர்த்த வறுமையின் பிடியிலுள்ளவர் களின் வாழ்வு சிறக்க 459 மாணவ—மாணவியர்களுடைய விடுதிகள் இன்றைக்கு தமிழகம் முழுவதும் இயங்கி வருகிற சூழ் நிலையை புள்ளிவிவரத்தின் மூலமாக நாம் பார்க்கிறோம். 459 விடுதிகள் இன்றைக்கு இருந்தாலும் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 13 விடுதிகளே உள்ளன என்பதை பார்க்கும்போது அதிலும் மகளிருக்கு 11 விடுதி களும், மாணவர்களுக்கு 2 விடுதிகள்தான் ஒதுக்கப்பட்டி ருக்கிறதென்பதையும் பார்க்கும்போது அந்த ஒதுக்கீட்டை அதிகமாக்க வேண்டும். இன்னும் கூடுதலாக மாணவர் விடுதிகளை ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஒரு வேண்டு கோளாக இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிலேயும் இன்றைக்கு புரட்சித் தலைவரைப் பொறுத்த வரையில், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பிற் பட்ட சமூகத்திலே உள்ளவர்களுக்கு, கல்வியினுடைய தரத் தின் மூலமாகவும், வேலைவாய்ப்பு மூலமாகவும் அவர்கள் உயரவேண்டுமென்பதற்காக இந்த அரசைப் பொறுத்த வரை யில் 31 சதவீதமாக இருந்ததை 50 சதவீதமாக உயர்த்தியுள் ளது. தாயுள்ளம் கொண்ட, தானைத் தலைவர், தமிழகத்தி னுடைய முதலமைச்சர், 5 கோடி தமிழக மக்களின் நம் பிக்கை நட்சத்திரம், பேரறிஞர் அண்ணாவின் இதயக் கனி புரட்சித் தலைவர் ஒருவர்தான் என்பதை இந்த நேரத்திலே அழுத்தந்திருத்தமாக சொல்லிக்கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அதைப்போல இன்றைக்கு மாணவர்

[திரு. எப். எம். இராசரத்தினம்] [1986 ஏப்ரல் 19

களுடைய கல்வியின் தரத்தை உயர்த்தவேண்டுமென்பதற்காக,
வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள மாணவர்கள் விடுதி
களிலே அவர்கள் கல்வி கற்க வேண்டுமென்கிற உணர்வி
னுடைய அடிப்படையில் மாணவர்களுடைய விடுதிகளில் மாலை
நேர வகுப்புகள் நடத்தி, மாணவர்களுடைய விடுதிகளுக்கு
அருகாமையிலே இருக்கக்கூடிய அந்த கல்விக் கூடங்களில்
கல்வி கற்றுக்கொடுக்கின்ற ஆசிரியர்களை அவர்கள் பகுதி
நேர ஆசிரியராக பணிபுரியவேண்டுமென்கிற ஒரு விதி
இருந்தாலும், இன்றைக்கு அந்தப் பணி நடைபெறவில்லை என்
பது குறையாகத்தான் இருந்து கொண்டு இருக்கிறது.
எனவே கல்வி கற்று அதிக மதிப்பெண்களைப் பெற வேண்டு
மென்கிற உணர்வினுடைய அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும்
இருக்கிற நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை பாடசாலைகளில்
படிப்பு சொல்லி கொடுக்கக்கூடிய ஆசிரியர்களை சிறப்பு ஊதியம்
வழங்கி அந்த மாணவர் விடுதிகளில் நிரந்தரமாக அவர்கள்
பயிற்சி கொடுக்கின்ற அளவுக்கு ஒரு உத்தரவை போடவேண்டு
மென்பதை இந்த நேரத்திலே நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கி
றேன்.

அதிலேயும் தமிழ்நாடு முழுவதும் நடுநிலை பாடசாலைகளாக
வும், உயர்நிலை பாடசாலைகளாகவும், மேல் நிலை பாட
சாலைகளாகவும் ஏறத்தாழ 227 பாடசாலைகள் நம்முடைய
பிற்பட்ட நலத்தினுடைய சார்பாக நடைபெற்றுக்கொண்டி
ருக்கின்றன. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் பிற்பட்ட
துறை சார்பாக ஒரு பள்ளிக்கூடம் கூட இல்லை என்பது
ஒரு குறையாக இன்றைக்கு இருந்து வருகிறது. இந்தக்
குறையை நீக்கி பிற்பட்ட நலத்துறையினுடைய சார்பாக கன்னி
யாகுமரி மாவட்டத்தில் ஒரு பொறியியல் கல்லூரியை உரு
வாக்கித்தர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே ஒரு
வேண்டுகோளாக வைக்கிறேன்.

பனைமரம் ஏறுகின்ற தொழிலாளி, முடி திருத்துகின்ற
தொழிலாளி, தச்சுத் தொழிலாளி, சலவைத் தொழிலாளி,
விவசாயத் தொழிலாளி, கூலி வேலை செய்பவர் மூட்டைத்
தூக்குவோர் போன்ற, வாழ்க்கையில் மிகத் தாழ்ந்த நிலை
யில் உள்ள பிற்பட்ட சமூகத்தினருக்கு இலவசமாக வீடு
களைக் கட்டி கொடுத்து அவர்களுக்கு கல்வியறிவு புகட்டுவது
போன்ற திட்டங்களில் முன்னுரிமை வழங்கவேண்டுமென்பதை
இந்த நேரத்திலே ஒரு வேண்டுகோளாக வைக்கிறேன்.
மேலும் இன்றைக்கு பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர்,
ஆதி திராவிடர், வாழ்க்கையில் நலிந்துகிடப்போர், ஆதர
வற்றவர்கள், அநாதைகள், மலை வாழ் மக்கள், நரிக்குறவர்
ஆகியவர்களுக்கு 3 ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகள் கட்டிக்
கொடுக்கின்ற ஒரு திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள்
நிறைவேற்றுகின்ற ஒரு முனைப்பான பணி இன்றைக்கு இருந்து
கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினுடைய அடிப்படையில்



1986 ஏப்ரல் 19] [திரு. எப். எம். இராசரத்தினம்]

பிற்பட்ட வகுப்பினரும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும்
ஒரு சிறப்பான பயனை அடைவார்கள் என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

இன்றைக்கு இன்னொரு பிரச்சினையை எடுத்துக் கொண்
டால் மாணவர்கள் ஆரம்ப பாடசாலையை முடித்துவிட்டு
நடுநிலை பள்ளிக்கோ, மேல் நிலைப் பள்ளிக்கோ, கல்
லூரிக்கோ அல்லது வேலை வாய்ப்பை தேடி செல்கிறபோது
பிற்பட்டவர் என்பதற்கான சான்றிதழ் தேவைப்படுகிறது.
அல்லது தாழ்த்தப்பட்டவர் என்று சொல்லக்கூடிய அந்த
சான்றிதழ் தேவைப்படுகிறது. அவர்கள் எந்த வகுப்பைச்
சேர்ந்தவர்கள் என்று சொல்லக்கூடிய அந்த சான்றிதழ்
தேவைப்படுகிறது. அதை தரவேண்டியவர் வட்டாட்சியர்
ஆவார். அந்த வட்டாட்சியர் தரவேண்டும் என்று சொன்
னால் முதலில் அந்த வட்டார அலுவலகத்தைச் சேர்ந்த
வருவாய் அதிகாரி பரிந்துரை செய்யவேண்டும். பிறகு
கிராம அதிகாரி பரிந்துரை செய்ய வேண்டும். இப்படி
வட்டார அதிகாரியும், கிராம அதிகாரியும் பரிந்துரை
செய்த பின்னால் வட்டாட்சியர் அந்த பிற்பட்டவர் வகுப்பு
சான்றிதழை அல்லது தாழ்த்தப்பட்டவர் வகுப்பைச் சேர்ந்த
வர் என்ற அந்த சான்றிதழை தருகின்ற சூழ்நிலை இன்றைக்கு
இருக்கிறது. இதன் மூலமாக லஞ்சம் ஊழல், காலதாமதம்
நடைபெறுகிற ஒரு வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்
தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவே
இதை நீக்க வேண்டும் என்பதற்கு பள்ளிக்கூடங்களில் அந்த
மாணவனை சேர்க்கிறபோது இந்த வகுப்பைச் சேர்ந்தவர்,
இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று போட்டு சேர்க்கி
றோமோ அந்த சான்றிதழை வைத்து தானே அந்த பள்ளி
யின் தலைமை ஆசிரியர் கொடுக்கின்ற அந்த சான்றிதழை
வைத்து அவர்கள் மேல்நிலைப் பள்ளி அல்லது உயர்நிலைப்
பள்ளி அல்லது வேலை வாய்ப்பைப் பெறுவதற்கான வாய்ப்பை
ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கி
றேன். இதை நான் ஒரு கோரிக்கையாக வைக்க கடமைப்பட்டி
ருக்கிறேன்.

அதிலும் என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில்,
ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பலர் கிருத்துவர்க
ளாக இருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு பிற்பட்டவர்
களாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த முறையில்
திருநெல்வேலி மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்தி
லும் இப்படி இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள்
ஆதி திராவிடர்களாகத் தான் உறவு முறையில் இருந்து
கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அவர்கள் பிற்
பட்டவர்களாக இருக்கிறார்கள். காரணம் அவர்கள் கிருத்
துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் அந்த

அடிப்படையில் அவர்கள் பிற்பட்டவர்களாக கருதப்படுகிறார்கள். எனவே ஆதி திராவிடர்கள் அனைவரையும் அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இன்றைக்கு மீன் வளத் துறையை எடுத்துக்கொண்டால், 441.6 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வரவேற்கிறேன். கடலில் மீன் பிடிப்பது அபாயகரமான தொழில்; அந்த ஆபத்தை அவர்கள் செய்கிறார்கள் என்பதை உணர்ந்து அந்த ஆபத்தை செய்கிற அந்த மீனவர்கள் கடல் அலையில் சவாரி செய்கிற போது அவன் இயற்கையோடு மோதுகிற சூழ்நிலையில் அவன் உயிர் இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அந்த குடும்பத்தை பாதுகாக்க வேண்டும் என்பதற்கும், அந்த குடும்பத்தில் இருக்கிறவர்களுடைய துன்பத்தை தீர்க்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு 15 ஆயிரம் ரூபாய் வழங்குகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த அரசு மீனவர்களுக்கு என்ன செய்திருக்கிறது என்று கேட்கிறவர்களும் இந்த நாட்டில் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

சாதாரணமாக ஒரு மீனவன் இன்றைக்கு கட்டுமரத்தில் வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கிறான். அவன் வாழ்க்கை உயரவேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு பொறுப்புக்கு வந்ததற்கு பின்னால் கட்டுமரங்களுக்கு இயந்திரங்களை பொருத்துகிற முறையை விரைவாக விரிவாக செய்து வருகிறார் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மீனவ விதவை தாய்மார்களுக்கு வாழ்க்கை தரவேண்டும் என்ற விதத்தில் அவர்கள் வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்ற வகையில் தரகு அடிப்படையில் மீன் அங்காடிகள் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆணை பிறப்பித்து இருக்கிற ஒரு சூழ்நிலையை பார்க்கிறபோது இந்த அரசையும் இந்த அரசை நடத்துகிற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களையும் பாராட்டுவது என்னுடைய தலையாய கடமையாகும்.

இன்றைக்கு சென்னை முதல் கன்னியாகுமரி வரையில் ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் கடற்கரைப் பகுதியில் இன்றைக்கு வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகை குறைவாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்வது [illegible] என்னுடைய [illegible] என்று





கருதுகிறேன். ஏற்கனவே கட்டிய வீடுகள் எப்போது விழுமோ என்ற நிலையில் இருக்கின்றன. ஒரு காலத்தில் யாரோ கட்டியது நம்முடைய ஆட்சியில் அல்ல. நமது ஆட்சி வருவதற்கு முன்னால் கட்டிய வீடுகள் எல்லாம் எப்போது விழுமோ என்ற அபாய நிலையில் இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் அல்ல பல்வேறு பகுதியில் இருக்கிறது. என்னுடைய பகுதியில் உள்ள பெரியவிளைத்துறையில் இப்படி இருந்துகொண்டிருக்கிறது. அதை நான் சென்று பார்த்துவிட்டு வந்தேன். எனவே இன்றைக்கு இந்த அரசைப் பொறுத்தவரையில் தற்போது வீடுகள் கட்டுவதற்கு ஒவ்வொரு வீட்டுக்கும் 16 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி அந்த புதிய வடிவமைப்போடு எந்த முறையில் கட்டப்பட வேண்டும் என்ற முறையில் ஆணை பிறப்பித்து இருக்கிறது. அந்த நல்ல சூழ்நிலையை நான் இதயபூர்வமாக பாராட்டுகிறேன். இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. மேலும் குமரி மாவட்டத்தில் கணிசமான அளவு மீனவர்களும் இருந்து வருகிறார்கள். தமிழக மீன் உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் உற்பத்திச் செய்யப்படுகிறது என்ற தகவல்கள் என்னிடம் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு மீனவர் குடும்பங்களுடைய நிலைகளை எண்ணிப் பார்க்கின்றபோது, 2,500 குடும்பங்கள் வீடுகள் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் 2,500 குடும்பங்களும் இன்றைக்கு குடிசைகளில் வாழ்ந்துவருகின்ற சூழ்நிலையைப் பார்க்கும்போது, அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கிற சிறப்பான திட்டத்தை உருவாக்கவேண்டுமென்று தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் வாணியக்குடி என்ற பகுதியில் 100 வீடுகள் தீப்பிடித்து எரிந்து, அந்த 100 வீடுகளும் சேதமடைந்து போனது. அதற்குப் பிறகு 21 வீடுகள் தான் இன்றைக்கு கட்டிமுடிக்கப்பட்டிருக்கிறது என்கிற தகவல் எனக்கு வந்திருக்கிறது. ஏறத்தாழ 79 வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது என்பதை எண்ணிப்பார்த்து அந்தப் பணிகளை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்களுடைய பிரிவை எடுத்துப் பார்க்கிறபோது, பரவர், முக்கவர் என்ற பிரிவுகள் இருக்கின்றன. ஆனால் அவர்கள் செய்கின்ற தொழிலை எடுத்துக்கொண்டால், இரண்டு பேரும் ஒரே தொழிலைத்தான் செய்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் ஒருவருக்கொருவர் உறவினர்களாகவும் இருந்துவருகிறார்கள். செய்யும் தொழிலும் ஒன்று, அவர்களுக்குள்ளே உறவினர்களாகவும் இருந்துகொண்டு பரவர், முக்கவர் என்று பிரித்து வைக்கப்பட்டபடி, பரவர் என்று சொல்லக் கூடியவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாகவும்,

முக்கவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட நிலையில் இருந்துவருகிற ஒரு சூழ்நிலையையும் நாங்கள் பார்க்கிறோம். எனவே இன்றைக்கு வாழ்க்கையிலே நலிந்து கிடக்கின்ற சமுதாயத்தில் இருக்கின்ற, கல்வி அறிவாற்றலிலே மிகவும் கீழ்த்தரப்பிலே இருக்கின்ற அந்த மீனவர் சமுதாயத்தை, பரவர், முக்கவர் என்று பார்க்காமல் அவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கொள்கையாக வைக்க விரும்புகிறேன்.

மேலும் மீனவர் பெண்மணிகள் எல்லாம் இன்றைக்கு எந்த வேலையும் இல்லாமல், எந்த வேலையையும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலையில் இருந்து வருகிறார்கள். இன்றைக்குப் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு, அந்த மீனவப் பெண்களுக்கு, சங்கு, சிப்பி, கடல்பாசி போன்ற பொருள்களிலிருந்து அழகான சாதனங்களைச் செய்து, கைத்தொழில்களின் மூலம், வெளிநாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்யக் கூடிய வகையில் அந்நியச் செலவாணிகளை உருவாக்குகின்ற சூழ்நிலையினை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லி கோடிமுனைப் பகுதியில், வாணியக்குடி பகுதியில் ஒரு மீன்பிடித் துறைமுகம் தேவை என்பதால் அதை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் இணைப்புச் சாலைகள் இல்லாத ஒரு குறை இருந்துவருகிறது. முட்டம், பிள்ளைத் தோப்பு இணைப்பு, மேல மணல்குடி, கீழ மணல்குடி போன்ற இடங்களில் இணைப்புச் சாலைகள் இல்லை. இன்றைக்கு கடற்கரைக் கிராமங்களில் இணைப்புச் சாலைகள் இல்லை. குளச்சல், சைமன் காலனி இணைப்புப் பாலம் கட்டுவதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பித்து, இன்னமும் அந்தப் பாலம் கட்டிமுடியாமல் இன்றைக்கும் இருந்துவருகிறது. இணைப்புப் பாலங்கள் தேவை என்று சொல்லி அதே நேரம் இன்றைக்கு மீனவர்கள் மீன்களைக் கொண்டு வருவதற்கு, பயணிகள் செல்கின்ற பேருந்துகளை அதிகமாக அவர்கள் பயன்படுத்துகின்ற நேரத்தில், மீனவர்கட்கு அது இடையூறாக இருக்கிறது. மீனவர்கள் மீன்களை நகர்ப் பகுதிகளுக்கும், மற்றும் வேறு பகுதிகளுக்கும் சென்று வியாபாரம் செய்வதற்காக தனிப் பேருந்து வசதி செய்து தரவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும், மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ரூ. 90 வசூல் செய்து, அதற்குக் கூடுதலாக சம பங்கு ரூ. 90ஐ போட்டு. 3 மாத காலம் அவர்கள் தொழில் இல்லாமல் இருக்கி ற நேரத்தில் கொடுக்கின்ற திட்டத்தை நாம் கொண்டுவந்திருக்கிறோம். ஆனால் இப்படி அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், சரிவர அந்தப் பணம் மீனவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பது ஒரு குறையாக இருந்து [illegible]



மேலும் அரிசி, மண்ணெண்ணெய், பாமாயில், சர்க்கரை போன்ற விநியோகங்களை செயல்படுத்துகின்ற கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக செயல்படவில்லை, காரணம் இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிறவர்கள் நம்முடைய ஆட்சிக்கு எதிரானவர்கள்., கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களாகவும், நிர்வாகிகளாகவும், பரவலாக இருந்துவருகிறார்கள். எனவே மீனவர்களுடைய கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிற அமைப்பை உடனடியாகக் கலைக்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இந்த அரசிடம் வைத்து, அதைக் கலைத்துவிட்டு, அரசு ஆலோசனைக் குழுவைப் போடவேண்டுமென்ற யோசனையை இந்த நேரத்தில் கூறி, இன்றைக்கு மீன் வளத்துறையிலே நல்ல காரியங்களை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் செய்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அதைப்போல இன்றைக்கு ஜப்பானில் ஒரு செயற்கை முத்து தயாரிக்கின்ற சூழ்நிலைகளை உருவாக்கியிருப்பதாக பலதரப்பட்ட தகவல்களை, செய்திகளை நாம் பார்த்துவருகிறோம்.

அதைப்போல நம்முடைய தமிழ் நாட்டிலிருந்து செயற்கை முத்துக்களைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற காரியத்தைச் செய்ய வேண்டும். ஜப்பானிலே பெண்கள் முத்துக் குளிக்கிற சூழ்நிலை இருந்து வருகிறது. முத்துக் குளிப்பதற்குப் பயிற்சி கொடுக்கப் பல கட்டங்களிலே அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். பிற்பட்டோர் நலத் துறைக்காக அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற கோரிக்கையையும், மீனளத் துறைக்காக அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற கோரிக்கையையும் ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ப. பொன்னுரங்கம்: துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர் திட்டத்தையே தவறாகச் சொல்கிறார். இறந்தால் 15 ஆயிரம் ரூபாய் என்பது ஸ்டேட் ஸ்கீம் அல்ல, இன்ஷ்யூரன்ஸ் திட்டம் அது, மத்திய சர்க்கார் பாதியும், நாம் பாதியும் போட்டு தருவது அது. மந்திரிக்குத் தெரியும். ஆகவே தவறாகச் சொல்லக்கூடாது. உறுப்பினர் பார்லிமெண்டிலே சொல்லவேண்டிய கோரிக்கையெல்லாம் இங்கே வைத்திருக்கிறார். நான் ஏற்கனவே இந்த மன்றத்திலே குறிப்பாகவும் சிறப்பாகவும் மீனளத்தைப்பற்றிப் பேசியபோது அடிக்கடிச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு கொஞ்சம் பேக்வர்ட் கிளாஸ் பற்றிப் பேசலாம் என்று நினைத்தேன், நேரம் இல்லை, ஆகவே இதைப்பற்றிப் பேசுகிறேன்.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1986 ஏப்ரல் 19

அட்மினிஸ்டிரேட்டிவ் எக்ஸ்பெண்டிச்சர் அதிகம் அதிகம் என்று நான் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறேன். அதை பெர்பார்மன்ஸ் பட்ஜெட்டிலே விவரமாகக் காட்டியிருக்கிறார்கள். அதிகாரிகள் அதைப் பார்த்தால் போதாது. அமைச்சர் கொஞ்சம் அதை பார்க்க வேண்டும். Salaries, wages, office expenses, payment for professional special services, rates and taxes, advertisements etc. என்று போட்டு இவ்வளவும் மானியத்திலே கிட்டத்தட்ட 60 அல்லது 65 சதவீதம் எடுத்துவிடுகிறீர்கள். மற்றது எல்லாம் எங்கே போகிறது என்பதை நான் அடுத்துச் சொல்கிறேன்.

5 லட்சம் மீனவர்கள் இருக்கிறார்கள் என்று பாலிசி நோட்டிலே சொல்லியிருக்கிறார்கள். அதிலே 1 லட்சம் மீனவர்கள் தான் உண்மையான மீன்பிடிக்கும் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். என்று சொல்லியிருக்கிறீர்கள். கூட்டுறவு சொசைடி மூலமாக அவர்களுக்கு வலை கொடுக்கப்போகிறோம் என்று சொல்கிறீர்கள். இந்த ஆண்டு அதற்காக 8 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஒரு லட்சம் மீனவர்களுக்கு 8 லட்ச ரூபாய் என்றால் ஒரு மீனவனுக்கு 8 ரூபாயா? 8 ரூபாயிலே என்ன வலை வாங்க முடியும்! ஒரு ஸ்கீம் போட்டால் பிராப்பராக இருக்க வேண்டாமா? உண்மையிலேயே அது நடைமுறைப் படுத்தப்படுகிறதா என்று பார்த்தால் அதிலே வேறு எனக்குச் சந்தேகம். மாநில சர்க்கார் "Administrative Report of the Co-operative Societies for the year ended 30-6-1981" என்று இந்த ஆண்டு கொடுத்திருக்கிறீர்கள். அதிலே என்ன சொல்கிறீர்கள் என்றால். "Loans given by the Co-operative Societies. கூட்டுறவு சொசைடிகளிலே கொடுப்பது "Loans issued from the year 1956-57 to both Inland and Marine Fishermen, till 1978-79 is Rs. 73.44 lakhs. ஒதுக்கியதோ சொற்பம். 1956-லிருந்து 1979 வரைக்கும் மொத்தம் கொடுத்தது 73 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய். எந்த சர்க்காராக இருந்தாலும் கவலைப் படவில்லை. காங்கிரஸ் சர்க்காராக இருக்கட்டும், மூதலைய சர்க்காராக இருக்கட்டும், இந்த சர்க்காராக இருக்கட்டும் கொடுத்தார்கள். அதிலே என்ன ஆயிற்று என்றால் "From the Co-operative Societies a sum of Rs. 60.03 lakhs has been recovered so far. There is a balance of Rs. 13.41 lakhs, as outstanding as on 31-3-1982. அதிலே பீனல் இன்டரஸ்ட் என்றெல்லாம் சொல்கிறீர்கள். எப்போது என்றால் From 1956-57 to 1979. எதுவரைக்கும்? மீண்டும் 1979-லிருந்து தொடர்கிறீர்களா என்று பார்த்தால் அதுதான் இல்லை. சொசைடி மூலமாகக் கடன் கொடுப்பதே தொடரவில்லையென்றால் புதிதாகக் கடன் கொடுப்போம் என்று சொல்வதை எப்படி நம்பமுடியும்? அதே ரிப்போர்டிலே லாஸ்ட் பேஜிலே "....There is balance of Rs. 7.54 lakhs under interest and Rs. 3.95 lakhs under penal interest pending recovery. As the issue of the above loan did not yield the desired result...." என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. மீனவர்கள் கூட்டுறவுச்



1986 ஏப்ரல் 19] [திரு. ப. பொன்னுரங்கம்]

சங்கங்கள் அது இன்லண்ட் பிஷர்மேன் ஆக இருந்தாலும் சரி
ஓ ஷோர் பிஷர்மேன் ஆக இருந்தாலும் சரி "..did not yield
the desired result" என்றால் விரும்பிய பயன் கிடைக்கவில்லை
என்று சொல்கிறீர்கள். எப்போது நிறுத்துகிறீர்கள். "The
government stopped the issue of these loans from the year 1979-80."
லோன் கொடுப்பதையே நிறுத்தி விட்டீர்கள். 1979 ஆம்
ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டு வரைக்கும் கொடுக்கவில்லை.
இப்பொழுது கொடுப்பதாகச் சொல்கிறீர்கள். விரும்பும் பல
னைத் தரவில்லை என்று சொல்கிறார்கள். அது என்ன விரும்பும்
பலன் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்ல வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்க ரிப்போர்ட்டிலேயே
இப்படிச் சொல்லப்படுகிறது. இப்படி, மீனவ சமுதாயத்தில்
இருப்பவர்களுக்கு கொஞ்ச நஞ்சம் உதவும் அமைப்புகளின் மூலம்
கிடைக்கும் கடன்கள்கூட 1979 ஆம் ஆண்டிலிருந்து இதுநாள்
வரை நிறுத்தப்பட்டிருக்கிறது என்று அரசு ரிப்போர்ட்டே சொல்
கிறது. கூட்டுறவு சொசைட்டி ரிப்போர்ட் சொல்கிறது.

அதுமட்டுமல்லாமல் இன்னொன்றையும் சொல்ல வேண்டும்.
தமிழ் நாட்டிலேயே தூத்துக்குடியிலே ஒரேயொரு காலேஜ்
தான் இருக்கிறது. பிஷர்மென் டிரெயினிங்கிற்காக இருக்கின்ற
மீன் வளக் கல்லூரி இருக்கிறது.. அதற்காக 35 இலட்சம்
ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு கோர்ஸில்
80 பேர்களும், இன்னொரு கோர்ஸில் 20 பேர்களும் ஆக
மொத்தம் 100 பேர்களுக்கு ஒதுக்கப்படும் தொகை 35 இலட்சம்
ரூபாய். கிட்டத்தட்ட ஒரு மாணவனுக்கு 3,000 ரூபாய்.
சரி, செய்கிறீர்கள். இதனால் மீனவர்களுக்கு ஏதாவது பலன்
உண்டா? அதில் பயிற்சி பெற்று வருகிறவர்களுக்கு மீன் வளத்
துறையில் வேலைவாய்ப்பு கிடைக்கிறதா? போராட்டம் நடக்
கிறது, போராட்டம் நடத்தி, கோரிக்கைகள் வைத்து, அதிகாரி
களைப் பார்த்து, அந்தக் கல்லூரி நடக்கிறதா என்றால் இல்லை.
28-11-1985 லிருந்து மூடுவிழா நடத்திவிட்டு, 35 இலட்சம்
ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள். இது முறை அல்ல, சரியல்ல
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பிரமாதமாகப் புள்ளிவிவரங்களைத் தரு
கிறீர்கள். சென்ற ஆண்டு பாலிசி நோட்டிலே சொன்னீர்கள்
பி. டபிள்யூ. டி. யிலே, வீடு கட்டுகின்ற வாரியத்திலே கட்டிக்
கொண்டு வருகிறோம். இப்பொழுது அப்படி இல்லை, மீன்
இலாக்காவே எடுத்துக்கொண்டு கட்டித் தரும் என்று போன
ஆண்டு அறிவித்தீர்கள். ஆனால் எவ்வளவு கட்டியிருக்கிறீர்கள்
என்றால் 733 வீடுகளைத்தான் கட்டியிருக்கிறீர்கள். போன
ஆண்டிற்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். நம்
முடைய பட்ஜெட்டோ 3,000 கோடி ரூபாய். ஆனால் எங்கள்
தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் 540 கோடி ரூபாய்தான்

[திரு. ப. பொன்னுரங்கம்] [1986 ஏப்ரல் 19

எஸ்டிமேட். அப்பொழுது மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்டது 100
இலட்சம் ரூபாய், அதாவது ஒரு கோடி ரூபாய். எமெர்ஜென்சி
காலத்தில், 1976 இல் மீனவர்களுக்காக வீடு கட்ட ஒதுக்கப்
பட்ட தொகை 100 இலட்சம், அதாவது 1 கோடி ரூபாய்.
ஆனால் என்ன காரணத்தாலோ தெரியவில்லை, அதைவிட
ஆறேழு மடங்காக பட்ஜெட் எஸ்டிமேட் இருக்கின்ற பொழுது,
இப்பொழுது நீங்கள் அதை 100 இலட்சத்தை 50 இலட்சமாகக்
குறைத்திருக்கிறீர்கள். ஒருவேளை அமைச்சரும், அதிகாரிகளும்
இப்படி எண்ணுகிறார்களோ என்னவோ தெரியவில்லை,
அதாவது 1974, 1975 ஆம் ஆண்டுகளில் இருந்த விலைவாசியை
விட ஆறில் ஒரு பங்கு இப்பொழுது குறைந்து விட்டது, ஆகவே,
இதையும் குறைக்கலாம், வீடுகள் இந்த அளவிலேயே வந்துவிடும்
என்ற எண்ணத்திலோ என்னவோ தெரியவில்லை, இந்தத்
தொகையைப் பாதியாகக் குறைத்திருக்கிறார்கள்.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பின
ரவர்கள் பேசுகையில், அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் என்று
சொன்னார். அதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப் பார்த்து
விட்டு தேவையானால் நீக்கி விடுவோம்.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவரவர்களே,
I am not accusing விலைவாசி குறைந்து விட்டது என்று
அமைச்சரும் அதிகாரிகளும் நினைக்கிறார்களோ என்னவோ
தெரியவில்லை என்றுதான் சொன்னேன். இதில் என்ன தப்பு
இருக்கிறது? ஆகவே, வீடு கட்டும் திட்டம் இப்படித்தான்
இருக்கிறது. இந்த ஆண்டு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்
கிறீர்கள். Price rises 9,000-த்தை 16,000 ஆக ஆக்கி
யிருக்கிறோம் என்று கடந்த ஆண்டு சொல்லியிருக்கிறீர்கள்.
16,000 ரூபாய் என்றால், நான் போட்டக் கணக்குப்படி 312
வீடுகளைத்தான் கட்ட முடியும். இந்த 50 இலட்சம் ரூபாயிலே
போன வருஷம் திடுதிடுப்பென்று 733 வீடுகள் கட்டப்பட்டன
என்று சொல்கிறீர்கள். இது உண்மையாக இருக்குமா? வீடு
கட்டுவதைப்பற்றிக் கூட பிரதானமாக நினைக்கவில்லை. எனக்கு
முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள், இடிந்து விழுகின்ற
நிலையில் வீடுகள் இருக்கின்றன என்று. எந்த வீடாக இருந்
தாலும், எந்தக் கட்டிடமாக இருந்தாலும், பராமரிப்பு.......

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடிந்து விழும் நிலையில்
உள்ள வீடுகள் அத்தனையும் டாக்டர் கலைஞர் ஆட்சிக்
காலத்திலே கட்டப்பட்ட வீடுகள்.



1986 ஏப்ரல் 19]

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் என்னை ரொம்ப வம்புக்கு இழுக்கிறார்.
உங்கள் ஆட்சிக் காலத்திலே, என் தொகுதியிலே கட்டப்பட்
டிருக்கிற வீடுகள் கூட இடிந்து போயிருக்கின்றன. குடிசை
மாற்று வாரியத்தாலே கட்டப்பட்ட வீடுகள். உங்கள் ஆட்சிக்
காலத்திலே கட்டப்பட்டவை. அது மட்டுமல்ல, பவர்குப்பம்
என்ற பகுதியில் மீனவர்களுக்குக் கட்டப்பட்டதைப் போய்
பாருங்கள், நாற்றம் அடித்துக் கொண்டிருக்கிறது. அவ்வளவு
மோசமாக அந்த வீடுகள் இருக்கின்றன.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை ஏன் சொல்
கிறேன் என்றால், யார் எந்தக் காலத்தில் கட்டினாலும்,
பராமரிப்பு இல்லாவிட்டால் அது முறையாக இருக்காது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர்
அவர்களே, பராமரிப்புத் தேவை என்பதை ஏற்றுக் கொள்கி
றோம். ஆனால் கட்டுகின்ற முறையிலே தவறு இருந்தாலும்
இடிந்து விழும்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, கான்ட்ராக்டர்கள் கட்டுகிற வீடுகள் எப்படியிருக்
கின்றன என்று தெரியும். இங்கே கூட பிரிட்ஜ் கட்டினார்கள்,
என்னவாயிற்று? உப்புக் காற்றுப் பட்டு இற்றுவிடும். என் வீடு
கூட காங்கிரீட் வீடுதான். ஆனால், உப்பங்காற்றிலே இருக்கிற
காரணத்தாலே, இற்றுப் போகிறது. அடிக்கடி பராமரிக்கிற
காரணத்தாலே, உருப்படியாக இருக்கிறது. ஆகவே, உருப்
படியாக இருக்க வேண்டுமானால், பராமரிப்பு தேவை. இந்த
10 ஆண்டுகளாகப் பாராமரிப்பு இல்லை. நான் உதாரணத்
திற்கு ஒன்று சொல்கிறேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு
பதம் என்பதுபோல், திருக்கழுக்குன்றத்திலே சத்ராஸ் என்ற
ஒரு பகுதி இருக்கிறது. அங்கே ஒரு மூதாட்டி — விதவை
என்னிடத்திலே வந்து, அழுதாள். ஐயா, அந்தக் காலத்தில்
கட்டினார்கள். அதிலேயிருந்து 10 ஆண்டுக்காலம் யாருமே
எட்டிப் பார்க்கவில்லை, ரிப்பேரும் செய்யவில்லை, எந்த நேரத்
திலே விழுமோ என்று சந்தேகமாக இருக்கிறது என்று சொன்
னாள். உப்பங்காற்றில் கட்டுவது என்றால், ஸ்பெஷலிஸ்ட்
போட்டு கட்டினால்தான் சரியாக இருக்கும். கான்ட்ராக்டரிடம்
விட்டால் என்ன கதியாகிறது என்று பார்க்கிறோம் அல்லவா?
ஆகவே, பராமரிப்பு தேவை. மீனவர் பகுதியிலே பராமரிப்பு
வேலை முறையாக நடைபெறவில்லையென்பதைத்தான் நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, பயிற்சியாளர்களுக்கு ஸ்டைபன்ட் கொடுக்கிறார்
கள். ஆளுங்கட்சியில் கூட சிலபேர்கள் சொன்னார்கள். ரூ. 75
கொடுக்கப்போவதை, ரூ. 125 ஆக்குகிறோம் என்று கூட

சொல்லவில்லை, It is being considered பரிசீலிக்கப்படுகிறது
என்று சொல்கிறார்கள். எப்படிப் பரிசீலிக்கப்படுகிறது? வெளி
மாநிலத்தில் ரூ. 125 கொடுக்கிற காரணத்தால் என்று சொல்
கிறார்கள். அவர்கள் ஏற்கனவே கொடுத்துக் கொண்டிருக்கிறார்
கள். இங்கேயோ கொடுப்பதற்கே பரிசீலிக்கிறோம் என்று
சொல்கிறார்கள். ஆகவே, இது போன்ற முறைகேடான திட்டங்
கள் செயல்கள் நடைபெறுகின்றன.

மேலும் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஏதோ
ஒரு மானியம் கொடுப்பதுபோல், ரூ. 10,000 கட்டி, ரூ. 12,000
மதிப்புள்ள மெஷனரி வாங்கி கட்டு மரங்கள் கட்டவேண்டுமாம்.
இயந்திரம் வேண்டும் என்றால் அவன் எங்கே போவான்? ஒரு
கட்டுமரத் தொழிலாளி, பணத்திற்கு எங்கே போவான்?
அவன் விசைப்படகு மீனவன் அல்ல, கட்டு மர மீனவன்
எங்கே போவான்? அது ஒரு திட்டமா? ரூ. 10,000 கட்டி,
ரூ. 12,500 ஒரு மெஷின் வாங்கி அவன் கட்டுமரத்தை வைத்துக்
கட்டிக் கொள்வான். அது ஒரு திட்டமா? ஆகவே, அந்தத்
திட்டத்தை விபரைஸ் செய்ய வேண்டும்.

அடுத்து ஒரு புரட்சிகரமான திட்டம். அது என்ன திட்டம்
தெரியுமா? மீனவ சமுதாயத்திலே இருக்கின்றவர்கள்,
எஸ்.எஸ்.எல் சி. பாஸ் செய்து, முதல் மார்க் எடுக்கின்ற ஒரு
ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும்—தமிழ் நாடு முழுவதுமாக. ஒரு
ஆணுக்கும் பெண்ணுக்கும்—ரூ. 500 பரிசு அளிக்கப்படும் என்று
அறிவித்துள்ளார்கள். பிளஸ் 2-ல் ஆணுக்கும் பெண்ணுக்கும்
முதல் மார்க் எடுப்பவர்களுக்கு ரூ. 1,000. ஆக, ரூ. 3,000
வருஷத்திற்கு ஒதுக்குவது ஒரு திட்டமா? தினத்தந்தியே மேல்
ஆயிற்றே. அவர்கள் ஒருவருக்கு ரூ. 2,000 அல்லவா கொடுக்
கிறார்கள். தினத்தந்தியை விட மோசமாக அல்லவா இந்தத்
திட்டம் இருக்கிறது? தினத்தந்தி செய்கிற காரியத்தைக் கூட
செய்யாத இலாகாவாக இந்த இலாகா இருப்பதற்காக நான்
மெத்த வருத்தப்படுகிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, அது மட்டுமல்ல, கடலரிப்பு
தமிழகம் முழுவதும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அமைச்ச
ருக்குக்கூட அது தெரியும். பல கட்டிடங்கள் பாழாகிக் கொண்
டிருக்கின்றன. நாம் சாயில் டெஸ்ட்டுக்கு அனுப்புகிறோம்.
எக்ஸ்பெர்ட் குழு அனுப்புகிறோம் என்று தான் சொல்கிறார்
கள். அண்மையில் எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. என். வி. என்.
சோமு ஒரு கேள்வியை எழுப்பினார்கள். அவர் வட சென்னை
யின் பிரதிநிதியாக இருக்கிற காரணத்தால், வட சென்னை பகுதி
யிலே இருக்கிற மீனவர்கள் கடல் அரிப்பால் பெரு
வாரியாகப் பாதிக்கப்படுகிறார்கள், பல கட்டிடங்கள் அழிந்துக்
கொண்டிருக்கின்றன, தடுப்பு நடவடிக்கைகள் உடனடியாக
எடுக்கப்பட வேண்டும், அரசு அதற்கு முன் வர வேண்டுமென்று
பாராளுமன்றத்திலே கேட்டிருக்கிறார்.



அதற்கு மக்வானா பதில் அளித்தார். இதற்கு என்று இருக்கிற
பிரிவுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. எங்கெங்கே கடல்
அரிப்பு ஏற்பட்டு வருகின்றதோ அங்கே எல்லாம் தேவையான
நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கேரளாவில் கடல் அரிப்பு
ஏற்பட்டபோது சுவர் கட்டி, தடுப்புப்பணி ஆற்றினோம் என்று
சொன்னார்கள். தமிழ்நாட்டில் தடுப்புப் பணி செய்தீர்களா
என்பது கேள்வி. அதற்கு பதில் சொல்கிறார். தமிழ்நாடு அரசு
விவரமான மகஜரை மத்திய அரசுக்கு அனுப்பினால்—அனுப்ப
வில்லை—நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்
கள். ஆக, இந்தக் காரியத்தைக்கூட செய்ய நீங்கள் முன்வர
வில்லைஎன்றால் மீனவர்களை எப்படி பாதுகாக்கப்போகிறீர்கள்?
இருக்கிற இடமும் கடலால் அரிக்கப்படுகிறது, குடியிருப்பும்
இல்லை, வீடும் இல்லை, இடமும் இல்லை. அதைப் பார்த்துக்
கொண்டு இருக்கிற இப்படிப்பட்ட ஒரு இலாக்கா தேவைதானா?

இங்கே ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார்
கள். என்ன சட்டம்? திருச்செந்தூர் இடைத்தேர்தல் வந்த
போது கொண்டு வரப்பட்ட சட்டம் அது. 3 நாட்டிக்கல் மைல்
களுக்கு அப்பால்தான் விசைப் படகுக்காரர்கள் மீன்பிடிக்க
வேண்டுமென்பது அந்தச் சட்டம். அப்போதே நான் கேட்டேன்.
திருச்செந்தூரில் இருக்கிற கட்டுமரக்காரர்களின் ஓட்டுகளை
வாங்குவதற்கா இந்தச் சட்டம் என்று இந்தத் துறைக்கு பொறுப்பு
வகித்துவந்த தாவலர் அவர்களிடம் கேட்டேன். சட்டத்தை
இயற்றி என்ன பயன்? அதை நடைமுறைப்படுத்த வேண்டாமா?

இன்றைக்கு கடலோரத்தில் இருக்கிற குப்பங்களுக்குச் சென்று
பார்த்தால் ஒவ்வொரு குடும்பமும் இரத்தக் கண்ணீர் வடித்துக்
கொண்டிருக்கிறது. எங்களால் தொழில் நடத்த முடியவில்லை
என்று சொல்கிறார்கள். நீங்கள் இருந்து என்ன பயன்? எங்கள்
நிலையைப் பார்த்தீர்களா என்று கேட்கிறார்கள். 24 மணி
நேரமும் விசைப் படகுக்காரர்கள் தொந்தரவு கொடுத்துக்
கொண்டிருக்கிறார்கள், இதற்கு ஒரு ஏற்பாடு செய்யக்கூடாதா
என்று கேட்கிறார்கள். சட்டம் இருக்கிறது, அதை ஏன் நடை
முறைப்படுத்தவில்லை? ஆக, இப்படி எந்தக் காரியத்தையும்
இந்த இலாகா செய்யாமல் இருக்கிறது. உருப்படியான ஒரு
காரியத்தைக்கூட செய்யவில்லை. உருப்படியான ஒரு காரியமும்
செய்யாமல் இருக்கிற இலாகா இந்த மீனள இலாகாதான். நான்
அமைச்சரை குறை சொல்லமாட்டேன். இலாகாவைத்தான்
சொல்கிறேன். இப்படிப்பட்ட நிலையில் இந்த இலாகா இருப்
பதைவிட இல்லாமல் இருப்பதே நல்லது. இந்த இலாகாவினால்
மீனவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணுகோபால் பேசும்போது
ஒரு அரசு விழாவுக்கு என்னை அழைக்கவில்லை என்று சொன்
னார். என்னை மட்டுமல்ல, அவரையும் அழைக்கவில்லை,

[திரு. ப. பொன்னுரங்கம்] [1986 ஏப்ரல் 19

15,000 ரூபாய் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. ஆனால் அந்தப் பகுதி எம்.எல்.ஏ., அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. அந்த விழா விற்கு அழைக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : துணைத் தலை வரவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அந்தத் தொகுதியிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருப்பவர். அவர்கள் இங்கே, இப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது, மக்கள் பாதிக்கப்பட் டிருக்கிறார்கள் அல்லது கடலிலே சென்றவர் இறந்துவிட்டார்; விபத்து பாதுகாப்பு நிதியிலிருந்து நிதி உதவி செய்யவேண்டு மென்று சொல்ல வேணடும். அவர்கள்தான் முயற்சி செய்து வாங்கிக் கொடுக்க வேண்டும். அவர்கள் இங்கே அலுவலகத்திற்கு வந்தால், பாதிக்கப்பட்டவர்களை அழைத்து வந்தால், இங்கே செக் இருக்கிறது, அவர்களுக்கு போட்டுக் கொடுக்கிறோம், ஆனால் விழாவுக்கு அழைக்கவில்லை என்றால், அழைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : என் தொகுதியில் நடந்த விழா அது. 3 அல்லது 4 வாரங்களுக்கு முன்னால்தான் நடந்தது. கூட்டுறவுச் சங்கம் மூலமாக 15,000 ரூபாய் வழங்கியிருக்கிறார் கள். ஆனால் அந்த விழா அரசு விழாதான். இருந்தாலும் தொகுதி எம்.எல்.ஏ. அழைக்கப்படவில்லை விழாவிற்கு. சட்ட மன்றக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறபோது தான் அந்த விழா நடைபெற்றது. அவையிலே அதுபற்றி எழுப்பி யிருக்கலாம். இப்படிப்பட்ட அற்பக் காரியங்களை எல்லாம் கேட்கக்கூடாது என்பதால் நான் இங்கே எழுப்பவில்லை. அரசு விழா எதுவாக இருந்தாலும் அந்த தொகுதி சட்டமன்ற உறுப் பினர்கள் கண்டிப்பாக அழைக்கப்பட வேண்டும்.

மேலும், இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தது மத்திய அரசு. இதிலே 50 சதவீதத்தை மத்திய சர்க்கார் கொடுக்கிறது. 50 சதவீதத்தை மாநில சர்க்கார் கொடுக்கிறது. ஆக, பாதி பணத்தை மாண்புமிகு இராஜீவ் காந்தி சர்க்கார் கொடுக்கிறது. அந்தக் கட்சி எம்.எல்.ஏ.-ஐ யாவது அழைத்திருக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவரவர் களே, அருமை அண்ணன் பொன்னுரங்கம் அவர்கள் மத்திய அரசுக்கு இவ்வளவு வக்காலத்து வாங்கி வாதிடுவதைப் பார்க்கும் போது வியப்பாக இருக்கிறது. நம்முடைய செயல்திட்டங்கள் பல மைய அரசின் உதவியோடு நடைபெறுகின்றன. மானியமாக பாதி தொகையை பெற்றுக்கொண்டுதான் பல திட்டங்களை நிறைவேற்றுகிறோம். அப்படி நிறைவேற்றுகின்றபோது மாநில அரசு மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றன என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதிலே மத்திய அரசு பங்கு எவ்வளவு



1986 ஏப்ரல் 19] [டாக்டர் கா. காளிமுத்து]

இருக்கிறது. எங்கே எல்லாம் இருக்கிறது என்று பார்க்க ஆரம் பித்தால், அதற்கெல்லாம் அவர்களை அழைக்க வேண்டுமென்று தேடிக்கொண்டிருக்க மு/.யாது. நம்முடைய பணமும் வரி என்ற பெயரால் அங்கே நிறைய போகிறது. ஆனாலும் அவர்கள் நடத்துகின்ற விழாக்களுக்கு நம்மை அழைப்பதில்லை. நம்மை அழைக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் சரியல்ல.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவர் அவர்களே, இது நாம் நிறைவேற்றுகின்ற திட்டம் இல்லை. பணம் எல்.ஐ.சி.-யிலிருந்து வருகிறது. நாம் நிறைவேற்றவில்லை. அவர் கள் கொடுப்பதை வாங்கிக் கொள்கிறோம் அவ்வளவுதான்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, எல்.ஐ.சி. யிலிருந்து லோன் பெற்றுதான் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுகிறோம். பணம் கேட்கிறோம், கொடுக் கிறார்கள். அதன் பிறகு அவர்களுடைய பிரதிநிதிகளைக் கூப்பிடவில்லை என்று சொல்வது சரியல்ல.

(பிற்பகல் 1—10)

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவர் அவர்களே, திட்டங்களை நிறைவேற்றுகிறோம் என்பது வேறு. ஆனால் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு பணப் பட்டுவாடா செய்யப்படுகிறது. அப்போது அந்தச் சமு தாயத்தைச் சேர்ந்த , அந்தப் பகுதியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-ஐ அழைக்கக்கூடாது என்பது உங்களுடைய கூற்றா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்களை அழைக்க வேண்டும் என்கிற கருத்திலே நான் மாறுபடவில்லை. ஆனால் மத்திய அரசினுடைய பங்கு இருக்கிறது அதற்காக அதைச் சேர்ந்தவர்களை எல்லாம் அழைத்தாக வேண்டும் என்று சொல்கிற அந்தக் கூற்று சரியாக வராது. அது மாநில உரிமையை விட்டுக்கொடுப்பதாக ஆகும். எனவே அது ஒத்து வராது.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவர் அவர்களே, அது காரணம் அல்ல. அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர், இன் னும் சொல்லப்போனால் அதே இடத்தில் குடியிருப்பவர், பக்கத்திலே இருக்கிறார். அங்கேயே நிகழ்ச்சியும் நடைபெறு கிறது. அவரை அழைக்காமல் புறக்கணிப்பது என்பது முறை தானா என்று நான் கேட்கிறேன். எனவே, அப்படிப்பட்ட செயல் கள் எல்லாம் இனிமேல் நடைபெறாத அளவுக்கு அமைச்சர் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1986 ஏப்ரல் 19

அடுத்து துப்பாக்கிச் சூட்டுக்கு நான் போக விரும்பவில்லை.
அதற்காக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தால் தள்ளிவிட்டு
மானியத்திலே பேசுங்கள் என்று சொல்கிறீர்கள். துப்பாக்கிச்
சூட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் தருவதாகச்
சொன்னீர்கள். அதற்காக ஒரு குழுவைப் போட்டீர்கள். எங்
களையும் அழைத்தீர்கள். நடுக்குப்பத்திலே போலீசாரின் அத்து
மீறிய செயல்களால் பலர் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு
நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதற்காகப் பேசப்பட்டது.
ஆனால் இதுபோன்ற காரியங்கள் எல்லாம் மாதக்கணக்கில் தள்ளி
போடப்படுகிறது. அதற்காக என்று அமைச்சர் திரு. கே.ஏ.கே.
அவர்கள் இருந்தார்கள். இப்போது அவர்கள் இல்லை. எனவே
யார் ரெப்ரசண்ட் பண்ணப் போகிறார்கள்? எனவே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் முன்வந்து நிறைவேற்ற வேண்டும்,—
விரைவில் நிறைவேற்ற வேண்டும்—பாதிக்கப்பட்டவர்களுக்கு
நிவாரணம் கிடைக்குமா? கட்டுமர மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்
கிறார்கள். கட்டுமரங்கள் எல்லாம் அங்கே உடைந்து நொறுக்கப்
பட்டுக் கிடக்கின்றன. இதற்கெல்லாம் நிவாரணம் அளிக்க
வேண்டும் என்பதற்காகத்தான் குழு போடப்பட்டது.—
அதற்காகக் கூட அல்ல, சுப்ரீம் கோர்ட்டுக்கு ரிப்போர்ட் கொடுப்
பதற்காகப் போடப்பட்டது. இப்படி உச்ச நீதிமன்றத்திற்கு
ரிப்போர்ட் கொடுப்பதற்காகவும் உங்களுடைய பிரச்சினை
களுக்காகவும் நீங்கள் அந்தக் குழுவைப் போட்டீர்கள்—எனவே
இது ஒரு மானியமே அல்ல என்று கூறி இந்த மானியக்
கோரிக்கையை எதிர்த்து நான் அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர்
அவர்களே, ஒரு விளக்கத்தை திரு. பொன்னுரங்கம் அவர்களுக்
குத் தர விரும்புகிறேன். தூத்துக்குடியிலே உள்ள மீனளக்
கல்லூரி மூடியிருப்பதாகவும், மூடப்பட்ட கல்லூரிக்குப் பணம்
செலவிடப்பட்டு வருவதாகவும் அவர்களுடைய பேச்சிலே குறிப்
பிட்டார்கள். வேலை வாய்ப்பு தொடர்பாகச் சில பிரச்சினைகள்
இருந்தன. அது பேசப்பட்டு வருகிறது. அந்தக் கல்லூரி நடை
பெற்று வருகிறது.

திரு. ப. பொன்னுரங்கம்: துணைத் தலைவர் அவர்களே,
அந்தக் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள் கையெழுத்துப்
போட்டுக் கொடுத்து இருக்கிறார்கள். 28–11–1985-லே இருந்து
அதை மூடி வைத்திருக்கிறார்கள்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டுக்கான
மீன் வளம் மற்றும் பிற்பட்டோர் நலத் துறையினுடைய
மானியக் கோரிக்கைகளைப்பற்றி அகில இந்திய பார்வர்ட்
ப்ளாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற
நான் விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 19] [திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்]

நமக்கு அதிகமான அளவில் கடற்கரையோரம் இருக்கிறது.
மீன் வளம் இருக்கிறது என்று சொன்னாலும் கூட மீனவ
சமுதாயத்தைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு ஒரு பாதுகாப்
பற்ற சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாகத்
தென் பகுதியிலே பார்க்கிறபோது மீனவர்கள் அதிகமாகப்
பாதிக்கப்பட்டு பாதுகாப்பற்ற ஒரு சூழ்நிலையிலே இருந்து
கொண்டிருக்கிறார்கள். இலங்கையிலே தமிழ் போராளிகள்
போராடிக் கொண்டிருக்கிற காரணத்தால் இங்கே இருக்கக்கூடிய
மீனவர்கள் நம்முடைய விதிக்குட்பட்டு அதாவது எங்கெல்லாம்
மீன் பிடிக்க அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறதோ அந்தப் பகுதி
யிலே கூட மீன்பிடிக்க முடியாத சூழ்நிலையிலே அவர்கள்
பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். தமிழகத்தின் ஒரு பகுதியிலே
வெள்ளச்சேதம் ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் தென் பகுதியில்
வறட்சி என்ற மழை இல்லாத நிலைமை இருக்கின்றது. இந்த
நிலையில் கடற்கரையோரப் பகுதிகளில் மீனவச் சமுதாயத்தினரின்
வயிறுகள் எல்லாம் வறண்டு போய்க்கொண்டு இருக்கின்றன
என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஒரு காரணத்
தால் தான் அன்றைக்குக் கச்சத் தீவைக் கொடுக்கக்கூடாது என்று
சொன்னார்கள்.

இந்தத் தேசத்தின் பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏற்படுவதோடு
அந்த மீனவ மக்களின் வாழ்வும் பாதிப்பு ஏற்படும்
என்றும் அன்னியச் செலாவணி தருகின்ற இறால் மீன்கள் அங்கே
அதிகமாகக் கிடைக்கின்ற காரணத்தாலும் எக்காரணம் கொண்
டும் கச்சத்தீவைத் தரக்கூடாது என்றும் எங்களுடைய அன்பிற்
குரிய தலைவர் அமரர் மூக்கையா தேவர் பாராளுமன்றத்திலும்,
சட்டமன்றத்திலும் எடுத்து சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் இன்றைக்கு அப்படி ஒரு பாதுகாப்பு இல்லாத நிலை
கச்சத் தீவு பகுதியிலே இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.
அதனாலேதான் நம்முடைய மீனவ சமுதாயம் இவ்வளவு தூரம்
பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. நாங்கள் எல்லாம் இது
காறும் பொறுத்துக் கொண்டுதான் இருந்தோம். நம்முடைய
அரசும் சரி, மத்திய அரசும் சரி, பாதுகாப்பு கொடுக்க முடியாத
சூழ்நிலையில் இருக்கிறார்கள். அங்கே பாதுகாப்பு இருக்கிறது
என்று இவர்கள் அடிக்கடி சொல்லுகிறார்கள். ஆனால் இல்லை.
அடிக்கடி கடலிலே புயல் வருகிறது. அதனால் மீனவர்கள்
சாகிறார்கள் என்று சொன்னால் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால்
மீன்பிடிக்கச் செல்லுகிறவர்கள், கடலிலே படகிலே போனவர்
கள், அந்த சிங்கள வெறியர்களால் சுடப்பட்டு கொல்லப்படு
கிறார்கள் என்று பார்க்கும்போது ஒரு இனத்தினுடைய உரிமை
பறிக்கப்பட்டிருக்கிறது. தமிழனுடைய உரிமை, உயிர் பறிக்கப்
பட்டிருக்கிற நிலையிலேதான் மீனவ சமுதாயத்தினர் அதிகமாக
பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று நாங்கள் கருது
கிறோம்.

எனவேதான் அதை நாங்கள் மிக முக்கியமாக இந்த
மன்றத்திலே எடுத்துச் சொல்லி வருகிறோம். இதைக் கண்டித்து,
நாம் நிச்சயமாக மீண்டும் கச்சத் தீவை பெற வேண்டும் என்ற

[திரு. பி.கே. எம். முத்துராமலிங்கம்] [1986 ஏப்ரல் 19

கோரிக்கையை தீர்மானமாக இந்த மாமன்றம் ஏற்று நிறைவேற்றி
அதை மத்திய அரசுக்கு பரிந்துரையாக அனுப்ப வேண்டும்
என்பதை என்னுடைய கோரிக்கையாக நான் இங்கே எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன். நாம் அப்படிச் செய்யாமற்போனால்
நம்முடைய மீனவ சமுதாயம் நசிந்துப் போகக்கூடிய நிலை
ஏற்படும். அந்த தொழிலே நசிந்து விடும். அந்தத் தொழிலை
செய்கிற மீனவர்கள் என்பவர்கள் இல்லாமலே போகக்கூடிய
நிலைமை கூட உருவாகும் நிலை இருந்துக் கொண்டிருக்கிறது.
எனவே 6 மாத காலத்திற்குள்ளாக இதனைச் செயல்படுத்தா
விட்டால், மீனவ சமுதாயமே இலங்கையின் மீது போர்த்
தொடுக்கும். இலங்கை தமிழர்கள் பிரச்னை என்று இப்போது
இருக்கிற நிலை மாறி, அது மீனவர்கள் பிரச்னையாக உரு
வெடுத்து, அவர்களே இலங்கை மீது போர் தொடுத்து, கச்சத்
தீவை ஆட்கொண்டு, நிலைமையை கட்டுப்படுத்த வேண்டிய
நிலைமைக்கு மீனவர்கள் ஆளாக்கப்படுவார்களானால் அதற்கு
நாங்கள் நிச்சயமாக எங்கள் இயக்கத்தின் சார்பாக அவர்களுக்கு
உதவுவோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அந்த வகையில்
அவர்களுக்கு நல்லதொரு முடிவை நம்முடைய அரசு பரிசீலனை
செய்து மத்திய அரசுக்கு வேண்டுகோள் விட வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல பிற்படுத்தப்பட்டநலத் துறையைப் பொறுத்த
மட்டில் நம்முடைய அவைக்கு அம்பாசங்கர் குழுவின் அறிக்கை
இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த அறிக்கையைப் பற்றி
வெளியிலே பேசுவதைக் கேட்கும்போது பலவிதமான கருத்துக்
களைச் சொல்லுகிறார்கள். பல பெரியவர்கள், மூதறிஞர்கள்
எல்லாம் பலவிதமான கருத்துக்களைச் சொல்லுகிறார்கள்.
அந்தக் குழப்பத்தை நிச்சயமாக இந்த அரசு போக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த அறிக்கையைப் பெற்று
முழு விவரங்களையும் இந்த அவையில் வைத்து, இங்கே விவா
திக்க வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அந்த அறிக்கையிலே என்னென்ன கருத்துக்கள் இருக்கின்றன
என்பதை இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் அறிந்து
கொண்டு அதிலே விவாதித்து, நல்லதொரு முடிவை ஏற்றுக்
கொள்ளுகிற நிலை இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். அதற்கிடையிலே அதை அரசு ஆணையாக மாற்றப்
படுவது முக்கியமாக நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலி
யுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையைப்
பொறுத்த மட்டில் மிக அதிகமானவர்கள் என்னுடைய பகுதி
யிலே இருக்கிறார்கள். தென் மாவட்டங்களில் இருக்கக்கூடிய
சீர்மரபினர் என்று சொல்லக்கூடிய டி.என்.சி. என்று சொல்லக்
கூடிய அளவுக்கு அந்த தலைப்பிலே வரக்கூடிய இனங்கள்
எல்லாம் இன்றைக்கு அதிகமாக்கப் பட்டிருக்கின்றன. 70, 75-க்கு
மேற்பட்ட இனங்கள் அதிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன,



1986 ஏப்ரல் 19] [திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்]

உண்மையிலேயே 'டி-நோட்டிபைஃடு டிரைப்ஸ்' எனப்படக்
கூடிய முறையிலே வெள்ளையர்களுடைய ஆதிக்கத்தின் கீழே
அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டதால், அந்த மக்களுக்கு
நல்லதொரு வாழ்க்கையை அளிக்க வேண்டும், அந்த மக்களுக்கு
நல்லதொரு மேம்பாடு கிடைக்க வேண்டும் என்றும், அவர்கள்
மிகவும் பிற்படுத்தப்பட்டு, தாழ்த்தப்பட்ட நிலையிலே இருக்
கிறார்கள் என்றும் டி.என்.டி. என்று வைத்து முன்னுரிமை
அளித்தார்கள். ஆனால் இன்றைக்கு அந்த டி.என்.டி. என்ற
பெயரே டி.என்.சி. என்று மாற்றப்பட்டு 70,72 இனங்களை
அதிலே புதியதாக சேர்த்திருக்கிறார்கள். அதனால் பாதிக்கப்
படக்கூடியவர்கள், அதிகமாக பாதிப்புக்கு உள்ளானவர்கள்
உண்மையிலேயே டி.என்.டி. என்று சொல்லக்கூடிய ராமநாதபுர
மாவட்டத்திலே இருக்கிற மறவர்கள் என்பவர்களும், மதுரை
மாவட்டத்திலே இருக்கிற பிறமலைக் கள்ளர்கள் என்பவர்களும்
தான் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே
அவர்களுடைய சார்பிலே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது
எல்லாம், அவர்களோடு சேர்க்கப்பட்ட 70,72 இனங்களும்
இருக்கட்டும். ஆனால் அவர்களுக்குத் தனியாக சில வசதிகளைச்
செய்ய வேண்டும். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்
திலேகூட எடுத்துச் சொன்னேன், அவர்களுக்குத் தனியாக வீட்டு
வசதி போன்றவைகளை செய்து தர வேண்டும் என்று. ஆனால்
அவர்கள் அப்படி தனியாக செய்து தர முடியாது என்று சொல்லி
விட்டார்கள். சரி இருக்கட்டும், ஆனாலும் மற்றவர்களோடு
சேர்த்து ஏற்படுத்தித் தருகின்ற சலுகைகளிலே கூட அவர்களுக்கு
அதிகமாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

இந்த டி.என்.சி. பிரிவினர் என்று சொல்லக்கூடியவர்கள்
13 மாவட்டங்களிலே இருப்பதாக இந்த கொள்கை விளக்கக்
குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 13 இடங்களைப்
பார்க்கிறபோது மதுரை மாவட்டத்தில்தான் அதிகமான அளவில்
பிறமலைக்கள்ளர் போன்றவர்கள் எல்லாம் அதிகமாக இருந்து
கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதிலும் குறிப்பாகச் சொல்லப்
போனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், கட
லாடி போன்ற இடங்களில்தான் அவர்கள் அதிகமாக இருப்ப
தாகத் தெரிகிறதே தவிர வேறு பகுதிகளில் இருப்பதாகவே தெரிய
வில்லை. ஆகவே அவர்கள் வசிக்கக் கூடிய அப்படிப்பட்ட
இடங்களில் பள்ளிக் கட்டிடங்களும், விடுதிக் கட்டிடங்களும்
அதிகமாகக் கட்டுவதற்கு தொகை ஒதுக்கப்பட வேண்டும். 50
லட்சம் ரூபாய்தான் கட்டிடங்களுக்கு ஒதுக்கியிருப்பதாக தெரி
கிறது. அந்தத் தொகை என்பது நிச்சயமாக போதுமானதாக
இருக்காது. மேலும் கூடுதலாக தொகையை ஒதுக்கி அந்த
சீர்மரபினர் மற்ற சமுதாய மக்களுக்கு நன்மையைச் செய்ய
வேண்டும். உணவு செலவை பொறுத்தவரையில் அந்தச் சமுதாய

[திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்] [1986 ஏப்ரல் 19

மாணவர்களுக்கு மாதம் 60 ரூபாய் கொடுக்கிறார்கள். அந்தத் தொகை கூடுதலாக கொடுப்பதற்கு செயல்குறிப்பு ஒன்று பரிசீலனையில் இருப்பதாக அறிகிறேன். விரைவில் அந்தத் தொகையை கூடுதலாக கொடுத்து சீர்மரபினர் மாணவர்களுக்கு நன்மையைச் செய்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. அ. வெங்கடாசலம் : துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற பிற்பட்ட நலத்துறை மற்றும் மீனளத்துறை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன்.

பிற்பட்ட நலத்துறை என்பது 1969 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதாகும். வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள ஏழை எளிய மக்களின் நிலையை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்திலே 1971 ஆம் ஆண்டு இந்தத் துறைக்காக ஒரு மானியக் கோரிக்கையை அன்றைய அரசு அறிவித்தது. அடுத்தாற்போல 1967-68 ஆம் ஆண்டில் இந்தத் துறைக்காக ஒரு கோடியே 67 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அந்த ஏழை எளிய பிற்பட்ட மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற லட்சியத்திலே இன்றைக்கு 12 கோடியே 89 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தாலும் ஒதுக்கியிருக்கிற தொகை சாதாரண ஏழை எளிய பிற்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு போதுமானதாக இருக்குமா என்று பார்க்கிற போது நிச்சயமாக அது போதுமானதாக இருக்காது என்பதை என்னுடைய கருத்தாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கிற மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்காக இருக்கிற பிற்பட்ட சீர்மரபினர் மக்களின் வாழ்க்கைகைத் தரத்தை உயர்த்துவதற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் குறைந்தது 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தால் அது அந்த நன்மைகளை அவர்களுக்குச் செய்ய ஓரளவிற்கு போதுமானதாக இருக்குமென்பதை என்னுடைய கருத்தாகத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்காக 543 மாணவரில்லங்கள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு 15 புதிய விடுதிகளை திறப்பதாகவும் கொள்கை குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். இவற்றில் 49 விடுதிகள் மட்டும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் உள்ளன. மற்றவை வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களை ஏற்பாடு செய்து நடத்துவதில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பது இங்கே இருக்கக்



1986 ஏப்ரல் 19] [திரு. அ. வெங்கடாசலம்]

கூடிய அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றாக தெரியும். வாடகைக் கட்டடங்களில் அமர்த்துகிறபோது கட்டடச் சொந்தக்காரர்கள் அந்தக் கட்டடத்தில் இருக்கிற பழுதுகளை சரி செய்யச் சொன்னால் அவர்கள் அந்தக் காரியத்தைச் செய்ய மறுப்பதோடு மட்டுமல்லாமல் விடுதிகளையும் காலி செய்ய சொல்கிறார்கள். சில இடங்களில் கோர்ட்டுகளுக்கே சென்று ஆணை வாங்கி வந்து விடுகிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள அந்த சாதாரண மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டுமென்ற குறிக்கோளின் அடிப்படையில் இந்தத் துறை தனியாக துவங்கப்பட்டது. அந்த லட்சியமும் குறிக்கோளும் ஈடேறாத அளவிற்கு விடுதியின் சொந்தக்காரர்கள் கோர்ட்டுகளில் உத்தரவுகளை வாங்கி வந்து விடுதிகளை காலி செய்ய வைத்து, ஏழை எளிய சாதாரண வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை நடுரோட்டிலே நிறுத்தக் கூடிய நிலைமையிலே இருக்கிறார்கள்.

இன்றைக்கு இருக்கக்கூடிய அந்த விடுதிகளுக்கு மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 20 லட்சம் ரூபாயை வாடகையாகக் கொடுக்கக்கூடிய அந்த நிலைமையில் இருக்கிறோம். ஆகவே, இதையெல்லாம் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், சற்று தங்களுடைய மேலான கவனத்திற்கு இதை எடுத்து கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் என். ஆர். இ. பி. திட்டத்தின் மூலமாக அரிசிக் கூடங்களையும், சமுதாயக் கூடங்களையும், உயர்நிலைப்பள்ளி, நடுநிலைப் பள்ளி என்று இப்படிப் பல்வேறு கட்டிடங்களையும் இன்றைக்கு மத்திய அரசோடு சேர்ந்து கட்டும் திட்டத்தை தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, விடுதிகளுடைய சிரமங்களைப் போக்கவும், இந்த சாதாரண பள்ளி மாணவ, மாணவியர்களுடைய தரங்களை உயர்த்தவும், இந்த என். ஆர். இ. பி. திட்டத்தின் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு இத்தனை பள்ளிக் கட்டிடங்கள் என்று கட்டப்படும் என்று சொல்லி, சென்ற மானியக் கோரிக்கையின் போதும் கூட, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு மாவட்டத்திற்கு 5 விடுதிகள் வீதம் 90 விடுதிகளை ஆண்டு ஒன்றுக்கு கட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தச் சிரமங்களைப் போக்குவதற்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் வருகின்ற ஆண்டிலாவது, இந்தத் திட்டத்தின் மூலமாக அந்த விடுதிகளை நல்ல விடுதிகளாகக் கட்டித் தரவேண்டும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விடுதிகளில் கதவுகள் இல்லாமலும், சன்னல்கள் இல்லாமலும் போதிய சுகாதார வசதியற்றும், சாற்றோட்ட வசதி இல்லாத காரணத்தாலும், அந்தச் சாதாரண மக்கள்

அங்கே முறையான கல்வியைப் பயில முடியாத நிலையை ஏற்படு
வதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்குப் பல்வேறு தொற்று
வியாதிகளும் ஏற்படக்கூடிய அந்த நிலைமைகளை எல்லாம்
கவனித்து, முறையாக கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கு
மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர்
புரட்சித் தலைவர் அவர்களும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல, மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்
லாம், எல்லா மானியக் கோரிக்கைகளுக்கும், ஒரு நாள், இரண்டு
நாள் என்று நேரத்தை ஒதுக்கும்போது— இந்த பிற்படுத்தப்பட்ட
நலத்துறை மானியக் கோரிக்கைமீது முழுமையாகப் பேசவேண்டும்
மேலும் மீனவர் துறையிலேயும் முழுமையாகப் பேச வேண்டும்—
இன்றைக்கு 12 மணிக்கு ஆரம்பித்து, 2 மணிக்குள் முடிக்க வேண்
டும் என்று அவசரப்படுத்துகிறீர்கள், ஆகவே, தயவுசெய்து ஒரு
மணி நேரம் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன். வெறும் 5 நிமிடங்கள், 10 நிமிடங்கள்
என்று ஒதுக்கினால் முழுமையாக இதில் பேசுவதற்கு முடியாத
ஒரு நிலைமை ஏற்படுகிறது என்பதை நான் சொல்ல விரும்பு
கிறேன்.

அடுத்து, பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கும்,
விடுதியில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கும், உயர்நிலைப்
பள்ளியில் படிக்கக் கூடிய மாணவர்களுக்கும், உணவுக்கு என்று
ரூ. 95, 80, 60 என்றுதான் 1980-81 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்
பட்ட அந்தத் தொகைதான் இன்று வரை கொடுக்கப்பட்டு வரு
கிறது. இந்தத் தொகை போதாது, எனவே, 4, 5 ஆண்டுகளுக்கு
முன்பாக நிர்ணயிக்கப்பட்டு கொடுத்துக் கொண்டு வருகிற
இந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நாளுக்குநாள்
மாதந்தோறும் அனைத்துப் பொருட்களின் விலைகள் ஏறி வரும்
போது, அதிலும் குறிப்பாக நுகர்பொருட்களுடைய விலை ஏறிக்
கொண்டிருக்கிற நேரத்தில் 5, 6 ஆண்டுகளுக்கு முன்னால்
நிர்ணயிக்கப்பட்ட தொகையைக் கொடுப்பது என்பது, முறையாக
அவர்களுக்கு நல்ல உணவுகளைக் கொடுக்க முடியாத ஒரு நிலை
இருப்பதை முன்னிட்டு— தமிழக முதல்வர் புரட்சித் தலைவர்
அவர்கள் இந்தத் தொகையைக் கூட்டிக் கொடுப்பதற்கு பரி
சீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருந்தாலும்— வருகின்ற
அந்தக் காலக் கட்டத்திலாவது இந்தத் தொகையைக் கூட்டித்
தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்தத் துறையில் பணியாற்றக்கூடிய விடுதிக் காப்
பாளர்கள் முழு நேர ஊழியர்களாக அங்கே பணியாற்றிக்
கொண்டு வருகிறார்கள். அவர்களுக்குப் பணி உயர்வு என்பது



கிடையாது. அவர்கள் ஆசிரியர்கள் பயிற்சியை முடித்து இருக்
கின்ற காரணத்தால், அவர்கள் ஆசிரியர்களாக பணி புரிய
வேண்டும் என்றால், அவர்களுக்கு மாற்றிக் கொடுக்கக்கூடிய
அந்த உத்தரவினையும் இந்த அரசு செய்யவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஒன்றியத்திலே கல்விக் கூடங்களை கண்காணிப்
பதற்கு ஏ.இ.ஓ. கிரேட் என்று வைத்திருப்பதைப் போல, இந்த
விடுதிகளை முறையாக பராமரிக்கக்கூடிய அந்த அனைத்துச்
செயல்களையும் கண்காணிக்கக்கூடிய வகையில், அசிஸ்டெண்ட்
வெல்பேர் ஆபிசர்ஸ் என்று சொல்லக்கூடிய அந்த கிரேடில்
அவர்களை நியமித்தால், நிச்சயமாக அந்த விடுதிகளை முறை
யாகக் கண்காணிக்கவும் வசதியாக இருக்கும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு உயர்நிலைப் பள்ளியில் இருக்கக்கூடிய
விடுதியில் 50 மாணவர்களைச் சேர்த்து, அதேபோல் கல்லூரி
யிலும் மேல்நிலைப் பள்ளியிலும் 50 மாணவர்கள் என்று வைத்து
இருப்பது நிச்சயமாக......

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின்
முன் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்
பெறுகிறது.

திரு. அ. வெங்கடாசலம்: துணைத் தலைவர் அவர்களே,
அதிக மாணவர்களை சேர்ப்பதற்கான ஆணையை இந்த அரசு
வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு, இந்த
ஆதி திராவிட நலத்துறையில் அங்கே விடுதி காப்பாளர்களுக்கு,
அவர்களுக்குரிய அந்த சம்பளத்தை இங்கே இளநிலை ஆசிரியர்,
பட்டதாரி ஆசிரியருக்கும் அந்தச் சம்பளத்தை வழங்கி வருகிறார்
கள். ஆனால் பிற்பட்ட நலத்துறையில் பணியாற்றக்கூடிய
விடுதி காப்பாளர்களுக்கு, அந்த செகண்டரி கிரேடு, சம்பளத்தை
வழங்குகிறார்கள். ஆனால் ஆதி திராவிடர் நலத்துறையில் பணி
யாற்றக்கூடிய விடுதி காப்பாளர்களுக்கு, பட்டதாரி ஆசிரியர்
களுக்கு, அதே துறையில் பிற்பட்ட நலத்துறையில் விடுதி
காப்பாளர்களுக்கு அந்த செகண்டரி கிரேடு சம்பளத்தைக்
கொடுத்து அங்கே மனவருத்தத்தை உருவாக்கக்கூடிய நிலை
யாக இருக்கிற காரணத்தால், இரண்டுபேருக்கும் அந்த ஈகுவ
லான பட்டதாரி சம்பளத்தை வழங்கும்படி கேட்டுக்கொண்டு
என்னுடைய உரையை முடிக்கிறேன்.

[1986 ஏப்ரல் 19

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மீன் வளத்துறை, பிற்பட்டோர் நலத்
துறை மானியக் கோரிக்கை மீது ஒருசிலக் கருத்துக்களை சொல்ல
விழைகிறேன். இன்றைக்கு மீன் வளத்தைப் பொறுத்த வரையில்,
நமது தமிழகத்தில் அநேகமாக திருவொற்றியூரிலிருந்து குளைச்
சல் வரையில் 1000 கிலோ மீட்டர் கடலைச் சுற்றி நம்முடைய
தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக இன்றைக்கு
உலகத்தில் யுத்தமேகம் பரவி வருகிற நேரம் ; இலங்கையால்
என்றைக்கும் நமக்கு அபாயகரமான நிலை இருக்கக்கூடிய நேரம்.
இந்த நேரத்திலே, 1000 கிலோ மீட்டர் சுற்றளவு இருக்கிற
கடல் பகுதியை எந்த அளவுக்கு நாம் பாதுகாத்து வைத்திருக்
கிறோம் என்பதைப் பற்றி நமது அரசு முழுமையாக பரிசீலிக்க
வேண்டும். ஆனால் ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் மீனவர்
களுடைய பாதுகாப்பில்தான் இருக்கவேண்டும். ஆனால் இன்
றைக்கு யாருடைய கையில் இருக்கிறது என்று சொன்னால்,
நமது நாட்டில் இருக்கக்கூடிய வசதி படைத்தவர்கள்,
பாரி, வி.ஜி.பி. போன்றவர்கள் கையில்தான் நமது கடற்கரைப்
பகுதியின் பெரும்பகுதி, அவர்களுடைய ஆதிக்கத்தில்தான்
சிக்கிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் கடரோலப் பகுதி
களில், தரங்கம்பாடி, கிள்ளை, கடலூர் வரை இன்றைக்கு இந்தத்
தனியார்களுடைய கையில்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.
இந்தப் பகுதி முழுமையிலும் அவர்கள் உல்லாசப் பங்களா கட்டி
வைத்துக் கொண்டு தவறான காரியங்களுக்கு இன்றைக்கு கடற்
கரையை பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இந்தப் பெரிய மனிதர்கள்
கள்ளக் கடத்தலைக்கூட பாதுகாக்கக்கூடிய அளவுக்கு ஒரு
தொழிலாக கடற்கரையை, அப்பேர்ப்பட்ட மனிதர்கள்
பாதுகாத்துக்கொண்டு வருவது நமது தமிழகத்துக்கு எதிர்
காலத்தில் ஒரு நல்ல அம்சமாக அமையாது. ஆகவே, மத்திய
சர்க்கார் பொறுப்பிலே இருந்தாலும், மாநில சர்க்கார் பொறுப்
பிலே இருந்தாலும், இந்தக் கடல் பரப்பிலே இருக்கக்கூடிய அந்தக்
கோட்டீஸ்வரர்களை அகற்றி, அவைகளை, மீனவர்களுடைய
பாதுகாப்பில் கொண்டு வரவேண்டும். மீனவர்களை வஞ்சித்து,
பெரிய மனிதர்கள் இன்றைக்கு கொள்ளை அடிப்பதற்கும், பல்
வேறு தவறான காரியங்களுக்கு பயன்படுத்துவதற்கும் அனுமதி
அளிக்கக்கூடாது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே அமைச்சர்
அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல எண்ணூர் இருக்கிறது. அது மீனவர் குப்பம்
பகுதி. மீனவர்கள் வாழக்கூடிய பகுதி. அந்தப் பகுதி இன்றைக்கு
வி.ஜி.பி. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ! அவர்கள்
இன்றைக்கு பெரிய பங்களா கட்டப் போகிறார்கள். அந்தப்
பங்களாவை எதற்குப் பயன்படுத்தப்போகிறார்கள் ? அங்கே



1986 ஏப்ரல் 19] [திரு. பொ. உத்திராபதி]

இருக்கக்கூடிய மீனவர்களை அப்புறப்படுத்தி அந்த வி.ஜி.பி
போன்றவர்கள் அந்த இடத்தைத் தவறான காரியங்களுக்கும்,
கோடிக் கோடியாக கொள்ளை அடிப்பதற்கும், சம்பாதிப்பதற்
கும்தான் இன்றைக்கு குப்பத்தைப் பயன்படுத்துகிறார்களே
தவிர, மீனவர்களுக்கு இன்றைக்குப் பாதுகாப்பு இல்லை என்
பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல, இராமேஸ்வரம்-கச்சத் தீவு. ஒரு காலத்
தில் இந்தக் கச்சத் தீவை கொடுக்கக்கூடாது என்று இந்திய
நாட்டில் குரல் எழுப்பப்பட்டது. அன்றைக்கு இருந்த பிரதமர்
அவர்கள் சிரிமாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அந்த கச்சத்
தீவில் நமது மீனவர்களும் சென்று ஓய்வு எடுத்துக்கொள்ளலாம்.
வலையைக் காயவைத்துக்கொள்ளலாம். அதைப்போல அவர்களும்
தங்கிக் கொள்ளலாம் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. இன்
றைக்கு நிலை என்ன ? இன்றைக்கு இலங்கை ஜனாதிபதி,
அந்த வெறி பிடித்த ஜெயவர்த்தனே, ராணுவ முகாமாக
அந்தக் கச்சத் தீவினை பயன்படுத்திக்கொண்டு நமது
இராமேஸ்வர மீனவர்கள் மீன் பிடிக்க சென்றால் பிணம்தான்
வருகிறதே தவிர, மீனவர்களுக்குப் பாதுகாப்பு கிடையாது.

எனவே, உடனடியாக இராமேஸ்வரம் மீனவர்களுக்கு பாது
காப்புக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
துரிதமாக மத்திய அரசை வற்புறுத்தி அந்தப் பகுதி மீனவர்
களுக்கு பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கோடியக்கரை, தொண்டி, இராமேஸ்வரம் போன்ற
பகுதியில் மீன் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக அமைச்
சர் அவர்கள் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இன்றைக்கு மீன் ஆராய்ச்சி என்பது அனேகமாக வெளி மாநி
லங்களில் அதிகமாக இருக்கிறது. இது தமிழகத்தில் மிக
குறைவாக இருக்கிறது. இதில் மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல் மீன்பிடி துறைமுகம் என்னுடைய தொகுதியில்
முத்துப்பேட்டை ஒன்றாகும். இன்று முத்துப்பேட்டையிலி
ருந்து கடலில் சென்று மீன் பிடிப்பதற்கு ஒரு சிறிய துறை
முகம் இல்லை. அப்படி துறைமுகம் இல்லாததால் இன்றைக்கு
மீனவர்கள் பெரும் அவதிக்கு உள்ளாகிறார்கள்.
அமைச்சர் அவர்கள் அருகில் உள்ள பேராவூரணிக்கு
அடிக்கடி வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஒரு சிறிய
துறைமுகத்தை முத்துப்பேட்டையில் அமைத்துத் தர வேண்
டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1986 ஏப்ரல் 19

அதேபோல், தொண்டிக்காடு, செப்பநாதகுளம், இடும்பா
வனம், தில்லைவிளாகம், கரையான்காடு, விளாங்காடு போன்ற
பகுதிகளில் முழுவதும் பிற்படுத்தப்பட்டவர்கள் அதிகமாக
வாழ்கிற பகுதியாகவும் அவர்கள் இந்த மீன்பிடித் தொழிலை
செய்யக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். இன்றைக்கு
அவர்கள் தொண்டிக்காட்டிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரம்
சேற்றில் நடந்து சென்று மீன் பிடித்து வரக்கூடிய ஒரு அவல
நிலை இருக்கிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது,
அந்த மரக்கை ஆற்றில் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு
ஆற்றை வெட்டிக்கொடுத்தால்—அதற்கு எஸ்டிமேட் எல்
லாம் இருக்கிறது—அந்தப் பகுதி மீனவர்கள் 3 கிலோ
மீட்டர் தூரம் படகில் சென்று மீன் பிடிக்க வசதி ஏற்
படும். அதைச் செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல் இந்த 7 மீனவர்களை சுட்டுக் கொன்ற
இடத்தில் உள்ள குப்பத்தில் இன்றைக்கு ஒரு பெயர் பலகையில்
மாமேதை சிங்கார வேலர் அவர்களுடைய பெயரால்
நகர் ஒன்று இருக்கிறது. நான் கேட்டுக்கொள்வது எல்லாம்
இந்தப் பகுதியில் வாழக்கூடிய மீனவர்களுக்கு பெரிய வசதி
படைத்தவர்களுக்கு கொடுத்திருக்கிற இடத்தை எல்லாம் காலி
செய்து ஏழை மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு அமைச்
சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து பிற்பட்டவர்கள் நலம். இன்றைக்கு பள்ளி மாண
வர்கள் விடுதிகள் 543-ல் 49 தான் அரசு கட்டிடங்களாக
இருக்கின்றன. மீதம் உள்ள கட்டிடங்கள் இன்றைக்கு மிகவும்
பழமையான கட்டிடங்களாகவும் ஓட்டுக் கட்டிடங்களாகவும்,
மழை பெய்தால் அங்கே மாணவர்கள் உள்ளே இருக்க முடியாத
நிலையிலும் சிலயிடங்களில் சத்திரத்தையும் அதற்கு பயன்
படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை போக்கு
வதற்கு பிற்பட்டவர்கள் துறைக்கு இந்த நிதி போதாது.
மேலும் நிதி பெற்று அனேகமாக இன்னும் 2 ஆண்டு காலத்தில்
சகல பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் நல்ல வளர்ச்சியான
மூளை பெற்று படிக்க வேண்டுமானால் அந்த மாணவர்கள்
தங்குகின்ற விடுதிகளுக்கு எல்லாம் நல்ல கட்டிடங்களை
அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் முத்துப்பேட்டை இருக்கிறது.
அங்கே பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதிகமாக இருக்கி
றார்கள். ஆகவே முத்துப்பேட்டையில் ஒரு பிற்பட்டவர்
மாணவர் விடுதி ஒன்றை கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்
டுக் கொள்கிறேன். அதே நரத்தில் பேராவூரணியில் ஒரு
விடுதி இந்த ஆண்டு வர இருக்கிறது. நான் வரவேற்கிறேன்.



1986 ஏப்ரல் 19] [திரு. பொ. உத்திராபதி]

அதேபோல் பட்டுக்கோட்டையும், முத்துப்பேட்டையும்
ஒரு தொடர்புள்ள ஒரு பிரதேசம். ஆகவே பட்டுக்கோட்டை
யும், முத்துப்பேட்டையும் அமைச்சர் அவர்களுடைய பகுதி
யாக இருப்பதால் தயவுசெய்து வருகிற 1987–88 ஆம்
ஆண்டில் ஒரு மாணவர் விடுதி கட்டிக்கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் குறும்பர்கள், ஒட்டர்கள், வன்ன
ணார்கள், நரிக் குறவர்கள் இருக்கிறார்கள். குடை பின்னக்
கூடிய ஜாதியை சேர்ந்தவர்களும் இன்றைக்கு பிற்பட்டவர்கள்
பட்டியலில் இருக்கிறார்கள். இந்த பட்டியலில் அவர்களுக்கு
முழுமையான பாதுகாப்பு கிடையாது. நான் கேட்டுக்கொள்
வது எல்லாம் அவர்களை எல்லாம் ஆதி திராவிடர்களாக
அல்லது பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.
அப்படி சேர்த்து அதன் மூலம் வரக்கூடிய அந்த பலனை
அவர்கள் முழுமையாக அடைவதற்கு அமைச்சர் அவர்கள்
முடிவு எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல், வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு இன்றைக்கு
வயது வரம்பை வைத்து இருக்கிறார்கள். பிற்பட்ட மாணவர்கள்
படித்து வேலை இல்லாமல் அதிகமான வயதை அடைந்தவர்
களாக இருக்கிறார்கள். இப்போது இருக்கிற வயது வரம்பை
இன்னும் அதிகமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வருமான வரம்பு 5 ஆயிரம் ரூபாய் என்று
இருக்கிறது. இந்த 5 ஆயிரம் ரூபாய் என்பது போதாது.
இந்த 5 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பு என்பதை உயர்த்தி
அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

(பிற்பகல் 1–40.)

அதேபோல், ஓர் மரபினர் பொருளாதார நிலையில்
மேம்பாடு அடைவதற்கு 2 ஏக்கருக்கு குறைவு இல்லாமல்
நிலம் வைத்து இருப்பவர்களுக்கு பாசன கிணறுகளுக்கு
2,500 ரூபாய் மானியம் கொடுக்க வேண்டும். 934
பேர் இந்தத் திட்டத்தில் பயன் அடைந்து உள்ளனர்.
கிணறுகளை வெட்டுவதற்கு ரூ. 20,000 ரூ. 30,000 வரை
ஆகும். ரூ. 2,500 மானியம், 2 ஏக்கருக்கு உட்பட்டவர்
களுக்கு. அந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், அதிலே
ஓர் மரபினை உடையவர்கள், ரூ. 20,000, ரூ. 30,000 என்று
போட்டு கிணறு வெட்டுவது சாத்தியமல்ல. அதனால் பினாமி
பேரில் போட்டு வசதி படைத்தவர்கள் தான் ஆதாயத்தை

அடைகிறார்கள். 10, 15 குடும்பங்களுக்கு என்று கணக்கு
வைத்து அமைச்சரவர்கள் அரசின் மூலமாக இனறு கட்டிக்
கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஒட்டர், நாவிதர், வண்
ணான், நரிக்குறவர் போன்றவர்களுக்கு விடுகட்டிக் கொள்
வதற்கு மனைகள் வழங்கப்படுகின்றன. இந்த உபரித்
தொழில்களைச் செய்யக் கூடியவர்கள் என்னுடைய தொகுதி
யில் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு மனை
களை வழங்கினாலும், அவர்களால் வீடுகள் கட்டமுடியாது.
வீட்டு மனைகளை வாங்கியவர்கள் எப்படி நரிக் குறவர்கள்
மனைகளை விட்டுவிட்டு, வெளியே செல்கிறார்களோ,
அதைப் போன்று இவர்களும் அந்த மனைகளை விற்று
விடுகிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வ
தெல்லாம், உதிரித் தொழில்கள் செய்யக் கூடிய ஏழை மக்க
ளுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எப்படி நரிக்
குறவர்களுக்கு வீடுகட்டிக் கொடுப்பதற்கு முயற்சிகள் செய்யப்
படுகிறதோ, அப்படி இவர்களுக்கும் மனைகளைக் கொடுத்து,
வீடுகள் கட்டிக்கொள்வதற்கு, ஐந்தாண்டு திட்டத்தின் மூலமாக
அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்து வீடுகளை கட்டிக்
கொடுக்கவேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு அளித்ததற்காக
நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத்
தலைவர் அவர்களே, இந்த அவையிலுள்ள உறுப்பினர்களின்
உரிமைகளை தலைவர் என்ற முறையில் நீங்கள் பாதுகாக்கக்
கடமை பட்டிருக்கிறீர்கள். நம்முடைய பிற்பட்டோர் நலன்,
மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய
பாலிசி நோட்டில் ஒரு முக்கியமான பிரச்சினை இந்த அவையில்
ஏற்கனவே ஒரு அஷ்யூரன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால்
இந்த பாலிசி நோட்டைப் படித்தபோது. The material fact
has been suppressed willingly by the Hon. Minister
என்ற ஒரு குற்றச்சாட்டை, சட்டசபை விதிகளின்படி இங்கே
நோட்டீஸ் கொடுக்காமல், உரிமைப் பிரச்சினையை எழுப்பலாம்.
தங்களுடைய ரூலிங்கிற்காக நான் ஒன்றைக் கேட்கிறேன்.
அமைச்சர் அவர்கள் மீது, இப்போதே இங்கு உரிமைப் பிரச்சினை
யாகக் கொண்டுவர விரும்புகிறேன். இப்போது எந்த அடிப்படை
யில் பேசுகிறீர்கள் என்று கேட்கலாம். பக்கம் 15-லே நீங்கள்
தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். திரு. ஜே. ஏ. அம்பா
சங்கர், இ.ஆ.ப., (ஓய்வு பெற்ற) அவர்களின் தலைமையில்
அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
நலக் குழு 28—2—1985 ஆம் நாளன்று அரசுக்கு சமர்ப்பித்த
அறிக்கையினை ஆய்வு செய்து இந்திய அரசியலமைப்புச் சட்டம்
15(4) மற்றும் 16(4) பிரிவுகளின் நோக்கங்களுக்காக பிற்படுத்
தப்பட்டோருக்காக வழங்கப்பட்டிருந்த 50 சதவீத இட
ஒதுக்கீட்டினை தொடர்ந்து நீட்டித்து 1985 ஜூலை திங்களில்
அரசு ஆணை பிறப்பித்தது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக



இங்கே 28—2—1985 அன்று அம்பாசங்கர் அவர்கள் அறிக்கையை
அளித்துவிட்டார்கள். அதையொட்டிய தீர்ப்பும் போடப்பட்
டிருக்கிறது. 1985 ஜூலையிலே உத்தரவு பிறப்பிக்கப்பட்
டிருக்கிறது. அந்த அறிக்கை அரசாங்கத்திற்கு வந்து, அதன்
மீது உத்தரவு பிறப்பித்து, சுப்ரீம் கோர்ட்டில் அரசாங்கத்தின்
சார்பாக விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 50 பர்சென்ட்
அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அவையில் சொல்லப்
பட்டிருப்பது, இது பரிசீலனையில் இருக்கிறது. முடிந்தவுடன்
அவையில் வைக்கப்படும். அதன் பிறகு விளக்கம் தருவோம்
என்று சொல்லப்பட்டும், இந்த பாலிசி நோட்டில் சொல்லப்பட
வில்லை.

இன்னொன்றையும் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு
கிறேன். அதாவது சீக்ரெட் ஆக்ட்ஸ். நம்முடைய ரகசிய
சட்டத்தின்படி, செக்ஷன் 5(1), 5(2)-ன்படி அம்பாசங்கர்
கமிஷன் ரிப்போர்ட் சீக்ரெட் டாகுமென்ட் என்று லா டிப்பார்ட்
மென்ட் தகவல் தந்திருப்பதாக நாவலர் அவர்கள் இந்த அவை
யில் அறிவித்தது சரிதானா? ..........(குறுக்கீடு).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர்
அவர்களே, உறுப்பினரவர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு
பேசிக்கொண்டிருக்கிறார்களா அல்லது எந்த அடிப்படையில்
பேசுகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களுடைய தீர்ப்பு என்ன என்பதைத் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே,
நான் மானியத்தில் பேசவில்லை. அமைச்சர் மீது ஒழுங்கீனங்கள்
இருக்கின்றன என்பதாக உடனடியாக உரிமைப் பிரச்சினையை
கொண்டு வரலாம் என்ற சட்டத்திற்குட்பட்டு நான் இதைத்
தெளிவாகச் சொல்கிறேன். (குறுக்கீடு). சீக்ரெட் ஆக்ட்டின்
படி 5(1)/5(2)-ன்படி, இது சீக்ரெட் டாக்குமென்ட் என்று நிதி
யமைச்சர் அவர்கள் இந்த அவையிலே குறிப்பிட்டார்கள். பத்திரி
கைகளில் வெளிவந்து இருக்குமானால் அதன்மீது நடவடிக்கை
எடுப்பதாகவும் வழக்குப் போடுவதாகவும் சொல்லியிருக்
கிறார்கள். அது குறித்துப் பல பத்திரிகைகளில் வந்திருக்கின்றன.
அது குறித்துக் கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா
என்றால் எந்தப் பத்திரிகைமீதும் கிடையாது. ஆனால் பால்
கமிஷன் ரிப்போர்ட்—சீக்ரெட் டாக்குமென்ட்—என்று சொல்லி
நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நான் அமைச்சர்
மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவருகிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : துணைத் தலைவர் அவர்களே,
இது எப்படி உரிமைப் பிரச்சினையிலே வரும் என்பதைக் குறித்து
தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து வீரய்யன்
பேசுவார்.

[1986 ஏப்ரல் 19

திரு. அ. ரகுமான்கான் : நான் ரூலிங் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ரிப்போர்ட் பிளேஸ் பண்ணுவது பற்றிச் சொல்லி ஜி.ஓ. இஷ்யூ பண்ணியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். வைக் கிறேன் என்று எப்போது சொன்னார்கள் என்று சொல்ல வில்லையே.

திரு. அ. ரகுமான்கான் : சபைக் குறிப்பில் அது இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சபைக் குறிப்பில் இருக்கிறதா இல்லையா என்று எப்படித் திடீரென்று பார்க்க முடியும் ? பார்க்க முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : அப்படியானால் அதைப் பார்த்து விட்டுச் சொல்கிறீர்களா ? ஜட்ஜ்மென்ட் ரிசர்வ்டா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப் பார்க்க வேண்டும். பிரீச் ஆப் பிரிவிலெஜ் இருந்தால்தான் வரும்.

திரு. அ. ரகுமான்கான் : பிரைமா பேஸி இல்லையென் கிறீர்களா ? பிரிவிலெஜ் இல்லை என்கிறீர்களா ? ஆதாரம் இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதிலே பிரைமா பேஸி இல்லை (குறுக்கீடு) அமருங்கள்.

திரு. கோ. வீரய்யன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிற இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதும் என்னுடைய கட்சியின் சார்பாக நேரம் கருதி சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். குறிப்பாக ஒரு தகவலை உங்கள் மூலமாக நான் அரசிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 4-12-1985 அன்று நடுக் குப்பத்திலே நடைபெற்ற மீனவர்களின் மீதான துப்பாக்கி சூட்டின்போது காலனி தீக்கிரையாக்கப்பட்டு அவர்கள் பாதிக்கப் பட்டது சம்பந்தமாக முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் விசாரித்து அதன் மீது கொடுக் கப்பட்ட ரிப்போர்ட் அடிப்படையில் தென் மாநில மாதர் சங்கத்தின் சார்பிலே உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடரப் பட்டு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டு மென்று உச்ச நீதிமன்றம் உத்திரவிட்டும் கூட, அது சம்பந்தமாக 26 குடும்பங்கள் மார்ச் 10ஆம் தேதி தலைமைச் செயலாளர் அவர்களுக்கு தனித்தனியாக மனுக் கொடுத்தும் கூட, உச்ச நீதிமன்ற உத்தரவு நிறைவேற்றப்படாது அமல் ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் எந்த நிலையில் அது இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 19] [திரு. கோ. வீரய்யன்]

மீனவர்களில் ஒரு பகுதியினருக்கு விசைப் படகு வழங்கப்பட்டு இன்னொரு பகுதியினர் நாட்டுப் படகுகளைப் பயன்படுத்தும் நிலை இருக்கிறது. குறிப்பாக விசைப் படகுகளைப் பயன் படுத்துகிறவர்கள் வசதி படைத்தவர்கள், மீன்பிடி தொழிலுக்குச் சம்பந்தப்படாதவர்கள் விசைப் படகுகளை வாங்கி அந்தத் தொழிலை நடத்துகிறார்கள். ஒரு பக்கத்திலே விசைப்படகிலே கூலி வேலை செய்யக்கூடியவர்கள், இன்னொரு பக்கத்திலே நாட்டுப் படகிலே தொழில் செய்கிற மீனவர்களாக இருக்கிறார் கள். விசைப் படகுக்காரர்களுக்கும் நாட்டுப் படகுக்காரர் களுக்கும் மோதல் வருகிற நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு மீனவர்களுக்கு விசைப் படகுகள் வழங்கப்பட வேண்டும். நாட்டுப் படகுகளை வைத்திருக்கிறவர்களுக்கு விசைப் படகுகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீன் பிடிக்கச் செல்கிறபோது கடலில் இறந்துவிட்டால் மரணச் சான்றிதழ் கேட்டால் பிணத்தைக் காட்டினால் தான் அதைக் கொடுக்க முடியும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். கடலிலே இறந்துவிட்டவர்களின் பிணத்தைக் காட்டி மரணச் சான்றிதழ் வாங்குவதில் கஷ்டம் இருக்கிறது. எனவே அரசு அந்த விதியைத் தளர்த்தி அந்த முறையை மாற்றுவதற்கு நட வடிக்கை எடுக்கவேண்டும்.

என்னுடைய தொகுதியிலே நாகூரிலிருந்து வேட்டைக்காரன் இருப்பு வரையிலே 5 ஆயிரம் மீனவர் குடும்பங்கள் குடிசை களிலே வாழ்கிறார்கள். கடலோரப் பகுதியிலே வாழக்கூடிய அந்த மீனவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர் களுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அக்கறைக்கோட்டை, கீச்சாங்குப்பம், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படாமல் இருக்கின்றன. அதிலே இருக்கிற உறுப்பினர்களுக்கு கடன் கிடைப்பதிலே கஷ்டம் இருக்கிறது. அந்த மீனவர்கள் அரசு வங்கிகளிலே அலைய வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அந்தக் கூட்டுறவுச் சங்கங்களைச் செயல் படுத்திவைக்கவும் அவர்களுக்கு கடன்கள் கிடைக்கவும், ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் அரசு அதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-50)

வீட்டு மனை சொந்தமாக இல்லாமல் கடலோரங்களில் குடிசைகளில் இருக்கின்ற மீனவர்களுக்கு அந்த இடத்தைப் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்பதோடு, அந்தக் குடிசைகளுக்கு மின் விளக்கு வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்நாட்டு மீனவ சங்கங்களைப் பொறுத்த வரையில், இந்த ஆண்டு முடிவிற்குள்ளாக வட்டத்திற்கு ஒரு சங்கம் என்று அமைத்து, ஆறு, குளம், ஏரிகளில் மீன் பிடிக்கின்ற

[திரு. கோ. விரய்யன்] [1986 ஏப்ரல் 19

உரிமைகளை அந்தச் சங்கத்திற்கே வழங்கி, செயல்படும்
நிலையை ஏற்படுத்தித் தருமா என்பதையும் அறிய விரும்பு
கிறேன். இதற்கு முன்னால். ஆறுகளில் முன்னாள் ஏலதாரர்கள்
கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட மற்றவர்கள் ஏலம் எடுக்காத
வாறு தடுத்தும், பலாத்காரத்தைப் பயன்படுத்தியும் காரியங்
களைச் செய்து கொண்டு வருகிறார்கள். இதனால் சில இடங்
களில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள், கொலைகள்கூட நடந்
திருப்பதை அரசு அறிந்திருக்கும். ஆகவே, இது போன்ற
நிலைமைகளைத் தடுப்பதற்காக, வட்டத்திற்கு ஒரு மீனவக்
கூட்டுறவுச் சங்கம் என்று வைத்து, அதுமட்டுமே செயல்
படுவதற்கு உரிய பாதுகாப்பைத் தருவதற்கு அரசு முன்வருமா
என்று அறிய விரும்புவதோடு, அரசு உரிய பாதுகாப்பைக்
கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலத்துறையைப் பொறுத்த வரையில்,
குறிப்பாக, மேல்நிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி படிக்கின்ற
மாணவர்கள் தங்கும் விடுதிகளைப் பற்றி இந்தக் கொள்கைக்
குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. 543 விடுதிகள் இருக்
கின்றன என்றும், அதில் 49 விடுதிகளுக்கு மட்டுமே சொந்தக்
கட்டிடங்கள் இருக்கின்றன. மீதியுள்ள 494 விடுதிகள் வாட
கைக் கட்டிடங்களிலேயே இருப்பதாகவும் குறிப்பிடப்பட்
டிருக்கிறது. சென்ற ஆண்டு முழுவதும் இரண்டு விடுதிகளுக்கு
மட்டுமே சொந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்
பட்டிருக்கிறது. இந்த அடிப்படையிலே சென்றால்—ஒரு ஆண்டுக்கு
இரண்டு என்றால் ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு மேல்
செல்ல வேண்டிய நிலை ஏற்படும். திருவாரூரில் அரசுக் கல்லூ
ரிக்கு இருக்கின்ற பிற்பட்ட நல மாணவ விடுதி ஒரு கோடவுன்
போன்ற இடத்தில் இருக்கிறது. இப்படிப் பல மாணவ
விடுதிகள் மோசமான இடங்களில் இருக்கின்றன. இதனால்
மாணவர்களின் மூளை வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. அதோடு
தொற்று நோய் வரும் நிலையில் மாணவர்கள் பாதிக்கப்படு
கிறார்கள். ஆகவே, பல்வேறு வேலைகளுக்குப் பயன்படுத்திக்
கொள்கின்ற என்.ஆர்.இ.பி. திட்டத்தின் மூலமாக மீதியுள்ள
494 விடுதிகளுக்கும் கட்டிடம் கட்டிக் கொடுக்கின்ற பொறுப்பை
உடனடியாக எடுத்துக்கொண்டு, இன்னும் இரண்டு மூன்று
ஆண்டுகளிலே கட்டிக் கொடுக்கும் முயற்சியிலே அரசு
நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புவதோடு,
கட்டி முடிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும்
கேட்டுக்கொள்கிறேன்.

பல கல்லூரிகளில், தொழில் பயிற்சி நிலையங்களில் மாணவர்
களுக்கு உணவுக்காக 80 ரூபாயும், உயர்நிலைப் பள்ளி, மேல்
நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மாதம் 60 ரூபாய் உணவுக்காக
வும் செலவிடப்படுவதாகக் கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டிருக்
கிறது. ஆனால் அரசுக் கல்லூரிகளில் உள்ள பொது விடு



1986 ஏப்ரல் 19] [திரு. கோ. விரய்யன்]

களில் மாணவர்களிடத்திலிருந்து மாதம் 200 ரூபாய், 250
ரூபாய் வரைக்கும் வசூலிக்கப்படுகிறது. அப்படி அந்த விடுதி
களில் 200 ரூபாய் முதல் 250 ரூபாய் வரையில் மாணவர்களுக்
காகச் செலவழிக்கின்ற நேரத்தில் நம்முடைய விடுதிகளில்
தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு தினசரி சராசரியாகப்
பார்த்தால் கல்லூரி மாணவர்களுக்கு 2 ரூபாய் 67 காசுகளும்,
உயர்நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற
மாணவர்களுக்கு 2 ரூபாய் என்று கணக்கிட்டுப் போட்டாலும்
கூட, இது முழுவதும் அவர்களுக்குப் போய்ச் சேராத வகையில்,
காண்ட்ராக்டர்கள் அந்த உணவுப் பொருட்களை வாங்கு
கின்ற நேரத்தில் அந்தத் தொகை முழுவதையும் செலவழிக்காத
காரணத்தினால், அதன் அளவு குறைந்து, மாணவர்களின்
உடல் நலம் குறைவதோடு, மூளை வளர்ச்சியும் பாதிக்கப்படு
கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தப் பிள்ளைகளைப் பெற்றவர்கள் தங்களால் படிக்கவைக்க
முடியாத நிலையிலேதான், கஷ்டப்பட்டு அனுப்புகிறார்கள்.
அப்படிப்பட்ட பிள்ளைகளின் உடல்நல வளர்ச்சியும், மூளை
வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. எனவே, இந்தத் தொகை
போதுமானது அல்ல. குறைந்தபட்சம் 100 ரூபாயிலிருந்து 120
ரூபாய் வரையில் இந்த உணவுக் கட்டணத்தை உயர்த்தவேண்டு
மென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல இந்த உதவித் தொகை வழங்குவதிலேயும்,
90 சதவீதம் வருகை தந்திருந்தால்தான் அந்தத் தொகையைப்
பெற முடியும் என்ற நிபந்தனைகளை விதித்திருக்கிறார்கள்.
பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசே விடுமுறைவிட்டு அந்த 90
சதவீதம் ஏற்படாத நிலைமைகள் இருப்பதால், அதற்கு
மாணவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதனால்
வருகின்ற கஷ்டங்களை ஏற்க வேண்டியிருக்கிறது. ஆகவேதான்
இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை
எடுக்குமா என்று அறிய விரும்புவதோடு, நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேல் பட்டப்படிப்பு, பட்டப் படிப்பு ஆகியவற்றை பிற்பட்
டோர் நலத்துறை கவனிக்கிறது என்று குறிப்பிடப்படுகிறது.
இப்படி மேல் பட்டப்படிப்பு, பட்டப் படிப்பு படிப்பதற்காக
பிற்பட்டோர் நலத் துறையிலே வழங்குகின்ற அந்த நன்மைகளை
பிற்பட்டவர்கள் என்ற முறையிலே, பொருளாதாரத்தில் முன்
னேறியிருப்பவர்கள் தான் பயன்படுத்திக் கொள்கிறார்களே
தவிர, பிற்பட்டவர்களிலேயே உள்ள சாதாரண ஏழை எளிய
மக்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாத அந்த நிலைமைகள்
இருக்கின்றன. எனவேதான் அந்த உயர் கல்விக்கு அவர்கள்

திரு. கோ. வீரய்யன்] [1986 ஏப்ரல் 19

செல்வதற்கு வசதியாக, அந்தப் பட்டப் படிப்பையோ அல்லது பட்ட மேற்படிப்பையோ பெறுவதற்கு, பொருளாதார ரீதியாக பிற்பட்டவர்களுக்கு அந்தச் சலுகையை அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முன்னாலே, நீங்கள் பொருளாதார ரீதியிலே பிற்பட்டவர்களுக்கு என்று அறிவித்து, பிறகு அதைத் திரும்பப் பெற்று, 32 சதவிகிதத்தை, 50 சதவிதமாக உயர்த்தி அதற்கு திரு. அம்பாசங்கர் கமிஷனையும் நியமித்து........(மணியடிக்கப் பெற்றது).

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாக, பிற்பட்டோர் நலத்துறை, அதே போல் மீன் துறை பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறை பற்றி பேசுவதற்கு முன்னால், மீனவ சமுதாயத்தை பொறுத்த வரையில், தமிழகத்திலே அனைத்துப் பகுதிகளிலும் ஷெட்யூல்ட் காஸ்ட்டாக அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் எங்கள் மாவட்டத்திலே மட்டும் பிற்பட்ட சமுதாயமாக வைத்திருக்கிற காரணத்தால், அவர்களை ஷெட்யூல்ட் காஸ்ட் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, அவர்களை அதில் சேர்க்க வேண்டுமென்று முதல் முதலாகக் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்தத் துறையில், Fishing Development Corporation and Director of Fisheries என்று வைத்துள்ளார்கள். ஆனால், இரண்டுக்கும் ஒருவர்தான் டைரக்டர். இரண்டு டைரக்டர்களை நியமனம் செய்து, அந்த இலாகாவின் வேலைகளைத் துரிதமாக்க வேண்டும். ஏனென்றால், இரண்டிற்கும் ஒருவரே பொறுப்பாக இருக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடாது. இரண்டு பேர்கள் இருக்கவேண்டுமென்பது தான் என்னுடைய கருத்து.

மீனவ மக்களைப் பொறுத்தவரையில், சீசனல் பிசினஸ். ஒரு ஆண்டில் இரண்டு மூன்று தடவைகள்தான் கேச் கிடைக்கும். ஆனால், அவர்களுக்கு அடிப்படையான எந்த வசதியும் அரசு செய்து கொடுக்கவில்லை. செய்து கொடுத்தோம் என்று சொல்கிறது. ஆனால் சரியான முறையில் செய்து தரவில்லை.

இன்லான்ட் ஃபிஷரீஸ் நன்றாக இருக்கிறது. ஆனால், அதனுடைய வருவாய் சரியான முறையிலே அரசுக்குச் சென்று சேரவில்லை. ரிசர்வாயரிலே மீன் பிடிக்கிறார்கள். அங்கேயிருக்கிற அதிகாரிகள் மீன்களைப் பிடித்துக் கொண்டு, கணக்கைச் சரியாகக் கொடுப்பதில்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், டைரக்டருக்கு நன்றாகத் தெரியும்—ஏனென்றால், அவர் அங்கே கலெக்டராக இருந்தவர்—சிற்றாறு



1986 ஏப்ரல் 19] [திரு. மா. சுந்தரதாஸ்]

பட்டினங்கால், 1, 2 மற்றும் பேச்சிப்பாறை தேக்கங்களிலே மீன் பிடிக்கிறார்கள். ஆனால், கணக்குகள் சரியாகக் கொடுப்ப தில்லை. நல்ல முறையில் மீன்களைப் பிடிக்கிறார்கள். ஃபிஷிங் சீட்களை வெளியே விற்கிறார்கள். ஆகவே, நிச்சயமாக அவற்றை அரசு கண்காணித்தால், பெரிய தொகை இன்லான்ட் ஃபிஷரீஸ் மூலம் அரசுக்கு வரும்.

அதே போன்று, வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் பார்த்தால் கடந்த ஆண்டு 10,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொன் னார்கள். என்னுடைய தொகுதியிலே 300 வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால், என்னுடைய தொகுதியிலே ஒரு வீடு கூட கட்டித்தரவில்லை. ஒப்பந்தம் தருகிற முறை சரியில்லாததால், இப்பொழுது இல்லையென்று சொல்லிவிட்டார்கள். போன ஆண்டு ரூ. 16,000 மதிப்புள்ள வீடுகள் கட்டப்போகிறோம் என்று சொன்னார்கள். வரவேற் கிறோம். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வீடு கூட கட்டித் தரவில்லை. மீனவ மக்களை நிச்சயமாக ஏமாற்றுகிறார்கள் என்று என்னால் சொல்ல முடியும்.

என்னுடைய பகுதியில் சீ எரோஷன் அடிக்கடி நடந்து கொண்டிருக்கிறது. சீ எரோஷன் காரணமாக, மீன் பிடிப்ப தற்கு இடம் இல்லை. முதல் அமைச்சர் அவர்களுக்கும் அதிகாரி களுக்கும் அதுபற்றி தெரியும். நானும் மதிப்பிற்குரிய அந்தப் பகுதி எம். பி. அவர்களும் சென்று நேரில் அனுமதி கேட்டால் தான் மீன் பிடிக்க விடுவார்கள். குமரி சீதோஷ்ண நிலையில் 320 படகுகளை வைத்து மீன் பிடிக்க முடியாது. ஆனால், அதை வைத்து பிடிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அங்கு பிடிக்காவிட்டால், கேரளாவிற்குச் சென்றுதான் மீன் பிடிக்க முடியும். கேரளாவில் உறுப்பினர்கள் அந்த மெஷினரி போட்டை உள்ளே விடுவதில்லை. அதற்கு அங்கே இருக்கிற அமைச்சரைச் சந்தித்தால்தான் விடுவார்கள் என்ற நிலை யிருக்கிறது. ஆகவே, எங்களுடைய மாவட்டத்தில், தேங்காய் பட்டினம் என்ற இடத்தில் ஒரு ஃபிஷிங் கார்ப்பரேஷன் கட்டித் தரவேண்டும். இந்த பாலிசி நோட்டில் அதுபற்றி சொல்லப் பட்டிருக்கிறது.

எங்களுடைய மீனவப் பகுதியைப் பொறுத்தவரையில், தங்குவதற்கு வீடு கிடையாது, சாலை வசதி கிடையாது, அவர்களுக்குத் தண்ணீர் வசதி கிடையாது. குடி தண்ணீர் கூட உள்ளூரிலே இருந்துதான் கொண்டு செல்ல வேண்டும், அதற்கான திட்டங்களும் இல்லை. அதே போல் முன்னால் கட்டிய வீடுகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. அவை பழுது பார்க்கப்படவில்லை. புதிதாக கட்டுகின்ற திட்டம் ஆரம்பிக் கப்பட்டது. கடந்த ஆண்டு ஒரு வீடுகூட கட்டிக் கொடுக்கப்பட வில்லை. காரணம் கேட்டால், ரூ. 16,000 கணக்கைச் சொல்லி

[திரு. மா. சுந்தரதாஸ்] [1986 ஏப்ரல் 19

கட்டித்தருவதில்லை. இந்த ஆண்டாவது 300 வீடுகள் கட்டித்
தரவேண்டும். தமிழகத்தில் உள்ள நான்கில் ஒரு பகுதி மீனவர்
கள் குமரி மாவட்டத்தில் தான் வாழ்கிறார்கள்.

(பிற்பகல் 2-00)

எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த
வரையில் அங்கே மீனவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை.
அங்கே பிடிக்கின்ற மீனை கேரளாவுக்குக் கொண்டு
சென்று, அரசுக்குச் சொந்தமான அல்லது தனியார்களுக்கு
சொந்தமான நிறுவனங்களில் பதப்படுத்தி 'எக்ஸ்போர்ட்'
செய்கிறார்கள். அதனால், மீன்பிடித் தொழிலில் நம்முடைய
மீனவர்களுக்கு இலாபம் இல்லை, கேரளத்தில் இருப்பவர்
களுக்குத் தான் இலாபமாக இருக்கிறது. ஆகவே, மீனைப்
பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய கன்னியாகுமரி மாவட்டத்தில்
ஒரு தொழிற்சாலையை அரசுத் துறையிலோ தனியார் துறை
யிலோ ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். பல முறை இதுபற்றி கேட்டுக்கொண்டிருக்
கிறோம். இருந்தபோதிலும் ஒரு பாக்டரி அங்கே தொடங்கப்
படவில்லை. அங்கே ஒரு பாக்டரி கட்டினால் ஓரளவுக்கு
வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும். கிடைக்கின்ற
மீனை பதப்படுத்தி எக்ஸ்போர்ட் செய்தால் நல்ல இலாபமும்
கிடைக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இரால் சீசனில் நிறைய
இரால் பிடிக்கிறார்கள். அதைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய
அங்கே ஒரு பாக்டரி இல்லாத காரணத்தால் கேரளத்தில்
உள்ளவர்கள் லாரிகளைக் கொண்டுவந்து இரால்களை வாங்கிச்
செல்கிறார்கள். குறைந்த விலைக்கு வாங்கி சென்று நிறைய
இலாபம் சம்பாதிக்கிறார்கள். விற்பனை செய்து விட்டு மீதி
இருக்கிற மீனை ஸ்டோர் பண்ணுவதற்கும் வசதி இல்லை.
என்னுடைய தொகுதியில் ஒரு 'ஐஸ் பிளாண்ட்' இருக்கிறது.
கடந்த ஐந்தாண்டு காலமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்
கிறது. வேலை செய்யவில்லை. நான் சட்டமன்ற உறுப்பின
ராக வந்த நாளிலிருந்து சொல்லிக்கொண்டிருக்கிறேன்.
பயனில்லை. அதனால் ஒரு நன்மையும் இல்லை. (மணியடிக்கப்
பெற்றது)

*மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மீனளம், பிற்படுத்தப்பட்ட
வகுப்பினர் முதலியோர் நலன் ஆகிய இரண்டு துறைகளும்
மிக முக்கியமான, சாதாரண அடித்தளத்து மக்களைக் கொண்டி
ருக்கிற துறைகள். கிட்டத்தட்ட 65 சதவித மக்கள், அதாவது
கிட்டத்தட்ட 3 கோடி மக்களுக்குப் பயன் அளிக்கிற மிகச்
சிறப்பான துறை பிற்பட்டோர் நலத்துறை. மீனளத்துறை



1986 ஏப்ரல் 19] [திரு. எம். ஆர். கோவேந்தன்]

சம்பந்தப்பட்ட மக்கள் ஏறத்தாழ 4 இலட்சம் மக்கள் இருக்கி
றார்கள். அவர்கள் எல்லாம் முக்கியமாக கடலையே நம்பி
வாழ்கிறார்கள். கொந்தளிக்கின்ற கடலிலே போய் மீன்
பிடித்து, நமக்கெல்லாம் சத்துள்ள உணவான மீனைத்
தந்துகொண்டிருக்கிறார்கள். அந்நியச் செலாவணி ஈட்டுகின்ற
இராலைப் பிடித்து வந்து, அதன் மூலமாக கோடிக்கணக்கான
ரூபாய் பெற்றுத் தந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட
முக்கியமான இரண்டு துறைகளைப்பற்றி இன்றைக்கு விவா
திக்கப்பட இருக்கிறது. இதிலே ஒரு துறை பற்றி விளக்கம்
அளிக்க வேண்டுமென்றாலே ஒரு மணி நேரத்திற்குமேல் எடுத்
துக்கொள்ள வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்
சர்களும் பொறுமையாக இருந்தாலும் கூட, பார்வையாளர்
களும் மற்றவர்களும் அப்படி இருக்க முடியாத நேரமாக
இருக்கிற இந்தக் கட்டத்திலே என்னைக் கொண்டுவந்து
நிறுத்தியிருக்கிறார், நம்முடைய பேரவைத் தலைவர்.

முழுமையாக விளக்கம் அளிக்க முடியுமா என்ற சந்தேகத்தில்
தான் கொள்கை விளக்கக் குறிப்பிலே எல்லாவற்றையும் தெளி
வாகச் சொல்லியிருக்கிறேன். எல்லா விவரங்களையும் அதிலே
கொடுத்திருக்கிறேன். புதிய திட்டங்கள் பற்றிய அறிவிப்புகளை
யும் தந்திருக்கிறேன். இதுவரையில் சாதித்த சாதனைகளை
யும் தந்திருக்கிறேன்.

இந்த விவாதத்திலே பங்குகொண்டவர்கள் இந்த
கொள்கை விளக்கக் குறிப்புகளை முழுமையாகப் படிக்காமல்,
அவர்களுடைய மனப்போக்கிலே பேசியிருக்கிறார்கள் என்று
நான் கருதுகிறேன். நான் இதைச் சொல்லும் போது
மாண்புமிகு உறுப்பினர்கள் வருத்தப்படக் கூடாது. முழுமை
யாகப் படித்திருந்தால் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்
பட்டிருக்கின்றன என்பதையும், புதிய திட்டங்களாக என்
னென்ன அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அவர்கள்
தெரிந்திருக்க முடியும். மொத்தமாக என்மேல் ஏதாவது
காழ்ப்பு உணர்ச்சி இருக்குமானால், அதை வைத்து மானி
யத்திலே பேசினால், அது பயனளிப்பதாக இருக்காது.
மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள்
நன்றாக விவரம் தெரிந்தவர்கள். இருந்தாலும் அவர்கள்
வேண்டுமென்றே என்மீது குற்றம் சொல்ல வேண்டும் என்ப
தற்காக சிலவற்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்களைப்
பொறுத்த வரையில் அவர்கள் ஒரு சாதாரண மீனவர் அல்ல;
நல்ல விசைப்படகுக்காரர். கட்டுமரம் இருக்கக்கூடாது
என்று கருதுகிறவர்களில் அவரும் ஒருவர். (குறுக்கீடு)
இறுதியில் வேண்டுமானால் விளக்கம் கேட்கலாம். மீனவர்
களைப் பற்றி, மீன்பிடித் தொழிலைப்பற்றி எல்லாம் சொல்லி
மெரினா கடற்கரை வரையிலுள்ள பிரச்சினைகளை எல்லாம்

சொல்லிவந்தார்கள். நான் உண்மையான மீனவன் இல்லை; மீனவர் பிரச்சினை புரியாதவன் என்றும் சொன்னார்கள். கிட்டத்தட்ட 1000 கிலோ மீட்டர் தூரம் இருக்கிற கடற்கரையில் வாழுகின்ற 4 இலட்சம் மீனவர்களும் ஒட்டு மொத்தமாக என்னை ஒரு மீனவனாக ஏற்றுக்கொண்டிருக்கி றார்கள், மீனவர் பிரதிநிதியாக எல்லோரும் என்னை ஒட்டு மொத்தமாக ஆதரிக்கிறார்கள் என்பதை அவருக்குத் தெரிவித் துக் கொள்கிறேன். சமீபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கூட, "நீங்கள்தான் மீனவர் பிரதிநிதி. நீங்கள்தான் எங்க ளிடம் ஆர்வம் காட்டுகிறீர்கள், அக்கறை காட்டுகிறீர்கள்" என்று சொன்னார்கள். சமீபத்தில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட அவர் களாகவே இதைக் கூறினார்கள்.

அவர்கள் அப்படி கூறுவதற்குக் காரணம், மீனவ மக்களுக்காக நல்ல திட்டங்கள் எல்லாம் நிறை வேற்றப்பட்டு வருகின்றன என்பதுதான். 75 ஆண்டுகளின் மீன் வளத்துறை சரித்திரத்தைப் பார்க்கிறபோது மீனவர்களுடைய உண்மையான கோரிக்கைகளை, அவர் களுடைய பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து அதனை ஒரு மிகப்பெரிய துறையாக ஆக்கவேண்டும், மீனவ மக்க ளுக்கு நல்ல திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று முயற்சி செய்திருக்கிறார்களா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை. இன்னும் சொல்லப் போனால், மீனளத் துறையிலே அதிகமான அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அந்தப் பிரச்சினையிலே அதிகமாக ஈடு பட்டவர் டாக்டர் புரட்சித் தலைவர். அவர்கள் இட்ட பணியினை செயலாக்க நானும் பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

இதுவரையில் சாலை அமைப்பது நெடுஞ்சாலைத் துறையிடம் இருந்தது. அதை இப்போது மீனளத் துறைக்கு மாற்றித் தந்திருக்கிறார் டாக்டர் புரட்சித் தலைவர். புயல் பாதுகாப்புக் கட்டடம் இதுவரையில் பொதுப்பணித்துறையிடம் இருந்தது. இன்று மீனளத்துறைக்கு மாற்றித்தந்திருக்கிறார்கள். கடல் அரிப்பு என்பது இதுவரையில் பொதுப்பணித் துறையிலே இருந்தது. இன்றைக்கு அதையும் மீனளத் துறைக்கு மாற்றித்தந்திருக்கிறார்கள். மீனளத்துறை மீனவ மக்களுக்காக விரைந்து திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அதுவும் மீனளத் துறை மூலமாகவே நிறைவேற்ற வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருப்பது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். கடல் அரிப்பு எந்த அளவுக்கு என்பதைப்பார்த்து, தகுந்த வடிவமைப்போடு கல்லைப் போட்டு கட்டுமரங்களை ஏற்றி, நாட்டுப்படகுகளை இறக்குவதற்கு வசதியாகப் போட முடியும் என்று கருதி மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மூன்று திட்டங்களையும் ஏற்றுள்ளார்கள். விரைவில்,





அந்த உத்தரவு வர இருக்கிறது. அதுமட்டுமல்ல. மாண்பு மிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் நீங்கள் ஏன் படகே தர வில்லை என்று சொன்னார்கள். படகு தரவேண் டும் என்றுதான் புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பினார்கள். ஆனால் ஒட்டுமொத்தமாக வாங்கப்பட்ட சுமார் 9 கோடி ரூபாய் கடனுக்கு அவர்கள் வட்டியும் தரவில்லை, தவணைக் கடனும் திருப்பிக் கொடுக்க முன்வரவில்லை. இதனால் படகுகள் வாங்க பேங்கிலே லோன் கேட்டால் தர முடியாது என்று சொல்லி விட்டார்கள். அதனால்தான் புரட்சித் தலைவர் அவர்கள் 4.25 கோடி ரூபாயை அதாவது அந்த மீனவர்கள் பாங்குக்குக் கட்டவேண்டிய கடனை அரசே கட்டவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய சாதனை? அதற்காக எத்தனை ஆண்டுகள் மீனவர்கள் கோரிக்கை எழுப்பி வந்தார்கள். இப்போது முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

திரு. n. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, படகு தர வில்லை என்று நான் பேசவே இல்லை. ஆனால், நான் படகு கேட்டதாகச் சொல்கிறார் அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1969-க்குப் பிறகு படகே வழங்கவில் லையே, ஏன் என்று கேட்டார். நான் இங்கேதான் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். வேண்டும் என்றால் குறிப்பைப் பாருங் கள்.

4.25 கோடி ரூபாயை அரசே செலுத்த வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள், என்ப தையும், தொடர்ந்து அரசின் சார்பிலே வழங்கப்பட்ட கடன் சுமார் 4½ கோடி ரூபாயையும் அரசு தள்ளுபடி செய்கிற வகையில் நடவடிக்கை எடுப்பது பற்றிப் பரிசீலித்துக்கொண்டி ருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித் துக்கொள்கிறேன். இங்கே படகு வாங்குவதற்காக ஒரு குழு வையே அமைக்க புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டி ருக்கிறார்கள். படகு வழங்குவதற்காக பேங்கு அதிகாரிகள், மீனளத்துறை அதிகாரிகள், மீனவ சமுதாயத்திலே இருப்பவர் களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து மீனவர்களுக்கு அதை வாங்கிக் கொடுத்தால் அந்தப் படகுக்கு உள்ள கடனை எப்படி திருப்பிச் செலுத்துவது, படகை எப்படி பராமரிப்பது, எப்படி மீனவர்களுக்குப் பாதிப்பு இல்லாத வகையில், இந்தக் கடனைச் சிறுகச் சிறுக பெறுவது என்று பார்த்து அந்தக் குழு ஆராய்ந்து அறிக்கை அளித்ததற்குப் பிறகு படகு கொடுக்கிற சூழ்நிலை உருவாகும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். கடலோர மீனவர் ஆலோசனைக் குழு அமைக்க உத்தரவிடப்பட்டு இருக்கிறது. அதாவது, கடலோர மீன வர்களின் பிரச்சினைகளை எல்லாம் தெரிந்து அவர்களுடைய

[திரு. எம். ஆர். கோவேந்தன்] [1986 ஏப்ரல் 19

கோரிக்கைகளை எல்லாம் தெரிந்து, அவர்களுடைய அடிப்
படை திட்டங்கள் என்னவென்று தெரிந்து, அதையெல்லாம்
ஒட்டுமொத்தமாகச் சிறப்பாகச் செய்வதற்காக அவர்கள்
கருத்தை அறிந்து, திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்
தான் இந்த தமிழ்நாடு கடல் மீனவர் ஆலோசனைக் குழு
அமைக்க உத்தரவிட்டிருக்கிறோம். அதைப்போல உள்நாட்டு
மீனவர் ஆலோசனைக் குழு அதாவது உள்நாட்டு நீர்நிலை
களில் எப்படி இந்த உள்நாட்டு மீனவர்களுக்கு வாய்ப்பு
தருவது, அவர்களை எப்படி பொருளாதாரத்தில் உயர்த்து
வது என்பது போன்ற பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து
விவரங்களை எடுத்துச் சொல்வதற்காக, அப்படிப்பட்ட தமிழ்
நாடு உள்நாட்டு மீனவர் ஆலோசனைக்குழு ஒன்றையும் அமைக்க
இருக்கிறோம்.

(பிற்பகல் 2-10)

மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்
என்று நாங்கள் இப்போது அதை தீவிரமாக பரிசீலித்துக் கொண்
டிருக்கிறோம். அப்படி அவர்களுக்கு அடையாள அட்டைகள்
வழங்கினால் அவர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர்
களாகவும் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர் ஆனால் தான்
விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு 15 ஆயிரம்
ரூபாய் கிடைக்கும். [illegible] சட்டமன்ற உறுப்பினர்
பொன்னுரங்கம் அவர்கள் பேசும்போதுகூட சொன்னார்கள்—
எல்லாம் மத்திய அரசுதானே தருகிறது என்று சொன்னார்கள்.

மத்திய அரசு மட்டும் தரவில்லை! மாநில அரசு ரூ. 4-50,
மத்திய அரசு ரூ. 4-50 என்று ஒரு மீனவருக்கு 9 ரூபாய் கொடுக்
கிறோம். முதலிலே நாங்கள் விபத்து காப்புறுதித் திட்டத்திற்கு
கட்ட வேண்டிய பணத்தைக் கட்டுகிறோம். அந்தப் பணம் கட்டிய
சங்கத்திலே சேர்ந்ததற்குப் பின்னாலே, அவர்கள் உறுப்பினர்களாக கூட்டுறவுச்
பட்டியலில் சேர்ந்து இறந்து விட்டால், அவர்கள் பாதிக்கப்
பட்டால் [illegible] ரூ. 15 ஆயிரம், ஒரு
[illegible] வேண்டும் என்று இப்போது நாம்
[illegible] இதை எல்லாம் நீங்கள்

[illegible] நாங்கள் [illegible] மீனவர்களுக்கு அடை
யாள அட்டை வழங்க வேண்டும் என்று சொல்லி அவர்கள்
[illegible] போன்ற [illegible] வசதிகளை பெறுவதற்கான
[illegible] இதிலே உள்
[illegible] உள்நாட்டு மீனவர் [illegible] அமைக்க வேண்டும் என்று நாங்கள்
இப்போது [illegible] ஏனென்றால், 6 வட்டங்
கள் 7 வட்டங்கள் சேர்ந்து அல்லது ஒரு மாவட்டத்திற்கு ஒன்று



1986 ஏப்ரல் 19] [திரு. எம். ஆர். கோவேந்தன்]

என்று கூட மீனவர் சங்கங்களை அமைத்து அதிலே தலைவா
களாக மீனவர்கள் அல்லாதவர்கள் இருந்து கொண்டு, அதனு
டைய பலனை அனுபவித்து வந்தார்கள். இனிமேல்தான் நம்
முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்
இதனை அறிந்து, எங்கெங்கு மீனவர்கள் இருக்கிறார்களோ,
உண்மையான மீன் பிடித் தொழிலில் நேரடியாக ஈடுபடக்கூடிய
மீனவர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ, அவர்களையெல்லாம்
அதிலே உறுப்பினர்களாக ஆக்கி, அவர்கள் நேரடியாக
மீன் பிடித்து அதனுடைய முழு பலனையும் அடைகின்ற
முறையிலே அதனை மாற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கி
றார்கள். ஏனென்றால், எத்தனை மீனவர்கள் மொத்தம்
இருக்கிறார்கள், எத்தனை மீனவர்கள் சங்கத்திலே உறுப்பினர்
களாக இருக்கிறார்கள் என்ற விவரம் கூட தெரியாமல், நீண்ட
நெடு நாட்களாக அந்த உள்நாட்டு மீனவர் சங்கம் இருந்து
வருகிறது. அதை மாற்றி அமைக்கின்ற முயற்சியில் தான்
இப்படி தாலுக்காவிற்கு ஒரு சங்கம் என்று வைத்து நடத்துகின்ற
திட்டத்தை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இன்னும் மற்ற இனங்களிலேயும் நிறைய சொல்லப்பட்டி
ருக்கிறது. அதையெல்லாம் நீங்கள் படித்திருப்பீர்கள்.
தேவைக்கு மேலேயே ஏற்கெனவே திட்டங்கள் நிறைவேற்றப்
பட்டிருக்கின்றன என்று உங்களுக்கே தெரியும். இன்னும் கூட.
ஒன்ற இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக் கொள்வேன்.
மெரினா மீனவர் பிரச்சினையிலே அரசு மிக நிதானமாக மிக
எச்சரிக்கையாக நடந்து கொண்டிருக்கிறது. மெரினா பகுதி
யிலே இருக்கின்ற 3 குப்பத்தைச் சேர்ந்த மீனவர்கள் எந்தெந்த
இடத்தைக் கேட்டார்களோ, அந்த இடத்தையே கொடுப்பதற்
குத்தான் அரசு முன்வந்ததே தவிர, நாங்கள் அவர்களுக்கு விரோ
தமாகவோ, அவர்களை மீன் பிடிக்கக்கூடாது என்றோ, அவர்
களை மீன் பிடிக்க விடக் கூடாது என்றோ, புரட்சித் தலைவர்
அவர்களோ, இந்த அரசோ, நாங்களோ நினைக்கவில்லை.

இன்னமும் சொல்லப்போனால், புரட்சித் தலைவர் அவர்
களுடைய இதயத்திலேயே மீனவர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள்
என்பதை மீனவர்கள் உணரவேண்டும் என்பதற்காகத்தான்
அண்ணா சமாதிக்கும், கண்ணகி சிலைக்கும் இடையிலே மீனவர்
கள் தற்காலிகமாக மீன் பிடித்துக் கொள்ளலாம் என்று அந்த
இதய பகுதியையே கொடுத்தார்கள். இது காங்கிரஸ் கட்சியைச்
சார்ந்தவர்களுக்குக் கூட தெரியவில்லை என்றால் வேறு யாரி
டத்தில் சொல்லி அழுவது? இப்படிப்பட்ட ஒரு நிலைமையில்
அவர்களே தெரியாமல் சொல்லுகிறார்களா, அல்லது வேண்டு
மென்றே சொல்லுகிறார்களா என்று என்னால் புரிந்து கொள்ள
முடியவில்லை.

[திரு. எம். ஆர். கோவேந்தன்] [1986 ஏப்ரல் 19

அத்தோடு மீனவர்கள் உள்ளத்திலே இருந்து புரட்சித் தலைவர் அவர்களை யாராலும் அகற்ற முடியாது. மீனவர்களும் அவரை விட்டு போகவே மாட்டார்கள். எங்களுக்கு எதிராக பல பிரச்னைகளை நீங்கள் உருவாக்கினீர்கள். ஆனால், அவைகளை இப்போது விளக்கிப் பேசினால் நேரமாகிவிடும் என்பதற்காகத் தெரிவிக்க முடியவில்லை.

எனவே, இங்கே இந்தப் பிரச்னைகளைப் பொறுத்த அளவிலே பல வெட்டுத் தீர்மானங்களை, கிட்டத்தட்ட 17 பேர்கள் 28 வெட்டுத் தீர்மானங்களை கொடுத்திருக்கிறீர்கள். அவைகளை திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மீனள மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, 1968 வரையில் படகு வழங்குவதற்காக விண்ணப்பங்கள் துறையின் மூலமாக வாங்கப்பட்டது. நான் துறை என்று சொல்லுகிறேன். கார்ப்பொரேஷனைச் சொல்லவில்லை. அப்போது டெப்பாசிட் டாக 500 ரூபாய் வாங்கினார்கள். போட்டும் (படகும்) கொடுக்க வில்லை. பிறகு அந்த ஸ்கீமையே குளோஸ் பண்ணிவிட்டார்கள். ஆனால், அப்படி 500 ரூபாய் கட்டி அப்ளிகேஷன் போட்டார்களே 68 வரையில், அதற்குமேல் அப்ளிகேஷன்களை டிபார்ட்மெண்டும் வாங்கவில்லை, கார்ப்பொரேஷனும் வாங்க வில்லை; கார்ப்பொரேஷன் எப்போதுமே வாங்கவில்லை. அந்தப் பணம் இதுவரையில் அவர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படாமல் இருப்பதை அமைச்சர் அறிவாரா ? அப்படி இல்லை என்றால், இலாகாவிலே விசாரித்து அந்தக் குடும்பங்களுக்கு உடனடியாக அந்த டெபாசிட் தொகையை திருப்பிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விவரங்களை என்னிடத்தில் தந்தால் அதுபற்றி பரிசீலிக்கலாம். இந்த நேரத்தில் இன்னும் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய உறுப்பினர் வேணுகோபால் பேசுகிறபோது உண்மையான மீனவர் யார் என்ற கேள்வியை எழுப்பினார்கள். மீனவர்களுக்கு நாம் சுமார் 1,000 படகுகளை வழங்கியதில், 300 மீனவர்கள் மட்டும் தான் வாங்கியிருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் உத்தி யோகம் பார்ப்பவர்களும், வசதி படைத்தவர்களும் ஆவார்கள். அதை ஒரு குழுவை போட்டே பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். உண்மையான மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களுக்கு மட்டும்தான் அரசு சலுகைகள் கிடைக்கும். ஏமாற்றுபவர்களுக்கு கிடைக்காது என்பதைத் தெரிவித்து மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 19]

திரு. எஸ். வேணுகோபால் : தலைவர் அவர்களே,

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இப்போது மீனளத்துறை மானியக் கோரிக்கை மீது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 21 — மீனளம்,

திருவாளர்கள் சு. பாலன், கோ. வீரய்யன், எ. எஸ். ஏ. ஆறுமுகம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

திருவாளர்கள் பொ. உத்திராபதி, சா. ஜெயச்சந்திரன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 21— மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,12,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் பொறுத்தவரையில் பல சிறப்புமிக்க திட்டங்களை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்துள்ளார் கள். இந்த ஆண்டில் மாணவரில்லங்களைக் கட்டுவதற்காக 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற போது மாணவரில்லங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கிக் கொண்டிருப்பதாகவும், தனிப்பட்டவர்களின் கட்டிடங்களாக இருப்பதால் அதனை பராமரிக்க முடியாமல் இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். விரைவாக அரசு புதிய கட்டிடங்களைக் கட்டித் தரவேண்டு மென்ற கோரிக்கையையும் அவர்கள் எல்லோரும் வைத்தார் கள். இதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களி டம் சொல்லி இந்த ஆண்டில் 12 விடுதிகள் கட்டுவதற்கு 50 இலட்சம் ரூபாய் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. எம். ஆர். கோவேந்தன்] [1986 ஏப்ரல் 19

அதுமட்டுமல்லாமல் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக மாவட்டத்திற்கு ஐந்து கட்டிடங்கள என்ற அளவிலே, ஒரு கட்டிடம் 4 இலட்சம் ரூபாய் செல விலே, கட்ட வேண்டுமென்று ஒரு திட்டம், தீவிரமாக அரசினு டைய பரிசீலனையில் இருக்கிறது. இந்தத் திட்டம், நிறை வேற்றப்பட்டால் விரைவில் ஒரு ஐந்தாண்டுக் காலத்தில் இந்தக் கட்டிடங்களை கட்டி முடித்து விடலாம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து 12 கள்ளர் நடுநிலைப் பள்ளிகளில் 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் கழிப்பிட வசதிகளைச் செய்ய நிதி ஒதுக்கியிருக்கிறோம். அதைப்போல 196 கள்ளர் தொடக் கப்பள்ளிகளில் தளவாடங்களுக்காக 98 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறோம்.

(பிற்பகல் 2–20)

அடுத்து கல்லூரி மாணவர்கள் விடுதிக்கு 20 எரி வாயு அடுப்புகளுக்காக 3.9 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கி றோம். இப்படி பல்வேறு திட்டங்கள் சிறப்பாக செயல் படுத்தப்பட்டு வருகிறது என்பதையும், இந்தத் திட்டங்கள் ஒட்டுமொத்தமாக பிற்பட்ட மக்களைச் சென்று அடைகின் றன என்பதையும் இதிலே வருகிற தொகையை மட்டும் வைத்து பிற்பட்ட மக்களுக்கான திட்டங்கள் இவ்வளவுதானா என்று கேட்கவேண்டாம் என்றும், ஏற்கனவே பல்வேறு துறை கள் மூலமாக பல்வேறு நலத்திட்டங்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேருகின்றன என்பதோடு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்த திட்டமான, 3 வருடங்களில் 30 இலட்சம் வீடுகள் கட்டித்தரப்படும் என்கிற அந்த திட்டத்திலே அதிகமான அளவிற்கு பயன்பெறப் போகிற வர்கள் இந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள்தான் என்பதையும் நான் கூற விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையின் மீது பல்வேறு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 32—பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் முதலியோர் நலன்.**

திருவாளர்கள் சு. பாவன், மற்றும் எஸ். பி. மணவாளன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட் டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.



1986 ஏப்ரல் 19]

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் அவர்களுடைய வெட் டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற் றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி: "மானியக் கோரிக்கை எண். 32 —பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,89,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**திரு. கு. ரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அவசரமான விஷயத்தை தங்கள் மூலமாக அரசுக்குத் தெரி விக்க வேண்டும் என்று தங்கள் முன்னால் அதைச் சமர்ப்பிக் கிறேன். உழைக்கும் பத்திரிகையாளர்கள் 200 பேர்களுக்கு மேலே தங்களுக்கு இடைக்கால நிவாரணம் வேண்டும் என்று கோரி இப்போது சென்னை நகரத்திலே உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசு முக்கியமாக கவனத்தில் எடுத் துக்கொள்ள வேண்டிய விஷயம். இது விஷயத்திலே அரசு தலையி ட்டு அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் கிடைக்கும்படி நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று தங்கள் மூலமாக நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 23–4–1986 புதன் கிழமை காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–22 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

### 4. பேரவையின் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*115.* கோரிக்கை எண் — *18* மீன்வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

*116.* கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

*117.* மீன்வளத் துறையின் 1986–87 ஆம் ஆண்டிற்கான செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

118. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் 1986–87 ஆம் ஆண்டிற்கான செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

119. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் வரவினங்கள் அறிக்கைகளில் சில துறைகள் (மதுவிலக்கு-ஆயத்தீர்வை, வேளாண்மை மற்றும்— செய்தி சுற்றுலா) சம்பந்தப்பட்ட பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை (தமிழ்).

120. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் வரவினங்கள் தொடர்பான அறிக்கைகளில் வணிக வரிகள்—அறநிலையத் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் முப்பதாவது அறிக்கை (தமிழ்)

121. 1979–80 மற்றும் 1980–81 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் அறிக்கைகளில் வேளாண்மைத் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை (தமிழ்).

## இணைப்பு I.

**939 (ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

### மீன்வளத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு—1986-87.

தமிழ்நாடு 1,000 கி.மீ. நீளமுள்ள கடற்கரையையும் உள்நாட்டில் குளங்கள், ஏரிகள், கால்வாய்கள், ஆறுகள், நீர்த்தேக்கங்கள், உவர் நீர்ப்பகுதிகள் உள்ளடங்கிய 3.69 இலட்சம் ஹெக்டேர் நீர்ப்பரப்பையும் கொண்டு கடல் மற்றும் உள்நாட்டு மீன்வளத்தை அபிவிருத்தி செய்ய, பெரும் வாய்ப்புகள் பெற்று விளங்குகிறது. பிற மாநில மீன்துறைகளுக்கெல்லாம் காலத்தால் பழமையான நமது மாநில மீன்துறை, மாநிலத்தில் கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்க தகுந்த திட்டங்கள் பலவற்றை உருவாக்கி தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அடுத்தடுத்து தொடர்ந்து ஐந்தாண்டுத் திட்டங்களின் முனைப்பான செயலாக்கத்தினால், 1951-52-ம் ஆண்டில் காணப்பட்ட 81,700 டன் மீன் உற்பத்தியிலிருந்து 1985-86ம் ஆண்டின் இறுதியில் கடல் மீன் உற்பத்தியில் 2.70 இலட்சம் டன்னும் உள்நாட்டு மீன் உற்பத்தியில் 1.75 இலட்சம் டன்னும் சேர்ந்து ஆக மொத்தமாக 4.45 இலட்சம் டன் மீன் உற்பத்தியை அடையும் மகத்தான அளவைக் கண்டுள்ளது.

1.1. புரதச் சத்து நிறைந்த மீனை, நமது மக்கள் தொகையில் 80 சதவிகிதத்தினர் உணவாக உட்கொண்டு வருகின்றனர். நம் நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் தமிழ்நாட்டின் மீன் உற்பத்தி மட்டும் 15 சதவிகிதமாகிறது.

1.2. நம் மாநிலத்தின் சுமார் 4 இலட்சம் கடல் மீனவ மக்கள் தொகையில் 1 இலட்சம் மீனவர்கள் நேரிடையாக கடல் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மேலும் 60,000 மீனவர்கள் உள்நாட்டு மீன்பிடிப்புத் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாடு மீன்துறை, மீன் உற்பத்தியை அதிகரிக்கும் திட்ட முயற்சிகளுடன் மீனவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கும் திட்டங்கள் பலவற்றை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

1.3. கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்கும் பணியில் மீன்துறையின் முயற்சியில் உறுதுணையாக 1974 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும், 1976 ஆம் ஆண்டு முதல் மாவட்ட அளவிலான மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளும் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் கடல் மீன்பிடிப்பு மற்றும் விற்பனையில் மும்முரமாகவும் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் உள்நாட்டு நீர்நிலைகளில் கூட்டின மீன் வளர்ப்பு முறை மூலம் உற்பத்தியை மேம்படுத்தும் முயற்சியில் மும்முரமாகவும் இயங்கி வருகின்றன.

[1986 ஏப்ரல் 19

1.4. 1985-86-ல் துவங்கப்பட்ட ஏழாவது ஐந்தாண்டுத்
திட்ட செயலாக்கத்தின் கீழ் 1989-90 ஆம் ஆண்டு இறுதியில் 3.10
இலட்சம் டன் கடல் மீன் உற்பத்தியையும் 2.10 இலட்சம் டன்
உள்நாட்டு மீன் உற்பத்தியையும் மீன்துறை இலக்காகக் கொண்
டுள்ளது. அதற்கேற்ப, 1986-87 ஆம் ஆண்டில் 2.80 இலட்சம்
டன் கடல் மீன் உற்பத்தியையும், 1.80 இலட்சம் டன் உள்
நாட்டு மீன் உற்பத்தியையும் அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்
டுள்ளது.

2. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மேலான குறிக்கோள்
களை அடைய கையாண்டு வரும் வழிவகைகளாவன :—

(அ) (1) கடல் மீன் உற்பத்தியை அதிகரிக்க தொன்று
தொட்டுப் பயன்படுத்தப்பட்டு வரும் கட்டு மரங்களுக்கு இணை
யாக கரையேற்றும் படகுகளை அறிமுகப்படுத்துதல்.

(2) கண்ணாடி இழைப்படகுகள் வாங்க மீனவர் கூட்
டுறவுச் சங்கங்களுக்கு மான்ய உதவி செய்தல்.

(ஆ) சிறுதொழில் மீனவர்களால் இயக்கப்பட்டு வரும்
பழமையான மீன்பிடிக்கலங்களின் இயக்கத் திறனை மேம்படுத்தி
அதனால் கூடுதல் மீன்பிடிப்பும் அதன் பயனாக கூடுதல் வருவா
யும் காணச் செய்யும் வகையில், படகில் உட்புறம் மற்றும்
வெளிப்புறம் பொருத்தக்கூடிய இயந்திரங்களை வாங்க அம்
மீனவர்களுக்கு மான்ய உதவி செய்தல்.

(இ) மீன்பிடித்துக் கரையேறும் இடங்களிலெல்லாம்
அவசியத் தேவைகளான மீன்பிடித் துறைமுகங்கள், பனிக்கட்டி
உற்பத்தி மற்றும் மீன்பதன அறைகள், மீன் ஏலம் மற்றும் மீன்
அனுப்ப ஆயத்தம் செய்யும் கூடங்கள் ஆகியவைகளை ஏற்படுத்
படுத்தித் தருதல்.

(ஈ) ''தனித்த பொருளாதார கடல் மண்டலத்திலுள்'
ஆழ்கடல் மீன்பிடிப்பை முனைப்பாக்க தமிழ் நாடு மீன் வளர்ச்சிக்
கழகத்தின் செயற் திறனை தீவிரப்படுத்தல்.

(உ) உவர் நீர் பரப்பை சிறப்பாக பயன்படுத்துவதுடன்
உவர் நீர் மீன்வளர்ப்பு பண்ணைகளை விரிவாக்குதல்.

(ஊ) உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதி
கரிக்க அனைத்து நீர்ப்பாசன மற்றும் இதர நீர் நிலைகளில்
தீவிர மீன் வளர்ப்பு முறைகளைக் கையாளுதல்.

(எ) மீன்பிடிப்பு, மீன் விற்பனை மற்றும் அதனைச் சார்ந்த
தொழில்களில் சிறப்பாக ஈடுபடும் வகையில் மீனவர் கூட்டுறவுச்
சங்கங்களை வலுப்படுத்துதல்.

(ஏ) மீனவர் கிராமங்களில் அடிப்படை வசதிகளான வீடு
கள், இணைப்புச் சாலைகள், குடி தண்ணீர், மற்றும் இதர
பொது வசதிகள் செய்து தருதல்.



1986 ஏப்ரல் 19]

2.1. தமிழ் நாட்டில் மீன்வளத் திட்டங்களைச் செயல்
படுத்த ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,400 இலட்சத்
தில், திட்டத்தின் முதலாண்டான 1985-86ல் ரூ. 399.78 இலட்சம்
செலவிடப்பட்டுள்ளது. இரண்டாம் ஆண்டான 1986-87-ல்
மீன்வள திட்டங்களுக்கென ரூ. 441.67 இலட்சம் செலவிட
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுத் திட்டம்,
கடல், உள்நாடு மற்றும் உவர் நீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கச்
செய்வதுடன் மீனவ மக்களின் சமூகப் பொருளாதாரத்தை மேம்
பாட்டையச் செய்யும் வகையையும் கொண்டதாக இருக்கும்.
பகுதி 2 திட்டங்களின் கீழ் கொண்டு வரப்படும் புதுத் திட்டங்
களைச் செயலாக்க ரூ. 47.16 இலட்சமும், எஞ்சிய தொகை
நடப்பிலுள்ள திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்தவும்
செலவிடப்படவிருக்கிறது. இதோடு, திட்டத்தின் கீழ் வராத
தொடரும் செயலாக்கங்களுக்கு ரூ. 383.56 இலட்சம் செலவு
செய்யப்படவிருக்கிறது.

3. சென்ற வரவு-செலவு கூட்டத் தொடரில் நான் சில
புதிய செயல் திட்டங்களை அறிவித்ததை மாண்புமிகு உறுப்
பினர்கள் அறிவர். அவைகளின்மீது அரசு எடுத்துள்ள நட
வடிக்கைகள் பின்வருமாறு :—

(i) மீனவ விதவைத் தாய்மார்களுக்கு மறுவாழ்வு அளிக்
கும் வகையில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் விதவைத்
தாய்மார்களுக்கும், நலிவுற்ற மீனவ பெண்மணிகளுக்கும் தரகு
அடிப்படையில் மீன் அங்காடிகள் ஒதுக்கப்பட வேண்டும் என்று
ஆணை பிறப்பித்துள்ளது.

(ii) ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு உள்நாட்டு மீனவர்
கூட்டுறவுச் சங்கம் மட்டுமே இருக்க வேண்டும் என்றும் அச்
சங்கம் அந்த வட்டத்தின் பேரிலேயே இருக்க வேண்டும் என்றும்
ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(iii) வருங்காலத்தில் மீனவர்களுக்கு கட்டப்படும் வீடுகள்
ஒவ்வொன்றுக்கும் ரூ. 16,000 செலவில் புதிய வடிவமைப்பு
முறையில் கட்டப்படவேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்
பட்டுள்ளன. மீனவர்களுக்காக வீடுகள் கட்ட, 1985-86-ம்
ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 50 இலட்சத்தில், 300 வீடுகள்
கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(iv) மீனவர்களின் சேமிப்புத் திட்டத்தின் கீழ் மீன்
பிடித் தொழில் இல்லாத 3 மாதங்களில் மாதம் ரூ. 60 வீதம்
மீனவர்களுக்காக வழங்கப்படுகிறது. இந்நிவாரணத் தொகை
மீனவர்களுக்கு உரிய காலத்தில் கிடைக்கும் பொருட்டு, வரவு-
செலவு திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு
மிகையாகாமல் உடனடியாக மீன்துறை இயக்குநரே வழங்கிட
அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(v) இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டினால் உயிர் இழக்கும் மீனவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக உதவித் தொகை வழங்க வசதியாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் ரூ. 50,000 சுழல் நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இச்சுழல் நிதியிலிருந்து இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் காயமுறும் மீனவர்களுக்கும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் உதவித் தொகை வழங்கிட வகைச் செய்யப்பட்டுள்ளது.

(vi) உள்நாட்டு மீனள ஆலோசனைக்குழு மற்றும் கடல் மீனள ஆலோசனைக்குழு ஆகிய குழுக்கள் அமைத்து, ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(vii) மீனவர் குடியிருப்பு மற்றும் சாலைகள் அமைக்கும் பணியையும் மற்றும் பராமரிப்பு பணியையும் பெரு வழித்துறையிடம் ஒப்படைப்பதற்குப் பதிலாக மீன் துறையே ஏற்று நடத்துவதற்கான ஆணையை அரசு வெளியிட உள்ளது.

3.1. கீழ்க்கண்ட நடவடிக்கைகளும் அரசின் பரிசீலனையில் உள்ளது :—

(i) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி பெற தகுதியுள்ள மீனவர்களுக்கு முதற்படியாக அடையாள அட்டை வழங்குவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

(ii) ஒவ்வொரு மாவட்டத்திலும் மீன் குஞ்சு உற்பத்தியில் சுய தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு பரிட் சார்த்தமாக மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறப் படும் மீன் குஞ்சுகளை மிதவைக் கூண்டுகளில், விரலளவு மீன் குஞ்சுகளாக வளர்க்கும் வரை தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்களை மீன் குஞ்சு வளர்ப்புக் குளங்களாக மாற்றியமைக்க அரசு உத்தேசித்துள்ளது. 1986–87 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ. 2.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(iii) மீனவர்களது குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு உயர்மட்ட கண்காணிப்பு குழுவினையும், முறையீடுகளை விசாரிப்பதற்கு ஒரு கண்காணிப்பு குழுவினையும், மீனவர்களுக்கு மீன்பிடி சாதனங்களை வாங்க கடன் வழங்குவது குறித்து கண்காணிக்க ஒரு குழுவினையும் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(iv) நேரடியாக மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கும் உண்மையான மீனவர்களை மட்டுமே மீனவர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டுமென்று மீன்துறை அதிகாரிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதிகாரிகள் மாவட்டங்களில் முகாமிடும் போது சோதனை முறையில் இதனை சரிபார்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



(v) மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு சுழல் முறையில் படகுகள் வழங்கும் தற்போதுள்ள நடைமுறையை சீராக்குவதற்கு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கீழ் ஒரு தக்க மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

(vi) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை திட்டத்தின் கீழ் தற்போதுள்ள குத்தகை காலமான பத்தாண்டினை மூன்றாண்டுகளாக குறைக்கும் செயற் குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

(vii) மீனவ பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படும் உதவித் தொகையை ரூ. 75லிருந்து ரூ. 125 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு அண்டை மாநிலங்களில் வழங்கப்படும் உதவித் தொகையை ஒப்பு நோக்கி பரிசீலிக்கப்படுகிறது.

(viii) கடல் முகத்துவாரங்களில் கிடைக்கும் பல இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள இறால்களைப் பிடித்து விற்பதற்கு தனியாருக்கு அனுமதி வழங்குவதற்கு பதில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமே இரண்டு மையத்தில் இத்தொழிலை ஏற்று நடத்தலாமா என்று அரசு பரிசீலித்து வருகிறது.

4. மீனள வளர்ச்சிக்கும் அதன் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக இவ்வாண்டு கீழ்க்கண்ட புதிய நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

(1) ஆறுகள் கடலில் கலக்குமிடங்களில் அமைந்திருக்கும் முகத்துவாரங்களில் மீன்பிடிப்பது குறித்து கடல் மீனவர்களுக்கும் உள்நாட்டு மீனவர்களுக்குமிடையே அடிக்கடி எழுந்து வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக "முகத்துவார மீனவர்கள்" சங்கங்களை தேவைப்படும் இடங்களில் தோற்றுவிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

(2) பெரும்பாலான கடல் முகத்துவாரங்களில் மண் மேடிட்டு படகு மூலம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலுக்குப் போய்வர மிகவும் இடைஞ்சலாக இருந்து வருகிறது. மண் மேடுகளை அகற்றி படகுகள் தாராளமாக போய்வரும் வகையில் முகத்துவாரங்களை ஆழப்படுத்துவது பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

(3) கடலோரப் பகுதிகளில் மீனவர்களுக்குத் தேவைப் படும் மண்ணெண்ணை சரிவரக் கிடைப்பதில்லை என்ற கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. மண்ணெண்ணை தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

(4) மீனவர்களுக்கான சேமிப்புத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் ஒன்பது மாதங்களுக்கு வசூலித்து அத்துடன் அரசு ரூ. 90 சேர்த்து மொத்தம் 180 ரூபாயை வருவாய் இல்லாத மூன்று மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 60 வீதம் தற்போது கொடுக்கப்பட்டு வருகிறது. விலைவாசி ஏற்றத்தினால் இத்திட்டத்தின் மூலம் இன்னும் சிறப்பாக பயன் கிடைக்கும் பொருட்டு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் 9 மாதங்களுக்கு வசூலிப்பது பற்றியும் அரசு பரிசீலிக்கும். இதன் மூலம் தொழில் இல்லாத 3 மாதங்களுக்கு மீனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 120 கிடைக்கும் வாய்ப்புள்ளது.

(5) தமிழகத்தில் 30 மகளிர் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது நல்ல முறையில் இயங்கி வருகின்றன. எனவே, இந்த ஆண்டு இன்னும் அதிக அளவில் மீனவர் மகளிர் கூட்டுறவு சங்கங்கள் துவங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

(6) நடப்பு ஆண்டில் மதுரை மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் அமுல் படுத்தி வரும் சிறப்பு மீன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 30,000 ஹெக்டேர் பரப்பளவிலிருந்து பிடிக்கப்படும் மீன்களில் இயற்கையாக உற்பத்தியாகும் மீன்களை முழுமையாக அவ்வேலையில் ஈடுபடும் மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கே வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(7) நகரசபை மற்றும் நகர பஞ்சாயத்து போன்ற பகுதிகளில் மீன் கெட்டுப் போகாமல் பாதுகாப்போடு சுகாதார முறையில் விற்கும் வகையில் மீன் அங்காடிகள் (மார்க்கெட்) அமைக்கும் கருத்துரு அரசின் கவனத்தில் இருந்து வருகிறது.

### 5. கடல் மீன்வளம்.

5.1. சிறு தொழில் மீனவர்கள் இயக்கி வரும் பழமையான மீன்பிடி கலங்களான கட்டுமரங்கள், வல்லங்கள் மூலம் பிடிக்கப்படும் மீன்கள் மட்டுமே மாநிலத்தில் மொத்த கடல் மீன் பிடிப்பில் 70 சதவிகிதத்திற்கும் மேலாக உள்ளது. இதன் காரணமாக இவ்வகை மீன்பிடித் தொழிலுக்கு ஊக்கமளிப்பதற்காக, வரும் திட்ட காலங்களில் சிறு மீனவர்களுக்கு பண உதவி செய்வதில் அதிக கவனம் செலுத்த மாநில அரசு கொள்கை ரீதியாக முடிவு செய்துள்ளது.

5.2. மைய அரசு தமிழகத்திற்கு சிறு மீனவர்களுக்கு கரையேற்றும் படகுகள் வழங்குவதற்கு ஒரு திட்டம் வகுத்துள்ளது. இத்திட்டத்தை தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் ஒரு மாதிரி நிறுவனமாக (Model Agency) செயல்படுத்தும். இத்திட்டத்தின்கீழ், மைய அரசு 50 விழுக்காடு தேசிய மான்யமாக கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திற்கும் வழங்கும். தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் தனது நிதியிலிருந்து



45 சதவீதம் கடனாக இத்திட்டத்தின் கீழ் பயனடையும் மீனவ கூட்டுறவு சங்கத்திற்கு இவ்வரசு மூலம் அளிக்கும், படகின் விலையில் மீதமுள்ள 5 சதவீதத்தை பயனடையும் சங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

1985-86 ஆம் நிதியாண்டில் 15 கரையேற்றும் படகுகள் வாங்குவதற்கு தமிழக அரசிற்கு மைய அரசு அனுமதி அளித்தது. அதில் 5 சதவீதம் பயனடையும் சங்கம் ஏற்பது நீங்கலாக 15 கரையேற்றும் படகுகள் வாங்க ரூ. 14.59 இலட்சம் செலவிட ஆணையிடப்பட்டுள்ளது.

5.3. 1986-87 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்படும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 5 பெர்ரோ தீவு வடிவமைப்பு கரையேறும் படகுகளை கடன் மற்றும் மான்ய அடிப்படையில் வழங்க ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6. நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்குதல் (உள்/வெளி இயந்திரம் பொருத்துதல்).

சிறு மீனவர்களுக்கு உதவும் மற்றுமொரு திட்டம் யாதெனில், அவர்களின் நாட்டுப் படகுகளில் உள்/வெளி இயந்திரம் பொருத்தி இயக்கச் செய்ய மான்ய உதவி செய்தலாகும்.

6.1. நாட்டுப் படகுகளை இயந்திர மயமாக்குவதனால் காணக்கூடும் அனுகூலங்களாவன :—

1. கடல் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் முயற்சிக்கு பெரிதும் உதவும்.

2. மீனை உணவாகக் கொள்வோருக்கு நியாயமான விலையில் அதிக அளவு மீன்கள் கிடைக்கச் செய்ய முடியும்.

3. கடல் மீன் பொருட்களின் ஏற்றுமதி மேலும் உயரும்.

4. நாட்டுப் படகுதாரர்களின் வருமான வாய்ப்பு உயரும்.

5. விசைப் படகுகள் மற்றும் நாட்டுப் படகுதாரர்களிடையே காணப்படும் தகராறுகளைக் குறைக்க முடியும்.

6. கடலோர அடிமட்ட வளங்களை பாதுகாக்க செய்யும்.

6.2. தங்களது நாட்டுப் படகுகளில் உள் இயந்திரம் பொருத்த இயந்திரம் வாங்க முன்வருவோருக்கு இயந்திரம் ஒன்றுக்கு ரூ. 2,500 மான்யத்தில் (20 சதவீதம் மான்யம்) 200 நாட்டுப் படகுதாரர்களுக்கு இயந்திரம் வழங்கும் வகையில், திட்ட ஒதுக்கீட்டில் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எல்லா நாட்டுப் படகுகளுக்கும் இயந்திரம் பொருத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன், படிப்படியாக இத்திட்டத்தை இவ்வரசு நிறைவேற்றி வருகிறது.

[1986 ஏப்ரல் 19

6.3. நாட்டுப் படகுகளை துரிதமாக இயந்திரமயமாக்கும் நமது முயற்சியில் கொச்சியிலுள்ள கடல் மீன் பொருட்களின் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகமும் சேர்ந்து நாட்டுப் படகுகளில் பொருத்த வாங்கும் ஒவ்வொரு வெளி இயந்திரத்திற்கும் 25 சத விகத மான்யத்தில் கூடியபட்சம் ரூ. 5,000-க்குப்பட்டு மீனவர் களுக்கு கடன் வழங்க முன் வந்துள்ளது. இதற்கென இக்கழகம் ரூ. 5 இலட்சம் இவ்வாண்டுக்கு (1985-86) விடுவித்துள்ளது.

7. இரும்பாலான சிமெண்ட் கட்டுமரங்களை அறிமுகப்படுத்துதல்:

கட்டுமரங்களில் செயல்திறனை வெளி இயந்திரங்கள் பொருத் துவதின் மூலம் அதிகரிக்கும் முயற்சி இருந்தாலும், நடப்பில் இயக்கத்தில் உள்ள 50,000 கட்டு மரங்களையும் உடனடியாக இயந்திரமயமாக்குவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லை யாதலால் வரவிருக்கும் சில ஆண்டுகளுக்கு கட்டுமரங்களும் விசைப் படகுகளும் சேர்ந்த நிலையிலேயே மீன்பிடித் தொழிலி லிருந்து வரவேண்டியிருக்கிறது. தற்சமயம் உபயோகத்திலுள்ள கட்டுமரங்களெல்லாம் குறிப்பிட்ட ஒரு வகை மரத்தாலான தினால், அம்மரம் தேவையான எண்ணிக்கையிலும் அளவிலும் கிடைக்காததோடு விலையும் ஏறிக்கொண்டு இருக்கிறது. இத னால் மீனவர்களுக்கு அவர்தம் பழுதடைந்த பழைய கட்டுமரங் களுக்கு மாற்றுக்கலன்கள் வழங்க வேண்டியது அவசியமாகிறது. மரத்தாலான கட்டு மரங்களுக்குப் பதில் பெர்ரோ சிமெண்ட் கட்டுமரங்களை பயன்படுத்தலாம் என கண்டறியப்பட்டுள்ளது.

7.1. பெர்ரோ சிமெண்ட் கட்டுமரங்களின் செயல்திறன் மற்றும் அதன் தன்மைகளைச் சரிவர காணும் வகையில், [illegible] கட்டமாக இரண்டு பெர்ரோ சிமெண்ட் கட்டுமரங்களை ஒவ் வொன்றும் ரூ. 15,000 மதிப்பீட்டில் வாங்கி மீனவர் கூட்டுறவு சங்கம் மூலம் இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கட்டு மரங்களின் செயல் திறனைக் கண்டறிந்த பின்பு, அறிமுகம் செய்வது குறித்து அரசு முடிவுக்கு வரவிருக்கிறது.

8. நைலான் நூல் விநியோகம் :

சிறு மீனவர்களின் அதாவது தொன்று தொட்டு பயன்படுத்தி வரும் கட்டுமர மீனவர்களின் நலனுக்காகவே உண்டான இத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ரூ. 8 இலட்சம் மதிப்பில் கடன் மற்றும் மான்ய அடிப்படையில் நைலான் நூல் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மீனவர்கள் தங்களுக்குத் தேவையான வலைகளை மான்ய விலையுடன் பெற முடிவதோடு எஞ்சிய கடன் தொகையை மாதத் தவணையிலும் திருப்பிச் செலுத்த முடிவதால் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட கால முதல் செயல் பட்டு வரும் இத்திட்டம் மீனவ மக்களிடையே பெரும் வரவேற்பைக் கொண்டு விளங்குகிறது. இந்த சிறப்பான திட்டம் 1986—87-ம் ஆண்டிலும் ரூ. 8 இலட்சம் செலவீட்டில் தொடர்ந்து செயல்படுத்த உள்ளது.



1986 ஏப்ரல் 19]

9. ஆழ்கடல் மீன் பிடிப்பு :

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆழ்கடல் மீன்பிடிப்பைச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மெக்சிகோ நாவாய் இரண்டுடன், ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினத்தை தளமாகக் கொண்டு இரால் மீன் பிடிப்பில் ஈடுபட்டு வருகிறது. இதோடு மத்திய அரசிடமிருந்து ரூ. 5 இலட்சம் நிதியுதவியைப் பெற்று 6 பர்சின் படகுகளை வாங்கி கர்நாடக மாநில மீன் வளர்ச்சிக் கழகத்துடன் சேர்ந்து கூட்டு முயற்சியிலும் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ளது.

10. மீன் இறங்கும் தளம் மற்றும் உள்ளடங்கிய அடிப்படை வசதிகள் :

அடுத்தடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் தொடர்ந்த இயந்திர மயமாக்கும் திட்டத்தில் இன்றளவில் தமிழ் நாட்டில் கடற்கரையோரமான நானூறுக்கும் மேற்பட்ட மீன் இறங்கும் துறைகளில் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட 'விசைப் படகுகள் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. பாதகமான கால நிலைகளில் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கவும், பிடிக்கப்பட்ட மீன்களை இலகுவாக கரையில் இறக்கவும் படகுகளுக்குத் தேவையான எரியெண்ணெய், பனிக்கட்டி முதலியவைகளை ஏற்றவும் வசதிகள் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேலும் பிடிக்கப்பட்டு வரும் மீன்களை விற்பனை மையத்துக்கு அனுப்பும் வரையிலும் பதனப்படுத்தி வைக்கவும், மீன் ஏலம் செய்யவும் படகுகளின் பழுதுகளை மேற்கொள்ளவும், தேவையான பல வசதிகளையும் கரையில் செய்ய வேண்டுவதும் அவசியமாகிறது. மீன்பிடி விசைப் படகுகளின் மேற்சொன்ன தேவைகளைச்செய்து முடிக்க மத்திய அரசின் 100 சதவீதம் நிதியுதவியுடன் கீழ்வரும் இடங்களில் பெரிய மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் சிறு மீன் இறங்கு தளங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன:

| வ. எண்ணும் இடமும். | தங்கக்கூடிய படகுகளின் எண்ணிக்கை. | கட்டுமான மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கடலூர் மீன்பிடி துறைமுகம் | 40 விசைப் படகுகள். | 10.73 |
| 2. நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகம். | 10 விசைப் படகுகள். | 5.73 |
| 3. மல்லிப்பட்டினம் மீன் இறங்கும் சிறு தளம். | 54 விசைப் படகுகள். | 10.60 |
| 4. கோடியக்கரை மீன்இறங்கும் சிறு தளம். | 40 விசைப் படகுகள். | 14.40 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | ரூபாய் இலட்சத்தில் |
| 5. இராமேசுவரம் மீன் இறங்கும் சிறு தளம். | 10 விசைப் படகுகள். | 9.46 |
| 6. தூத்துக்குடி மீன்பிடித்துறை முகம். | 400 விசைப் படகுகள் மற்றும் 10 நாவாய்கள். | 202.86 |
| 7. சென்னை மீன்பிடித்துறை முகம். | 500 விசைப் படகுகள் மற்றும் 50 நாவாய்கள். | 1,100.00 |
| 8. மண்டபம் கரைச்சுவர் | 10 விசைப் படகுகள். | இரயில்வே யிடமிருந்து பெறப் பட்டது. |

மேலும் இதே மாதிரியான வசதிகள் மத்திய அரசின் 50% நிதியுதவியுடன் கீழ் வரும் இடங்களில் செய்யப்பட்டு வரப் படுகிறது.

| வரிசை எண்ணும் இடமும். (1) | தங்கக்கூடிய படகுகளின் எண்ணிக்கை. (2) | செலவின் மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. பழையார் மீன்பிடித்துறை முகம். | 75 விசைப் படகுகள். | 85.00 |
| 2. தொண்டி மீன் இறங்கும் சிறு தளம். | 100 விசைப் படகுகள். | 52.55 |
| 3. கோட்டைப்பட்டினம் மீன் இறங்கும் தளம். | 40 விசைப் படகுகள். | 24.50 |
| 4. வாலிநோக்கம் மீன்பிடித் துறைமுகம். | 150 விசைப் படகுகள். | 137.16 |
| 5. சின்னமுட்டம் மீன் பிடித் துறைமுகம். | 240 விசைப் படகுகள் மற்றும் 10 நாவாய்கள். | 763.00 |

செங்கற்பட்டு மாவட்டம், மாமல்லபுரம், தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டை. இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் மற்றும் புக்கையூர், கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் மற்றும் தேங்காய்ப்பட்டினம் ஆகிய இடங்களில் மீன்இறங்கும்



சிறுதளங்கள் அமைக்கக் கூடிய சாத்தியக்கூறுகளை பெங்களூர் மத்திய கடலோர மீன் வள பொறியியல் நிறுவனத்துடன் கலந்து கண்டறியும் நிலை ஆய்வில் இருந்து வருகிறது.

மீன்பிடி விசைப் படகுகளுக்கும், தங்குதளம் மற்றும் மீன் இறங்குந் தளம் ஆகிய வசதிகளைச் செய்வதுடன் கடல் மீன் உற்பத்தியில் 70% க்கும் மேலாக பங்கு வகிக்கும் நாட்டுப் படகுகளுக்கு தேவையான அத்தியாவசிய வசதிகளான இணைப்புச் சாலைகள், மீன் இறக்கும் தளங்கள், மீன் பதன நிலையங்கள், மீன் ஏலம் மற்றும் மீனை அனுப்ப ஆயத்தம் செய்யும் கூடங்கள், பழுது பார்க்கும் வசதிகள், வலைகள் பின்னும் கூடங்கள், சமுதாய கூடங்கள், இதர வசதிகள் ஆகியவையும் கீழ்வரும் இடங்களில் செய்யப்பட்டு வரப்படுகின்றன:—

| | | |
|---|---|---|
| 1. பழையாறு-தஞ்சை மாவட்டம் | .. | ரூ. 27.18 இலட்சம் மதிப்பீடு. |
| 2. தொண்டி-இராமநாதபுரம் மாவட்டம் | | ரூ. 49.50 இலட்சம் மதிப்பீடு. |
| 3. வாலிநோக்கம்-இராமநாதபுரம் மாவட்டம். | | ரூ. 17.71 இலட்சம் மதிப்பீடு. |
| 4. ஏர்வாடி-இராமநாதபுரம் மாவட்டம் | | ரூ. 25.00 இலட்சம் மதிப்பீடு. |

இதோடு கன்னியாகுமரி மாவட்டம் முட்டத்தில் இத்தகைய வசதிகள் ரூ. 12.60 இலட்சம் மதிப்பீட்டில் செய்ய மத்திய அரசு சமீபத்தில் அனுமதியளித்துள்ளது. மேலும் கீழ்வரும் 10 இடங்களிலும் இத்தகைய வசதிகளைச் செய்யும் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது :

| | | |
|---|---|---|
| 1. கூனிமேடு | .. | தென்னாற்காடு மாவட்டம் |
| 2. பெரிய குப்பம் | .. | ௸ |
| 3. பூம்புகார் | .. | தஞ்சாவூர் மாவட்டம். |
| 4. நாகூர் | .. | ௸ |
| 5. செங்கான்காடு | .. | ௸ |
| 6. திருப்பாலைக்குடி | .. | இராமநாதபுரம் மாவட்டம் |
| 7. கீழமுந்தல் | .. | ௸ |
| 8. பெரியபட்டினம் | .. | ௸ |
| 9. கோடிமுனை | .. | கன்னியாகுமரி மாவட்டம். |
| 10. வள்ளவிளை | .. | ௸ |

இத்தகைய திட்டங்கள் மேலும் மீனவ கிராமங்களுக்கு விரிவாக்கப்படும்.

11. வழிகாட்டி விளக்குகள் அமைத்தல் :

வழிகாட்டி விளக்குகள் அமைப்பு மீனவ கிராமங்களுக்கு மிக
வும் இன்றியமையாததாகும். இரவு நேரங்களில் மீன்பிடி படகுகள்
பாதுகாப்பாக கரை வந்து சேர இது வழிகாட்டுகிறது. ஆறாவது
ஐந்தாண்டுத் திட்ட கால இறுதி வரையில் 40 மீனவ கிராமங்களில்
ரூ. 11.40 இலட்சம் மதிப்பீட்டில் வழிகாட்டி விளக்குகள்
அமைக்க அரசு அனுமதி அளித்தது. 1985–86-ல் மேலும் 7
வழிகாட்டி விளக்குகள் ரூ. 2.31 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க
அரசு அனுமதி அளித்துள்ளது. 1986–87-லும் தொடரும்
இத்திட்டத்தின்கீழ், மேலும் 8 மீனவ கிராமங்களில் ரூ. 2.17
இலட்சம் மதிப்பீட்டில் வழிகாட்டி விளக்குகள் அமைக்கப்பட
விருக்கின்றன.

12. கடலோர அளவை நிலையங்கள் :

வளம் நிறைந்த மீன்பிடிப்பிடங்களைக் கண்டறிவதுடன்
நவீன மீன்பிடிக் கருவிகளை தேறிய முறையில் பயன்படுத்தும் விவ
ரங்களையும் மீனவர்களுக்குத்தொடர்ந்து தெரிவித்திட சென்னை,
கடலூர், மல்லிப்பட்டினம், இராமேசுவரம் மற்றும் கன்னியா
குமரி ஆகிய 5 இடங்களையும் தலைமையிடமாகக் கொண்டு
செயல் பட்டுவரும் கடலோர ஆய்வு நிலையங்கள், கடலில் 20
பாதம் ஆழப் பகுதி வரையில் அளவைகளைத் தொடர்ந்து
செய்து வருகிறது. இந்த அளவையின் விவரங்கள், அப்பகுதி வாழ்
மீனவர்கள் தங்கள் மீன்பிடி தொழிலை இலாபகரமாக நடத்த
உதவும் வகையில் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த
அளவை நிலையங்களில் உள்ள விசைப் படகுகள் நீண்ட கால
மாகப் பயன்படுத்தப்பட்டு மேலும் அளவைக்குப் பயன்படுத்த
இயலாத நிலையில் இருந்து வருவதால், அவற்றிற்குப் பதிலாக
படிப்படியாக புதிய விசைப் படகுகள் வழங்கப்படவிருக்கின்றன.
1986–87-ம் ஆண்டில் 11.65 இலட்சம் மதிப்பீட்டில் 2 மரத்தா
லான விசைப்படகுகளும் 2 கண்ணாடி இழையாலான விசைப்
படகுகளும் இந்த கடலோர அளவை நிலையங்களுக்கு வழங்கப்
படவிருக்கின்றன. கண்ணாடி இழையாலான படகுகளினால்
இந்த அளவை நிலையங்கள் மேற் கொள்ளவிருக்கும் ஆய்வுகள்
மூலம் இந்தப் படகுகளின் சிறந்த தன்மை மற்றும் பொருளாதார
ரீதியிலான இயக்கம் ஆகியவற்றை மீனவர்களுக்கு தெரியப்படுத்த
முடியும். தற்போதுள்ள சூழ் நிலைக்கு ஏற்ப இந்த அண்மைக்
கடல் அளவாய்வு நிலையங்களின் தொழில் நுட்ப செயல்பட்ட
பணிகளை மாற்றி அமைக்கலாமா என்ற கருத்தை ஒரு சிறிய
தொழில் நுட்பக் குழு ஆராய்ந்து வருகிறது.

13. மீனவர் பயிற்சி நிலையங்கள் :

விசைப்படகுகளை இயக்கவும், பேணவும், போதுமான பயிற்சி
பெற்றவர்கள் வேண்டுமென்ற நோக்கத்தில் சென்னை, கடலூர்,
நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய
6 இடங்களிலும் மீனவர் பயிற்சி நிலையங்கள் தொடர்ந்து செயல்



பட்டு வருகின்றன. தூத்துக்குடி மீனவர் பயிற்சி நிலையத்தின்
நவீன மீன்பிடி முறைகள் மற்றும் மாலுமியல் ஆகிய பயிற்சிகளு
டன் கடல் இயந்திரங்களில் முழுப் பழுதுகள் வேலைகள் குறித்த
'இளநிலை கம்மியர்' பயிற்சியும் மீனவர்களுக்கு அளிக்கப்படுகிறது.
இந்தப் பயிற்சி மீனவர்களுக்கு மிகவும் பயன்பாடான ஒன்றாக
இருப்பதால் நாகப்பட்டினம் மற்றும் குளச்சல் ஆகிய பயிற்சி
நிலையங்களிலும் இப்பயிற்சியை நடைமுறைப்படுத்த உத்தேசிக்
கப்பட்டுள்ளது.

13.1. இளநிலை கம்மியர் பயிற்சியை நாகப்பட்டினம் மற்றும்
குளச்சல் ஆகிய பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்க 1986-87 ஆம்
ஆண்டில் 1.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13.2. மீனளத்தை அதிகப்படுத்துவதில் மட்டுமல்லாமல் மீன
வர் மேம்பாட்டிலும் இந்த அரசு தீவிர அக்கறை கொண்டு
திட்டங்கள் தீட்டி நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழக
அரசின் தீவிர முயற்சியாலும், மைய அரசின் பேருதவியாலும்
இராமேஸ்வரம் பகுதி மீனவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு
ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்திய கடற்படையைச்
சேர்ந்த கப்பல்களும், விமானங்களும் ரோந்துப் பணிகளில் ஈடு
படுத்தப்பட்டுள்ளன.

எவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டாலும், நமது
மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மனிதாபிமானமற்ற
முறையில் தாக்குதல்கள் அவ்வப்போது நடத்தி வருவது மிகவும்
வேதனைக்குரியது. இது தவிர்க்கப்படவேண்டும். தமிழக அரசின்
வற்புறுத்தலுக்கிணங்க, மைய அரசின் வேண்டுகோள் தொடர்ந்து
அலட்சியப்படுத்தப்பட்டு வருவது தமிழக மக்களுக்கு மிகுந்த
அதிர்ச்சி தரத்தக்கதாக உள்ளது. இதை இலங்கை அரசு புரிந்து
கொள்ளவேண்டும். இராமேஸ்வரம் மீனவர்களைக் காப்பாற்று
வதற்கு மைய அரசு மூலமாக இந்த அரசு இன்னும் தீவிரமாகப்
பாடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

14. உள்நாட்டு மீன்வளம்.

தமிழ்நாட்டில் உள்ள 3.00 இலட்சம் ஹெக்டேர் உள்நாட்டு
நன்னீர் நீர்ப்பரப்பிலிருந்து ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்
1984–85 இறுதி கால அளவில் 1.70 இலட்சம் டன் மீன்
பிடிக்கப்பட்டுள்ளது. இந்த உற்பத்தி அளவை 2.10 இலட்சம்
டன்னாக உயர்த்துவதே ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்
நோக்கமாகும். உள்நாட்டு நீர்நிலைகளில் இருப்பு செய்யத்
தேவையான தரமான மீன்குஞ்சுகளின் பற்றாக்குறையே உள்
நாட்டு மீன் உற்பத்தி உயர்வுக்குத் தடையாக இருந்து வருகிறது.

நமது மாநிலத்திலுள்ள உள்நாட்டு நீர்நிலைகளில் இருப்பு செய்ய ஆண்டுதோறும் தேவைப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ள 360 மில்லியன் மீன் குஞ்சுகளுக்கு இன்றளவில் நமது உற்பத்தித் திறனோ 47.40 மில்லியன் மீன் குஞ்சுகளேயாகும். இது நமது தேவைக்கும் உற்பத்திக்குமிடையே ஒரு பெரிய இடைவெளியைக் கொண்டுள்ளது.

14.1. மீன் குஞ்சுகள், இயற்கை நீர்நிலைகளிலிருந்து சேகரம் மற்றும் தூண்டுதல் முறையில் மீன் இனவிருத்தி ஆகிய இரண்டு வழிகளில் இருந்தும் பெறப்படுகிறது. இயற்கை நீர் நிலைகளிலிருந்து ஆண்டொன்றுக்கு சுமார் 20 மில்லியன் மீன் குஞ்சுகள் சேகரம் செய்யப்படுகின்றன. மாறிவரும் பருவ நிலைகள் மற்றும் ஆறுகளில் மிகவும் குறைவான நீர்வரத்து ஆகிய காரணங்களினால் இயற்கை நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் சேகரத்தை அதிகப்படுத்த வாய்ப்புக்கள் இல்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் சுற்று முறைப்படி ஆறுகளில் நீர் விடும் திட்டத்தினால் குறைவான நீரோட்டம் இருப்பதால் இயற்கை நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் சேகரம் செய்வதில் பெரும் தடையாக இருந்து வருகிறது. இதனால் தூண்டுதல் முறையில் மீன் குஞ்சு உற்பத்தியைப் பெருக்குவதுதான் வழியாகும். எனவே தூண்டுதல் முறை மீன் இனவிருத்தி மூலம் தேவையான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து பெற அதிக கவனம் செலுத்தி வரப்படுகிறது. இதற்காக சினை மீன்குளம், மீன் நாற்றங்கால்கள், மீன் வளர்ப்புக் குளங்கள் ஆகியவை அடங்கிய மீன் பண்ணைகள் தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. அதனால் 1985-86 முடிய சினை மீன்களுக்காக 10 ஹெக்டேர் குளங்களும், மீன்குஞ்சுகள் வளர்க்க 11 ஹெக்டேர் வளர்ப்புக் குளங்களுமாகச் சேர்ந்து மொத்தம் 21 ஹெக்டேர் பரப்பளவில் மீன் பண்ணைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 7-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் ஆண்டொன்றுக்கு 100 மில்லியன் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்து பெற, மீன் நாற்றங்கால்களை அதிகப்படுத்த வேண்டியது அத்தியாவசியமாகிறது. இதற்கு உதவும் வகையில் தேசிய மீன் குஞ்சு உற்பத்தி திட்டத்தின்கீழ் பவானிசாகர் மற்றும் அமராவதியில் ஒவ்வொரிடத்திலும் 10 ஹெக்டேர் பரப்பளவில் இரு மீன்பண்ணைகள் அமைக்க மத்திய அரசு அனுமதித்துள்ளது. பவானிசாகரில் தற்போது கட்டுமானத்திலுள்ள மீன் பண்ணை, பிப்ரவரி 1987 வாக்கில் கட்டி முடிக்கப்படும். அமராவதியில் தகுதியான இடவசதி இல்லாத காரணத்தினால் திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறில் அடுத்த மீன்பண்ணையை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இரு பண்ணைகளும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டால் மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகளின் மொத்த பரப்பளவு 41 ஹெக்டேராவதால் இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 100 மில்லியன் மீன்குஞ்சுகள் உற்பத்தித் திறனை அடைய முடியும். இந்த இரண்டு மீன் பண்ணைகளின் கட்டுமானத்திற்காக 1986-87 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 125.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



15. நீர்த்தேக்க மீன்வளம் :

பெரு நீர்த்தேக்கங்களில் இன்றளவில் மீன் பிடிப்புத்திறன் 55 சதவீதமாக இருந்து வருகிறது. நீர்த்தேக்கங்களில் மீன் பிடிப்புப் பகுதிகளில் பருவமழை பொய்த்து வருவதினால் முழுமையான பலனை அடைய முடியவில்லை.

15.1. உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்க, மாநிலத்திலுள்ள அனைத்து பெரிய, சிறிய நீர்த்தேக்கங்களையும் மீன்துறை மேற்கொண்டு தரமான விரைவாக வளரும் மீன்குஞ்சுகளை இருப்புச் செய்து, மீன்வளத்தைப் பாதுகாத்து, அபிவிருத்தி செய்து, சரியான நேரத்தில் மீன்பிடிப்புச் செய்து வருகிறது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட கீழ் வரும் நீர்த்தேக்கங்களை 1986-87-ல் ரூ. 3.30 இலட்சம் செலவில் மீன்துறை மேற்கொள்ளவிருக்கிறது :—

1. நாகவதி நீர்த் தேக்கம் (தருமபுரி மாவட்டம்).
2. வாணியாறு நீர்த்தேக்கம் ( ,, )
3. தொப்பையாறு நீர்த்தேக்கம் ( ,, )
4. கேசரிஹலிகள்ளா நீர்த்தேக்கம் ( ,, )
5. பெரியகோம்பை நீர்த்தேக்கம் (அண்ணா மாவட்டம்)
6. கண்ணுத்து ஓடை நீர்த்தேக்கம் (புதுக்கோட்டை மாவட்டம்).
7. குண்டாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்).

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் சுமார் 1160.74 ஹெக்டேர் நீர் பரப்பளவில் கூடுதலாக 82.50 டன் எடையுள்ள தரமான மீன்களை உற்பத்தி செய்து அதன் மூலம் ரூ. 4.71 இலட்சம் வருவாய் அடைய முடியும்.

16. சீனப் பொரிப்பகம் :

மீன் பண்ணைகளில் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்வதில் பல்லாண்டுகளாக பயன்படுத்தப்பட்டுவரும் காடா துணியிலான ஹாப்பா பொரிப்பகம், கண்ணாடி குடுவைப் பொரிப்பகம் மற்றும் சீனப் பொரிப்பகம் ஆகிய மூவேறு பொரிப்பக முறைகள் நடைமுறையில் உள்ளன. இதில், சீனப் பொரிப்பகம், நல்ல பயன்தரக்கூடியதாகவும், செம்மையுறச் செயல்படக் கூடியதாகவும் பொருளாதார ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கிறது. இந்த சீனப் பொரிப்பகம் இதற்கு முன்னதாக நமது மாநிலத்தில் பயன்படுத்தப்படாததால் சாத்தனூர் அணையில் பரிசோதனை முறையில் பயன்படுத்தப்பட்ட சிறிய அளவிலான பொரிப்பகத்தின் மூலம், மீன் முட்டையிலிருந்து குஞ்சு வரும் பிழைப்பு விகிதம் மிகவும் வரவேற்கத்தக்கதாக, அதாவது 70 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை இருந்தது. இது தொடர்ந்து, மீன்குஞ்சு உற்பத்தியை நமது மாநிலத்தில் அதிகப்படுத்த வேண்டியதின் அவசியம் மற்றும் அவசரம் காரணமாக, முதற்கட்டமாக

1986-87 ஆம் ஆண்டில் ரூ. 6.20 இலட்சம் மதிப்பீட்டில் வட ஆற்காடு மாவட்டம் சாத்தனூர் அணையில் ...றும், கோயம் புத்தூர் மாவட்டம் ஆழியாறில் மற்றொன்று... ஆக இரு சினைப் பொரிப்பகங்கள் அமைக்க உத்தேசிக்கப்ப...ளது. இந்த இரண்டு பொரிப்பகங்களிலிருந்தும் ஆண்டொ... 640 இலட் சம் நுண் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய ...மென எதிர் பார்க்கப்படுகிறது.

## 17. மிதவை கூடுகள் :

மீன்குஞ்சு உற்பத்தியை அதிகப்படுத்த போதுமான மீன் நாற்றங்கால்கள் இல்லாதது பெரும் குறையாக இருந்து வருகிறது. இதற்கென நாற்றங்கால்கள் கட்டவேண்டுமாயின் அதிக அளவில் செலவினம் ஏற்படுவதோடு கட்டி முடிக்க அதிக காலமுமாகும். தவிரவும், தேவையான எல்லா இடங்களிலும் நாற்றங்கால்கள் கட்ட போதுமான இடவசதிகள் இல்லை. இதற்குப் பரிகாரமாக, பிளாஸ்டிக் வலைகளாலான கூடுகளை எந்த ஒரு தகுந்த நீர் நிலையிலும் மிதக்க விட்டு, அதனுள் மீன்குஞ்சுகளை வளர்க்கும் முறை கண்டறியப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் வலைகளாலான மிதக்கும் கூடுகளில் மீன்குஞ்சுகளை வளர்க்கும் முறை மாநிலத் தின் பல பகுதிகளிலும் ஏற்கெனவே பரிசோதித்தும் பார்க்கப்பட்டு உள்ளது. இதில் மீன்குஞ்சுகளின் வளர்ச்சி சிறப்பாகவும், பிழைப்பு விகிதம் 70 சதவீதம் வரையிலும் உள்ளது. இருக்கும் குறைந்த அளவிலான நாற்றங்கால்களில் நெருக்கடியான சூழ்நிலையில் மீன் குஞ்சுகளை வளர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஓரளவு குறைக்க வும், வளர்ந்த மீன்குஞ்சுகளை அறுவடை செய்து அனுப்புவதில் காணநேரிடும் தாமதத்தினால் அப்படியே நாற்றங்கால்களிலேயே வைத்திருக்க வேண்டிய சூழ்நிலையையும், அதனால் மேற்கொண்டு குஞ்சு உற்பத்தி செய்யமுடியாமல் போவதைத் தவிர்க்கவும், மற் றும் மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யவேண்டிய நீர்நிலைகளில் நீர் வரத்து வரும் காலம் வரையிலும் ஓரிரு மாதங்களுக்கு மீன்குஞ்சு களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் 1986-87 ஆம் ஆண்டில் மாநிலம் முழுமைக்கும் விரிவான அளவில் கூடுகளில் மீன்குஞ்சு வளர்க்கும் திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது. ஆரம்ப மாக ரூ. 2.50 இலட்சம் செலவில் 100 மிதக்கும் கூடுகள் வாங்கி எல்லா மீன் பண்ணைகளுக்கும் பகிர்ந்து வழங்கப்படவிருக்கிறது. இந்த அனைத்து மிதக்கும் கூடுகளின் மூலமாக, ஆண்டுதோறும் உற்பத்தி செய்யக்கூடும் 37 இலட்சம் மீன்குஞ்சுகள், ஆண் டொன்றுக்கு 400 டன் மீன் உற்பத்திக்கு வகை செய்யுமென மதிப்பிடப்படுகிறது.

## 18. தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனை :

உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, மதுரை மற்றும் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறைக்குச் சொந்தமான



பெரிய, சிறிய நீர்ப்பாசன ஏரிகளில் தீவிர மீன்வளர்ப்பு மற்றும் மீன்பிடிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏரிகளில் மீன்பாசிக் குத்தகை, முன்பெல்லாம் மீனவர் கூட்டுறவு சங்கங் களுக்கு குத்தகை விடப்பட்டது. குத்தகைதாரர்கள் மீனைப் பிடிப்பதிலேயே நாட்டம் கொண்டு, தேவையான மீன்குஞ்சுகளை இருப்புச் செய்து வளர்ப்பதில் அக்கறை செலுத்துவதில்லை. இதனால், முதல்கட்டமாக மதுரை மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் உள்ள ஏரிகளில் தேவையான மீன்குஞ்சுகளை துறையே இருப்புச் செய்து, வளர்த்து துறை மூலமாகவே மீன் பிடிப்புச் செய்ய அரசு தீர்மானித்துள்ளது. 1984-ம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்படி தென்னாற்காடு மாவட்டத்தில் 20,000 ஹெக் டேர் பரப்பிலும், மதுரை மாவட்டத்தில் 10,000 ஹெக்டேர் பரப்பிலும் தரமான அதிக அளவிலான மீன் குஞ்சுகளை இருப்புச் செய்து, அந்தந்தப் பகுதிகளில் அமைந்துள்ள மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவே மீன்பிடிப்புச் செய்து, பிடிக்கப்படும் மீனை மீன் துறையும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் பங்கு விகிதத்தில் பகிர்ந்து கொள்வது இதன் முக்கிய அம்சமாகும். இந்த இரண்டு மாவட்டங்களில் காணக்கூடும் பலாபலன்களி லிருந்து இத்திட்டத்தை பிற மாவட்டங்களிலும் செயற்படுத்து வது குறித்து பரிசீலிக்கப்படும்.

## 19. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் :

கூட்டின் மீன்வளர்ப்பு என்னும் முறையின்கீழ் ஹெக்டேர் ஒன்றுக்கு 1000 கிலோ மீன் உற்பத்தியை அடைய, மத்திய அரசின் நிதி உதவியுடன் தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தர்மபுரி தென் ஆற்காடு, செங்கல்பட்டு மற்றும் பெரியார் மாவட்டங்களில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் இயங்கி வருகின்றன. இந்த முகமைகளுக்கான செலவினத்தை பணியாளர்கள் மற்றும் சில்லறை செலவினங்கள் நீங்கலாக, மத்திய அரசும் மாநில அரசும் சரிபாதியாக ஏற்கின்றன. இதோடு மாநில அரசின் முழு நிதியுதவியுடன் திருநெல்வேலி, வட ஆற்காடு, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் இயங்கி வருகின்றன.

19.1. இந்தத் திட்டத்தின்கீழ், பஞ்சாயத்து மற்றும் இதர துறைகளுக்குச் சொந்தமான குளங்கள் மற்றும் ஏரிகளை நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் எடுத்துக்கொண்டு மீன் வளர்ப்போருக்கு 10 ஆண்டுகளுக்கு குத்தகை விடப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மீன் வளர்ப்போருக்கு கூட்டின் மீன் வளர்ப்பில் பயிற்சி அளிப்பதுடன், குளங்களைச் சீர்செய்யவும் இடுபொருட்கள் மற்றும் மீன்குஞ்சுகள் வாங்கவும் தேவையான செலவினம், கடன் மற்றும் மானியம் போன்ற அனைத்து இதர உதவிகளும் வழங்கப்படுகின்றன. இதனால் சில முகமைகளி...

குளங்களில் ஹெக்டேர் ஒன்றுக்கு 1,000 கிலோ மீன் வரை உற்பத்தியை அடைய முடிந்திருக்கிறது. இருந்தாலும் பெரியார், மதுரை, தர்மபுரி, திருச்சி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் குறைந்த மழை அளவு காரணத்தினால் நீர்நிலைகளின் முழுப் பரப்பையும் மீன் வளர்ப்புக்கு பயன்படுத்த முடியவில்லை.

19.2. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மிதக்கும் கூடுகளில் மீன் குஞ்சுகள் வளர்க்கும் முறையைப் பின்பற்றுவதால் மீன்குஞ்சுகளின் தேவையில் சுயதேவையை அடைய முடிகிறது. பிடிக்கப்படும் மீன்களை விற்பனை செய்ய, மீன் வளர்ப்போர் மீன் விற்பனை சங்கங்கள் கூட அமைக்கப்பட்டுள்ளன.

19.3. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் சிறப்பான செயல்பாடு காரணமாக, புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள அண்ணா மாவட்டத்தில் 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 8.54 இலட்சம் செலவில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை ஒன்று அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. காமராசர் மாவட்டத்திலும் புதிதாக மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

20. உவர்நீர் மீன்வளர்ப்பு ;

இத்தனை ஆண்டுகளாக, விசைப்படகுகளைக் கொண்டு, தொடர்ந்து வரையறையற்ற முறையில் தீவிர கடல்மீன் பிடிப்பினால் மாநிலத்தின் கடற்கரையோரம் முழுவதிலும் இரால் மீன் உற்பத்தியின் அளவு, கணிசமான அளவு வீழ்ச்சி அடைந்துள்ளது. இதன் விளைவாக இரால் மீன்பிடிப்பும் அதைத் தொடர்ந்து மீனவர்களின் வருவாயும் பாதிக்கப்பட்டது. இந்நிலையே, தமிழ்நாட்டில் முகத்துவாரங்கள் மற்றும் உப்பங்கழிகளையொட்டியுள்ள சுமார் 60,000 ஹெக்டேர் உவர் நீர்பகுதிகளில் இரால் வளர்ப்பை மேற்கொள்வதில் கவனத்தை ஈர்த்துள்ளது. உவர் நீர்ப்பகுதிகள் இரால் மற்றும் மீன் வளர்ப்புக்கு மிகவும் உகந்ததாக காணப்படுவதால் மத்திய நிறுவனங்களுடன் சேர்ந்து, மீன்துறை, இந்நீர்நிலைகளில் இரால் மற்றும் மீன்வளர்ப்பதற்கான தொழில் நுட்பங்களை கண்டறிந்திருக்கிறது. இந்தத் தொழில் நுட்பங்களை மீனவர்களிடையே பரப்புவதற்கு இரால் வளர்ப்பை பெரிய அளவில் அவர்கள் மேற்கொள்ளத் தூண்டும் வகையில், கீழ்காணும் இடங்களில் செயல் விளக்க இரால் பண்ணைகள் மீன்துறையால் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

1. பழவேற்காடு .. செங்கற்பட்டு மாவட்டம்.
2. வாணியஞ்சாவடி .. ௸
3. பரங்கிப்பேட்டை .. தென் ஆற்காடு மாவட்டம்.



4. தொண்டியக்காடு .. தஞ்சாவூர் மாவட்டம்.
5. கரிப்புறக்கரை .. ௸
6. கட்டுமாவடி .. புதுக்கோட்டை மாவட்டம்.
7. கன்னாமுனை .. இராமநாதபுரம் மாவட்டம்.
8. காரங்காடு .. ௸
9. புன்னக்காயல் .. திருநெல்வேலி மாவட்டம்.
10. கீழவைப்பார் .. ௸

20.1. தமிழ்நாட்டில் உள்ள உவர்நீர்ப்பரப்புகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் அதன் பரப்பளவைத் தெரிந்தெடுத்து சரியாகக் கண்டறிய, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டை மற்றும் இராமநாதபுரத்தில் உவர்நீர் அளவை மற்றும் விரிவாக்க பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. தென்னாற்காடு மாவட்ட இன்னையில், 5 ஹெக்டேர் பரப்பளவில் இரால் பண்ணை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ், தஞ்சாவூர் மாவட்டம், தொண்டியக்காட்டில் ரூ. 29 இலட்சம் மதிப்பீட்டில் மேலும் 50 ஹெக்டேர் பரப்பளவில் உவர் நீர் இரால் பண்ணை அமைக்கும் பணி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, பண்ணை அமைக்கும் பணி துறையின் பொறியியல் பிரிவினிடம் விடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம் காரங்காட்டில் 10 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 12.69 இலட்சம் மதிப்பீட்டில், மற்றுமொரு இரால் பண்ணை கட்டும் பணி நடந்தேறி வருவதுடன், தென்னார்க்காடு மாவட்டம், பரங்கிப் பேட்டையில் 2 ஹெக்டேர் பரப்பளவில் ஒரு சிறிய இரால் பண்ணை கட்டவும், செலவின அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்துடன் இராமநாதபுரம் மாவட்டம் அரியகுண்டில் 8 ஹெக்டேர் பரப்பளவில், ஒரு இரால் பண்ணை கட்ட செலவின அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அனைத்துப் பண்ணைகளின் 1986-87ல் தொடர்ந்து நடந்திடும் கட்டுமானப் பணிகளுக்கு ரூ. 5.23 இலட்சம், இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

20.2. 200 ஹெக்டேர் உவர் நீர்ப்பரப்புகளில் நுண் அளவைகள் மேற்கொள்ளும் பணி மேற்கொள்ளப்பட்டு, 1986-87க்குள் முடிக்கப்படவிருக்கிறது. இந்த அளவைப் பணி முடிந்ததும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (Area Development Plan) கீழ் 200 ஹெக்டேர், மத்திய அரசின் 50 சதவீத நிதியுதவியுடன், 200 ஹெக்டேர் உவர் நீர் பரப்பிலும் இரால் பண்ணை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது.

21. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் :

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர்களின் சமூகப்
பொருளாதாரத்தைமேம்படுத்துவதில் முக்கியஅங்கம்வகிக்கின்றன
மீனவர்களுக்கு கடன் வழங்கல், மீன்பிடி தளவாடங்கள் மற்றும்
அத்தியாவசிய வீட்டுச் சாமான்களை விநியோகம் செய்தல், சில
இடங்களில் மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களை விற்பனை
செய்தல், ஆகிய பணிகளை மீனவர் கூட்டுறவு சங்கங்கள்
செய்து வருகின்றன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் பொதுவாக நிதி வசதியின்றி
நலிந்து இருப்பதால் சிறப்பான திட்டங்களை மேற்கொள்ள
இயலவில்லை. இதனால், மானியம், பங்கு மூலதனக் கடன்,
நடைமுறை மூலதனக் கடன், நிர்வாக உதவிகள் இன்னபிற
அரசால் தொடர்ந்து செய்யப்பட்டு வரப்படுகின்றன. மீனவர்
கூட்டுறவு சங்கங்கள் மீன்பிடி விசைப்படகுகள் நாட்டுப்படகுகள்,
மீன் ஏற்றிச் செல்ல மோட்டார் வாகனங்கள் வாங்கவும்,
இருப்புக் கிடங்குகள் கட்டவும்,மீன் பதனிடல் மற்றும் விநியோகம்
செய்தல் ஆகிய பணிகளுக்கும், தேசிய கூட்டுறவு அபிவிருத்திக்
கழகம் 1978-79-லிருந்து பெரிய அளவில் நிதியுதவிகள் செய்து
வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1984-85 முடிய 78 மீனவர்
கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த 13,262 மீனவர்கள் தேசிய
கூட்டுறவு அபிவிருத்திக்கழகத்திடமிருந்து ரூ. 3,46.39 இலட்சம்
நிதியுதவி பெற்றிருக்கின்றனர். 2 மீனவர் கூட்டுறவுச் சங்கங்
களுக்கு 20 கரையேற்றும் படகுகள் வாங்க தேசிய கூட்டுறவு
அபிவிருத்திக் கழகத்திடமிருந்து ரூ. 10.20 இலட்சம் நிதியுதவி
பெறும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

21.1. மீனவர் கூட்டுறவு சங்கங்கள் இவ்வாறான நிதி
யுதவிகள் பெறுவதால், சங்கங்களின் செயல்பாடு உறுப்பினர்
களுக்கு உதவும் வகையில் இருக்க, அச்சங்கங்களை சீர்செய்வது
அவசியமாகிறது. இதை மனதில் கொண்டு, ஒவ்வொரு மீனவர்
கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டை கவனிக்கவும் ஒரு
எழுத்தர் நியமனம் செய்ய அரசு நிதியுதவி செய்து வருகிறது.
1985-86 முடிய 200 மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு இந்த
உதவி செய்யப்பட்டிருக்கிறது.

21.2. மீனவர் கூட்டுறவு சங்கங்கள் , கடன்பெறும் திறனை
மேம்படுத்தவும், பெரிய அளவிலான திட்டங்களை மேற்கொள்ள
வெளிநிதி உதவிகளைத் திரட்ட தயாராக இருக்கும் வகையிலும்
1986-87 ஆம் ஆண்டில் 20 மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு தலா
ரூ. 25,000 வீதம் பங்கு மூலதன உதவி வழங்க அரசு முடிவு
செய்துள்ளது.



22. மீனவர் நல்வாழ்வுத் திட்டங்கள்.

மீனவர் குடியிருப்புகள்.—1974-75 ஆம் ஆண்டு முதல் மீனவர்
களுக்கு குடியிருப்பு வசதிகளைச் செய்துவரும் அரசு, இதுவரை
தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தின் மூலமாக 9,856
வீடுகளும், மீன் துறையின் பொறியியல் பிரிவின் மூலமாக 1,548
வீடுகளும் கட்ட செலவின அனுமதி அளித்துள்ளது. இதில்
தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் வீட்டுவசதி மற்றும் முன்னேற்றக்
கழகம் 9,005 வீடுகளையும் மீன்துறையின் பொறியியல் பிரிவு
733 வீடுகளையும் இதுவரை கட்டி முடித்துள்ளன. 1986-87-ம்
ஆண்டில் இத்திட்டம் தொடர ரூ. 50.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

22.1. இணைப்புச் சாலைகள் :

மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களை விற்பனைக்கு எளிதில்
அனுப்பி வைக்க அநேக மீனவ கிராமங்கள் அருகில் உள்ள
நகரம் மற்றும் கிராமங்களுடன் சரியான சாலை இணைப்பு வசதி
களுடன் இல்லாதிருந்து வருகின்றன. 1984-85 உடன் முடிந்த
6-வது ஐந்தாண்டு திட்டம் வரையிலும் 137.05 கி. மீட்டர்
நீளத்திற்கு 93 சாலைகள் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது.
இந்தப் பணியைச் செய்து வரும் நெடுஞ்சாலைத் துறை இதுவரை
யிலும் 95.49 கிலோ மீட்டர் நீளத்திற்கு 67 சாலைகள் அமைக்
கும் பணியை முடித்துள்ளது. எஞ்சிய பணி 1986-87-ல் முடிக்கப்
படவுள்ளது.

22.2. மீனவ மகளிர் விரிவாக்கப் பணி :

மீனவ மகளிர் முன்னேற்றத்திற்காக ஒரு முன்னோடித்
திட்டம் 1981-ல் ஆரம்பிக்கப்பட்டு, அத்திட்டம் மீனவ மகளிர்
கூட்டுறவுச் சங்க அமைப்புகளின் மூலமாக நடைமுறைப்படுத்
தப்பட்டன. மீன் விற்பனை செய்ய கடனுதவி, சேமிப்பு, வலை
பின்னுதல், தையல், கைத்தொழில், நியாய விலைக்கடைகள்
நடத்துதல், மலிவு விலையில் கட்டுப்பாட்டுத் துணிகளை விற்
பனை செய்தல், பாலர் பள்ளி ஆரம்பித்தல் ஆகிய பணிகள்
மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் மேற்கொள்ளப்பட்டன.
மாநிலத்தில் இன்றளவில் 30 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்
உள்ளன. பங்கு மூலதன உதவி மற்றும் சங்க நிர்வாகத்திற்கு
பணியாளர் உதவியும் இச்சங்கங்களுக்குச் செய்யப்படுகின்றன.
வரும் ஆண்டுகளில் தேவைக்கேற்ப மேலும் பல மீனவ மகளிர்
கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும்.

22.3. சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் :

கடலோர மீனவர்களுக்கு, மீன்பிடிப்பு இல்லாக் காலங்களில்
உதவி செய்யும் வகையில மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத்
திட்டத்தை அரசு ஆரம்பித்தது. இத் திட்டத்தின் கீழ் மீனவர்

கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த அங்கத்தினர் ஒவ்வொருவரிடமும் மாதம் ரூ. 10 வீதம் ஒரு ஆண்டில் 9 மாதத்திற்கு வசூலிக்கப்படுகிறது. வசூலிக்கப்பட்ட ரூ. 90 உடன் அரசின் சமபங்கான ரூ.90 ஐயும் சேர்த்து ஆக மொத்தமான ரூ. 180-ஐ மீன் பிடிப்பு இல்லாக் காலமான 3 மாதங்களுக்கு மாதம் ரூ. 60 வீதம் மீனவர்களுக்கு திருப்பி வழங்கப்படுகிறது. இத் திட்டம் மீனவர்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகிறது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவே செயற்படுத்தப்படும் இத் திட்டத்தின் படி அங்கத்தினர்களிடமிருந்து மாதத் தவணையில் பணம் வசூலிப்பு அதன் கணக்கு வைப்பு ஆகிய பொறுப்பு கூட்டுறவு சங்கத்தையே சாரும். 1984–85 ஆம் ஆண்டில், 20,913 மீனவர்கள் இத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

22.4. பரிசுத் தொகை :

1985–86 கல்வியாண்டு முதல், மீனவர் சமுதாயத்தைச் சார்ந்த குழந்தைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் மாநில அளவில் 10-ம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி.) மற்றும் 12-ம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறுவோருக்கு, 10-ம் வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் மீனவ சமுதாயத்தைச் சார்ந்த ஒரு மாணவனுக்கும் ஒரு மாணவிக்கும் இரண்டு பரிசுகள் தலா ரூ. 500 வீதமும், மேலும் மாநில அளவில் 12-ம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவனுக்கும் ஒரு மாணவிக்கும் இரண்டு பரிசுகள் தலா ரூ. 1,000 வீதமும் வழங்கிட அரசு தீர்மானித்துள்ளது.

22.5. கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டம் :

கடலில் சீரான மீன் பிடிப்புச் செய்யவும் விசைப்படகு மற்றும் நாட்டுப் படகுதாரர்களிடையே மீன் பிடிப்பில் நிலவும் தகராறுகளைத் தவிர்க்கவும், தமிழ்நாடு கடல் மீன் பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டம் 1983-ல் அமுலாக்கப்பட்டது. இச்சட்டத்தின் ஒரு பகுதிச் செயலாக்கம் உயர்நீதி மன்றத்தால் தடை செய்யப்பட்டிருக்கிறது. தகாத சம்பவங்கள் ஏதும் நடவாமல் இருக்க இத்திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்த வேகமாகச் செல்லும் விசைப் படகுகளைக் கொண்டு கண்காணிப்புப் பணி மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்காக ரூ. 8 இலட்சம் செலவில் வேக விசைப்படகு ஒன்று வாங்க இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

22.6. காப்புறுதித் திட்டம் :

மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ், மீனவர்கள் இறப்பு மற்றும் விபத்துக்கு எதிராக காப்புறுதி செய்யப்படுகிறார்கள். இதற்கான ஆண்டு பிரீமியம் ரூ. 9 மட்டுமே. தொழிலில் மீனவரின் இறப்பு அல்லது நிலையான மற்றும் ஈடு செய்யமுடியாத இழப்புக்கு இத் திட்டத்தின்படி காப்புறுதி



செய்யப்பட்ட தொகை ரூ. 15,000-ம் வழங்கப்படும். அதே சமயம் பாதிப்புகள் ஒரு பகுதியாக இருந்தால், அதாவது ஒருகண் பார்வை இழப்பு, ஒரு கால இழப்பு அல்லது ஒரு கை இழப்பு ஆகிய பாதிப்புகளுக்கு ரூ. 7,500 வழங்கப்படும். ஒரு மீனவரின் ஆண்டுப் பிரீமியம் ரூ. 9ஐயும் மாநில அரசும் மத்திய அரசும் சரிபாதியாக ஏற்கிறது. இதுவரை 1,16,264 மீனவர்கள் இத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்.

23. மீன் துறையிடமிருந்து அதன் வியாபார ரீதியான திட்டங்களை தனியாகப் பிரித்துக் கொண்டு அதனை செயல்படுத்தும் நோக்கத்துடன், 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் என்ற நிறுவனத்தை தமிழ்நாடு அரசு துவக்கியது. இது வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் போன்ற மாநில அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு நிறுவனமாக, 11–4–1974 அன்று இணைக்கப்பட்டது. 1–10–1977 முதல் வரையறுக்கப்பட்ட ஒரு பொதுத்துறை நிறுவனமாக அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதன பங்குத் தொகை ரூ. 5.00 கோடியாகவும், செலுத்தப்பட்ட மூலதன முதலீடு ரூ. 282.57 இலட்சமாகவும் இன்றைய நிலையில் உள்ளது.

23.1. நோக்கங்கள் :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களை உருவகப்படுத்துவதும், நிர்மாணிப்பதும், செயல்படுத்துவதும், நிர்வகிப்பதும் பராமரிப்பதும் மற்றும் அபிவிருத்திச் செய்வதும், மறைமுகமாகவும், நேரிடையாகவும் நிதிக்கால ஆதாரங்களைத் தேடுவதும் நோக்கமாகும்.

(அ) ஆழ்கடல் மீன்பிடிப்பு, இழுவை, நாவாய்கள், சிறிய மீன்பிடி படகுகள், இயந்திரப் படகுகள், கலன்கள் முதலியவைகளை இயக்குதல்.

(ஆ) உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் வளர்த்தல் மற்றும் பிடித்தல்.

(இ) ஏற்றுமதிக்கான இறால்களையும், சிறு இறால்களையும் கொள்முதல் செய்தல், மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்தல், ஏற்றுமதி, இறக்குமதி, மீன் உறைய வைத்தல், மீன் பதப்படுத்துதல், உலர்த்துதல் போன்ற பணிகள் செய்தல்.

(ஈ) தொலைவுக் கடலில் இந்திய கடல் எல்லைக்கருகிலும் பலவித மீன் இழுவை படகுகளைக் கொண்டு மீன்பிடி தொழில் நடத்துதல்.

(உ) அனைத்து விதமான மீன் பிடித் தொழிலுக்கும் மீன்
வளர்ப்பிற்கும் சம்பந்தப்பட்ட எல்லாவிதமான உதவிகளையும்
செய்தல்.

23.2. நடைமுறை செயல்பாடுகள் :

1984–85 ஆம் ஆண்டுகளில் தஞ்சை மற்றும் நெல்லை என்ற
இரு இழுவைக் கப்பல்களின் உதவியால் ஆழ்கடல் மீன்பிடிக்கும்
பணி மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலம் 1,26,624 கிலோ
எடையுள்ள இறால் மீன்கள் பிடிக்கப்பட்டு அவைகள் ரூ. [illegible]
இலட்சத்திற்கு விற்கப்பட்டன. நிகர இலாபமாக ரூ. 21.89
இலட்சம் கிடைத்தது.

1985–86 ஆம் ஆண்டில் மேற்கண்ட திட்டம் செயல்படுத்தப்
படும் என்றும் அதன் வாயிலாக நிகர லாபம் ரூ. 25.00 இலட்சம்
கிட்டும என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஏல விற்பனை மூலம்
உள்ளூர் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யபபடுவதுடன் நல்ல
வகை மீன்கள் சென்னை நகரத்திற்கு மீன் வளர்ச்சிக் கழக
விற்பனை அங்காடிகள் மூலம் விற்பனை செய்ய அனுப்பப்படு
கின்றன. 'தஞ்சை' இழுவைக் கப்பல் நடப்பு ஆண்டில் [illegible]
பராமரிப்புக்காக பராமரிப்புத் துறைக்கு ஏற்றப்பட்டு பராமரிப்பு
பணியுடன் அதில் இதுவரை இருந்து வந்த குளிரூட்டும்
தொட்டில்கள் மாற்றப்பட்டு, உறைய வைக்கும் அறை அமைக்
கப்பட்டது. 'நெல்லை'யின் என்ஜின் நடப்பு ஆண்டில் செப்பனி
டப்பட்டது.

23.3. பர்ஸீனர்ஸ் சுருக்கு வலை மீன்பிடி படகு :

இதற்கு முந்தைய ஆண்டில் தமிழக கடலோரத்தில் 6 சுருக்கு
வலை படகுகள், சுருக்கு வலை மீன்பிடிப்பு முறையிலும் பல்வேறு
பட்ட சில மீன்பிடி முறைகளிலும் ஈடுபடுத்தப்பட்டன. ஆனால்
நல்ல பலன் அளிக்காததினால் வேறு கடல் பகுதியில் மீன்பிடிக்க
தீர்மானிக்கப்பட்டது. மேலும் தமிழக கடலோரமானது சுருக்கு
வலை மீன்பிடிப்பு முறைக்கு ஏற்றதாக இல்லை எனவும் உணரப்
பட்டது. எனவே சுருக்கு வலை மீன்பிடி படகுகள் மேற்கு
கடலோரத்திற்கு மீன்பிடி தொழிலில் ஈடுபடுத்துவதற்காகக்
கொண்டு செல்லப்பட்டன. அதன்படி கர்நாடக மாநில மீன்
வளர்ச்சிக் கழகத்துடன் கூட்டு முயற்சியில் கர்நாடக கடற்கரை
நிலையங்களாகிய கார்வார், கங்கோளி, பட்கல் ஆகிய ஊர்
களில் இருந்து மேற்படி படகுகள் மீன் பிடி செய்து வருகிறது.

23.4. மீன் விற்பனை :

சில்லரை மீன் விற்பனைத் திட்டம் சென்னை, கோயம்
புத்தூர், மதுரை, திருச்சி, பொள்ளாச்சி மற்றும் திருவண்ணா
மலை போன்ற நகரங்களில் தொடரப்பட்டது. தற்போது
மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான இயக்கத்திலுள்ள



81 மீன் விற்பனை கடைகளில் 50 பச்சை மீன் விற்பனை நிலை
யங்கள் மற்றும் 31 வறுவல் மீன் விற்பனை அங்காடிகள் மூலம்
பொது மக்களின் தேவைகள் ஓரளவு பூர்த்தி செய்யப்படுகின்றன.
மேற்கண்ட கழக விற்பனை அங்காடிகள் மூலம் உறைய வைத்த
மீன், இறால் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ஐ.எப்.பி.
கொச்சின் மற்றும் கர்நாடகா மீன் வளர்ச்சிக் கழகத்திடம்
இருந்து பெறப்பட்டு, விற்பனை கடைகள் மூலம் விற்பனைக்கு
விடப்படுகிறது.

23.5. குளிர்பனிக்கட்டி மற்றும் குளிர் பதன நிலையம் மற்றும்
டீசல் பங்க்குகள் :

பனிக்கட்டி மற்றும் குளிர்பதன நிலையங்கள் அடையார்,
நாகை, மதுரை, தூத்துக்குடி மற்றும் மண்டபம் ஆகிய ஊர்
களில் உள்ளன. இவைகள் இக்கழக உபயோகத்திற்குப் போக
எஞ்சியவை அவ்வப்பகுதி மக்களின் உபயோகத்திற்கும் தேவைக்
கும் பயன்படு வகை செய்யப்பட்டுள்ளன.

மண்டபத்தில் உள்ள பதப்படுத்தும் நிலையம் மற்றும் எண்
ணூரில் உள்ள உறைய வைப்பு நிலையம் நடப்பு ஆண்டிலும்
தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. ராயபுரம், மல்லிப்
பட்டினம், தூத்துக்குடி ஆகிய ஊர்களில் உள்ள டீசல்
பங்க் லாபகரமாக இயங்கி வருகிறது. தூத்துக்குடி
மீன்பிடி துறைமுகப் பகுதியில் ஒரு இரண்டாவது டீசல் பங்க்
விரைவில் செயல்படவுள்ளது.

23.6. உள்நாட்டு மீன்வளம் :

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மீன் துறையின் பொறுப்பில்
இருந்த 11 நீர்த்தேக்கங்களை வியாபார ரீதியான மீன்வளர்ப்பு
க்காக எடுத்துக் கொண்டுள்ளது. இவற்றுடன் ஐந்து மீன் குஞ்சுப்
பண்ணைகள் மற்றும் தூண்டுதல் முறை மீன் குஞ்சு உற்பத்தி
நிலையம் முதலியன வியாபார ரீதியான மீன் குஞ்சு உற்பத்திக்கு
எடுத்துக் கொள்ளப்பட்டன. 1984–85 ஆம் ஆண்டில் மீன்
விற்பனை மற்றும் மீன் குஞ்சுகளை அறுவடை செய்ததின் மூலம்
ரூ. 58.78 இலட்சம் கிட்டியது. இதில் செலவு ரூ. 46.29 இலட்சம்
போக நிகர லாபமாக ரூ. 12.49 இலட்சம் கிடைத்தது.

23.7 நீலங்கரையில் இறால் குஞ்சு பொரிப்பு நிலையம் :

மத்திய அரசின் திட்டத்தின்படி ரூ. 21.00 இலட்சம் செலவில்
தமிழக அரசு ஒப்புதல் வழங்கியது. கடற்கரையில் இருந்து 500 மீட்டர்
நீலங்கரையில் இறால் குஞ்சு பொரிப்பு நிலையம் நிறுவ
அனுமதி [illegible] சுற்றுப்புற சூழல் துறையின்
அனுமதி எதிர் நோக்கப்படுகிறது.

23.8. தமிழ்நாடு மெரைன் பிளாஸ்ட் லிமிடெட் :

கடற்கரையில் ஏற்றி வைக்கத்தக்க கண்ணாடி இழைப்படகு கட்டுவதற்கும் விற்பனை செய்வதற்கும் கூட்டு முயற்சியை தமிழ்நாடு மெரைன் பிளாஸ்ட் என்ற நிறுவனம் அமைக்கப் பட்டது. இந்நிறுவனம், டென்மார்க்கில் உள்ள மெரைன் பிளாஸ்ட் பெர்ரோ இலண்ட்ஸ் என்ற நிறுவனத்துடனும் ஜார்ஜ் மெய்ஜோ மற்றும் அக்வா மெரைன் லிமிடெட் ஆகிய நிறுவனங் களுடன் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும் கூட்டின முறையில் நிறுவப்பட்டது. இதற்கு மத்திய அரசின் அயல்நாட்டு முதலீட்டுக் குழுவின் ஒப்புதலும் கிடைத்துள்ளது. இத்திட்டத்தின் மொத்த நிதி அடக்கம் ரூ. 50.00 இலட்சம். இதில் இக்கம்பெனியின் மூலதன பங்கு ரூ. 20.00 இலட்சம். எஞ்சிய தொகை கடன் உதவி மூலம் பெறப்பட வேண்டும். கம்பெனியின் மூலதனமான ரூ. 20.00 இலட்சம் அயல்நாட்டு மற்றும் உள்நாட்டு பங்குதாரர் களின் பங்கின் மதிப்பிற்கு ஏற்ப மூலதனம் செலுத்தப்பட வேண்டும். இதில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூல தனப்பங்கு, கம்பெனி நிறுவ உள்ள மா. சிங்காரவேலர் படகு கட்டும் தளத்தில் உள்ள நிலம் மற்றும் மேல் கட்டுமானங்கள் வடிவிலும் ரொக்கமாக ரூ. 2.4 இலட்சமும் செலுத்தப்பட வேண்டும்.

இப்படகு கட்டும் நிறுவனம் 19', 20' 22' அளவு கண்ணாடி இழைப்படகுகளை பி. எப். மெரைன் பிளாஸ்ட் வடிவமைப்பின்படி படகுகளை கட்டும். இவ்விதம் தயாரிக்கப்படும் படகுகள் தமிழ் நாடு கேரளா மற்றும் இதர மாநிலங்களுக்கு விற்பனை செய்தும் மற்றும் சில அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதின் மூலமும் விற்பனை செய்யப்படும். முதல் ஆண்டு ஆரம்ப உற்பத்தி 200 படகுகள் ஆகும். இந்த நிறுவனம் 31—8—1985 அன்று ஆரம பிக்கப்பட்டு கண்ணாடி இழைப்படகுகளை உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளது.

23.9. தமிழ்நாடு முத்து நிறுவனம்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது கூட்டு நிறுவனமான திருவாளர்கள் ஸ்பிக் மற்றும் தமிழ்நாடு பேர்ல்ஸ் லிமிடெட் நிறு வனத்தில் சாதாரண பங்கிடாக ரூ. 10.00 இலட்சம் செலுத்தி யுள்ளது. இந்நிலையம் முத்து வளர்த்து வியாபார ரீதியில் செயல்படும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் மண்டபத்தில் கரு பொருத்தி முத்து வளர்க்கும் ஆய்வுக்கூடம் ஒன்று நிறுவியுள்ளதுடன் முத்துச்சிப்பி பண்ணை குருசடை தீவில் அமைத்தும் வளர்ந்த முத்துக்களை மாதிரிக்காக அறு வடையும் செய்து முடித்துள்ளது. இத்திட்டத்தில் வியாபார ரீதியில் 1987 ஆம் ஆண்டிலிருந்து முத்து அறுவடை செய்யப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



23.10. மீன்பிடி வலை செய்யும் தொழிற்சாலை, சென்னை.

தமிழக அரசு மூலதனத் தொகையாக 20 இலட்சம் ரூபாயை மீன்பிடி வலை செய்யும் தொழிற்சாலைக்கு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மொத்த முதலீடு ரூ. 70 இலட்சம். இதில் ரூ. 45 இலட்சம் நிதி உதவும் நிறுவனங்களின் மூலம் நபார்டு (NABARD) திட்டத்தில் மூலம் பெற திட்ட மிடப்பட்டது. இதற்கிடையில், மத்திய அரசு ஜப்பான் நிதி உதவி திட்டத்தின்கீழ் இலவசமாக நான்கு வலை பின்னும் இயந் திரங்கள் இறக்குமதி செய்து வழங்கியுள்ளது. மேற்படி இயந் திரங்கள் தொழிற்சாலையில் பொருத்துவதற்காக மா. சிங்கார வேலர் படகு கட்டும் தளத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலை யம் 1986–87-ல் முதல் காலாண்டில் செயல்பட துவங்கிவிடும்.

23.11 பனிக்கட்டி நிலையம் மற்றும் உறைய வைக்கும் அறை, சென்னை, மீன்பிடி துறைமுகப் பகுதியில் நிறுவுதல் :

தமிழக அரசு 20 இலட்சம் ரூபாய் மூலதன பங்காக ராயபுரம் மீன்பிடித் துறைமுக பகுதிக்குள் பனிக்கட்டி நிலையம் மற்றும் உறைய வைக்கும் அறை முதலியவைகளை அமைக்க வழங்கி யுள்ளது. 300 டன் கொள் அளவுள்ள குளிர்பதன அறை ஒன்றும் இதனுடன் இணைந்து இருக்கும். 300 டன் எடை கொள் அளவு கொண்ட உறையவைப்பு நிலையம் ஒன்றும் இதனுடன் இணைந்து இருக்கும். இந்நிலையத்திற்கு ரூ. 41.12 இலட்சம் "நபார்ட்" திட்டத்தின்கீழ் கடன் வழங்க யுனைடெட் கமர்சியல் வங்கி ஒத்துக்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கான இடம் சென்னை துறைமுகத் தலைவரால் பிப்ரவரி 1986-ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

23.12 இறால் குஞ்சு பொரிப்பு நிலையம், தொண்டியக்காடு :

மத்திய அரசால் ஏற்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், உவர் மீன் பண்ணை வளர்ச்சித் திட்டத்தில் தஞ்சை மாவட்டம் தொண்டியக் காட்டில் ஓர் பண்ணை நிறுவ அரசு ரூ. 23.75 இலட்சம் கொடுத் துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டன.

23.13 உலர் மீன் கிடங்கு, தூத்துக்குடி :

தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகப் பகுதிக்குள் 'எம்பிடா' (MPEDA) வினால் கட்டப்பட்ட உலர் மீன் கிடங்கு 1984 டிசம்பர் மாதத்தில் பராமரிக்கப்படுவதற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் பொறுப்பில் எடுக்கப்பட்டது. இக்கிடங்கு 12 உலர் மீன் ஏற்றுமதியாளர்களுக்கு தலா ரூ. 600 வீதம் மாத வாடகைக்கு ஏற்றுமதியாளருக்கு விடப்பட்டுள்ளது.

### 23.14 கூண்டு முறையில் மீன்வளர்ப்பு திட்டம் ஆராய்ச்சி மற்றும் விஸ்தரிப்புப் பணி.

ஆராய்ச்சி மற்றும் விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் நபார்டு (NABARD) குழு ரூ. 7.23 இலட்சம் மீன் குஞ்சு வளர்ப்பு திட்டத்திற்கு உதவித் தொகையாக வழங்கியுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் சாத்தனூர், ஆளியார், மஞ்சளார் ஆகிய நீர்த்தேக்கங்களில் செயல்படுத்தப்படுகிறது.

### 23.15 சதர்ன் ஸீ புட்ஸ் (Southern Sea Foods) என்ற நிறுவனத்துடன் கூட்டு முயற்சி.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், சதர்ன் ஸீ புட்ஸ் நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் தஞ்சை மாவட்டத்தில் உவர் நீர் மீன் பண்ணை ஏற்படுத்த கொள்கை அளவில் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

### 24. வரவு-செலவு ஒரு கண்ணோட்டம்.

| கணக்குத் தலைப்பு. | கணக்குகள் 1984–85 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 1985–86 | திருத்திய மதிப்பீடு 1985–86 | வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1986–87. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| மீனளம் வருவாய் (312): | | | | |
| திட்டம் .. .. | 145.35 | 155.90 | 159.23 | 176.00 |
| திட்டத்தில் சேராதது .. | 237.40 | 295.46 | 353.02 | 337.19 |
| மீனளம் மூலதனம் (512) : | | | | |
| திட்டம் .. .. | 197.60 | 166.60 | 299.98 | 183.71 |
| திட்டத்தில் சேராதது — | (—)5.32 | 0.02(—) | 0.25 | 4.02 |



| கணக்குத் தலைப்பு. | கணக்குகள் 1984–85 | வரவு செலவு திட்ட மதிப்பீடு, 1985–86. | திருத்திய மதிப்பீடு 1985–86, | வரவு செலவு திட்ட மதிப்பீடு 1986–87. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| மீனளம் கடன் (712) : திட்டம் .. .. | 6.26 | 6.41 | 6.65 | 8.92 |
| கூட்டுறவு வருவாய் (298) : திட்டம் .. .. | 35.90 | 8.90 | 9.78 | 6.98 |
| திட்டத்தில் சேராதது .. | 14.70 | 14.31 | 15.13 | 15.79 |
| கூட்டுறவு மூலதனம் (498) திட்டம் .. .. | 43.80 | 5.01 | 5.39 | 5.01 |
| திட்டத்தில் சேராதது(—) .. | 2.23 | .. | .. | .. |
| கூட்டுறவு கடன் (698) : திட்டம் .. .. | 84.70 | 0.02 | 1.29 | 0.02 |
| வீட்டு வசதி வருவாய் (283) : திட்டம் .. .. | 75.67 | 50.00 | 50.00 | 50.00 |
| வீட்டு வசதி மூலதனம் (483): திட்டம் .. .. | 0.77 | 0.01 | 0.94 | 0.01 |
| வீட்டு வசதி கடன் (683) : திட்டம் .. .. | .. | 0.01 | 0.01 | 0.01 |
| பொதுப் பணிகள் வருவாய்(259): திட்டத்தில் சேராதது | 0.02 | 0.16 | 0.20 | 0.25 |
| மலைப்பகுதி முன்னேற்றம் (308): திட்டம் .. .. | 1.86 | .. | 2.56 | 0.01 |
| இயற்கை பாதிப்பு நிவாரணம்(289) : திட்டத்தில் சேராதது | .. | 0.01 | 17.07 | 0.01 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| சாலைகளும் பாலங்களும் (537) : | | | | |
| திட்டம் .. .. | 38.78 | 11.13 | 20.44 | 11.00 |
| இயற்கை பாதிப்புகள் (695) : | | | | |
| திட்டத்தில் சேராதது. | 43.61 | 0.30 | 1.80 | 0.30 |
| இதர இனங்கள் (268) திட்டத்தில் சேராதது | .. | .. | .. | 26.00 |
| மொத்தம் .. | 918.87 | 714.26 | 943.24 | 825.23 |

வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1986–87.

| கணக்குத் தலைப்பு. | திட்டம். | திட்டத்தில் சேராதது. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| வருவாய் .. ... | 232.99 | 379.24 | 612.23 |
| மூலதனம் .. ... | 199.73 | 4.02 | 203.75 |
| கடன் .. .. | 8.95 | 0.30 | 9.25 |
| மொத்தம் .. | 441.87 | 383.56 | 825.23 |

மீனவளத் துறையின் வருவாய்.

| கணக்குத் தலைப்பு | கணக்குகள் 1984–85. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1985–86. | திருத்தப் பட்ட மதிப்பீடு 1985–86. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1986–87. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| விளம் (113) .. ... | 58.84 | 109.44 | 148.24 | 121.83 |





25. முடிவுரை.

மீன்துறை செய்ய உத்தேசித்துள்ள நடவடிக்கைகளின் மூலம் தமது மாநிலம் கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியில் மேன்மேலும் முன்னேற்ற பாதையில் செல்லும் என்பதே என்னுடைய விருப்பமும் உறுதியான நம்பிக்கையும் ஆகும்.

அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களது ஒத்துழைப்புடன் தமது மாநிலம் இந்நாட்டு முழுமையிலும் மீன் உற்பத்தியில் ஒரு முதன்மையான இடத்தை அடையும் என்று உறுதி கூறுகிறேன்.

## இணைப்பு II

(989-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

கொள்கை விளக்கக் குறிப்பு.

மானியக் கோரிக்கை எண் 32.

1986–87

I. முன்னுரை

1986–87 ஆம் ஆண்டிற்கு மானியக் கோரிக்கை எண். 32க் "பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம்" என்ற தலைப்பில் ரூ. 12,89,61,000 வழங்குமாறு நான் முன்மொழிகிறேன்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினரின் நலத்தைப் பேணுவதற்காக 1969-ல் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஏற்படுத்தப்பட்டது. இது ஓர் இ.ஆ.ப., அலுவலரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. மாவட்ட அளவில் துணை ஆட்சியர் தகுதியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் இத்துறையின் பணிகளைக் கவனித்து வருகின்றனர். சீர்மரபினரின் முன்னேற்றத்திற்கென தனித் துணை ஆட்சியர் மதுரையில் செயலாற்றி வருகிறார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினருக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை மேம்படுத்துவதற்காக பிற்படுத்தப்பட்டோர் நலத்திற்கென தனி மானியக் கோரிக்கை 1971 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. 1967–68ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 1,61,40,000 படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 1986–87 ஆம்

ஆண்டில் ரூ. 12,89,61,000 ஆக உயர்ந்துள்ளது. 1976–77ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் பிரமலைக் கள்ளர் நலனுக்காக செலவழிக்கப்பட்டத் தொகையான ரூ. 89,41,000, 1985–86ஆம் ஆண்டு ரூ. 3,07,30,000 ஆக உயர்ந்துள்ளது. இவ்வுயர்வு பிற் படுத்தப்பட்ட வகுப்பினர் நிலையை உயர்த்துவதற்கான திட் டங்களைச் செயல்படுத்துவதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை தீவிரமாகச் செயல்பட்டு வருவதைக் காட்டுகிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் மேம்பாட்டுக்காக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நலத்திட் டங்களின் விவரம் பின்வருமாறு :—

## II. கல்வி.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் எல்லாத்துறை களிலும் முன்னேற்றம் பெற கல்வி ஒரு முக்கியமான சாதனம் என்று அரசு கருதுகிறது. எனவே, இந்த அரசு, பிற்படுத்தப் பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் கல்வியில் ஏற்றம் பெறத் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் முன்னேற்றம் பெற வழிகோலும் வகையில் அவர்களுக்காக பள்ளி கள், உணவு விடுதிகள் போன்ற வசதிகளையும் உபகாரச் சம் பளம், மதிய உணவு, சீருடைகள், பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலமும் உதவியளித்து வருகிறது.

(i) பள்ளிகள் :

சீர்மரபினர் கல்வி மேம்பாட்டிற்காக தமிழ்நாட்டில் 277 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. 1985–86ஆம் ஆண்டு இப்பள்ளி களில் 52,573 மாணவர்கள் பயின்றனர். இதற்காக ரூ. 1,84,13,000 ஒதுக்கப்பட்டது.

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக 1986–87 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட திட்டங் களைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது :—

(1) 12 கள்ளர் நடுநிலைப்பள்ளிகளில் ரூ. 4,80,000 செல வில் கழிப்பறைகள் கட்டப்படும்.

(2) 196 ஆரம்பப் பள்ளிகளுக்கு மரச்சாமான்கள் வாங்க ரூ. 98,000 செலவிடப்படும்.

இப்பள்ளிகளில் பயிலும் சுமார் 53,000 மாணவ, மாணவிய ரின் நலனுக்காக 1986–87இல் இப்பள்ளிகளைச் சிறப்பாக நடத்த ரூ. 2,10,72,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





பரிசுகள் வழங்குதல் ,

ஒவ்வொரு மாவட்டத்திலும் 8ஆம் வகுப்பு மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புத் தேர்வுகளில் மிக அதிக மதிப்பெண் களும் அதற்கு அடுத்தபடியான மதிப்பெண்களும் பெறும் பிற் படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு முதல் பரிசும், இரண்டாம் பரிசும் வழங்கப் படுகின்றன. இதைத் தவிர, எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புத் தேர்வு களில் மூன்றாவதாக அதிக மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெறும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவர்களுக்கு மூன்றாம் பரிசும் தற்போது வழங்கப்படுகிறது. இதற்காக ஆண்டிற்கு, ரூ. 16,000 ஒதுக்கப்படுகிறது. இது தவிர, மாநில அளவில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற் படுத்தப்பட்ட வகுப்பு/சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் ரூ. 500 மதிப்புள்ள பரிசும் வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுகளின் மதிப்பு.

(ரூபாய்).

| | | |
|---|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி.— | முதல் பரிசு .. .. | 150 |
| | இரண்டாம் பரிசு .. | 100 |
| | மூன்றாம் பரிசு .. | 50 |
| எட்டாம் வகுப்பு— | முதல் பரிசு .. .. | 50 |
| | இரண்டாம் பரிசு .. | 10 |

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களிடையே மேல்நிலைப் பள்ளி (+2) பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும் தலா ரூ. 1,000 மதிப் புள்ள இரு முதல் பரிசுகளும், போக்குவரத்துச் செலவிற்கு தலா ரூ. 100-ம் வழங்கும் திட்டத்தை அரசு 1983–84 ஆம் ஆண்டி லிருந்து செயல்படுத்தி வருகிறது.

தற்போது மாவட்ட அளவில் மேல்நிலைக் கல்வியில் பரிசுகள் ஏதும் வழங்கப்படுவதில்லை. எனவே, +2 பயிலும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினைச் சார்ந்த மாணவர்களுக்கு ரூ. 19,000 செல வில் மாவட்ட அளவில் பரிசுகள் வழங்க செயற்குறிப்பொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. எட்டாம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கும் பரிசுத் தொகையினை அதிகரிக்கும் பிறிதொரு செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையிலுள்ளது. 1985–86ஆம் ஆண்டில் 184 மாணவர்களுக்கு ரூ. 16,000 செல வில் பரிசுகள் வழங்கப்பட்டன. 1986–87 ஆம் ஆண்டில் இப் பரிசுகளை வழங்க இத்திட்ட மதிப்பீட்டில் ரூ. 40,000 ஒதுக்கப் பட்டுள்ளது.

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் :

கிராம மற்றும் நகர்ப்புற பகுதியில் இத்துறை நடத்தும் சீர்மரபினருக்கான பள்ளிகள் அனைத்திலும் 1–7–1982-லிருந்து 5 வயது முதல் 9 வயது வரையிலும் உள்ள எல்லா மாணவ மாணவிகளும் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 15–9–1984 முதல் மதுரை மாவட்டத்தில் உள்ள 10 உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் 10 முதல் 15 வயது வரையிலுள்ள 3,500 பள்ளி மாணவ மாணவியர்களுக்கும் கூடுதலாக இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது 1985–86 ஆம் ஆண்டில் 48,300 மாணவர்கள் பயன்பெற்றனர். இதற்காக ரூ. 26,63,000 செலவிடப்பட்டது இந்தத் திட்டத்தின் கீழ் 1986–87 ஆம் ஆண்டிற்காக ரூ. 30,22,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 48,300 மாணவர்கள் பயனடைவார்கள்.

புத்தகங்கள் மற்றும் எழுதுபொருள்கள் வழங்குதல் :

இத்துறை மூலம் நடத்தப்படும் சீர்மரபினர் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு நோட்டுப் புத்தகம், பாடப் புத்தகம் இலவசமாக வழங்கப்படுகிறது. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் உள்ள ஒன்பதாவது மற்றும் பத்தாவது வகுப்பு படிக்கும் மாணவ, மாணவியருக்கும் பாடப்புத்தகங்களும், நோட்டுப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகிறது. 1985–86 இல் 48,800 மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்திற்காக ரூ. 6,87,000 செலவிடப்பட்டது. இத்திட்டத்திற்காக 1986–87 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 7,57,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 49,000 மாணவ, மாணவியர் பயனடைவர்.

உடைகள் (பள்ளிகள்) :

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவ-மாணவிகளுக்கும் இரண்டு ஜோடி உடைகள் வழங்கப்படுகின்றன. 1985–86 ஆம் ஆண்டு 48,759 மாணவர்களுக்கு உடைகள் வழங்கப்பட்டன. ரூ. 21,95,000 ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 1986–87 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 21,58,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 49,000 மாணவ, மாணவியர் பயனடைவர்.



(ii) அரசு மாணவர் இல்லங்கள் :

பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சீர்மரபினர் இனத்து மாணவர்களுக்காக மாணவர் இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்கள் தங்கள் படிப்பை எளிதாகத் தொடர அரசு வகை செய்துள்ளது. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கெனவும், மாணவியர்களுக்கெனவும் தனித்தனியே இவ்வில்லங்கள் நடத்தப்படுகின்றன. ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மேற்படாத பெற்றோர்களின் பிள்ளைகள் இந்த இல்லங்களில் சேர தகுதியுடையவராவர்.

1985–86 ஆம் ஆண்டு வரை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களின் நலனுக்காக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை 543 மாணவர் இல்லங்களை ஏற்படுத்தி நடத்தி வருகிறது. 1985–86 ஆம் ஆண்டு 31,894 மாணவ மாணவிகள் விடுதிகளில் சேர்ந்து தங்கிப் பயனடைந்தனர். இதற்காக ரூ. 3,79,71,000 செலவிடப்பட்டது. இந்த 543 மாணவர் இல்லங்களில் 70 இல்லங்கள் கல்லூரி மாணவ மாணவியருக்கும், 3 இல்லங்கள் தொழிற் பயிற்சி பள்ளி மாணவர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டன. 1986–87 ஆம் ஆண்டில் ரூபாய் ரூ. 12,71,000 செலவில் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்காக மேலும் 15 மாணவர் இல்லங்கள் திறக்கப்பட உள்ளன. இம்மாணவர் இல்லங்களின் பராமரிப்புக்கென 1986–87 ஆம் ஆண்டுக்கு ரூ. 4,11,89,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 32,500 மாணவ, மாணவியர் பயனடைவர். 1986–87 ஆம் ஆண்டில் 20 கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு சமையல் எரிவாயு (இன்டேன் கேஸ்) இணைப்புகள் ரூ. 3,00,000 செலவில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உணவுச் செலவு :

1981–82 ஆம் ஆண்டிலிருந்து மாணவர் இல்லங்களிலுள்ள மாணவ, மாணவியருக்குப் பின்வரும் விகிதத்தில் உணவுச் செலவு அனுமதிக்கப்படுகிறது :—

| தொடர் எண்ணும், மாணவர் இல்லங்களும். (1) | மாநகர். (2) | வெளியூர். (3) |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1 கல்லூரி மாணவர் இல்லங்கள் .. | 95 | 80 |
| 2 தொழிற் கல்வி மாணவர் இல்லங்கள் .. | 95 | 80 |
| 3 பள்ளி மாணவர் இல்லங்கள் .. | 60 | 60 |

விலைவாசியின் ஏற்றத்தைக் கருத்திற் கொண்டு உணவுச் செலவை அதிகரிக்கும் செயற் குறிப்பு ஒன்றுள்ளது.

[1986 ஏப்ரல் 19

மாணவர் இல்லக் கட்டிடங்கள் கட்டுதல் :

தற்போது இத்துறையால் 543 மாணவரில்லங்கள் நடத்தப்
படுகின்றன. இவற்றில் 49 விடுதிகள் மட்டும் அரசுக்குச் சொந்த
மான கட்டிடத்தில் உள்ளன. மற்றவை வாடகைக் கட்டிடங்
களில் இயங்கி வருகின்றன. இவற்றில் 32 மாணவரில்லங்கள்
" தாட்கோ " மூலமாக ரூ. 167 இலட்சம் செலவில் பிற்படுத்
தப்பட்டோர் நலத்துறையால் கட்டப்பட்டவை. எஞ்சிய விடுதி
கள் இதரத் துறைகளுக்குச் சொந்தமான கட்டிடங்களில் இயங்கி
வருகின்றன. 1986–87 இல் அரசு மேலும் 15 விடுதிகளைத்
திறக்க உள்ளது. கட்டிடங்கள் கட்டுவதற்காகும் அதிகப்படியான
செலவை உத்தேசித்து, குறைந்த செலவில் கட்டிடம் கட்ட
புதிய வடிவமைப்பு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 1985–86
ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி அரசினர்
சீர்மரபினர் மாணவியர் விடுதிக்கு ரூ. 3.80 இலட்சம் மதிப்பீட்
டிலும், புதுக்கோட்டை மாவட்டம் வல்லத்திராக்கோட்டை
அரசினர் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு ரூ. 3.70
இலட்சம் மதிப்பீட்டிலும் இரண்டு விடுதிக் கட்டிடங்கள் கட்ட
அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. மேலும், ரூ. 50 இலட்சம்
செலவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு விடுதிகள்
கட்டும் திட்டமொன்றினை அரசு மேற்கொள்ளவிருக்கிறது.
எல்லா விடுதிகளுக்கும் சொந்தக் கட்டிடங்களைப் படிப்படியாக
கட்ட அரசு திட்டமிட்டுள்ளது.

சீருடைகள் வழங்குதல் (மாணவ, மாணவியர் இல்லங்கள்) :

1971–72 ஆம் ஆண்டு முதல் இத்துறை நடத்தும் பள்ளி
மாணவ, மாணவியர் இல்லங்களிலுள்ளவர்களுக்கு இரண்டு ஜோடி
சீருடைகள் அளிக்கப்படுகின்றன. 1985–86 ஆம் ஆண்டு 23,674
மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர். இதற்கு ரூ. 18,84,000
செலவிடப்பட்டது. 1986–87 ஆம் ஆண்டிற்கு திட்ட மதிப்
பீட்டில் இதற்காக ரூ. 20,04,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 24,000
மாணவ, மாணவியர் பயனடைவர்.

பகுதி நேர போதனை ஆசிரியர்களை நியமித்தல்:

மாணவர் இல்லங்களில் தங்கிப் படிக்கும் ஒன்பது, பத்து
மற்றும் மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு காலையில்,
மாலையில் போதிப்பதற்கு அநேகமாக எல்லா உயர்நிலைப்பள்ளி
இல்லங்களிலும் பகுதி நேர போதனை ஆசிரியர்கள் நியமிக்கப்
படுகின்றனர். ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளி விடுதிகளில்
ஆறு திங்களுக்கு மட்டும் சுமார் 400 பகுதி நேரப் போதனை
ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர்.



1986 ஏப்ரல் 19]

உணவு மானியம் வழங்குதல் :

தனியாரால் நடத்தப்படும் 38 மாணவர் இல்லங்கள் பிற்
படுத்தப்பட்டோர் நலத் துறையிடமிருந்து உணவு மானியத்
தைப் பெற அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரம்,
மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையிடங்களிலுள்ள இல்லங்
களில், மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 45 வீதமும்,
மற்ற இடங்களில் உள்ள இல்லங்களில் ரூ. 40 வீதமும், உணவுச்
செலவு ஆண்டுக்கு பத்து மாதங்களுக்கு உணவு மானியமாக
வழங்கப்படுகிறது. உணவு மானியம் பெறும் இல்லங்களில் தங்கி
பயில ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கும் குறைவாக உள்ள
பெற்றோர்களின் பிள்ளைகளே தகுதியுடையவர்களாவர். 1985
–86 ஆம் ஆண்டு 2,498 மாணவர்கள் பயனடைந்தனர்
ரூ. 10,07,000 ஒதுக்கப்பட்டது. இம் மானியத்திற்காக 1986–
87 ஆம் ஆண்டிற்கு ரூ. 8,99,000 ஒதுக்கப்பட்டுள்ளது.
இத்திட்டத்தின் மூலம் 2,500 மாணவ, மாணவியர் பயனடைவர்,

(iii) படிப்புதவித் தொகைகள் :

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் முன்
னேற்றத்திற்கு கல்வியே மிக முக்கியமானதொரு அம்சம்
என்பதை கருத்திற்கொண்டு அரசு அவர்களுடைய கல்வி வளர்ச்
சிக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கு உதவித்
தொகை வழங்குகிறது. இவ்வுதவித் தொகையில் மாணவர்
களின் படிப்புக் கட்டணம், தனிக் கட்டணங்கள், புத்தகங்களின்
விலை, தேர்வுக் கட்டணம், விடுதிகளில் தங்கிப் படித்தால் அதற்
கான உண்டி, உறையுள் கட்டணமும் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்
களில் அடங்கும். பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு
ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், சீர் மரபினர் இனத்து மாணவர்
களுக்கு நான்காம் வகுப்பிலிருந்தும் இவ்வுதவித் தொகை வழங்
கப்படுகிறது. இந்த இனங்களைச் சார்ந்த மாணவர்களின்
பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மேற்படாமல்
இருந்தால் இத்துறையின் படிப்பு உதவித் தொகையைப் பெற
தகுதியுள்ளவர்களாவார்கள். இவ்வுதவித் தொகையைப் பெற
பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத்
தேர்வில் 40 சதவிதம் மதிப்பெண்ணிற்குக் குறையாமல் பெற்
றிருக்க வேண்டும். ஆனால், சீர்மரபினர் மாணவர்கள் முந்தைய
ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே தகுதியுடையவர்
களாவார்கள். 1985–86 ஆம் ஆண்டில் பள்ளிப் படிப்பு மற்றும்
பட்டப்படிப்பு மாணவ, மாணவிகள் 2,87,600 பேர் ரூ. 375
லட்சம் உதவித் தொகையாகப் பெற்று பயனடைந்தனர். இவர்
களில் 2,32,000 மாணவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
55,600 மாணவர்கள் சீர்மரபினர் ஆவார்.

1982–83 ஆம் ஆண்டிலிருந்து கல்லூரிகள் மற்றும் தொழிற்
கல்வி நிறுவனங்களின் முதல்வர்களுக்கு அவர்களுடைய கல்லூரி
கள், தொழிற்கல்வி நிறுவனங்களில் பயிலும் பிற்படுத்தப்பட்ட

வகுப்பு மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகையை விரைவில் வழங்க ஏதுவாக முந்தைய ஆண்டில் அந்தநிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உதவித் தொகையில் கணிசமான பகுதி அந்நிறுவன முதல்வரிடம் முன் பணமாகக் கொடுக்கப்படுகிறது. கல்வி நிறுவன முதல்வரிடமிருந்து வரப் பெறும் செலவின் அடிப்படையில் மேலும் நிதி அளிக்கப்படுகிறது.

புதிதாக உதவித் தொகை கோரும் மாணவர்களுக்கு அவர்கள் தகுதி பற்றிய அட்டைகள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர்களால் கல்வி நிறுவனங்களுக்கு கொடுக்கப்படுகின்றன. கலை, விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம், வேளாண்மை, சட்டம், பட்டப்படிப்பு, மற்றும் சான்றிதழ் படிப்பு, பட்டயக் கணக்கர் படிப்பு போன்ற மெட்ரிக் படிப்பிற்கு பிந்திய பாட வகுப்புகளுக்கும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

(iv) உணவு, உறைவிடக் கட்டணம் :

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகையுடன் வழங்கப்படும் உணவு, உறைவிடக் கட்டண வீதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

| தொடர் எண்ணும் பாடமும். | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். | சீர் மரபினர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மாதம் ஒன்றுக்கு ரூபாய்) | |
| சென்னை நகரம் : | | |
| 1 கலை, விஞ்ஞானம், சட்டம் .. | 60 | 70 |
| 2 மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம் இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள். | 60 | 75 |
| 3 தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி. | 50 | 60 |
| வெளியூர் : | | |
| 1 கலை, விஞ்ஞானம், சட்டம் .. | 50 | 55 |
| 2 மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள். | 55 | 70 |
| 3 தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி. | 45 | 50 |



(v) படிப்புக் கட்டணச் சலுகைகள் :

மேல்நிலைப் பள்ளி வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு தமிழ்நாடு கல்வி விதி 92-ன் கீழ் கல்வித் துறையின் மூலமும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலமும் படிப்புக் கட்டணச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:—

| வருமானம். | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். | சீர் மரபினர். | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி முழுக் கட்டணச் சலுகை. | தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி முழுக் கட்டணச் சலுகை. | தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி அரைச் சம்பள சலுகை. பாதிப் படிப்புக் கட்டணம், உதவித் தொகையுடன் சேர்த்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் வழங்கப்படுகிறது. |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,501 முதல் ரூ. 5,000 வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | கல்வித் துறையிலிருந்து சலுகை எதுவும் கிடையாது. இம்மூன்று பிரிவினருக்கும் பாதிப் படிப்புக் கட்டணச் சலுகை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. | | |

உதவித் தொகை வழங்குவதற்காக 1986—87 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,77,[illegible],000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2,[illegible]0,000 மாணவ, மாணவியர் பயனடைவர்.

(vi) [illegible] உதவித் தொகை :

தொழிற் படிப்புகளைப் படிக்கும் மாணவ, மாணவியருக்கு அவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,001 முதல் [illegible]-க்கு உட்பட்டு இருந்தால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 [illegible] உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட படிப்பை படிக்கும் காலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மிகாமல் [illegible] உதவித் தொகை ரூ. 2,500 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. 1985—86-ல் 30 மாணவர்களுக்கு ரூ. 15,000 கடன் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. 1986—87-ம் ஆண்டுக்கு 100 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 19

பயிற்சி Tii.

இ.ஆ.ப., இ.கா.ப.. போன்ற அனைத்திந்திய பணிகளுக்கான
றப்பு பயிற்சி நிலையம் :

1971 ஆம் ஆண்டு டிசம்பரில் அனைத்திந்திய உயர் அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் எழுதும் பிற்படுத்தப்பட்டோர்/சீர் மரபினர் மாணவர்களுக்கு அந்தந்த தேர்வு எழுத பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்பு பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மத்திய பணித் தேர்வாணைக் குழு நடத்தும் அரசுப் பணி தேர்வுகள் எழுத புது டெல்லியில் உள்ள டாக்டர் ராவின் ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற தமிழ்நாட்டில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 10 பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களை அனுப்பி வைக்கும் ஒரு திட்டத்தை அரசு 1983 ஆம் ஆண்டில் கொண்டு வந்தது. பயிற்சியில் மூன்று நிலைகளுக்குமாக அரசு ஆண்டிற்கு ரூ. 1,00,000 அனுமதித்துள்ளது. இத்திட்டம் மூன்றாண்டுகளுக்கு சோதனை முறையில் செயலாக்கப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டு 13 மாணவர்கள் பயிற்சி பெற்றனர். ரூ. 38,000 செலவிடப்பட்டது. 1986–87 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 30 பேர் பயனடைவர்.

பொதுநோக்கு பொறியியல் பட்டறைகள் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டத்தில் செக்காணூரணியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் வீரகேரளம்புதூரிலும் உள்ள மூன்று பொது நோக்குப் பொறியியல் பட்டறைகள் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் மேற்பார்வையில் நடத்தப்படுகின்றன. இவை தொழிற் பயிற்சி நிலையங்களின் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன. இவற்றிற்காகும் செலவு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இப் பட்டறைகளில் பொருத்துதல், பற்ற வைத்தல், மற்றும் கடைசல் ஆகியவற்றில் தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சீர் மரபினர் தொழில்களில் பயிற்சி பெற்று அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக தானே தொழில்களை ஆரம்பிக்கவும் அல்லது வேலை வாய்ப்பு பெறும் வகையிலும் போதிய தொழில் நுட்பத் திறமையை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆண்டொன்றுக்கு 60 சீர் மரபினர் மாணவர்கள் இப்பயிற்சி நிலையங்கள் மூலம் பயன் பெறுவர்.



1986 ஏப்ரல் 19]

தொழிற் பயிற்சி கூடங்கள்:

சீர் மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலனுக்காக கீழ்க்காணும் தொழிற் பயிற்சிக் கூடங்கள் செயல்படுகின்றன :—

(1) தையல், மற்றும் ஆயத்த ஆடை பயிற்சி நிலையம், அண்ணா நகர், திருநெல்வேலி மாவட்டம்.

(2) தையல் மற்றும் பூ வேலைப்பாடு நிலையம், தெற்குத் தெரு மதுரை மாவட்டம்.

(3) தையல் நிலையம், இராமவர்மபுரம், கன்னியாகுமரி மாவட்டம்.

(4) தையல் நிலையம், திருவெண்ணெய்நல்லூர், தென் ஆற்காடு மாவட்டம்.

(5) தையல் நிலையம், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

(6) தையல் நிலையம், சேரன்மாதேவி, திருநெல்வேலி மாவட்டம்.

(7) தையல் நிலையம், இராமநாதபுரம் மாவட்டம்.

(8) பிரம்பு மற்றும் நாரிழைப் பிரிவு, தக்கலை மற்றும் குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

தையற் பயிற்சி நிலையங்கள் சமூக நலத்துறை இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. பிரம்பு மற்றும் நாரிழை பயிற்சி நிலையங்கள் கன்னியாகுமரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. இதற்காக 1985–86 இல் ரூ. 11,06,000 ஒதுக்கப்பட்டது. 1986-87 இல் திட்ட மதிப்பீட்டில் ரூ. 14,49,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலை வாய்ப்புப் பயிற்சி திட்டம் :

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பினருக்கு வேலை வாய்ப்புப் படிப்புகளுக்கான பயிற்சித் திட்டத்தினை அரசு 1984–85 ஆம் ஆண்டு முதல் துவக்கியுள்ளது. இத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாணவருக்கும் அதிகபட்சமாக ரூ. 500-க்கு மேற்படாத கல்விக் கட்டணத்தை வழங்கி, 3 மாத பயிற்சி அளிக்கப்படுகிறது. மூன்று மாதத்திற்கு 150 நபர்கள் வீதம் ஆண்டொன்றிற்கு 600 பேருக்கு பயிற்சியளிக்கப்படுகிறது.

இத் திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்குடன் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற பல்வேறு நிறுவனங்களில் பணி நியமனங்களுக்கான போட்டித் தேர்வுகளை எழுத பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர, கம்ப்யூட்டர் புரோகிராமிங், விற்பனையாளர் போன்ற துறைகளிலும் இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலத்தில் சென்னையில் தங்கிப் பயில ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் இரண்டு விடுதிகள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆண்கள் விடுதி அக்டோபர் 1984 முதல் இயங்கி வருகிறது. 1985–86 ஆம் ஆண்டு 404 மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக ரூ. 8,16,000 ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 1986–87 ஆம் ஆண்டிற்கு ரூ. 6,97,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 600 மாணவர்கள் பயனடைவர்.

சட்டப் பட்டதாரிகளுக்கு பயிற்சி அளித்தல் :

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர் மரபினர் இனத்தைச் சார்ந்த 20 சட்டப் பட்டதாரிகளை ஆண்டுதோறும் தெரிந்தெடுத்து அவர்கள் அனுபவம் பெறும் பொருட்டு, பல்வேறு சட்டப் பிரிவுகளில் வல்லமை பெற்று சிறந்து விளங்கும் முதுநிலை வழக்குரைஞர்களிடம் 3 ஆண்டுகள் பயிற்சி பெறத் திட்டமொன்றினை அரசு உருவாக்கியிருக்கிறது. பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுவோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500 உதவித் தொகையாக வழங்கப்படும். முதுநிலை வழக்குரைஞர்கள் இத் திட்டத்தில் பங்கேற்பதை சிறப்பிக்கும் பொருட்டு அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5,001 மதிப்பூதியம் வழங்கப்படும். 1986–87-ம் ஆண்டுக்கு ரூ. 1,88,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

## IV. பொருளாதார முன்னேற்றம்.

தொழிற் கருவிகள் வழங்குதல் :

முடிதிருத்துதல், சலவைத் தொழில் செய்துவரும் நாவிதர், வண்ணார் போன்ற வகுப்பினைச் சார்ந்த ஏழை மக்களுக்கு அவர்கள் தங்கள் தொழிலைச் செய்து வாழ, அத்தொழில்களுக்கு தேவையான கருவிகளை இலவசமாக அரசு வழங்குகிறது. கல்லுடைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள போயர்களுக்கு இலவசமாக தொழில் கருவிகள் வழங்கும் திட்டம் 1978–79-ம் ஆண்டிலிருந்து செயலில் உள்ளது. தற்பொழுது இத் திட்டம் சென்னை மாநகரம் தவிர எல்லா மாவட்டங்களிலும் செயலில் உள்ளது.



1985–86-ம் ஆண்டு இலவச தொழிற் கருவிகள் வழங்கும் திட்டத்தின்படி 4,300 பேர் பயனடைந்தனர். இதற்காக ரூ. 16,07,000 செலவிடப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 16,07,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

சலவைத்துறை கட்டுதல் :

சலவைத்துறை கட்டுவது சலவைத் தொழிலாளர்களுக்கென்று செய்து கொடுக்கப்படும் முக்கிய வசதியாகும். பேரூராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் சலவைத்துறை கட்ட பின்வருமாறு நிதி உதவி அளிக்கப்படுகின்றது—

1. அரசின் உதவித் தொகை— 75 சதவீதம்.
2. உள்ளாட்சி மன்றத்தின் பங்கு 20 சதவீதம்.
3. பயனடைவோரின் பங்கு 5 சதவீதம்.

1985–86-ம் ஆண்டுக்கு ரூ. 2,00,000 ஒதுக்கப்பட்டது. 1986–87-ம் ஆண்டுக்கு ரூ. 2,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

பாசனக்கிணறு தோண்டுதல் :

சீர் மரபினர் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு அவர்களில் 2 ஏக்கருக்கும் குறைவில்லாத நிலம் உள்ளவர்களுக்கு பாசனக்கிணறு வெட்ட மான்யம் அளிக்கப்படுகிறது. ஒரு கிணறு வெட்ட வழங்கப்படும் அதிக பட்ச மான்யத் தொகை ரூ. 2,500 ஆகும். இது வரை 934 பேர் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். ஒரு கிணறு தோண்டுவதற்கு, தோண்டுகின்ற இடத்தைப் பொறுத்து சுமார் ரூ. 20,000-லிருந்து ரூ. 30,000 வரை செலவாகிறது. எனவே, இம் மானியத் தொகையை அதிகரிப்பது தேவையாகிறது. 1985–86-ம் ஆண்டு ரூ. 1,18,000 ஒதுக்கப்பட்டது. 1986–87-ம் ஆண்டிற்கு இத் திட்டத்திற்கு ரூ. 1,18,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 46 பேர் பயனடைவார்கள்.

வீட்டு வசதி :

சீர் மரபினர் சமுதாயத்தினருக்காக தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 1979–80 மற்றும் 1980–81-ம் ஆண்டுகளில் 967 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. இவற்றுள் 701 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1986–87-ம் ஆண்டிற்கு ரூ. 1,000 (அடையாளமாக) ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக வீட்டு மனைகள் கையகப் படுத்துதல் :

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள மக்களுக்காக, குறிப்பாகத் தொழில் அடிப்படையிலான வகுப்புகளைச் சார்ந்தவர்களும், மிகவும் நலிந்த நிலையிலுள்ளவர்களுமான ஒட்டர், நாவிதர், வண்ணார், நரிக்குறவர், வகுப்பை சார்ந்தவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்க நிலங்களை கையகப் படுத்தும் சிறப்புத் திட்டமொன்றை அரசு 1981-82 லிருந்து செயல்படுத்தி வருகிறது. 1985-86-ம் ஆண்டு சுமார் ரூ. 21,21,000 இதற்காக செலவிடப்பட்டது. இத்திட்டத்திற்கு 1986-87-ம் ஆண்டிற்கு ரூ. 10,50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

V. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்காக ஏற்படுத்தப்பட்ட இரண்டாம் உயர் ஆணைக்குழு :

திரு. ஜே. ஏ. அம்பாசங்கர், இ.ஆ.ப. (ஓய்வு பெற்ற) அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலக்குழு 28-2-1985-ம் நாளன்று அரசுக்கு சமர்ப்பித்த அறிக்கையினை ஆய்வுசெய்துஇந்திய அரசியலமைப்பு சட்டம் 15(4) மற்றும் 16(4) பிரிவுகளின் நோக்கங்களுக்காக பிற்படுத்தப்பட்டோருக்காக வழங்கப்பட்டிருந்த 50 சதவீதம் இட ஒதுக்கீட்டினை தொடர்ந்து நீட்டித்து 1985 ஜூலை இங்க ல் அரசு ஆ ண பிறப்பித்தது.

VI. இந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து மதம் மாறிய கிறித்துவர்களை "பிற்படுத்தப்பட்டவர்கள்" என அறிவித்தல் :

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள யாதொரு இந்து சமூகத்திலிருந்தும் மதம் மாறியுள்ள கிறித்துவ சமூகத்தினரும், இந்திய அரசிலமைப்பு சட்டத்தின் 15(4) மற்றும் 16(4)-ம் பிரிவுகளின் செயல் நோக்கங்களுக்காக சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப்பட்டவர்களென அரசு விளம்பியுள்ளது.

VI. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்:

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கோடு ரூ. 10 கோடி பங்கு மூலதனத்துடன் "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்" என்னும் அமைப்பை அரசு ஏற்படுத்தியுள்ளது. இக்கழகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு :—

1. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு தொழில் தொடங்குவதற்கான தொடக்க மூலதனத் தொகையை குறைந்த வட்டியில் வழங்குதல் மற்றும்.





2. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம் பாட்டிற்கு அவசியமென்று கருதக்கூடிய வர்த்தக, வணிக தொழில் ரீதியான மற்றும் பொதுவான நடவடிக்கைகளை நேரடியாக அல்லது மறைமுகமாக மேற்கொள்ளுதல்.

இக்கழகத்தின் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அரசு இது வரையில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனமான ரூ. 10 கோடியில், ரூ. 30 இலட்சம் வழங்கியுள்ளது. மேலும் ரூ. 15 இலட்சத்தை முறை ஏற்பாட்டு முன்பணமாக வழங்கியுள்ளது. இக்கழகம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமே கடன் வழங்குகிறது. கால்நடை வளர்த்தல், கிராம குடிசைத் தொழில்கள் வளர்ச்சி மற்றும் இவை போன்ற தொழில்களைச் செய்து பிற்படுத்தப்பட்டோரின் வாழ்க்கை ஏற்றம் பெற தொழிலுக்குத் தேவையான முதலீட்டில் 20 சதவீத தொகையை 4 சதவீதம் வட்டி விதத்தில் இக்கழகம் கடனாக வழங்குகிறது. எஞ்சியுள்ள 80 சதவீத கூட்டுறவு மூதலீட்டுத் தொகையை நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து/ கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடனாக பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப் படுகிறது.

இக்கழகம் இதுவரை 1,231 பிற்படுத்தப்பட்ட குடும்பங்கள் பயனடையும் வகையில் 27 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கியுள்ளது. இதற்கு தேவைப்படும் ஆரம்ப மூதலீட்டுக் கடன் ரூ. 23,944 இலட்சமாகும். 1985-86-ம் ஆண்டு இறுதிக்குள் இக்கழகம் ரூ. 1,031.76 இலட்சம் மொத்த மதிப் பீட்டில் நிறைவேற்ற திட்டங்களை உருவாக்கியுள்ளது. இதற்கு தேவைப்படும் ஆரம்ப முதலீட்டுக்கடன் ரூ. 204.46 இலட்ச மாகும். இதன் மூலம் சுமார் 14,301 பிற்படுத்தப்பட் குடும்பங்கள் பயன் பெறும்.

VII. நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள்.

இந்த அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் நலனுக்காக கீழ்க்குறிப்பிட்டுள்ளவைகளை நிறைவேற்றியுள்ளது :

1. பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு மாணவர்களைத் தேர்வுசெய்யும் பணி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் கோட்டாட்சித் தலைவரிடம் இருந்தது. விரைவாக மாணவர்களை தேர்வு செய்யவும், குறித்த காலத்தில் விடுதிகளை திறக்கவும், இப்பணி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலருக்கும், மதுரை கள்ளர் சீரமைப்பு தனித்துணை ஆட்சியருக்கும் வழங்கப்பட்டது.

2. விடுதிக் கட்டிடங்கள் தமிழ்நாடு ஆதி திராவிட வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு வந்தன. இதை மாற்றி பொதுப்பணித்துறை மூலம் விடுதிக் கட்டிடங்கள் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் $7\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவில்

புதிய வடிவமைப்பில் பொதுப் பணித் துறையின் மூலம் இரண்டு விடுதிகளுக்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசாணை வெளியிடப் பட்டது.

3. பல்லாண்டுகளாக விடுதிகளில் பணிபுரியும் தலைமைச் சமையல்காரர், சமையலர், உதவி சமையலர், விடுதி காவலர் ஆகியோருக்கு தற்காலிகப் பணி விதிகள் ஏதும் வரையறுக்கப் படாமல் இருந்தது. சென்ற ஆண்டு இப்பதவிகளுக்கு தற்காலி கப் பணி விதிகள் வரையறுத்து ஆணை வெளியிடப்பட்டதன் மூலம் 1,000 பேர் பயன் பெற்றனர்.

4. பத்து மாதங்களுக்கு மட்டுமே மாணவர்கள் தங்கிப் பயில விடுதிகள் நடத்தப்படுகின்றன. தேர்வு முடியாத நிலை யில் பத்து மாதங்கள் முடிந்ததும் விடுதிகள் மூடப்படுவதால், இவர்கள் சொந்தச் செலவில் வெளியில் தங்க நேரிட்டதால் மிக வும் பாதிக்கப்பட்டனர். எனவே, ஆண்டு தேர்வு முடியும் வரை, தேவையானால் பத்து மாதங்களுக்கு மேலும் விடுதிகளை தொடர்ந்து நடத்துவதற்கு நிலையாணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் + 2, எஸ்.எஸ்.எல்.சி., 8-ம் வகுப்புகளில் முதலாவதாகவும், இரண்டா வதாகவும் மதிப்பெண் பெறும் பிற்படுத்தப்பட்ட ஒரு மாணவ ருக்கும், ஒரு மாணவிக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. எஸ்.எஸ்.எல்.சி. (பத்தாம் வகுப்பு ) பொறுத்தவரை இப்பரிசுத் தொகையை உயர்த்தியதுடன், மூன்றாவது பரிசு ஒன்றும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

IX. அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளவை :

மேலும், இந்த அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் நலனுக்காக கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு செயற்குறிப்புகளையும் பெற்று தீவிர பரிசீலனை செய்து வருகிறது :

1. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் எல்லா விடுதிகளுக்கும் படிப்படியாக சொந்தக் கட்டிடங்கள் கட்டுவது குறித்த செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

2. பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் மாணவர்கள் மருத்துவம், பொறியியல், போன்ற படிப்புகளில் சேருவதற்காக நடத்தப்படும் "நுழைவுத் தேர்வில்" தேர்ச்சி பெறும் பொருட்டு அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் பற்றிய அரசாணை விரைவில் வெளியிடப்படும்.





3. விடுதி மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுத் தொகையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

4. தற்போது 2+ தேர்வில் மாநில அளவில் ஒரு மாணவருக் கும், ஒரு மாணவிக்கும் தலா ரூ. 1,000 பரிசு வழங்கப்படுகிறது. இதே போல், மாவட்ட அளவிலும் முதல் மதிப்பெண் பெறும் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும் தலா ரூ. 500 வீதம் பரிசு வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

5. மாவட்ட அளவில் 8-ம் வகுப்பிற்கு முதல் பரிசாக வழங்கப்படும் பரிசுத் தொகையை ரூ. 50-லிருந்து ரூ. 100 ஆக வும், இரண்டாவது பரிசுத் தொகையை ரூ. 10-லிருந்து ரூ. 50 ஆகவும் உயர்த்தும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

6. சீர் மரபினர் வீடு கட்டிக்கொள்வதற்காக வழங்கப் படும் உதவித் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

7. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த குறிப்பிட்ட அளவு சிறந்த மாணவர்களைத்தேர்வு செய்து நவீன கம்ப்யூட்டர் பயிற்சி (Advanced Computer Course) பெற டெல்லிக்கு அனுப் பும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

8. மதுரை மாவட்டத்திலுள்ள நாட்டார்மங்கலம் மற்றும் ராஜதானி பள்ளிகளில் மாணவர்கள் அதிகமாக சேர்ந்துள்ளார் கள். இந்த பள்ளிகளில் அதிகமாக வகுப்பறைகள் கட்டுவதற் கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

9. இத்துறையால், தமிழ் நாட்டில் 277பள்ளிகள் நடத்தப் படுகின்றன. அவற்றில் 8 உயர்நிலைப்பள்ளிகள், 2 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. மாணவர் நலன் கருதி ராஜதானியில் உள்ள உயர்நிலைப்பள்ளியையும், தாளையம்பட்டியில் உள்ள நடு நிலைப் பள்ளியையும் முறையே மேல்நிலைப் பள்ளியாகவும் உயர்நிலைப் பள்ளியாகவும் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீல னையில் உள்ளது. நாட்டார்மங்கலம் மற்றும் செக்கானூரணி யில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்கு 17 பட்ட மேற்படிப்பு ஆசிரியர்களை நியமிக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

10. தற்போது, இத்துறையில் வேலைவாய்ப்பு பயிற்சி திட்டத்தின்கீழ் வங்கித் தேர்வும் கம்ப்யூட்டர் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இரண்டிலும் 295 மாணவர்கள் பயனடைந்தனர். கம்ப்யூட்டர் புரோகிராமிங் பயிற்சி பெற்ற மாணவர்கள் வேலை வாய்ப்பு பெறும் வாய்ப்பு அதிகம் உள் ளது. ஆயினும் கம்ப்யூட்டர் புரோகிராமிங் தனியார் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படுவதால் அந்த பயிற்சி அவ்வளவு

இறந்ததாக கருதப்படுவதில்லை என்று தெரிய வருகிறது. இதை தவிர்ப்பதற்காக அண்ணா பல்கலை கழகத்தில் சென்னை தொழில்நுட்ப கல்லூரி மூலம் கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டு) வகுப்பு அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதன் மூலம் பயிற்சி பெற்ற பிறகு மாணவர்கள் தரு,்க வேலை பெற வாய்ப்பு அதிகமுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 50 மாணவர்கள் பயிற்சியளிக்கப்படுவார்கள்.

11. பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களின் நலனுக்காக 543 விடுதிகள் இத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் சில்லரை செலவினத்தின் கீழ் பணி புரியும் ஊழியர்களான காவலர்கள், சமையலர்கள் ஆகியவர்களின் நலன் கருதி அவர்களின் பணிகளை வரன்முறைப்படுத்தி சம்பள ஏற்ற முறையில் ஊதியம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

12. போதிய காட்சிக்கூடமோ, விற்பனை வசதியோ இல்லாததால், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பிரம்பு மற்றும் நார் பயிற்சி நிலையத்தை இத்துறையிலிருந்து தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்திற்கு மாற்ற அரசு பரிசீலித்து வருகிறது.

13. சலவைத் தொழிலாளர்களுக்கு துணி தேய்ப்புப்பெட்டி இலவசமாக வழங்கப்படுகிறது. இவர்களின் பொருளாதார நிலை உயர்வதற்காக அவர்களுக்கு சலவையகம் திறக்க ரூ. 5,000 வழங்கும் ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதில் ரூ. 1,500 மான்யமாகவும், ரூ. 3,500 வங்கிக் கடனாகவும் அனுமதிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

14. முடி திருத்துவோருக்கு முடிதிருத்தும் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது முடி திருத்தகத்திற்கு முடிதிருத்தச் செல்லும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆகவே முடிதிருத்தகம் அமைப்பதற்கு வசதியாக ரூ. 5,000 வழங்குவதற்கும், அதில் ரூ. 1,500-ஐ மான்யமாகவும், ரூ. 3,500-ஐ வங்கிக் கடனாகவும் அனுமதிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## X. முடிவுரை :

இவ்வரசு, இவ்வாறு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் வாழ்வை உயர்த்திட பல நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. இந்த மானியத்தை ஏற்று ஒப்பளிக்க, இம்மாமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.



## இணைப்பு.

1986–87-ம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீடு.

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | |
|---|---|---|
| மொத்தம் | .. | 1,28,961 |
| நிர்வாகத்தில் | | 8,480 |
| திட்டத்தில் | | 1,15,281 |
| பல்வகைச் செலவு | | 5,200 |

| திட்டத்தின் பெயர். | திட்டத்தில் சேர்ந்தவை 19,799. | | திட்டத்தில் சேராதவை 95,482. | |
|---|---|---|---|---|
| | பி.வ. | சீ.ம. | பி.வ. | சீ.ம. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 உதவித் தொகை.. | 175 | 332 | 32,657 | 4,634 |
| 2 பள்ளிகள் | .. | 200 | .. | 20,872 |
| 3 மதிய உணவு .. | .. | 756 | .. | 2,266 |
| 4 புத்தகம் மற்றும் உடை .. .. | 1,127 | 2,810 | 392 | 591 |
| 5 உணவு மானியம்.. | 35 | .. | 846 | 18 |
| 6 விடுதிகள்.. .. | 10,239 | 233 | 23,777 | 6,940 |
| 7 பல்கலைக் கழக மானியம் .. | .. | .. | 360 | .. |
| 8 ஆசிரியர்களுக்கு வீடுகள் .. | .. | 15 | .. | .. |
| 9 விவசாயம் .. | .. | .. | .. | 118 |
| 10 தொழில் பயிற்சி.. | .. | 250 | 167 | 1,032 |
| 11 இலவச கருவிகள் .. .. | 1,476 | .. | 100 | 31 |
| 12 குடிநீர் — | — | .. | .. | 10 |

[1986 ஏப்ரல் 19

| (1) | (2) | (3) | (4) | (5) |
| --- | --- | --- | --- | --- |
| 13 சலவைத் துறை | 200 | .. | .. | .. |
| 14 தனிப்பயிற்சி நிலையம் | .. | .. | 679 | .. |
| 15 சீர் மரபினருக்கு வீட்டு வசதி | .. | 1 | .. | .. |
| 16 வீட்டுமனை ஆர்ஜிதம் .. | 1,000 | .. | 50 | .. |
| 17 சிறப்புப் பயிற்சி | .. | .. | 1 | .. |
| 18 பட்டயக் கணக்கர் படிப்பு .. | | .. | .. | .. |
| 19 சிறந்த மாணவர்களுக்கு பரிசு .. | 40 | .. | .. | .. |
| 20 விடுதிகள் கட்டுதல் (பழுது பார்த்தல்) | .25 | .. | .. | .. |
| 21 வேலை வாய்ப்புப் பயிற்சியாளர்களுக்கு விடுதிகள் .. .. | 697 | .. | .. | .. |
| 22 சட்ட பட்டதாரிகளுக்கு பயிற்சி. | 188 | .. | .. | .. |
| 23 இயற்கையின் சீற்றத்திற்கு ஆளானவர்களின் துயர் துடைப்பு. | .. | .. | 1 | .. |
| மொத்தம் .. | 15,202 | 4,597 | 58,970 | 36,51[illegible] |

1986—87-ல் மொத்தம் .. ரூ. 12,89,61,000

1985—86-[illegible] ரூ. 11,54,12,000

136476

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.